

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம்

13ஆவது பன்னாட்டு மாநாட்டு மலர் 2017

5 – 6 ஆகஸ்டு, 2017, யாழ்ப்பாணம், இலங்கை

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம், கனடா
(தலைமையகம்)
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
2017



உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் 13 வது மாநாடு
சிறப்புடன் நடைபெற தமிழ் சி என் என் குடும்பத்தினரி
வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்
கொள்கிறோம்.

அகிலன் முத்துக்குமாரசாமி
இயக்குனர், பிரதம ஆசிரியர் தமிழ் சி என்என் இணையம்

Tamilcnn.lk

(Tamil Community News Network)

விளம்பரங்களுக்கு
விசேட விலைக்கழிவ

வியாபார நிறுவன விளம்பரங்கள்,
அறிவித்தல்கள் என்பவற்றை
மிகக் குறைந்த விலையில்
உலகிற்குத் தெரிவிக்க...

மரண அறிவித்தல்கள்,
ஆண்டு நினைவஞ்சலிகள்,
அறிவிப்புக்கள்...

பிறந்தநாள் வாழ்த்துக்கள்,
பூப்புனித நீராட்டுவிழாக்கள்
திருமண வாழ்த்துக்கள்,
திருமண நினைவுகள்,
மங்கல நிகழ்வுகளை
உலகறியச் செய்ய...

20000.00
5000.00
ரூபாய் மட்டுமே...

30000.00
3000.00
ரூபாய் மட்டுமே...

5000.00
500.00
ரூபாய் மட்டுமே...

700000 ற்கும்
அதிகமான
வாசகர்களைக்
கொண்ட
சமூக
வலைத்தளம்

200000 ற்கு மேற்பட்ட வாசகர்கள்
ஒவ்வொரு நாளும் பார்வையிடுகின்றனர்...

Head Office:
69 Knotwood Crescent
Toronto Ontario
M1X1V8
+1647 - 833- 5131

North Office:
262, Kasthuriyar Road,
Jaffna
021 222 3303
news@tamilcnn.com

East Office:
Vivekananda Road,
Karaitivu - 01
077 087 4025
east@tamilcnn.com

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்க
13ஆவது பன்னாட்டு மாநாடு மலர்

5-6 ஆகஸ்டு, 2017, யாழ்ப்பாணம், இலங்கை

பதிப்பாசிரியர்

முனைவர் பாஞ். இராமலிங்கம்

தலைவர், 13ஆவது பன்னாட்டு மாநாடு 2017

மாநாட்டு மலர்க் குழு

வி.சு. துரைராசா

தலைவர், உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம், கனடா

துரை. கணேசலிங்கம்

செயலர், உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம், யேர்மனி

மாவை. சோ. தங்கராஜா

ஆலோசகர், உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம், யேர்மனி

தே. செந்தில்வேலவர்

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம், இலங்கை

இ. இராஜசூரியர்

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம், யேர்மனி

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம், கனடா

(தலைமையகம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

2017

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்க 13ஆவது பன்னாட்டு மாநாடு மலர் 2017

வெளியீடு
தமிழ்ப் புதுவை,
17, 14ஆவது தெரு,
கிருஷ்ணா நகர்,
புதுச்சேரி - 605 008.

அச்சீடு
M/s. திருமலை ஆப்செட் பிரிண்டர்ஸ்
சென்னை - 600 014.

தட்டச்சு
M/s. பிளாட்டினம் கிராபிக்ஸ்
புதுச்சேரி - 605 001.

உரிமை
உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம்
கனடா

© All rights reserved. No part of this book may be reproduced or retrieved or photocopied in any form excepting for the purpose of reference or research without prior permission of the Editor.

உலகத்தமிழ் பண்பாட்டு இயக்கம்

பண்

எழுக எழுக எழுக எங்கள் தமிழினமே!
விழிமியம் காத்திட எழுக எழுக தமிழினமே! – எழுக எழுக

உலகத் தமிழினமே ஒன்றாய் விழித்தெழ வீச்சுடனே
நலமேலாங்காத்து நம்மினம் உய்ந்திடவே
மூவேந்தர் ஆண்ட நாடு முத்தான முத்தமிழைப்
பாவேந்தர் பாரதிதாசன் பாடினார் விண்ணதிர –எழுக எழுக

ஒன்று திரண்டிடுவோம் ஒற்றுமை காத்திடுவோம்
வென்றிடுவோம் வெற்றிப்பதாகை விரித்திடுவோம்
நன்று செய்திடுவோம் நானிலம் போற்றிடவே
தென்றலென வருதென்தமிழ் காத்திடுவோம் – எழுக எழுக

மூவர் போற்றுத் தமிழ் முன்னோர்கள் ஏற்றுத் தமிழ்
மூவர் வளர்த்த தமிழ் நாவேந்தர் சுவைத்த தமிழ்
எட்டுத் திசைகளிலும் ஏறுபோல் வாழ்ந்துமே
பட்டொளி விட்டுப் பறக்கட்டும் எங்கள் மணிக்கொடியே – எழுக எழுக

எம்மினம் வாழ எல்லோரும் உழைத்திடுவோம் வாரீர்
தொன்மை பல போற்றித் தோளோடு தோள் சேர்த்து
உழைத்திடுவோம் உலகத் தமிழினமே! ஒன்றுபடுவீர்
வாழ்க வாழிய நம்மியக்கம் வானமளந்தளவும்
வாழ்க வாழிய வண்டமிழர் பண்பாடு என்றென்றும், வாழியவே!– எழுக எழுக.

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்க முன்னோடிகள்



இரா. கனகரத்னம்



பேராசிரியர் சாலை இளந்திரையன்



இர. ந. வீரப்பன்



சி. செல்லையா



கோவிந்தசாமி படையாட்சி

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம், 1974ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற நான்காவது தமிழாராய்ச்சி மாநாட்டின் போது இலங்கையில் உருவானது. இயக்கத்தைத் தோற்றுவித்தவர் குரும்பசிட்டி திரு. இரா. கனகரத்னம், இயக்கத்தின் முதல் தலைவராய் பொறுப்பேற்றுக் கல்வித்துறை அறிஞர்களிடையே இவ்வியக்கத்தை அறிமுகபடுத்தியவர் டெல்லியில் பணியாற்றியத் தமிழ்ப் பேராசிரியர் சாலை இளந்திரையன். அவர் பொறுப்பிலிருந்து விலகிய பின் இயக்கத்தின் பொருளாளராக இருந்த இர. ந. வீரப்பன் தலைவர் பொறுப்பை ஏற்றார். இவர் மலேசியா முதல், பல உலக நாடுகளுக்குக்கெல்லாம் சென்று இயக்கத்தை வளர்த்தவர்.

திரு. இர. ந. வீரப்பனைத் தொடர்ந்து இயக்கத் தலைமையை ஏற்றவர் திரு. சி. செல்லையா அவர்கள், பின்னர் மலேசியாவைச் சேர்ந்த ப.கு. சண்முகம் தலைவரானார். அவரை அடுத்து தென்னாப்பிரிக்காவைச் சேர்ந்த கோவிந்தசாமி படையாச்சி பொறுப்பேற்றார். பின்னர் தலைமைப் பொறுப்புக்கு வந்தவர் அமெரிக்காவைச் சேர்ந்த திரு. வேல் வேலுப்பிள்ளை. 2014ஆம் ஆண்டு முதல் கனடாவைச் சேர்ந்த திரு. வி.சு. துரைராஜா தலைவராக உள்ளார்.

13ஆவது பன்னாட்டு மாநாட்டுக் குழு

சிறப்புத் தலைவர்	:	மாண்புமிகு. V.S. இராதாகிருஷ்ணன் இலங்கை கல்வித்துணை அமைச்சர்
அனைத்துலக ஒருங்கிணைப்பாளர்கள்	:	திரு. வி.சு. துரைராஜா, கனடா raja@cfsginc.com
		திரு. துரை. கணேசலிங்கம், ஐரோப்பா
		imtc1974@yahoo.com
		பேராசிரியர் சி. இராமமூர்த்தி, இந்தியா
		முனைவர் வ.மு. சேதுராமன் இந்தியா
		திரு. லோகன் லேகேந்திரலிங்கம், கனடா
		திரு. நடா. ராஜ்குமார், கனடா
		திரு. சு. தியாகலிங்கம், நோர்வே
மாநாட்டு ஒருங்கிணைப்பாளர்	:	திரு. இ. இராஜசூரியர், யேர்மனி imtc.rsoori@yahoo.com
மாநாட்டு ஆலோசகர்	:	திரு. சோ. தங்கராசா, யேர்மனி
மாநாட்டுத் தலைவர்	:	கலாநிதி பாஞ். இராமலிங்கம், இந்தியா imtcindia2015@gmail.com
மாநாட்டுச் செயலாளர்	:	திரு. சு. பிரசாந்தன், இலங்கை artpirasa@gmail.com
		திரு. கு. பிரதீப்குமார், இலங்கை
		புலவர் கி. யேம்ஸ் அல்ஸ்ரன், யேர்மனி

மாநாட்டு நிதி பொறுப்பாளர்கள்	:	திரு. மா. இரவிச்சந்திரன், கனடா
		திரு. அ. கேசவமூர்த்தி, இலங்கை
		திரு. அ. சிவகரன், யேர்மனி
மாநாட்டு ஊடகப் பொறுப்பாளர்	:	திரு. தே. செந்தில் வேலவர், இலங்கை
கலை பண்பாடு	:	திரு. அ. சத்தியானந்தம், இலங்கை
மலர்க் குழு	:	முனைவர். வீ. செல்வபெருமாள், புதுச்சேரி
		திருமதி நிருபனா ராஜ்குமார், சென்னை
பன்னாட்டுப் பேராளர் குழு	:	தமிழ்த்திரு. சிவா கணபதிப்பிள்ளை, அமெரிக்கா
		தமிழ்த்திரு. விக்கி விக்கிரமசிங்கம், அவுஸ்திரேலியா
		தமிழ்த்திரு. செ. சிவராஜசிங்கம், சுவிற்சர்லாந்து
		தமிழ்த்திரு. அ. இளஞ்செழியன், பிரித்தானியா
		திருமதி மாலதி ராஜவேலு, புதுச்சேரி, இந்தியா
		திரு. குணபதி ஆறுமுகம், மலேசியா
		கவிஞர் இலியாஸ், சிங்கப்பூர்
		திரு. தம்பிமுத்து குருகுலராஜா, யாழ்ப்பாணம்
		தமிழ்த்திரு. க. பாஸ்கரன், பிரான்ஸ்



தோரணவாயில்

உலகத் தமிழ்ப்பண்பாட்டு இயக்கம் 1974இல் தொடங்கப் பெற்று 1977ஆம் ஆண்டில் சென்னையில் முதல் மாநாட்டைக் கூட்டிய காலத்தில் புதுச்சேரியிலும் உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் ஆசிரியர் வீர. மதுரகவியால் தொடங்கப்பட்டது. சென்னை திரு. அரு. கோபாலன் அதற்கு வித்திட்டார். 1979ஆம் ஆண்டில் இலங்கை எதிர்க்கட்சித் தலைவர் அ. அமிர்தலிங்கம் - மங்கையர்க்கரசி தம்பதியரை வரவழைத்து புதுச்சேரி கடற்கரைத் திடலில் மாபெரும் கூட்டம் நடைபெற்றது.

1982ஆம் ஆண்டில் உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் விரிவுபடுத்திய போது திரு. ச. பரதபுண்ணியன் தலைவராகவும் நான் துணைச் செயலாளராகவும் பின்னர் ஓராண்டு செயலராகவும் பணியாற்றியுள்ளேன். அந்தாதி அரசு பா.சு. அரியபுத்திரனார், புலவர் சிவ. கண்ணப்பா, பாவலர் கதிர் முத்தையன், பாவலர் க. தமிழமல்லன், புலவர் இரா. திருமுருகன், புலவர் நாகி, புலவர் சீனு. இராம சந்திரன், கவிஞர் நா. மணிமாறன் போன்றோர் உற்றத் துணையாக இருந்தனர். 1983ஆம் ஆண்டில் திரு. அ. அமிர்தலிங்கம், திரு. இரா. சம்பந்தன் தலைமையில் மாவை. சோ. சேனாதிராஜா அவர்கள் சென்னை, தியாகராய நகர். எண். 2, தணிகாசலம் சாலையில் அலுவலகப் பொறுப்பை ஏற்றிருந்தபோது புதுச்சேரி மற்றும் தமிழகத்தில் பல்வேறு ஆக்க பணிகளைச் செய்திருக்கின்றோம். கால ஓட்டத்தில் நான் உளவியல் துறைக்குச் சென்று விட்டேன்.

இந்த அமைப்பை 20 ஆண்டுகளுக்கு மேலாகத் தன் சொந்த முயற்சியில் முன்னெடுத்த பெருமை மலேசியாவைச் சேர்ந்த திரு. இரா. ந. வீரப்பன் அவர்களைச் சேரும். 1999ஆம் ஆண்டில் தமது முதுமை யை எண்ணியும் இயக்கத்தைத் தொடர்ந்து செயலாற்றிட ஜெர்மனியில் வாழும் திரு. துரை. கணேசலிங்கம் அவர்களைச் செயலராக நியமித்து அவரிடம் இருந்த ஆவணங்களை ஒப்படைத்தார். இது ஒரு தன்னார்வ இயக்கமென்பதால் ஆர்வமிக்கத் தமிழ் ஆர்வலர்கள் ஒன்றிணைந்து மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை மாநாடு நடத்துவது, பேரவைக் கூட்டம் நடத்துவது, நிர்வாகிகளை நியமிப்பது என 43 ஆண்டுகளைக் கடந்துள்ளது. காலத்தின் தேவை கருதி இவ்வியக்கம் ஒரு நிறுவனமாகச் செயல்பட வேண்டியத் தருணம் வந்துள்ளதாக நான் எண்ணுகிறேன்.

2015 ஆண்டு திரு. மாவை. சோ. தங்கராஜா அவர்களும் திரு. மாவை. சோ. சேனாதிராஜா அவர்களும் புதுச்சேரிக்கு வருகைதந்தபோது பழைய நினைவுகளுடன் "உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம்" கட்டற்று உள்ளது. அதனை வலுவூட்டி உலகத் தமிழர் போற்றும் உன்னத அமைப்பாக வளர்க்க வேண்டும் என்ற பேரவாவின் பயனாகப் புதுச்சேரியில் 2016 சனவரி 15-16 நாட்களில் உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கச் சிறப்பு மாநாடு சிறப்பாக நடத்தப்பெற்றது.

பெருங்கவிக்கோ முனைவர் வா. மு. சேதுராமன் அவர்களின் வழிகாட்டுதல், மாண்புமிகு முதல்வர் திரு. ந. ரங்கசாமி, திருமதி. மாலதி ராஜவேலு ஆகியோர் துணை நின்று ஒத்துழைப்பு நல்கினர். புதுச்சேரி பேரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டபடி 2017இல் 13ஆவது பன்னாட்டு மாநாடு இலங்கையில் நடத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

தலைமையகத்தின் முடிவிற்கேற்ப நான் இம்மாநாட்டின் தலைவராகவும் இலங்கை மாண்புமிகு கல்வி இணை அமைச்சர் திரு. வி.எஸ். இராதாகிருஷ்ணன் அவர்கள் சிறப்புத் தலைவராகவும் நியமிக்கப்பெற்றோம். பல்வேறு நாட்டுக் கிளைகளின் ஒருமித்த கருத்துக்களுடன் 13ஆவது பன்னாட்டு மாநாட்டிற்கான கருப்பொருள்: பன்னாட்டுத் தமிழர் எதிர்கொள்ளும் சாவல்களும் முன்னெடுப்புகளும் என்ற பொதுத் தலைப்பில் 10 அமர்வுகளில் ஆய்வரங்கங்களும் கவியரங்கம், கருத்தரங்கம், இசையரங்கம் என பல்வேறு நிகழ்வுகளும் இடம் பெறுகிறது. இம்மாநாடு சிறப்படைய வாழ்த்துக்கள் அனுப்பிய இலங்கை அரசின் மேதகு சேனாதிபதி, மாண்புமிகு பிரதமர், மாண்புமிகு அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபையைச் சார்ந்தவர்கள் எமது நன்றிக்குரியோர்.

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்துடன் இணைந்து செயலாற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர், பேராசிரியர்கள், மாணவர்களின் உற்சாகம் எங்களுக்கு பேரூக்கமாக அமைந்துள்ளது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துடன் இணைந்து இம்மாநாட்டை நடத்துவதில் நன்றியுடன் பெருமிதம் கொள்கிறோம். எல்லா இடர்ப்பாடுகளையும் எளிதில் கடந்து சிறப்பான ஏற்பாடுகளை முன்னெடுக்கும் உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் தலைவர் திரு. வி. சு. துரைராஜா, செயலர் திரு. துரை. கணசேலிங்கம், ஆலோசகர் திரு. மாவை. சோ. தங்கராஜா உள்ளிட்ட அனைத்து உறுப்பினர்களுக்கும் இத்தருணத்தில் நன்றியை உரித்தாக்குகிறேன்.

கடல் கடந்து பயணித்து மாநாட்டில் பங்கேற்கும் அனைத்துப் பேராளர்களுக்கும், கவிதை, கட்டுரை, வாழ்த்துரைகள் வழங்கி இம்மாநாட்டு மலர் சிறப்புறச் செய்த அனைவருக்கும் நன்றி. எள்ளளவும் பிசகாமல் சகோதரத்துவத்துடன் சுழன்று பணியாற்றும் திரு. மாவை. சோ. தங்கராஜா, திரு. தே. செந்தில்வேலவர், திரு. இ. இராஜசூரியர் பங்களிப்புகள் தமிழ்கூறும் நல்லுலகம் என்றும் போற்றும் வகையில் உள்ளது.

தற்போது 20க்கும் மேற்பட்ட நாடுகளில் சிறப்பாக செயலாற்றும் உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் 50 திற்கும் மேற்பட்ட நாடுகளுடன் தொடர்புகளையும் யுனஸ்கோவில் அங்கீகாரத்தினை பெறுவதற்கான வாய்ப்பினையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கன.

இம்மாநாடு சிறப்பாக நடைபெற ஒத்துழைப்பினை நல்கிய இலங்கை அரசு நிறுவனங்கள், வட மாகாண சபை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிர்வாகம் உள்ளிட்ட அனைத்து நிறுவனங்களுக்கும் நன்றியை உரித்தாக்குகிறோம்.

மாநாடு நடத்த திட்டமிட்ட வேளையில் நிதி ஒருபெரும் சுமையாக இருந்தது. அச்சுமையைக் குறைத்தவர் கனடாவில் "டெக்னோ மீடியா" நிறுவனம் கண்டுள்ள திரு. மதன் சண்முகராஜா, அவருக்கு எம் இயக்கத்தின் உளம் நிறைந்த நன்றியையும் பாராட்டுதலையும் உரித்தாக்குகிறோம்.

உலகத் தமிழ்ப் பண்பாட்டியக்க மாநாடு என்றவுடன் தோன்றாத் துணையாக அனைத்து உதவிகளையும் செய்து வருபவர் பெங்களூரு பேராசிரியர் சி. இராமமூர்த்தி அவர்கள். இந்த இயக்கம் பிளவு படாமல் ஓர் உன்னத அமைப்பாக செயலாற்ற வேண்டும் என்பதில் மிகுந்த அக்கறை கொண்டவர். அவர்தம் உதவிகளுக்கு நன்றிகள் பல.

சுமார் 200 பக்க அளவில் ஒரு மாநாட்டு மலர் வெளியிட எண்ணி அதற்கான முயற்சிகளை மேற்கொண்ட போது, ஒவ்வொரு வரும் அனுப்பிய வாழ்த்துக்கள், கட்டுரைகள், கவிதைகள், கருத்துகள் எங்களை உற்சாக மூட்டியதுடன் மலர் பக்க எண்ணிகை 400க்கு மேலாக கூடக் கூடிய சூழல் உருவாகிவிட்டது. இந்த மலர் ஒரு சடங்காக முடங்கிவிடக்கூடாது என்பதால் மிகுந்த கவனத்துடன் ஆய்வுக் கட்டுரைகளை மதிப்பீடு செய்து, தெரிவு செய்யப்பட்ட 20 கட்டுரைகளை ஓர் ஆய்வு நூலாக வெளியிட முடிவு செய்துள்ளோம். இம்முயற்சிக்கு உற்ற துணை நிற்பவர் பேராசிரியர் சுபதினி ரமேஷ். இவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகத்தில் 10 அமர்வுகளில் ஆய்வரங்கங்கள் நடத்துவதற்கு இணைப்பாளராக இருந்து செயலாற்றுகிறார். மேலும் பேராசிரியர் வேலுநம்பி, உள்ளிட்டோர் மாநாட்டுப் பணிகளில் தங்களின் மதிப்புமிக்க ஒத்துழைப்பினை வழங்கி வருகின்றனர். மாநாட்டுக் குழுவின் சார்பில் இப்பேராசிரியர்களுக்கு எம் நன்றியை உரித்தாக்குகின்றோம்.

இம்மலர் சிறப்பாக அமைய படைப்புகளை பெற்று அச்சாக்கம் செய்வதில் அல்லும் பகலாக உழைத்தவர்களில் திரு. நா. சுந்தர், பிளாட்டினம் கிராபிக்ஸ், புதுச்சேரி, திரு. கோ. பாலாஜி, திருமலை ஆப்செட் அச்சகம், சென்னை, திரு. மதிவாணன், புதுச்சேரி அச்சுப் பிழைநீக்கம் செய்ய உதவிய முனைவர் வீ. செல்வபெருமாள், புலவர் கி. யேம்ஸ் அல்ஸ்ரன், யேர்மனி குறிப்பிடத்தக்கவர். அவர்களின் இடையறா உழைப்பிற்கு நன்றியை உரித்தாக்குகிறோம்.

தங்களின் கருத்துக்களை எதிர்நோக்கி, மாநாடு சிறப்பாக நடைபெற அனைவரின் ஒத்துழைப்பினையும் நாடுகிறோம்.

வணக்கம்.

அன்புடன்
பாஞ். இராமலிங்கம்
மலர் பதிப்பாசிரியர்,
புதுச்சேரி, இந்தியா

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்க
13ஆவது பன்னாட்டு மாநாடு 2017 – சிறப்பு அழைப்பாளர்கள்



கௌரவ **இரா. சம்பந்தன்,** M.P.
இலங்கை நாடாளுமன்ற
எதிர்க்கட்சித் தலைவர்



கௌரவ **V.S. இராதாகிருஷ்ணன்,** M.P.
கல்வித் துணை அமைச்சர், இலங்கை
சிறப்புத் தலைவர்



கௌரவ **மாவை. சோ. சேனாதிராஜா,** M.P.
நாடாளுமன்ற உறுப்பினர், இலங்கை



கௌரவ **விஜயகலா மகேஸ்வரன்,** M.P.
சிறுவர் மற்றும் மகளிர் மேம்பாட்டுத்
துணை அமைச்சர் இலங்கை

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்க
13ஆவது பன்னாட்டு மாநாடு 2017 : சிறப்பு அழைப்பாளர்கள்



கௌரவ **S.K. தேவமணி,** M.P.
பிரதமர் அலுவலகத்
துணை அமைச்சர், மலேசியா



கௌரவ **து. ரெஜினோல்ட் குரே**
வடமாகாண ஆளுநர்
யாழ்ப்பாணம்



கௌரவ நீதியரசர்
க.வி. விக்னேஸ்வரன்
முதலமைச்சர்
வடமாகாண சபை, யாழ்ப்பாணம்



கௌரவ **C.V.K. சிவஞானம்**
தலைவர், வடமாகாண சபை,
யாழ்ப்பாணம்

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்க
13ஆவது பன்னாட்டு மாநாடு 2017 : சிறப்பு அழைப்பாளர்கள்



பேராசிரியர் **R. விக்னேஸ்வரன்**
துணைவேந்தர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை



கௌரவ **A. நடராஜன்**
இந்தியத் துணைத் தூதுவர்
இலங்கை



கௌரவ **ஈ. சரவணபவன்,** M.P.
நாடாளுமன்ற உறுப்பினர்
இலங்கை



கௌரவ **சிவஞானம் சிறிதரன்,** M.P.
நாடாளுமன்ற உறுப்பினர்,
யாழ்ப்பாணம்



கௌரவ **திலகராஜா,** M.P.
நாடாளுமன்ற உறுப்பினர்,
இலங்கை



கௌரவ **அரியரத்னம்**
கவிந்திரன் கோடீஸ்வரன், M.P.
நாடாளுமன்ற உறுப்பினர், இலங்கை



கௌரவ **யோகேஸ்வரன்,** M.P.
நாடாளுமன்ற உறுப்பினர்
இலங்கை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
மாநாட்டு வரவேற்புக் குழு



பேராசிரியர் **சுபதினி ரமேஷ்**
மொழியியல் ஆங்கிலத்துறை
கலைப்பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்



பேராசிரியர் **தி. வேலுநம்பி**
முகாமைத்துவக் கற்கைகள் வணிகப்பீடம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்



பேராசிரியர் **விசாகா ரூபன்**
தமிழ்த்துறை, கலைப்பீடம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்



கலாநிதி (திருமதி) **சுகந்தினி சிறீமுரளிதரன்**
முதுநிலை விரிவுரையாளர்
இந்து நாகரிகத்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்



இராஜேஷ் கண்ணன்
சிரேஷ்ட விரிவுரையாளர்
சமூகவியல் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

உலகத்தமிழ்ப் பண்பாட்டு இயக்கம்,

தலைமையகம் கனடா

செயற்குழு உறுப்பினர்கள்



நீதியரசர் **தாவிதன்னுசாமி**
உதபஇ தலைமையகக்
காப்பாளர்



பெருங்கவிக்கோ
முனைவர் **வா. மு. சேதுராமன்**
சிறப்பு ஆலோசகர்



மாவை **சோ. தங்கராஜா**
தலைமை ஆலோசனைக்
குழுத் தலைவர்



டாக்டர் **சி. இராமமூர்த்தி**
சட்ட ஆலோசகர்
பெங்களூரு



சிறப்புத் தலைவர்
கலாநிதி **மிக்கி செட்டி**
தென்னாப்ரிக்கா



உதபஇ தலைமையகத் தலைவர்
வி.சு. துரைராஜா
கனடா



உதபஇ தலைமையகப்
பொதுச்செயலர்
துரை. கணேசலிங்கம்
ஜெர்மனி



பா.கு. சண்முகம்
முதன்மைத் துணைத்தலைவர்
மலேசியா



அ. சிவகரன்
துணைத்தலைவர் (நிதி)
ஜெர்மனி



சு. தியாகலிங்கம்
துணைத்தலைவர்



ஆர். என். லோகேந்திரலிங்கம்
துணைத்தலைவர் (ஊடகம்)



முனைவர் **இல. சுந்தரம்**
துணைத்தலைவர் (தமிழியியல்)



முனைவர் **பாஞ். இராமலிங்கம்**
துணைத்தலைவர் (கலை, பண்பாடு)



நட. ராஜ்குமார்
துணைத்தலைவர் (பன்னாடு)



என். ஆர். விக்ரமசிங்கம்
துணைத்தலைவர் (மனித உரிமை)



இ. இராஜசூரியர்
துணைத்தலைவர்
(கிளை அமைப்பாளர்)



எஸ். பிரசாந்தன்
உதவிப் பொருளாளர்



புலவர் **கிறேசியன் யேம்ஸ் அல்ஸ்ரன்**
நிர்வாகச் செயலர்

கண்டங்களுக்கான ஒன்றியப் பொறுப்பாளர்கள்



சிவா கணபதிப்பிள்ளை
அமெரிக்க ஒன்றியப்
பொறுப்பாளர்



கலாநிதி **பாஞ். இராமலிங்கம்**
ஆசிய ஒன்றியப்
பொறுப்பாளர்



துரை. கணேசலிங்கம்
ஐரோப்பிய ஒன்றிய
பொறுப்பாளர்

13ஆவது உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்க பன்னாட்டு மாநாடு
சிறப்பு அழைப்பாளர்கள்



முனைவர். **வி. முத்து**
தலைவர்
புதுவைத் தமிழ்ச்சங்கம்



இராமநாயகம் திரவியம்
தலைவர்,
மலேசியா மகளிர் இயக்கம்



T. கணேசன்
CSI, YSS மலேசியா



டத்தின் தாமரைச்செல்வி
மலேசியா



டத்தோ டாக்டர் **எஸ். சுப்ரமணியன்**
தலைவர், தமிழ்ச்சங்கம், மலேசியா



பொன்னி வீரப்பன்
மலேசியா



பேராசிரியர்
இராச. குழந்தைவேலனார்



தே. செந்தில்வேலவர்
உதபஇ, கொழும்பு



வா. மு. சே. திருவள்ளுவர்
சென்னை



புதுவை சித்தன்
ஜெயமூர்த்தி



பாவலர் **கதிர். முத்தையன்**
கடலூர்



உமாதேவி
மலேசியா



மாண்புமிகு புதுச்சேரி முதல்வர் திரு. வே. நாராயணசாமி அவர்கள் மாண்புமிகு இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர் திரு. மாவை. சோ. சேனாதிராசா அவர்களை வரவேற்றல்



மாண்புமிகு இலங்கை கல்வி துணை அமைச்சர் திரு. வி.எஸ். இராதாகிருஷ்ணன் அவர்களுடன் உதபஇ, இந்திய கிளை நிர்வாகிகள்

உள்ளடக்கம்

பக்கம்

7 தோரணவாயில்

21 13ஆவது பன்னாட்டு மாநாடு – தலைமையுரை
முனைவர் பாஞ். இராமலிங்கம்

25 13ஆவது பன்னாட்டு மாநாடு – நிகழ்ச்சி நிரல்

33 உலகத் தமிழ்ப்பண்பாட்டு இயக்கம் – செயற்குழுவினர்

41 உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்க மாநாடுகள்

பகுதி 1 வாழ்த்துகள்

47. மைத்ரிபால சிறிசேன, இலங்கை ஜனாதிபதி
48. ரனில் விக்கிரசிங்கே, இலங்கை பிரதம அமைச்சர்
49. இரா. சம்பமந்தன். இலங்கை எதிர்கட்சித் தலைவர்
50. வே.ச . இராதாகிருஸ்ணன், கல்வி இராஜாங்க அமைச்சர்
51. விஜயகலா மகேஸ்வரன், சிறுவர் மற்றும் மகளிர் விவகார இராஜாங்க அமைச்சர்
52. றிஸாட் பதியுதீன், கைத்தொழில் மற்றம் வர்த்தக அமைச்சர்
53. டத்தோஸ்ரீ உத்தாமா சாமிவேலு, மலேசியா
54. டத்தோஸ்ரீ எஸ். கே. தேவமணி, பிரதமர் அலுவலகத் துணை அமைச்சர், மலேசியா
55. ரெஜினோல்ட் குரே, ஆளுனர் வடமாகாணம், இலங்கை
57. க.வி. விக்னேஸ்வரன், முதலமைச்சர், வடமாகாணம், இலங்கை
58. சீ.வீ.கே. சிவஞானம், அவைத் தலைவர், வடக்கு மாகாண சபை
59. மாவை. சோ. சேனாதிராசா, நாடாளுமன்ற உறுப்பினர்
62. சிவஞானம் சிறீதரன், நாடாளுமன்ற உறுப்பினர்
64. மயிலவாகனம் திலகராஜா, நாடாளுமன்ற உறுப்பினர்
65. கவீந்திரன் கோடீஸ்வரன், பாராளுமன்ற உறுப்பினர், அம்பாரை மாவட்டம்
66. ஆ. நடராஜன், இந்தியத் துணைத்தூதவர், யாழ்ப்பாணம்
67. பேராசிரியர் இரட்ணம் விக்னேஸ்வரன், துணை வேந்தர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
68. உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்க தலைமையகம் வாழ்த்து
71. நீதியரசர் தாவிதன்னுசாமி, புதுச்சேரி
72. பகிரதன் அமிர்தலிங்கம், பிரித்தானியா
73. கணேசன் தங்கவேலு, தலைமை செயல்முறை அதிகாரி, சமூக வியூக அறவாரியம்
74. சிவா கணபதிப்பிள்ளை, அமெரிக்க ஒன்றியத் தலைவர், உதபஇ
75. ஆர்.கே.ஆர். அனந்தராமன், அரசு கொறடா, புதுச்சேரி அரசு
76. டத்தோ. டாக்டர். சு. சுப்பிரமணியம், மலேசியா
77. டத்தின் தாமரைச் செல்வி சுப்பிரமணியம், மலேசியா
78. வீ. பொன்னி கணேசன், மலேசியா
79. தே. செந்தில்வேலனார், பிரதம ஆசிரியர், தினகரன் இலங்கை

81. சாமி அப்பாத்துரை, கனடா
83. இரா. பாலேந்திரநாதன், செயலாளர், உதபஇ, பிரித்தானியா
85. சு. தியாகலிங்கம், தலைவர், உதபஇ, நோர்வே
86. சு. பிரசாந்தன், செயலாளர், உதபஇ, இலங்கை
87. பாக்கியசெல்வம் அரியநேத்திரன், மட்டக்களப்பு மாவட்ட தமிழ்தேசிய கூட்டமைப்பு
89. ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்
90. இரேவணசித்த சிவஸ்ரீ ஆறுமுக பாஸ்கரக்குருக்கள், ஜெர்மனி
91. அடைக்கலமுத்து இளஞ்செழியன்,தலைவர், உதபஇ, பிரித்தானியா
92. பொ. சிறீஜீவகன், ஜெர்மனி
93. கந்தசாமி கருணாகரன், யாழ்ப்பாணம்
94. ஆ.ந. இராசேந்திரன், யாழ்ப்பாணம்
95. நவநீதிராஜா பரராஜசிங்கம், அவுஸ்திரேலியா
96. நடா. ராஜ்குமார், கனடா
97. க. தமிழமல்லன், புதுச்சேரி
98. பெ. இராஜவேலு, காப்பாளர், உதபஇ, இந்தியா
99. வி. முத்து, தலைவர், புதுவைத் தமிழ்ச் சங்கம்
100. மாலதி இராஜவேலு, தலைவர், உதபஇ, புதுச்சேரி
101. வண. பிதா. கலாநிதி. சந்திரக்குமார், வடமாகாண கிறிஸ்து அபிவிருத்தி ஒன்றிய தலைவர்
102. AEDU, London
103. உலகத் தமிழ் பண்பாட்டு இயக்க யேர்மனி வாழ்த்து
104. மா. இரவிச்சந்திரன், தலைவர், கனடா கிளை
105. செல்லையா சிவராமசிங்கம், சுவிஸ் கிளை அமைப்பாளர்
106. நா.இ. விக்கிரமசிங்கம், அவுஸ்திரேலியா கிளை தலைவர், உதபஇ
107. குகதாஸ் நவநீதராஜா, தலைவர், விக்ரோறியா தமிழ் கலாச்சார கழகம்
108. வா.மு.சே. திருவள்ளுவர், தமிழ்ப்பணி, ஆசிரியர், சென்னை
109. உஷாந்தி நேசகாந்தன், இலங்கை
110. அப்துல் மஜீத், புதுச்சேரி
111. அமுதுஜோசப் சந்திரகாந்தன்
112. மாவை. சோ. தங்கராஜா, யேர்மனி
113. உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் படங்கள் – 1

பகுதி 2 உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம்

123. உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் அடையாள முத்திரை
124. தமிழர்கொடி
126. தலைமையக ஆட்சிக்குழு 2017
127. தலைமையில் பதிவு சான்றிதழ்
132. அடையாள முத்திரை பதிவு சான்றிதழ் (2014)
134. 12ஆவது உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் மாநாடு தீர்மானங்கள்
135. ஜெர்மனி சிறப்பு மாநாடு (2015) தீர்மானங்கள்
140. புதுச்சேரி சிறப்பு மாநாடு (2016) தீர்மானங்கள்

148. பிரான்சு சிறப்பு மாநாடு (2016) தீர்மானங்கள்
152. பிரித்தானியா தீர்மானங்கள்
154. ஜெர்மனி கூட்டத் தீர்மானங்கள்
158. உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்க நிர்வாகிகள்
165. தி. இராமநாயகம், மலேசியா – வாழ்த்துரை
166. இ. இராஜகுரியர், யேர்மனி – அன்புரை
167. செல்வகுமார், சென்னை – வாழ்த்துரை

பகுதி - 3 கட்டுரைகள்

171. உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம்: ஒரு வரலாற்றுப் பார்வை
துரை. கணேசலிங்கம்
186. அதி சிறந்த வாழ்க்கை முறையை அமைத்து, பிரச்சினைகளைத் தீருங்கள்
வி.சு. துரைராஜா
189. கடலுக்கடியில் உறங்கும் தமிழனின் தொன்மை வரலாறு
இ.க. அரியரத்தினம்
193. சைவத்தில் தமிழும் சமஸ்கிருதமும் – சிவமகிழி
198. தமிழ் என்ற உச்சரிப்பால் ஏற்படும் மகிமை – சபாலிங்கம்
200. வீழ்ந்து விடவில்லை! விளைந்து கொண்டிருக்கிறோம்
நந்தவனம் சந்திரசேகரன்
204 அ. முத்துலிங்கம் கவிதைகளில் பிரதிபலிக்கப்படும் வாழ்விடத்தாக்கம் பற்றிய ஒரு நோக்கு
முருகதயாநிதி
211. முன்பள்ளிச் சிறார்களின் நடத்தைக்கோலங்களில் பண்பாட்டுகாரணிகளின் தாக்கம் – இலங்கையின் வடமராட்சி வடக்கு பிரதேசசெயலர் பிரிவுக்கு உட்பட்ட முன்பள்ளிகளை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு
225. தமிழராய் பிறந்தோம், தமிழராய் வாழ்வோம்! – சி. இராமமூர்த்தி
227. உலகத் தமிழர், பேராசிரியர் இர. ந. வீரப்பனார் – பொன்னி வீரப்பன்
232.. வளர் இளம் பருவத்தினருக்கு இன்றையக் கற்பித்தல்! நளையப் பண்பாடு!
நீலம். அருள்செல்வி
239. இன்றையச் சூழலில் தமிழ்மொழியின் எதிர்காலம் – சிக்கல்களும் விவாதங்களும்
அ. லட்சுமிதத்தை
246. விபுலானந்த அடிகளாரின் அரிய கையெழுத்துப் படிகள், மடல்கள் உணர்த்தும் செய்திகள்
மு. இளங்கோவன்
255. தமிழர்களின் சாதனைகள் – இராமநாயகம் திரவியம்
259. உலகத் தமிழ்ப்பண்பாட்டு இயக்கமும் நானும்
ஆர்.என். லோகேந்திரலிங்கம்
267. பாவாணர் பார்வையில் பைந்தமிழ்ப் பண்பாடு – ஆ. நெடுஞ்சேரலாதன்
272. அமைப்பியல் மற்றும் செயற்பாட்டு நோக்கில் எதிர்காலத் தமிழ் மொழி ஆய்வு: வளங்களும் வாயப்புகளும்
மார்க்கண்டன் ரூபவதனன்
282. தமிழர் பண்பாட்டில் சாதி அமைப்பு – எதிர்கொள்ளும் மாற்றங்களும் தீர்வுகளும்
அரங்க. மு. முருகையன்

287 தமிழ்ப் பண்பாடு - மாவை. சோ. தங்கராசா

291 நாட்டியாழ் - பரத ஈழவாணன்

293 தாய் மொழிக்கும் தமிழர் பண்பாட்டுக்கும் என்றும் தலைவணங்கும் கனடா வர்தக முன்னோடி மதன் சண்முகராஜா
ஆர்.என். லோகேந்திரலிங்கம்

299 வடமேற்கரை தமிழர் வரலாறு - ஓர் ஆய்வு - சிவலோகஸ்தன்

310 கங்காரு தேசத்தில் தமிழ் சமூகம் - நா.இ. விக்கிரமசிங்கம்

313 ஆயுர்வேதமும் மருத்துவமும் அதன் தோற்றமும்
இரா.ச. குழந்தைவேலன்

317 கற்றலும் கற்பித்தலும் - சில சிந்தனைகள்
தயாளன் வேலாயுத பிள்ளை & சிவதாஸ் சிவபாலசிங்கம்

321 குழந்தைகளின் உரிமைகள் - பன்னாட்டு மற்றும் இந்திய சட்டப் பாதுகாப்பு
பாஞ். இராமலிங்கம்

329 இலங்கையில் சொற்பொழிவு - தற்கால நிலையும் எதிர்கொள்ளும் சவால்களும்
ச. லலீசன்

333 புதுச்சேரியும் புலப்பெயர்வும் - வீ. செல்வப்பெருமாள்

பகுதி 4 - கவிதைகள்

339 உலக மாந்தநேய உரிமை - பெருங்கவிக்கோ வா.மு. சேதுராமன்

341 தமிழர் உலகம்! - உத்தமபுத்திரா புருஷோத்தம்

345 தமிழ்ப்போர் செய்விடுவாய் - எஸ்.கே. விக்னேஸ்வரன்

346 தீ யாழ் நூல் பாழ் - பரதஈழவாணன்

347 பதிமூன்றாம் மாநாடு பாரினில் வெல்லும் - அந்தோணிசாமி அருளானந்தம்

348 பண்பாடியக்கம் புவியாளும் - ஸ்ரீ வாணன்

349 இரா. ந.வீ. போற்றுவோமே! - புலவர் கதிர். முத்தையன்

351 இதுதான் என்றால் - முகவை முத்து

352 அன்னை பூமி - இரா. சுப்பிரமணியம்

பகுதி 5 - ஆங்கிலக் கட்டுரைகள்

355 Happiness of the Family Institution according to the Perspective of Tamil Sayings
Umah Devi Thandavarayan

364 Migration of Tamil Speaking People to Andaman: A Study of Socio Economic Status of Tamils in Port Blair.
K. Venkatesan

பகுதி 6 - பங்கேற்கும் பேராளர்கள்

381 உலகத் தமிழ் மாமணி விருது - 2017 பெறுவோர்

382 பங்கேற்கும் பேராளர்கள்

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம்
INTERNATIONAL MOVEMENT FOR TAMIL CULTURE
Non-Profit, Non-Political, Non-Religious, Charitable, Worldwide Registered, tamil Cultural Organization - Est. in 1974
Head Office 5310 Finch Ave. East, Unit #10, Toronto, Ontario M1S 5E8
Tel: 1.647.829.4044 email: raja@ifsglno.com
www.imfcweb.com



13ஆவது பன்னாட்டு மாநாடு - தலைமை உரை

(5 - 6, ஆகஸ்டு, 2017)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

இலங்கை

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் தலைமையகம், ஒன்றியங்கள் கிளைகள் ஆகியவற்றின் பேராதரவுடன் இலங்கைக்கிளை நடத்தும் 13ஆவது பன்னாட்டு மாநாடும் உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கப் பேரவைக்கூட்டமும் 2017 ஆகஸ்டு மாதம் 5 - 6ஆம் நாள் சனி மற்றும் ஞாயிறு தினங்களில் (2048 திருவள்ளுவராண்டு) இலங்கையின் பண்பாட்டுத் தலைநகர் யாழ்ப்பாணத்தில் இடம் பெறுகிறது.

உலகத் தமிழ் இனத்தை மொழியாலும் பண்பாட்டாலும் ஒருங்கிணைக்கும் உயர் நோக்குடனும் தமிழர் வாழும் இடங்களில் தலை நிமிர்ந்து வாழ வேண்டும் என்னும் குறிக்கோளுடனும் அரசியற்சார்பற்று இன மத பேதங்களைக்கடந்து தமிழ்ப் பண்பாட்டாளர் என்னும் ஒரே குடையின் கீழ்ச் செயற்பட வேண்டும் எனும் உயர்ந்த கொள்கையுடனும் தமிழ் மொழியினை மறந்து போனவர்களைத் தாய்மொழி தமிழ் கற்பிக்கும் நல்நோக்குடனும் 1974 தைத் திங்கள் சுறவம் 08.01.1974 அன்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற 4ஆவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின்போது தோற்றுவிக்கப்பட்டது. மாநாட்டிற்கு வந்திருந்த தமிழ் அறிஞர்களால் தோற்றுவிக்கப்பட்ட இவ்வியக்கம் தமிழர்களை ஒன்றிணைப்பதில் வெற்றிகண்ட பன்னாட்டு இயக்கம் ஆகும். இவ்வியக்கம் கனடாவைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கி வருகின்றது.

உலக நாடுகளில் பல கிளைகளை அமைத்து இதுவரை 1977 சென்னை தமிழ்நாடு (இந்தியா) 1980 மொரீசியஸ் 1985 சேலம் தமிழ்நாடு (இந்தியா) 1987 கோலாலம்பூர் (மலேசியா) 1992 சிட்னி (அவுஸ்திரேலியா) 1996 ரொறன்ரோ (கனடா) 1999 வெள்ளி விழா சென்னை(இந்தியா) 2001 டர்பன் (தென் ஆபிரிக்கா) 2004 புதுவை (இந்தியா) 2007 கோலாலம்பூர் (மலேசியா) 2011 பிரான்ஸ் 2014 யேர்மனி ஆகிய இடங்களில் 12 உலக மாநாடுகளையும் பல சிறப்பு மாநாடுகளையும் தமிழ் மக்களின் நலன் கருதி நடத்தியுள்ளது.

இம்மாநாடுகள் ஊடாகத் தமிழ்வழி வழிபாடு, தமிழ்க்கல்வி, தமிழ்க்கலை, கலாச்சாரப் பண்பாடு ஊக்குவிப்பு தமிழர் இறையாண்மை, தமிழர் நிறுவனங்களின் ஒன்றிணைப்பு மறந்து போன மறக்கப்பட்ட தமிழர்களின் வரலாற்றுத்தேடல்கள் தமிழ் ஆண்டு, தமிழர் திருநாள், தமிழர் மரபுரிமைத் திங்கள் உலகளாவிய தமிழர்களின் ஒருங்கிணைப்பு உலகத் தமிழ்ப் பண்பாட்டு மையம் தமிழர் கொடி, தமிழர்கீதம், மேலும் தமிழ்ப் பண்பாட்டு ஆய்வுகள் உரையாடல்கள் ஆகியவற்றினை

நடத்தி தமிழர்தம் எண்ணங்களை உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் உலகறிய வைத்துள்ளது.

இவ்வியக்கம் 30க்கு மேற்பட்ட நாடுகளில் கிளைகளையும் 50 மேற்பட்ட நாடுகளுடன் தொடர்புகளையும் யுனஸ்கோவில் அங்கீகாரத்தினையும் பெறுவதற்கான வாய்ப்பினையும் பெற்றுள்ளது. இவ்வியக்கத்திற்கு உலகெங்கும் வாழும் கல்வியாளர்கள், ஆய்வாளர்கள் கலை இலக்கிய ஆர்வலர்கள், அறிஞர் பெருமக்கள் தங்களின் தொடர்ந்த ஆதரவை அளித்து வருகின்றனர்.

இந்த மாநாட்டை இலங்கையில் நடத்துவதற்கு உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் சார்பில் என்னை மாநாட்டுத் தலைவராக நியமித்ததில் பெருமகிழ்வு கொள்வதுடன் பெரும் பொறுப்பும் உள்ளதாகக் கருதுகிறேன்.

இந்தியாவிலிருந்தும் மற்ற நாடுகளில் இருந்தும் 200க்கு மேற்பட்ட பேராளர்கள் மாநாட்டில் கலந்துகொள்கின்றனர்.

கடந்த ஆண்டு 2016-ல் எமது உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்திற்கு மறுமலர்ச்சியை அளிக்கம் வகையில் இந்திய மண்ணின் புதுவை மாநிலத்தில் உள்ள பாண்டிச்சேரி தலைநகரில் இடம்பெற்ற இரண்டு நாள் (15 - 16 சனவரி, 2016) மாநாடு அனைத்துலக இயக்கத்தின் உறுப்பினர்களுக்கு உற்சாகம் தரும் செயற்பாடாக அமைந்தது. உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் 13வது பன்னாட்டு மாநாடு இவ்வியக்கம் தோன்றிய யாழ்ப்பாண மண்ணில் நடத்தப்படவேண்டும் என புதுச்சேரியில் நடைபெற்ற பேரவைக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

கடந்த 2012ம் ஆண்டு உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் சென்னையில் (இந்தியா) உலகத் தமிழ்க் கல்வி மாநாடு ஒன்றினை நடாத்தி அம்மாநாட்டுத் தீர்மானத்திற்கமைய சென்னையில் உள்ள எஸ்.ஆர்.எம் பல்கலைக்கழகத்துடன் புரிந்துணர்வு உடன்படிக்கையின் கீழ் மொழி வளர்ச்சிக்காகவும் புலம்பெயர்ந்த நாடுகளில் வாழும் தமிழ் மக்களின் அடையாளத்தினைப் பேணிப் பாதுகாக்கும் பணியினை உலகத் தமிழப் பண்பாட்டு இயக்கம் மேற்கொண்டு தென்ஆபிரிக்கா, ஆஸ்திரேலியா, சுவிற்சர்லாந்து, கனடா போன்ற நாடுகளில் இத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இம் மாநாட்டின் கருப்பொருளாக தமிழ் மொழி பண்பாடு எதிர்நோக்கும் சவால்களும் முன்னெடுப்புக்களும் என்னும் ஆழப்பதிந்த கருத்தில் சிறப்பு வெளியீடாக சுமார் 400 பக்கங்களைக் கொண்ட வரலாற்றுச் சிறப்புமிக்க மாநாட்டு மலர் வெளியிடப்படுகிறது.

மாநாட்டு நோக்கம்

13ஆவது பன்னாட்டு மாநாட்டின் நோக்கம் தமிழர்தம் ஒன்றுபட்ட இலக்காகும். குறிப்பாக, தமிழர்கள் அயல்நாடுகளில் அனுபவிக்கும் சாவல்களுக்கு தீர்வு காணும் வகையில் மாநாட்டு நோக்கம் வரையறைக்கப்பட்டுள்ளது. தமிழ்மொழி, பண்பாடு எதிர்நோக்கும் சாவல்களும் முன்னெடுப்புகளும் இம்மாநாட்டில் கருப்பொருளாகும். பொதுவாக நிலவக்கூடிய சாவல்களை எதி ர்கொள்ள ஆக்கப்பூர்வமான செயல்திட்டங்களை முந்தைய மாநாடுகளிலும், தீர்மானங்களாக நிறைவேற்றப்பட்டுள்ளன. அவற்றுள் சில நடைமுறையில் உள்ளது. ஒரு சில செயலாக்கத்திற்கு கொண்டு வருவதில் சிக்கல் மிகுந்ததாக உள்ளது. எந்த செயல்பாடாக இருந்தாலும் நிதி திரட்டுவது ஒரு பெரும் சவாலாகும். உலகத் தமிழ்ப் பண்பாட்டு செயற்குழுவினர் அவ்வப்போது இம்முயற்சிகளை மே ற்கொண்டு பின்னடைவையே சந்தித்துள்ளனர்.

இம்மாநாட்டு கருப்பொருளை அடிப்படையாக கொண்டு வரப்பெற்ற கருத்துரைகள், கட்டுரைகள், ஆய்வு முடிவுகளின் தொகுப்பாக 10 அமர்வுகளில் 60 பேராளர்கள் பங்கேற்கும் ஆய்வரங்கம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடைபெறுகின்றது.

உலக அளவில் தமிழர் எதிர் நோக்கும் பன்பாட்டு சவால்களை சரியான முறையில் தீர்வுகண்டு தமிழர்தம் மொழி, பண்பாட்டை, உயரிய முறையில் முன்னெடுக்க இம்மாநாட்டில் பல்வேறு தீர்ம ானங்கள் இயற்றப்பட உள்ளன.

அவ்வாறு இயற்றப்பட உள்ள தீர்மானங்களின் முன்னோட்டமாக கீழ்வரும் அம்சங்களை குறிப்பிடலாம்.

1. உலகெங்கும் தமிழர் வாழும் நாடுகளில் பொதுவான தமிழ்க் கல்வித் திட்டத்தை உருவாக்கி செயல்படுத்துவது. அதற்கேற்ப மலேசியா, இந்தியா, இலங்கைப் பல்கலைக் கழகங்களைத் தொடர்பு கொண்டு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்தலும் தொடர்ந்து முன்னெடுத்தலும்.
2. தமிழர் வாழும் நாடுகளில் அந்தந்த நாட்டு இறையாண்மைக்கு ஏற்ப தமிழர்தம் வாழ்வுரிமைகளை உறுதிப்படுத்துதல்
3. தமிழர்களுக்கான வாழ்வாதாரங்களை மேம்படுத்தும் வகையில் வாய்ப்புள்ள நாடுகளில் உலகத் தமிழ்ப் பண்பாட்டு நிதியம் ஏற்படுத்தி தமிழர் வாழ்வில் மேம்பாடுகாண வகை செய்தல்
4. இலங்கையில் உலகத் தமிழ்ப் பண்பாட்டு மையம் அமைக்க குறிப்பிட்ட கால வரையறைக்குள் திட்டம் உருவாக்கி செயலாக்கம் பெறச் செய்தல்.
5. தமிழர் வாழும் நாடுகளில் "பண்பாட்டு மையம்" ஏற்படுத்தி ஓர் உயரிய ஆவணக் காப்பகமாகப் பராமரித்தல்
6. உலகத் தமிழ்ப் பண்பாட்டை உறுதி செய்யும் வகையில் ஆண்டு தோறும் சிறப்பு நிகழ்வுகளை வாய்ப்புள்ள நாடுகளில் ஏற்பாடு செய்தல்
7. உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் பண்பாட்டு ரீதியிலான ஆய்வுகளை முன்னெடுக்க உரிய பல்கலைகக்கழகங்களில் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்துதல்.
8. புலம் பெயர்ந்த தமிழர்களின் குழந்தைகள் தாயகத்திற்கு சென்றுவர கல்வி, மற்றும் பண்பாட்டுச் சுற்றுலாவை உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் முன்னெடுக்க வேண்டும்.
9. தமிழர்கள் ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்கு செல்லும்போது அந்தந்த நாட்டில் உள்ள உலகத் தமிழ்ப் பண்பாட்டு மையத்தில் வரவேற்று உபசரிப்பதுடன் தமிழின உறவுகளை மேம்படுத்திட வேண்டும்.
10. உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் இணையதளம் செயல்பாட்டில் உள்ளது போலவே காலாண்டு செய்தி மடல், இணைய வழியாகவும் அச்சிதழாகவும் வெளியிட ஆவண செய்ய வேண்டும்.

மாநாட்டு அமர்வுகள்

இம்மாநாட்டில் பங்கேற்க விரும்பிய பேராளர்களின் படைப்புகளுக்கு ஏற்ப 10 அமர்வுகளில் 60க்கும் மேற்பட்ட ஆய்வுகட்டுரைகளும் கருத்துரைகளும் இடம் பெறுகிறது.

முதல் அமர்வு : கடல் கடந்த தமிழர்ப் பண்பாடு

இரண்டாம் அமர்வு : தமிழர்ப் பண்பாட்டு இலக்கிய ஆய்வு

மூன்றாம் அமர்வு : புலம்பெயர்ந்த தமிழர்கள் எதிர்நோக்கும் சவால்கள்

நான்காம் அமர்வு : உலகத் தமிழர் எதிர்நோக்கும் சவால்கள்

ஐந்தாம் அமர்வு : உலக நாடுகளில் தமிழ்க் கல்வி

ஆறாம் அமர்வு : பன்னாட்டளவில் தமிழர் வாழ்வாதாரங்கள்

ஏழாம் அமர்வு : ஐரோப்பியத் தமிழர்கள்

எட்டாம் அமர்வு : இணைய வழித் தமிழர் உறவுகள்

ஒன்பதாம் அமர்வு : ஊடகமும் தமிழர் தொடர்புகளும்

பத்தாம் அமர்வு : இலங்கைத் தமிழர் பண்பாட்டு ஆய்வுகள்

இரண்டு கவியரங்கங்கள் "தாய் மண்ணை மறவாத தமிழர்களாய் வாழ்வோம்" மற்றும் "உலக மாந்த நேய உரிமை" தலைப்புகளில் இடம் பெறுகிறது.

சிறப்பு அரங்கத்தில் இலங்கை நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன் அவர்களும் இந்திய துணைத் தூதுவர் திரு. A. நடராஜன் அவர்களும் சிறப்புரை வழங்குகின்றனர்.

தொடர்ந்து உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் சார்பல் பல்வேறு நாடுகளுக்குப் பயணித்து இயக்கத்தின் காப்பாளராகத் திகழும் இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர் திரு. மாவை. சோ. சேனாதிராசா அவர்களின் 75ஆம் அகவை போற்றி பாராட்டரங்கம் நடைபெறுகிறது.

பன்னாட்டுப் பேராளர்கள் தங்களின் கருத்துக்களை எடுத்துரைக்க பன்னாட்டுப் பேராளர் அமர்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தமிழர் கலை, பண்பாடு, இசை, நடனம் போன்ற பல்வேறு அமர்வுகள் இடம் பெறுகிறது. மக்களிசைப் பாடகர் கலைமாமணி புதுவை சித்தன் "ஜெயமூர்த்தி" அவர்களின் சிறப்பு இன்னிசை நிகழ்ச்சி மாநாட்டின் சிறப்பு நிகழ்ச்சியாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவை போன்ற இன்னபிற அம்சங்களும் இந்த இரண்டு நாள் மாநாட்டில் விரிவாக ஆராயப்பட்டு தீர்மானங்களாக நிறைவேற்றப்பட உள்ளன.

இம்மாநாட்டிற்கு தம் சொந்த பயணச் செலவில் பங்கேற்க விழைந்த அனைத்துப் பேராளர்களையும் மாநாட்டுச் குழுவின் சார்பில் வரவேற்று மகிழ்கிறேன்.

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் சிறப்பாக செயல்படவேண்டும் என ஒவ்வொரு உறுப்பினரும் எதிர்பார்க்கின்றனர். அவர்களின் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப இந்த அமைப்பின் யாப்புகளில் உள்ள குறைபாடுகளை இந்த மாநாட்டுப் பேரவைக் கூட்டத்தில் களைவதற்கான முயற்சிகளை செயற்குழுவினர் மேற்கொண்டுள்ளனர். எனவே யாப்பு கட்டமைப்பை வளமானதாக்கி உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் அனைத்து உறுப்பினர்களின் ஒத்தழைப்புடன் சிறந்த அமைப்பாக செயல்படும்

இந்த உன்னத அமைப்பின் உறுப்பினர் என்பதில் பெருமிதம் கொள்வோம்.

ஊர் கூடி தேர் இழுக்க இவ்வமைப்பும் உலகத் தமிழரை ஒன்றிணைக்கும்

வாழ்க தமிழ்! வளர்க தமிழ்!!

– பாஞ். இராமலிங்கம்

வாழ்க தமிழ் வளர்க தமிழர்

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம்

International Movement for Tamil Culture

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

13ஆவது பன்னாட்டு மாநாடு

நாள் : **சனி, ஞாயிறு 05, 06 ஆகஸ்டு, 2017**

இடம் : **யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை &**
ரில்கோ விடுதி, யாழ்ப்பாணம், இலங்கை.

அன்புடையீர்! வணக்கம்.

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம், யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்துடன் இணைந்து 13ஆவது பன்னாட்டு மாநாட்டினை ஏற்பாடு செய்துள்ளது. தமிழர்கள் குடியேறாத நாடுகளே இன்று இல்லை என்றுரைக்கும் வகையில் உலகின் பல்வேறு நாடுகளில் தமிழர்கள் குடியேறியுள்ளனர். அவர்களை ஒருங்கிணைக்கும் முதன்மை நோக்கினை இம்மாநாடு முன்னெடுக்கிறது. இம்மாநாடு ஒரு சடங்காக இல்லாமல் புலம் பெயர்ந்த நாடுகளில் எதிர்கொள்ளும் குடியுரிமை சாவல்கள், தாமும் தமிழ் பயின்று அயலவரையும் தமிழ் பயில ஊக்குவித்தல், தமிழர் பண்பாடுகளை அனைவரும் அறியும் வகையிலான முன்னெடுப்புகளைக் காலத்திற்கு ஏற்ற வகையில் அமைத்தல், அயலகத் தமிழ்க் கல்வி மேம்பாடு போன்ற சவால்களை எதிர்கொள்ள ஒருமித்த கருத்தொற்றுமையை உருவாக்குதல் முதலான சீறிய நோக்கங்களைக் கொண்டு செயலாற்ற இருக்கிறது. இன்றைய சூழலில் தமிழர் மொழி, பண்பாடு எதிர்நோக்கும் சவால்களையும் முன்னெடுப்புகளையும் மையமாகக் கொண்டு உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் 13ஆவது பன்னாட்டு மாநாடு ஆய்வரங்கங்கள் இலங்கை, யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இக் கருத்தரங்கு களில் அயல்நாடுகளில் இருந்து 300 பேராளர்களுக்கும் மேலாகப் பங்கேற்க உள்ளனர்.

இம்மாநாட்டுப் பேராளர்களின் கவியரங்கம், கருத்துரையாடல், கலை நிகழ்வுகள் யாழ்ப்பாணம் ரில்கோ விடுதி அரங்கத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

தாங்களும் தங்கள் நிறுவனத்தைச் சார்ந்தவர்களும் இப் பன்னாட்டு மாநாட்டில் பங்கேற்றுச் சிறப்பிக்க வேண்டுகிறோம்.

அன்புடன்

மாநாட்டுக் குழுவினர்

நிகழ்ச்சி நிரல்

நாள் : 05-08-2017, சனிக்கிழமை

இடம் : **கைலாசபதி அரங்கம்,**
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம், இலங்கை.

காலை 8.30 மணி **பேராளர் பதிவு**

காலை 9.30 மணி **தொடக்க விழா**

மங்களஇசை : ஈழ நல்லூர் **பாலமுருகன்**

பரதநாட்டியம் : திருமதி **கஸ்தூரி மாசிலன்,** பின்லாந்து
தமிழ் வாழ்த்து

வரவேற்புரை : **இ. இராஜசூரியர்**
தலைவர், உலகத் தமிழ்ப் பாண்பாட்டு இயக்கம், யேர்மனி

குத்துவிளக்கு ஏற்றுதல்

மாநாடு தொடங்கி வைப்பவர் : கௌரவ **V.S. இராதாகிருஷ்ணன்**
இலங்கை கல்வித் துணை அமைச்சர்

தலைமையுரை : முனைவர் **பாஞ். இராமலிங்கம்**
தலைவர், 13ஆவது பன்னாட்டு மாநாடு

நோக்கவுரை : திரு. **வி.சு. துரைராஜா**
தலைவர், உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம்,
தலைமையகம், கனடா

இணைப்பாளர் உரை: பேராசிரியர் **சுபதினி றமேஸ்,**
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

முதன்மை விருந்தினர்: பேராசிரியர் **ரத்னம் விக்கினேஸ்வரன்**
துணைவேந்தர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
இலங்கை

சிறப்பு விருந்தினர்கள் : கௌரவ நீதியரசர். **C.V. விக்னேஸ்வரன்**
முதலமைச்சர், வடமாகாண சபை, யாழ்ப்பாணம்

கௌரவ **து. ரஜிநோஸ்ட் குரே**
வடமாகாண ஆளுநர், யாழ்ப்பாணம்

கௌரவ மாவை. **சோ. சேனாதிராஜா,** MP
இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர்

கல்வி நிதியுதவி

அளிப்பவர் : திரு. **மதன் சண்முகராஜா,** கனடா

இயக்க அறிக்கை : திரு. **துரை. கணேசலிங்கம்**
செயலர், உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம், செர்மனி

பன்னாட்டு மாநாட்டு மலர் வெளியீட்டுச் சிறப்புரை : கௌரவ **விஜயகலா மகேஸ்வரன்**
சிறுவர் & மகளிர் விவகார ராஜாங்க அமைச்சர், இலங்கை

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்க விருதுகள் வழங்கிச் சிறப்புரை : கௌரவ **S.K. தேவமணி**
பிரதமர் அலுவலகத் துணை அமைச்சர், மலேசியா

வாழ்த்துரை : தமிழ்மாமணி **வா.மு.சே. திருவள்ளுவர்,**
ஆசிரியர், தமிழ்ப்பணி இதழ், சென்னை.

நன்றி நவிலல் : பேராசிரியர் **தி. வேல்நம்பி**
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

நண்பகல் 12.00 மணி - ஆய்வரங்கங்கள்

முதல் அமர்வு : கடல் கடந்த தமிழர்ப் பண்பாடு

தலைமை : பேராசிரியர் **குணசேகரன் கருப்பண்ணன்**
இணைப்பேராசிரியர், சிலங்கூர் பல்கலைக்கழகம், மலேசியா.

முன்னிலை : திருமதி **பொன்னி வீரப்பன்,** மலேசியா.

திரு. **சு.தியாகலிங்கம்,** தலைவர் நோர்வே கிளை
அகிலத் துணைத்தலைவர் தலைமையகம்
உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம்.

ஆய்வுரை : திரு. **நந்தவனம் சந்திரசேகரன்,** சென்னை.

திரு. **கே. வெங்கடேசன்,** அந்தமான்

இரண்டாம் அமர்வு : தமிழர்ப் பண்பாட்டு இலக்கிய ஆய்வு

தலைமை : பேராசிரியர் **இராச. குழந்தைவேலனார்**
தலைவர், தமிழ்ச்சங்கம், கடலூர்.

முன்னிலை : பேராசிரியர் **கி. விசாகரூபன்**
யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம், இலங்கை.

திரு. **க. சுபாஸ்கரன்**
உபதலைவர், பிரான்ஸ் கிளை உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம்

ஆய்வுரை : திரு. **முருக தயாநிதி,** தேசியக் கல்வி நிறுவகம், கொழும்பு.

திரு. **சிவமகிழி,** யாழ்ப்பாணம்.

மூன்றாம் அமர்வு : புலம்பெயர்ந்த தமிழர்கள் எதிர்நோக்கும் சவால்கள்

தலைமை : டத்தோ டாக்டர் **S. சுப்ரமணியன்**
தலைவர், தமிழ்ச் சங்கம், மலேசியா.

முன்னிலை : திரு. **இரா. பலேந்திரநாதன்,** பிரித்தானியா (U.K.).

திருமதி **சத்தியமூர்த்தி பாமினி**
பொருளாளர், சுவிற்சர்லாந்து, உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம்.

ஆய்வுரை : முனைவர் **வீ. செல்வப்பெருமாள்**
அறிஞர் அண்ணா அரசுக் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, காரைக்கால்.

திரு **மார்க்கண்டன் ரூபவதனன்,** இலங்கை

நான்காம் அமர்வு : உலகத் தமிழர் எதிர்நோக்கும் சவால்கள்

தலைமை : டாக்டர் **வி. முத்து,** தலைவர், புதுச்சேரி தமிழ்ச் சங்கம்

முன்னிலை : திரு. **சிவா கணபதி பிள்ளை**
தலைவர், உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம், அமெரிக்கா ஒன்றியம்

திரு. **குணபதி கந்தசாமி**
கலை பண்பாட்டுப் பொறுப்பாளர், உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம்

ஆய்வுரை : கவிஞர் **நெடுஞ்சேரலாதன்,** விருதுநகர்

திரு. **நட. ராஜ்குமார்,** கனடா.

ஐந்தாம் அமர்வு : உலக நாடுகளில் தமிழ்க் கல்வி

தலைமை : முனைவர் **இல. சுந்தரம்**
தமிழ்ப் பேராயம், S.R.M. பல்கலைக்கழகம், சென்னை.

முன்னிலை : திரு. **சு. பிரசாந்தன்**
செயலர், உலகத் தமிழ்ப் பண்பாட்டுக் இயக்கம், இலங்கை.

திரு. **சாமி அப்பாத்துரை,** கனடா.

ஆய்வுரை : திரு. **T. சபாலிங்கம்,** சித்தன்கேணி.

திரு. **A. நித்திலவர்ணன்**
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

உணவு இடைவேளை 1.30 – 2.30 மணி

பிற்பகல் 02.30 மணி

ஆறாம் அமர்வு : பன்னாட்டளவில் தமிழர் வாழ்வாதாரங்கள்

தலைமை : திரு மா. இரவிச்சந்திரன்
தலைவர், உலகத் தமிழ்ப் பண்பாட்டுக் இயக்கம், கனடா கிளை.

முன்னிலை : திரு குகதாஸ் நவநீதராஜா
விக்ரோறியா கலாச்சாரக்கழகம், அவுஸ்திரேலியா

திரு V. வேணுகோபாலன், PK, மலேசியா.

ஆய்வுரை : திரு. நீலம். அருள்செல்வி, புதுச்சேரி.

முனைவர் அகத்தியா,
இந்துஸ்தான் கலை அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர்

ஏழாம் அமர்வு : ஐரோப்பியத் தமிழர்கள்

தலைமை : திரு. அ. இளஞ்செழியன்
தலைவர், உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம், பிரித்தானியா.

முன்னிலை : திருமதி சுகந்தினி ஸ்ரீ முரளிதரன்
யாழ்ப்பாணப பல்கலைக்கழகம், இலங்கை

திரு. தியாகராஜா சௌந்தரராஜன், கனடா

ஆய்வுரை : முனைவர் அரங்க முருகையன்
புதுவைப் பல்கலைக்கழகச் சமுதாயக் கல்லூரி

எட்டாம் அமர்வு : இணைய வழித் தமிழர் உறவுகள்

தலைமை : முனைவர் மு. இளங்கோவன்
காஞ்சி மாமுனிவர் பட்டமேற்படிப்பு மையம், புதுச்சேரி.

முன்னிலை : பேராசிரியர் இ. இராவேஸ் கண்ணா
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

ஆய்வுரை : திருமதி T. உமாதேவி, MS, மலேசியா.

ஒன்பதாம் அமர்வு : ஊடகமும் தமிழர் தொடர்புகளும்

தலைமை : திரு. லோகன். லோகேந்திரலிங்கம், கனடா.

முன்னிலை : திரு. தே. செந்தில்வேலவர், இலங்கை.

திரு. குணபதி மைந்தன், புதுச்சேரி.

ஆய்வுரை : முனைவர் இலட்சுமி தத்தை
புதுவைப் பல்கலைக்கழகச் சமுதாயக் கல்லூரி.

பத்தாம் அமர்வு : இலங்கைத் தமிழர் பண்பாட்டு ஆய்வுகள்

தலைமை : திரு. முரளிதரன், இயக்குநர், தமிழத்துறை, கல்வி அமைச்சகம், இலங்கை

முன்னிலை : முனைவர் மு. திருமாவளவன், சென்னை

ஆய்வுரை : திரு. M.A.M. சமீம், மட்டக்களப்பு

திரு. ச. லலீசன், ஆசிரியர், கலாசலை, யாழ்ப்பாணம்

மாலை 04.00 மணி கவியரங்கம் – I

தலைப்பு: தாய் மண்ணை மறவாத தமிழர்களாய் வாழ்வோம்

தலைமை : கவிஞர். மலையன்பன் லோகேந்திரலிங்கம், கனடா

முன்னிலை : பாவலர். கதிர். முத்தையன்
தலைவர், பாவாணர் உலகத் தமிழ் மன்றம், கடலூர்

பங்கேற்போர் : கவிஞர். கோவிலூர் செல்வராஜன், நோர்வே

கவிஞர். நல்லை அமிழ்தன், இலங்கை

திருமதி சத்தியமூர்த்தி பாமினி, சுவிற்சர்லாந்து

மாலை 05.00 மணி யாழ்பாணச் சுற்றுலா

இரண்டாம் நாள் நிகழ்வுகள்

நாள்: 06-08-2017, ஞாயிற்றுக்கிழமை

இடம்: ரில்கோ விடுதி அரங்கம், யாழ்ப்பாணம்

காலை 09.00 மணி கவியரங்கம் – II

தலைப்பு : உலக மாந்த நேய உரிமை

தலைமை : பெருங்கவிக்கோ முனைவர் வா.மு. சேதுராமன், சென்னை

முன்னிலை : கவிஞர். செ.சி. இளந்திரையன்
உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம், சேலம்.

பங்கேற்போர் : கவிச்சிங்கம் கண்மதியன்

கவிஞர். கா. முருகையன்

கவிஞர். தகுதி. திவாகரன்

கவிஞர். சோ. கருப்பசாமி

கவிஞர். நிலவு. முத்துகிருட்டிணன்

கவிஞர். பரிமளா திருவள்ளுவர்

தமிழரசி. முத்துகிருஷ்ணன்

திரு. எழிலரசன்

கவிஞர். முனைவர் வள்ளம் கோபி (திருச்சி)

காலை 10.00 மணி பன்னாட்டு பேராளர் கருத்தரங்கம்

தலைமை : திரு. **சந்திரசேகரன் கோவிந்தசாமி**
கல்வி துணை அமைச்சரின் சிறப்பு அதிகாரி, மலேசிய

முன்னிலை : திரு. **T. கணேசன்**
முதன்மைச் செயல் அலுவலர், சமூக வியூக அறவாரியம், மலேசியா

பங்கேற்கும் நாடுகளின் பேராளர்களின் கருத்துரைகள்

காலை 11.00 மணி சிறப்பரங்கம்

வரவேற்புரை : திரு. **தே. செந்தில்வேலனார்**
ஊடகப் பொறுப்பாளர், 13ஆவது பன்னாட்டு மாநாடு

முதன்மை விருந்தினர் : கௌரவ **R. சம்பந்தன்,** M.P.
நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர், இலங்கை.

கௌரவ விருந்தினர் : கௌரவ **A. நடராஜன்,**
இந்தியத் துணைத் தூதுவர், இலங்கை.

சிறப்பு விருந்தினர்கள் : கௌரவ **விஜயகலா மகேஸ்வரன்**
சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் இலங்கை

கௌரவ **சீ.வி.கே. சிவஞானம்**
தலைவர், வடமாகாண சபை, யாழ்ப்பாணம்

கௌரவ **ஈ. சரவணபவன்**
இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர்

கௌரவ **அரியரத்னம் கவிந்திரன் கோடீஸ்வரன்**
இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர்

பகல் 01.00 மணி உணவு

பிற்பகல் 2.00 மணி உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்க முன்னெடுப்புகள்

தலைமை : டத்தின் முனைவர் **தாமரைச்செல்வி,** மலேசியா.

முன்னிலை : திரு. **நா.இ. விக்கிரமசிங்கம்**
தலைவர், உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம், அவுஸ்திரேலியா.

செல்வி. **பிரதிஷ்டா ராமமூர்த்தி,** M.A., M.Sc.,LL.B.,
வழக்கறிஞர், உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம், பெங்களூரு

பங்கேற்போர் : முனைவர் **இராமநாயகம் திரவியம்**
தலைவர், மலேசிய மகளிர் இயக்கம், மலேசியா.

மாலை 4.00 மணி நிறைவு விழா

வரவேற்புரை	:	திரு. சு. பிரசாந்தன் செயலர், உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம், இலங்கை.
தலைமை	:	திரு. வி.சு. துரைராஜா தலைவர், உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம், கனடா.
முன்னிலை	:	பேராசிரியர் சி. இராமமூர்த்தி உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம், பெங்களூரு.
மாநாட்டுத் தீர்மானங்கள் பேராளர்களுக்கு சான்றிதழ் வழங்கி மாநாட்டு	:	முனைவர் பாஞ். இராமலிங்கம் தலைவர், 13ஆவது பண்பாட்டு மாநாடு 2017
நிறைவுரை	:	கௌரவ மாவை சோ. சேனாதிராஜா, M.P. இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர்

மாலை 5.00 மணி திரைப்படம்

தலைமை	:	திரு. அ. சத்தியானந்தம் தலைவர், உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம், இலங்கை
முன்னிலை	:	திரு. சேஷன் குமார், M.A., LL.B., உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம், பெங்களூரு.

திரு. குணவதி மைந்தன் எழுதி இயக்கிய

"திருவள்ளுவர் வாழ்க்கை வரலாறு"

இலக்கியத் திரைப்படம் (ஒரு மணி நேரம்)

மாலை 6.00 மணி கலை நிகழ்வுகள்

நடனம்	கலாநிதி உஷாந்தினி நேச காந்தனின் மாணவர்கள்
தமிழிசை	ஆரூரன் அருனந்தி
இசைநிகழ்வு	ராகம்ஸ் இசைக்குழு
மங்களஇசை	கலைமாமணி புதுவைச்சித்தன் ஜெயமூர்த்தி திரைப்பட பின்னணிப் பாடகர்
கிராமியச் சங்கமம்	காவடி, கரகம், ஒயிலாட்டம் அருணோதயக் கல்லூரி மாணவர்கள்
தாதாகிட	கலை நிகழ்வு (இசை நடனம்) மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை
நன்றி நவிலல் :	திரு. துரை. கணேசலிங்கம் அகிலச் செயலர், உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம், ஜெர்மனி

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்க பேரவைக் கூட்டம்

நாள் : 04-08-2017, மாலை 6.00 மணி

இடம் : ரில்கோ விடுதி, யாழ்ப்பாணம்

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்க உறுப்பினர்கள் மட்டும் பங்கேற்கலாம்

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்க மாநாட்டு மலர்கள்












மலர்-1999


THE SOUTH AFRICAN TAMIL FEDERATION
Facilitating
8th INTERNATIONAL
TAMIL CONFERENCE
14 - 15 - 16 DECEMBER 2001 SOUVENIR BROCHURE


உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம்
உலகத்தமிழ் மாநாட்டு மலர்
நாள் : 14,15,16 ஆகஸ்டு 2004
உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம்
புலவைக் கிளை


பத்தாவது உலகத் தமிழ்ப்பண்பாட்டு மாநாடு
TENTH INTERNATIONAL CONFERENCE ON TAMIL CULTURE
20-22 ஜூலை 2007
மலையாளப் பல்கலைக்கழகம்,
கோலாலம்பூர்


உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம்
ஐரோப்பிய ஒன்றியம் - பிரான்ஸ் கிளை
11ம் சர்வதேச மாநாட்டு சிறப்புமலர்
Souvenir
13ème Conference Internationale de la Culture Tamoule
24, 25 Septembre 2011
Mouvement International Pour la Culture Tamoule
24, 25-09-2011


உலகத்தமிழ் பண்பாட்டு இயக்கம்
12வது அனைத்துலக மாநாடும்
40வது ஆண்டு விழாவும்
12th International Tamil Conference - 40 anniversary Of IMTC
4th 5th Oct., 2014 Hamm - German
IMTC Europian Union e.V
Germany


உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம்
பன்னாட்டுச் சிறப்பு மாநாடு மலர்
16-17 சனவரி 2016 குஜராத், இந்தியா
ESTD 1974
உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம், கனடா
உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம், இந்தியா


உலகத் தமிழ்ப்பண்பாட்டு இயக்கம்
MOUVEMENT INTERNATIONAL POUR LA CULTURE TAMOULE
INTERNATIONAL MOVMENT FOR TAMIL CULTURE
ஐரோப்பிய ஒன்றியம்
பிரான்ஸ் கிளை
ESTD 1974
சர்வதேச சிறப்பு மாநாடு-2016
பிரான்ஸ்
INTERNATIONAL SPECIAL CONFERENCE - 2016
France
சிறப்புமலர்
11, 12.09.2016
பாரிஸ், பிரான்ஸ்

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம்
வரலாற்று மைல்கற்கள்



4ஆவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டு நினைவு சதுக்கம்



2014இல் 40ஆவது நினைவு தினம் அனுசரிக்கப்பட்டது. இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர் திரு. மாவை. கோ. சேனாதிராஜா மலர் அஞ்சலி செலுத்தினார்.



இலங்கை நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் தம்பதியர் புதுச்சேரியில் முதல் உலகப் போரில் உயிர்நீத்த தமிழர்களுக்கு நினைவஞ்சலி (1981)



திரு. மாவை. சோ. சேனாதிராஜா உரை



புதுவைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் கி. வேங்கிடசுப்ரமணியன், நீதியரசர் இரா. கோவிந்தராஜன் ஆகியோருடன் சந்திப்பு புலவர் சிவ. கண்ணப்பன், பாஞ். இராமலிங்கம், உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்க தலைவர் ச. பரதபுண்ணியன், திரு. மாவை. சோ. சேனாதிராஜா (1988)



திரு. அ. அமிர்தலிங்கம் உரை



கூட்டத்தில் பங்கேற்றோர்

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் - மாநாடுகள்

08.01.1974 பேராசிரியர் சாலை இளந்திரையன் தலைமையில் யாழ்ப்பாணத்தில் இயக்கம் தோன்றிய முதல் அமர்வு



1977ம் ஆண்டு சென்னையில் நடந்த முதலாவது உலகத்தமிழ் மாநாடு



2வது மாநாடு - மொறீசியஸ் 1980



1980ஆம் ஆண்டில் மொரிசிய தீவில் நடைபெற்ற உலகத் தமிழ்ப் பண்பாட்டு மாநாட்டுடன் இணைந்து நடைபெற்ற தமிழ் கல்வி அமைச்சர்கள் மாநாட்டில் தமிழ் நாட்டுக் கல்வி அமைச்சர் மொரிசிய பிரதமர் ராம்குலாம் சிவகாசர் அவர்களை அன்பாக பரிமாறிக் கொள்கிறார்கள்.
Mauritius Former Prime Minister, Mr. Ramgoolam Sivasagar is exchanging greeting with Tamil Nadu Education Minister, Mr. Ra. Nedunchezhiyan in a function of World Tamil Cultural Symposium in 1980.

மொரிசிய நாட்டு அமைச்சர் திரு. குரிபோசன் பிள்ளை அவர்களும் அப்போது நாராயணசாமி அவர்களும் தமிழ், தமிழர் நலம் பேணுவதில் முன்னணியில் நிற்பவர்கள்.
Mauritius former Minister of International Trade Mr. Khatrus Pillay in conversation with Mr. Sp. Narayanansamy of Malaysia. Mr. Khatrus Pillay is always noted for his contribution to the welfare of Mauritius Tamils.



மொரிசிய நாட்டில் 1980ஆம் ஆண்டில் உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்க மாநாட்டு வேலைகளை மதியிலிருந்து முதன் முதலாகச் சென்று வந்து கொண்டிருப்பவர்கள். திருவாளர்கள் ஞானி, க. தமிழமுதன், பிதியாணி, கு. நாராயணசாமி, சு.சண்முகனார், ஆகிய உ. பாலசுப்பிரமணியம் ஆகியோர்.

பண்பாட்டுப் பேரவலர்கள்





3வது மாநாடு சேலம் 1985





தஞ்சாவூரில் நடைபெற்ற உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்க பேராளர்கள் கூட்டத்தில் மொரிசியஸ் திரு. தங்கணமுத்து (1985)

ஆறாவது மாநாடு 1996 கனடா





7 வது மாநாடு 1999





8 வது மாநாடு 2001 தென் ஆபிரிக்கா





9 வது மாநாடு2004





10 வது மாநாடு 2007 மலேசியா









12வதுமாநாடு யேர்மனி 2014





அயலகத் தமிழாசிரியர் பட்டமளிப்பு 2005 தென் ஆபிரிக்கா



























உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம், பிரான்ஸ்











பகுதி - 1

வாழ்த்துக்கள்


யாழ்ப்பாணம்
இந்தியா
பாக்கு நீரிணை
வங்காள விரிகுடா
மன்னார்
திரிகோணமலை
அனுராதபுரம்
கற்பிட்டி
மன்னார் வளைகுடா
புத்தளம்
மட்டக்களப்பு
மாத்தளை
கண்டி
நீர்கொழும்பு
பதுளை
கொழும்பு
தெகிவளை
கோட்டே
கல்கிசை
இரத்தினபுரி
மொரட்டுவை
காலி
அம்பாந்தோட்டை
0 40 80 km
0 40 80 mi



ශ්‍රී ලංකා ජනාධිපති
இலங்கை சனாதிபதி
President of Sri Lanka

வாழ்த்துச் செய்தி

ஒரு இனத்தின் பண்பாடு எனப்படுவது அந்த இனத்தின் வரலாறு, மொழி, வாழ்வியல் முறை, சமூகக் கட்டமைப்பு, கலை போன்ற பல விடயங்களை உள்ளடக்கியதாகும். அவ்வாறான பண்பாட்டை பேணிப்பாதுகாத்து அடுத்தடுத்த தலைமுறைகளுக்கு கொண்டுசெல்ல வேண்டிய மிக முக்கியமான பொறுப்பு எம் ஒவ்வொருவருக்கும் இருக்கின்றது. அந்தவகையில் அப்பணியினை நோக்காகக்கொண்டு செயற்படும் உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம், இலங்கையில் இம்முறை ஏற்பாடு செய்துள்ள 13ஆவது உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்க மாநாட்டை முன்னிட்டு வெளியிடப்படும் மாநாட்டு மலருக்கு எனது வாழ்த்துச் செய்தியை அனுப்பி வைப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

தமிழ் பண்பாட்டையும், தமிழ் மொழியையும் பேணிப்பாதுகாக்கும் நோக்கிலும் உலகெங்கும் பரந்து வாழும் தமிழ் மக்களை ஒன்றிணைக்கும் நோக்கிலும் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கும் 13ஆவது உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்க மாநாடானது, உயரிய பண்பாட்டு விழுமியங்களை வரலாற்றுக் காலம் தொட்டே கொண்டுள்ள தமிழ் சமூகத்திற்கு மிகவும் முக்கியமானதென நான் கருதுகிறேன்.

நான்கு தசாப்தங்களுக்கும் மேலாக உலகளாவிய தமிழினத்தை மொழியாலும், பண்பாட்டாலும் ஒருங்கிணைக்கவும் பாதுகாக்கவும் இந்த அமைப்பு எடுத்துவரும் முயற்சிகளுக்கு எனது பாராட்டுக்களை தெரிவித்து நிற்பதுடன், இம்முறை இந்த மாநாட்டை பல சிறப்புக்களை தன்னகத்தே கொண்ட இலங்கையின் யாழ்ப்பாணத்தில் ஒழுங்கு செய்திருப்பது வரவேற்கத்தக்கது.

13ஆவது உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்க மாநாடு சகல வழிகளிலும் வெற்றி பெற எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

மைத்ரிபால சிறிசேன

2017 ஜூலை 13 ஆம் திகதி

ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு
Democratic Socialist Republic of Sri Lanka



ශ්‍රී ලංකා අග්‍රාමාත්‍ය

இலங்கையின் பிரதம அமைச்சர்

Prime Minister of Sri Lanka

MESSAGE FROM THE HON. PRIME MINISTER

It is indeed a pleasure to be able to forward a message of felicitations towards the 13th IMTC International Conference to be held on 05th and 6th August 2017 in Jaffna, Sri Lanka, under the patronage of The Movement for Tamil Culture (IMTC), Sri Lanka Branch in collaboration with IMTC, Canada.

It is relevant to note that around 400 delegates from Canada, Sri Lanka, India, Malaysia, Germany, United Kingdom, Finance, USA, Australia and many other countries will be participating in the Conference and will engage in discussions on various perspectives of Tamil culture.

Retaining the identity and the uniqueness of the Tamil culture is especially significant in today's world which is changing rapidly. Towards that objective, I'm certain the delegates would be able to generate a fruitful discussion.

I take this opportunity to wish this historic event all the very best.

Ranil Wickremesinghe
Prime Minister

06th July 2017

Office of the Leader of the Opposition,
19th Floor, Parliament,
Sri Jayewardenepura Kotte,
Sri Lanka.

ஆர். சம்பந்தன், பா.உ.,
இரா. சம்பந்தன், பா.உ.,
R. Sampanthan, MP
විපක්ෂ නායක - ශ්‍රී ලංකා පාර්ලිමේන්තුව
எதிர்க்கட்சித் தலைவர் - இலங்கை பாராளுமன்றம்
Leader of the Opposition - Parliament of Sri Lanka

வாழ்த்துச் செய்தி

உலகத் தமிழப் பண்பாட்டு இயக்கத்தன் 13வது சர்வதேச மாநாடு 2017 ஆகஸ்ட் மாதம் 05 மற்றும் 06 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் நடைபெறுவதையொட்டி இவ்வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வெய்துகின்றேன்.

1974ஆம் ஆண்டில் உலகத் தமிழாராய்ச்சி மாநாடு யாழ்ப்பாணத்தில் நடைபெற்றபோது அதில் கலந்துகொண்ட அறிஞர் பெருமக்களின் ஆலோசனைப்படி யாழ்ப்பாணத்தில் ஒன்றுகூடிய தமிழ் அறிஞர்கள் உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தை ஆரம்பத்தனர். அது தற்போது உலக அளவில் தமிழர் வாழும் இடங்களெல்லாம் வியாபித்து, கனடாவில் தனது தலைமையகத்தைக் கொண்டு செயலாற்றி வருகின்றது.

1977ல் அதன் முதலாவது மாநாடு சென்னையில் நடைபெற்றத்தைத் தொடர்ந்து இதுவரை 12 மாநாடுகள் தமிழ், மொறீசியஸ், கோலாலம்பூர், அவுஸ்திரேலியா, கனடா, தென்னாப்பிரிக்கா, புதுச்சேரி, பிரான்ஸ், ஜேர்மனி ஆகிய இடங்களில் வெவ்வேறு காலப்பகுதிகளில் நடைபெற்றுள்ளன. இந்த வகையில் அதன் 13வது மாநாடு உலகத் தமிழப் பண்பாட்டு இயக்கம் ஆரம்பித்த இடமான ஈழத்தின் யாழ்நகரில் நடைபெறவுள்ளமை பெருமைக்குரியதாகும். இதனை தமிழ் அறிஞர்களில், உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டை யாழ்ப்பாணத்தில் ஒருங்கிணைந்து நடாத்திய பேராசிரியர் சு. வித்தியானந்தன் மற்றும் தனிநாயகம் அடிகளார், தமிழகத்தின் முனைவர் சாலை. இளந்திரையன், பேராசிரியர் இரா. ந.வீரப்பனார் (மலேசியா), அமரர் சோதிநாதன் (தென் ஆபிரிக்கா) ஆகியோர் குறிப்பிட்டுக் கூறக்கூடியவர்களாவர்.

செம்மொழியாகிய தமிழ் மொழியின் வளர்ச்சிக்குப் பாடுபடல், உலகத் தமிழர்களை ஒன்றிணைத்தல், அவர்களின் இலக்கியம், கலை, கலாசாரப் பண்பாடுகளை ஊக்கவித்தல், தமிழ் மொழியில் மதவழிபாடுகளை ஊக்குவித்தல், தமிழர் மரபு விளையாட்டுக்களை ஊக்குவித்தல், கலைப் பொருட்களைப் பாதுகாத்தல் போன்ற பல்வேறு குறிக்கோள்களை அடையும் வண்ணம் இவ்வியக்கம் உருவாக்கப்பட்டு, அதன் நோக்கங்களை அடைவதில் அக்கறையோடும் உணர்வோடும் அர்ப்பணிக்போடும் செயற்பட்டு வருவது பாராட்டப்பட வேண்டியதாகும்.

பண்பாடு என்பது ஒரு சமூக மக்களால் ஏற்று அங்கீகரிக்கப்பட்டு காலங்காலமாகப் பின்பற்றப்படுவதன் மூலம் பண்படுத்தப்பட்ட பழக்கவழக்கங்களையும், மரபுகளையும், கலாசார விழுமியங்களையும் உள்ளடக்கிய சமூக நிறுவன முறையாகும். அத்தகைய பண்பாடுகளில் தமிழ்ப் பண்பாடு மிகவும் தொன்மைவாய்ந்ததும், முச்சங்க காலம் முதல் முறையாகப் பின்பற்றப்பட்டு, பேணப்பட்டு வருவதுமாகும். காலத்துக்குப் பொருத்தமான வகையிலும், விஞ்ஞான, நாகரீக வளர்ச்சிகளின் அடிப்படையிலும் மக்களின் வசதி கருதி சில பண்டைய தமிழ்ப் பண்பாடுகள் மாற்றங்களுக்கு உள்ளாகி வந்துள்ளபோதும், அவற்றின் அடிப்படை அம்சங்களில் அதிக மாற்றங்கள் இல்லாது இன்றும் தமிழ்ப் பண்பாட்டு மரபுகள் பின்பற்றப்பட்டு வருகின்றன. மாற்றங்கள் வளர்ச்சியின் இன்றியமையாத அம்சமாகும். அவை தவிர்க்க முடியாதவையும்கூட. சங்க இலக்கியங்கள், புராணங்கள், இதிகாசங்கள் மற்றும் காப்பியங்களில் தமிழர் பண்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளமையும் அவை மக்களால் இன்னும் பின்பற்றப்பட்டு வருவதையும், உலகில் குறிப்பாக தமிழ் மக்கள் வாழும் நாடுகளிலும் பிரதேசங்களிலும் இன்றும் காணலாம்.

இத்தகைய பண்பாட்டு விழுமியங்கள் அருகிவிடாது, அவற்றின் பண்புகள் மாறிவிடாது. காக்க வேண்டிய பொறுப்பும் கடமையும் தமிழ் மக்களாகிய ஒவ்வொருவருக்கும் உண்டு. இந்த வகையிலேயே பல கல்விமானகளும், உணர்வாளர்களும், நலன் விரும்பிகளும், அரசியல் மற்றும் சமூக, பொருளாதார, கலாசார துறைகள் சார்ந்த பெரியார்களம் தமிழ்ப் பண்பாட்டு வளர்ச்சிக்காகவும் அவற்றை நிரந்தரமாகப் பேணித் காப்பாற்றும் கைங்கரியத்திலும் ஈடுபட்டு வருவது பாராட்டப்பட வேண்டியதும் ஊக்கப்படுத்தப்பட வேண்டியதுமாகும். இத்தகைய செயற்பாடுகளின் ஓர் அங்கமாகவே உலகத் தமிழப் பண்பாட்டு இயக்கத்தின் செயற்பாடுகளும் அமைந்துள்ளமை வரவேற்கப்பட வேண்டியதே.

இந்த அமைப்பின் 13வது மாநாடு இம்முறை இலங்கையில் யாழ்ப்பாணத்தில் நடைபெறுகின்றமை இலங்கைவாழ் தமிழ் மக்களுக்குப் பெருமை தருவதாகும். அகில உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டையும் ஒரு முறை நடாத்திப் பெருமைபெற்ற யாழ்ப்பாணத்தில் இம்முறை உலகத் தமிழப் பண்பாட்டு இயக்க மாநாடு நடைபெறுகின்றமை பொருத்தமானதாகும். 30 ஆண்டுகளாக நிலவிய அமைதியற்ற சூழ்நிலையின் பின்னர் இத்தகைய சந்தர்ப்பம் கிடைத்துள்ளமை மனமகிழ்ச்சியைத் தருகின்றது.

இலங்கையில் நடைபெறும் 13வது உலகத் தமிழப் பண்பாட்டு இயக்க மாநாட்டில் இடம் பெறவுள்ள ஆய்வரங்குகளின் பெறுபேறானது இவ் இயக்கத்தின் செயற்பாடுகளில் மேலுமொரு பெரும் சாதனைக்கு வழிகாட்டுவதாக அமைய வேண்டுமென்பதும் தமிழ் மக்கள் அதிக அளவில் இம்மாநாட்டு நிகழ்ச்சிகளில் ஆர்வத்துடன் பங்குபற்றி ஊக்கப்படுத்த வேண்டுமென்பதும் எனது பெருவிருப்பமாகும்.

எனவே, இலங்கைத் திருநாட்டின் யாழ்ப்பாணத்தல் நடைபெறுகின்ற இருநாள் மாநாடு சிறப்பாக அமைய வேண்டுமென என் நல் வாழ்த்துக்களையும், நல்லாசிகளையும் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

நன்றி.

இரா. சம்பந்தன்

இரா.சம்பந்தன், பா.உ.,
எதிர்க்கட்சித் தலைவர்

වී. එස්. රාධාකිෂ්ණන් (පා.ම)
வி.எஸ். இராதாகிருஷ்ணன் (பா.உ)
V. S. Radhakrishnan (M.P)
අධ්‍යාපන රාජ්‍ය අමාත්‍යය
கல்வி இராஜாங்க அமைச்சர்
State Minister of Education

මගේ අංකය எமது இல. My No.	ඔබේ අංකය உமது இல. Your No.	දිනය திகதி Date
		2017.06.30

வாழ்த்துச் செய்தி

13ஆவது உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் மாநாட்டிற்கு வாழ்த்து செய்தி ஒன்றை வழங்குவதில் நான் பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

தமிழர்களின் கலை கலாச்சாரம் பண்பாடு ஆகியவை பேனி பாதுகாக்கப்பட வேண்டியவையாகும்.அதற்கு இவ்வாறான மாநாடுகள் பெரிதும் துணை புரியும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.இந்த மாநாட்டை இலங்கையில் நடாத்துவதற்கு தீர்மானித்த அந்த அமைப்பினருக்கு முதலில் எனது நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

தமிழர்கள் உலகின் எந்த பாகத்தில் வாழ்ந்தாலும் அவர்கள் என்றுமே தமது கலை கலாச்சாரத்தை விட்டுக் கொடுப்பதில்லை.அதற்கு சிறந்த உதாரணமாக இந்த மாநாட்டை குறிப்பிடலாம்.இந்த மாநாடு கடந்த 12 வருடங்களாக உலகின் பல்வேறு நாடுகளிலும் மிகவும் சிறப்பாக நடாத்தப்பட்டுள்ளது.இதன் இரண்டு மாநாடுகளில் கலந்து கொள்கின்ற சந்தர்ப்பம் எனக்கும் கிடைத்துள்ளது.

அந்த வகையில் கடந்த வருடம் இந்தியாவின் புதுச்சேரியில் நடைபெற்ற இந்த மாநாட்டில் நானும் கலந்து கொண்டேன்.அது மிகவும் சிறப்பாக அமைந்திருந்தது.அன்று இதன் ஏற்பாட்டாளர்கள் இதனை அடுத்த வருடம் இலங்கையில் நடாத்த ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டிருந்தார்கள் அதன் பயனாகவே இந்த வருடம் இந்த மாநாடு இலங்கையில் நடைபெறுகின்றது.

மேலும் இந்த இயக்கமானது 1974 ஆம் ஆண்டில் இலங்கையின் யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்ட ஒரு இயக்கமாகும்.எனவே இதனை இலங்கையில் நடாத்துவது மிகவும் பொறுத்தமாகும்.

தமிழர்களாகிய நாம் அனைவரும் எங்கே வாழ்ந்தாலும் மொழியாலும் கலாச்சாரத்தாலும் ஒன்றுபட்டவர்கள்.எங்களுடைய கலைகளுக்கு மிகவும் பழமைவாய்ந்த ஒரு பின்னணி இருக்கின்றது.அதனை பேனி பாதுகாத்து அடுத்த தலைமுறைகளுக்கு கொண்டு சேர்க்க வேண்டிய பொறுப்பு எங்களிடமே இருக்கின்றது. எனவே நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து இந்த மநாட்டை வெற்றிகரமாக நடாத்துவதோடு இதில் அனைவரும் பங்குபற்றி சிறப்பிக்குமாறு அன்பாக கேட்டுக் கொள்கின்றேன்.

இந்த மாநாடு வெற்றி பெற எனது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

வே.இராதாகிருஸ்ணன் (பா.உ)
கல்வி இராஜாங்க அமைச்சர்,
தலைவர் மலையக மக்கள் முன்னணி,
இணைத் தலைவர் தமிழ் முற்போக்கு கூட்டணி.

Ministry of Education. 4th floor, "Isurupaya" Battaramulla, Colombo, Sri Lanka.

රාජ්‍ය අමාත්‍ය இராஜாங்க அமைச்சர் State Minister +94 11 2 784 836 (Ext. 1414)
ෆැක්ස් பெக்ஸ் Fax +94 11 2 785 449
විද්‍යුත් තැපෑල மின்னஞ்சல் E-mail v.radhakishnan@gmail.com



சிறுவர் மற்றும் மகளிர் விவகார இராஜாங்க அமைச்சர்
விஜயகலா மகேஸ்வரன் அவர்களது

வாழ்த்துச் செய்தி

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் 13ஆவது சர்வதேச மாநாட்டு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதை நான் பெருமையாக நினைக்கிறேன்.

1974ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த இயக்கம் இன்றுவரை சர்வதேச நாடுகள் பலவற்றிலும் பலவகையான சமூக சேவைகளைச் செய்து வருகின்றமையைச் சகலரும் அறிவர்.

அந்த வகையில் இந்த இயக்கம் தனது பணிகளை இலங்கையில் யுத்தம் இடம்பெற்ற காலத்திலும், அதற்குப் பின்னரான காலத்திலும் முன்னெடுத்து வந்துள்ளமையை யாவரும் அறிவர். இந்த வருடம் அவர்கள் தமது 13ஆவது சர்வதேச மாநாட்டை இலங்கை யாழ்ப்பாணத்தில் நடத்த முன்வந்திருப்பது உண்மையிலேயே வரவேற்புக்குரியது.

இலங்கையில் தற்போது நல்லாட்சி நடைபெற்று வருகிறது. ஒரு சில குறைபாடுகள் காணப்படினும் மக்கள் முன்னைய ஆட்சிக் காலம் போலல்லாது நிம்மதியாக வாழ்ந்து வருகின்றனர். இத்தகைய ச் சூழலில் இம்மாநாடு இங்கே நடைபெறுவது சாலவும் பொருத்த--மானது. இதற்கான ஏற்பாடுகளைச் செய்த இயக்கத்தின் சகல உறுப்பினர்களையும் நான் பாராட்டுகிறேன்.

இந்த மாநாடு சிறப்பாக நடைபெற எனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதோடு இம் மாநாட்டில் தலைமையாக நின்று செயலாற்றும் இந்தியா பாண்டிச்சேரி பேராசிரியர் பாஞ். இராம லிங்கம், ஜெர்மன் நாட்டுக் கிளையின் தலைவர் திரு. இ. இராஜசூரியர் மற்றும் இலங்கைக் கிளையைச் சேர்ந்த சிரேஷ்ட ஊடகவியலாளர் தே. செந்தில்வேலவர் ஆகியோருக்கும் எனது சிறப்பான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

விஜயகலா மகேஸ்வரன்
கொழும்பு

රිෂාඩ් බදියුදීන් පා.ම
කර්මාන්ත හා වාණිජ කටයුතු අමාත්‍ය
றிஸாட் பதியுதீன் பா.உ.
கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சர்
Rishad Bathiudeen M.P.
MINISTER OF INDUSTRY AND COMMERCE

කර්මාන්ත හා වාණිජ කටයුතු අමාත්‍යාංශය
கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சு
Ministry of Industry and Commerce

අංක. 570, 73/1, ගාල්ල පාර, කොළඹ 03, ශ්‍රී ලංකාව
த.பெ. 570, 73/1, காலி வீதி, கொழும்பு 03, இலங்கை.
P.O. Box 570, 73/1, Galle Road, Colombo 03, Sri Lanka.

ஆசிச்செய்தி



உலகத்தமிழர் பண்பாட்டு இயக்கத்தின் 13வது சர்வதேச மாநாடு யாழ்ப்பாணத்தில் நடை பெறுவதையிட்டு இந்த ஆசிச்செய்தியை வழங்குவதில் பெருமிதம் அடைகின்றேன்.

நாட்டின் அசாதாரண சூழ்நிலைகளால் இந்த மாநாடு இதுவரை காலமும் இலங்கையில் நடாத்தப்படாது தமிழர்கள் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளிலேயே நடாத்தப்பட்டு வந்தது எனினும் தற்போது அமைதி திரும்பியுள்ளதால் இந்த மாநாட்டை யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கு ஏற்பாட்டாளர்கள் முயற்சி எடுத்திருப்பது பாராட்டுக்குரியது.

தமிழ் மொழி, பண்பாடு, கலாச்சாரங்களை பேணிப்பாதுகாத்து அதனை உலகிற்கு எடுத்துச் செல்வதற்காக உருவாக்கப்பட்ட இந்த அமைப்பு தனது நோக்கத்தை சரிவர நிறைவேற்றி வருவது எனக்கு பெருமிதம் தருகின்றது.

தமிழ் மொழி பேசும் இன்னொரு சமூகமான முஸ்லிம்களும் இந்த நாட்டில் தமிழை வளர்ப்பதில் ஆர்வமும் அக்கறையும் கொண்டிருப்பது அனைவரும் அறிந்தவிடயம். அந்தவகையில் தமிழ்பேசும் இரண்டு சமூகங்களுக்குமிடையிலான உறவுகள் மேலும் இறுக்கமடைய இந்தமாநாடு வழிவகுக்கவேண்டுமென பிரார்த்திக்கின்றேன்.

வடமாகாணத்தில் வாழ்ந்த முஸ்லிம் சகோதரர்கள் மீண்டும் தமது தாயக பூமியில் சகோதரர்களுடன் இணைந்தும் பிணைந்தும் வாழவே விரும்புகின்றனர் என்ற செய்தியை இந்த சந்தர்ப்பத்தில் கூறிவைக்கவிரும்புகின்றேன்.

இரு பெரும் தேங்காய்ப்பூவும் போல வாழ்ந்த இரண்டு சமூகமும் மீண்டும் நல்லுறவை வளர்த்துக் கொள்ள இந்த மாநாடு காத்திரமான பங்களிப்பை நல்கவேண்டுமென ஆசிக்கின்றேன்.

றிஷாட் பதியுதீன் பா.உ.
கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர்,
தலைவர், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ்.

றிஸாட் பதியுதீன் (பா.உ)
கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சர்

அமைச்சர் Minister 2431674 2435248 | தொலைநகல் Fax 2390885 | அமைச்சர் அலுவலகம் Minister's Secretariat 2391838 2435105 2431672 | தொலைபேசி Telephone 2392150 2327554 2392149

DUTA KHAS MALAYSIA KE INDIA & ASIA SELATAN (INFRASTRUKTUR)
Jabatan Perdana Menteri
SPECIAL ENVOY TO INDIA & SOUTH ASIA ON INFRASTRUCTURE
Prime Minister's Department
Government of Malaysia

வாழ்த்துச் செய்தி

கனடா மற்றும் இலங்கை நாடுகளில் இயங்கிவரும் உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கம் 13ஆவது முறையாக இப்பேரவையினை நடத்துவதினை முன்னிட்டு வெளியிடப்படும் சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

கடந்த பல்லாண்டுகளாக உலகின் பல நாடுகளிலும் கிளைகளை அமைத்து வெற்றிகரமாக செயல்பட்டுவரும் உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம், உலகளவில் பல மாநாடுகளையும், கருத்தரங்குகளையும் நடத்தி வெற்றிக் கண்டுள்ளது. இனம் – மதம் போன்ற வேறுபாடற்ற கோட்பாடுகளை தனது தாரக மந்திரமாகக் கொண்டு, தமிழ்ப் பண்பாட்டையும், தமிழ் மொழியையும் பேணிப் பாதுகாக்கும் அரணாக இந்த இயக்கம் செயல்பட்டு வருவது பாராட்டுக்குரியதாகும்.

அதோடு மாத்திரமில்லாமல், உலகெங்குமுள்ள பல தமிழ்க் கல்வியாளர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள், கலை இலக்கிவாதிகள் அனைவரும் இந்த இயக்கத்தில் பல முக்கியப் பொறுப்புக்களை வகித்து, தமிழுக்குத் தொண்டாற்றி வருகின்றனர்.

தொழில் வளர்ச்சியால் ஒவ்வொரு நாளும் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன; நவீன கண்டுப்பிடிப்புக்கள் அறிமுகப்படுத்தப்படுகின்றன; ஆயிலும், அவை அனைத்தும் தமிழ் மொழியிலும் புகுத்த வேண்டும் என்ற நோக்கத்தில் தமிழாய்ந்த கணினி தொழில்நுட்ப ஆய்வாளர்கள் புகுத்தியுள்ள தொழில் நுட்பங்களின் வழி, தமிழ் மொழியின் வளர்ச்சி மேலும் மேன்மையுறும் என்று நம்புகிறேன். இன்றையக் காலக்கட்டத்தில் எந்தவொரு தகவலையும் கணினி வழி எளிதாகப் பெற முடிவதற்கு இந்தத் தொழில்நுட்பங்களே காரணமாக விளங்குகின்றது.

இந்த மாபெரும் மாநாட்டை யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்காக உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் இந்தியக் கிளையின் முத்த உறுப்பினரும், மாநாட்டுத் தலைவருமான முனைவர் பாஞ். இராமலிங்கம் மற்றும் திருமதி மாலதி இராஜவேலு மற்றும் பல்வேறு நாடுகளின் இயக்க உறுப்பினர்கள் அனைவருமாக தீவிரமாக பணியாற்றி வருகின்றனர். மேலும் யாழ்பாண அரசும் இம்மாநாடு வெற்றியுடன் நடைபெறுவதற்கு முழு ஒத்துழைப்பை வழங்கி வருவது வரவேற்கத்தக்கதாகும்.

எனவே, நடைபெறவிருக்கும் உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்திக் 13ஆவது பேரவை எல்லா வகையிலும் சிறப்புடன் நடைபெற அன்னைத் தமிழை வணங்கி வாழ்த்துகிறேன்.

தமிழோடு ஒன்றிணைவோம்!

அன்புடன்,

டத்தோஸ்ரீ உத்தாமா சசாமிவேலு.



Suite 2A-25 (1&2), Level 25, Block 2A, Plaza Sentral, Jalan Stesen Sentral 5, 50470 Kuala Lumpur
Tel: +603 2261 4060 Fax: +603 2261 4089

PEJABAT TIMBALAN MENTERI DI JABATAN PERDANA MENTERI
ARAS 3, BLOK BARAT
BANGUNAN PERDANA PUTRA
PUSAT PENTADBIRAN KERAJAAN PERSEKUTUAN
62502 PUTRAJAYA
MALAYSIA

Tel. : 03-8881 1343
Faks : 03-8881 1635



Dato S.K. Devamany
Hon' Deputy Minister for Prime Minister
Department of Malaysia

வாழ்த்துரை

தமிழனென்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா

என்கிற சுலோகத்திற்கு ஏற்ப உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் தலைமையகம் ஒன்றியங்கள் கிளைகள் ஆகியவற்றின் பேராதரவுடன் இலங்கைக்கிளை நடாத்தும் 13ஆவது பன்னாட்டு மாநாடு 2017 ஆகஸ்டு மாதம் 5 - 6ஆம் நாள் இலங்கையின் யாழ்ப்பாணத்தில் இடம் பெற உள்ளது அறிந்து மகிழ்வடைகிறேன்.

இம் மாநாட்டில் பங்கேற்று தொடக்க உரை நிகழ்த்த அழைத்தமைக்கு நான் மிக்க நன்றி கடப்பாடுடையேன். இம்மாநாடு 43 ஆண்டு கால வரலாற்றை நினைவு கூறுவதோடு பல்வேறு நாடுகளில் வாழும் தமிழர்கள் ஒன்று கூடும் எதிர் வரும் காலங்களில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆராய்ந்திட வேண்டும்.

பல நாடுகளில் தமிழ் மெல்ல மெல்ல மறைந்து கொண்டிருக்கின்றது. மலேசியாவில் கூடிய மட்டும் தமிழ் தனக்குரிய இடத்தை பெறுவதற்கு எங்களால் இயன்ற முயற்சிகளை எடை விடாது செய்து வருகிறோம்.

தமிழ் மக்களின் எண்ணங்களை ஆட்சியாளர்களான நாங்கள் முடிந்தமட்டும் செய்து வருகிறோம். வீரம் விளைந்த இந்த மண்ணில் 43 ஆண்டுகளுக்கு முன் இந்த இயக்கம் தொடங்கப்பட்டது.

இந்த இயக்கத்தை சிறப்பாக முன்னெடுத்துச்செல்லும் அனைத்து நல்லுள்ளங்களுக்கும் வாழ்த்துக்களை உரித்தாக்கி மகிழ்கின்றேன்

எஸ். கே. தேவமணி

No: 3071

කාර්යාල දුරකථනය Office 021 221 9376

ෆැක්ස් Fax 021 221 9374

වෙබ් අඩවිය Web www.np.gov.lk

මගේ අංකය My No

ෙරජිනෝල්ඩ් කූරේ
ரெஜினோல்ட் குரே
Reginald Cooray
ආණ්ඩුකාරවරු, උතුරු පළාත
ஆளுநர், வட மாகாணம்
Governor, Northern Province

ආණ්ඩුකාරවරයාගේ කාර්යාලය
ஆளுநர் செயலகம்
Governor's Secretariat

පැරණි උද්‍යානය, කැන්ඩි පාර, චුන්ඩිකුලි, යාපනය, ශ්‍රී ලංකාව.

பழைய பூங்கா, கண்டி வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம், இலங்கை.

Old Park, Kandy Road, Chundikuli, Jaffna, Sri Lanka.

දිනය நாள் Date 19/07/2017

Message from the Governor , Northern province to 13th International Conference of International Movement for Tamil Culture(IMTC)

It gives me a great honour and pleasure to offer this message on the occasion of 13th International Conference of the IMTC being held in Jaffna by International Movement for Tamil Culture(IMTC), Sri Lankan Branch and, Canada (Headquarters) with the collaboration of the University of Jaffna. The theme of the Conference, "Prospects of Tamils living Abroad: Challenges and Initiatives" is also very significant to recognise and understand the evolvement and involvement made by the Tamils living abroad, in the Socio cultural and socio economic development process during this post conflict era.

UNESCO ensures that the role of culture is recognized through a majority of the Sustainable Development Goals (SDGs), including those focusing on quality education, sustainable cities, the environment, economic growth, sustainable consumption and production patterns, peaceful and inclusive societies, gender equality and food security. From cultural heritage to cultural and creative industries, Culture is both an enabler and a driver of the economic, social and environmental dimensions of sustainable development.

In the Sri Lankan context of multi-lingual and multi-cultural society, the spirit of reconciliation and co-operation with the clear objectives and goals to strengthen the democracy and good governance should be nurtured by Tamil Culture.

උප කාර්යාලය :
9/1, ලිලි ඇවෙන්ය, ජයන්තිපුර,
රත්තරමුල්ල.

උප කාර්යාලය :
9/1, லிலி அவனியு, ஜயந்திபுர,
ரத்தரமுல்ல.
දුරකථන / தொலைபேசி / Telephone : 0112883377
ෆැක්ස් / தொலைநகல் / Fax : 0112888436
e-mail: hengovsec@gmail.com

Sub Office :
9/1, Lily Avenue, Jayanthipura,
Rattaramulla.

The Tamils living abroad are one of the principle factors influencing the existing Lankan Tamil society in many ways such as economic, cultural and political which are entwined. I strongly hope that the Tamils living abroad have become very intelligently aware of the necessity for the revival and reform of the society focussing on a sustainable development, by accepting and enforcing the values of multi-lingual and multi-cultural co-existence by thinking beyond a symbolic value of the culture. Strengthening the contribution of Tamil culture to sustainable development of Tamil society should be a goal.

It is noteworthy that around 300 dignitaries from Sri Lanka, India, Canada, Malaysia , Germany, UK, France, USA, Australia, Singapore and other countries are participating in the 13th IMTC International Conference in Jaffna to discuss various issues related to different perspectives of Tamil culture.

In the forty three years of long history of the IMTC which was founded in 1974 it embraced many scholars, intellectuals and researchers. But I am very proud to hear that Mr. R. Kanagaratnam from the village of Kurumpasiddy in Valikamam sector of Jaffna peninsula , Northern Province , Sri Lanka was the founder of International Movement for Tamil Culture (IMTC) and has extended its' branches to all over the world. Many great scholars, intellectuals and researchers worked hard to bring up the Movement for Tamil Culture as an internationally recognised organisation represented by International Tamil Community.

I am very delighted to congratulate everyone who works with the IMTC for their great service to this society which was affected by the thirty years long violent conflict.

I look forward to your continued success.

Thanks

Reginald Cooray,
Governor,
Northern Province

Reginald Cooray
Governor
Northern Province

முதலமைச்சர் - வட மாகாணம்

විකිසුරු සී.වී. විග්නේශ්වරන්
ප්‍රධාන අමාත්‍ය - උතුරු පළාත

Justice C.V.Wigneswaran
Chief Minister – Northern Province

நிதியும் திட்டமிடலும், சட்டமும் ஒழுங்கும், காணி, மின்சக்தி, வீடமைப்பு நிர்மாணம், சமூக சேவைகள், புனர்வாழ்வளித்தல், மகளிர் விவகாரம், தொழிற்துறையும் தொழில்முனைவோர் மேம்பாடும், சுற்றுலா, உள்ளூராட்சி மற்றும் மாகாண நிர்வாக அமைச்சர்

මුදල් හා සැලසුම්කරණ, නීතිය හා සාමය, ඉඩම්, විදුලිබල, නිවාස හා ඉදිකිරීම්, සමාජ සේවා හා පුනරුත්ථාපන, කාන්තා කටයුතු, කර්මාන්ත හා වාවසාය ප්‍රවර්ධන, සංචාරක, පළාත් පාලන සහ පළාත් පරිපාලන, අමාත්‍යවරයා

Minister of Finance and Planning, Law and Order, Lands, Electricity, Housing and Construction, Social Service, Rehabilitation, Women's Affairs, Industries and Enterprise Promotion, Tourism, Local Government and Provincial Administration

எனது இல
මගේ අංකය
My No } NP/CM/media/11/07/2017

திகதி
දිනය
Date } 11.07.2017

வாழ்த்துச் செய்தி

இன்று பல்வேறு நாடுகளிலும் ஈழத்தமிழர்கள் புலம் பெயர்ந்து வாழுகின்ற இவ்வேளையில் உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கம் என்ற அமைப்பு புலம்பெயர்ந்த நாடுகளில் வாழக்கூடிய தமிழ் மக்கள் அனைவரையும் இணைத்து தமது 43ஆவது ஆண்டு நிறைவு விழாவையும் 13வது அனைத்துலக மாநாட்டையும் யாழ்ப்பாணத்தில் எதிர்வரும் ஆகஸ்டு மாதம் 5ம், 6ம் திகதிகளில் நடாத்த இருக்கும் இவ் வேளையில் இந்த அனைத்துலக மாநாடு நிகழ்வை ஒட்டிய சிறப்பு மலருக்கு எனது வாழ்த்துச் செய்தி ஒன்றை வழங்குவதில் மகிழ்வடைகின்றேன்.

தமிழ் மொழியின் பயன்பாடு பற்றி ஆராய்ச்சிகள் மேற்கொண்டுள்ள உலகளாவிய நிறுவனங்கள் மெல்லத் தழ் இனிச் சாகும் என்ற பாரதியின் கூற்றை வழிமொழிகின்ற போது தமிழ் மொழியின் பாவனையும் உலகளாவிய ரீதியில் அதன் பயன்பாடும் தமிழ்மொழி காலம் கடந்தும் இவ் உலகின் தொன்மை மொழியாகவும் செம்மொழியாகவும் வாழும் என்பதில் ஐயப்படத் தேவையில்லை.

புலம் பெயர்ந்த நாடுகளில் வாழுகின்ற எமது தமிழ் சிறார்கள் பிறநாடுகளில் பிறந்து பிறமொழி பேசுகின்ற சிறுவர்களிடையே வளர்ந்து பிறமொழியில் கல்வி கற்கின்ற போதும் அவர்களின் தமிழ்மொழி அறிவு, பேச்சத் திறன், எழுத்தாற்றல், இசைஞானம், நடனத்துறையில் உள்ள ஆர்வம் ஆகியவற்றை உற்று அவதானிக்கின்ற போது அந்த சிறார்களின் தமழ்மொழி மீதுள்ள பற்றம் அதன் பயன்பாடும் எமக்கும் புலப்படுகின்றது. தமிழ் மீதான அவர்கள் பற்றும் அபிமானமும் ஏனைய மொழிகளைவிட மேலோங்கி இருப்பது எம்மை மெய்சிலிர்க்க வைக்கின்றன. குறிப்பிட்ட ஒரு சிலர் அந்நிய மொழியில் உரையாடுவது, எழுதுவது, வாசிப்பது தமக்கு கௌரவத்தை அளிப்பன எனத் தப்பாக கணக்கிடுகின்ற போதும் மிகக் கூடுதலான புலம்பெயர் மக்களும் அவர்களின் குழந்தைகளும் தமிழ்மொழியை மிகச் சிறப்பாகப் பேசுவது தமிழுக்கு அழிவில்லை என்பதை எடுத்துக்காட்டுகின்றது.

தமிழில் பேசி, தமிழில் கற்று, தமிழ் மொழியையே தமது வாழ்க்கைக்கு உகந்த மொழியாக கொண்டுள்ள மக்களின் மொழி அறிவுக்கு கூடுதலான அறிவை புலம்பெயர் மாணவர்கள் கொண்டிருப்பது தமிழ்மொழியின் சிறப்பையும் அதன் தொன்மையையும் தமிழ்மொழிக்கான வளர்ச்சிப் பாதையையும் எமக்கு எடுத்துக் காட்டுகின்றன.

எமது மொழியையும் எமது பாரம்பரியங்களையும் பாதுகாக்கும் உங்கள் நடவடிக்கைகளை வரவேற்கின்றேன்! வாழ்த்துகின்றேன்! வாழ்க தமிழ்! வாழ்க தமிழர்!

நன்றி

நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன்
முதலமைச்சர்
வடமாகாணம்

A9 வீதி, கைதடி, யாழ்ப்பாணம்
A9 පාර, කෛතඩි, යාපනය
A9 Road, Kaithady, Jaffna

தொலைபேசி
දුරකථන
Telephone } 021 221 7311
021 221 7313

தொலைநகல்
ෆැක්ස්
Fax } 021 221 7227
021 221 7310

மின்னஞ்சல்
විද්‍යුත් තැපෑල
email } cmofficenorthernpc@gmail.com

சீ.வீ.கே. சிவஞானம்
அவைத் தலைவர், வடக்கு மாகாண சபை
සී.වී.කේ. සිවඥානම්
සභාපති, උතුරු පළාත් සභාව
C.V.K. SIVAGNANAM
Chairman, Northern Provincial Council

A9 வீதி, கைதடி (யாழ்ப்பாணம்)
A9 පාර, කෛතඩි (යාපනය)
A9 Road, Kaithady (Jaffna)

மின்னஞ்சல்
විද්‍යුත් තැපෑල
e - mail
cvkayes@gmail.com

தொலைபேசி
දුරකතන
Telephone
021 205 7084
021 205 7081 (208)

தொலை நகல்
ෆැක්ස්
Fax
021 205 7084

வாழ்த்துச் செய்தி

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் அதன் 13ஆவது சர்வதேச மாநாட்டினை இம்முறை யாழ்ப்பாண நகரில் நடாத்துவதற்கு முன்வந்துள்ளமை வரவேற்கப்படக் கூடியதும் பாராட்டுக்குரியதுமாகும். உலகின் பல்வேறு நாடுகளில் நடாத்தப்படும் சர்வதேச மாநாடுகளில் 4ஆவது தமிழாராய்ச்சி மாநாடும் யாழ்ப்பாண நகரிலே அக்கால அரசாங்கத்தின் கெடுபிடிகளுக்கு மத்தியிலும் நடாத்தப்பட்டமையும் 1974 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 10 ஆம் திகதி இடம்பெற்ற காவல்துறையினரின் துப்பாக்கி பிரயோகத்தின் காரணமாக ஒன்பது அப்பாவி மக்கள் பலியானதும் வரலாற்று பதிவாகும்.

இந்த நிழ்வுகளின் போது யாழ்ப்பாணம் முற்றவெளியில் பார்வையாளராக கலந்து கொண்ட அனுபவம் இப்பொழுதும் எனது மனதில் நிழலாடுகின்றது.

மேலும், இதன் போது உயிர்நீத்தவர்களுக்கு எமது இளைஞர்களால் நிறுவப்பட்ட நினைவுத்தூபி பாதுகாப்பு படையினரால் சேதப்படுத்தப்பட்ட பின்பு 1981ஆம் ஆண்டு யூன் மாதமளவில் சகலருக்கும் தனித்தனி நிலைவுத்தூபிகளை நான் நிறுவித்தமை பற்றியும் பின்னர் புனரமைப்பினால் வளைவொன்றை அமைத்து பராமரித்தமையையும் குறிப்பிட வேண்டும்.

காலமாற்றம் மற்றும் கணணி யுகத் தோற்றம் என்பன மொழிகளிலும் அவற்றைப் பேசும் மக்களிடத்தும் தாக்கம் ஏற்படுத்துவது இயல்பானதாகவே காணப்படுகின்றது.

யுனெஸ்கோ நிறுவனத்தின் ஆய்வொன்றின்படி உலகத்தில் இன்னும் ஒரு ஐம்பது வருடங்களில் வழக்கொழிந்து போகும் மொழிகளில் தமிழ் மொழியும் ஒன்று எனக் குறிப்பிடப்பட்டுள்ளமை கவலையுடன் நோக்கற்குரியது.

இவ்வாறான சூழ்நிலையில் உலகின் பல்வேறு நாடுகளில் பரந்து வாழும் எமது உறவுகளும் அவர் தம் வழித்தோன்றல்களும் வாரிசுகளும், தமிழ் மொழியையும், அதன் தொன்மைப் பண்பாட்டையும் சந்ததி சந்ததியாக பாதுகாப்பதற்கான செயற்பாடுகளை ஊக்குவிக்கும் கடமைப் பொறுப்பில் உலகத்தமிழர் பண்பாட்டு இயக்கம் உள்ளது.

நவீனத்திலும், செம்மொழியாம் செந்தமிழ் எந்தக் காலத்தாலும் அழியாத ஒன்றாக இருப்பதை உறுதி செய்வதற்கு ஆய்வாளர்களும், அறிஞர்களும் ஒன்று சேர்ந்து செயற்படல் அவசியமாகின்றது.

அந்தவகையில் தமிழ் மக்களின் கலாசார மற்றும் பண்பாட்டு மையப் இருப்பிடமாக விளங்கும் யாழ்ப்பாண மண்ணில் மீண்டும் ஒருமுறை மாநாடு நடை பெறுவது பெருமைக்குரியது.

அதற்காக அந்த இயக்கத்தின் செயற்பாட்டாளர்கள் யாவர்க்கும் எமது பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

2017ஆம் ஆண்டின் இந்த மாநாடு சிறப்புற நடைபெற எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கிறோம்.

சீ.வீ.கே. சிவஞானம்.
அவைத்தலைவர்.
வடக்கு மாகாணசபை.

வதிவிடம்
Residence
முகவரி
Address
904/5 , பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
904/5 Point Pedro Road, Nallur, Jaffna.

தொலைபேசி
Telephone
021 222 9702
077 116 6121
071 316 6121

පාර්ලිමේන්තුව
பாராளுமன்றம்
PARLIAMENT

யாழ்ப்பாணம்.
10.07.2017

உலகத் தமிழ் பண்பாட்டு மாநாடு
வாழ்த்துச் செய்தி

உலகத் தமிழ்ப் பண்பாட்டு மாநாடு 1974ஆம் ஆண்டிலிருந்து நடைபெற்று வருகின்றது. 13ஆவது மாநாடு இலங்கையில் நடைபெறவேண்டுமென 12ஆவது மாநாட்டிலே தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது. இவ்வியக்கத்தின் மாநாடுகளை உலகின் பலநாடுகளில் நடாத்தி வெற்றி பெற்றமையை அறிவேன். அந்தந்த நாடுகளிலுள்ள பண்பாட்டு இயக்கக் கிளைகளே பொறுப்பேற்று நடாத்தி வந்திருப்பதையும் நான் அறிந்திருக்கின்றேன். ஆனால் இலங்கைக் கிளை அவ்வாறு இயங்காமலிருப்பது வேதனைக்குரிய விடயமாகும். இருப்பினும் 2017 மாநாட்டை குறித்த திகதிகளில் நடாத்தியே ஆகவேண்டுமென அகில பண்பாட்டு இயக்கத் தலைமை தீர்மானித்து அதற்கான முயற்சிகளில் பல இடர்களுக்கு மத்தியிலும் செயல்படுவதை நாம் ஆதரித்து அனுசரனை வழங்க வேண்டியுள்ளோம்.

1974 தைத்திங்களில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற உலகத் தமிழாராய்ச்சி மாநாடு நடைபெற்ற பொழுது தமிழர் எழுச்சியின் உன்னதத்தை தமிழர் தேசங்களிலிருந்தும் இலங்கையின் தமிழ் பேசும் தமிழ் - முஸ்லீம் மக்களும், உலகம் முழுவதும் அறிஞர்கள் அணிதிரண்டு நின்றபொழுது, அப்போதைய இலங்கை அரசும் அவர்களின் கையாட்களும், காவல்துறையினரும் எதிர்த்து நின்ற நேரத்தில் யாழ்ப்பாணத்தில் காவல்துறையில் பொறுப்பிலிருந்தவர்களின் தமிழ்மொழி, இனவிரோத போக்கினால் துப்பாக்கி வேட்டுகளைத் தீர்த்து அந்த மாநாட்டில் தமிழைச் சுவைத்து நின்ற பத்துத் தமிழர் உயிர்கள் பறிக்கப்பட்ட அவலத்தை வரலாற்றில் பதிவுற்றமையை நாம் இந்நேரத்திலும் நினைவகலா நெஞ்சத்துடன் நினைவு கூருகிறோம். அந்த ஆண்டிலேயே உதித்ததுதான் உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கமாகும்.

1974ல் உலகின் பல பாகங்களிலும் பாரம்பரியமாக வாழ்ந்து வரும் தமிழர்கள் பல நாடுகளில் தமிழ்மொழி பண்பாடுகளைத் தெரியாமலும் பயனின்றியும் தமிழர்களாக வாழ்ந்து வருவதை அறிவோம். அத்துடன் இலங்கையில் 1956ல் தமிழ்மொழி ஆட்சிமொழி உருத்தை இழக்கும் வகையிலும் சிங்கள மொழியே நாட்டின் ஆட்சிமொழியாகவும் சிங்கள அரசு சட்டத்தை நிறைவேற்றியதிலிருந்து. தமிழின் சமஉரிமைக்கான போராட்டங்கள் ஆரம்பித்தன. அதனைத் தொடர்ந்து தமிழருக்கு எதிரான இனக்கலவரங்களும், இனஒழிப்பு நடவடிக்கைகளும் இராணுவ ஒடுக்குமுறைகளும் அரசுகளின் ஆதரவோடு கட்டவிழ்த்து விடப்பட்டன. வரலாற்றில் பல்லாயிரக்கணக்கில் தமிழர் இன அழிப்புக்குள்ளானது மட்டுமல்ல தமிழின விடுதலைப் போரிலும் இலட்சக்கணக்கான மக்கள் உயிர்கள் களப் பலி ஆகியுள்ளன.

இதன் விழைவுகளால் இலங்கைத் தமிழர்கள் உலகின் பலநாடுகளிலும் பத்து இலட்சத்திற்கும் மேலாகவும் அகதிகளாகத் தஞ்சம் அடைந்தும், புலம்பெயர்ந்தும் உள்ளனர். இந்நிலமைகளும் இன விடுதலைப் போரில் தமிழர் தியாகங்களும் ஜனநாயக சந்தர்ப்பங்களில் தமிழின விடுதலை இலட்சியத்தின் மீது வெளிப்படுத்திவரும் திடசங்கற்பமும் சர்வதேச நாடுகளின், சர்வதேச சமூகத்தின் தீர்மானங்களினாலும், தலையீடுகளினாலும் இலங்கையில் தமிழ்பேசும் இனத்தின் இறைமை, சுயநிர்ணய உரிமை, தன்னாட்சி உரிமையை தங்கள் தேசத்தில் நிலைநாட்டும் வகையில் சந்தர்ப்பங்கள் கூடிவருகின்றன.

இதன் **பின்னணியில்** உலகமெல்லாம் பரந்துள்ள தமிழ் மக்களின் பண்பாட்டு மாநாடு இலங்கையில் **நடைபெறும்** முக்கியத்தைப் பெற்றுள்ளது. இலங்கையிலேயே இம்மாநாடு மக்களிடத்திலே **சிறப்புற** அர்த்தமுடன் பயனுற வேண்டும். 2017 ஆகஸ்ட் 5,6ஆம் திகதிகளில் குறுகிய **கால** அவகாசத்தில் நடைபெற ஒழுங்குகள் நடைபெறுகின்றன. புல நாடுகளிலிருந்தும் ஆய்வாளர்கள்,அறிஞர்கள், பல்கலைக் கழகங்களின் தலைவர்கள், பேராசிரியர்கள் பங்கேற்கவுள்ளனர் என்பது மகிழ்ச்சி தருகிறது.

பண்பாடு என்பது ஒரு மனிதனின் மக்கள் கூட்டத்தின், நாட்டின் பண்பாடுகள் பலவாறிருப்பினும் அவர்கள் நாகரிகம் வரலாற்றில் பதிவதற்கு அந்தந்த பண்பாடுகளே அடிப்படையாக அமைகின்றது. அந்த நாகரிகத்தை அடைந்துள்ள மக்கள் தம் மொழி, கலை, பண்பாடுகளை இழந்துவிடாமல் தம்மைத்தாமே ஆளும் நாகரிகத்தை எட்டி வாழ்ந்து வளம் பெறுகிறார்கள். இப்பண்பாட்டை இழந்து போனவர்கள் வரலாற்றில் அழிந்து போனார்கள். அவ்வாறில்லாமல் வாழவும் வளம் பெறவும்,ஆளவும் இம்மாநாடுகள் உதவும் எனலாம்.

தங்கள் தங்கள் பண்பாட்டைப் பேணிப் பாதுகாத்து நின்றவர்கள் நாகரிகமுள்ளவர்களாக வாழ்வதற்கு வளம் பெறுவதற்கு, ஆளும் ஆட்சியை நிலைநாட்டுவதற்குப் போர்களை நடத்தியிருக்கிறார்கள். கோடான கோடி மக்கள் உயிர்த்தியாகங்களைச் செய்திருக்கிறார்கள். களப் பலி ஆகியிருக்கிறார்கள்.

இவ்வாறு பண்பாட்டை, நாகரிகத்தை எட்டியவர்கள் ஒழுக்கத்தை பேணியிருக்கிறார்கள். ஒழுக்கமே அவர்கள் பண்பாட்டின், நாகரிகத்தின் அச்சாணியாகவும், அடைத்தளமாகவும் விளங்கி நிற்கின்றது. அவ்வாறு நாகரிகத்தை இழந்தவர்கள் ஒழுக்கத்தை இழந்தவராகவே வரலாறு பதிவு செய்கிறது. இத்தகைய ஒழுக்கம், பண்பாடு, நாகரிகத்தை வென்றெடுப்பதற்காகவே இலங்கையில் இலட்சோப இலட்சம் தமிழ்மொழி மக்கள் தங்கள் உயிர்களை அர்ப்பணித்துள்ளார்கள். களப்பலியாகியுள்ளனர். இத்தகைய அர்ப்பணமும், தியாகமும் இலங்கையிலேயே அளப்பரிய அளவில் நிகழ்ந்திருக்கிறது. இந்த உண்மையை உணர்வுகளை நாம் இன்னும் உணர்ந்திருகின்றேமோ என்ற கருத்து எழுந்திருக்கின்றது? உலகின் பல பாகங்களிலும் அகதிகளாகவும், புலம்பெயர்ந்தும் வாழ விழையும் தமிழ் மக்கள் தம்மொழி பண்பாடுகளை இழந்து விடாமல் வாழ்கின்றனர். இன்னொரு பகுதியினர் புலம்பெயர்ந்த நாட்டினங்களின் மொழி, பண்பாடுகளில் கலந்து மூழ்கிப் போகின்றனர். அதனால் புதிய பண்பாடுகள் உருவாகின்றன - கலந்தும், திரிந்தும், சீர்குலைந்தும் போகின்றன.

இதனாற்றான் வள்ளுவர் 1330 குறள்பாக்களில்,
"ஒழுக்கம் விழுப்பந்தரலான்
ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்" என்று
உறுதிபடக் கூறியுள்ளார். ஒழுக்கத்தினால் உயர்ந்த நாகரிகத்தை வரலாற்றில் நிலை நிறுத்தவே இலட்சோப இலட்சம் உயிர்கள் தியாகம் செய்யப்பட்டிருக்கிறது. ஒழுக்கத்தை இழந்து போவோமானால் நாமும் நாகரிகத்தையும், ஆளும் உரிமையையும் இழந்து விடுவோம்.

புலம் பெயர்ந்துள்ளவர்களும், அந்தந்த நாடுகளில் பாரம்பரியமாகவே வாழ்ந்து வருபவர்களும் எவ்வாறு தமிழ்ப்பண்பாட்டைப் பேணுகிறார்கள் என்பது பற்றிய ஆராய்வு மேற்கொள்வது அவசியம். தமிழ்ப் பண்பாடு அல்லது புதிய பண்பாடு தமிழர் எனும் அடையாளத்தை தொடர்கிறதா அதுவும் புதிய வளர்ந்து வரும் அறிவியல், தொழில்நுட்பம், பொருளாதார கட்டமைப்புக்களில் முக்கியமாக புதிய இன உருவாக்கம் கலப்பு சமூக வாழ்வியல்

மாற்றங்களில் புதிய சமூக பண்பியலில் தமிழர் பண்பாடு எவ்வாறு வாழ்வு பெறும் என்பதும் ஆராயப்படுதல் வேண்டும்.

தமிழ்மொழி, தாய்மொழி என்பதால் வாழுகின்ற நிலம் தமிழ் நிலம், தமிழ் பண்பாடு, தமிழர் ஆட்சி என்பன தமிழர் பண்பியலில் ஒரு தனித்துவப் பரிணாமத்தைக் கொண்டிருக்கிறது. இந்தத் தமிழ் பண்பாட்டு ஒழுக்கம் தமிழ் நாகரிகம் வாழ, வளம் பெற இன்றைய உலகில் தமிழ் பண்பாட்டு இயக்கம் எத்தகைய வேலைத்திட்டத்தை கொண்டிருக்க வேண்டும் என்பதும் மதிப்பீடு செய்து, தீர்மானிக்கப் பெறுதல் வேண்டும். இந்நாள் வரை இத்தகைய மாநாடுகளினால் ஏற்பட்ட முன்னேற்றங்களும் மதிப்பீடு செய்யப்ப பெறுதல் அவசியமாகின்றது!

இந்திய நாட்டில் தமிழ் நாட்டில் தமிழ் மொழி செம்மொழியாக அரசினால் ஏற்கப்பட்டு வாழ்வும் வளமும் பெறுகின்றது. இந்திய நாடும், தமிழ் மாநிலங்கள் அரசுகளும் ஏனைய நாடுகளில் தமிழர்களின் பண்பாடு வாழ்வு, உரிமைகளில் மேம்பாட்டு நடவடிக்கைகளில் ஈடுபட ஒழுங்குகள் அவசியமாகின்றது.

இன்று வரை பல மொழிகளின், பல பண்பாடுகளின் தொன்மை, வாழ்வு வளம் என்பனவற்றிலிருந்து ஐ.நா. கல்வி, பண்பாட்டு நிறுவனத்தில் (UNESCO) பதிவு பெற்று வளம் பெற்றிட நாமும் பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.!

இலங்கையில் தமிழ்மொழி, தமிழ்பண்பாடு, தமிழர் ஆட்சி வாழவும் வளம் பெறவும், தமிழ்மொழித் தேசம் தமக்குரித்தான இறைமை, சுயநிர்ணயம், தன்னாட்சி எனும் சட்ட உரித்தை நிலைநாட்ட எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கை பற்றி ஆராய்ந்து ஏற்ற நடவடிக்கையை எடுப்பதற்கு இம்மாநாடு தீர்மானம் கொண்டிருக்க வேண்டும். உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் ஒற்றுமையுடனும், ஆளுமையுடனும் செயலாற்ற வேண்டும்.

இவ்வடிப்படைகளினால் இம்மாநாடு சிறப்புறவும், வெற்றி பெற்றிடவும் வாழ்த்தி நிற்கின்றேன்.

மாவை. சோ.சேனாதிராசா. பா.உ

சிவஞானம் சிறீதரன் பா.உ.
M.Ed.,B.A.,PGDE(Me).,Sp.Tr.(Ag)
யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம்.
882, ஆறுமுகம் வீதி,
வட்டக்கச்சி, கிளிநொச்சி, இலங்கை.
☎ : 021 3207584, 021 2280024
📠 : 021 2221595, 021 2280024
▯ : 077 6913244
✉ : shritharanmp@gmail.com
🌐 : www.shritharan.com

பார்லிமேன்துவ
பாராளுமன்றம்
PARLIAMENT

SIVAGNANAM SHRITHARAN M.P
M.Ed.,B.A.,PGDE(Me).,Sp.Tr.(Ag)
Jaffna Electoral District.
882, Arumugam Road,
Vaddakachchi, Kilinochchi, Sri Lanka.
☎ : 021 3207584, 021 2280024
📠 : 021 2221595, 021 2280024
▯ : 077 6913244
✉ : shritharanmp@gmail.com
🌐 : www.shritharan.com

2017.07.13.

தமிழாய் வாழ்வோம்.

"தாய்மொழியின் இலக்கிய இலக்கணங்கள் கற்றேன்
தனித்தமிழின் ஆட்சியினில் மாட்சியினில் வியந்தேன்
தாய்மொழியாம் தமிழ் மொழியால் வையகத்தைக் காக்கும்
தகுதியறிந்து இன்புற்றேன் நடக்கும் நாள் எந்நாளோ"

என்ற புரட்சிக் கவிஞன் பாரதிதாசனின் வினாவுக்கு விடை பகர்ந்து காலத்தில் காத்திரமான பணியாற்றும் உலகத்தமிழர் பண்பாட்டு இயக்கத்தின் செயற்றிறன்கள் போற்றுதலுக்குரியது. 1974ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற உலகத்தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் கருக்கொண்ட இவ்வியக்கம் இன்று மீண்டும் யாழ்ப்பாணத்தில் தான் முளைவிட்ட தாயகத்தில் தனது மாநாட்டை உருப்பெற வைப்பது கண்டு இணையற்ற இன்பம் எய்துகின்றேன். கனடா ரொறொன்டோவை தலைமைப்பீடமாக் கொண்டு உலகின் நாற்பத்து நான்கு நாடுகளில் உலகத்தமிழர் பண்பாட்டு இயக்கம் வீழுது பரப்பி விதானித்து நிற்கிறது.

இனிதான உலகத்தில் அழகான தமிழ்ழும் உருவாக வித்தாகிப்போன பல்லாயிரம் மாவீர்களையும் பொதுமக்களையும் விடுதலை வேள்வியில் ஆகுதியாக்கினோம். வலிகளைச் சுமந்த வண்ணம் முள்வேலிக்குளும் தொட்டு முள்வேலிவாய்க்கால் வரை நெருப்பாற்றை நீந்திக்கடந்தோம். மூட்கம்பி வேலிக்குள் முனங்கிக்கிடந்தோம். சர்வதேசத்தின் பாராமுகத்தால் தனிமைப்படுத்தப்பட்டோம். இத்தனைக்கும் மத்தியில் அத்தனை சவால்களையும் தகர்த்தெறிந்து பூமிப்பந்தில் உலகமே வியக்கும் மக்கள் கூட்டமாக நாம் தனித்துவப்பட்டு நிற்கின்றோம் எனில் அதற்கான ஆதார சக்தியாக அமைவது நமது தாய்மொழியாம் தமிழ்மொழியும் நம்பண்பாட்டுக் கருவூலங்களுமே ஆகும். இதனை சர்வதேசம் எங்கும் ஒலிக்கச்செய்யும் ஒலிபெருக்கியாக உலகத்தமிழர் பண்பாட்டு இயக்கம் செயற்படுகின்றது.

தமிழ்ப்புலவர் பெருமக்கள் தாங்கள் எழுதும் இலக்கியங்களில் எல்லாம் முதற்பாட்டில் முதல்வரியில் உலகத்தை வைத்தே எழுதி வருகின்றனர். 'உலகெலாம்' எனத் தொடங்குகிறது பெரியபுராணம். 'உலகம் யாவையும்' என்று தொடங்குகின்றது கம்பராமாயாணம். 'உலகம் உவப்ப' என்று தொடங்குகின்றது திருமுருகாற்றுப்படை. 'ஆதிபகவன் முதற்றே உலகு' என்று தொடங்குகின்றது உலகப்பொது மறையாம் திருக்குறள். இதில் இருந்து தமிழ் மக்களின் பாந்த அறிவும் தூரநோக்கும் மிகத் தெளிவாகப் புரிகின்றது.

இவ்வுலகில் உள்ள ஊர்கள் எல்லாம் எம்மூர். எல்லோரும் எம் உறவினர் என்ற பொருளில் யாதும் ஊரே யாவரும் கேளிர் என்பதும், மக்கள் பிறவியில் உயர்வு தாழ்வுகள் இல்லை என்ற பொருளில் ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்பதும் தமிழ் மக்களின் வாழ்வியல் பண்பாட்டை அழகாகப்படம் பிடித்துக் காட்டுகின்றது.

உலகம் என்பது உயர்ந்தோரை மட்டுமே குறிக்கும். உயர்ந்தோர் என்பவர் பண்பாட்டில் சிறந்தோர் என்பது தமிழரின் தாரக மந்திரம். நன்றியறிதல், பொறையுடைமை, இன்சொல் பேசுதல், ஒப்புரவு ஒழுகுதல், அறிவுடைமை, புறமுதுகில் புண்படா வீரம், உயிரை இழந்தேனும் காப்பாற்றும் மானம், உலகைப்பெற்றாலும் பழி நாடாத பண்பு, வீருந்தோம்பல் என்பன தமிழர் வாழ்வியலில் பண்பாட்டு பின்னல்களாகும்.

இத்தகைய உயரிய வாழ்வியல் இலக்கணங்களை கொண்ட தமிழினம் தரணியில் தன் இருப்பை நிலைநாட்ட வேண்டுமெனில் மொழியும் பண்பாடும் பேணப்பட வேண்டும், வளர்க்கப்பட வேண்டும். மொழியும் பண்பாடும் இழக்கப்படும் போது ஒரு இனத்தின் இருப்பு கேள்விக்குறியாகும் என்பது வரலாறு புகட்டும் பாடமாகும். இதனை நன்குணர்ந்த உலகத்தமிழர் பண்பாட்டு இயக்கம் இதுவரை பன்னிரண்டு நாடுகளில் மொழியையும், பண்பாட்டையும் வளர்க்கும் நோக்கில் மாநாடுகளை நடாத்தி வாகைசூடி இன்று பதின்மூன்றாவது மாநாட்டை தமிழரின் தாயகமான யாழ்ப்பாணத்தில் நிகழ்த்துகின்றது.

சிவஞானம் சிறீதரன் பா.உ.
M.Ed.,B.A.,PGDE(Me).,Sp.Tr.(Ag)
யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம்.
882, ஆறுமுகம் வீதி,
வட்டக்கச்சி, கிளிநொச்சி, இலங்கை.
☎ : 021 3207584, 021 2280024
🖷 : 021 2221595, 021 2280024
▯ : 077 6913244
✉ : shritharanmp@gmail.com
🌐 : www.shritharan.com

பாராளுமன்றம்
PARLIAMENT

SIVAGNANAM SHRITHARAN M.P
M.Ed.,B.A.,PGDE(Me).,Sp.Tr.(Ag)
Jaffna Electoral District.
882, Arumugam Road,
Vaddakachchi, Kilinochchi, Sri Lanka.
☎ : 021 3207584, 021 2280024
🖷 : 021 2221595, 021 2280024
▯ : 077 6913244
✉ : shritharanmp@gmail.com
🌐 : www.shritharan.com

உலகத் தமிழர் பண்பாட்டு இயக்கத்திற்கு தமிழ் கூறும் நல்லுலகம் தலைவணங்க வேண்டும். இவ்வியக்கத்தை நெறிப்படுத்தும் அத்தனை தமிழ் நெஞ்சங்களும் நன்றிக்கும் பாராட்டுக்குமுரியவர்கள். தென்மராட்சி மண்ணின் மைந்தனும் தற்போது புலம்பெயர்ந்து கனடாவில் வாழ்பவருமான முன்னாள் கிராம அலுவலர் துரைராசா அவர்களின் தலைமைத்துவத்தின் கீழ் இவ்வியக்கம் தழைத்தோங்குகின்றது. 1996 ஆம் ஆண்டு முதல் இவ்வியக்கத்தின் பொதுச்செயலாளராகச் செயற்பட்டுவரும் திரு.துரைச்சாமி கணேசலிங்கம் அவர்கள் யாழ்ப்பாணம் புங்குடுதீவில் தனது பன்னிரண்டாவது வயதில் ஐங்கரன் சனசமூக நிலையம் அமைத்து தமிழ்ப்பணியிலும் சமூகப்பணியிலும் தோய்ந்து போர்க்காலம் உந்தித்தள்ளியதால் புலம்பெயர் தமிழராகி தமிழையும் பண்பாட்டையும் புலம்பெயர்த்தாது இவ்வியக்கத்தை தன்செயற்பாட்டால் நிலைநிறுத்திவரும் மாண்புக்குரியவர். மாநாடுகளின் இணைப்பாளராகக் கடமையாற்றும் திருவாளர் இராஜசூரியர் அவர்கள் ஆற்றிவரும் பணிகள் வியக்கத்தக்கது. தமிழும் பண்பாடும் தம்மூச்செனக்கருதி உழைக்கும் இவர்களதும், உறுப்பினர்களினதும் உத்தமபணிகள் உன்னதமானவை. தமிழுக்கு தொண்டு செய்வோர் சாவதில்லை, இவ்வியக்கமும் சாகாவரம் பெற்றுள்ளது.

தமிழர்களின் முகவரி இன்று தொலைந்தும் தொலைக்கப்பட்டும் வருகிறது. பண்பாட்டு பிறழ்வுகளும் கலாசார சீரழிவுகளும் தமிழர் தம் வாழ்வுதனை ஆட்டம் காணச் செய்கின்றது. மெல்லத்தமிழ் இனிச்சாகுமோ என ஐயுறவு எழுகின்றது. இந்நிலையில் காலத்தின் தேவையுணர்ந்து உலகத்தமிழ் பாண்பாட்டு இயக்கம் "உலகத் தமிழர் பண்பாடு எதிர்நோக்கும் சவால்களும் முன்னெடுப்புகளும்" என்னும் தொனிப்பொருள் தாங்கி வீடி தொடும் பதின்மூன்றாவது மாநாடு செம்மொழியாம் எம் மொழி செழிப்புறவும் எம்பண்பாடுகள் புத்துயிர்ப்பு பெறவும் இறையருளும் தமிழ்த்தாய் அருளும் ஒருங்கே பெற்று சிறக்க வாழ்த்துகின்றேன்.

"வீழ்வது நாமாக இருந்தாலும்
வாழ்வது தமிழாகட்டும்"

சிவஞானம் சிறீதரன்.
பாராளுமன்ற உறுப்பினர்.
யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம்,
இணைத்தலைவர் – மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு.
கிளிநொச்சி.

சி.சிறீதரன்,
பாராளுமன்ற உறுப்பினர்,
யாழ்ப்பாண தேர்தல் மாவட்டம்,
இல : 882, ஆறுமுகம் வீதி,
வட்டக்கச்சி, கிளிநொச்சி.



வாழ்த்துச் செய்தி

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் 13ஆவது சர்வதேச மாநாடு யாழ்ப்பாணத்தில் இடம் பெறுவதையிட்டு மகிழ்ச் அடைகின்றேன்.

உலகத் தமிழினத்தை மொழியாலும் பண்பாட்டாலும் ஒருங்கிணைக்கவேண்டும் என்ற 'உயர் நோக்குடனும், உலகமெங்கும் பரந்து வாழும் தமிழர்கள் தலைநிமிர்ந்து வாழ வேண்டும் என்ற குறிக்கோளுடனும் அரசியல் சார்பற்று இன மத பேதங்களைக் கடந்து தமிழ் பண்பாட்டாளர்கள் ஒரே குடையின் கீழ் செயற்பட வேண்டும் என்ற கொள்கையுடனும் உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கம் 'செயடறபடுவதாக' அறிய முடிகின்றது.

நாம் உயர்ந்த நோக்கங்களையும் (Vision) உரிய குறிக்கோள்களையும் (Mission) ஒரே கொள்கையினையும் கொண்டு செயற்பட எத்தணிக்கின்ற போதும் நடைமுறையில் அரசியல் கொள்கை வேறுபாடுகளாலும் இன வேறுபாடுகளாலும், சாதி வேறுபாடுகளாலும் மத வேறுபாடு களாலும் பிரதேச வேறுபாடுகளாலும் புரிந்துணர்வு குறைந்த சமூகமாகவே எம்மை வெளிப் படுத்தும் வேதனைமிக்கதான சவால்களை எதிர்ககொண்ட வண்ணமே உள்ளோம்.

இன்றும் கூட தமிழர்கள் நாடுகள் அடிப்படையில், பிரதேச அடிப்படையில், சாதி அடிப்படையில், மத அடிப்படையில், பொருளதார அடிப்படையில் தங்களுள்ளேயே முரண்பாடுகளைச் சுமந்தவர்களாகவே வாழ்ந்து வருகிறோம் என்கிற கசப்பான உண்மையை இங்கே பதிவு செய்யும் தேவை உள்ளது.

தமிழர்களை வாழ்வியல் அடிப்படையில் இணைக்கின்ற செயற்திட்டம் உலக பண்பாட்டு இயக்கத்தின் இலக்கு எனில், தமிழராக வாழும் ஒவ்வொருவரினதும் வாழ்வியலுக்கு மதிப்பளிக்கும் மனப்பாங்கை ஒப்வொருவரிட.த்தும் விதைக்கும் நாகரிகமான முற்போக்கு சிந்தனைக்கும், செயற்பாடுகளுக்கும் வாய்ப்பளிக்கும் வகையில் அதன் பணிகள் அமையும் என்ற நம்பிக்கையுடன் எனது வாழ்த்துக்களை தெரிவிக்கிறேன்.

நன்றி

மயிலவாகனம் திலகராஜா

நாடாளுமன்ற உறுப்பினர் – நுவரெலியா மாவட்டம், இலங்கை

පාර්ලිමේන්තුව
பாராளுமன்றம்
PARLIAMENT



வாழ்த்துச் செய்தி

உலகத்திமிழர்களின் வாழ்வியல் பிரச்சினைகள் மற்றும் அயல்நாடுகளில் வாழும் தழிழர்களின் கலை, கல்வி, கலாசார, பண்பாட்டு விழுமிய அபிவிருத்தி சமுக ஒழுக்க ரீதியாக மேற்கொள்ளப்படவேண்டிய ஆக்கபூர்வமான எதிர்கால முனைப்புக்கள் தொடர்பில் உலகத்தமிழ் பண்பாட்டு இயக்கம் 1974ம் ஆண்டிலிருந்து மேற்கொள்ளும் நடவடிக்கைகள் காத்திரமானது மற்றும் பாராட்டுக்குரியதுமாகும்.

எமது பண்பாடுகள் மாத்திரமன்றி சில முக்கிய வழக்காறுகள், தமிழர் கலாச்சார மரபுகள் அனைத்தும் இன்று இளம் வயதினருக்கும் சிறுவர்களுக்கும் கிடைத்துவிடாதவாறு பல்வேறுபட்ட காரணிகள் அதில் பாதகமான செல்வாக்கினை செலுத்துகின்றது என்ற குற்றச்சாட்டினை நான் முன்வைக்கவேண்டியவனாக உள்ளேன் எமது கலாச்சார மத விழுமியங்களில் பல வியாபார சூறையாடல்கள் இடம்பெறுகன்றது கோவில்கள் கூட ஒருவகை வியாபார மையங்களாக மறாற்றப்பட்டு வருகின்றன எமது விழுமியங்களை பொதிப்பதில் அவற்றின் பங்கு போதாமல் உள்ளது இது தொடர்பிலும் இம்முறை இடம்பெறும் மாநாடு ஆரயவேண்டும் என கேட்டுக்கொள்கின்றேன்.

நயவஞ்சகம், நம்பிக்கைத்துரோகம், காட்டிக்கொடுப்புக்கள், சுயநலம் என்பவைதான் எங்களில் விளைந்து கிடக்கின்றதே தவிர யாரையும் நம்பி ஏகோபித்த குரலில் ஒன்றுபடும் சமுதாயமாக நாங்கள் இல்லாமலிருப்பதன் பிரதிபலிப்பும் அவ்வாறான உயிரோட்டமுடய தலைமைத்துவங்கள் இல்லாதிருப்பதும் குறைபாடே! திசைதிருப்பப்படும் இளைஞர்களின் கவனமும் சமுக வலையமைப்புக்களில் துரோகங்கள் பேசும் உரிமைக்கோசங்களும் தமிழினத்தின் விடியலை இன்னமும் பின்தள்ளிச் செல்லும் காரணிகளாகும் ஒற்றுமையான சமுகம் ஒன்றினைக் கட்டியெழுப்பவும் ஏகோபித்த உரிமைக்கோசங்களை உரக்கச் செய்யவும் கூடிய பரப்புரைகள் இவ்வியக்கத்தின் ஊடாக மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது எனது நிலைப்பாடு.

உலகத்தமிழர்களை வலயமைப்பாக இணைத்து இவ்வியக்கம் மையப்புள்ளியாக இருந்து மேற்கொள்ளும் இவ்வாறான செயற்பாடுகள் தமது தார்மீக உரிமையை வென்றெடுக்க நினைக்கும் எமது மக்களுக்கு ஒரு நம்பிக்கையை மீண்டும் ஏற்படுத்தியிருக்கின்றது. தமிழர்களின் எதிர்கால திசைகாட்டியாக இவ்வியக்கம் மாற்றப்பட வேண்டும் என்பது எனது அவா! நான் பிரதிநிதித்துவப்படுத்தும் அம்பாரை மாவட்டத்தில் பூர்வீக தமிழ்க்குடிகள் பல்வேறுபட்ட சமுக கலாச்சார, பொருளாதார இன்னல்களை எதிர்நோக்கிவருகின்றனர் இவ்வியக்கம் எமது மாவட்டத்தில் வாழும் மக்களுக்காக தமது செயற்பாடுகளை விஸ்தரிக்கவேண்டும் எனக் கேட்டுக்கொள்கினறேன்.

சென்ற வருடம் பனிரெண்டாவது மாநாடு கனேடிய உலகத்தமிழ் பண்பாட்டு இயக்கம், உலகத்தமிழ் பண்பாட்டு இயக்கம் இந்தியாவும் இணைந்து 'அயல் நாடுகளில்வாழும் தமிழர்கள் எதிர்நோக்கும் சவால்களும் வாய்ப்புக்களும்' என்ற கருப்பொருளில் புதுவையில் நடாத்தி பல முக்கிய தீர்மானங்களை மேற்கொண்டு அமுல்படுத்தியது. 1974 இல் ஆரம்பிக்கப்பட்ட இவ்வியக்கம் இம்முறை 13 ஆவது மாநாட்டை இலங்கையின் யாழ்நகரில் நடாத்துவது மிகவும் முக்கியமானதாக நான்கருதுகின்றறேன். இற்றைக்கு 43 ஆண்டுகளுக்கு முன்னர் தமிழர்களின் தார்மீக உரிமைகளைக்கேட்டு முளங்கிய தமிழாராட்சி மாநாட்டின் மீதும் இவ்வியக்கத்தின் மாநாட்டின் மீதும் மிலேச்சத்தனமாக மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் எங்கள்முன் மாறாவடுவாக காணப்படும் வேளையில் எங்கள் மக்களின் இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்க்கமான முடிவினை எதிர்பார்த்து பொறுமையாக காத்திருக்கும் மக்களுக்கு இம்மாநாட்டின் ஊடாக அரசுக்கும் சர்வதேசத்திற்கும் ஒரு செய்தி வழங்கப்பட வேண்டும் என்பதும் எனது நிலைப்பாடு.

இவ்வாறான தமிழர்களின் ஒற்றுமை மாநாடுகள் இன்றைய தமிழர் போக்குகளுக்கு மேலும் வலுச்சேர்க்கும என நான் கருதுகின்றேன்.இம்மாநாட்டின் நோக்கம் வெற்றிபெற எனது வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

நன்றி

கவீந்திரன் கோடீஸ்வரன்
பாராளுமன்ற உறுப்பினர்
அம்பாரை மாவட்டம்

Consul-General



வாழ்த்துச் செய்தி

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் பதின்மூன்றாவது உலகப்பண்பாட்டு மாநாடு தொடர்பான சிறப்பிதழுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

உலகத் தமிழ் மக்களை ஒருங்கிணைத்து தமிழர் தம் பெருமை போற்றும் கலை, கலாச்சார மற்றும் விழுமியங்களை எடுத்தியம்பும் உலகப் பண்பாட்டு இயக்கத்தின் செயற்பாடு, அர்ப்பணிப்பு அதன் வினைத்திறன்மிக்க நிகழ்ச்சிகளினூடாக அவதானிக்க முடிகின்றது. அதிலும் குறிப்பாக 13ஆவது மாநாடு வடக்கின் இருதயமான யாழ்ப்பாணத்தில் ஒழுங்கமைக்கப்பட்டு நடைபெறுவது பெரும் சிறப்புமிக்கதுடன் உலகெங்கிலும் வாழும் தமிழ் மக்களின் இதயங்களைத் தொட்டு நிற்கும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

இலங்கையில் தமிழர்கள் தமது அடையாளத்தையும், கௌரவத்தையும், தன்மானத்தையும் இழக்காது தமது கலை கலாச்சார பாரம்பரியங்களை பேணிப் பாதுகாத்து வந்துள்ளனர். அதற்கு உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் போன்ற அமைப்புக்களே பிரதான காரணிகளாக இருந்து வருகின்றன. ஜேர்மன், மலேசியா, இந்தியா போன்ற நாடுகளில் மாநாடுகளை நடாத்திய உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம், தனது 13 ஆவது மாநாட்டினை யாழ்ப்பாணத்தில் நடாத்துவது மிகச் சிறப்பானதாகும். அந்த வகையில் தாயக மண்ணின் பெருமைகளை புலம்பெயர் தேசங்களில் விழாக்கள் மற்றும் மாநாடுகள் மூலமாக எடுத்துக்கூறி வருகின்ற உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் இவ்வருடம் மீண்டும் தாயகத்தில் தனது கால்களைப் பதித்து சொந்த மண்ணில் சொந்த உறவுகளுடன் தமிழர்கள் வாழும் நாடுகளின் பிரதிநிதிகளுடன் ஒரு பிரம்மாண்டமான மாநாட்டினை நடாத்த முன்வந்துள்ளமைக்கு எனது பாராட்டுதல்களை தெரிவிக்கும் அதேவேளை மீண்டும் மீண்டும் இவ்வாறான பல மாநாடுகளை நடாத்த வேண்டும் என்றும் கேட்டு எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நல் வாழ்த்துக்கள்!!

ஆ.நடராஜன்
இந்தியத் துணைத்தூதுவர்
யாழ்ப்பாணம்

भारत का प्रधान कौंसलावास
१४ मारूथड़ी लेन, नल्लूर, जाफना
दूरभाष संख्या : 00९४-२१-२२२०५०४/५०५
फैक्स संख्या : 00९४-२१-२२२०५०३/२२१९६७५
वेब : www.cgijaffna.org

Consulate General of India
14, Maruthady Lane, Nallur, Jaffna
Tel : 0094-21-2220504/505
Fax : 0094-21-2220503/2219875
Web : www.cgijaffna.org

යාපනය විශ්වවිද්‍යාලය, ශ්‍රී ලංකාව
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

துணைவேந்தரின் வாழ்த்துச் செய்தி

உலகநாடுகளை ஒருங்கிணைத்து செம்மொழியாம் தமிழின் பெருமையினை உலகறியச்செய்யவும் தமிழ்ப்பண்பாட்டின் மகிமையை ஆய்ந்தறியவுமான உலகத்தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் 13வது மாநாடு இம்முறை 'தமிழர் மொழி பண்பாடு எதிர்நோக்கும் சவால்களும் முன்னெடுப்புக்களும்' என்னும் கருப்பொருளை மையப்படுத்தி யாழ்ப்பாணத்தில் நடைபெறுவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். இம்மாநாட்டின் ஆரம்ப நிகழ்வு ஆகஸ்ட் 5ம் திகதி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் தொடர்ந்து ஏனைய நிகழ்வுகள் ரில்கோ மாநாட்டு மண்டபத்திலும் நடைபெறுவது சிறப்புக்குரியதாகின்றது. உலகத்தமிழர்களை ஒருங்கிணைக்கும் நோக்குடனும் அவர்களின் கலாச்சாரம், பண்பாடு மற்றும் விழுமியங்களை உலகறியச்செய்யவும் அவற்றை முறையாக எதிர்கால சந்ததி பின்பற்ற வழிவகைசெய்யும் வகையிலும் உலகத்தமிழ் பண்பாட்டு இயக்கம் பலவகையான செயற்பாடுகளை செய்து வருவதை பாராட்டும் அதேவேளை இம்முறை அவ்வாறான செயற்பாட்டில் அனைத்து தமிழினமுமே எதிர்நோக்கும் சவால்கள் பற்றியும் அவற்றை எதிர்நோக்குவதற்கான முன்னெடுப்புக்களையும் விரிவாக ஆய்வுக்கட்டுரைகள், உரைகள் மற்றும் அமர்வுகள் வாயிலாக கருத்துப் பகிர்வுகள் நடைபெறுவது தாய்மொழியாம் தமிழுக்கான மேலதிகமான அங்கீகாரமாகவும் அதனை இன்னும் மேம்படுத்துவதற்கான 13வது படிநிலையாகவும் காணலாம்.

இலங்கையிலும் இந்தியாவிலும் அதிகமாக தமிழ்மக்கள் வாழ்ந்த காலம் மாறி தற்போது அனைத்து நாடுகளிலும் தமிழர்கள் மற்றும் தமிழ்மொழி பேசுபவர்கள் இருக்கின்றார்கள் என்பதும் தமிழைப் பேசுகின்றார்கள் என்பதும் எமக்குப் பெருமையளிக்கின்றது. கனடாவும் அவுஸ்திரேலியாவும் தமிழ்மொழிக்கு முக்கியத்துவம் கொடுத்திருக்கும் நிலையைப்பார்க்கும் போது எமக்கு ஒருவகையில் சந்தோசமாகவும் தமிழுக்கு கொடுத்திருக்கும் அங்கீகாரம் மிகவும் பெருமதிப்புக்குள்ளாகின்றது.

இப்பூமியில் உள்ள நாடுகளில் தமிழ் மொழியும் தமிழர் பண்பாடும் எந்தளவிற்கு இருக்கின்றது என்பது பற்றி பல பேராரிஞர்கள் உரையாற்ற இருப்பது இம்மாநாட்டை சிறப்பாக நடாத்துவதற்கு வழிசமைத்திருக்கின்றது. உலகெங்குமுள்ள தமிழ்ப் புலமையாளர்களை பல்கலைக்கழக பேராரிஞர்களை இன்னும் மாணவர்களை இணைப்பதற்கான திட்டமாக இது அமைவது மகிழ்வுக்குரியதாகும். பிறமொழி பேசுபவர்களுக்கு தமிழ்மொழியின் மகத்துவத்தையும் தமிழர்தம் பண்பாட்டையும் எடுத்துக்கூறும் களமாக இம்மாநாடு பரிணமித்திருப்பது மிகவும் சிறப்புக்குரியதுடன் தொடர்ந்தும் இவ்வாறான மாநாடுகள் உலகெங்கும் நடைபெறவேண்டும் எனவும் வாழ்த்துகின்றேன்.

உலகில் மூத்தமொழியாம் தமிழுக்காக நடைபெறும் இம்மாநாடு சிறக்கவும் இதனை ஒழுங்கு செய்த உலகத்தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தினருக்கு நன்றிகள். மேலும் இம்மாநாடு சிறப்புற அமைய உதவிய அனைத்து நல்லுள்ளங்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகள். மொழியினால் உலகை இணைக்கலாம். இந்த இணைப்பு உலக சமாதானத்துக்கானது. உலகிலுள்ள நாடுகளில் சமாதானம் நிலைத்து நிற்க மக்கள் அனைவரிடமும் நல்ல புரிந்துணர்வு ஏற்பட்டு அனைவரும் ஒருவரை ஒருவர் மதிக்கவும் அவரவர் மொழி, சமயம், மற்றும் பண்பாட்டிற்கு மதிப்பளிக்கவும் வேண்டும் என்னும் கருத்தினை இவ்விடத்தில் பதிவுசெய்ய விரும்புகின்றேன். மொழிகளுக்கிடையிலான இணைப்பு வளர்ச்சிபெற்று ஒரு காத்திரமான் பொறிமுறையாக அனைத்து மக்களுக்கும் சிறப்பாக வாழ வழிசெய்து கொடுக்கவேண்டுமென எதிர்பார்ப்போம். அந்த வகையில் தமிழ்மொழிக்கான சிறப்பை வெளிக்கொணரும் இம்மாநாடு சிறப்பாக நடைபெற மனமார்ந்த வாழ்த்துக்கள்

பேராசிரியர் இரட்ணம் விக்னேஸ்வரன் 17.07.2017
துணை வேந்தர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம்
INTERNATIONAI MOVEMENT FOR TAMIL CULTURE
Non-Profit, Non-Political, Non-Religious, Charitable, Worldwide Registred, tamil Cultural Organization - Est. in 1974
Head Office 5310 Finch Ave. East, Unit #10, Toronto, Ontario M1S 5E8
Tel: 1.647.829.4044 email: roja@ofsgino.com
www.imfcweb.com

தலைமையகம் வாழ்த்து





தமிழினத்தினை மொழியாலும் பண்பாட்டாலும் ஒருங்கிணைக்க வேண்டும் என்ற உயர் நோக்குடனும் உலகெங்கும் பரந்து வாழும் தமிழர்கள் தலைநிமிர்ந்து வாழவேண்டும் என்ற குறிக்கோளுடனும் அரசியற் சார்பற்று இன மத பேதங்களைக் கடந்து தமிழ்ப் பண்பாட்டாளர் என்னும் ஒரே குடையின் கீழ் செயற்பட வேண்டும் என்னும் நிறைந்த கொள்கையுடனும் தமிழ் மொழியினை மறந்துபோனவர்களைத் தாய் மொழித் தமிழ் உணர்விற்குக் கொண்டு வரும் நல்நோக்குடன் இவ் இயக்கம் 1974ம் ஆண்டு தைத்திங்கள் (சுறவம் 08.01.1974) அன்று இலங்கையின் கலாச்சாரத்தலைநகர் யாழ்ப்பாணத்தில் இடம் பெற்ற நான்காவது உலகத் தமிழாராட்சி மநாட்டின் போது தோற்றுவிக்கப்பட்டது. மாநாட்டிற்கு வந்திருந்த தமிழ் அறிஞர்கள் ஒன்று கூடி உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தினைத் தோற்றுவித்தார்கள். அன்றுமுதல் தமிழர்களை ஒன்றிணைப்பதில் வெற்றிகண்ட உலகப் பேரியக்கம் என்பது எவராலும் மறுக்க முடியாத உண்மையாகும். .இயக்கத்தின் தொடக்க காலத்தில் அமரர் இரா.கனகரத்தினம் (ஈழம்) இவருடன் அமரர் பேராசிரியர் சு.வித்தியானந்தன்.(ஈழம்) அமரர் பேராசிரியர் சாலை இளந்திரையன் (தமிழகம்) அமரர் பேராசிரியை சாலினி இளந்திரையன் (தமிழகம்) அமரர் சோதிநாதன் (தென்ஆபிரிக்கா) திருமதி காமாட்சி சோதிநாதன் (தென்ஆபிரிக்கா) அமரர் தனிநாயகம் அடிகளார்(ஈழம்) மற்றும் உலகப் பேராளர்களை உட்படுத்தி இப்பேரவை உருவாக்கப்பட்டது.அமரர் பேராசிரியர் சாலை இளந்திரையன் (இந்தியா)முதற்தலைவராகவும் அவரைத்தொடர்ந்து அமரர் பேராசிரியர் இர.ந. வீரப்பனார் (மலேசியா) தமிழ்ச் செம்மல் திரு.சி.செல்லையா (கனடா) பண்பாட்டு இயக்கச் செம்மல் ப.கு.சண்முகம் (மலேசியா) அமரர் முனைவர் வே.கோவிந்தசாமி (தென்ஆபிரிக்கா) அறநெறிக்காவலர் திரு.வேல்வேலுப்பிள்ளை (அமெரிக்கா) திரு.வி.சு.துரைராஜா (கனடா) போன்ற தலைவர்களும் செயலாளர் நாயகமாக அமரர்.இரா.கனகரத்தினம் (இலங்கை) அமரர் தமிழ்மணி மு.மணிவெள்ளையன் (மலேசியா) திரு.துரைகணேசலிங்கம் (யேர்மனி) ஆகியோரின் வழியில் இவ்இயக்கம் தொடர்ந்து பயணிக்கின்றது.

மொழி பண்பாடு வாழ்வு நிலை தமிழர் 19ம் நூற்றாண்டு முதல் இன்று வரை புலம் பெயர்ந்து தாம் வாழும் வாழ்வில் தம் தமிழ் மொழி பண்பாடு எவ்வாறாக உள்ளது. இலங்கையிலும் இந்தியாவிலும் தமிழர்கள் வாழும் மக்களின் நலன்களும் மொழி பண்பாடு கல்வி ஆகியவைகளின் ஆக்கபூர்வ செயற்பாடுகள் எவ்வாறு இடம்பெறுகின்றன என்பதனை உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்க 13வது உலக மாநாடு தமிழர் மொழி பண்பாடு எதிர்நோக்கும் சவால்களும் முன்னெடுப்புக்களும்

என்னும் கருப்பொருள் கொண்டு 2017 ஆவணி மாதம் 5ம் 6ம் நாள் சனி மற்றும் ஞாயிறு தினங்களில் (2048 திருவள்ளுவராண்டு) இலங்கையின் கலாச்சாரத் தலைநகர் யாழ்ப்பாணத்தில் அமைதியின் கடலான மொழி பண்பாட்டினைப் பேணும் ஆய்வினை மேற்கொள்ளுகின்றது. பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகல் (கலித்தொகை) பாடு என்பது- கடமை இயல்பு முயற்சி உலக வழக்கு என்னும் பொருள் கொண்டதாகும். பண்புடையார் பட்டுண்டு உலகு அதுவின்றேல் மண்புக்கு மாய்வது மன் என்னும் குறள் மொழிக்கொப்ப மொழிக்கு அமைவாக எமது பண்பாடு பேணுவது அவசியமானதாகும்.

இவ்வகையில் உலகம் முழுவதும் வாழும் தமிழர் மத்தியில் தமிழர் கலை பண்பாடு பேணிப்பாதுகாத்து உதவுதலும் தமிழர் உரிமைகளுக்காகக் குரல் கொடுத்தலும் செயற்பாடாக உலகெங்கினும் வாழும் தமிழர்களை ஒருங்கிணைக்கும் தொடர்புப் பாலமாக உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் திகழ்கின்றது. அது தனது 43வது அகவையில் கால்பதித்துத் தனது பதின்மூன்றாவது உலக மாநாட்டினைத் தான்பிறந்த தாய்மண் யாழ்நகரில் நிகழ்த்துவது சிறப்பிற்குரியதே. உலகளாவிய அறிஞர்கள் ஒருமித்த எண்ணம் கொண்டவர்கள். ஒன்றுபட்டு செயற்படுவது காலத்தின் கட்டாயமாகும்.

கனடாவைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கி வரும் இப்பேரியக்கம் உலகத் தமிழர்களின் ஒற்றுமை உறவுக்குப் பாலமும் உரிமைக்குத் தியாகமும் பொறுப்புக்கு இயக்கத்தின் உறுப்புரிமையும் பெற முன்வரத் தயங்கக் கூடாது. தயக்கமும் மயக்கமும் கட்சிக் கண்ணோட்டமும் உரமற்ற நெஞ்சமும் தமிழன் எவனையும் உயர்த்தாது. அன்புறவும் கூட்டுணர்வும் உலகத் தமிழனின் கைவேள் களிறுகள். இதற்குத் தடையாக நாடு தேசியம் அரசியல் போன்ற சூழமைவுகள் இருப்பதனாலே நாம் மருள் கொண்டு வேலிகளையும் எல்லைகளையும் போட்டுக் கொள்கின்றோம். இந்த அறியாமையும் மூட நம்பிக்கையும் மாற்றம் பெற வேண்டும். எனவே இந்நியைில் மீண்டு தமிழன் வாழ்வதற்கும் எமது மொழி பண்பாடு உயர் பெற்று வாழ்வதற்கும் மொழி ஆட்சி மொழியாகவும் பண்பாட்டு மொழியாகவும் பயன் பாட்டு மொழியாகவும் வழிபாட்டு மொழியாகவும் எழுத்து பேச்சு மொழி தூய தமிழில் உருக்கொண்டு தமிழன் என்னும் அடையாளத்தினை நிலைநிறுத்தவும் உலகத் தமிழ்ப் பண்பாட்டு மையத்தினை இலங்கையில் நிறுவுவதற்கு எமது இயக்கம் உலகத் தமிழருக்கான கொடியும் கீதமும் கொண்டு இம்மாநாடு உறுதிப்படுத்தும். ஏற்கனவே நடந்தேறிய இம்மாநாடுகள் ஊடாகத் தமிழ்வழி இறைவழிபாடு தமிழ்க்கல்வி தமிழ்கலை கலாச்சாரப் பண்பாடு ஊக்குவிப்பு தமிழர் இறையாண்மை தமிழர் நிறுவனங்களின் ஒன்றிணைப்பு மறந்து போன மறக்கப்பட்ட தமிழர்களின் வரலாற்றுத்தேடல்கள் தமிழ் ஆண்டு தமிழர் திருநாள் தமிழர் மரபுரிமைத்திங்கள் உலகளாவிய தமிழர்களின் ஒருங்கிணைப்பு உலகத் தமிழ்ப் பண்பாட்டு மையம் தமிழர் கொடி தமிழர்கீதம் மேலும் தமிழ் ஆய்வுகள் உரையாடல்கள் ஆகியவற்றினை நடாத்தி தீர்வுகளையும் எண்ணங்களையும் உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் உலகறிய வைத்துள்ளது

காலத்தின்தேவை எம்தமிழ் மொழியினை உலகெல்லாம் பரப்பி அது உலகின் மூத்தமொழியென அறைகூவி நிற்கின்றது. ஒரு மொழிதனைக் காப்பதற்கு அதனது

பண்பாடும் நாகரீகமும் இரு கண்போன்றது. நாகரீகம் மாறினாலும் மாறாது எம்மொழி உலகெங்கும் தன்பண்பாட்டினைக் காத்து நிற்கின்றது.

எம்தமிழ் மொழி அழிவடைந்த நாடுகளிலும் அதன்மொழி உறவுகள் பூர்வீகம் தேடுகையில் அதனைக்காத்து அளிக்கும் பெரும் பணிதனை எம் இயக்கம் கொண்டுள்ளது. உலகெங்கும் விரிந்திருக்கும் பூமிப்பந்தினுள் ஈழத்தமிழ் மக்களின் பணி விதைந்துரைக்க வேண்டியதொன்றாகும். இன்று மொழியிழந்த நாடுகளில் ஒன்றான தென் ஆபிரிக்காவில் ஆசிரியர்களை உருவாக்கி எம்தமிழ் வளர கரம் கொடுத்துள்ளது எம் தமிழ் இயக்கம். உலகின் மிகப்பழைமைவாய்ந்த மூத்த மொழி தமிழ் என உலகம் உரத்துக் கூறுகையில் அதனைத் தெரிந்து செயற்பட எம் தாய் மொழி அன்னைதமிழுக்கு வணக்கம் கூறிப் பெருமிதம் அடைகின்றோம். உலகத் தமிழருக்கான கல்வி உலகத்தமிழருக்கான வங்கி இலங்கையில் உள்ள தமிழ் உறவுகள் அவர்தம் விடியலுக்கான காத்திரமான பங்களிப்பினை வழங்கவும் இம்மாநாடு வழிசமைக்கும். தமிழர்கள் பிரிந்து நின்று இழந்தவை போதும் தமிழால் ஒன்றுபட்டு தமிழ் உலகில் ஒளிர்திட அறைகூவல் விடுக்கின்றோம் தமிழ் அன்னை தந்த உறவதனில் நிறைந்து வளர்ந்திடவும் மாநாடு சிறப்புறவும் வாழ்த்தி நிற்கின்றோம்.

திரு.வி.சு.துரைராஜா
அகிலத்தலைவர்

திரு.துரைகணேசலிங்கம்
செயலாளர் நாயகம்

மாநாட்டு அகில ஒருங்கிணைப்பாளர்கள்

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் - தலைமையகம் - கனடா

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம்

International Movement for Tamil Culture (IMTC)

இந்தியா (பதிவு எண். 450/2015)

(Affiliated with International Movement for Tamil Culture, Canada Headquarters)



வாழ்த்துரை

தமிழர் பண்பாடு போற்றும் 13ஆவது பன்னாட்டு மாநாடு எதிர்வரும் 2017 ஆகஸ்டு மாதம் 05-06 நாட்களில் உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கம் கனடாவும், உலகத் தமிழப் பண்பாட்டு இயக்கம் இலங்கை கிளையும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்துடன் இணைந்து யார்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது அறிந்து மகிழ்ச்சியடைகிறேன்.

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் சார்பாக உலகின் பல நாடுகளில் உலகத் தமிழ்ப் பண்பாட்டு உறவுகளை ஒன்றிணைக்கும் பாலமாக 12 மாநாடுகளை நடத்தி தற்போது 13ஆவது மாநாடு இலங்கையில் நடைபெறுவது பாராட்டத்தக்கது.

தமிழர்ப் பண்பாட்டு கடல் கடந்து மேலை நாடுகளில் ஆதியிலேயே பரந்து இப்பொழுது விரிந்து கொண்டிருக்கிறது. இன்றைய தலைமுறை அறிந்து கொள்ளும் வகையில் பண்பாடு தொடர்பான செயல் திட்டங்களை உருவாக்கி முன்னெடுக்க வேண்டும். அதன்பொருட்டு ஒரு நிலையான செயல்பாடுகளை இவ்வமைப்பு நிர்வகித்து வருகிறது. அது நன்று ஓங்குக.

13ஆவது பன்னாட்டு மாநாடு சிறப்பாக நடைபெற எனது வாழ்த்துக்கள்.

தாவிதன்னுசாமி
புதுச்சேரி



அமிர்தலிங்கம் நினைவு அறக்கட்டளை
Amirthalingam Memorial Foundation

பிரித்தானியா (U.K.)

E-mail: amfs1927@gmail.com Web: www.amirthalingam.com



வாழ்த்துகிறோம்

உலகத்தமிழர் பண்பாட்டு இயக்கம் கனடா கிளையும், இலங்கை கிளையும் யாழ் பல்கலைக்கழகத்துடன் இணைந்து நடாத்தும் 13 வது மாநாடு 2017 ஆகஸ்ட் மாதம் முதல் வாரத்தில் யாழ்ப்பாணத்தில் நடைபெறுவதையிட்டு மகிழ்ச்சியும் பெருமிதமும் கொள்கிறோம். இந்த நேரத்தில் கோலாகலத்துடன் மக்கள் விழாவாக நடந்து கண்ணீரில் முடிந்த 4வது உலக தமிழ் மாநாட்டில் உயிரிழந்த ஒன்பதிர்மரையும் நினைவில் நிறுத்துவோம். எந்த மண்ணில் தோற்றுவிக்கப்பட்டதோ அதே நகரில் நாற்பத்து மூன்று ஆண்டுகளின் பின்னர் ஒருங்கிணைக்கப்படுவது ஒரு வரலாற்று நிகழ்வாகும்.

உலகத்தமிழ் பண்பாட்டு இயக்க நிகழ்வுகளில் உலகின் பல நாடுகளுக்கும் எம் தந்தையார் பயணித்து ஈழத்தமிழர் இன்னல்களை எடுத்துரைத்தார். அதன் மூலம் உலகத் தமிழ் உறவுகளை ஒன்றிணைக்கும் பாலமாக தனது வாழ்நாள் முழுவதும் பணியாற்றியதை அனைவரும் அறிவர்.

உலகத்தமிழ் பண்பாட்டின் உயரிய நோக்கங்களுக்காகவும், அதன் செயல்பாடுகளுக்காகவும் தங்கள் காலத்தையும் நேரத்தையும் செலவு செய்து அந்த அமைப்பினூடாக பல செயல் திட்டங்களை முன்னெடுத்து தமிழுக்கு தொண்டாற்றி வரும் அதன் பொறுப்பாளர்களை வாழ்த்துகிறேன், வணங்குகிறேன். இதன் இன்றைய தலைவர் எனது அருமை நண்பர் முனைவர் பாஞ் இராமலிங்கம் அவர்களின் முன்னெடுப்பில் இந்த மாநாடு நடைபெறுவதையிட்டு பெருமை அடைகிறேன். ஒரு பொது சமூக நிறுவனமாக அனைவரையும் ஒன்றிணைத்து தமிழர் தம் மொழியையும் பண்பாட்டையும் உலகறிய செய்ய பாடுபட வேண்டும்.

இந்த மாநாடு மிக சிறப்பாக நடைபெற எனது வாழ்த்துக்கள்.

பகீரதன் அமிர்தலிங்கம்
வைத்திய கலாநிதி
பிரித்தானியா (U.K.)



வாழ்த்துரை

உலகத் தமிழ் இனத்தை மொழியாலும் பண்பாட்டாலும் ஒருங்கிணைக்கும் உயர் நோக்குடனும் இலங்கை இந்தியாவில் வாழும் தமிழ் மக்கள் தலை நிமிர்ந்து வாழ வேண்டும் என்னும் குறிக்கோளுடனும் அரசியற்சார்பற்று இன மத பேதங்களைக்கடந்து தமிழ்ப் பண்பாட்டாளர் என்னும் ஒரே குடையின் கீழ் செயற்பட வேண்டும் எனும் உயர்ந்த கொள்கையுடனும் தமிழ் மொழியினை மறந்து போனவர்களைத் தாய்மொழி தமிழ் உணர்வுக்குக் கொண்டுவரும் நல்நோக்குடனும் 1974 தைத் திங்கள் சுறவம் 08.01.1974 அன்று இலங்கை கலாச்சாரத் தலைநகர் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற 4வது உலகத் தமிழாராட்சி மாநாட்டின்போது தோற்றுவிக்கப்பட்டது.

மாநாட்டிற்கு வந்திருந்த தமிழ் அறிஞர்களால் ஒன்று கூடி தோற்றுவிக்கப்பட்ட இவ் இயக்கம் தமிழர்களை ஒன்றிணைப்பதில் வெற்றிகண்ட உலகப் பேரியக்கம் என்பது மறுக்க முடியாத உண்மையாகும். இவ் இயக்கம் கனடாவைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கி வருகின்றது.

பல ஆண்டுகளாக மலேசியாவில் தலைமையகம் அமைத்து செயல் பட்ட இவ்வியக்கத்தின் நீண்ட காலத் தலைவராக வீரப்பன் அவர்கள் இருந்தார். அவர்தம் சீரிய முயற்சியால் இன்று மிக பரந்துபட்ட நிலையில் வளர்ந்துள்ளது.

இம் மாநாட்டில் பங்கேற்பதில் மிக்க மகிழ்வடைகிறோம். மலேசியாவில் இருந்து பேராளர்கள் பலரும் பங்கேற்பது மகிழ்ச்சி.

எதிர்கால தேவை உணர்ந்து இம்மாநாடு வேண்டும். அதன் மூலம் தமிழர் ஒன்றிணைப்பை உறுதி செய்ய வேண்டும்.

மாநாடு வெற்றி பெற எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

கவோசன் தங்கவேலு

தலைமை செயல்முறை அதிகாரி

சமூக வியூக அரவாரியம்





13ஆம் ஆண்டு மாநாட்டு விழா வாழ்த்துச் செய்தி

தங்கத் தமிழை, தமிழ்ப்பண்பாட்டைத் தரணியெங்கும் தக்க வைத்து, நிரந்தரமாகப் பாதுகாத்து, அன்றிலிருந்து இன்றுவரை அரும்பணிகள் பல ஆற்றிவரும் அரசியல் சார்பற்ற ஒரேயொரு இயக்கம் எங்கள் உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கமாகும்.

சோர்வும், சுற்றமெரிக்கும் எச்சலையாக உழைத்துவரும் இந்த வேளை, 13ஆம் ஆண்டு மாநாடு ஈழ மண்ணில் இனிதே நடத்தப்படுவதையிட்டு நாம் மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம்.

மொழியால் பண்பாடும், பண்பாட்டினால் மொழியும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்களைச் செயற்பட்டு தமிழர் தம் அடையாளத்தைத் தக்க வைக்க, எமது இயக்கம் பணிகள் பலவற்றை (பல சவால்களின் மத்தியிலும்) ஆணித்தரமாகவும், அதேவேளை அமைதியாகவும் பணி புரிந்து வருகிறது.

உலகின் மூத்த குடி மக்களும், தமிழர்களும் முக்கிய இடத்தினை வகிக்கிறார்கள். அவர்கள் அன்று தொட்டு இன்று வரை தமது அடையாளத்தைத் தக்க வைக்க பெரும் முயற்சி எடுத்து வருகிறார்கள்.

இம்முயற்சியில் புலம்பெயர் வாழ் தமிழர்கள், எத்தனையோ சிரமங்களின் மத்தியிலும் பணிகள் ஆற்றி வருகிறார்கள். தமிழ்த் தாயின் தவப்புதல்வர்கள் பிரதேச வேறுபாடின்றி மலேசியா, சிங்கப்பூர், பிஜி, இந்தியா மற்றும் அவுஸ்திரேலியா போன்ற மேல் உலக நாடுகள், வட அமெரிக்கா ஆகிய 61 நாடுகளில் வாழ்பவர்களின் பங்களிப்பு வளமானது. அதனை நான் உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்க கனடாக் கிளையின் தலைவராகப் பணிபுரிந்த காலங்களில் நேரடியாகக் கண்டு மகிழ்ந்திருக்கின்றேன்.

தலைவர்கள் மாறினாலும், தன் பணி தமிழுக்கு மாறாது என்ற கோட்டிபாட்டின் கீழே அனைவரும் அரும்பணிகள் ஆற்றி ஒத்துழைப்போமாக!

சிவா கணபதிப்பிள்ளை
அகில உலக உபதலைவர்,
அமெரிக்க ஒன்றியத் தலைவர்
உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம்

R.K.R. அனந்தராமன்
அரசு கொறடா
புதுச்சேரி அரசு

தொ.பே. அலுவலகம் : 0413-2220602
கை.பே : 94432 65171



தேதி : 18 JUL 2017

வாழ்த்துச்செய்தி

உலகத் தமிழர்ப் பண்பாட்டு இயக்கம், யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்துடன் இணைந்து நடத்தும் 13-வது மாநாடு 2017 ஆகஸ்டு மாதம் 05 மற்றும் 06-ம் தேதிகளில் யாழ்பாணம் பல்கலைக்கழகத்தில் நடைபெற உள்ளதை அறிந்து அளவில்லா ஆனந்தமும், மகிழ்ச்சியும் அடைகிறேன்.

இன, மத வேறுபாடு இல்லாத கோட்பாடுகளை தனது தாரக மந்திரமாகக் கொண்டு தமிழ்ப் பண்பாட்டையும், தமிழ் மொழியையும் பேணி பாதுகாக்கும் முயற்சியில் ஈடுபட்டு வரும் உலகத் தமிழ்ப் பாண்பாட்டு இயக்கத்திற்கு எனது பாராட்டுதலை இத்தருணத்தில் கூறிக்கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

உலகெங்கும் வாழும் பல கல்வியாளர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள், கலை இலக்கியவாதிகள், நிறுவனங்களில் நிர்வாகப் பதவிகளை வகித்து வரும் செயற்பாட்டாளர்கள் என அனைத்து தரப்பினர்களின் ஆதரவுடன் உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் நடத்த இருக்கும் 13-வது பண்பாட்டு மாநாடு சிறப்புடன் நடைபெற என்னுடைய மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

அன்புடன்,

(R.K.R. அனந்தராமன்)

PERSATUAN TAMILAR SANGAM SUNGAI PETANI, KEDAH
No. 18, Jalan Pegawai, 08000 Sungai Petani, Kedah
தமிழர் சங்கம் சுங்கைப்பட்டாணி, கெடா
எண். 18, ஜாலான் பெகவாய், 08000 சுங்கைப்பட்டாணி, கெடா
No. Pendaftaran : 1568-10-KDH.

தலைவர் உரை

உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கம் இலங்கை கிளை நடத்தும் 13ஆவது மாநாடு 2017 ஆகஸ்டு மாதம் 05.06 தேதிகளில் நடை பெற இருப்பதை அறிந்து மிக்க மகிச்சியடைந்தேன்.

இதையொட்டி மாநாட்டு மலருக்கு வாழ்த்துச் செய்தி அனுப்புவதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.

இது தமிழர்கள் ஒன்று கூடும் விழா. பல நாடுகளிலிருந்து பேராளர்கள் வந்து, ஈழ மண் வாசனையை சுவாசிக்கவும் மொழி, பண்பாடு, பொருளாதாரம், கலாச்சாரம் போன்ற சிக்கலான பிரச்சனைகளை மனம் விட்டு பகிர்ந்து கொண்டு தீர்வுகான முடிந்தால், புதிய சிந்தனையோடு வீடு திரும்பலாம்.

நம் இனமும் மொழியும், பண்பாடும் மிகவும் பழைமையானது. மாற்றங்களால் மாறி வருகிறோம். இது மட்டும் அல்ல, நம் ஜன தொகையும் குறைந்துக் கொண்டு வருகிறது. இதை கவனிக்காவிட்டால் கால்ப்போக்கில், தமிழ் பேச கூடியவர்கள் குறைந்து விடுவார்கள். அதோடு நம் மொழி பேச்சிழந்த மொழியாகிவிடும். தமிழ் மொழி மறையக்கூடிய காலம் வரக்கூடாது என்று நாம் எல்லோரும் கவனம் செலுத்த வேண்டும்.

இந்த மாநாட்டில் இந்த பிரச்சனையையும் விவாதிக்கப்பட்டால் நன்றாயிருக்கும்.

மாநாடு சிறாப்புடன் நடைபெற என் பிராத்தனையும், வாழ்த்துக்களும்.

நன்றி, வணக்கம்.

அன்புடன்,



டத்தோ டாக்டர் சு. சுப்பிரமணியம்
தலைவர்
தமிழர் சங்கம்
சுங்கைப் பட்டாணி, கெடா
மலேசியா

திருமூலர்
Thirumoolar

PERSATUAN KEMAJUAN TAMILAR MALAYSIA
No. 18, Jalan Pegawai, 08000 Sungai Petani, Kedah
மலேசிய தமிழர் முன்னேற்றக் கழகம்
எண். 18. ஜாலான் பெகவாய், 08000 சுங்கைப்பட்டாணி, கெடா.
Reg No. PPM-005-02-10012-016

வாழ்த்துச் செய்தி

உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கம் இலங்கை கிளை ஏற்ப்பாட்டில் தனது 13ஆவது மாநாட்டினை 5, 6 தேதிகளில் ஆகஸ்டு மாதம் 2017 ஆம் ஆண்டில் நடைபெற உள்ளதற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

சுடர் விளக்காயினும் தூண்டுகோல் வேண்டும் என்பதற்கொப்ப இது போன்ற மாநாடுகள் அவசியம் தேவை. மாநாடு தமிழர்களது தொன்மை உணர்வினை தூண்டுவதாக அமைய வேண்டும். பண்பாட்டு விழிப்புணர்ச்சியைத் தமிழர்களிடையே தட்டி எழுப்புவதாக இருக்க வேண்டும். பல நாடுகளில் வாழும் தமிழர்களிடையே புரிந்துணர்வையும், ஒற்றுமையும் வலிமை பெற உதவ வேண்டும். இம் மாநாட்டின் மூலம் நாட்டின் சுற்றுலாத் தூரை வளர்ச்சியடைந்து, பொருளாதாரமும் முன்னேற்றமடையும்.

ஈழத் தமிழர்கள் புலம் பெயர்ந்து பல நாடுகளில் வளமுடன் வாழ்ந்து வருகின்றனர். அவர்களிடையே தமிழ் உணர்வு மித மிஞ்சி உள்ளது. இத்தகு மாநாடுகள் மூலம் நம் பண்பாட்டினையும் தொன்மையினையும் புதுபித்துக் கொள்ள முடியும். நம்மிடையே பண்பாட்டுச் சிதைவுகள் பெருகிவரும் இக்கால கட்டத்தில் இம்மாநாடு நடைபெறுவது சாலச் சிறந்தது.

இம்மாநாடு அனைத்து நிலையிலும் வெற்றிபெற என் நெஞ்சார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்புடன்,

டத்தின் தாமரைச் செல்வி சுப்பிரமணியம்
தலைவர்
மலேசிய தமிழர் முன்னேற்றக் கழகம்
தொலைப்பேசி எண் : 010-5207663





வாழ்த்துச் செய்தி

இலங்கையில் யாழ்ப்பாணத்தில் 1974-ஆம் ஆண்டு உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது. மீண்டும் 43 ஆண்டுகளுக்குப் பிறகு ஆரம்பிக்கப்பட்ட இடத்திலேயே நடைபெறும் 13-ஆவது மாநாட்டுக்கு வாழ்த்துச் செய்தி அனுப்புவதில் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

எமது தந்தையார் இர.ந.வீரப்பன் அவர்களின் அரிய முயற்சியால் உலகம் முழுவதும் பரந்து விரிந்த இவ்வியக்கம் தொடர்ந்து அன்னாரின் வழிதடத்தில் செல்ல இம்மாநாடு பெரிதும் வழிவகுக்கும் என்று எண்ணுகிறேன்.

உலகமெங்கும் புலம் பெயர்ந்து வாழும் எமது தமிழ் மக்கள் உயர்ந்த எம் பண்பாட்டினைப் பேண வேண்டும். எம் பண்பாட்டின் பெருமைகளையும் சிறப்புகளையும் உலகமெங்கும் பரப்பவேண்டும். அதற்கு இம்மாநாடு பெரிதும் உதவியாக இருக்கும் என்று நம்புகிறேன்.

இந்த 13-ஆவது மாநாடு எல்லா வகையிலும் சிறப்பாக நடைபெறவும் வெற்றி பெறவும் தமிழர் மாண்பு சீர்பெறவும் எனது இதயங்கனிந்த நல்வாழ்த்துக்கள் உரித்தாகுக!

வாழ்க தமிழ்!

வளர்க தமிழ்!

அன்புடன்,

வீ.பொன்னி

வீ.பொன்னி கணேசன்

(மறைந்த பேராசிரியர்
இர.ந.வீரப்பனாரின் புதல்வி)



மாநாட்டின் ஊடகத்துறை பொறுப்பாளர்
தே. செந்தில்வேலவர் அவர்களது
வாழ்த்துச் செய்தி

எமது இலங்கைத் திருநாட்டின் யாழ் மண்ணில் நடைபெறும் உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் 13 ஆவது சர்வதேச மாநாடு தொடர்பாக வெளியிடப்படும் சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தியினை வழங்குவதையிட்டு நான் அளவற்ற மகிழ்வும் அத்துடன் பெருமையும் கொள்கின்றேன்.

1974 ஆம் ஆண்டு இதே யாழ் மண்ணில் இடம்பெற்ற இரத்தம் சிந்திய உலகத் தமிழாராச்சி மாநாட்டின் பின்னரான அதே காலப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட இந்த இயக்கத்தின் பணிகள் தாயக உறவுகளின் பங்களிப்புடன் தமிழர்கள் வாழும் நாடுகளின் ஆதரவுடனும் புலம்பெயர் நாடுகளில் எமது சொந்தங்களால் மிகவும் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றமையை நாம் அறிவோம். கடந்த 35 வருட காலப்பகுதியில் இலங்கையில் தமிழ் மக்கள் பட்ட துன்ப துயரங்களை வார்த்தைகளால் வர்ணிக்க முடியாது. இன்றுதான் ஏதோ மூச்சுக் காற்றையாவது சற்றுச் சுதந்திரமாக விடக் கூடிய-தான ஒரு சூழல் உருவாகியுள்ளது.

இலங்கையில் முப்பது வருட காலமாக இடம்பெற்ற யுத்தம் காரணமாக தமிழ் மக்களது உயிர்களும், உடமைகளும், பாரம்பரிய சொத்துக்களும் அழிக்கப்பட்டபோதிலும் இலங்கைத் தமிழர்கள் தமது அடையாளத்தையும், கௌரவத்தையும், தன்மானத்தையும் இழக்காது தமது கலை கலாசார பாரம்பரியங்களை பேணிப்பாதுகாத்து வந்துள்ளனர். அதற்கு உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் போன்ற அரசியல் கலப்படமில்லாத அமைப்புக்களே பிரதான காரணமாக இருந்து வருகின்றன.

அந்தவகையில் தாயக மண்ணின் பெருமைகளை புலம்பெயர் தேசங்களில் விழாக்கள் மற்றும் மாநாடுகள் மூலமாக எடுத்துக் கூறி வருகின்ற உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் இந்த வருடம் மீண்டும் தாயகத்தில் தனது கால்களைப் பதித்து சொந்த மண்ணில் சொந்த உறவுக-ளுடன் தமிழர்கள் வாழும் நாடுகளின் பிரதிநிதிகளுடன் ஒரு பிரமாண்டமான மாநாட்டினை நடத்த முன்வந்துள்ளது. இது அந்த இயக்கத்தின் 13 ஆவது சர்வதேச மாநாடாக அமைகிறது.

ஜேர்மன், மலேசியா, இந்தியா போன்ற நாடுகளில் இடம்பெற்ற மாநாடுகளில் கலந்து கொண்டபோது அந்நாடுகளில் வாழும் தமிழ் மக்கள் இந்த இயக்கத்தின் செயற்பாடுகளில் காட்டிவரும் ஆர்வம் குறித்து நான் ஆச்சரியப்பட்டதுண்டு. அந்தளவிற்கு ஒரு கட்டுக் கோப்புடன் இயக்கம் என்ற அடைமொழிக்கு அமைய அதன் உறுப்பினர்கள் ஒற்றுமையுன் செயற்பட்டு வருகின்றமையை நான் பாராட்டுகின்றேன். இலங்கையிலும் யுத்த காலத்திலும்கூட பலவிதமான கெடுபிடிகளுக்கு மத்தியிலும் இந்த இயக்கத்தின் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வந்துள்ளன. அந்தவகையல் இலங்கைக் கிளையுடன் இணைந்து இம்மாநாடு நடைபெறுகிறது.

இலங்கையில் நடைபெறவுள்ள மாநாட்டிற்கு இராஜாங்க அமைச்சர் கௌரவ. ஆா. இராதாகிருஸ்ணன் சிறப்புத் தலைவராகவும், மாநாட்டின் தலைவராக இந்திய பாண்டிச்சேரி பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் திரு. பஞ்ச் இராமலிங்கள் அவர்களும் உள்ளமை மாநாட்டிற்கு பெருமை சேர்ப்பதாக உள்ளது. அத்துடன் இந்த இயக்கத்தின் செயலாளர் நாயகமாக கடந்த 25 வருட காலமாக இருந்து அதனை இயக்கிவரும் அண்ணன் திரு. துரை கணேசலிங்கம் அவர்களை நான் விசேடமாக பாராட்டுகின்றேன். அவர் இன்னும் பல வருடங்கள் இதன் செயலாளராக இருந்து இந்த இயக்கத்தை வழிநடத்த இறைவன் அவருக்கு சகலவிதமான சௌபாக்கியங்களையும் அருள வேண்டும் எனப் பிரார்த்தித்து இம்மாநாடு சிறப்பாக வெற்றியுடன் நடைபெற எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நன்றி, வணக்கம்.

தே. செந்தில்வேலவர்
பிரதம ஆசிரியர்
தினகரன் இலங்கை
இலங்கை மாநாட்டிற்கான ஊடகத்துறை பொறுப்பாளர்



தரணியெங்கும் தங்கத்தமிழ் வளரட்டும்

- அறிஞர் சாமி அப்பாத்துரை -

கல்தோன்றி மண்தோன்ற முன்பு தமிழன் நாகரீகம் படைத்தான். அது எப்படி? கற்காலத்தில் உலகே உறங்கிக் கிடக்கும் போது, அறிவைத் தீட்டி குமரிகண்டமதில் மனிதகுல மூத்த நாகரீகம் படைத்தவன் தமிழன்.

ஏனைய நாகரீகங்கள் கற்காலம் கடந்து வேளாண்மையை மண்ணில் செய்யும் போதே எகிப்தில், பபிலோனியாவில், மொகஞ்சுதாரே - கரப்பாவில் சீனால் படைத்தான். அதனால் தான் கல் தோன்றியதென்பது கற்காலம், மண் தோன்றியதென்பது. வேளாண்மையை அதிவெட்பம், அதிகுளிர் கொடுமைகள் இல்லாத இங்கிதமான நடுவலயத்தில் படைத்தான்.

தரணிக்கு நாகரீகம் தந்து அறிவியலால், தரணி ஆண்டவன் தமிழன். காலத்தால் மூத்த நாகரீகம் தனத்தால் நிறைவான நாகரீகம், பல்துறைசார் வளம் மிக்க நாகரீகம் முக்காலத்திலும் முழுமையாக வாழும் நாகரீகம்.

தங்கத்தமிழன் வரலாற்று காலங்களெல்லாம் ஒடுக்கப்பட்டு, நசுக்கப்பட்டு, உதைக்கப்பட்டு, வதைக்கப்பட்டு, ஒரங்கட்டப்பட்ட அவல நிலைகளை காணும் காலங்களிலெல்லாம் தன் மொழியை, பண்பாட்டினைப் பேணிப் பாதுகாத்துத் தந்திருக்கிறான்.

அத்தகைய வைராக்கியம் மிக்க தமிழன் கொடிகட்டிப் பறந்த காலமெல்லாம் வண்டமிழை வாட்ட சாட்டமாக வளர்த்தெடுத்திருக்கிறான். அதானல் தான் இன்றும் பர்மா, லாகோஸ், மலேசியா, இந்தோனிசியா, கம்போடியா, கொறியா, யப்பான் வரை அதன் சாயல் இளையோடிக் காணப்படுகிறது.

மேற்கே தமிழன் செல்வாக்கு ஆபிரிக்க கண்டம் வரை சென்றிருக்கிறது. அங்கும் "வா", "முழு", அப்பாத்துரை என பல தமிழ்ச் சொற்கள் இன்றும் வழக்கில் காணப்படுகின்றன.

ஐரோப்பியர் அடக்குமுறை காலங்களில் தமிழர் பிஜி தீவு தொட்டு கயனா வரை கூலிகளாக எடுத்துச் செல்லப்பட்டு, தமிழர் தம் அடையாளத்தை வேண்டுமென்றே சிதைத்தனர். மறைமுகமாக ஆங்கில, பிரெஞ்சு, இஸ்பானிய மொழி மட்டும் தெரிந்தவர்கள் எனும் நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

திரை கடல் ஓடி திரவியம் தேடியதோடு மட்டுமல்லாமல், மத்தியகிழக்கு, சொலமன் மன்னனுக்குத் திரவியங்கள் வழங்கி முடிசூட்டு விழாவை கௌரவித்தனர். மலேசிய மன்னருக்கு ஆலோசனை வழங்கி கோன்முறை ஆட்சிக்கு உதவினர். சின்சியாரில் கப்பல் கட்டிக் கொடுத்தனர். சோழ மன்னரது படைவீரர் இந்தோனிசியாவில் குடியமர்ந்து பேச்சு வழக்கிலிருந்த மொழியை எழுத்து வடிவம் கொடுத்து வளர்த்தனர்.

இன்று புலம் பெயர்ந்த தமிழன் தரணியில் சுமார் எழுபது நாடுகளில் வளருகிறான், வாழுகின்றான், வளம் பல பெறுகிறான். இந்நிலையில் தமிழன் வளர்வதால் தமிழும் அவனொடு வளரும் என்பதிற்கு உத்தரவாதமில்லை. தமிழன் நொந்து இருக்கும் போது தமிழ் செல்வச் செழிப்பாக வளர்ந்தது. சுமார் முப்பது ஆண்டுகளுக்கு முன்பு தமிழன் தமிழகத்தில் வாட்ட சாட்டமாக வளர்ந்திருந்தான். செல்வம்மிக்கவர்கள், செல்வாக்குக் கொண்ட தமிழரில் சிலர் எதற்குத் தமிழ்? எந்தளவுக்கு தமிழ் எனவும் கூறினர். ஆங்கிலமோகம் அரியாசனம் ஏறியது. அவ்வேளை சேரிப்புறங்களில் வாழும் பல தமிழர் தமிழை இதய கமலம் அரியாசனத்தில் ஏற்றிப் போற்றினர்.

இன்று புலம் பெயர் தமிழர்கள் புகுந்தகங்களில் வேரூன்றி வருகிறார்கள். அவர்கள் இரண்டாம் மூன்றாம் சந்ததியினரில் சுமார் முப்பது வீதமானவர்களே தமிழை எழுத வாசிக்கக் கற்று வருகிறார்கள். இது ஒன்றும் தமிழுக்கு ஏற்பட்ட சாபக்கேடு அல்ல. நான் வட அமெரிக்காவில் இருபதுக்கு மேற்பட்ட சிறுபான்மை பல மொழி பேசுபவர்களிடம் ஆராய்ந்து பார்த்தேன். இதே கதிதான் அங்கும்.

இங்கு தமிழ் மொழி கல்வி புகட்டுபவர்களில் தமிழ் ஆர்வம், தமிழ் புலமை பாராட்டத்தக்கது. ஆனால் நவீன மொழியியல் கல்வி கோட்பாடுகளின் அடிப்படையில் எம் பிள்ளைகளுக்கு இங்கு தமிழ் இரண்டாம் மொழியே தவிர முதல் மொழி தாய்மொழி நிலையில் இல்லாது இருப்பது உண்மையான நிலைப்பாடு. இது பற்றி கடந்த முப்பதாண்டுகளாக குறிப்பிட்டு வருகிறேன். இங்கு தமிழைக் கற்பிப்பவர்கள் தமிழை இரண்டாம் மொழியாக முதல் மொழி சூழலில் கற்பிக்கும் முறைகளை பின்பற்ற வேண்டிய அவசியம் இருக்கிறது.

புலம் பெயர் தமிழருக்கு தாயகத் தமிழருக்கு இல்லாத பரந்து பட்ட வாய்ப்பாக பல்லினமக்கள் மத்தியில் தமிழன் பெருமையை, தொன்மையை, இனத்தைப் பக்குவமாக பிறமொழிகளில் ஆக்கி உலகத்திற்கு உணர்த்த முடியும். உணர்த்த வேண்டும்.

இத்தகைய பல தமிழ்ப் பணிகளில் "உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கம்" கடந்த ஒரு சகாப்தத்திற்கு மேலாக தரணித்தமிழன் திறன் கண்டு, வளர்க்க அயராது உழைத்து வருகிறது. அவர்கள் பல்துறை பணிகள் சிறக்க என் இதயங்கனிந்த வாழ்த்துக்கள்.

தரணியாண்ட தமிழன் மீண்டும்(அறிவியலால்) தரணியாழுவான்.

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம்
INTERNATIONAL MOVEMENT FOR TAMIL CULTURE

Non-Profit, Non-Political, Non-Religious, Charitable, Worldwide Registred, Tamil Cultural Organization - Est. in 1974

Head Office 5310 Finch Ave. East, Unit #10, Toronto, Ontario M1S 5E8
Tel: 1.647.829.4044 email: raja@cfsgino.com
www.imtcweb.com

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம், பிரித்தானியா
10 Palmerston Road Harrow Middlesex HA3 7FA Tel: 00447956 486014

PRESIDENT: A.F.ILANCHELIAN — SECRETARY: RAMALINGAM BALENDRANATHAN
VICE PRESIDENT: SINNATHURAI SRIVAS — TREASURER: MURUGESU THANGARAJA

Mr. Adaikalamuthu Ilanchelian
President

Mr. Ramalingam Balendranathan
Secretary

Mr. Sinnathurai Srivas
Vice President

Mr. Murugesu Thangarajah
Treasurer

Committee Members
Dr. Arumugarajah
Mr. V.varathakumar
Mrs. Gowri Kannapiran
Mr. N. Sivaganeshan
Mr. P. Sathyaseelan
Mr. Varatharajah
Mr. Nadarajah Kannappu

வாழ்த்துச் செய்தி

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் 13ஆவது உலக மாநாடு இலங்கையின் கலாச்சாரத் தலைநகரில் யாழ்ப்பாணத்தில் நடைபெறுவதையிட்டு மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். 1974ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இவ்வியக்கம் 43 ஆண்டு கால வரலாற்றையுடையது.

அகில உலகெங்கும் அகலக் கால்பதித்து 41 நாடுகளில் இயங்கிவருவதும் தமிழர் நாம் பெருமை கொள்ளத்தக்கது. 4வது உலகத் தமிழாராட்சி மாநாடு இலங்கையின் வடப்பகுதியாகிய யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற வேளையில், தோற்றுவிக்கப்பட்ட உலகத் தமிழர் பண்பாட்டு இயக்கம், தமிழர்தம் பண்பாட்டு விழுமியங்களைப் பேண அரும்பணி செய்து வருவது கண்கூடு. இத்தகைய வளர்ச்சிக்கு அனைத்து வகையிலும் பங்களிப்புச் செய்து வளர்த்தெடுத்த அனைத்து அன்புத் தமிழ் நெஞ்சங்களுக்கும் எனது மனமார்ந்த வாழ்த்தினை காணிக்கையாக்குகின்றேன்.

எத்தனையோ இடர்களையும் சவால்களையும் எதிர்கொண்டு வெற்றிப் பாதையில் இயங்கிவரும் எமது உலகத் தமிழர் பண்பாட இயக்கம் தமிழர்களை ஒன்றிணைப்பதால் வெற்றியும் கண்டுள்ளது. "தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவச் செய்து கடந்த நான்கு சகாப்த காலத்திற்குமேல் தமிழர்களின் கலாச்சார விழுமியங்களை பேணிப் பாதுகாத்து அனைவரையும் ஒரு கொடியின்கீழ் இணைத்து "உண்மை வழியில் உலகம் போற்ற" மேன்மேலும் பணியாற்றிட வேண்டும். தாயகத்தில் கடந்த மூன்று சகாப்த காலமாக இடம்பெற்ற போர் முடிவடைந்த நிலையில் 08.01.1974-ம் ஆண்டு அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட இவ்வியக்கம் மீண்டும் தாயக மண்ணினில் தனது உலகத் தமிழர் பண்பாட்டு இயக்கத்தின் 13வது உலகத் தமிழர் மாநாட்டினை நடாத்துவதும் நமக்கெல்லாம்ம ஓர்

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம்
INTERNATIONAL MOVEMENT FOR TAMIL CULTURE
Non-Profit, Non-Political, Non-Religious, Charitable, Worldwide Registred, tamil Cultural Organization - Est. in 1974
Head Office 5310 Finch Ave. East, Unit #10, Toronto, Ontario M1S 5E8
Tel: 1.647.829.4044 email: raja@cfsginc.com
www.imtcweb.com

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம், பிரித்தானியா
10 Palmerston Road Harrow Middlesex HA3 7FA Tel: 00447956 486014
PRESIDENT: A.F.ILANCHELIAN SECRETARY: RAMALINGAM BALENDRANATHAN
VICE PRESIDENT: SINNATHURAI SRIVAS TREASURER: MURUGESU THANGARAJA

Mr. Adaikalamuthu Ilanchelian
President

Mr. Ramalingam Balendranathan
Secretary

Mr. Sinnathurai Srivas
Vice President

Mr. Murugesu Thangarajah
Treasurer

Committee Members
Dr. Arumugarajah
Mr. V.varathakumar
Mrs. Gowri Kannapiran
Mr. N. Sivaganeshan
Mr. P. Sathyaseelan
Mr. Varatharajah
Mr. Nadarajah Kannappu

பெருமைக்குரியதே. இவ்வியக்கம் இதுவரை கனடாவைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கி வருகின்ற வேளை எதிர் காலத்தில் தலைமையகம் யாழ்ப்பாணத்தில் அமையவிருப்பதும் அதற்கு கடந்த உலக மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றியமைக்கும் அத்துணை நல் நெஞ்சங்களுக்கும், என் மனமார்ந்த வாழ்த்தினை தெரிவித்துக் கொள்கிறேன். நமது நாட்டில் சிதைந்துபோன கலாச்சாரத்தையும் விழுமியங்களையும் பாதுகாத்து, நலிவுற்ற நிலையிலிருக்கும் எமது வருங்கால சந்ததியினராகிய இளைஞர்கள் நல்வழிப்படுத்தி அவர்களுக்கான கல்வி அபிவிருத்தியிலும், சுயதொழில் முயற்ச்சிக்குமாக நடைபெறவுள்ள மாநாட்டில் செயற்திட்டங்கள் முன்மொழிந்து, தாழ்ந்த எம் இனத்தை மீண்டும் தலைநிமிரச் செய்து தொடர்ந்தும் உலகத் தமிழர் பண்பாட்டு இயக்கம் ஆதரவு நல்க வேண்டுமென எனது பணிவான வேண்டுகோளையும் தெரிவித்து

சிந்திப்போம்,
செயற்படுவோம்,
வாழ்க!
வளர்க!
வெற்றிநமதே,

அன்புடன்
இரா. பாலேந்திரநாதன்

இராமலிங்கம் பாலேந்திரநாதன்
(திருமலை பாலா)
செயலாளர்
உலகத்தமிழர் பண்பாட்டு இயக்கம்
பிரித்தானியா

CANADIAN GOVERNMENT REGISTRATION NUMBER: 377158-1
BANK: Canadian Imperial Bank of Canada (CIBC)
480 Progress Ave Unit-11
Scarborough Ontario M1P 5J1
416.291.8588
Account #: 01782-2314118

PRESIDENT (HEAD OFFICE)
V. S. Thurakajah
5310 Finch Ave East Unit-10
Toronto Ontario M1S 5E8
Canada
Tel: (416) 546.7500
cell: (647) 829.4044

SECRETARY GENERALS OFFICE
Mr. Thurai Ganesalingam
Borzbergener Str. 142
48431 Rheine
Germany
Tel/Fax: (49) 59.711.4258
email: imtc1974@yahoo.com

TRESURER GENERAL
Mr. S. Sivarajasingam
Butchen Str. 21
4900 Langenthal
Switzerland
Tel: (0041) 62.929.0578
Cell: (0041) 78.902.0437

IMTC have representatives in 42 countries
IMTC project site under construction at Maruthanagar, Karachchi, Kilinochchi (Sri Lanka)



அனைத்துலக ஒருங்கிணைப்பாளர்கள்
திரு. வி.கு. துரைராஜா, கனடா
raja@cfsginc.com
திரு துரை. கனேசலிங்கம், ஐரோப்பா
imtc1974@yahoo.com
பேராசிரியர் சீ. இராமமூர்த்தி, இந்தியா
கலாநிதி சத்தியமூர்த்தி, இலங்கை
மாநாட்டு ஒருங்கிணைப்பாளர்
திரு தம்பிமுத்து குருதுலராஜா
(வட மாகாணக் கல்வி கலாச்சார விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சர்)
மாநாட்டு ஆலோசகர்கள்
திரு. சோ. தங்கராசா, பேர்மனி
தமிழ்த்திரு. ம. செல்வின், இலங்கை
மாநாட்டுத் தலைவர்
கலாநிதி பாஞ். இராமலிங்கம், இந்தியா
imtcindia2015@gmail.com
மாநாட்டுத் துணைத்தலைவர்
திரு. இ. இராஜசூரியர், பேர்மனி
imtc.rsoori@gmail.com
மாநாட்டுச் செயலாளர்
திரு. சு. பிரசாந்தன், இலங்கை
artpirasa@gmail.com
மாநாட்டு நீதி பொறுப்பாளர்கள்
திரு. மா. இரவிச்சந்திரன், கனடா
திரு. அ. கோசவமூர்த்தி, இலங்கை
மாநாட்டு ஊடகப் பொறுப்பாளர்
திரு. நே. செந்தில் வேலவர், இலங்கை
மாநாட்டு வரவேற்பு குழு
திரு. கு. தியாகலிங்கம், நோர்வே
திரு. கு. பிரதீப்குமார், இலங்கை
கலை பண்பாடு
திரு. அ. சத்தியானந்தம், இலங்கை
மலர்க் குழு
பேராசிரியர் சோ. சண்முகலிங்கம், இலங்கை
திருமதி நிருபவா ராஜ்குமார், சென்னை
முனைவர் போ. சத்தியமூர்த்தி, மதுரை
பண்ணாட்டுப் பேராளர் குழு
தமிழ்த்திரு. கு. சுபாஸ்கரன், பிரான்ஸ்
தமிழ்த்திரு. சிவா கணபதிப்பிள்ளை, அமெரிக்கா
தமிழ்த்திரு. விக்கி விக்கிரமசிங்கம், அவுஸ்திரேலியா
திருமதி மு. தர்மகுமார், தென்னாப்பிரிக்கா
தமிழ்த்திரு. செ. சிவராஜசிங்கம், சுவிற்சர்லாந்து
தமிழ்த்திரு. அ. இளஞ்செழியன், பிரித்தானியா
திருமதி மாலதி ராஜவேலு, புதுச்சேரி, இந்தியா
திரு. குணபதி ஆறுமுகம், மலேசியா
கவிஞர் இலியாஸ், சிங்கப்பூர்

வாழ்த்துச் செய்தி



உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் 13வது சர்வதேச மாநாடு இலங்கைத் தீவின் தமிழர் தலைநகராம் யாழ்ப்பாணத்தில் நடைபெறும் இவ்வேளையில் மாநாடு சிறப்புற நடைபெற நோர்வே நாட்டில் வாழும் சுமார் 18000 தமிழர்கள் சார்பாக வாழ்த்துவதில் மகிழ்வடைகின்றேன்.

பல்வேறு காரணங்களால் உலகெங்கும் சிதறியும் பரந்தும் வாழுகின்ற தமிழர்களை பண்பாட்டு பாரம்பரியம் என்னும் ஒரு குடைக்குள் இணைக்கும் நிறுவனமாக உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கம் பணியாற்றுகின்றது.

பல தலைமுறைகள் தாண்டியும், காலதேசவர்த்தமானங்களைக் கடந்ததாகவும் நிலைத்து நிற்கும் பழந்தமிழர் பண்பாட்டினை புதிய தலைமுறைக்கும் நவீனத்துவ அறிவியல் மாற்றங்களுக்கும் வாழ்வியல் தேவைகளுக்கும், பல்வேறுவிதமான அரசியல் மற்றும் சமூகவியல் மாற்றங்களுக்கும் ஈடுகொடுக்கக் கூடியதாக வளம்படுத்துவதே உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் முதன்மையான குறிக்கோளாகும்.

இவ் உன்னத பணியின் ஒரு செயற்பாடுதான் சர்வதேச மாநாடு. தமிழர் தாயகத்தில் தான் கருவாகி, உருவாகிய தாய்மண்ணில் தனது 43வது அகவையில் தனது சர்வதேச மாநாட்டினை நடாத்துவது பெருமை தரும் விடயமாகும், எனினும் அதிக சவால்கள் நிறைந்த இலக்காகவும் இது அமைந்துள்ளதென்பது எனது நேரடி அனுபவமாக உள்ளது.

கொடிய யுத்தத்தின் வாடையும், மானிடத்துயரங்களும், இடப்பெயர்வும், ஏதிலி வாழ்வும், உறவுகளைக் தேடிக்காத்திருத்தலும் நீண்டு கொண்டிருக்கும் தாயகச் சூழலில் உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் சர்வதேச மாநாடு தேவைதானா என்ற வினாவும் நாம் அறியாதது அல்ல.

இது ஒரு நம்பிக்கையூட்டும் சிறு முயற்சியே. உலகெங்கும் பரந்து வாழும் பல கோடித் தமிழ் மக்களின் நெஞ்சங்கள் மட்டுமல்ல நேயக்கரங்களும் தமிழ்ப் பண்பாட்டு வேர்களாகவும் விழுதுகளாகவும் உங்களைத் தாங்கும் என்ற வீரியம் மிக்க செய்தியின் தொடக்கமாக இம் மாநாடு சிறப்புற அமைய எனது நெஞ்சார்ந்த வாழ்த்துக்கள்...

வாழ்க தமிழ். வளர்க தமிழ் பண்பாடு

தமிழ்த் திரு சு.தியாகலிங்கம்
தலைவர், உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கம்
நோர்வே
துணைத்தலைவர் அகிலம்
2017 ஆவணி



சிறப்பு தலைவர்
கௌரவ. வேலுச்சாமி இராதகிருஷ்ணன்
கல்வி இராஜங்க அமைச்சர் - இலங்கை

ஒருங்கிணைப்பாளர்
கௌரவ தம்பிராசா குருகுலராஜா
மகாணசபை உறுப்பினர்
வடமாகாணம்.

அனைத்துலக ஒருங்கிணைப்பாளர்கள்
தமிழ்நிரு.வி.க. துரைராஜா - கனடா
raja@cfsginc.com
தமிழ்திரு. துரை.கணேசலிங்கம் -ஐரோப்பா
imtc1974@yahoo.com
போராசிரியர் சி. இராமமூர்த்தி - இந்தியா
முனைவர் வெ.மு.சேதுராமன் - இந்தியா
திரு. லோகன் லோகேந்திரலிங்கம் - கனடா
திரு. நடா ராஜ்குமார் - கனடா
திரு. கு. தியாகலிங்கம் - நோர்வே

ஆலோசகர்
திரு. மாவை. சோ. தங்கராஜா - ஜேர்மனி

தலைவர்
கலாநிதி. பாஞ். இராமலிங்கம் - இந்தியா
imtcindia2015@gmail.com
துணைத்தலைவர்
திரு. இ. இராஜசூரியர் - ஜேர்மனி
imtc.rsoori@gmail.com

செயலாளர்
திரு. க. பிரசாந்தன் - இலங்கை
artpirasa@gmail.com
துணைச்செயலாளர்
திரு. மு. பிரதீபகுமார் இலங்கை
நிருவாகச் செயலாளர்
புலவர். திரு. கி.பேர்னஸ் அல்ஸ்ரன் - ஜேர்மனி
alston@hotmail.de

நிதிப் பொறுப்பாளர்
திரு.ஆ. கேசவானந்தமூர்த்தி - இலங்கை
துணை நிதிப் பொறுப்பாளர்கள்
திரு. மா இரவிச்சந்திரன் - கனடா
திரு. அ. சிவகரன் - ஜேர்மனி

ஊடகத்துறைப் பொறுப்பாளர்
திரு. தே. செந்தில்வேலவர் - இலங்கை

ஆராச்சி
போராசிரியர் .....
யாழ்ப்பாண பல்கலைக் கழகம்

மலர்க்குழு
திருமதி. நிருபனா ராஜ்குமார் - சென்னை
முனைவர் போ. சத்தியமூர்த்தி - மதுரை

கலை பண்பாடு
திரு. அ. சத்தியானந்தம் - இலங்கை
பன்னாட்டுப் போராளர்குழு
திரு. சிவா கனபதிப்பிள்ளை - அமெரிக்கா
திரு. விக்கி விக்கிரமசிங்கம் - அவுஸ்திரேலியா
திரு. செ. சிவராஜசிங்கம் - சுவிஸ்
திரு. அ. இளஞ்செழியன் - பிரித்தானியா
திருமதி மாலதி இராஜவேலு - இந்தியா
திரு. குணபதி ஆறுமுகம் - மலேசியா
கவிஞர் இலியாஸ் - சிங்கப்பூர்
திரு. க. அபாஸ்கரன் - பிரான்ஸ்

2017/ஆடி/10

திரு. கு. பிரசாந்தன்
இலங்கை
0094772208371



செயலாளரின் வாழ்த்துச் செய்தி

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் 43 ஆண்டுகால வயர்ச்சியின் பெருமிதத்தின் நின்று தனது 13ஆவது மாநாட்டினை பண்பாட்டு இயக்கம் பிறந்த தாய்நிலத்தில் கொண்டாடுவதனை கண்டு மகிழ்வடைகின்றோம். தமிழர்கள் மொழி மற்றும் பண்பாடு சார்ந்து நீண்ட தேடலும் அதற்கான போரட்டங்களும் எம்நிலத்தில் இன்றும் தொடர்கின்ற செயற்பாட்டுநிலைகளாகவே காண்கின்றோம். உலகத்தமிழர்களை தமிழர்களை மொழியாலும் பண்பாட்டலும் ஒருங்கிணைக்கும் காலத்தின் கடமையினை உலகளாவிய நிலையில் நின்று பணியாற்றும் அமைப்பு என்பதில் பெருமிதம் கொள்கின்றோம். இவ்வாண்டு தமிழர் பண்பாட்டின் அடிவேர்களை தாங்கி நிற்கும் இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணங்களில் பாரம்பரிய வாழ்வியல் பண்பாடு கொண்ட யாழ்ப்பாணத்தில் உலகத்தமிழ் பண்பாட்டு மகாநாடு நடைபெறுவது காலத்தில் பதிவாகின்றது.

தமிழர்களில் அறிவும் திறன்களும் மனப்பாங்கும் தமிழர்களை வாழ்வதற்கான அடிப்படைகளை தேடுதலும் அடுத்த தலைமுறைக்கு கடத்துதலும் காலத்தின் கட்டாயமாகின்றது. நவீனத்துவத்தின் நுகர்வோராக வாழும் நிலைமாறி நவீனத்துவ வெளியில் எமதடையாளங்களை உலகறிய பாடுபடுதல் சமகால தேவையாகின்றது. எனவேதான் வாழ்வுரிமைக்கான நீண்ட போரட்டங்களில் முனைப்புடன் ஈடுபடும் மக்களின் பிரதிபலிப்புக்களாக மகாநாடு வெற்றியடைய இலங்கைக் கிளை சார்பாக வாழ்த்துக்களை தெரிவித்து நிற்கின்றோம்.

கு.பிரசாந்தன்
செயலாளர்
உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம்
இலங்கை

பாக்கியசெல்வம் - அரியநேத்திரன் - (அரியம்)
மட்டக்களப்பு மாவட்ட தமிழ்தேசிய கூட்டமைப்பு,

ஈழத்தின் விடியலுக்குஉலகதமிழர் மாநாடு உறுதுணைபுரியட்டும். ஈழத்திருநாட்டில் கடந்த 1974ம் ஆண்டு ஜனவரி மாதம் 3,ம்திகதி யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் தமிழாராய்ச்சி மாநாடு ஆரம்பமாகி 1974 ஜனவரி 10,ம் திகதி வரை ஏழு தினங்கள் அந்த மாநாடு இடம்பெற்றபோது இறுதி நாளான (10/01/1974)அன்று தமிழராய்ச்சி மாநாடு முடியும் தறுவாயில் அப்போது பிரதமராக இருந்த ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் ஆட்சிக்காலத்தில் அரச படையினரால் மாநாட்டில் பேராளராக கலந்துகொண்ட ஒன்பது (9) தமிழர்கள் சுட்டுக்கொலை செய்யப்பட்டனர். வரலாற்றுமுக்கியத்துவம்வாய்ந்த அந்த மாதநாட்டு மண்டபம் தமிழர்களின் குருதியால் இலங்கைநாட்டின் இனவாத போர்முகத்தை உலகத்தலைவர்களின் கவனத்துக்கு கோடிட்டுக்காட்டியதுடன் உலகத் தமிழர்களின் உணர்வுகளுக்கும் சோகம் ஈர்த்த ஒரு மாநாடாகமாறியது. அந்த மாநாட்டில் தான் "உலகத்தமிழர் பண்பாட்டு இயக்கம்"எனும் அமைப்பு உதயமாகி இன்று 43,வருடங்களை கடந்து நிற்கின்றது.

இந்த 13,வது உலகத்தமிழர் மாநாடு ஈழத்தில் யாழ்பாணத்தில் வெகுசிறப்பாக இடம்பெறுவதையிட்டு மனம் ஒருவகையில் மகிழ்சியடைந்தாலும் கடந்த 43,வருடங்களை ஒருதடவை மீட்டிப்பார்கவேண்டிய கடமை ஒவ்வொரு தமிழருக்கும் உள்ளது. சோகம்,வீரம், தியாகம்,துரோகம்,சாதனை,வேதனை.சோதனை,விவேகம்,வெற்றி,தோல்வி,அவலம்,அவமான ம்,இடம்பெயர்வு,புலம்பெயர்வு,அகதிவாழ்வு,முள்ளிவாய்கால்அவலம்,முள்ளிவேலிவதை,நில அகரிப்பு,இராணுவமுகாம்,சிறைவாழ்வு,சித்திரவதை, தமிழ் அரசியல் கைதிகள் தடுத்துவைப்பு, காணமல் ஆக்கப்பட்டோர் பொராட்டம், நிலம் மீட்பு போராட்டம்,வேலைகோரும் பட்தாரிகள் போராட்டம்,என ஈழத்தமிழர் வாழ்வில் அவலங்கள்,தமிழ்தேசிய அரசியலுக்குள்ளே போட்டி பொறாமை,திட்டமிட்டகுடியேற்றம், அரசியல் தீர்வுக்கு இழுபறி,புத்ததுறவிகளின் மேலாண்மை, ஆட்சியாளர்கள் மௌனம் என பல்வேறுபட்ட விடயங்களை கடந்த 43, வருடங்களாக பார்கமுடிகிறது.

வடகிழக்குவாழ் தமிழ்பேசும் மக்களின் விடுதலைக்காகதந்தைசெல்வாவால்ஆரம்பித்த இலங்கைதமிழரசுகட்சியின் அறவழிப்போராட்டம் எதுவுமே பெற்றுத்தராத நிலையில் யாழ்பாணம் தமிழாராய்ச்சி மாநாடு முடிந்து சரியாக இரண்டு வருடம் நான்குமாதம் நான்கு நாட்களின் கழிந்த பின்பு 1976,மே,14ல் தமிழர் விடுதலைக்கூட்டணி ஒழுங்குபடுத்திய வட்டுக்கோட்டை மாநாட்டில் தந்தைசெல்வா தலைமையில் தமிழ்முஷ்லிம் தலைவர்கள் ஒற்றுமையாக எடுத்த தீர்மானம் 'தமிழீழதனியரசு'ஒன்றுதான் வடகிழக்கு தமிழ்பேசும் மக்களுக்கான தீர்வு என்ற பிரகடனம் மேற்கொள்ளப்பட்ட பின்புதான் இளைஞர்கள் விடுதலைக்காக ஆயுதம் ஏந்திபோராடவேண்டிய நிலை ஏற்பட்டவரலாற்றை மறைக்கவோ மறுக்கவோ முடியாது. அந்த போராட்டம் கடந்த 1976தொடக்கம் 1987வரையும் முப்பத்தியாறு (36) தமிழ் இயக்கங்கள் தோற்றம் பெற்று விடுதலைக்காக போராடும் நிலை ஏற்பட்டது அந்த இயக்கங்களின் செயல்பாடுகள் யாவும் 1987,யூலை29,ம்திகதி இலங்கை இந்திய

ஒப்பந்தத்துடன்செயல் இழந்தநிலையில் தனி ஒரு விடுதலைஇயக்கமாக "தமிழீழவிடுதலைப்புலிகள்" தரை, கடல், வான், தற்கொடையணி, எனபல மரபுப்படை அணிகளாக நான்குகட்ட ஈழப்போரை நடத்தினர்

வடகிழக்கு நிலப்பரப்பில் 70,சதவீத நிலப்பரப்பில் கடல் எல்லைகளையும் இணைத்து நடைமுறை ஒரு நடைமுறை அரசை நிறுவி வரலாறு படைத்த காலத்தில்தான் உலகவல்லரசுகளின் சதிவலையால் அந்த விடுதலைப்போராட்டம் இலட்சக்கணக்கான அப்பாவி மக்களின் படுகொலையுடனும் ஐம்பதாயிரத்துக்கு (50000)மேற்பட்ட மாவீரர்களின் வரலாற்றுடனும் 2009,மே,19ம் திகதிஆயதப்போர் மௌனநிலை அடைந்தது. இன்று எட்டு(8) வருடங்கள் கடந்த நிலையிலும் எந்த ஒரு அரசியல் தீர்வுமற்ற அநாதைகளாகவே ஈழத்தில் தமிழர்களாகிய நாம் வாழுகின்றோம், வாக்குறுதிகளும் ஏமாற்ற அரசியலும் இனவாத கருத்தாடல்களும் எம்மை மேலும் பலவீனப்படுத்தும் சூழலே நல்லாட்சியிலும் நாம் கண்ட புதினங்கள் எனலாம்• இந்த காலத்தில்தான் யாழ்ப்பாணத் தில் "உலகத்தமிழர் பண்பாட்டு இயக்கம்" 13,வது உலகத்தமிழர்மாநாட்டை உலக நாடுகளில் இருந்து வருகைதந்த பல மதிக்கத்தக்க பேரறிஞர்களை ஒன்றிணைத்து இந்த மாநாட்டை சிறப்புற நடத்துகின்றனர்•.

ஏற்கனவே 12,உலகத்தமிழர் மாநாடுகளை உலகத்தில் பல நாடுகளில் நடத்தியபோதுஎமது ஈழத்தமிழர்களின் மரபுகளையும்,வரலாறுகளையும்,கலை,இலக்கியங்களையும்,உணர்வுகளை யும்,உரிமைக ளையும்,தியாகங்களையும் வீரத்தையும் அந்த 12,உலகத்தமிழர்மாநாடுகளில் ஈழத்தமிழ் மக்களுக்கான குரலாக வெளிவந்ததை நாம் அறிவோம்• நான் சுவிஷ்லாந்தில் இடம்பெற்ற மாநாட்டி லும்,மலேசியா கோயம்புத்தூர் மாநாட்டிலும் இலங்கையில் இருந்து அந்த மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றியிருந்தேன். அந்த இரண்டு மாநாட்டிலும் இனிவரும் மாநாட்டை ஈழத்தில் பொருத்த மான ஒரு மாவட்டத்தில் நடத்தவேண்டும் என்ற வேண்டுகோளை விடுத்தேன் எனது வேண்டுகோளை உலகத்தமிழர் பண்பாட்டு இயக்கத்தின் தலைவர் ஏற்பாட்டாளர்கள் ஏற்றுக்கொண்டனர்• இருந்தபோதும் உடனடியாக அடுத்த அடுத்த வருடங்கள் ஈழத்தில் உலகத்தமிழர் மாநாடு நடத்தக்கூடிய சூழ்நிலை ஏற்படவில்லை,

தற்போது நல்லாட்சி அரசில் இவ்வாறான மாநாடுகள் கவன ஈர்ப்பு போராட்டங்கள் என்பவைகளை மட்டும் தடையின்றி யாரும் நடத்தக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளது அதன் வெளிப்பாடாக தற்போது 2017,ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் 13,வது உலகத்தமிழர் மாநாடு சிறப்புற நடத்த முடிந்தது• ஈழத்தமிழர் மனங்களில் முழுமையான மகிழ் ச்சியான சுதந்திரமான வாழ்வு இன்னும் அமை யப்பெறவில்லை அதற்கான தடைகளை நீக்க கூடிய வழிமுறைகள் இன்றய யாழ்பாணத்து உலகத்தமிழர் மாநாட்டில் ஆராய்ந்து எமது தமிழ்மொழி பண்பாடு பாரம்பரியம் நிலப்பாதுகாப்பு வாழ்க்கை அனைத்தும் இந்த மாநாட்டில் பிரதிபலிக்கும் என்ற நம்பிக்கை எனக்குள்ளது எனவே உள்ளத்தால் உளமாற இந்தமாநாடு சிறப்புற வாழ்த்துவதில் ஒரு தமிழன் என்ற விதத்திலும் ஏற்கனவே இந்த மாநாடுகளில் கலந்து கொண்டவன் என்ற வகையிலும் பெருமையடைகிறேன்• உலகத்தமிழர் மாநாடு உணர்வுடன் சிறப்புற அமைய எனதுசார்பிலும் மட்டக்களப்பு மாவட் டமக்கள் சார்பாகவும் பட்டிருப்பு தொகுதி மக்கள் சார்பாகவும் மீண்டும் வாழ்த்துக்களை தெரிவிக்கின்றேன். "தமிழ் வாழட்டும் தமிழனும் ஆழட்டும்" நன்றி

பாக்கியசெல்வம் - அரியநேத்திரன் - (அரியம்)
மட்டக்களப்பு மாவட்ட தமிழ்தேசிய கூட்டமைப்பு,
முன்னாள் பா.உ, இலங்கை தமிழரசு கட்சி பட்டிருப்பு தொகுதி
தலைவர், "இரதாலயம்"
அம்பிளாந்துறை கொக்கட்டிச்சோலை மட்டக்களப்பு
•மின்னஞ்சல்:aumariyam@ymail,com •முகநூல்:Ariyam Pakkiyaselvam,



நல்லை பிரதம ஆதீன கர்த்தா
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்
வாழ்த்துச் செய்தி

எமது; யாழ் மண்ணில் நடைபெறுகின்ற உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் 13 ஆவது சர்வதேச மாநாடு தொடர்பாக வெளியிடப்படும் சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தியினை வழங்குவதையிட்டு நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

தமிழ் மக்கள் தாம் செல்லும் நாடுகள் எல்லாவற்றிலும் தமிழர் தமது பெருமைகளை பறை சாற்றி வருகிறார்கள். அதிலும் குறிப்பாக இலங்கையில் இடம்பெற்ற யுத்தம் இலங்கைத் தமிழர்களை உலகம் முழுவதும் இடம்பெயர வைத்தது. அதன் காரணமாக தமிழர் பெருமை, பண்பாடு, கலாசாரம் என்பன ஓங்கி வளர்ந்துள்ளது. அது ஒருவகையில் எமக்கு நன்மையாகவே அமைந்துள்ளது.

இந்த உலகத்த தமிழ் பண்பாட்டு இயக்கம் தமது பணிகளை ஐரோப்பிய நாடுகள் பலவற்றிலும் செய்து தற்போது இலங்கையில் அமைதி திரும்பியுள்ளமையினால் இங்கேயும் இயங்கத் தீர்மானித்திருப்பது உண்மையிலேயே வரவேற்கத்தக்க விடயம். இயக்கம் நடத்திய முன்னைய பல மாநாடுகளுக்கும் நான் வாழ்த்துச் செய்திகளை அனுப்பி வைத்திருக்கின்றேன்.

தமிழர்கள் ஒற்றுமையாக இருந்து எதிர்காலம் சிறப்பாக அமைய பாடுபட வேண்டும். தமக்கிடையே மத, அரசியல் மற்றும் பிரதேச வேறுபாடுகள் காணப்பட்டாலும் ஒற்றுமையைப் பேணிப்பாது காக்க வேண்டும் என நான் கேட்டுக் கொள்கின்றேன். அதற்கு இந்த இயக்கம் துணை நிற்க வேண்டும்.

இந்த மாநாட்டிற்கு இராஜாங்க அமைச்சர் கௌரவ. ஆ. இராதாகிருஸ்ணன் சிறப்புத் தலைவராகவும், மாநாட்டின் தலைவராக இந்திய பாண்டிச்சேரி பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் திரு. பஞ்ச் இராமலிங்கள் அவர்களும் உள்ளமை சிறப்பாகும். அத்துடன் இந்த இயக்கத்தின் செயலாளர் நாயகமாக கடந்த 25 வருட காலமாக இருந்து அதனை இயக்கிவரும திரு. துரை கணேசலிங்கம் அவர்களை நான் பாராட்டுகின்றேன்.

இம்மாநாடு சிறப்பாக வெற்றியுடன் நடைபெற எனது ஆசிகளையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நன்றி, வணக்கம்.

ஓம்
இறைபணியில்,
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்,
இரண்டாவது குருகுல சந்நிதானம்,
பிரதம ஆதீன கர்த்தா,
நல்லை ஆதீனம்,
நல்லூர், யாழ்ப்பாணம், இலங்கை.

ஓம் ஸ்ரீ மாத்திரே நமக
ஹிந்து சங்கரர் ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் ஆலயம் e.V. (ஐரோப்பா)
Hindu Shankarar Sri Kamadchi Ampal Tempel e.V. (Europa)
Postfach: 6038, 59026 Hamm. Germany.
Telefon:. 0 23 88 / 30 22 23 / 25 - Telefax: 0 23 88 / 30 22 24
E-Mail: info@kamadchi-ampal.de Internet: http://www.Kamadchi-ampal.de



பெருமதிப்புக்கும் பாரட்டுக்குமுரிய உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்க தொண்டர்கள் அனைவருக்கும் அன்னை ஸ்ரீ காமாக்ஷி அம்பாளின் திருவருளும் ஜகத்குரு ஸ்ரீ ஆதிசங்கராச்சார்யாளின் ஆசியும் கிடைக்க வேண்டி எமது ஆசிகளையும் வழங்குகிறோம்.

மேலும் உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் தனது சேவையில் 13வது உலகமாநாடு யாழ்பாணத்தில் நடைபெற இருப்பதையிட்டு நாம் பெருமகிழ்ச்சி கொள்கிறோம். கல்தோண்றா மண் தோண்றா காலத்துக்கு முற்பட்ட எமது செம்மொழியாம் தமிழ்மொழியை காலத்தின் ஓட்டங்களில் வெளிநாட்டு மேலைநாட்டு மோகங்களால் மறக்க எண்ணும் எமது தமிழ் இனத்தினருக்கு தமிழின் பெருமையையும் அதன் முக்கியத்துவத்தையும் எடுத்துச்சொல்ல ஒரு ஆணிவேராக இருப்பது உலகத்தமிழ் பண்பாட்டு இயக்கம் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

உலக மொழிகளில் மூத்த மொழியாக இருக்கும் எமது தமிழ் மொழிக்கு சிறப்புகள் கோடி அதன் சிறப்புகளை மக்களிடையே எடுத்துச்சொல்ல எமது தாய்நாட்டின் காலாச்சார தலைநகராக திகழும் யாழ் மண்ணில் எதிர்வரும் ஆவணிமாதம் 5ம், 6ம் திகதி ஆகிய இருநாட்களும் நடைபெறும் 13வது உலக மாநாடு மிகச்சிறப்பாக நடைபெற வாழ்த்தி எமது பரிபூரண நல்லாசிகளையும் வழங்குகிறோம்.

"உலக உயிரினங்கள் அனைத்தும் சுகமாக இருக்கட்டும்"

வாழ்க தமிழ் வளர்க அதன் புகழ்

சுபம்

இவ்வண்ணம்
ஹம் ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் ஆலய ஆதீனகர்த்தா
"ப்ரதிஷ்டா கலாநிதி" ஸ்ரீ வித்யா உபாசகர்
இரேவணசித்த சிவஸ்ரீ ஆறுமுக பாஸ்கரக்குருக்கள்
ஹம் ஜோன்னி

10/7/2017

Bankverbindung:-
Hindu Tempel e.V
IBAN: DE19 4105 0095 0005 0708 91
SWIFT-BIC WELADED1HAM

Hindu Tempel e.V
IBAN: DE22 4105 0095 0024 2054 45
SWIFT-BIC WELADED1HAM

Hausanschrift:-
Siegenbeckstraße 04 - 05
59071 Hamm-Uentrop
Germany.

Sprechstunden:-
Täglich 14:00 - 16:00 Uhr und 20:00 - 21:00 Uhr
Ihr Gesprächspartner:-
Siva Sri.Arumuga Paskarakurukkal
Gottesdienste:-
Täglich 8:00 Uhr, 12:00 Uhr, und 18:00 Uhr
Dienstag und Freitag sind die Haupttage

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் - இங்கிலாந்து
International Movement for Tamil Culture – England
10 Palmerston Road Harrow Middlesex HA3 7FA England. Tel: 00447956 486014
PRESIDENT: A.F.ILANCHELIAN SECRETARY: RAMALINGAM BALENDRANATHAN
VICE PRESIDENT: SINNATHURAI SRIVAS TREASURER: MURUGESU THANGARAJA

வாழ்த்துச் செய்தி

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் கடந்த நாற்பத்திமூன்று ஆண்டு கால வளர்ச்சி கொண்டு தமிழர் தம் கலாச்சார பண்பாட்டு விழுமியங்களைப் பாதுகாப்பதில் அளப்பரிய பணியாற்றியமை கண்டு உலகத் தமிழர் நாமே பெருமை கொள்ள வேண்டும்.

உலகத் தமிழினத்தினை மொழியாலும் பண்பாட்டாலும் ஒருங்கிணைக்கும் உயர்நோக்குடன் 43 ஆண்டுகளாக இயங்கிவரும் உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் யாழ்ப்பாணத்தில். 08.01.1974ல் தோற்றுவிக்கப்பட்ட இலங்கை கலாசாரத் தலைநகரில் தனது 13வது உலக மாநாட்டினை நிகழ்த்துவது ஒரு சிறப்பு நிகழ்வாகும். உலகெல்லாம் பரந்து வாழும் தமிழர்கள் உயர்நோக்கோடு ஒன்றிணைந்து தமிழ்வழி இறைவழிபாடு தமிழ்க்கல்வி தமிழ்க்கலை கலாச்சார விழுமியங்களின் ஊக்குவிப்பு உலகளாவிய ரீதியில் இயங்குகின்ற தமிழர் நிறுவனங்களின் ஒன்றிணைப்பு போன்ற நல்நோக்கோடு எல்லா இடர்களுக்கு மத்தியிலும் அவைகளை எதிர்கொண்டு சீரிய பணியாற்றிவரும் அனைத்து அன்புள்ளங்களையும் 13வது மாநாடு நடைபெறும் வேளை வாழ்த்தி மகிழ்கின்றேன். இம்மாநாட்டில் தமிழ் ஆய்வுகள் தமிழ்நூல்கள் ஆவணக்காப்பகம் உலகத்தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் தலைமைக்கட்டிட நிர்மாணம் போன்ற விடயங்களில் கூடுதலான அக்கறை எடுத்து இலங்கையில் நிலையான தலைமையகம் அமைய இம்மாநாடு வழிசமைக்கும் என்னும் பேரவாவுடன் வாழ்த்தி இம்மாநாடு சிறப்புற அனைவரும் ஒத்துழைப்பு வழங்குமாறு வேண்டி நிற்கின்றேன்

அன்புடன்

சட்டத்தரணி அடைக்கலமுத்து இளஞ்செழியன்

தலைவர் உலகத்தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் - பிரித்தானியா

யேர்மன் தமிழ்க் கல்விச் சேவை (ஐரோப்பா)

(இலங்கைப் பாடத்திட்டத்திற்கு அமைய)

Tamilischer Bildungsverein Deutschland e.V. (Europa)

"கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை"

Postfach 1646, 59159 Kamen. Germany.

Ponnuthurai Srijeevaghan
Nordenmauer 17
59174 Kamen
Germany



Telefon
(02307) 299384

E-Mail
Jeevaghan@web.de

Datum
05.07.2017

பண்பாட்டுக் கலை கலாச்சாரங்களை பேணும்பணி சிறக்க வாழ்த்துகின்றோம்

உலகத்தமிழ் மக்களின் பண்பாட்டுக் கலை கலாச்சாரப் பாதுகாப்புக்கும், வளர்ச்சிக்கும் அரும்பாடுபட்டுவரும், உலகத்தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் தலைமையகம், ஒன்றியங்கள், கிளைகள் ஆகியவற்றின் பேராதரவுடன், இலங்கைக்கிளை நடாத்தும் பதின்மூன்றாவது (13) உலக மகாநாடு சிறப்பாக அமைந்து நடந்தேற நல்வாழ்த்துக்களை இதய மகிழ்வுடன் கூறுகின்றோம்.

மானிட வரலாற்றுத் தேடல்களில் முதல் தோன்றிய இனமாகவும், முதல் தோன்றிய மொழியாகவும் அறியப்பட்டுப் போற்றப்படுகின்ற சிறப்பும் பெருமையும் தொன்மையும் மிக்க ஒரு இனத்தின் மொழியையும், பண்பாட்டையும், கலைகலாச்சாரங்களையும் பேணிப் பாதுகாக்கும் செயற்பாடுகளைத் தொடர்ந்து செய்துவரும் உலகத்தமிழ் பண்பாட்டு இயக்கம் போற்றுதலுக்கும் பாராட்டுதலுக்கும் பெருமைக்கும் உரியதாகும்.

உலகெங்கும் வாழ்ந்துவரும் தமிழின, தமிழ்பேசும் மக்கள் யாவரையும் ஒன்றிணைத்து, தமிழின தமிழ்மொழி வளர்ச்சியை உன்னத நோக்காகக் கொண்டு செயற்படும் உலகத்தமிழ் பண்பாட்டு இயக்கம் மேலும் மேலும் நற்பணிகளையும், சேவைகளையும் ஆற்றிச் சிறந்து விளங்க வேண்டுகின்றோம்.

தமிழ் இனத்தின் அடிவேரைப் பாதுகாத்து எதிர்காலச் சந்ததியினருக்குத் தெரியப்படுத்தி, அவர்கள் ஒழுக்கமுள்ள, பண்பாடுள்ள சிறந்த இனமாக வளம்பெற்று வாழ வழியேற்படுத்த இம்மாநாடு வழியமைக்க வேண்டுமென விரும்புகின்றோம்.

இலங்கையின் யாழ்மண்ணில் நடைபெறுகின்ற இம்மாநாடு தமிழ் மக்களின் நல்வாழ்வுக்கும், வளர்ச்சிக்கும் மேலும் மேலும் வளம் சேர்க்கும் விழாவாகவும் அமைந்து, சிறப்புடன் நடந்தேற நல்வாழ்த்துக்களைக் கூறிப் பாராட்டுகின்றோம்.

வணக்கம்பல!

இங்ஙனம்
பொ.சிறீஜீவகன்
தலைவர்
யேர்மன் தமிழ்க் கல்விச் சேவை



கந்தசாமி கருணாகரன்
அமைப்பாளர்
ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி
யாழ்.மாவட்டம்
ஆளுநர் ஒருங்கிணைப்பு செயலாளர்
வடமாகாணம்

வாழ்த்துச் செய்தி

உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் பதின்மூன்றாவது உலகப் பண்பாட்டு மாநாடு தொடர்பான சிறப்பிதழுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

உலகத் தமிழ் மக்களை ஒருங்கிணைத்து தமிழர் தம் பெருமை போற்றும் கலை கலாசார மற்றும் விழுமியங்களை எடுத்தியம்பும் உலகப் பண்பாட்டு இயக்கத்தின் செயற்பாடு, அர்ப்பணிப்பு அதன் வினைத்திறன் மிக்க நிகழ்ச்சிகளின் ஊடாக ஓர் முறைமை நிகழ்வு ஒருங்கமைக்கப்பட்டு நடைபெறுகின்றது.

அதிலும் குறிப்பாக 13 ஆவது மாநாடு வடக்கின் இதமான யாழ்ப்பாணத்தில் ஆகஸ்ட் மாதம் 5,6 ஆம் திகதிகளில் ஒருங்கமைக்கப்பட்டு இடம்பெறுவது என்பது உலகில் வாழும் தமிழ் மக்களின், அன்புள்ளங்களின் இதயங்களை தொட்டு நிற்கும் என்பதி; எவ்வித ஐயமுமில்லை.

இன்றைய நவீன கால உலகினில் பழையன கழிதலும் புதியன புகுதலும் என்ற கோட்பாட்டு சிந்தனைக்கு ஏற்ப எமது கலாச்சாரங்களிலும், பண்புகளிலும் மறுசீரமைப்புக்கள் இடம்பெறுகின்றன. இவ்வாறான மறுசீரமைப்புக்களில் தமிழர் தம் பெருமை போற்றும் பல விழுமியங்கள் இல்லாது போகின்றன. அழிந்து செல்கின்றன. இவ்வாறான விழுமியங்களை பாதுகாத்து பேண இந்த உலக தமிழ் பண்பாட்டு இயக்கம் முழு மூச்சுடன் செயற்பட வேண்டும்.

அந்த வகையில் இவ் வருடம் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ள மாநாட்டுக்கு பொறுப்பான சிறப்புத் தலைவராக கல்வி இராஜாங்க அமைச்சர் பொ.இராஹகிருஸ்ணன் நியமிக்கப்பட்டுள்ளார். இதேபோல 13 ஆவது உலக பண்பாட்டு மாநாட்டு தலைவராக தமிழ்நாட்டைச் சோர்ந்த முன்னவர் பாஞ் இஹமலிங்கம் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இம் மாநாட்டு இயக்க அகில தலைவராக கனடா வாழ் வி.துரைராஜாவும், செயலாளர் நாயகமுமாக ஜேர்மனி வாழ் துரை கணேசலிங்கமும், சர்வதேச ஊடகப் பொறுப்பாளாகவும் மாநாட்டின் கடனாவுக்குரிய செயற்பாட்டுக் குழுவின் தலைவராக ஆர்.என்.லோகேந்திர லிங்கமும் இயக்கத்தின் வட அமெரிக்காவின் ஒன்றியத்தின் தலைவராக கனடா வாழ் சிவா கணேசப் பிள்ளை அவர்களும் பணியாற்றி வருவது சிறப்புடையதும் பெருமைக் குரியதும் போற்றுதற்குரியதமாகும்.

இவ்வாறான பேண்தகு நிலையுடையதான உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கதின் 13 ஆவது மாநாடு யாழ்ப்பாணத்தில் இடம்பெறுவது சாலவும் பொருத்தமானதும் சிறப்பும் உடையது.

இம் மாநாடு சிறப்புற வாழ்த்துவதோடு மாநாட்டு மலருக்கு (13 ஆவது) வாழ்த்துச் செய்தி வழங்கிட நன்றியுடன் அழைக்கிறேன். நன்றி சுபம்.

கந்தசாமி கருணாகரன்

யாழ்ப்பாணம்



ஆ.ந. இராசேந்திரன்
முன்னைநாள் தலைவர்
யாழ். மாவட்ட அபிவிருத்திச் சபை

தமிழ் மொழியின் தனித்துவம்

உலகெங்கும் புலம்பெயர்ந்து வாழுகின்ற தமிழ் மக்களை ஒன்றிணைத்து உலகத்தமிழ் பண்பாட்டு இயக்கம் என்ற அமைப்பினால் முன்னெடுக்கப்படுகின்ற 13வது அனைத்துலக தமிழ் மாநாடு இவ் வருடம் எதிர்வரும் ஆவணி மாதம் 5ம், 6ம் திகதிகளில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் வெகு விமரிசையாக கொண்டாடப்படவிருக்கும் இத்தருணத்தில் அந் நிகழ்வுக்கான சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி ஒன்றை வழங்குவதில் மகிழ்வடைகின்றேன்.

தமிழரின் மொழி, பண்பாடு, கலாச்சாரம் ஆகியவற்றின் தனித்துவத்தைப் பேணி உலகெங்கும் தனிமையான இனமாகத் திகழ்வதற்கு உலகத்தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் போன்ற அமைப்புக்களின் பணியும் முக்கியமான காரணியாக அமைகிறது. கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தில் முன்தோன்றிய மூத்த குடி என்ற பெருமையைக் கொண்ட தமிழ் இனமும் அதன் மொழியும் தனது தனித்துவத்தையும் எழுத்துருவத்தையும் இலக்கண நடைகளையும் காலத்திற்கு காலம் ஏற்படக்கூடிய மாற்றங்களுக்கும் இலகு நடைக்கும் மொழிப் பாவனைக்கும் ஏற்ப சொற்ப மாறுதல்களுடன் தொடர்ந்தும் பல நாடுகளில் அரச கருமு மொழியாக தமிழ் மக்களின் கல்விக்கான மொழியாக தாய் மொழியாக சீரும் சிறப்புடனும் தொடர்ந்து பாவனையில் உள்ளமை அதன் தனித்துவத்தை எடுத்துக்காட்டுவதாகும்.

2000 வருடங்களுக்கு முற்பட்ட பழமை வாய்ந்த தமிழ்மொழி இன்றும் உலகெங்கும் வாழுகின்ற பத்துக் கோடி தமிழ் மக்களுக்கும் மேலான மக்களின் பேச்சு மொழியாக எழுத்து மொழியாக வாசிப்பு மொழியாக மிளிர்வது அதன் தனித்துவத்தையும் சிறப்பையும் கோடிட்டுக் காட்டுவன.

தமிழ் மக்கள் பிற நாடுகளில் பிறமொழி பேசுபவர்களிடையே வாழுகின்ற போதும் தாய் மொழியாம் தமிழையும் அவர்களின் பண்பாட்டு விழுமியங்களையும் அவர்களின் குழந்தைகளுக்கு கற்பிப்பதும் தமிழில் உரையாடல்களை மேற்கொள்வதும் தமிழ் மொழிக்கு கிடைத்த அங்கீகாரமாக கொள்ளப்படலாம்.

அந்த வகையில் தனித்துவத்தைப் பெற்ற தமிழினம் தனது தாய்மொழியாம் தமிழையும் பண்பாடுகளையும் இன்னும் பல ஆயிரம் ஆண்டுகளுக்கும் அதனைக் கடந்தும் ஏற்றத்துடன் எடுத்துச் செல்லும் என வாழ்த்தி வடபுலத்தின் தலைநகராம் யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கும் உலக தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் மாநாடு சிறப்புற நடைபெற எல்லாம் வல்ல தமிழ்க் கடவுளாம் நல்லூர் முருகப் பெருமானை வேண்டி வாழ்த்தி அமைகிறேன்.

ஆ.ந. இராஜேந்திரன்
யாழ்ப்பாணம்



"நவசக்தி"
கண்டி வீதி,
பரந்தன்,
இலங்கை

வாழ்த்துரை

உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் 13வது உலகத்தமிழ் மாநாடும், அனைத்துலக பேரவைக் கூட்டமும், தமிழர்களின் கலாச்சாரத் தலைநகராம் யாழ்ப்பாணத்தில் நடைபெறுவதையிட்டு பேருவகை கொள்கிறேன். மாநாட்டு ஏற்பாட்டாளர்களுக்கும் ஒழுங்கமைப்பாளர்களுக்கும் இம்மாநாடு வெற்றிபெற எனது உளமார்ந்த வாழ்த்துக்கள்.

நவநீதராஜா பரராஜசிங்கம்
தொழிலதிபர், அவுஸ்திரேலியா
தொலைபேசி: 0403290286



உலகத் தமிழர்கள் கொண்டாடும் திருவிழா

உலகத்தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் 13வது மாநாட்டுப் பெருவிழா

கோலாகலமாக நடைபெற கோடி முறை வாழ்த்தி மகிழ்கிறேன்

இன்று உலகமெங்கும் பரந்து வாழும் தமிழர் நாம், எங்கு வாழ்ந்தாலும் நாம் பிறந்த தமிழ் மண்ணை உயிராக நேசிக்கும் உணர்வுடையோர் என்றால் மிகையில்லை. உலகில் எழுபது (70) மில்லியனுக்கும் அதிகமான மக்கள் தமிழை தாய் மொழியாகவும் (9)ஒன்பது மில்லியனுக்கும் அதிகமான மக்கள் தமது இரண்டாவது மொழியாகவும் கொண்டு வாழ்கின்றனர் என ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

உலகில் தோன்றிய மனித இனம் முதலில் பேசிய மொழி , அதாவது உலகில் எல்லோரும் ஆரம்பத்தில் பேசிய மொழி தமிழ் மொழியே என அமெரிக்க மொழியியல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இதற்குப்பின் நூற்றுக்கணக்கான மொழிகள் தோன்றி மறைந்துவிட்டபோதும் என்றும் இளமையோடும் வளத்தோடும் திகழும் மொழியாக எங்கள் தமிழ் மொழி விளங்குகிறது.

இத்தகைய மொழிக்கு நாம் விழா எடுத்து கொண்டாடும் வாய்ப்பு இந்த வருடம் இலங்கையின் கலாச்சார தலைநகரம் யாழ்பாணத்துக்கு கிடைத்துள்ளது பெருமகிழ்ச்சி தரும் அதேவேளை, தமிழுக்காவும் தமிழ் மக்களுக்காகவும் தனது வாழ் நாளை அர்ப்பணித்து வாழும் சேவைச் செம்மல் மாவை சேனாதிராசா அவர்களின் பிறந்த நாளை வாழ்த்துவதும் பொருத்தமாக உள்ளது.

இலங்கையிலும் இந்தியாவிலும் மட்டுமன்றி தற்போழுது தமிழ் மக்கள் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளிலும் தமிழ் அன்னை சிறப்பாக கொண்டாடப்படுகின்றாள். தமிழின், தமிழரின் புகழ் எங்கும் சிறப்பாக விளங்குகிறது. தமிழர் பல்வேறு துறைகளில் சாதனைகளை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். இந்த நேரத்தில் இதனைக் கொண்டாடுவதாகவும் நாம் மகிழ்ச்சியடைய முடியும். இதேவேளை இந்த மாநாடு இலங்கையின் பல பகுதிகளிலும், குறிப்பாக வடக்கு கிழக்கில், இந்தியாவின் பல்வேறு இடங்களிலும், குறிப்பாக தமிழகத்தில், வேறு பல நாடுகளிலும்அல்லல்படுகின்ற மக்களுக்கு ஆதரவுத் திட்டங்களை உருவாக்கி, தமிழர் தம் மொழி பண்பாடு காக்க திட்டங்கள் வகுத்திட வேண்டுமென எண்ணுகிறேன்.

ஏற்கனேவே இந்த இயக்கம் தென் ஆபிரிக்கா, கனடா, ஐரோப்பிய நாடுகள் என பல இடங்களிலும் தமிழ் கற்பிக்க ஆசிரியர்களைப் பயிற்றுவித்து வருவது, தமிழர் வாழும் பல்வேறு நாடுகளிலும் தமிழ் மாநாடுகளை நடத்தி தமிழ் அறிஞர்களை இணைத்து நல்ல திட்டங்களை வகுத்து செயல்படுத்துவதும் நன்மையான விடயங்கள்.என மகிழ்ச்சியடைகிறேன்.

எங்கும் தமிழ் சிறக்கட்டும், நாம் தமிழர் என்று சொல்வதில் தமிழர் நாம் பெருமை கொள்வோம் .

இந்த உலகில் சமாதானமும் அன்பும் நிலைக்க பாடுபடுவோம்

வாழ்க வையகம் வாழ்க அனைவரும்

இந்த மாநாடு சிறப்படைய எனது நல்வாழ்த்துக்கள்

அன்பன்
நடா. ராஜ்குமார்
அனைத்துலக கொள்கை பரப்புச் செயலாளர்
உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கம்
கனடா



தமிழ்மாமணி, முனைவர் க.தமிழமல்லன்,
தலைவர்,தனித்தமிழ் இயக்கம், சிறப்பாசிரியர்,
வெல்லும் தூயதமிழ் மாதஇதழ், புதுச்சேரி605009
கைப்பேசி 9791629979, Email : vtthamizh@gmail.com

வாழ்த்துரை

5. ஐ.நா.மனித உரிமைப் பேரவை இறுதித் தீர்மான விடயமாகவும் எதிர்கால விசாரணை தொடர்பாகவும் இறுதி விடயங்கள் தொடர்பாகவும் ஈழத்தமிழ் அரசியற்கட்சித் தலைவர்கள் தமிழக தமிழின உணவாளர்கள் புலம் பெயர் தமிழர்கள் மத்தியில் சரியான புரிந்துணர்வு இல்லாமை மக்கள் மத்தியில் தேவையற்ற விசம செய்திகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கவும் எதிர்காலத்தில் நல்ல புரிந்துணர்வு உருவாகவும் விசாரணைகளில் நல்ல பலன் கிடைக்கவும் உலகத் தமிழர் ஒற்றுமை மாநாடு ஒன்றினை இந்தியாவிலுள்ள ஒரு பல்கலைக்கழகத்தில் நடாத்த இம்மாநாடு தீர்மானம் ஒன்றினை முன்மொழிகின்றது. இத்தீர்மானத்தின்படி மாநாடு ஒன்று கூடிப் பேசித் தெளிவு எற்பட்டபின் மூன்று தரப்பின் சார்பில் சார்பில் மூன்று சட்டவாளர்களைத் தெரிவு செய்து மூவர் நல்லெண்ணக் குழு ஒன்றினை உருவாக்கி அக்குழு தேவையேற்படின் இலங்கை ஜனாதிபதி பிரதமர் எதிர்க்கட்சித்தலைவர் ஆகியோரைச் சந்திப்பதற்கு அவர்களின் கருத்துக்களைப் பதிவு செய்ய சூழமைவு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் எனத் தீர்மானம் செய்கின்றது.

6) உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் இந்தியாவில் எஸ். ஆர்.எம் பல்கலைக் கழகத்தோடு செய்து கொண்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் சொந்தமொழி அழிந்த நாடுகளிலும் புலம் பெயர் நாடுகளிலும் வாழும் தமிழர்கள் தமிழ்கற்பதற்கு உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் இதுவரை தென் ஆபிரிக்கா அவஸ்திரேலியா சுவிற்சர்லாந்து கனடா போன்ற நாடுகளில் அத்திட்டம் நடை முறைப்படுத்தப் படுகின்றது. தொடர்ந்து கல்வி கற்க விரும்பும் நாடுகள் உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்துடனோ அல்லது எஸ் ஆர் எம் பல்கலைக் கழகத்துடனோ தொடர்பினை ஏற்படுத்தினால் தேவையான உதவி செய்து கொடுக்கப்படும்.

7) உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் எஸ் ஆர் எம் பல்கலைக்கழகம் முன்னெடுக்கும் அருட்சுனைஞர் பரீட்சையை புலம் பெயர் நாடுகளில் முன்னெடுக்க முன்வந்துள்ளது. புலம் பெயர் நாடுகளில் உள்ள இந்து ஆலயங்களிலுள்ள வழிபாட்டு முறைகளைத் தமிழில் செய்யவேண்டும். அருகிப் போய்க் கொண்டிருக்கும் தமிழ் மொழி ஓரளவு வளர்ச்சி பெற அனைத்து இந்து ஆலயங்களிலும் தமிழ் வழிபாட்டு முறை ஆரம்பிக்கப்பட வேண்டும்.

8) கிளி நொச்சியில் உள்ள ஐந்து ஏக்கர்காணியில் அமையும் உலகத் தமிழர் பண்பாட்டு மையத்தினை 2016ல் நிறைவு செய்யத் தீர்மானம் எடுக்கப்படுகின்றது. தமிழர் கட்டிடிக் கலை மிளிரும் மாநாட்டு மண்டபம் நூல் நிலையம் ஆவணக் காப்பகம் தமிழர் மரபுகள் காட்சியகம் முதியோர் நிலையம் உள் விளையாட்டு வளங்கள் அத்துடன் கணவனை இழந்த 100 பெண்கள் பங்கு பெறும் தொழிற் கூடம் சிறுவர் பராமரிப்பு நிலையம் எனப் பல சேவைத்திட்டங்கள் உள்ளடக்கிய கட்டிடம் அமைத்தல் (அண்ணளவாக நூறு கோடி ரூபாய் தேவைப்படும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.)

9) உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் 13வது மாநாடு இலங்கையில் நடாத்துவதெனத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது..

10.10.2015ல் இடம் பெற்ற அனைத்துலக சிறப்புப் பேரவைக்கூட்ட முக்கிய முடிவுகள்

. அகிலத் தலைவர் திரு.வேல்வேலுப்பிள்ளை அவர்கள் தலைமையில் 04.10.2014ல் யேர்மனியில் இடம் பெற்ற 12வது உலக மாநாட்டினைத் தொடர்ந்து இடம் பெற்ற அனைத்துலக பேரவைக்கூட்டத்தில் நடைபெற்ற நிகழ்வில் செயலாளர் நாயகம் திரு துரை கணேசலிங்கம் அவர்களின் கடந்த கால அறிக்கைகள் மட்டுமே உள்ளதாகவும் தொடர்ந்து அகிலத் தலைவர் திரு. வேல்வேலுப்பிள்ளை பொருளாளர் நாயகம் திரு.வி.சு.செல்வராஜா அவர்கள் அறிக்கை சமர்ப்பிக்காத காரணத்தினால் தென் ஆபிரிக்காவில் இடம் பெறும் சிறப்புப் பேரவைக்கூட்டத்தில் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என முடிவு செய்யப்பட்டது.

தென் ஆபிரிக்கா ஒன்றியத் தலைவர் கலாநிதி மிக்கி செட்டி அவர்கள் தலைமையில் இடம் 04.04.2015இல் இடம்பெற்ற அயலகத் தமிழாசிரியர் பட்டமளிப்பு விழாவினைத் தொடர்ந்து 05.04.2015 இடம் பெற்ற அகில சிறப்புப் பேரவைக்கூட்டத்திலும் அகிலத் தலைவர் திரு.வேல்வேலுப்பிள்ளை பொருளாளர் நாயகம் திரு.வி.சு.செல்வராஜா அவர்கள் அறிக்கை சமர்ப்பிக்கவில்லை. செயலாளர் நாயகம் திரு.துரைகணேசலிங்கம் அவர்களின் அறிக்கை மட்டுமே ஏற்றுக் கொள்ளப் பட்டது.. எனவே 14 நாட்களுக்குள் அறிக்கை பெற்றுதி தருவதாக முதன்மைத் துணைத்தலைவர் திரு.ப.கு. சண்முகம் அவர்கள் உறுதியளித்திருந்தார். அங்கு இந்தியாவில் சிறப்புப் பேரவைக்கூட்டம் நடாத்துவது என்றும் கனடாவில் அகிலத் தலைவர் திரு.வேல் வேலுப்பிள்ளை அவர்களால் தலைமைப் பணிமனை பதிவு ஒழுங்கான முறையில் கையாளப் படாததினால் பதிவு காலாவதியாகும் நிலையை எட்டியுள்ளதை அடுத்து அவசரமாக சிறப்புத்தலைவர். வி.சு.துரைராஜா அவர்களிடம் தலைமையகப் பதிவினை மேற்கொள்வதற்கு உதவியாக முதன்மைத்துணைத்தலைவர் ப.கு. சண்முகம் அவர்களும் செயலாளர் நாயகம் திரு.துரைகணேசலிங்கம் அவர்களும் இணைந்து 05.04.2015 அன்று ஒப்பம் இடப்பட்ட கடிதம்மூலம் தலைமையகப் பதிவினைச் செய்யும் முழுப் பொறுப்பும் ஒப்படைக்கப்பட்டது. அங்கு தென்ஆபிரிக்காவில் மேற்கொள்ளப்பட்ட அயலகத் தமிழாசிரியர் கல்வித்திட்டத்தினை முன்னெடுத்த கலாநிதி மிக்கி செட்டி அவர்களும் அவரது குழுவினர்களும் பாராட்டப்பட்டனர். அத்துடன் வெளிநாட்டுப் பேராளர்களுக்கான தங்குமிடம் சுற்றுலா உணவு விருந்தோம்பல் என்பனவும் பாராட்டப்பட்டது

தென்ஆபிரிக்காவில் 05.04.2015ல் இடம் பெற்ற பேரவைக்கூட்டத்தினைத் தொடர்ந்து ஆறு மாதங்களாக அகிலத்தலைவர் திரு.வேல் வேலுப்பிள்ளை பொருளாளர் நாயகம் திரு.வி.சு. செல்வராஜா ஆகியோர் அறிக்கை சமர்ப்பிக்கவில்லை. இது தொடர்பாக 2015ல் முதன்மைத்துணைத்தலைவர் ப.கு.சண்முகம் அவர்களுக்கு 24.08.2015 அன்று திகதியிடப்பட்டு கடிதம் மெயில் மூலம் அனுப்பிவைக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் சட்ட ஆலோசகர் பேராசிரியர் சி.இராமமூர்த்தி அவர்களின் இயக்க யாப்பு விதிகளுக்கமைய துணைத்தலைவர் திரு.சு.தியாகலிங்கம் அவர்கள் தலைமையில் 10.10.2015ல் இடம் பெற்ற அனைத்துலக சிறப்புப் பேரவைக்கூட்டம் சட்டரீதியான அகிலத்தலைவராக திரு.வி.சு.துரைராஜா அவர்களும் பொருளாளர் நாயகமாகத் திரு. செ.சிவராஜசிங்கம் அவர்களும் தெரிவுசெய்யப்பட்டு அகிலத் தலைவர் திரு.வி.சு.துரைராஜா அவர்களால் தலைமை பொறுப்பேற்கப்பட்டு புதிய ஆட்சிக்குழு கனடாவில் பதிவு செய்யப்பட்டது..

துரை. கணேசலிங்கம்

செயலாளர் நாயகம் உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் - தலைமையகம்

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கப் பேரவைக் கூட்டம் 2016

நாள் : 16-01-2016, பிற்பகல் 4.30 மணி

இடம் : ஓட்டல் ஜெயராம், காமராஜர் சாலை, புதுச்சேரி, இந்தியா



தலைமை : திரு. வி.சு. துரைராஜா,
அகிலத் தலைவர்,
உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம்

பங்கேற்றோர் : 37 பேர்

சிறப்பு அழைப்பாளர்கள்:

1. நீதியரசர் தாவிதன்னுசாமி,
தலைமையகக் காப்பாளர்
2. திரு. வீ.எஸ். இராதாகிருஷ்ணன்,
மாண்புமி கல்வி இணை அமைச்சர், இலங்கை
3. திரு. மாவை. கோ. சேனாதிராஜா,
மாண்புமிகு நாடாளுமன்ற உறுப்பினர்,
இலங்கை
4. திரு. சிவஞானம் சிறீதரன்,
மாண்புமிகு நாடாளுமன்ற உறுப்பினர்,
இலங்கை

தலைவர் அறிமுகவுரையுடன் பங்கேற்ற உறுப் பினர்கள், சிறப்பு அழைப்பாளர்களின் அறிமுகத்துடன் சிறப்புப் பேரவைக் கூட்டம் இனிதே தொடங்கியது.

பேரவைக் கூட்டத்தின் நோக்கம் குறித்து தலைவர் குறிப்பிடுகையில் உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் கட்டமைப்பை செம்மை படுத்த வேண்டியத் தருணத்தில் இருக்கின்றோம். அதற்கு உறுப்பினர்கள், கிளை அமைப்புகள் ஒத்துழைப்பினை நல்க வேண்டும். இயக்க நிருவாக மேம்பாட்டை உறுதி செய்யும் வகையில் இச்சிறப்பு பேரவைக் கூட்டம் கூட்டப்பட்டுள்ளது. சிறப்பு அழைப்பாளர்கள் தங்களின் கருத்துக்களையும் பதிவு செய்ய வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளப்பெற்றது.

நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் :

தீர்மானம் 1.

10.10.2015இல் சென்மனியில் நடைபெற்ற பேரவைக் கூட்டத்தில் தேர்வு செய்யப்பட்டு கனடா பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் நீதியரசர் தாவிதன்னுசாமி, பேராசிரியர் எஸ். மோகன், சட்ட ஆலோசகரின் முன்னிலையில் பதவி ஏற்பு உறுதிமொழி எடுத்துக் கொண்டனர். இவர்களின் பதவிக்காலம் 2017இல் அடுத்த தேர்தல் நடத்தி புதிய செயற்குழுவினர் பொறுப்பேற்கும்வரை இருக்கும். சங்கத்தின் தற்போதைய செயல்பாடுகளை முறைப்படுத்தவும் கிளைகளின் செயல்பாடுகளை மேம்படுத்தவும் ஓராண்டிற்குள்ளாக தலைமையகச் செயற்குழுத் தேர்தலை உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்க சட்ட விதிகளின்படி நடத்துவது எனவும் முடிவு செய்யப்பட்டது.

தீர்மானம் 2 : சுயஆட்சி:

1987ஆம் ஆண்டு கையெழுத்திடப்பட்ட இந்திய இலங்கை உடன்படிக்கையை முழுமையாக செயல் படுத்தி வைக்க வேண்டிய கடமை இந்தியாவிற்கும் இலங்கைக்கும் உள்ளது. இந்த உடன்பாட்டோடு தொடர்புடைய 13 திருத்த சட்டத்தில் சில குறைபாடு

கள் இருக்கின்றன. இவற்றை சீர்படுத்த பகிரப்பட்ட இறையாண்மையின் அடிப்படையில் அதிகாரத்தை இடைக்காலமாக வழங்கி பாதுகாப்புடன் கூடிய ஒரு சுய ஆட்சியை வடக்கிழக்கு இணைந்த தமிழர்களின் பாரம்பரிய பிரதேசத்தில் எடுத்துத்தாருங்கள் என்று உங்களை நம்பிக்கையுடன் வேண்டுகிறோம்.

மனித உரிமைகள் :

குற்றவியல் விசாரணைக்கு தயார் செய்ய, உண்மையைத் தேட, பொறுப்புகூற நீதி வழங்க, இழப்பீடுகளை கொடுக்க, கொடூர குற்றங்களை மீண்டும் செய்யாதிருக்க உத்தரவாதம் கொடுக்க, நல்லிணக்கத்தை உருவாக்க, மனித உரிமைகளை செயல்படுத்த இலங்கையில் முழு மக்களின் அனைத்து மனித உரிமைகளாலும் மற்றும் அடிப் படை சுதந்திரங்களாலும் வரும் முழு இன்பத்தையும் அனுபவிக்கத் தேவையான குறிப்பிட்ட செயல்பாடு களை நடைமுறைப்படுத்த ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் சபைத் தீர்மானத்தை கொண்டு வந்தவர்க ளையும் தீர்மானத்திற்கு ஒப்புக் கொண்டுவர்களையும் தொடர்ச்சியாகத் தூண்டுங்கள் என்று கேட்டுக் கொள்கிறோம்.

பண்பாடு:

தமிழ்ப் பண்பாட்டை (வாழ்க்கை முறையை) தெரிந்து, மேம்படுத்தி, பாதுகாத்து, தலைமுறை தலைமுறையாகக் கொண்டு சென்று, மிகச் சிறந்த பண்பாட்டின் மூலம் ஒவ்வொரு துறையிலும் தமிழ்ச் சமூகத்தை அதி உயர்நிலைக்கு நகர்த்தி உலகச் செல்வாக்கை அடைந்து பல உலக சமூக பிரச்சினை களைத் தீர்க்க வல்லவர்களாக உயர்ந்த வாழ்க்கை முறையை கொண்ட தனிமனிதமாக, குடும்பமாக, குழுமமாக, சமூகமாகத் திகழ வையுங்கள் என்று உங்களை ஆர்வத்துடன் கேட்டுக் கொள்கிறோம்.

கோயில்கள்:

1948இல் இருந்து இலங்கையில் அழிக்கப்பட்ட 2000த்திற்கும் மேற்பட்ட இந்து கோயில்களையும், கிறித்துவ பேராலயங்களையும் மீண்டும் கட்டி எழுப்புங் கள் என்று உங்களை உரிமையுடன் கேட்கிறோம்.

நல்லெண்ணம்:

இலங்கையின் மூத்த பழங்குடித் தமிழர்களும் இலங்கை மலையகத் தமிழர்களும் இந்தியாவில் இலகுவாக நல்லெண்ண கல்வி பெற, மாநாடுகளில் பங்கேற்க, மருத்துவ சிகிச்சை பெற, புனித யாத்திரை செய்ய, சுற்றுப்பயணம் செய்ய, உறவினர்களைப் பார்க்க, நிலம் வாங்க, வணிகம் செய்ய, அகதியாக வர, விசா இல்லாமல் வர, இந்திய குடிமகனாக வர, தமிழர்கள் இந்தியாவுடன் ஒரு சிறந்த உறவை கட்டியெழுப்பத் தேவையானவற்றை செய்யுங்கள் என்று உங்களை ஆசையுடன் கேட்டுக் கொள்கிறோம்.

முகாமைத்துவம்:

இலங்கைத் தமிழர்களும் இந்திய நிபுணர்களும் அடங்கிய ஒரு முகாமைத்துவக் குழுவை உருவாக்கி குறிப்பிட்ட தீர்மானங்களை நடைமுறைப்படுத்துங்கள் என்று உங்களைத் தயவாக கேட்கிறோம்.

தீர்மானம் 3 :

ஈழத்தமிழர் வேண்டிநிற்கும் அதிகாரப்பரவாலாக் கத்துடன் கூடிய அரசியல் தீர்வை சிறப்பாக செயல் படுத்துவதில் ஏதாவது சிரமங்கள் ஏற்பட்டால் வடக்கு, கிழக்கு மக்கள், இந்தியாவில் இருக்கும் ஈழத்தவர்கள், புலம் பெயர் நாடுகளில் வாழும் ஈழத்தமிழர்கள் எல்லோரும் பங்கேற்கக் கூடிய சிறையில் ஐ.நா. மேற்பார்வையில் அந்த மக்களின் அரசியல் வேணவாவை அறியும் நோக்கில் ஒரு சர்வ சன வாக்கெடுப்பு நடத்தப்படத்த வேண்டும் என்று இப்பேரவை ஏற்றுக்கொண்டுள்ளது.

தீர்மானம் 4 :

மேற்படி தீர்மானத்தை நடைமுறைப்படுத்தக் கூடிய முறையில் நியமிக்கப்படும் முதன்மைக்குழு புதுச்சேரி முதல்வர் மாண்புமிகு. ந. ரங்கசாமி ஐயா தலைமையில் இந்திய நடுவண் அரசின் மாண்புமிகு. பிரதம மந்திரி நரேந்திர மோடி ஐயா அவர்களின் ஆலோசனையையும் ஆதரவினையும் கோருவதென இப்பேரவை தீர்மானிக்கின்றது

தீர்மானம் 5. தலைமையகத் தேர்தல்

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் தற்போதைய அசாதாரண நிலையைக் கருத்தில் கொண்டு, இயக்கத்தின் உறுப்பினர், மாநிலக் கிளை, தேசியக் கிளை அமைப்புகள் குறித்தக் கீழ்க்கண்ட இத்தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப் பெறுகிறது.

உறுப்பினர் :

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்க சட்ட விதிகளின்படி 18 வயது நிரம்பிய எந்த ஒரு தமிழரும் உறுப்பினராகலாம். கடந்த காலங்களில் உறுப்பினர்களாக சேர்ந்தவர்களின் உறுப்பினர் சந்தா தொகை முறைப்படுத்தப்படாமல் உள்ளதால்

அனைத்து உறுப்பினர்களும் தங்களின் உறுப்பினர் சந்தா தொகையை செலுத்தி மார்ச்சு 2016க்குள் புதுப்பித்து கொள்ளவோ அல்லது புதிதாகவோ சேர்ந்து கொள்ளலாம். உறுப்பினர் சந்தா இரண்டு ஆண்டுகளுக்குச் செல்லத்தக்கது. வளர்ந்த நாடுகளில் உள்ளவர்கள் அமெரிக்க டாலர் 25 செலுத்தி உறுப்பினராக வேண்டும். மற்ற நாடுகளில் உள்ளவர்கள் இந்திய ரூபாய் மதிப்பில் ரூ.250/- செலுத்தி உறுப்பினராக வேண்டும்.

மாநிலக் கிளை :

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்க சட்ட விதிகளின்படி 20 உறுப்பினர்களைக் கொண்ட மாநிலக் கிளையை தேசியக் கிளையின் எழுத்துப் பூர்வமான அனுமதியுடன் உருவாக்கிக் கொள்ளலாம். இக்கிளை தேசியக் கிளையில் 50% உறுப்பினர் கட்டணத்தை செலுத்தி தேசியக் கிளையின் அங்கீகாரத்தை பதிவு செய்த ஆறுமாதத்திற்குள் பெற்றுக் கொள்ள வேண்டும்.

தேசியக் கிளை:

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்க சட்ட விதிகளின்படி தேசியக் கிளை அந்தந்த நாட்டுச் சட்டத்தின்கீழ், மாநிலக் கிளை உறுப்பினர்களை உள்ளடக்கி 25% உறுப்பினர் கட்டணம் அல்லது USD100/- தலைமையகத்திற்கு செலுத்தி தேசிய கிளையாக இயங்க அங்கீகாரம் பெற்றுக் கொள்ள வேண்டும். தேசியக் கிளை அங்கீகாரம் ஒவ்வொரு ஆண்டு சனவரியில் இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை பெற்றுக் கொள்ள வேண்டும்.

தேர்தல் :

தலைமையகத் தேர்தலில் அனைத்து உறுப்பினர்களும் பங்கு பெறத் தகுதி உடையவராவர்.

தலைமையகத் தேர்தலை நடத்துவதற்கு வசதியாக உறுப்பினர் கட்டணம் செலுத்தியுள்ளவர்கள் பெயர் பட்டியலையும் கிளை அமைப்புகளின் பெயர் பட்டியலையும் மார்ச் மாதத்திற்குள் இறுதி செய்து இயக்கத்தின் இணையதளத்திலும் தகுதி பெற்ற உறுப்பினர்களுக்கு மின்னஞ்சல் மூலமும் தெரிவிப்பது எனவும் முடிவு செய்யப்பட்டது. உறுப்பினர்களின் பெயர்ப்பட்டியலை கிளை அமைப்புகள் 25% உறுப்பினர் கட்டணம் அல்லது USD100/- செலுத்தி அங்கீகாரம் பெற்றுக் கொள்ள வேண்டும். அங்கீகரிக்கப்பட்ட கிளைகளின் உறுப்பினர்கள் மட்டுமே தேர்தலில் பங்கேற்க முடியும்.

இவ்வாண்டு இறுதியில் தேர்தல் அலுவலர் நியமிக்கப்பட்டு தலைவருடன் இணைந்து தேர்தலை 2016 டிசம்பர் மாதத்திற்குள் நடத்தி முடிக்க வேண்டும் என முடிவு செய்யப்பட்டது. தேர்வு செய்யப்பட்ட புதிய செயற்குழுவினர் இலங்கையில் அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள பேரவைக் கூட்டத்தில் பொறுப் பேற்றுக் கொள்ள வேண்டுமென தீர்மானிக்கப்பட்டது.

தீர்மானம் 6 : தேசிய / மாநிலக் கிளைகள் அங்கீகரித்தல்

இந்தியாவில் தேசிய கிளை அமைக்க 04.10.2015 முனைவர் பாஞ். இராமலிங்கம் அவர்களை தலை மையகத்தின் சார்பில் நியமித்தோம். அதன்படி உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் தேசிய கிளையைப் புதுச்சேரியைத் தலைமையகமாகக் கொண்டு இந்தியச் சங்கங்களின் சட்டம் 1860இன் கீழ்ப் பதிவு செய்யப்பட்டுள்ள உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் பதிவு எண். 450/2015-ஐ ஒருமனதாக அங்கீகரிப்பது எனவும் தற்போது உறுப்பினர்களாக சேர்ந்துள்ள உறுப்பினர்களை இந்திய ஒன்றியத் தலைமையின் உறுப்பினர்களாகச் செயல்படுவதெனவும் அதன்கீழ் மாநிலக் கிளைகளை உருவாக்கிக் கொள்ளவும் அனுமதித்து தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்படுகிறது. அங்கீகாரக் கட்டணம் USD 100/- பெறுவதெனவும் முடிவு செய்யப்பட்டது.

தீர்மானம் 7 :

அண்மையில் International Movement for Tamil Culture (IMTC) என்ற பெயரில் சென்னை, புதுச்சேரியில் வழக்கு மன்றத்திற்கு சென்றுள்ளவர் களுக்கும் தலைமையகத்திற்கும் யாதொரு தொடர்பும் இல்லை. எனவே அவர்களுக்கு எதிராக உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் இந்தியத் தேசியக்கிளை மேற்கொள்ளும் சட்ட நடவடிக்கைகளுக்கு முழு ஒத்துழைப்பு அளிப்பதென முடிவு செய்யப்பட்டது. மேலும் வழக்குத் தொடர்பாகத் தேவைப்படும் ஆவணங்களை வழங்கவும் ஒருமனதாக முடிவு செய்யப்பட்டது.

தீர்மானம் 8 :

International Movement for Tamil Culture (IMTC) பெயர் மற்றும் இலட்சனையை (logo) இந்தியக் காப்புரிமைச் சட்டத்தின்கீழ் பதிவு செய்ய உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் (பதிவு எண். 450/2015) இந்திய தேசிய கிளைக்கு ஒருமானதாக ஒப்புதல்

அளிக்கப்படுகிறது. புதுச்சேரியில் பதிவு செய்யப்பட்டுள்ள உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் (பதிவு எண். 450/2015) இந்த ஆண்டிற்குள் இப்பணியை முடிக்க வேண்டுமென தீர்மானிக்கப்பட்டது.

தீர்மானம் 9 :

தலைவர் உரையில் குறிப்பிட்ட உலகத் தமிழ்ப் பண்பாட்டு மையத்தை இலங்கை, கிளிநொச்சியில் அமைப்பது என ஒருமனதாக தீர்மானக்கப்பட்டது. திரு. சத்யானந்தம் குறிப்பிட்ட மையம் அமைப்பது தொடர்பாக கருத்துக்களை பேரவைக்கூட்டம் ஒரு மனதாக ஏற்றுக் கொண்டதுடன் திரு. சு. தியாகலிங்கம் குறிப்பிட்ட கருத்தை கவனத்தில் கொண்டு மையத்தை "உலகத் தமிழ்ப் பண்பாட்டு மையம்" என்ற பெயரில் பதிவு செய்து முறையாக அமைக்க ஒருமனதாக முடிவு செய்யப்பட்டது.

தீர்மானம் 10 :

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்க யாப்பு (Bye laws) திருத்தங்கள் பற்றி இறுதி செய்ய தலைவர் தலைமையில் ஐந்து பேர் உறுப்பினர்களைக் கொண்ட குழுவை அமைப்பது எனவும் அதில்,

1. திரு. வி.சு. துரைராஜா – தலைவர்
2. திரு. துரை. கணேசலிங்கம் – செயலாளர்
3. திரு. இ. இராஜசூரியர் – உறுப்பினர்
4. திரு. இரவிச்சந்திரன் – உறுப்பினர்
5. முனைவர் இல. சுந்தரம் – உறுப்பினர்
6. முனைவர் பாஞ். இராமலிங்கம் – உறுப்பினர் – ஒருங்கிணைப்பாளர் இடம் பெறுவர் எனவும் முடிவு செய்யப்பட்டது

இக்குழு யாப்பு திருத்தங்கள் குறித்து தமது அறிக்கையை ஆறு மாதத்திற்குள் தலைமையகத்திற்கு அனுப்ப வேண்டும். அடுத்த பேரவைக் கூட்டத்தில் திருத்தங்களுக்கு ஒப்புதல் பெறப்படும்.

தீர்மானம் 11 :

13வது உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்க மாநாடு ஈழத்தில் கிளி நொச்சி நகரில் 2017 ஆகஸ்டு மாதத்தில் நடைபெற ஒரு மனதாக ஒப்புதல் அளித்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தீர்மானம் 12 :

புதுச்சேரி அரசின் சுற்றுலாத் துறை அமைச்சகத்தின் அங்கீகாரத்துடன் மாணவர்கள் கனடா, அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள், தென்னா பிரிக்கா போன்ற நாடுகள் மாணவர் பரிமாற்ற திட்டப் படி நிகழ்ச்சி மாற்றம் செய்யும் நிகழ்ச்சி திட்டம் புதுச்சேரி மாநில அரசும் உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கமும் புரிந்துணர்வு அடிப்படையில் மொழி, பண்பாடு தொடர்புகள் பரிமாற்ற புரிந்துணர்வு ஒப்பந்தம்செய்வதென முடிவு செய்யப்பட்டது.

தீர்மானம் 13 :

தமிழ்நாட்டில் உள்ள எஸ்.ஆர்.எம் பல்கலைகக் கழமும், உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கமும் இணைந்து தமிழ்ப் பண்பாட்டு மையம் ஒன்றை பல்கலைக்கழகத்துடன் அமைப்பது. உலகில் தமிழ்ப் படிக்க வசதி இல்லாத தமிழ்க் குடும்பங்கள் எஸ்.ஆர்.எம் பல்லைக்கழகத்துடன் அவர்களின் பாடசாலையில் விடுமுறை காலங்களில் அங்குச் சென்று மூன்று மாதம், படித்து தமிழ் மொழியையும் பண்பாட்டு விழுமியங்களையும் படிக்க எஸ்.ஆர்.எம். பல்கலைக்கழகம் ஒப்புதல் தந்துள்ளது. புலம் பெயர் நாடுகளில் வாழுகின்ற இந்தியத் தமிழர்கள் ஈழத் தமிழர்களை அடையாளம் கண்டு அவர்களின் திறமைகள், அவர்களின் சாதனைகளை வெளிக் கொணரும் நோக்கில் ஆண்டு தோறும் உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கமும், எஸ்.ஆர்.எம். பல்கலைக் கழகமும் இணைந்து வழங்கும் விருது விழா அடுத்த ஆண்டில் ஆரம்பமாக உள்ளதை அங்கீகரித்து எஸ்.ஆர்.எம். பல்கலைக்கழகத்தின் வேந்தருக்கு நன்றி தெரிவித்து இத்தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

தீர்மானம் 14 :

இவ்வாண்டு மார்கழி மாதம் தொடக்கம் அயலகத் தமிழர் நுண்கலை விழா உலகின் எல்லா இடங்களிலிருந்தும் தமிழ் மாணவர்கள் பங்கு கொண்டு நடாத்தும் அயலகத் தமிழ் மாணவர்கள் நுண்கலைத் திருவிழா நடைபெற ஏற்பாடாகியுள்ளது. இவ்விழா எஸ்.ஆர்.எம். பல்கலைக்கழகத்தில் இடம்பெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதை இப்பேரவை மகிழ்வுடன் ஏற்கிறது.

மேற்கண்ட தீர்மானங்கள் ஒருமனதாக ஏற்கப் பெற்றதைத் தொடர்ந்து சிறப்பு அழைப்பாளர்கள் இலங்கை மாநாட்டைச் சிறப்பாக நடத்துவதற்கு முழு ஒத்துழைப்பு அளிப்பதாக உறுதி அளித்தனர்.

தலைவரின் நன்றி நவிலலுடன் சிறப்புப் பேரவைக் கூட்டம் இனிது நிறைவுற்றது.

(வி.சு. துரைராஜா)
தலைவர்

(துரை. கணேசலிங்கம்)
பொதுச்செயலர்

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்க பன்னாட்டுச் சிறப்பு மாநாடு அறிக்கை

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தில் அகிலத் (கனடா) தலைமையகமும் இந்தியத் தலைமையகமும் இணைந்து புதுச்சேரியில் இரண்டு நாள் சிறப்பு மாநாடும் பேரவைக் கூட்டமும் நடத்தின.

திருவள்ளுவராண்டு 2047, தைத்திங்கள் 2,3- ஆகிய இரு நாட்களில் (சனவரி - 16. 17- 2016 ஆம் ஆண்டு புதுச்சேரி, வள்ளலார் சாலையில் அமைந் துள்ள வேல். சொக்கநாதன் திருமண நிலையத்தில் மாநாடு நடைபெற்றது.

"அயல் நாடுகளில் வாழும் தமிழர்கள் எதிர்நோக்கும் சவால்களும், வாய்ப்புகளும்" என்ற பொதுப் பொருண்மையை அடியொற்றி பன்னாட்டு அறிஞர்களும், கவிஞர்களும் பங்கேற்று கருத்துக் களை வழங்கினர். கட்டுரை, ஆய்வுரை, கவிதை எனப் பல வடிவிலும் அமைந்த கருத்துக்களுக்கு ஏற்ப மாநாட்டில், சிறப்பரங்கம், கருத்தரங்கம், கவியரங்கம் எனத் தனித்தனி அமர்வுகள் அமைக்கப்பெற்றன. மேலும் தமிழரின், மொழியின் தொன்மையை அனைவரும் அறியும் பொருட்டு தொல்லியல் துறை, தமிழர் கணக்கியல்துறை, புத்தக வெளியீட்டகம் ஆகியவற்றின் கண்காட்சிகளும் நடத்தப்பெற்றன.

16.01.2016 அன்று காலை 10.30 மணிக்கு மாநாட்டின் தொடக்க விழா உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்க இந்தியத் தலைமையின் தலைவர் திருமதி. மாலதி ராஜவேலு அவர்களின் வரவேற்புரையோடு தொடங்கியது. இயக்கத்தின் இந்தியத் தலைமைச் செயலர் முனைவர். பாஞ். இராமலிங்கம் நோக்கவுரையாற்றினார். அகிலத் தலைவர் திரு. வி.சு. துரைராஜா ஆண்டறிக்கை வாசித்தார்.

புதுச்சேரி மாண்புமிகு நாடாளுமன்ற உறுப்பினர் திரு. இரா. இராதாகிருஷ்ணன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற தொடக்க விழாவில் புதுச்சேரி மாண்புமிகு முதல்வர் திரு. ந. ரங்கசாமி அவர்கள் மாநாட்டு விழா மலரை வெளியிட்டு தொடக்கவுரையாற்றினார்.

தமிழ்ப் பேராய புரவலரும், எஸ்.ஆர்.எம் பல்கலைக்கழகத்தின் வேந்தருமான முனைவர் தா. இரா. பாரிவேந்தர் அவர்கள் மாநாட்டுச் சிறப்புரை யாற்றினார். தமிழின் மேன்மைக்காக உலகின் பல நாடுகளிலும் அயராது முயன்றுவரும் சான்றோர்கள் தேர்வு செய்யப்பெற்று அவர்களுக்கு இயக்கத்தின் சார்பில் வைரத் தமிழர் விருது மற்றும் உலகத் தமிழ்க் கல்வியாளர் விருதும் சிறப்பு விருந்தினர்களுக்கு உலகத் தமிழ்க் காப்பாளர் விருதும் வழங்கப்பட்டது.

உலகத் தமிழ்க் கல்வியாளர் விருது

திரு. தா. இரா. பாரி வேந்தர் அவர்கள்
(வேந்தர், SRM பல்கலைக்கழகம், சென்னை)

விழாவில் வைரத் தமிழர் விருது பெற்றோர்

1. திரு. வி.சு. துரைராஜா
(அகிலத் தலைவர்,
உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம், கனடா)
2. திரு. ந. நல்லுசாமி
(முன்னாள் தமிழக அமைச்சர், திருச்சி)
3. திரு. துரை. கணேசலிங்கம் (ஜெர்மனி)
4. பெருங்கவிக்கோ வா.மு. சேதுராமன்
(சென்னை)
5. திரு. சிவஞானம் சிறீதரன் (இலங்கை)
6. பாவலர் க. தமிழமல்லன்
(சிறப்பாசிரியர், வெல்லும் தூயத்தமிழ்,
புதுச்சேரி)
7. திரு. வேணு செட்டியார் (பிரான்சு)

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் சார்பில் "உலகத் தமிழ்க் காப்பாளர்" விருது பெற்றோர்.

1. திரு. ந. ரங்கசாமி
மாண்புமிகு முதலமைச்சர், புதுச்சேரி
2. திரு. வ. சபாபதி (எ) கோதண்டராமன்
மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர்,
புதுச்சேரி.

3. திரு. பெ. இராஜவேலு,
மாண்புமிகு நலம் மற்றும் சுற்றுலா அமைச்சர்,
புதுச்சேரி.

4. திரு. என்.ஜி. பன்னீர்செல்வம்
மாண்புமிகு உள்ளாட்சி அமைச்சர், புதுச்சேரி

5. திரு. T. தியாகராஜன்
மாண்புமிகு மின்துறை காப்பாளர், புதுச்சேரி

6. திரு. இரா. சிவா
மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர்,
புதுச்சேரி

7. திரு. இராதாகிருஷ்ணன்
மாண்புமிகு நாடாளுமன்ற உறுப்பினர்,
புதுவை

8. திரு. வி. பாலன்
சட்டப்பேரவை உறுப்பினர், புதுச்சேரி

9. திரு. வி.எஸ். இராதாகிருஷ்ணன்
மாண்புமிகு கல்வி இணை அமைச்சர்,
இலங்கை

10. திரு. மாவை. சோ. சேனாதிராஜா
மாண்புமிகு நாடாளுமன்ற உறுப்பினர்,
இலங்கை

11. திரு. சிவஞானம் சிறீதரன்
மாண்புமிகு நாடாளுமன்ற உறுப்பினர்,
இலங்கை

12. திரு. ஈஸ்வரபாதம் சரவணபவன்
மாண்புமிகு நாடாளுமன்ற உறுப்பினர்,
இலங்கை

13. திரு. அரியநாயகம் கவிந்திரன் கோடீஸ்வரன்
மாண்புமிகு நாடாளுமன்ற உறுப்பினர்,
இலங்கை

14. நீதியரசர் தாவிதன்னுசாமி
புதுச்சேரி

15. டாக்டர். எஸ். செகத்ரட்சகன்
மேனாள் மத்திய அமைச்சர், சென்னை

புதுச்சேரி அரசின் மாண்புமிகு சமூக நலம் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. பெ. இராஜவேலு மாநாட்டில் பாராட்டுரை வழங்கிட தொடர்ந்து இலங்கையின் மாண்புமிகு கல்வியமைச்சர் திரு. ப. இராதாகிருஷ்ணன் சிறப்புரையாற்றினார்.

உலகத் தமிழ் பண்பாட்டு இயக்க அகிலத் (கனடா) தலைமையக் கொள்கைப் பரப்புச் செயலர் திரு. நடராஜகுமார் வாழ்த்துரை வழங்கிட இந்தியத் தலைமையின் பொருளாளர் கோ. முருகன் நன்றி நவில தொடக்க விழா இனிதே நிறைவுற்றது.

நண்பகல் 12.00 மணிக்கு அயல்நாடுகளில் தமிழ்க் கல்வி, சவால்களும் வாய்ப்புகளும் என்னும் பொருண்மையில் நடைபெற்ற சிறப்பரங்கில் எஸ்.ஆர்.எம். பல்கலைக்கழகத் தமிழ்ப் பேராயத்தில் பணியாற்றும் பேராசிரியர் முனைவர் இல. சுந்தரம், ஜப்பான் நாட்டைச் சேர்ந்த பொறியாளர் திரு. சா. பாலமுருகன், இலங்கை, நாடாளுமன்ற உறுப்பினர் திரு. சிவஞானம் சிறீதரன் ஆகியோர் பங்குபெற்று முறையே தலைமையுரை, முன்னிலையுரை, சிறப்புரை ஆற்றிட இயக்கத்தின் அகிலச் செயலர் திரு. துரை கணேசலிங்கம் அவர்கள் இயக்க வரலாற்றினை வழங்கினார்.

16.01.2016 அன்று பிற்பகல் 2.30 மணியளவில் தொடங்கப் பெற்ற கருத்தரங்க அமர்வு அயல் நாடுகளில் வாழும் தமிழர்கள் எதிர்நோக்கும் சாவல்கள், வாய்ப்புகள் என்னும் இரு பொருண்மை யில் நடைபெற்றது.

சாவல்கள் என்னும் பொருளில் அமைந்த அமர்விற்கு இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர். ஈடி அண்ணல் மாண்புமிகு மாவை. சோ. சேனாதிராஜா அவர்கள் தலைமையேற்றார். இந்த அமர்வு சார்ந்த பொருளில் திருமதி ஆ. சுலோச்சனா, சென்னை, முனைவர். வீ. செல்வப்பெருமாள், காரைக்கால், பாவலர். ப. குப்பன், திருவண்ணாமலை, புலவர். சு. பச்சையம்மாள், வேட்டவலம், முனைவர். அரங்க. முருகையன், புதுச்சேரி, தேசிய விருளர். திரு. செ. ஆதவன், புதுச்சேரி ஆகியோர் பங்கேற்று ஆய்வுரை வழங்கினர்.

வாய்ப்புகள் என்னும் பொருளில் அமர்ந்த அமர்விற்கு இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர் மாண்புமிகு சிவஞானம் சிறீதரன் அவர்கள் தலைமையேற்றார். இந்த அமர்வில், முனைவர். மு. இளங்கோவன், புதுச்சேரி, முனைவர். ப. காந்தி, வேட்டவலம், புலவர். லதா பிரபுலிங்கம், திருவண்ணா மலை, புலவர். அ. வாசுதேவன், திருவண்ணாமலை ஆகியோர் பங்கேற்று கருத்துக்களை வழங்கினர்.

16.01.2016 பிற்பகல் 4.00 மணியளவில் நடைபெற்ற திருவள்ளுவர் 2047 மற்றும் பாவேந்தர் 125 என்னும் பொருளிலான கவியரங்கிற்கு உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் தமிழகக் கிளையின் அமைப்பாளர், பெருங்கவிக்கோ. வா.மு.சேதுராமன்

அவர்கள் தலைமையேற்றார். இதில் திருக்கோவிலூர் தமிழ்ச் சங்கத் தலைவர் கவிமாமணி சிங்கார. உதியன் முன்னிலை வகித்தார். கவியரங்கில், புலவர்கள், குடியாத்தம் குமணன், திருவண்ணாமலை கோவிதராஜ், வேட்டவலம், தங்க. விஸ்வநாதன், பாவரசு மு. கண்ணன், கவிஞர் நல்ல பன்னீர்செல்வம் மற்றும் பலர் கவி முழுங்கினர்.

மாலை 4.00 மணியளவில் உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் பன்னாட்டு அமைப்புகளின் நிர்வாகிகள், உறுப்பினர்கள் மட்டும் பங்கேற்ற சிறப்புப் பேரவைக் கூட்டம் நீதியரசர் தாவிதன்னுசாமி முன்னிலையில் திரு.வி.சு. துரைராஜா, அகிலத் தலைவர், உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் அவர்கள் தலைமையில் புதுச்சேரி, காமராசர் சாலையில் அமைந்துள்ள ஜெயராம் உணவகத்தில் நடைபெற்றது.

17.01.2016 காலை 9.30 மணிக்கு மாநாட்டின் இரண்டாம் நாள் முதல் நிகழ்வாக சிறப்பரங்கம் தொடங்கியது. இயக்கத்தின் இந்தியத் தலைமையின் இணைச்செயலர் முனைவர். வீ. செல்வப்பெருமாள் அவர்கள் வரவேற்புரை நல்கவும், புதுச்சேரி அரசின் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர். திரு. என்.ஜி. பன்னீர்செல்வம் அவர்கள் தலைமை யேற்றிடவும், டாக்டர். ஆனந்த பாலயோகி பவனானி, கவிஞர். எம். இலியாஸ், பேராசிரியர். இரா. ச. குழந்தைவேலனார் ஆகியோர் சிறப்புரை வழங்கவும் சிறப்பரங்கம் இனிதே நடைபெற்றது. இதில் தமிழர் கலை-பண்பாடு என்னும் பொருளில் முனைவர். கேசவ. பழனிவேலு, முனைவர். இரா. சம்பத், செல்வி. விசாலாட்சி, திரு. பழமலை கிருஷ்ணமூர்த்தி, குவைத்து ஆகியோர் கருத்துக்களை வழங்கினர்.

17.01.2016, 10.30 மணிக்கு தொடங்கப்பெற்ற மூன்றாவது அமர்வில் பிரான்சு – புதுச்சேரி தமிழர் வளங்கள் என்னும் தலைப்பிலான கருத்தரங்க அமர்விற்கு புதுவைப் பல்லைக்கழக மேனாள் பிரெஞ்சுப் பேராசிரியர் இரா. வெங்கட்டராமன் அவர்கள் தலைமையேற்றார். புதுச்சேரி பாரதிதாசன் மகளிர் கல்லூரி தமிழ்த் துறைத்தலைவர் முனைவர். சி. சத்தியசீலன் சிறப்புரையாற்றினார். பிரான்சு – புதுச்சேரி – தமிழர் வளங்கள் என்னும் பொருண்மை யில் புதுவைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் முனைவர் பாஞ். இராமலிங்கம், அலியான்ஸ் பிரான்சைஸ் தலைவர் திரு. எஸ். ஆனந்த வடிவேலு, தாகூர் கலைக் கல்லூரி பேராசிரியர் முனைவர். வெங்கடசுப்புராய நாயக்கர், புதுவைப் பல்கலைக் கழகப் பேராசிரியர் முனைவர் மு. கருணாநிதி மற்றம் பிரான்சைச் சார்ந்த திரு. இராமசாமி சகாதேவன், முனைவர் அலெக்சிஸ் தேவராஜ் சேர்மார்க் ஆகியோர் ஆய்வுரைகளை வழங்கினர்.

17.01.2016 – 10.30 மணிக்குத் தொடங்கப் பெற்ற நான்காவது அமர்வில் இலங்கை – இந்தியத் தமிழர் வளங்கள் என்னும் பொருளிலான அமர்விற்கு புதுவைத் தமிழ்ச் சங்கத் தலைவர். திரு. வி.முத்து அவர்கள் தலைமையேற்றார். பிரெஞ்சிந்திய புதுச்சேரி பிரதேச விடுதலைக் கால மக்கள் நற்பணி இயக்க தலைவர். திரு. துரை. சிவராஜ் அவர்கள் முன்னிலை வகிக்க, அமர்வுப் பொருளில், திரு. சா. பிரசாந்தன் (இலங்கை) கு.ப. தங்கவேல் (புதுவை), இரா. திவாகரன் (யாழ்ப்பாணம்), அரசரத் தினம் சிவனேசன் (இலங்கை) ஆகியோர் கருத்துரை வழங்கினர்.

17.01.2016-11.30 மணிக்கத் தொடங்கப்பெற்ற ஐந்தாவது அமர்வில் கருத்தரங்க அர்வில் திருவள்ளு வர் மன்றம் திரு. சுந்தர. லட்சுமிநாராயணன் அவர்கள் முன்னிலை வகிக்க, தாகூர் கலைக்கல்லூரி பேராசிரியர் முனைவர். ந. இளங்கோ அவர்கள் தலைமையேற்றிட அமெரிக்காவைச் சார்ந்த திரு. நாஞ்சில். பீட்டர் அவர்கள் சிறப்புரை வழங்கினார். கருத்தரங்கில், திரு. செல்லையா சிவராஜசிங்கம் (சுவிஸ்), கனகசபை அறியரத்தினம் (பிரான்சு), திரு. சு. தியாகலிங்கம் (நார்வே), கோபி. ரமேஷ் (நெதர்லாந்து), இரவிச்சந்திரன் மாணிக்கம் (கனடா), திரு.கேசவன் மகேசன் (கனடா) ஆகியோர் பங்கேற்று ஐரோப்பியத் தமிழர் வளங்கள், அமெரிக்க – கனடா தமிழர் வளங்கள் என்னும் பொருண்மைகளில் கட்டுரை வழங்கினர்.

17.01.2016 பிற்பகல் 3.30 மணியளவில் மாநாட்டு நிறைவு விழா தொடங்கியது. மேனாள் இந்திய மத்திய அமைச்சர். டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் அவர்கள் விழாவிற்குத் தலைமையேற்றார். முன்னாள் பிரெஞ்சு மேலவை உறுப்பினர் செவாலியர் துபாய் குழந்தை அவர்கள் முன்னிலை வகித்தார். இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர் ஈழ அண்ணல் திரு. மாவை. சோ. சேனாதிராஜா அவர்கள் பங்கேற்றுச் சிறப்புரை வழங்கினார். புதுச்சேரி அரசின் பேரவைத் தலைவர் மாண்புமிகு வ. சபாபதி (ஏ) கோதண்டராமன் அவர்கள் விழாவில் பங்கேற்று,

தமிழ்மாமணி சீனு. இராமச்சந்திரன் அவர்கள் எழுதிய "புதுவைக்குயில்" என்னும் நூலினை வெளியிட்டு நிறைவுரை ஆற்றினார்.

விழாவில் தமிழ்த் தொண்டன் பாரதி கழகத்தின் சார்பில் புதுவை மண்ணில் மொழித் தொண்டாற்றிய திருமதி. மாலதி. இராஜவேலு, முனைவர் பாஞ். இராம லிங்கம், புலவர் அரங்க. நடராஜன், பேராசிரியர் வே. சா. திருமாளவளன், செவாலியர் ச. மதனகல்யாணி, பாவலர் அ. உசேன் ஆகியோருக்கு விருது வழங்கி சிறப்பிக்கப்பட்டது. மேலும் உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் சார்பில். திரு. ச. பரதபுண்ணியன், சு. வெங்கடாசலம், ஆ. சுப்பிரமணியன் ஆகியோ ருக்கு உலகத் தமிழ்க் காவலர் விருதுகள் வழங்கப் பட்டன. மாநாட்டில் பங்கேற்ற அனை வருக்கும் சான்றிதழ்களும் நினைவுப் பரிசுகளும் வழங்கப் பட்டன. பேரவைக் கூட்டத்தில் நிறைவேற்றப் பட்ட தீர்மானங்களை மாநாட்டுத் தீர்மானங்களாக திரு. வி.சு. துரைராஜா அவர்கள் வாசித்தார்.

இருநாள் நிகழ்விலும் தலைமை, முன்னிலை, சிறப்புரை, சிறப்பரங்கம், கருத்தரங்கம், கவியரங்கம், பங்கேற்பு, ஒளி அமைப்பு, செய்தி பரப்பு, என அவர்கள் பணியினைத் மேம்பட ஆற்றி மாநாட்டு வெற்றிக்கு உதவிய அனைவருக்கும் இணைச் செயலர் முனைவர் வீ. செல்வப்பெருமாள் அவர்கள் நன்றி நவில இரவு 8.00 மணியளவில் விழா இனிதே நிறைவுற்றது.

மாண்புமிகு சுற்றுலா அமைச்சர் திரு. பெ. இராஜவேலு புதுவை சீகல்ஸ் உணவகத்தில் இரவு விருந்து அளித்து பேராளர்களைச் சிறப்பித்து வழியனுப்பினார்.

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம்
INTERNATIONAL MOVEMENT FOR TAMIL CULTURE
Non-Profit, Non-Political, Non-Religious, Charitable, Worldwide Registred, tamil Cultural Organization - Est. in 1974
Head Office 5310 Finch Ave. East, Unit #10, Toronto, Ontario M1S 5E8
Tel: 1.647.829.4044 email: raja@cfsginc.com
www.imtcweb.com

பிரான்ஸ் செப்டம்பர் 11ம், 12ம் நாள் 2016 சிறப்பு மாநாடும் பேரவைக் கூட்டமும் செயலாளர் நாயகம் அறிக்கை



உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் தம்பணியில் ஒரு வரலாற்றுச் செய்தியினை எட்டியுள்ளது. அடுத்த உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் 13வது உலக மாநாடு இலங்கையின் கலாசாரத் தலைநகர் யாழ் மாவட்டத்தில் உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் 43 ஆண்டுகளுக்கு முன்னர் உருவாக்கப்பட்ட அதே மண்ணில் 2017ம் ஆண்டு இடம் பெறவுள்ளது, என்னும் வரலாற்றுச் செய்தியினை விடுப்பத்தில் பேருவகை கொள்கின்றோம். 1974ம் ஆண்டு தைத்திங்கள் 8ம் நாள் ஒன்பது தமிழர்கள் உயிர்நீத்த நிகழ்வு இடம் பெற்ற யாழ் மாவட்டத்தில் இடம் பெறவுள்ளது. அதே வேளை உலகத் தமிழர்களை இணைக்கும் உலகத் தமிழர்க்கான தமிழர் பண்பாட்டு மையம் நிறுவப்பட உள்ளது.

இதன் ஊடாக தமிழர் மொழி பண்பாடு எதிர்நோக்கும் சவால்களும் முன்னெடுப்பக்களும் என்னும் கருப்பொருள் கொண்டு உலகத் தமிழினை ஒன்றிணைக்கும் மாநாடாக இம்மாநாடு அமைய உள்ளது. இதுவரை உலகளாவிய மாநாடுகள் மூலம் தமிழ்க் கலை பண்பாட்டினை உலகிற்குக் காண்பித்ததுடன் தமிழன்னை தமிழ் மொழிக்கல்வி தமிழர் வரலாறு ஆவணசேமிப்பு தூய தமிழ் வழக்கு தமிழில் செம்மொழி உருவாக்கம் உலகத் தமிழர் ஒற்றுமை பேணல் தமிழ் வழி இறைவழிபாடு தமிழ் மரபுகளை நிலைப்படுத்தல் தமிழர் இறையாண்மை தமிழர் பாதுகாப்பு தமிழ்க் கலை மீட்பு தமிழ்க் கல்வி தமிழ் நிறுவனங்கள் ஒருங்கிணைப்பு மறைந்த மறைக்கப்பட்ட வரலாற்றுத் தேடல்கள் எதிர்காலத் தமிழன் எதிர்நோக்கும் சவால்கள் போன்ற ஆய்வுகள் கொண்டதாகவும் தமிழ் தமிழர் வாழ்வு பாதுகாக்கப்பட வேண்டும் என்னும் நோக்குடனும் இம்மாநாடு அமைகின்றது.

கடந்த 2016 செப்டம்பர் 11ம், 12ம் நாட்களில் பிரான்சின் தலைநகரான பாரீசில் இடம்பெற்ற உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் சிறப்பு மாநாடானது பாரீசில் அமைந்துள்ள Salle

Saint Michel, 21 Avenue de Saint-Ouen, 75018 Paris, (Metro: La Fourche மாநாட்டு மண்டபத்தில் வெகு சிறப்புடன் ஆரம்பமாகியது. பெங்களூரில் இருந்து வருகை தந்திருந்த உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் அகில சட்ட ஆலோசகர் அம்பெட்கார் சட்டக் கல்லூரி முதல்வர் பேராசிரியர் சி. இராமமூர்த்தி அவர்கள் நாடாவினை வெட்டித் திறந்து வைத்ததனைத் தொடாந்து இயக்கத்தின் அகிலத் தலைவர் திரு. வி.சு. துரைராஜா அவர்களும் செயலாளர் நாயகம் துரை கணேசலிங்கம் அவர்களும் நுழைவாயிலின் மங்கள விளக்கினை ஏற்ற பிரானஸ் கிளைத் தலைவரும் சிறப்பு மாநாட்டுத் தலைவருமான திரு. கனகசபை அரியரத்தினம் அவர்களாலும் அவர்தம் குழுவினராலும் உலகெங்கிலும் இருந்து வந்த உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கப் பிரதிநிதி கள் பொதுமக்கள் ஆகியோர் மண்டபத்தினுள் அழைத்து வரப்பட்டனர். தொடர்ந்து மண்டபத்தில் அமைக்கப்பட்டிருந்த தமிழன்னையின் பீடத்து விளக்குகளை இலங்கை கிழக்குமாகாண நாடாளுமன்ற உறுப்பினர் கௌரவ பசுபதிப் பிள்ளை அவர்களும் ஏற்றிவைத்தனர் அரங்கி லிருந்த பொதுச்சுடரானது இங்கு வந்திருந்த முக்கிய பிரமுகர்களால் ஏற்றிவைக்கப்பட்டது மறைந்த எம் மாவீரர்கள் இயற்கை அனர்த்தத் தால் எம்மிடம் இருந்து காலம் பிரித்து விட்ட எம் உறவுகள் எம் தமிழ் மொழிவாய் உயிர்தந்து உயிர் துறந்த பொதுமக்கள் மேலும் உலகின் சமாதானம் நிலைக்க அமைதி வணக்கம் செலுத் தப்பட்டதுடன் விழா இனிதே ஆரம்பமாகியது. விழாத் தலைவர் திரு. கனகசபை அரியரத்தினம் அவர்களின் வரவேற்பு உரையையும் உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்க அகிலத்தலைவர் வி.சு. துரைராஜா அவர்களின் தலைமை உரையையும் தொடர்ந்து இயக்கத்தின் சட்ட ஆலோசகர் முனைவர் சி. இராமமூர்த்தி அவர்கள் உரை நிகழ்த்தினார். கௌரவ பாராளு மன்ற உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரன் மாகாணசபை உறுப்பினர் கௌரவ பசுபதிப்பிள்ளை உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்க யேர்மன் கிளைத் தலைவர் திரு. இ. இராஜசூரியர் ஆகியோரும் உரை நிகழ்த்தினர்.

நிகழ்வில் பாரீஸ் ஈஸ்வரங்கள் கல்வி நிலைய மாணவ மாணவிகள் பல நிகழ்வுகளை நிகழ்த் தினர். தமிழரின் வரலாற்றுத் தொன்மை என்னம் கருத்தமர்வும் இடம் பெற்றது. யாழ் பாராளு மன்ற உறுப்பினர் கௌரவ மாவை சேனாதிராஜா அவர்களை மாலையிட்டு பொன்னாடை போர்த் திக் கௌரவிக்கப்பட்டார். விழாவுக்கான சிறப்பு மலர் அவரினால் வெளியிடப்பட்டது. நேரம் போதாமையினால் நிகழ்வுகள் மாறு நாளைக்கு ஒத்திவைக்கப்பட்டது.

மறுநாள் 12ம் திகதி பாரீஸ் 18ல் உள்ள ம ண்டபத்தில் காலை சிற்றுண்டியைத் தொடர்ந்து அனைத்துலக சிறப்புப் பேரவைக்கூட்டம் 10.00 மணிக்கு ஆரம்பமாகியது. இந்நிகழ்வில் யாழ் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ மாவை சோ. சேனாதிராஜா அவர்கள் உரை நிகழ்த்தி னார். அவர் உரையாற்றுகையில் உங்களது ஒவ்வொரு கலந்து உரையாற்றி இருக்கின்றேன். நீங்கள் அரசியலில் இல்லாவிட்டாலும் அரச ஆதரவு இருக்கும்போது தான் செயற்திட்டங் களை மேற்கொள்ள உதவியாக இருக்கும். இலங்கையில் மாநாடு நடாத்துவதில் எமது பங்களிப்பு அவசியமானது எமது மக்கள் தந்த ஆணையை நிறைவேற்றுவதற்கு சந்தர்ப்பங் களைச் செயற்படுத்துகின்றோம். நாம் எதையும் விட்டுக்கொடுத்துஅரசியற்தீர்வைஏற்றுக்கொள்ள மாட்டோம் மனித உரிமைச் செயலர் முதல் பலருடன் பேசுகின்றோம். நாம் அன்றாட அரசியற் பிரச்சனையைத் தீர்ப்பதற்கு உலகுடனே இணைந்து செயற்பட்டு வருகின்றோம். மக்கள் எம்மைத் தெரிவு செய்துள்ளார்கள். நெருப்புக்கு ஊடாக நடக்கின்றோம். நாம் பரம்பரையான பண்பாடுகளைக் கொண்டவர்கள ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும் இலட்சக்கணக்கான மக்களைப் பலிகொடுத்து தமிழ் அழிந்து விடாம லிருக்க எமது மொழியினைப் பாதுகாக்கின்றோம். இலங்கை அரசியல் சுழமைவிற்குள் பேச முடியாதுள்ளது இந்திய அரசு எடுக்கும் முயற்சி போதாதுள்ளது. அவர்களுடன் நாம் பங்களிப்புச்

செய்கின்றோம். ஐக்கிய நாடுகள் சபை யுனஸ்கோவில் எமது நிறுவனம் அங்கீகாரம் பெற வேண்டும் எமது அடையாளங்கள் அதிக மாக அங்கு இல்லை.

1. இலங்கையில் அடுத்த ஆண்டு மாநாடு இடம்பெற இருக்கிறது.
2. யுன்ஸ்கோ உதவி எமக்குத் தேவை
3. அந்தந்த நாட்டு அரசுகளுடன் இணைந்து பலம் பெற வேண்டும்.
4. இலங்கை மாநாடு செயற்பாடு தொடர்பாக அனைத்து உதவிகளும் செய்யப்படும்
5. தமிழ் மொழி பாடத் திட்டம் உருவாக்குவது சம்பந்தமாக பல்கலைக் கழகங்களுக்கு உரிய இடம் இருக்க வேண்டும் பல்கலைக் கழக நிருவாகத்துடன் பேச வேண்டும்.
6. உலக மாநாட்டுக்கு இணையாக இலங்கை யில் இடம்பெறவிருக்கும் 13வது உலக மாநாடு வெற்றி பெற வேண்டும். தமிழர் களிடம் பல பிரச்சனைகள் உண்டு கல்வித் துறையில் நாம் பின்தங்கிய நிலையில் உள்ளோம்.
7. கலை கலாச்சாரங்களை பேணிப் பாதுகாத்து மேம்படுத்த வேண்டும். பல்கலைக்கழகத்தில் தமிழர்கள் எண்ணிக்கை போதாது. மாணவர்கள் விஞ்சானத்துறையில் அனுமதி வீழ்ச்சி பெற்றுள்ளது.
8. எமது கலை கலாச்சாரம் அழிந்து போகாமல் பாதுகாப்பதற்கு நாம் வழிகாட்டிகளாக இருக்க வேண்டும். ஆவணக் காப்பகக் கட்டிடம் காணி ஒழுங்குகளை செயற்பாட்டில் எடுக்க வேண்டும். சுனாமியின் பின் அழிந்து போன பல கட்டிடங்களைத் தேடிக்கண்டு பிடித்துத் தொகுக்க வேண்டும். பொதிக மலை ஆறு திருக்கதீஸ்வரம் பாலாவி வரை வந்தது. தாழிகள் புதைக்கும்முறை சாட்டியில் இடம் பெற்றுள்ளது தெரிய வந்துள்ளது. 14 அல் லது 15 அடி ஆழத்தினுள் தாழிகளின் புதைவு இடம் பெற்றுள்ளது. புதைக்கப்பட்டவை நாம் வணங்கிய தெய்வங்கள் பண்பாட்டு ஆவணங்கள் இவைகளை நாம் பதிவு செய்யவில்லை எனின் எமது ஆதி மனித எலும்புக்கூடுகள் தவறாகப் பதிவு செய்யப்படும். தமிழர்களின் சின்னங்கள் கிடைக்காதுள்ளது. தமிழர்களின் உடல்கள் எரிக்கப்படுகின்றன. உடலங்கள் புதைக் கப்பட வேண்டும். நடுகல் வழிபாட்டு முறை கொண்டு வரப்பட வேண்டும். தமிழ் உலகெங்கும் வளர வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

அகிலத் தலைவர் திரு. துரைராஜா அவர்கள் குறிப்பிடுகையில் உலகத் தமிழ்ப் பண்பாட்டு மையத்தில் ஆவணக்காப்பகம் இடம் பெறும் என்றும் அதனைப் பெற்றுக்கொள்வதற்குரிய செயற்பாடுகள் திரு. சோ. தங்கராசா அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

சென்ற கூட்ட செயலாளர் அறிக்கை செயலாளர் நாயகம் திரு. துரைகணேசலிங்கம் அவர்களினால் வாசிக்கப்பட்டு ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டதுடன் தற்போது இயங்கிக் கொண்டிருக்கும் தலைமை ஆட்சிக்குழுவுடன் இணைந்து செயற்பட புதிய பொறுப்பாளர் தெரிவும் இடம்பெற்றது.

குழுக்கள் ஏற்படுத்தப்பட்டன

ஒழுங்காற்றுக்குழு

திரு. சோ. தங்கராசா, முனைவர் இராம. சிவலிங்கம், முனைவர். பாஞ். இராமலிங்கம் அவர்கள் இணைந்து தலைமையகத்தின் ஒப்புதலுடன் முனைவர் சிவ. இராமமூர்த்தி அவர்களின் பொறுப்பாண்மையில் செயற்படல், செயற்பாட்டுக் கடிதங்கள் யாவும் செயலாளர் நாயகம் ஊடாக நிருவாகச் செயலாளரால் வரையப்பட்டுக் கையாளப்படும்.

யுனஸ்கோ பொறுப்பாளர்

திரு. மைக்கல் கொலின்ஸ், பிரான்ஸ்

இயக்க ஆலோசகர்

திரு. சோ. தங்கராஜா, யேர்மனி

மகளிர் அணி பொறுப்பு

திருமதி. மாலதி இராஜவேல், இந்தியா

ஆசிய ஒன்றியத் தலைவர்

கலாநிதி பாஞ். இராமலிங்கம்

நிதிக்குழு 42 ஆண்டுகளாக இன்றுவரை தலைமையகத்தினால் தலைவர் அறிக்கை பொருளாளர் அறிக்கை சமர்ப்பிக்கப்பட

வில்லை எனவும் அதனை நிவர்த்தி செய்யும் முக மாக 12வது உலக மாநாட்டில் தலைமையக சிறப்புத்தலைவர் கலாநிதி மிக்கி செட்டி அவர்கள் தென்ஆபிரிக்காவில் தலைவர் அறிக்கை பொருளாளர் அறிக்கை ஆகியவற்றினை உரியவர்களிடம் பெற்று சமர்ப்பிப்பதாகவும் குறிப்பிட்டதனை சபை ஏற்றுக்கொண்டது. தென் ஆபிரிக்காவில் இடம் பெற்ற சிறப்புப் பேரவைக் கூட்டத்திலும் மேற்படி அறிக்கைகள் சமர்ப் பிக்காத படியினால் அதில் கலந்து கொண்ட முதன்மைத் துணைத்தலைவர் ப.கு. சண்முகம் அவர்கள் 14 நாட்களுக்குள் தலைமையகத்தி ற்கு அறிக்கை தருவதாகக் குறிப்பிட்டார். அவரும் அந்த அறிக்கை தருவதாகக் குறிப்பிட்டார். அவரும் அந்த அறிக்கை அனுப்பாத காரணத்தி னால் தலைமையக சட்ட யாப்பு விதிகளுக்கு அமைய யேர்மனியில் 10.10.2015ல் சிறப்புப் பேரவைக்கூட்டம் கூட்டப்பட்டு அகிலத்தலைவரும் அகிலப் பொருளாளரும் பதவியில் இருந்து நீக்கப்பட்டு புதிய அகிலத்தலைவராக திரு. வி.சு. துரைராஜா அவர்களும் பொருளாளர்நாகமா கத் திரு. செ. சிவராசசிங்கம் அவர்களும் பொறுப் பேற்று தலைமையகம் சட்டப்படி ஏற்கனவே உள்ள பொறுப்பாளர்கள் உள்ளடங்கலாகப் பதிவு செய்யப்பட்டது.

ஆசிய ஒன்றியத் தலைவர் முனைவர் பாஞ். இராமலிங்கம் அவர்கள் உறுதிசெய்யப்பட்டார்.

செயலாளர் நாயகம் திரு. துரை. கணேசலிங்கம் அவர்களது செயற்பாடு

திரு. வீரப்பனார் அவர்களால் திரு. துரை. கணேசலிங்கம் தெரிவு செய்யப்பட்டு அவரிடம் அனைத்துப் பொறுப்புக்களும் ஒப்படைக்கப் பட்டதற்கான கடிதம் வெளிப்படுத்தப்பட்டதன் பின்னர் திரு. துரை. கணேசலிங்கம் அவர்கள் காலவரையறையற்ற அகில செயலாளர் நாயக மாக கடமையாற்றுவார்கள் என முனைவர் இராம சிவலிங்கம் அவர்கள் தெரிவித்த கருத்தி னை சபை முழுமனதாக ஏற்றுக்கொண்டது.

நிருவாகப் பொறுப்பாளர்கள்

ஏற்கனவே சட்டப்படி பதிவில் உள்ள தலைமையக நிருவாகப் பொறுப்பாளர்கள் தொடர்ந்து அடுத்த உலக மாநாடு வரை பதவியில் இருப்பார்கள் என்றும் செயலாளர் நாயகம் துரை. கணேசலிங்கம் அவர்கள் காலவரையறையின்றி இப்பதவியில் இருப்பார்கள் என்றும் தீர்மானிக்கப் பட்டது.

நிருவாகத் தொடர்புகள்

நிருவாகத்தின் அனைத்துத் தொடர்புகளும் திரு. துரை. கணேசலிங்கம் அவர்கள் ஊடாகவே நிருவாகச் செயலாளருக்கு அறிவிக்கப்பட வேண்டும் என நிருவாகச் செயலர் திரு. யேம்ஸ் அல்ஸ்ரன் அவர்களது கருத்து முழுமையாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இயக்கத்தின் ஆலோகசர் திரு. சோ. தங்க ராசா அவர்கள் தலைமையில் உலகளாவிய தமிழ் மொழி பண்பாடுகளுக்காகப் பாடுபடும் தமிழ் அமைப்புக்களை உள்வாங்கி உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் தலைமை யகத்தின் நெறிப்படுத்தலில் ஒரு குழு அமைக் கப்படவேண்டும் எனவும் முடிவு செய்யப்பட்டது.

42 ஆண்டுகளாக இன்று வரை தலை மையகத்தினால் கணக்கு அறிக்கை சமர்ப் பிக்கப்படவில்லை எனவும் அதனை நிவர்த்தி செய்யும் முகமாக பொதுப் பொருளாளர் திரு. சிவராஜசிங்கம் தலைமையில் ஒரு நிதிக்குழு உருவாக்கப்பட்டு 3 மாதத்திற்கிடையில் கணக்கறிக்கை பெற்றுக் கொள்வதெனத் தீர்ம ானிக்கப்பட்டது.

நிதிக்குழு பொருளாளர் தலைமையில் சட்ட ஆலோசகர் சி. இராமமூர்த்தி ஐரோப்பிய நிதிப் பொறுப்பாளர் அ. சிவகரன் கிளைகளில் ஒருங்கிணைப்பாளர் இ. இராஜசூரியர் ஆகியோர் உட்படுத்தப்பட்டனர்.

இங்கிலாந்து கிளை. அமைக்கப்பட விருப்ப தனை முனைவர் இராம் சிவலிங்கம் அவர்கள் வெளியிட்டார்.

10 மணிக்கு ஆரம்பமாகிய கூட்டம் பி.ப. 4.30 மணிக்கு நிறைவெய்தியது உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் தலைமையகம் கனடா.

IMTC UK:
INTERNATIONAL MOVEMENT FOR TAMIL CULTURE

Minutes of the meeting held on SATURDAY17 SEPTEMBER 2016 at Tamil Information Centre Thulasi Bridge End Close, Kingston KT2 6PZ at 11.00am

Present:

Dr. Ram Sivalingam
Dr. Arumugarajah
Mrs. Gowri Kannapiran
Varadarajah
S Srivas
R Balendran
A Frank Ilanchelian
M Thangarasa
Varathakumar
Ganesh
N Kannappu
Sathyaseelan

1. Meeting started with a prayer

2. This Inauguration meeting was chaired by Dr. Ram Sivalingam from Canada.

Dr. Ram spoke about the history of IMTC and it was founded in 1972; how it was expanded quickly in India, Malaysia, South Africa, Mauritius, Singapoore and other parts of the world. He spoke about the conferences took place over the last 42 years in various countries.

At present the HQ is based in Canada and branches in India, Malaysia, South Africa, Europe, Germany, France, Norway and Denmark.

There is a need for a UK branch and the importance of the UK branch to play a crucial role in the Globally. Accordingly office bearers were nominated and elected.

3. Election of Office Bearers

President	:	Mr. A.F. ILANCHELIAN
Vice President	:	Mr. S. SRIVAS
Secretary	:	Mr. R. BALENDRAN
Treasurer	:	Mr. M. THANGARASA
Committee Members	:	Dr. Arumugarajah
		Mrs. Gowri Kannapiran
		Mr. Ganesh
		Mr N. Kannappu
		Mr. Varadarajah

4. Constitution and Membership

IMTC UK will adopt the constitution of IMTC based in Canada. The Constitution will be forwarded by the General Sectretary Mr Ganeshalingam based in Germany. The executive committee decided to recruit more members to the committee and expand the membership to reflect members from wider spectrum of cultural forum. Members must apply to the HQ for approval and pay £65 for membership.

5. Registering IMTC UK as a Charity Organisation in UK.

Dr. Ram asked the committee to work on registering IMTC UK as a charity and open a bank account with the approval from the HQ. IMTC UK will liase with the General Secretary at the HQ for matters arising from setting up the UK branch.

6. Any Other Matters

IMTC UK will liaise with Tamil schools, cultural schools, art and drama academy and Tamil welfare organisations to inform about our activity.

7. Tamil Research

Mr. Srivas and Ganesh were appointed to research Tamil Cultural aspects and produce a research Progress at our meetings.

8. Tamil Cultural Conference August 2017

University of Jaffna hosting an International conference in August 2017. IMTC UK must play a role in this event.

The first Committee meeting will be held in November 2016

Meeting closed at 1pm

உலகத் தமிழ்ப் பண்ப்பாட்டு இயக்கம். யேர்மனி
Internationale Bewegung füre Kultur - Deutschland e.V
International Movement for Tamil Culture - Germany
Postanschrift (Address) Goldschmidt Str 35 , 45127 Essen Tlephone: 0201-2486284
Amtsgericht Rheine Geschäfts No **VR20988**

யேர்மனி பொதுக்கூட்ட அறிக்கை 19.06.2017



உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்க யேர்மனியக் கிளையின் பொதுக்கூட்டம் அகவணக்கத்துடன் பி.பகல் 6.30 மணிக்கு ஐரோப்பிய ஒன்றிய தலைமைச் செயலகத்தில் ஆரம்பமாகியது. தொடர்ந்து தலைவர் திரு.இ.இராஜசூரியர் அவர்கள் தனது உரையில் யேர்மன்கிளை இயங்குவதற்கு ஒத்துழைப்புத் தேவை என்றும் ஒத்துழைப்பு இல்லாமல் தொடர்ந்து இயங்க முடியாது எனவும் தெரிவித்தார் . உதவித்தலைவர் திரு.இரா.தனபாலசுந்தரம் அவர்களுக்கு அறிவிக்கப்பட்டிருந்தும் அவர் கூட்டத்திற்குச் சமூகம் தரவில்லை. செயலாளரினால் அவரது தொலைபேசிகளுக்கு ஐரோப்பிய ஒன்றிய தலைமைச் செயலகத்தில் இருந்து

கூட்டம் ஆரம்பமாவதற்கு முன் தொலைபேசி அழைப்பு வீடு மற்றும் கைத்தொலைபேசிக்கு அழைப்பு விடுக்கப்பட்டும் தொடர்பு ஏற்படவில்லை . தலைவர் திரு.இ.இராஜசூரியரிடம் கூட்டத்திற்கு வருவதாகத் தெரிவிக்கப்பட்டும் வரவில்லை .தலைமையக ஆலோசகர் திரு.சோ.தங்கராசா அவர்கள் யேர்மனி பதிவிற்காக அவரைத் தொடர்பு கொண்டு காலம் வீணாகியதாகவும் தனது வெறுப்பை வெளிப்படுத்தினார். ஏனையோர் பற்றித்தெரிவிக்கப்பட்டது. செயற்படாதவர்களின் பெயர்களை வைத்திருப்பதில் அர்த்தம் இல்லை எனவும் செயற்படாதவர்களின் பெயர்களை நீக்கிவிடுமாறும் பொருளாளர் திரு.அ.பகீரதன் அவர்கள் தெரிவித்தார். கூட்டத்திற்கு வரமுடியாது அறிவித்தவர்களின் விபரங்கள் தெரியப்படுத்தப்பட்டது. மேற்படி விடயம் பற்றி செயலாளர் நாயகம் திரு.துரை கணேசலிங்கம் அவர்கள் உரியவர்களுடன் பேசி முடிவு எடுத்து பொருளாளருக்கு அறிவிக்க வேண்டும் எனவும் முடிவாகியது. பொருளாளர் திரு. அ.பகீரதன் அவர்கள் யேர்மனியக்கிளைப் பதிவினை நிறைவு செய்வதற்கு எடுத்த முயற்சிகளுக்குத் தலைவர் பாராட்டுத் தெரிவித்தார் 2017 பதிவு நிறைவு செய்யப்பட்டள்ளதைத் தலைவர் வெளிப்படுத்தினார். கனடாவில் நேற்று 18.06.2017 ஊடக மாநாடு நடைபெற்றதெனவும் ஒரு நிறுவனம் முதன்மை ஆதரவு அளிப்பதற்குப் பொறுப்பேற்றுள்ளதாகவும் தெரிவித்தார்

செயலாளரால் 27.06.2016ல் இடம்பெற்ற கூட்ட அறிக்கை வாசிக்கப்பட்டு முழுமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது

பொருளாளர் திரு.அ.பகிரதன் எமது யேர்மனியக்கிளை பதிவு செய்வதற்காக ஏற்பட்ட தனது செலவீனத்தினை முன்வைத்தார். உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் பிரான்ஸ் மாநாட்டு அனைத்துலக சிறப்புப் பேரவைக்கூட்ட அறிக்கை செயலாளர் நாயகத்தினாலி வாசிக்கப்பட்டு சிறு திருத்தங்களுடன் எற்றுக்கொள்ளப்பட்டு இவ் அறிக்கை மாநாட்டு மலரில் இடம் பெற வெண்டம் என்றும் முடிவாகியது. கணக்குப் பரிசோதகர் ஒருவர் யேர்மன் கிளைக்குத் தேவை என்னும் கருத்து செயலாளர் நாயகம் திரு.கணேசலிங்கம் அவர்களால் தெரிவிக்கப்பட்டது. அதனைக் கூட்டம் ஏற்றுக்கொண்டது.

திரு ஸ்ரீ ஜீவகன் அவர்கள் யேர்மன்கிளையின் கல்வி கலை பண்பாட்டுப் பொறுப்பாளராக ஏகமனதாக நியமிக்கப்பட்டார்.

இலங்கையில்இடம்பெறும் 13வது உலக மாநாடு பற்றி ஆராயப்பட்டது.

கடந்த கால பொருளாளர் நாயகம் சுவிஸ் திரு.செ.சிவராசசிங்கம் பழைய கணக்கு அறிக்கை அனுப்பவில்லை என கணக்காளர் நாயகம் திரு.அம்பிகைபாகன் சிவகரன் அவர்கள் தெரிவித்தார்.. இலங்கையில் இடம்பெறும் 13வது உலக மாநாட்டிற்கு ஒவ்வொரு கிளையும் பங்களிப்பு வழங்க வேண்டும். மற்றவர்கள் கொடுப்பது போல்

நாமும் கொடுப்போம் என பொருளாளர் திரு.அ.பகீரதன் அவர்கள் தெரிவித்தார். அவ்வாறு பார்க்காமல் நம்மால் ஆனதைச் செய்வோம் எனமுடிவு செய்யப்பட்டது அடுத்து கூட்டத்தில் வந்தவர்களிடம் நிதி சேர்க்கப்பட்டது. திரு.அம்பிகை பாகன் சிவகரன் திரு.இ.இராஜசூரயர் திரு.துரைகணேசலிங்கம் திரு.சோ.தங்கராஜா திருஅ.பகீரதன் திரு.ஸ்ரீஜீவகன் திரு.மோகன்குலசேகரம் திரு.கி.யேம்ஸ்அல்ஸ்ரன் ஆகியோர் பங்குபற்றினர். 13வது உலக மாநாடு பற்றிய ஆரம்ப செயற்பாட்டினை நிறைவு செய்வதற்காக திரு.இ.இராஜசூரியர் அவரகள் தலைமையகத்தினால் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தார். அவருக்கு யேர்மனியக் கிளையினால் திரு.சோ.தங்கராசா திரு.அ.பகீரதன் திரு.துரைகணேசலிங்கம் திரு.இ.இராஜசூரியர் ஆகியோர் பங்களிப்பு வழங்கியிருந்தார்கள். பங்களிப்புகள் வழங்கியவர்களுக்கு யேர்மன் கிளையினால் உடன் பற்றுச் சிட்டை வழங்கப்பட்டது.

இலங்கைக்கு 13வது உலக மாநாட்டிற்கு அகிலப் பொருளாளர் நாயகம் திரு.அம்பிகைபாகன் சிவகரன் வரமுடியாத நிலையில் தற்காலிக நிதியாளர் ஒருவரை நியமிக்கும் பொறுப்பு தலைமையக ஆலோசகர் திரு.சோ.தங்கராஜாவிடம் ஒப்படைக்கப்பட்டது. இலங்கை 13வது மாநாட்டு நிதியினைக் கையாளுவதற்கு மாநாட்டு நிதி கையாள்பவராக மாநாட்டுத் துணைத் தலைவரும் அகிலக்கிளைகளின் இணைப்பாளருமான திரு.இ.இராஜசூரியர் அவர்கள் தலைமையக ஆலோசகர் திரு.சோ.தங்கராஜா அவர்களினால் நியமிக்கப்பட்டார். மாநாட்டு நிதி அதன் கணக்குகள் உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்க ஆலோசகர் திரு.சோ. தங்கராஜா அவர்களது பொறுப்பாண்மையில் நிதியினைக் கையாள்பவராக மாநாட்டுத் துணைத் தலைவரும் அகிலக்கிளைகளின் இணைப்பாளருமான திரு.இ.இராஜசூரியர் அவர்கள் செயற்படுவார்கள். அனைத்து நிதிகளுக்கும் பற்றுச்சிட்டுத் தேவையென்பது சுட்டிக்காட்டப் பட்டது.

யாழ் பாராளுமன்ற உறுப்பினரும் தமிழரசுக்கட்சித் தலைவருமான கௌரவ மாவை சேனாதிராஜா அவர்களின் 75வது பிறந்த தின விழாவிற்காகத் தலைமையகம் இந்திய ஒன்றியம் இணைந்து அச்சேற்றும் புத்தகச் செலவீனம் யேர்மனியக் கிளையின் சார்பில் தலைமையக ஆலோசகர் திரு.தங்கராசா அவர்கள் பொறுப்பேற்பதாகக் குறிப்பிட்டார். கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேளையில் ஆவணக்காப்பகப் பொறுப்பாளர் திரு.அன்ரன் யோசப் அவர்களுடன் நேரடித்தொடர்பு ஏற்படுத்தப்பட்டு செயலாளர் நாயகம் திரு.கணேசலிங்கம் அவர்களின் உரையாடலின் பின் ஆவணக்காப்பகப் பொறுப்பாளர் திரு.அன்ரன் யோசப் அவர்கள் இலங்கைக்கு ஆவணக்கண்காட்சி கொண்டு வருவதாக ஒப்புதல் வழங்கியதனை சபை ஏகமனதாக ஏற்றுக்கொண்டது.. 13வது இலங்கை மாநாட்டினைச் செயற்படுத்துவதற்கு உலகத்தமிழ்ப் பண்பாட்டு இயக்க தலைமையகமும் இலங்கைக் கிளையும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்

என்னும் முடிவு எடுக்கப்பட்டது. மேற்படி கணக்குகள் மாநாட்டு பேரவைக்கூட்டத்தில் உடன் சமர்ப்பிக்கப் பட வேண்டும் என முடிவு செய்யப்பட்டது.

பேரவைக்கூட்டத்தில் கொண்டுவர வேண்டிய முன்மொழிவு

பேரவைக்கூட்டத்தில் தலைமை நிருவாகப் பதவிகளுக்கு 75வயதுக்கு மேற்பட்டவர்களும் பேட்டியிடலாம் எனவும் ஒருவர் ஒருபதவிக்கு இருதடவைக்குமேல் போட்டியிடலாம் எனவும் விசேட தலைவர்கள் நிருவாகச் செயலாளர் ஆகிய பதவிகள் யாப்பு விதிகளில் இணைக்கப்பட வேண்டும் என்னும் யேர்மனியக் கூட்டத்தின் ஏகமனதான முன் மொழிவை பேரவைக்கூட்டம் ஏற்றுக்கொள்ள வேண்டும் எனக் கோரி நிற்கின்றது.

மாநாட்டுத் துணைத் தலைவரும் அகிலக்கிளைகளின் இணைப்பாளரும் மாநாட்டு நிதியினைக் கையாள்பவருமான திரு..இ.இராஜசூரியர் அவர்கள் மாநாட்டிற்கான அனுமதி பல்கலைக்கழக மண்டப நிகழ்வுகளுக்கான அனுமதி வீரசிங்கம் மண்டபத்திற்கான அனுமதி மாநாட்டிற்கான பாதுகாப்பு ஆயத்தங்களுக்கான உறுதிப்படுத்தல் கடிதம் அங்கு உள்ளவர்களுக்கு அழைப்புக் கடிதங்கள் ஆய்வரங்கம் கருத்தரங்கம் சிறப்புரைஆற்றுபவர்கள் மாநாட்டு மலருக்கு வாழ்த்து பெறப்பட வேண்டியவர்கள் கலைநிகழ்வுகளில் பங்குபற்றும் பொறுப்பாளர்கள் என்பவர்களது விபரப்பட்டியலைத் பெற்று அனுப்புபவர்களுக்கான பணிகள் ஒப்படைக்கப்படுகின்றன.

மாநாடு தொடர்பான எந்த மாற்றங்களும் இடம்பெற வேண்டுமாயின் அவ்விடயங்கள் எழுத்துமூலம் மாநாட்டுத் தலைவருக்கு அறிவிக்கப்பட்டு மாநாட்டுத்தலைவர் உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத் தலைமையகத்திற்கு அறிவித்து தலைமையக யாப்பு விதிகளுக்கு அமையவே முடிவுகள் எடுக்கப்பட்டு செயற்பட வேண்டும் என்பது செயலாளர் நாயகம் திரு.துரைகணேசலிங்கம் அவர்களினால் சுட்டிக்காட்டப்பட்டது.

பிற்பகல் 6.30க்கு ஆரம்பமாகிய கூட்டம் பி.பகல் 9.00மணிக்கு நிறைவுபெற்றதுடன் கூட்டத்திற்கு சமூகமளித்திருந்தவர்களுக்கு செயலாளர்நாயகம் திரு.கணேசலிங்கம் அவர்களினால் இரவு விருந்துபசாரமும் வழங்கப்பட்டது.

இ.இராஜசூரியர்
தலைவர்
கிளை- யேர்மனி 23 .06.2017

கி.யேம்ஸ் அல்ஸ்ரன்
செயலாளர்

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம்

INTERNATIONAL MOVEMENT FOR TAMIL CULTURE

Non-Profit, Non-Political, Non-Religious, Charitable, Worldwide Registered, Tamil Cultural Organization - Est. in 1974

Head Office: 5310 Finch Ave. East, Unit #10, Toronto, Ontario M1S 5E8
Tel: 1.647.829.4044 email: raja@cfsginc.com
www.imtcweb.com

July 14th 2017

உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கம் தலைமையகம் - கனடா
திரு. சிவா கணபதிப்பிள்ளை - அமெரிக்க ஒன்றியத் தலைவர்

தலைமையகம்

1. திரு. வி.சு. துரைராசா - அகிலத் தலைவர்
2. திரு. சிவா கணபதிப்பிள்ளை - அகில உப தலைவர்
3. திரு. மோகன் மோகேந்திரலிங்கம் - அகில ஊடகப் பொறுப்பாளர்
4. திரு. நடா இராஜ்குமார் - அகில கொள்கை பரப்புச் செயலாளர்

உலகத்தமிழ் பண்பாட்டு இயக்கம் - கனடாக்கிளை

5. திரு. மாணிக்கம் இரவிச்சந்திரன் - தலைவர்
6. திரு. துரையப்பா விக்னேஸ்வரன் - காரியதரிசி
7. திருமதி. யோகேஸ்வரி சுகுமார் - துணைக்காரியதரிசி
8. திரு. சுதன் அருளானந்தம் - பொருளாளர்
9. திரு. வரன் கனகரட்னம்
10. திரு. இராஜ்குமார் இராஜேந்திரராஜா
11. திரு. தவம் குகதாசலிங்கம் K.T.S / நாவலர்
12. திரு. கார்த்திகேசு கனகசிங்கம்
13. திரு. நடராஜா நந்தகுமார்
14. திரு. மோகன் பாலசுப்பிரமணியம்

அடிப்படை உறுப்பினர்கள்

15. திரு. வேலப்பிள்ளை விக்னேஸ்வரன்
16. திரு. விக்னேஸ்வரன் கனகரட்னம்
17. திரு. செல்வா செல்லையா
18. திரு. சண்முகராசா பாலச்சந்திரன்
19. திரு. துரைராசா உதயகரன்
20. திரு. கந்தையா மங்களமூர்த்தி
21. Dr. V. J. பிகாராடோ
22. பேராசிரியர். இளையதம்பி பாலசுந்தரம்
23. திரு. சின்னையா சிவனேசன்
24. திரு. மூர்த்தி செல்தத்துரை
25. திரு. சுந்தரம் நகுலேஸ்வரன்
26. திரு. இராமசாமி செல்வரட்னம்
27. திரு. நாகலிங்கம் இராமலிங்கம்

தொடர்ச்சி....2

BOARD OF DIRECTORS

PATRONS
Judge David Annoussamy (India)
Former Highcourt Judge of Madras & Puducherry

Dr. V.M. Sethuraman (India)

PRESIDENT (IMTC)
Mr. V. S. Thuraisingam (Canada)

SPECIAL PRESIDENT
Dr. Micky Chetty (South Africa)

SECRETARY GENERAL
Mr. Thural Ganesalingam (Germany)

TREASURER GENERAL
Mr. S. Sivarajasingam (Switzerland)

SENIOR DEPUTY PRESIDENT
Mr. P. K. Shanmugam (Malaysia)

DEPUTY PRESIDENT
Mr. S. Theyagalingam (Norway)

LEGAL & ADMINISTRATION
Dr. C. Ramamoorthy (India)

PUBLIC RELATIONS & MEDIA
Mr. R. N. Logendralingam (Canada)

TAMIL STUDIES
Dr. Ila Sundaram (India)

CULTURAL AFFAIRS
Dr. Panch Ramalingam (India)

INTERNATIONAL AFFAIRS
Mr. Nada Rajakumar (Canada)

HUMAN RIGHTS
Mr. N. R. Wickramasinge (Australia)

BRANCH COORDINATOR
Mr. R. Rajasoorlyar (Germany)

ASSISTANT TREASURER
Mr. S. Prasanthan (Sri Lanka)

ADMINISTRATIVE SECRETARY
V. Warren Kanagaratnam(Canada)

CANADIAN GOVERNMENT REGISTRATION NUMBER: 377168-1

BANK: Canadian Imperial Bank of Canada (CIBC)
480 Progress Ave Unit-E1
Scarborough Ontario M1P 5J1
416.291.8586
Account #: 01732-2314118

PRESIDENT'S OFFICE
V. S. Thuraisingam
5310 Finch Ave East Unit-10
Toronto Ontario M1S 5E8
Canada
Tel: (416) 548.7300
cell: (647) 829.4044

SECRETARY GENERAL'S OFFICE
Mr. Thural Ganesalingam
Salzbergerstr. St. 142
48431 Rheine
Germany
Tel/Fax: (49) 59.711.4258
email: imtc1974@yahoo.com

TREASURER GENERAL'S OFFICE
Mr. S. Sivarajasingam
Beichen Str. 23
4900 Langenthal
Switzerland
Tel: (0041) 62.929.0578
Cell: (0041) 78.902.0433

IMTC has branches in 42 countries
IMTC Head Office is being constructed at Maruthanagar, Karachchi, Kilinochchi (Sri Lanka)

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம்

INTERNATIONAL MOVEMENT FOR TAMIL CULTURE

Non-Profit, Non-Political, Non-Religious, Charitable, Worldwide Registered, Tamil Cultural Organization - Est. in 1974

Head Office: 5310 Finch Ave. East, Unit #10, Toronto, Ontario M1S 5E8
Tel: 1.647.829.4044 email: raja@cfsginc.com
www.imtcweb.com

BOARD OF DIRECTORS

PATRONS
Judge David Annoussamy (India)
Former Highcourt Judge of Madras & Pathechery

Dr. V.M. Sethuraman (India)

PRESIDENT (IMTC)
Mr. V. S. Thurairajah (Canada)

SPECIAL PRESIDENT
Dr. Micky Chetty (South Africa)

SECRETARY GENERAL
Mr. Thural Ganesalingam (Germany)

TREASURER GENERAL
Mr. S. Sivarajasingam (Switzerland)

SENIOR DEPUTY PRESIDENT
Mr. P. K. Shanmugam (Malaysia)

DEPUTY PRESIDENT
Mr. S. Thevagalingam (Norway)

LEGAL & ADMINISTRATION
Dr. C. Ramamoorthy (India)

PUBLIC RELATIONS & MEDIA
Mr. R. N. Logendralingam (Canada)

TAMIL STUDIES
Dr. Ba Sundaram (India)

CULTURAL AFFAIRS
Dr. Panch Ramalingam (India)

INTERNATIONAL AFFAIRS
Mr. Nada Rajakumar (Canada)

HUMAN RIGHTS
Mr. N. R. Wickramasinga (Australia)

BRANCH COORDINATOR
Mr. R. Rajasooriyar (Germany)

ASSISTANT TREASURER
Mr. S. Prasanthan (Sri Lanka)

ADMINISTRATIVE SECRETARY
V. Warren Kanagaratnam(Canada)

July 14th 2017

அடிப்படை உறுப்பினர்கள் தொடர்ச்சி.....

28. திரு. மனுவல் யேசுதாசன்
29. செல்வி. ஞானி சவுந்தரி விக்னேஸ்வரன்
30. திரு. எஸ் பத்மநாதன்
31. திரு. நவகுமார் சுப்பிரமணியம்
32. திரு. சின்னத்துரை ஞகனேந்திரன்
33. திரு. பார்த்திபன் குமாரசாமி
34. திரு. சாமி அப்பாத்துரை
35. திருமதி. குலமணி கந்தசாமி
36. திரு. மார்க்கண்டு மகேசன்
37. திருமதி. தயாபரி மகேசன்
38. திருமதி. ஜெயகௌரி வைகுந்தன்
39. திரு. கந்தசாமி வைகுந்தன்
40. திரு. சம்பந்தன் மகேசன்
41. திரு. சயந்தன் மகேசன்
42. திருமதி. கஸ்தூரி மகேசன்
43. திரு. சாரங்கள் மகேசன்
44. திருமதி. சாளினி சாரங்கன்
45. திரு. ஆறுமுகம் சிவபாதசுந்தரம்
46. திரு. பொன்னையா சத்தியசீலன்
47. திரு. சிவராஜா சின்னத்தம்பி
48. திருமதி. சுமதி இராஜ்குமார்
49. Dr. Mohamed Hauzeer
50. திரு. சாயிபிருந்தன் இராஜ்குமார்
51. திரு. க.செ. பழனிச்சாமி

சிவா கணபதிப்பிள்ளை
அமெரிக்க ஒன்றியத் தலைவர்
உ..த.ப.இயக்கம்

CANADIAN GOVERNMENT REGISTRATION NUMBER: 877188-1

BANK: Canadian Imperial Bank of Canada (CIBC)
480 Progress Ave Unit-E1
Scarborough Ontario M1P 5J1
416.291.8588
Account #: 01732-2314118

PRESIDENT'S OFFICE
V. S. Thurairajah
5310 Finch Ave East Unit-10
Toronto Ontario M1S 5E8
Canada
Tel: (416) 548.7300
cell: (647) 829.4044

SECRETARY GENERAL'S OFFICE
Mr. Thural Ganesalingam
Salzbergerstr. Str. 142
48431 Rheine
Germany
Tel/Fax: (49) 59.711.4256
email: imtc1974@yahoo.com

TREASURER GENERAL'S OFFICE
Mr. S. Sivarajasingam
Beichen Str. 21
4900 Langenthal
Switzerland
Tel: (0041) 62.929.0578
Cell: (0041) 76.902.0437

IMTC has branches in 42 countries
IMTC Head Office is being constructed at Maruthanagar, Karachchi, Kilinochchi (Sri Lanka)

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம்
INTERNATIONAL MOVEMENT FOR TAMIL CULTURE
Non-Profit, Non-Political, Non-Religious, Charitable, Worldwide Registred, tamil Cultural Organization - Est. in 1974

Head Office 5310 Finch Ave. East, Unit #10, Toronto, Ontario M1S 5E8
Tel: 1.647.829.4044 email: raja@cfsginc.com
www.imtcweb.com

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் - பிரித்தானியா
10 Palmerston Road Harrow Middlesex HA3 7FA Tel: 00447956 486014
PRESIDENT : A.F.ILANCHELIAN
VICE PRESIDENT : SINNATHURAI SRIVAS
SECRETARY: RAMALINGAM BALENDRANATHAN
TREASURER: MURUGESU THANGARAJA

The following 11 members are in our UK branch:

MR. ADAIKALAMUTHU ILANCHELIAN (PRESIDENT)
MR. RAMALINGAM BALENDRANATHAN (SECRETARY)
MR. SINNATHURAI SRIVAS (VICE PRESIDENT)
MR. MURUGESU THANGARAJAH (TREASURER)

COMMITTEE MEMBERS

DR. ARUMUGARAJAH
MR. V.VARATHAKUMAR
MRS. GOWRI KANNAPIRAN
MR. N. SIVAGANESHAN
MR. P. SATHYASEELAN
MR. VARATHARAJAH
MR. NADARAJAH KANNAPPU

I have attached photos for the president and the secretary.

Regards

Chelian

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம். ஐரோப்பிய ஒன்றியம்
Internationale Bewegung für Tamilische Kultur - Europäsche Union e.V.
Postfach 2129, 48431 Rheine, Germany Tel/Fax:(0049)5971-14258
Email: imtc1974@yahoo.com Website. www.imtcweb.com
Rgd. VR21116

1 திரு.துரைகணேசலிங்கம் - தலைவர் ஐரோப்பா

2. திரு.கி.யேம்ஸ் அல்ஸ்ரன் - செயலாளர் ஐரோப்பா

3. திரு. அ.சிவகரன் - பொருளாளர் ஐரோப்பா

4. திரு.சி.ஞானவத்சலன் துணைத்தலைவர்

5. திரு.இ.இராஜசூரியர் தலைவர்

0- திரு..கி.யேம்ஸ் அல்ஸ்ரன் செயலாளர்

6 திரு.இரா.தனபாலசுந்தரம் உதவித்தலைவர்

7. திரு.அ.பகீரதன் பொருளாளர்

8.. திரு. கு.மோகன் சிறப்புத்தலைவர்

9.. திரு. ஸ்ரீசீவகன் கல்வி கலை பண்பாடு

10. திரு.அ.தங்கராஜா ஆலோசகர்

அடிப்படை உறுப்பினர்கள்

11.. திருமதி நகுலா சிவநாதன் 12 .திரு. அன்ரன் யோசப்

13 . திருமதி யோகேஸ்வரி மகேந்திரன் 14. திரு. ஜெயரத்தினம் கனீசியஸ்

15. திரு.பரம விஸ்வலிங்கம் 16 .திரு. த.இராஜன்

17. திரு.த.செல்வராஜா

18. திரு.செ.செல்வகுமாரன்

19. திருமதி. இ.ஞானசேகரம்

20. திரு.ப.பரமேஸ்வரன்

21. திரு.எஸ்.பரமானந்தன்

22. திரு. மனோகரன் முரளி

23.. திரு.த.சிவகுமார்

24. திருமதி சி.பாக்கியலட்சுமி

25 திருமதி மா.பத்மாசினி

26. திரு.பத்மகுணசீலன்.

27 திரு. சி.கணேசலிங்கம்

28 திரு.வே.ஜெயச்சந்திரன்

29 .திருமதி.ச.கணேசலிங்கம்

30 திரு.ச.ஜங்கரன்

31 .திருமதி.ஐ.ஜனார்தனி

32 திரு.வேலு சிவனேசன்

33. திரு.அ.சிவகுருநாதன்

34 திரு.ப.யோகேஸ்வரன்

35 .திரு.சி.இராஜகருணா

36 திரு.த.இரவீந்திரன்.

37. திரு.செ.சிவம்

38 திரு.சு.பிரசாந்தன்

39. திரு.சி.விக்ரோறிங்

40. திரு.சி.நாகேந்திரம்

41. திரு.சோ.ஞானசுந்தரம்

42. திரு.விசுவர் நடராஜா

43. .திரு.செல்லப்பா கந்தசாமி

44. திருமதி இரஜனி பாலச்சந்திரன்

எமது. யேர்மனிய கிளையின் செயற்பாட்டக்கு எதிராகச் செயற்பட்ட நால்வர் அடிப்படை உறுப்பினர் உரிமையை இழந்துள்ளார்கள்

இங்கனம்

செயலாளர் (ஜரேப்பா -யேர்மனி)






Lyca mobile
ஆஸ்திரேலியா


Lyca mobile




Lyca mobile


ஆஸ்திரேலியா


Lyca mobile

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம். சுவிற்சர்லாந்து
internationale Bewegung für Tamilische Kultur - Switerland
Inter national Movement for Tamil Culture - Switerland
Nonprofit, nonpolicatiol, NonReligious, charitable, worldwide Registered TamilCulture Organization Erst in 1974
Belchen Str.21 4900 langenthal Switerland
E,Mail: sivam58@hotmail.com T.P 0041/629290578 Mobil: 0041-789020437
Ausgleichskasse des kantons Berne Reg.No 1546881

சுவிஸ்கிளை- நிருவாகம்

2017 2018

செ.சிவராசசிங்கம் - தலைவர்

திரு.க.அருந்தவராஜா - செயலாளர்

திரு.நா செல்வராசா உபதலைவர்

திரு.க.கௌதமன் உப செயலாளர்

திருமதி சத்தியமூர்த்தி பாமினி பொருளாளர்

திரு. கு. கந்தசாமி

திரு.வே.செல்வயோகநாதன்

திரு.சிவகுரு சசிதரகுருக்கள்

திருமதி நிர்மலா ஜெயானந்தன் தர்சிகா

திருமதி நிர்மலா சிவராஜசிங்கம்

திரு.ந.தங்கசிவம்

திரு.ந.கிருதரன்

திரு.பற்றிக் நற்குணநாதன்

திரு.வ.வரதன்

திரு.சி.பாஸ்கரலிங்கம்

செல்லையா சிவராசசிங்கம் - சுவிஸ் கிளை அமைப்பாளர்

Bank- Mrs.Sivarajasingam Nirmala IBAN CH06 0079 0042 3615 2895 5
Berner kantonal bank AG/Banqu kantonale Bernoise SA

MALAYSIA INDIA MAGALIR IYAKKAM (MIMI)
NO 21, LENGKOK RISHAH,
தலைவர், மலேசிய இந்திய மகளிர் இயக்கம்
PRESIDENT , TAMAN RISHAH,30100
IPOH, PERAK, MALAYSIA.

18 -7-2017

அன்புடையீர், வணக்கம்,

உலக தமிழர் பண்பாட்டு இயக்கம் .ஏற்பாட்டில் 2017 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 5, 6 ஆகிய நாற்களில் யாழ்பாண இலங்கை நாட்டில் 13வது உலக தமிழர் பண்பட்டு மாநாடு, நடைப்பெறவிருப்பது, அறிந்து, பெரும் மகிழ்ச்சியடைகிறேன்.

கடல் கடந்து வாழ்வு தேடி அயலகம் சென்று, கோடிக்கணக்கன தமிழர்கள் வாழ்கிறார்கள், தங்களை வாழ வைத்திருக்கும் நாட்டின் மீது வான்ஞை காட்டினாலும் நம் வழி வந்த மரபை மறவாமல், தமிழர்கள் சிந்தனை செயல் யாவும், தமிழ், இலக்கியம், வளர்க்கப்பட வேண்டும் தமிழர்கள் கலை, பண்பாடு, சமயம் என்ற ஒவ்வொரு துறையும் பாதுகாக்கப்பட வேண்டும். தமிழர்களின் தொழில் முன்னேற்றம் முன்னணியில் இருப்பதை லட்சியமாய் கொண்டால் பெரும் பயனளிக்கும், தமிழர்களுக்கு பெருமை சேர்க்கும் மாநாடாக அமையும்.

மாநாட்டின் நினைவாக சிறப்பான மலர், வெளிவர பெரும் முயற்சி செய்து வரும் மதிப்பிற்குறிய திரு. பஞ்சு. இராமலிங்கம் அவர்களுக்கு பாராட்டுக்கள். மாநாடு சிறப்புடன் நடைப்பெற நெஞ்சார்ந்த நல்வாழ்த்துக்கள்.

வாழ்க தமிழ்.

அன்புடன்,
முனைவர் ***தி.இராமநாயகம்,*** **Dlitt,**
KMN, PMP, AMN, AMP, PJK
h/p +60195700160.





இ. இராஜசூரியர்
தலைவர்,
உலகத் தமிழ்ப் பாண்பாட்டு இயக்கம், யேர்மனி

அன்புரை

2014ஆம் ஆண்டில் யேர்மனி நாட்டில் உலகத் தமிழ்ப் பாண்பாட்டு இயக்கத்தின் 12ஆம் மாநாட்டினை முன்னின்று நடத்தும் வாய்ப்பு கிட்டியது. அது ஒரு சிறப்பான மாநாடாக அமைந்தது. பல நுட்பமான அனுபவங்கள் கிடைத்தன. தொடர்ந்து 2015ஆம் ஆண்டில் கிளைகள் அமைப்பாளர் என்ற பொருப்பாண்மையின் காரணமாக புதுச்சேரிக்கு வந்து உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் இந்தியக் கிளையின் புத்தாக்கத்திற்கு துணை நின்றதில் மகிழ்ச்சி.

2016ஆம் ஆண்டு புதுச்சேரியில் நடைபெற்ற சிறப்பு மாநாட்டுப் பேரவைக் கூட்டத்தில் 2017 ஆம் ஆண்டில் 13 ஆவது மாநாட்டைச் சிறப்பாக இலங்கையில் நடத்துவதென தீர்மானிக்கப்பட்டது. இலங்கைக் கிளையின் நிர்வாகிகள் உட்பட பலரும் பங்கேற்று சிறப்பு செய்தனர்.

தக்காரைக் கொண்டு மாநாட்டுக்குழு அமைக்கப்பட்டபோது சிறப்புத் தலைவராக கௌரவ வி.எஸ். இராதாகிருஷ்ணன் அவர்களையும் தலைவராக முனைவர் பாஞ். இராமலிங்கம் அவர்களையும் உள்ளடக்கி குழு அமைக்கப்பட்டது. ஓராண்டுக்கும் மேலாக கலந்துரையாடல்கள், ஆலோசனைகள், என நாட்கள் ஓடி மாதங்கள் ஓடி யூன் மாதத்தில் நான் இலங்கை சென்று மாநாட்டுப் பணிகளை ஒருங்கிணைக்க வேண்டுமென ஏற்பாடு செய்யப்பட்டது.

சொந்த மண், ஏகோபித்த வகையில் எல்லாம் நடக்கும் நான் ஒரு பெயருக்காக சென்று திரும்பலாம் என்று எண்ணினேன். ஆனால் ஒரு மாதமாக இலங்கையில் தங்கி, யாழ்ப்பாணம் சென்ற போது அடித்தளத்தில் தனித்து நிற்பதை உணர்ந்தேன். ஆலோசகர் திரு. மாவை. சோ. தங்கராசா, திரு. தே. செந்தில்வேலவர் போன்றோர் தோன்றாத் துணையாக ஒவ்வொரு நாளும் நடைமுறை சிக்கல்களை கடந்து மாநாட்டைச் சிறப்பாக நடத்திவிடலாம் என்று நிலையில் இவ்வாழ்த்துரையை எழுதுகிறேன்.

பல்வேறு நாடுகளில் இருந்து வருகைதரும் பேராளர்களின் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்து மாநாடு தன் இலக்கை அடையும் என்ற நம்பிக்கை உள்ளது.

இம்மாநாடு சிறப்பாக நடைபெற யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பேராசிரியர் பெருந்தகைகளின் ஒத்துழைப்பு தொடங்கி அனைவருக்கும் உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்க தலைமையகத்தின் சார்பில் மனப்பூர்வ நன்றியை உரித்தாக்கி மகிழ்கிறேன்.

அன்பன்
இ. இராஜசூரியர்

உலக தமிழ் வம்சாவளி அமைப்பு

Global Organisation of Tamil Origin (Regd)



வாழ்த்து செய்தி

தமிழ் கூறும் நாள் உலகம் போற்றும் தமிழ் நெஞ்சங்களே

என் இனிய தமிழ் வணக்கம்.

உலக அரங்கில் தமிழ் மொழி சிறுபான்மை யாக இருந்தாலும் , நம் மொழி தான் மூத்த மொழியாக உள்ளது என்பதற்கு பல சான்றுகள் உள்ளன . நம் சமுதாயம் பல கூறுகளாக பிரிந்து இருந்தாலும். மொழியால் நாம் தமிழினமாக உலக அரங்கில் வீர நடை போடவும் கல்வி , கலை, கலாசாரம், இலக்கியம் , அறிவியல் , போன்றவை களில் முதன்மையாக விளங்க உலக தமிழர் பண்பாடு இயக்கம் முன்னெடுத்து செல்லும் - 13 வது உலக மாநாடு - யாழ்ப்பாணம் பல்கலை கழகத்தில் நடை பெரும் நிகழ்விற்கு நான் கலந்து கொள்ள முடியாத சூழ் நிலை என்றாலும் என் நினை வலைகள் மாநாடு வெற்றி பெற்று அதன் மூலம்தமிழினம் செழுமை அடைய வேண்டும் என்று வாழ்த்தும் அன்பு நெஞ்சம்.

ஜெ. செல்வகுமார்

ஒருங்கிணைப்பாளர் - உலக தமிழ் வம்சாவளி அமைப்பு

தலைவர்- உலக தமிழ் வர்த்தக சங்கம்

+91 98410425440 , (Whatsapp +60166167708)

HILLOCK INTERNATIONAL SR.SEC.SCHOOL

the School... the Children... with Global Outlook

(Affiliated to CBSE, New Delhi No : 1930233)

Best Teachers

Creative Learning

Best Quality Education

Smart Technology

Quality Education at Affordable cost

Aesthetically Mesmorizing Hill Station Residential School

IIT-JEE / NEET Integrated Classroom Programme with #IIT- JEE

Well Equipped Science & Computer Laboratories

Dedicated, Experienced and Qualified Staff

Facilities

- SMART CLASSES
- LIBRARY
- HYGIENIC VEG DIET
- DORMITORY
- CCA
- ECA

Call for Information

+91 70944 90404

+91 70944 90404 / +91 70944 90405

Maharishi Gardens, Sirumalai, Dindigul Dist - 624 003. Tamilnadu. India.

hillockis@gmail.com

www.hisss.in



பகுதி - 3

கட்டுரைகள்

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம்: ஒரு வரலாற்றுப் பார்வை

துரை. கணேசலிங்கம்

செயலர், உலகத்தமிழ்ப் பண்பாட்டு இயக்கம்

உலக தமிழினத்தை மொழியாலும், பண்பாட்டாலும் ஒருங்கிணைக்க வேண்டும் என்ற உயர் நோக்குடனும் உலகெங்கும் பரந்து வாழும் தமிழர்கள் தலைநிமிர்ந்து வாழ வேண்டும் என்ற குறிக்கோளுடனும் அரசியற் சார்பற்று இன, மத, பேதங்களைக் கடந்து தமிழ்ப் பண்பாட்டாளர் எனும் ஒரே குடையின்கீழ் செயற்பட வேண்டும் என்ற நிறைந்த கொள்கையுடனும் தமிழ் மொழியினை மறந்து போனவர்களைத் தாய் மொழித் தமிழுணர்வுக்குக் கொண்டுவரும் நல்நோக்குடன் இவ்வியக்கம் 1974ம் ஆண்டு தைத்திங்கள் (சுறவம் 08.01.74) அன்று இலங்கையின் கலாச்சாரத் தலைநகர் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் போது தோற்றுவிக்கப்பட்டது. உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனமானது வெறும் ஆய்வுக் கட்டுரைகளை முன்னெடுக்கின்ற அமைப்பேயன்றி தமிழர்களை வாழ்வியில் அடிப்படையில் இணைக்கின்ற செயல் திட்டம் அற்றது என்பதனை உணர்ந்து மாநாட்டுக்கு வந்திருந்த தமிழ் அறிஞர்கள் ஒன்று கூடி 1974ம் ஆண்டு தைத்திங்கள் 8 நாள் உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தைத் தோற்றுவித்தார்கள். அன்றுமுதல் தமிழர்களை ஒன்றிணைப்பதில் வெற்றி கண்ட உலகப் பேரியக்கம் இவ்வியக்கம் என்பது எவராலும் மறுக்க முடியாத உண்மையாகும்.

இவ்வியக்கம் தோன்றக் காரணமாக இருந்தவர்கள். இயக்கத்தின் தொடக்க காலத்தில் இரா. கனகரத்தினம் (ஈழம்), இவருடன் அமரர் பேராசிரியர் வித்தியானந்தன் (ஈழம்), அமரர் பேராசிரியர் சாலை இளந்திரையன் (தமிழகம்), அமரர் பேராசிரியர் சாலினி இளந்திரையன் (தமிழகம்), அமரர் சோதிநாதன் (தென்ஆபிரிக்கா) திருமதி. காமாட்சி சோதிநாதன் (தென் ஆபிரிக்கா), அமரர் தனிநாயகம் அடிகளார் (ஈழம்), மற்றும் உலகப் பேராளர்களை உட்படுத்தி 08.01.1974 அன்று இயக்கம் உருவாக்கப்பட்டது.

அமரர் பேராசிரியர் சாலை இளந்திரையன் (தமிழகம்) அவர்கள் இவ்இயக்கத்தின் முதல் தலைவராகப் பொறுப்பேற்றார். அவரைத் தொடர்ந்து 1976ல் அமரர் பேராசிரியர் முனைவர் இர.ந. வீரப்பனார் தலைமைப் பொறுப்பேற்றார்.

இவரது காலச் சேவை பொன் எழுத்தகளால் பொறிக்கப்பட வேண்டியதொன்றாகும். உற்சாகமும், சுறுசுறுப்பும் மிக்க இப்பெரியாரின் உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தோடு இயைந்த வாழ்வும், செயல்விழுமியங்களும் அயராது உயர்ந்த உழைப்பு காரணமாக 1999ம் ஆண்டு சென்னையில் ஆவணித் திங்களில் நிறைவேறிய வெள்ளிவிழா வரை இயக்கத்தை வழிநடாத்தி ஏழாவது உலக மகாநாட்டில் உலக முக்கியத்துவம் வாய்ந்த பல தீர்மானங்களை நிறைவேற்றி மாநாட்டுப் பணியோடு 03.09.1999ல் தம் வாழ்வையும் அர்ப்பணித்துக் கொண்டார்.

முதற்தடவையாக அமரர் பேராசிரியர் இரா. ந. வீரப்பனார் அவர்களை 1984ல் மலேசியாவில் சந்தித்தேன். 1985ம் ஆண்டு நான் யேர்மனி வந்த பின்னர் அவருக்கும்

எனக்கும் ஏற்பட்ட தொடர்பினால் 24.08.1991ல் உலகத் தமிழ்ப்பண்பாட்டு இயக்க ஆயுள் உறுப் பினரானேன். அவுஸ்திரேலியாவில் நிகழ்ந்த ஐந்தாவது உலக மாநாட்டில் அமரர் பேராசிரியர் இரா.ந. வீரப்பானர் என்னை உ.த.ப. இயக்க தலைமையக உதவிப் பொருளாளராகத் தெரிவு செய்தார். உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத் தின் முன்னாள் துணைத்தலைவர் முனைவர் பெருங்கவிக்கோ சேதுராமன் அவர்கள் நடத்திய பன்னாட்டுத் தமிழுறவு மன்றத்தின் மூன்றாவது உலக மாநாட்டில் கலந்து கொள்வதற்கு நான் உலகத்தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் அகிலத்தலைவர் அமரர் பேராசிரியர் இரா.ந. வீரப்பனார் அவர்களை யேர்மனிக்கு வரவழைத்து கலந்துரையாடி ஐரோப்பாவில் உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் தன்பணிகளை ஆற்றிடப் பதியமிடப்பட்டது. வருகை தந்திருந்த அவர் 1993ல் யேர்மனிக் கிளையின் தலைவராகவும் ஐரோக்கிய ஒன்றிய அமைப்பாளராகவும் என்னை நியமனம் செய்தார். அந்நியமனத்தை நான் ஏற்றுக்கொண்டு முதற்பணியாக ஐரோப்பாவில் பல கிளைகளை உருவாக்கி அவற்றை இணைத்து உலகத்தமிழ்ப் பண்பாட்டு இயக்க ஐரோப்பிய ஒன்றியத்தினால் 13, 14 சூலை மாதம் 1996ல் ஈழத் தமிழர்களின் இன்னல்களைக் கருத்தில் கொண்டு எழுச்சி மாநாட்டினை அமரர் பேராசிரியர் இரா.ந. வீரப்பனார் அவர்கள் தலைமையில் நடாத்தினோம். இம்மாநாடு தமிழினத்தை எழுச்சி கொள்ள வைத்தது.

1993ல் அமரர் பேராசிரியர் இரா.ந. வீரப்பனார் அவர்கள் அறிமுகம் செய்த மூன்றாண்டு தமிழ்மணிப் புலவர் கல்விச் செயற் பாடுகள் 1994ல் ஆரம்பமாகியது. 1997ல் யேர்மனியில் இடம்பெற்ற எழுச்சித்தமிழ் விழா வில் ஐந்து பேருக்குத் தமிழ்மணிப்பட்டம் வழங்கப் பட்டது. இன்று நாற்பத்தி ஒரு பேர் ஐரோப்பாவில் தமிழ்மணிப் புலவர்களாக உள்ளனர். 1996ல் கனடாவில் இடம்பெற்ற உலகத் தமிழ் பண்பாட்டு இயக்க மாநாட்டில் செயலாளர் நாயகமாகத் தேர்வு பெற்றேன். நேர்மையும் மனவுறுதியும் கண்டிப்பும் உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத் தினை வளர்த்தெடுத்தது. அமரர் பேராசிரியர் இரா.ந. வீரப்பனார் அவர்கள் வெள்ளி விழா வரை போட்டியின்றித் தலைவராகத் தெரிவு பெற்றார். அவர் இறப்பதற்குச் சிலதினங்கள் முன்னர் என்னுடன் தொலைபேசியில் உரை யாடியிருந்தார். 01.03.1999ல் எனக்குக் கடிதம் எழுதி இயக்கத்தினைக் காக்க வேண்டிய முழுப் பொறுப்பையும் என்னிடம் விட்டுச் சென்றார். எனவே பொறுப்பேற்றதில் இருந்து புதிதாகக் கனடாவில் தலைமைப் பதிவு, உலகளாவிய கிளைகள் புனரமைப்பு, இயக்கத்தின் கொடி, கீதம் என்பனவற்றினை உருவாக்கி அதற்கு ஒத்துழைப்பு நல்கி யிருந்த செயற்பாட்டாளர்களோடு பெருமை கொள்கின்றேன்.

அவரைத் தொடர்ந்து 1999ல் இருந்து கனடா நாட்டைச் சேர்ந்த தமிழ்ச் செம்மல் சி. செல்லையா அவர்கள் தலைமைப் பொறுப்பை ஏற்றார். இவர் தலைமைப் பீடத்தை உலகளாவிய சர்வதேச அமைப்பாகக் கனடாவில் 2000ஆண்டு சட்டப்படி பதிவு செய்ததுடன் அவரது தலைமையில் எட்டா வது உலக மாநாடு தென் ஆப்பிரிக்காவில் 2001ம் ஆண்டு மார்கழி மாதம் (சூலைத் திங்கள்) 14, 15, 16ம் நாள் தென்னாப்பிரிக்கா தமிழ் கூட்டிணைப்புக் கழகத்தின் ஆதரவுடன் "தமிழல் நாம் இன்றும் என்றும் தமிழால் கூடி உயர்வோம்" என்னும் கருப்பொருளில் இடம்பெற்றது.

இயக்கத்தின் துணைத்தலைவராக இருந்த பண்பாட்டியக்கச் செம்மல் ப.கு. சண்முகம் அவர்கள் (மலேசியா) இயக்கத்தின் நன்மை கருதி 01.01.2004 தொடக்கம் இடைக்கால அகிலத் தலைவராகப் பொறுப்பேற்று பாண்டிச்சேரியில் ஆவணி மாதம் 2004ல் 14, 15, 16 ஒன்பதாவது உலக மாநாட்டை "தமிழும் தமிழியமும்" என் னும் கருப்பொருளில் தனக்கானதோர் உயர் பண்பாட்டு, நாகரீகம், இலக்கியங்களைக் கொண்ட தமிழினம் தன்னிறைவுச் சுக வாழ்வுடன் கூடிய உரிமையைப் போணும் விழுப் பொருளுடனும் அவர் மாநாட்டை நடாத்தினார். அந்தப் பெருமையுடன் அகிலத்தலைவராகப் பொறுப்பேற்று 2007ம் ஆண்டு சூலைத்திங்கள்

20முதல் 22ம் நாள் வரை புலம் பெயர்ந்த தமிழர்களின் "வாழ்வியலில் அன்றம் இன்றும்" என்னும் கருப்பொருளில் கோலாலம்பூரில் மலாயா பல்கலைக்கழகத்தில் பத்தாவது மகாநாட்டை நடாத்தி முடித்தார்.

இதனைத் தொடர்ந்து நடைபெற்ற அனைத் துலகபேரவைக்கூட்டத்தில்தென்னாபிரிக்காவைச் சேர்ந்த முதுபெரும் தமிழறிஞர் முனைவர் வே. கோவிந்தசாமி அவர்கள் தலைமைப் பொறுப்பை ஏற்று 2008ம் ஆண்டு சூலைத் திங்கள் தென்னாபிரிக்கா கூட்டிணைப்புக் கழகத்தின் 40தாவது ஆண்டு நிறைவு விழாவினையும் உ.த. பண்பாட்டியக்கத்தின் உலகளாவிய சிறப்பு மாநாட்டினையும், அனைத்துலக சிறப்புப் பேரவைக் கூட்டத்தையும் தென்னாபிரிக்காவில் நடாத்தி அப்பேரவைக் கூட்டத்தின் தீர்மானமாக 2009ல் ஐரோப்பாவில் உலகளாவிய சிறப்பு மாநாடு நடாத்தப்படவேண்டும் எனும் தீர்மானமும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. காலத்தின் தேவை கருதி உலகத் தமிழினம் பிரிந்துநின்று அழிவுறாமல் இணைந்து ஈழத்தில் வன்னியில் வாடும் எமது உறவுகளின் விடியலுக்குக் குரல் கொடுக்க இயக்கத்தின் அகிலத் தலைவர் முனைவர் வே. கோவிந்தசாமி அவர்களின் பணிப்பின்பேரில் இயக்கத்தின் அகில முதன்மைத் துணைத் தலைவர் அறநெறிக்காவலர் வேல் வேலுப்பிள்ளை அவர்களின் நெறிப்படுத்தலில் உலகத்தமிழ்ப் பண்பாட்டு இயக்க ஐரோப்பிய ஒன்றியம் யேர்மனியில் உலகத்தமிழர் சிறப்பு மாநாடாக "ஈழத்தமிழர் வாழ்வுரிமை மாநாட்டை" 01.08.2009 அன்று நடாத்தியது.

11.09.2010ல் (திருவள்ளுவர் ஆண்டு 2041 26ம் நாள்) இயக்கத்தின் ஐரோப்பிய ஒன்றியத் தலைமை அலுவலகம் அமைந்து இருக்கும் இறைன நதிக்கரையோகரத்தில் "யாதும் ஊரே யாவரும் கேளீர்" எனக் கணியன் பூங்குன்றனாரின் தீந்தமிழ்ச் சொற்தொடரைப் பதித்து தமிழுக்கும் தமிழர்களுக்கும் பெருமை சேர்த்த இறைன மாநகரில், யேர்மனி, மடங்கல் திங்கள் 26ம் நாள் 2041 திருவள்ளுவர் ஆண்டு காரிக்கிழமை உலகத்தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் அகிலக் கல்விப் பொறுப்பாளர் பேராசிரியர் இ. பாலசுந்தரம் தலைமையில் "அகம் புலம் தமிழர் வாழ்வுரிமை மாநாடு" என்னும் நிகழ்வு இடம் பெற்றது. இம்மாநாடு அகத்திலும் புலத்திலும் வாழ்கின்ற தமிழருள் ஒருங்கிணைப்பை ஏற்படுத்தி ஈழத்தில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளான தமிழ்த்தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து அவர்களது வலிமையான செயற்பாட்டுக்கு அரசியலுக்கு அப்பால் ஈழத்திலும், புலத்திலும் வாழும் மக்கள் இணைந்து செயற்பட்டு வரவும் வழிசமைந்தது.

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் 11வது உலக மாநாடு பிரான்ஸ் தலைநகர் பாரீசில் 2011 செப்ரம்பர் 24-25ல் திகதிகளில் இடம்பெற்றது. அமரர் முனைவர் வே. கோவிந்தசாமி அவர்களின் பணிப்பின்போரில் முதன்மைத் துணைத்தலைவர் அறநெறிக் காவலர் திரு. வேல் வேலுப்பிள்ளை அவர்களின் நெறிப்படுத்தலில் உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்க ஐரோப்பிய பிரான்ஸ் கிளைத் தலைவர் சரவணையூர் விசு செல்வராசா அவர்கள் மாநாட்டுத் தலைவராகவும், ஆ. இரவீந்திரநாதன் மாநாட்டு செயலாளராகவும் பொறுப்பேற்று ஏற்று நடாத்தினார். இம்மாநாட்டின் இறுதி யில் இடம்பெற்ற பேரவைக் குழுக் கூட்டத்தில் முதன்மைத் துணைத்தலைவரும் அறநெறிக் காவலருமைான திரு. வேல் வேலுப்பிள்ளை அவர்கள் உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் அகிலத் தலைவராகத் தெரிவு பெற்றார். மேலும், இம் மாநாட்டில் 1985ல் சேலத்தில் பரிந்துரைக்கப்பட்ட தமிழ் மொழி வழிக்கல்வித் திட்டத்தினையும், உலகளாவிய தமிழர்களின் தாய்மொழியறிவை வளர்த்தலும் உயரறிவு ஊட்டவும் பாடுபடுதல் என்னும் உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் செயற்பாட்டுக்கமைய 2012 ஆகஸ்ட் 24, 25, 26 திகதிகளில் (2043 ஆவணி 8, 9, 10) தமிழகம் புதுச்சேரியில் அயர் நாடுகளில் தமிழ் கற்றல் - கற்பித்தலில் எதிர்நோக்கும் சிக்கல்களும் தீர்வுகளும் என்னும் கருப்பொருளில் உலகத் தமிழ்க் கல்வி

மாநாட்டினை நிகழ்த்துவதற்குத் தீர்மானத்தினை மேற்கொண்டது.

இதனை ஆயத்தம் செய்வதற்காக உலகத் தமிழ்ப்பண்பாட்டு இயக்க தலைமையகத்தின் சார்பில் அகிலத் தலைவர். திரு. ப.கு. சண்முகம் (மலேசியா), அகிலக் காப்பாளர் திரு. மிக்கி செட்டி (தென் ஆப்ரிக்கா) அகில ஊடகத்துறைப் பொறுப்பாளர் திரு. ஆர்.என்.லோகேந்திரலிங்கம் (கனடா), அகிலக் கல்விப்பொறுப்பாளர் திரு. வி.சு. துரைராஜா (கனடா), அகில நிதிப் பொறுப்பாளர் சரவணையூர் விசு செல்வராசா (பிரான்ஸ்) அவர்களும் இந்தியா சென்று தமிழகம் புதுச்சேரியில் அயல் நாடுகளில் தமிழ் கற்றல் – கற்பித்தலில் எதிர்நோக்கும் சிக்கல்களும் தீர்வுகளும் என்னும் கருப்பொருளில் உலகத் தமிழ்க் கல்வி மாநாட்டினை 2012 ஆகஸ்ட் 24, 25, 26 திகதிகளில் (2043 ஆவணி 8, 9, 10) செய்றபடுத்துவதற்கு உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் அனைத்துலகக் கல்விப் பணியாளர் திரு. வி.சு. துரைராஜா அவர்கள் இதற்கான பணிகளை மேற்கொண்டு தமிழகத் தலைநகர் சென்னையில் இதனை நடாத்துவதற்கு முடிவு செய்தார். இதற்கமைய முதுநிலை வழக்கறிஞர் இரா. காந்தி மாநாட்டுக்குழுத் தலைவராகவும் செந்தமிழ்த் தேனீ இரா. மதிவாணன் மாநாட்டுச் செயலாளராகவும் எம்..ஜி.ஆர் பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் மேஜர் து. இராஜா மாநாட்டுப் பொருளாளராகவும் பொறுப்பேற்று இம்மாநாட்டை சென்னை எத்திராஜ் மகளிர் கல்லூரியில் இக்கல்வி மாநாடு இடம்பெற்றது.

மேற்படி உலகத் தமிழ்க் கல்வி மாநாட்டினைத் தொடர்ந்து 26.08.2012 அன்று அனைத்துலக சிறப்புப் பேரவைக் கூட்டம் சென்னை எத்திராஜ் மகளிர் கல்லூரியில் கருத்தரங்கம் அரங்கில் இடம்பெற்றது. பேரவைக் கூட்டத்தில் அனைத்துலகத் தலைமைப் பொருளாளராகத் திரு. வி.சு. செல்வராஜா அவர்களும் தேர்வு பெற்றனர். பேரவைக் கூட்டத்தின் தொடர்ச்சியாக அனைத்துலக சிறப்புப் பேரவைக் கூட்டம் பெங்களூரில் 28.08.2012 அன்று யுவானிக்கா நகரில் இடம்பெற்றது. 12வது உலக மாநாடு அமெரிக்காவில் நடாத்துவதற்குச் சூழல் ஏதுவாக இல்லாத காரணத்தால் உலகத் தமிழ்ப் பண்பாட்டியக்கத் தலைமை ஆசிய ஒன்றியத்தினால் (தலைவர் ப.கு. சண்முகம்) கருநாடக மாநாகர பெங்களூரில் உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கக் கிளை உருவாக்கப்பட்டு தலைமையகத்தினால் அங்கீகரிகக்ப்பட்டது. பெங்களூர்க் கிளை உலகத்தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் 12வது மாநாட்டினைக் கருநாடகத்தில் நடாத்துவதற்குத் தீர்மானித்தது.

வரலாற்றுச் சிறப்பு மிக்க கல்விமாநாட்டின் தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்காக உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் தலைமை ஆட்சிக்குழுவிலுள்ள அகிலத்தலைவர் வேல் வேலுப்பிள்ளை அகிலக் கல்விப் பொறுப்பாளர் வி.சு. துரைராஜா ஆகியோர் கொண்ட குழுவினர் என்னுடன் சென்னை எஸ்.ஆர்.எம் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் பொன்னவைக்கோ மற்றம் பேரா. முனைவர் இல. சுந்தரம் ஆகியோருடன் 30.08.2012 அன்று இணைந்து நடாத்திய பேச்சுவார்த்தை பெரும் வெற்றியைத் தந்ததுடன் "அயலகத் தமிழாசிரியர் டிப்ளோமா" என்ற செயற்திட்டமும் மொழி அழிந்த நாடுகளில் வாழும் தமிழ் மக்களுக்குப் பெரும் வரப்பிரசாதமாக அமைந்தது. இது உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்திற்கு பெரும் மதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

மலேசியாவில் 2007ல் இடம்பெற்ற மாநாட்டின் தீர்மானத்திற்கமைய இலங்கையில் தமிழர் தாயகமாகிய வடமாகாணத்தில் கிளிநொச்சி மாவட்டத்தில் உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் அமைக்கவிருக்கும் உலகத் தமிழருக்காகிய நடுவணகம் உள்ளகாணியினைப் பெறுவதற்காக தொடர்ந்து பல வருடங்களாக நானும் யாழ் பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் சி.க. சிற்றம்பலம் அவர்களுக்கும் இடையே நடந்த பேச்சுவார்த்தை வெற்றியளித்தது.

இதன்பயனாக உலகத் தமிழ்பண்பாட்டு இயக்க ஐரோப்பிய ஒன்றியத்தின் முன்நாட் செயலாளரும் அகிலக் கிளைகளின்

ஒருங்கிணைப்பாளரும் யேர்மன் கிளைத் தலைவருமான திரு. இ. இராஜசூரியர் அவர்களுக்கும் பேராசிரியர் திரு. சி.க. சிற்றம்பலம் அவர்களுக்குமிடையேயான 17 நவம்பர் 2010ல் நடைபெற்ற பேச்சுவார்த்தை பெரும் நிறைவைத் தந்தது. அதன் தொடர்ச்சியா 23.08.2011ல் அகிலத்தலைவர் வேல் வேலுப்பிள்ளை அவர்கள் உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் சார்பில் ஒப்பமிட்டு இலங்கை கிளிநொச்சி மருதநகரில் உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் என்னும் பெயரில் தமிழ்ப்பண்பாட்டு மையம் அமைய இருக்கும் காணியைப் பெற்றுக்கொள்வதற்காக உலகத்தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் சார்பில் ஒப்பத்தினை இட்டார். இருந்தும் மேலும் பல தொடர்புகளுக்குச் செயலாளர் நாயகம் துரை. கணேசலிங்கமே பொறுப்பாளர். இதன் அங்கீகாரத்தினை அகில முதன்மைத் தலைவராக இருந்த திரு. வேல் வேலுப்பிள்ளை அவர்களும் அகிலக் காப்பாளராக இருந்த பேராசிரியர் இ. பாலசுந்தரம் அவர்களும் செயலாளர்நாயகம் திரு. துரை. கணேசலிங்கம் அவர்களும் 09 டிசம்பர் 2010 அன்று ஒப்பமிட்டு பேராசிரியர் திரு. சி.க. சிற்றம்பலம் அவர்களுக்கு வழங்கியிருந்தனர்.

அதன் தொடர்ச்சியாக உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்க இலங்கைக் கிளையும் சட்டப்படி காணி அமைந்துள்ள மருதநகரில் பதிவதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டு இந்த முகவரியில் கிளை பதிவு செய்யப்பட்டு உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்க இலங்கைக் கிளைத்தலைவர் திரு. அருணாசலம் சத்தியானந்தன் பி.ஏ. டிப்ளோமா ஊடகவியலாளர், செயலாளர் திரு. சுந்தரலிங்கம் பிரசாந்தன் எம்.ஏ. அவர்களின் மேற்பார்வையில் செயற்பாடுகள் இடம் பெற்றதும் விரைவில் உலகத் தமிழுக்காக அமைக்கப்படவிருக்கும் தமிழ்ப் பண்பாட்டு மையம் ஐந்து மாடிக் கட்டிடத்தில் உருவாக இருப்பதும் உலகத் தமிழருக்குக் கிடைத்த பெருவெற்றியாகும்.

இவ்வேளையில் கனடாவில் தலைமைப் பீடம் அகிலத் தலைமைப் பதிவினைத் தொடர்ந்து நடைமுறைப்படுத்துவதற்காகத் தலைமை யகத்தின் ஆட்சிக்குழுவினரின் மூன்றில் இரண்டு பெரும்பான்மை உறுப்பினரின் எழுத்து மூல ஒப்புதல் பெற்று அகிலத்தலைவர் திரு. வேல் வேலுப்பிள்ளை அவர்கள் உடல் நலம் குன்றியிருந்ததனால் அகில சிறப்புத் தலைவராகவிருந்த அமரர் தமிழ்ச் செம்மல் திரு. சி. செல்லையா அவர்களின் வெற்றிடத் திற்கு அகிலத் துணைத்தலைவர் சு. தியாகலிங்கம் அவர்கள் திரு. வி.சு. துரைராஜா அவர்களை நியமனம் செய்தார். சிறப்புத் தலைவராகப் பதவி ஏற்றதைத் தொடர்ந்து கனடாவில் சட்டப்படி இயக்கம் அழிந்துவிடாமல் பதிவு பெற்றதற்கு முழுப்பொறுப்பும் அகில சிறப்புத்தலைவர் திரு. வி.சு. துரைராஜா அவர்களையே சாரும். ஆட்சிக்குழுவின் தீர்மானத்தின்படி 12வது மாநாட்டையும் 40வது ஆண்டு விழாவையும் பின்போட முடியாது என்பதை உணர்ந்து அகிலக் கிளைகளின் ஒருங்கிணைப்பாளர் திரு. இ. இராஜசூரியர் அவர்களை மாநாட்டுத் தலைவராகப் பணியாற்றும்படி அகில சிறப்புத் தலைவர் வி.சு. துரைராஜா அவர்கள் பணித்தார்.

இதனை அடுத்து மாநாட்டை யேர்மனியில் நடாத்துவதற்கு வேண்டிய ஒழுங்குகள் செய்வதற் காகச் செயலாளர் நாயகம் ஆகிய நான் கனடா சென்று அகில சிறப்புத் தலைவரைச் சந்தித்தேன். தொடர்ந்து ஐரோப்பிய ஒன்றியச்செயலர் திரு. கிறேசியன் யேம்ஸ் அல்ஸ்ரன் அவர்கள் அகில சிறப்புத் தலைவர் வி.சு. துரைராஜா அவர்களை அவர்களின் காரியாலயத்தில் 13.05.2014 அன்று சந்தித்து செயற்பாடுகள் தொடர்பான உரையாடலை மேற்கொண்டிருந்தார். இதன்படி உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்க யேர்மன் கிளைத் தலைவர் இ. இராஜசூரியர் அவர்களின் அனுமதியுடன் யேர்மன் கிளையும் ஐரோப்பிய ஒன்றியமும் தலைமையகத்துடன் இணைந்து மேற்படி மாநாட்டினை நடத்துவதற்கு இணக்கம் காணப்பட்டது. இதற்காக உலகளாவிய கிளை களின் ஒப்புதலைப் பெற்று இம்மாநாடு யேர்மனியில் வடிவம் கொண்டது.

இம்மாநாடு யேர்மனியில் 2014 அக்டோபர் 4ம், 5ம் இடம் பெற்றது. மேற்படி 12வது மாநாட்டின் பொறுப்பாளர்களாக ஒங்கிணைப்பாளர் திரு. துரைகணேசலிங்கம், தலைவர் இ. இராஜசூரியர், செயலாளர் திரு. கி.யேம்ஸ் அல்ஸ்ரன், பொருளாளர் அம்பி சிவகரன்

ஆகியோர் பணியாற்றினார்கள். யேர்மனியில் இடம் பெற்ற 12வது உலக மாநாட்டில் பல முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இம்ம நாட்டைத் தொடர்ந்து 04-10-2014 அன்று நடைபெற்ற பேரவைக் கூட்டத்தில் அகிலத் தலைவர் திரு. வேல் வேலுப்பிள்ளை, பொருளாளர் நாயகம், வி.சு. செல்வராஜா ஆகியோர் அறிக்கை சமர்ப்பிக்காத காரணத்தி னால் தென் ஆபிரிக்காவில் இடம் பெறும் பேரவைக் கூட்டத்தில் அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும் என முடிவு செய்யப்பட்டது. தென் ஆப்பிரிக்கா ஒன்றியத் தலைவர் கலாநிதி மிக்கி செட்டி அவர்கள் தலைமையில் 04-04-2015ல் இடம் பெற்ற அயலகத் தமிழாசிரியர் பட்டமளிப்பு விழாவினைத் தொடர்ந்து 05-04-2015 அன்று இடம் பெற்ற பேரவைக் கூட்டத்திலும் அகிலத் தலைவர் திரு. வேல் வேலுப்பிள்ளை, பொருளாளர் நாயகம், வி.சு. செல்வராஜா ஆகியோர் அறிக்கை சமர்ப்பிக்கவில்லை. எனவே 14 நாட்களுள் அறிக்கையைப் பெற்றுத்தருவதாக துணைத்தலைவர் திரு. ப.கு. சண்முகம் அவர்கள் உறுதியளித்திருந்தார். அங்கு இந்தி யாவில் சிறப்புப் பேரவைக் கூட்டம் நடத்துவது என்றும் கனடாவில் திரு. வேல் வேலுப்பிள்ளை அவர்களால் தலைமைப்பணிமனை பதிவு ஒழுங்கான முறையில் கையாளப்படாததினால் பதிவு காலாவதியாகும் நிலையை எட்டியுள்ளதை அடுத்து அவசரமாக அகில சிறப்புத் தலைவர் வி.சு. துரைராஜா அவர்களிடம் தலைமை யக் பதிவினைச் செய்யும் முழுப் பொறுப்பும் ஒப்படைக்கப்பட்டது.

தென் ஆப்பிரிக்காவில் 05-04-2015ல் இடம் பெற்ற பேரவைக் கூட்டத்தினைத் தொடர்ந்து ஆறு மாதங்களாக அகிலத் தலைவர் திரு. வேல் வேலுப்பிள்ளை, பொருளாளர் நாயகர், வி.சு. செல்வராஜா ஆகியோர் அறிக்கை சமர்ப்பிக்கவில்லை இது தொடர்பாக 24-08-2015ல் துணைத்தலைவர் ப.கு. சண்முகம் அவர்களுக்கு 24-08-2015 அன்று தேதி யிடப்பட்டு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டிருந்து. இந்நிலையில் இயக்க யாப்பு விதிகளுக்குமைய யேர்மனியில் ஈழத்தமிழர் வாழ்வுரிமை மாநாட் டினைத் தொடர்ந்து அனைத்துலக சிறப்புப் பேரவைக் கூட்டத்தில் 10-10-2015 அன்று துணைத்தலைவர் திரு. சு. தியாகலிங்கம் அவர் கள் தலைமையில் இடம் பெற்றது. அங்கு சட்ட ரீதியாக அகிலத் தலைவராக வி.சு. துரைராஜா அவர்கள் பொறுப்பேற்று அவர்களால் புதிய ஆட்சிக்குழு உருவாக்கப்பட்டு செயற்பட்டு வருகிறது.

அதற்கு மைய உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்க தலைமையகமும் இந்தியக் கிளையும் இணைந்து 2016 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 16ம், 17ம் நாட்களில் அயல் நாடு களில் வாழும் தமிழர்கள் எதிர்நோக்கும் சவா களும் வாய்ப்புகளும் எனும் தலைப்பில் பாண்டிச்சேரியில் நடந்ததும் மாநாடு உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்க இந்தியக் கிளைத் தலைவர் திருமதி. மாலதி இராஜவேலு, செயலாளர் பாஞ். இராமலிங்கம் அவர்கள் தலைமையில் இடம் பெற்றது. பேரவைக் கூட்டம் நீதிபதி டேவிட் அனுசாமி அவர்கள் முன்னிலையில் இடம் பெற, இம்மாநாட்டில் புதுச்சேரி முதலமைச்சர் ந. இரங்கசாமி அவர்கள் மாநாட்டில் கலந்து கொண்டது சிறப்பிற்குரியதே. பாண்டிச்சேரியில் நடைபெற்ற அனைத்துலக சிறப்பு மாநாட்டினைத் தொடர்ந்து நடைபெற்ற அனைத்துலக சிறப்பு பேரவைக்கூட்ட முடிவிற்கமைய பிரான்ஸ் நாட்டில் 2016 செப்டம்பர் 11ம், 12ம் நாட்களில் அனைத்துலக சிறப்பு மாநாடும் சிறப்பு பேரவைக் கூட்டமும் நடைபெற்றது.

ஆட்சிக்குழு உறுப்பினர் விபரங்கள் 2016

காப்பாளர்கள் மதிப்பிற்குரிய தாவீதன்னுசாமி, முன்னாள் நீதியரசர், புதுச்சேரி.

கலாநிதி வி.எம். சேதுராமன், இந்தியா

அகிலத்தலைவர் – திரு. வி.சு. துரைராஜா, கனடா

சிறப்புத்தலைவர் – கலாநிதி மிக்கிச்செட்டி, ஆப்பிரிக்கா

செயலாளர் நாயகம் திரு. துரை கணேசலிங்கம், யேர்மனி

பொருளாளர் நாயகம் திரு. எஸ். சிவராசசிங்கம், சுவிற்சர்லாந்து

முதன்மைத் துணைத்தலைவர் – திரு. ப.கு. சண்முகம், மலேசியா

துணைத்தலைவர் – திரு. சு. தியாகலிங்கம், நோர்வே

பொது சனத்தொடர்பும் ஊடகமும் திரு. ஆர்.ஏன். லோகேந்திரலிங்கம், கனடா

தமிழ்க்கல்வி கலாநிதி இல. சுந்தரம், இந்தியா

கலை பண்பாடு கலாநிதி. பாஞ். இராமலிங்கம், இந்தியா

கொள்கை பரப்புச் செயலாளர் திரு. நடா இராஜ்குமார், கனடா

மனித உரிமை திரு. ந.இ. விக்கிரமசிங்கம், அவுஸ்திரேலியா

கிளைகளின் ஒருங்கிணைப்பாளர் – திரு. இ. இராஜசூரியர், யேர்மனி

நிருவாகச் செயலர் தமிழ்மணிப் புலவர் கி. யேம்ஸ் அல்ஸ்ரன், யேர்மனி

சட்ட ஆலோசகர் – பேராசிரியர் சி.இராமமூர்த்தி, கர்நாடகா

உதவி இயக்குநர் (நிதி) – திரு. எஸ். பிரசாந்தன், இலங்கை

MTC Canada
President. 5310 Finch Ave East, Unit # 10, Toronto, Ontario, M1S 5E8,
Canada, Tel: (1) 647 829 4044 Email: raja@cfsginc.com
Bank CIBC 11100 1100 Ellesmere Road, Toronto, Ontario, Canada
A/N No : 01732 - 2314118
IMTC Web www.imteweb.com

IMTC Germany
Secretary General Office Postfach 2129, 48431 Rheine Tel/Fax (0049) 5971-14258
Email : imtc1974@yahoo.com
Name : International Bewegung f.T.Kulture Europäische
Int. Bank Account No : De 57 4035 005 0000 0421 84
Swift-BIC : WELADED1RHN
SPARKASSE - Rheine.de
Bank : SPARKASSE - RHEINE - Germany

IMTC Canada
President. 5310 Finch Ave East, Unit # 10, Toronto, Ontario, M1S
5E8, Canada, Tel: (1) 647 829 4044 Email: raja@cfsginc.com
Bank CIBC 11100 1100 Ellesmere Road, Toronto, Ontario, Canada
A/N No : 01732 - 2314118

IMTC India
Dr. Panch. Ramalingam
Hon' Secretary
International Movement for Tamil Culture, India
17, 14th Street, Krishna Nagar, Puducherry - 605 008, Inida Tel : 091 944 3352476
Mail ID : panchramalingam@gmail.com

இந்த அமைப்பானது தனக்கென பல குறிக் கோள்களை அமைத்துக் கொண்டு இயங்குகிறது.

1. உலகளாவிய தமிழர்களின் தாய் மொழி யறிவை வளர்த்தலும் உயரறிவு ஊட்டவும் பாடுபடல்.
2. உலகெங்கும் வாழும் தமிழர்களைத் தொடர்புபடுத்துதலும், ஒருங்கிணைத்தலும் தமிழிலக்கியக் கல்வியைப் பரப்பவும் பாடுபடல்.
3. கலை பண்பாட்டு நிகழ்ச்சிகளின் ஊடாகப் பல்வேறு மக்களினங்களில் நல்லுறவை வளர்த்தல்.
4. வாழ்நில மக்களுடன் கலைப் பரிமாற்றத்தை ஏற்படுத்தி ஒத்துழைத்தல்.
5. இவ்வியக்கம் அரசியசியற் சார்பற்ற தெனி னும் உலகத் தமிழர்களின் உரிமையைப் பாதுகாப்பது மட்டும் மனித ஒற்றுமையும் பாதுகாப்புடன் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுப்புடன் வாழுதல் வாழும் நாடுகளிலெல்லாம் சிறந்த மக்களாக மட்டுமல்ல அந்நாடுகளின் பல் கலாச்சார சமூகங்களுடன் ஒற்றுமையாக அந்நாட் டின் பொருளாதாரத்தை வளர்க்கக் கூடியவர் களாகவும், மனித உரிமைகளை வளர்க்கும் சமூகமாக தமிழர்சமூகம் வாழ வழி ஏற்படுத்துதல்.
6. தமிழ்க் கலைப் பொருட்கள் வெளியீடுகள் நூல்கள் அனைத்தையும் பேண ஆவணக் காப்பகம் அமைத்தல்.
7. மத வேறுபாடற்ற சமரச நெறிப்பாடு என்ற கொள்கையைப் பரப்பலும் பின்பற்றலும்
8. உலகம் முழுவதிலும் தமிழ்மொழி, இலக்கியம், கலைகள், மெய்யம், வரலாறு, திருக்குறள் மற்றும் தமிழ் வெளியீடுகள் ஆகியவற்றின் மேம்பாட்டிற்காக பயில ரங்குகள் பணியவைகள் மாநாடுகள் நடாத்துதல்.
9. தமிழ்மொழியில் எமது மதவழிபாடுகளை ஏற்படுத்துதல், அதன்வழி நடத்தல்.
10. தமிழர் மரபு விளையாட்டுக்களை தமிழர் வாழும் பிரதேசங்களில் அறிமுகம் செய்தல்
11. புலம்பெயர் நாடுகளிலும் தமிழர் பிரதே சங்களிலும் வாழும் தமிழர்களின் புதுமை கள் ஆய்வுகள் மேற்கொண்டு சாதனை படைக்கும் தமிழர்களையும், மொழியையும் பண்பாட்டு விழுமியங்களையும் வளர்க்கும் தமிழர்களையும், இனம்கண்டு விருது வழங்கிக் கௌரவித்தல்.
12. தமிழர் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளி லெல்லாம் அந்நாட்டு அரசு உள்ளூராட்சி அமைபுக்கள் மூலம் தைமாதத்தைத்தமிழ் மரபுரிமை மாதமாகப் பிரகடனம் செய்தல்.
13. தமிழர் மரபுரிமை மாதமான தை மாதத்தில் தமிழர் பண்பாட்டு விழுமியங்களைப் பிரதிபலிக்கக் கூடியதான நடைபவனி தமிழ் மொழியோடு பிரதிபலிக்கக் கூடிய கலை நிகழ்ச்சிகள் ஒழுங்கு செய்தல் சிறுவருக்கான தமிழ்ப் பேச்சு கவிதைப் போட்டி நிகழ்ச்சிகள் ஒழுங்கு செய்தல் நடைமுறைப்படுத்தல்.
14. யுனஸ்கோ அமைப்புடன் தொடர்பு கொண்டு அனைத்துலக ஒற்றுமைப்பாட்டிற்கு ஒத்து ழைத்தல் ஐக்கிய நாடுகள் சபையில் உறுப்பியம் பெற முயற்சித்தல்.
15. மேற்கூறிய இலக்குகளுக்கு ஏற்றவாறு இதழ்களை வெளியிடல்.
16. இவ் அமைப்பின் தமிழ்ப் பண்பாட்டு மையம் ஒன்றை அமைத்தல்.

புலபெயர் நாடுகளிலும் தமிழர் பிரதேசங் களிலும் இத்தகைய கொள்கைகளின் அடிப்படை யில் உலகெங்கும் பதினொரு மாநாடுகள் நிறைவு பெற்றுள்ளன.

1. 1977ம் ஆண்டு சென்னையில் ஈழத்தமிழர் களின் பிரச்சனைகள் முதல் முதலாகப் பொது மேடையில் வெளிச்சத்திற்குக் கொண்டு வரப்பட்டது.
2. 1980ல் மொரீசியக தீவில் தமிழக அஞ்சல் தலை வெளியிப்பட்டதுடன் தமிழர் குடியேற்றத்தின் நினைவாக நினை

ழுவத்தூண் நிறுவப்பட்டது.

3. 1985ல் தமிழகம் சேலத்தில் "தமிழ் மொழி வழிக்கல்வி" தமிழகத்தில் கொண்ட வர வேண்டும் எனப் பிரிந்துரைக்கப்பட்டது.

4. 1987ல் மலேசியா தலைநகர் கோலாலம் பூரில் "உலகின் முதல்மொழி தமிழே" எனப் பிரகடனப் படுத்தப்பட்டது.

5. 1992ல் அவுஸ்திரேலியா தலைநகர் சிட்னியில் ஆசியபசுபிக் நாடுகளின் தமிழ றிஞர்களின் ஒப்புதலுடன் தமிழ்மண் விடிவு பெறுவதே தமிழர்களின் துயருக்கு முடிவு என்பது உலகிற்கு ஒரே குரலில் கூறப்பட்டது.

6. 1996ல் கனடாவின் தலைநகர் ரொறான் ரோவில் முன்நிகழ்ந்த ஐந்து மாநாடுகளை ஏற்று வழிமொழிந்ததுடன் 1996ல் உல கத் தமிழ்ப் பண்பாட்டியக்க ஐரோப்பிய ஒன்றியத்தினால் யேர்மனியில் நடத்த எழுச்சி மாநாட்டின் தமிழ் விடுதலைப் போராட்டத் தீர்மானங்களும் வழி மெ ாழியப்பட்டன.

7. 1999ல் சென்னையில் உலகத் தமிழி னத்தை ஒருகுடையில் கொண்டு வருவதற் காக 1995ம் ஆண்டில் உல.த.ப. இயக்க அனைத்துலகப் பேரவையின் தீர்மானமான கொடி, கீதம், உடை உருவாக்குவதென முடிவு செய்யப்பட்டது.

8. 2001ல் தென்னாபிரிக்காவில் டர்பன் நகரில் ஏழாவது மாநாட்டின் தீர்மானங்களை நடைமுறைப்படுத்த வழி சமைக்கப்பட்டது. வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தீர்மானங்களாவன.

9. தமிழர் ஆண்டாகத் தைத்திருநாளும், தமிழில் இறை வழிபாடு, தூய தமிழ்க் கையாள்கை, 19ம் நூற்றாண்டில் இருந்து வெறும் தமிழர் களாகப் போகின்றவர்களைத் தாய்த் தமிழ் உணர்வுக்குள் கெண்டுவரும் நோக்குடன் தமிழ்வழிக்கல்வியை ஏற்படுத் தலும், உலகத் தமிழர்க்கான வங்கி என்பன உருவாக்க வழி சமைத்தலுடன் பல முக்கிய தீர்மானங்களும் நிறைவேறின.

10. 2004ம் ஆண்டு இந்தியா புதுச்சேரியில் தமிழரின்தேசியத் திருநாளாகத் தைப்பொங் கலும் ஈழத்தமிழர் பிரச்சனையில் அமைதி வழியில் தீர்வு ஏற்பட இந்தியா தலைவிட வேண்டுமென்றும், உலகளாவிய தமிழ ரிடையே ஒருங்கிணைந்த கல்வித் திட்டத் துக்காக உலகளாவிய தமிழ்மொழி கூட்டுக் கல்விமையம் ஒன்றினை ஏற்படுத்துதல்.

11. 2007ல் மலேசியாவின் தலைநகர் கோலாம் பூரிலுள்ள மலாயா பல்கலைக்கழகத்தில் உலகத்தமிழருக்கான "தமிழ்ப்பண்பாட்டு மையம்" ஏற்படுத்த இணக்கம் காணப்பட்டது. ஈழத்தமிழர் பிரச்சனையில் இலங்கை அரசின் தமிழருக்கெதிரான நிலைப்பாட்டை உடனடியாக நிறுத்தவும் சொந்த நாட்டிலே எதிரிகளாக்கப்பட்ட தமிழர்களை அவர்களது சொந்த இடங்களில் குடியமர்த்த அனைத் துலக சமூகம் முன்வரவேண்டும் மென்றும் கேட்டுக்கொள்கிறது. கடந்த 60 ஆண்டுகளாக ஈழத்தமிழர்கள் அடைந்து வரும் இன்னல்கள் கொலைகள், ஆட்கடத் தல்கள், வன்புணர்வுகள் என்பனவற்றை உடனடியாக நிறுத்தவும், அம்மக்கள் அமைதியுடனும் அச்சமின்றியும் சுய நிர்ணய உரிமையோடும் வாழ்வதற்கு அவர்களது தாய்நிலத்தில் சுயாட்சியுடன் அமைந்ததும், வட, கிழக்கு, மாகாணங்கள் இணைந்ததுமான தீர்வே சரியாகதாக அமையும் என வலியுறுத்தியது.

11வது உலக மாநாடு 2010ல் நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவிலும் 12வது உலக மாநாடு அமெரிக்காவின் தலைநகர் நியுயோர்கிலும் நடத்தப்படும் எனத் தீர்மானிக்கப்பட்டது. எனினும் வசதியின்மை காரணமாக 11வது மாநாட்டை பிரான்சில் ஒக்ரோபர் 24, 25ல் நடாத்துவதற்குத் தலைமைப்பேரவை அங்கீகாரம் வழங்கியது. அதன் அடிப்படையில் உ.த.ப.இயக்கம் பிரான்ஸ் சில் 11வது உலக மாநாட்டை உலகத் தமிழர் வாழ்வியல் மேம்பாடு என்னும் கருப்பொருளில் செப்டம்பர் 24-25ம் திகதிகளில் (2011 செப். 24-25) நடாத்தியது. பாரீசில் நடைபெற்ற 11வது உலக

மாநாட்டின் தலைவராக ஐரோப்பிய பிரான்ஸ் கிளைத் தலைவரும் தற்போதய யுனஸ்கோ பொறுப்பாளருமான திரு. சரவணயூர் விசு செல்வராசா அவர்கள் தலைமையில், செயற்பட்ட இம்மாநாட்டில் வரலாற்று முக்கியத்துவமான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1) 1921ஆம் சென்னை பச்சையப்பன் கல்லூரியில் தமிழ் மறைமலையடிகள் தலைமையில் 500 தமிழ்ப் புலவர்கள் பங்கு கொண்ட மாநாட்டில் தமிழர் ஆண்டுப்பிறப்பாக தைத் திங்கள் முதலாம் நாளைத் தமிழர் ஆண்டு ஆகப் பிரகடனப் படுத்தினார்கள். இதற்கு வலுச்சேர்த்து நடைமுறைப்படுத்தும் வகையில் 2001ம் ஆண்டு மலேசியத்தலைநகர் கோலாம்பூரில் ஆறாம் நாள் உலகத் தமிழ்ப் பண்பாட்டியக்கத்தின் பரிந்துரை மாநாடு என்னும் சிறப்பு மாநாட்டின்மூலம் எடுத்த தீர்மானத்தை முன்னைய தமிழக அரசு நடைமுறைக்குக் கொண்டு வந்தது. இத்தீர்மானம் தொடர்ந்தும் நடைமுறையில் இருப்பதற்காக ஆக்க பூர்வமான நடவடிக் கைகளை தற்போதைய தமிழ அரசும் நடை முறைப்படுத்த வேண்டுமென இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

2) ஈழத்தமிழர் பிரச்சினையில் இலங்கை அரசின் தமிழர்களுக்கெதிரான நிலைப் பாட்டை உடனடியாக நிறுத்தி சொந்த நாட்டிலே ஏதிலிகள் ஆக்கப்பட்ட தமிழர் களை அவர்களின் சொந்த இடங்களில் குடியமர்த்தி அவர்களின் பொருளாதார வாழ்வியல் வளர்ச்சிக்கு வழிவகுக்குமாறு இலங்கை அரசைக் கேட்டுக் கொள்வதுடன் இதற்கு இந்தியா உட்பட அனைத்துச் சமூக மும் சேர்ந்து செயலாற்ற வேண்டுமென இம்மாநாடு கோரி நிற்கிறது.

3) இலங்கையில் 60 ஆண்டுகளுக்கு மேலாக இடம்பெறும் ஈழத்தமிழர் துன்பியல் வாழ்விற்கு உடன முடிவுகண்டு மக்கள் அச்சமின்றி அமைதியுடன் தங்கள் சொந்த மண்ணில் அமைதியுடன் சுதந்திரமாக வாழ் வற்கு சுயாட்சியுடன் கூடிய சுய நிர்ணய உரி மையுடன் வடக்கும் கிழக்கும் இணைந்த தீர் வினை ஏற்றுக் கொண்டு இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் 13வது சரத்துக் மேல் கூடிய அதிகாரப்பிரிவினைக் கொடுத்து தமிழர் பிரச்சனைகட்குத் தீர்வினை ஏற்படுத்த தமிழர் தரப்பில் ஐ.தே.கூட்டமைப்பும், மலை யக மக்கள் பிரதிநிதிகள் முஸ்லீம்களின் பிரதான கட்சியான முஸ்லீம் காங்கிரஸ், பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி ஆகியவற்றுடன் இலங்கை அரசு பேசி நிர்ணயிக்கப்பட்ட கால எல்லைக்குள் தீர்வை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென இம்மாநாடு வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

4) உலகளாவிய தமிழர்களிடையே பொது வான ஒருங்கிணைந்த கல்வித் திட்டம் ஒன் றினை உருவாக்கி நடைமுறைப்படுத்த உ.த. பண்பாட்டு இயக்கம் தமிழ் மொழி மையம் ஒன்றினை உருவாக்க வேண்டும் என இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

5) உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்க தமிழ்ப் பண்பாட்டு மையம் கிளிநொச்சியில் ஐந்து ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்க உத.ப. எண்பாட்டியக்கம் நடவடிக்கைகளை மேற் கொண்டுள்ளது. இந்நடுவணகத்தில் தமிழ் மொழி வளர்ச்சி, தமிழ்ப் பண்பாடு மேம்படுத்தல், ஆவணக் காப்பகம், கேட் போர் கூடம் போன்ற சகல வசதிகளுடன் கூடிய மண்டபம் ஒன்று அமைப்பதற்கான நடவடிக்கைகளை உடன் மேற்கொள்ள வேண்டுமென்று இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

6) யேர்மனியில் 2010ம் ஆண்டில் உ.த. பண்பாட்டு இயக்கம் ஐரோப்பிய ஒன்றியம் நடாத்திய அகம் புலம் வாழ்வியல் சிறப்பு மாநாட்டுத் தீர்மானத்திற்கமைய தமிழர் வாழ்வாதார மேம்பாட்டு நிதியத்திற்கு ஆன பணிகளை உ.ல.த.பண்பாட்டியக்கம் உடன் மேற்கொள்ள வேண்டுமென்று இம்மாநாடு தீர்மானம் செய்கிறது.

7) உலகத்தின் எல்லாப் பாகங்களிலும் தமிழர்கள் எங்கு வாழ்கின்றார்களோ அங்கெல்லாம் தமிழர் மையங்கள் உருவாக வேண்டுமென்றும் அதற்கான உதவிகளை உ.த.பண்பாட்டு இயக்கம் மேற்கொள்ளுமென்றும் மாநாடு தீர்மானம் எடுத்துக்கொள்வதுடன், தமிழர் தகவல் மத்திய நிலையம் ஐரோப்பிய நாடொன்றிலிருந்து ஏனைய கிளைகளை உலகின் சகல பகுதிகளையும் இணைக்கக் கூடிய வகையில் செயலாக்கம் மேற் கொள்ளும் வகையில் உருவாக்கப்பட வேண்டும் என மாநாடு தீர்மானம் செய்கிறது.

8) உலக நாடுகளில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட சலக மக்கள் பிரதிநிதிகளம் ஒன்று சேர்ந்து மக்கள் தெரிவு ஒன்றியம் என்னும் பெயரில் ஓர் ஒன்றியம் ஒன்று உருவாக்கப்பட்டுஉலகின்சகலநாடுகளிலும் உள்ள பாராளுமன்றங்களிலும் தமிழன் குரல் ஒலிக்க ஒருமையாகச் சேர்ந்து பயணித்து ஒன்றபட்ட நோக்கை அமைய உ.த.பண்பாட்டு இயக்கம் சகல வழிகளிலும் உதவ வேண்டும் என இம்மாநாடு கேட்டுக்கொண்டது.

உலகத் தமிழ்ப் பண்பாட்டு மாநாடுகளும் அவற்றின் விபரங்களும்

முதல் மாநாடு 1977 சென்னையில்

முதலாவது உலகப் பேரவைப் கூட்டம் 1977இல் நடைபெற்றது. தமிழ்நாடு சென்னையில் நடைபெற்ற முதலாவது உலக மாநாட்டில் முன்னைய முதலமைச்சராக இருந்த அமரர் பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி. இராமச்சந்திரன் அவர்கள் கலந்து கொண்டு இந்த அமைப்பின் முதல் மாநாட்டைத் தொடங்கிவைத்து மாநாட்டுச் சிறப்புரையாற்றினார். தமிழக அரசின் சார்பாக உடன் சட்டப்பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி, சட்ட அமைச்சர் திரு. நாராயணசாமி முதலியார், உணவு அசைச்சர் திரு. எட்மண்ட், செய்தி சுற்றுலா அமைச்சர் திரு. ஆர்.எம். வீரப்பன், போக்குவரத்துறை அமைச்சர் திரு. பொன்னையன், கைத்தறித்துறை அமைச்சார் திரு. ராசா முகமது போன்றோர் கலந்து கொண்டனர்.

2வது மாநாடு 1980 ஆகஸ்ட் 4–8 மொறீசியசில்

மொறீசியஸ் பிரதமர் மாண்புமிகு ராம்குலா சிவசகர் அவர்கள் மாநாட்டை தொடங்கிவைக்க தமிழ்நாட்டின் மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்தார். இயக்கத்தின் பலநாட்டுப் பேராளர்களும் கலந்து கொண்டனர்.

2வது மாநாட்டின் தீர்மானாமாக முதல் முதலில் தமிழ் மக்கள் குடியேறிய ஆண்டினை நினைந்து 250 நினைவுத்தூண்கள் நாட்டப் பட்டன பத்துரூபா நாணயத்தாளும் தபால் தலையையும் தமிழில் வெளியிடப்பட்டது உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் தலைவர் அமரர் பெரியார் மாணிக்கம் தங்கணமுத்து மொறீசியஸ் கிளைத்தலைவர் அர்கள் தலைமை யில் இம்மாநாடு நடைபெற்றது.

3வது மாநாடு 1985 டிசம்பர் 13–15 சேலத்தில்

இம்மாநாட்டை அகிலத்தலைவர் பேராசிரியர் இரா.ந. வீரப்பன் அவர்கள் நெறிப்படுத்தலில் மாநாட்டுத்தலைவர் அமரர் சங்கொலி திங்கள் இதழ் ஆசிரியர் சோலை இருசன அவர்களும் டாக்டர் சுமாமணி அவர்களும் இம்மாநாட்டை நடாத்தினர். தமிழக அரசின் உதவிகள் கிடைக்கவில்லை எனினும் சேலம் வாழ்தமிழர்களின் உளப்பூர்வமான ஒத்துழைப் போடு நடாத்தப்பட்ட இந்த மாநாட்டில் ஆய்வரங் கத்தில் பல்துறை சார்ந்த அறிஞர்கள் கட்டுரை வழங்கினர். பண்பாட்டு இயக்கப் பேராளர்கள் மொறீசியசு, பிஜ, மசேியா, சிங்கப்பூர், பர்மா, அந்தமான் பப்புவாநியூகினி, இந்தியா, ஈழம் ஆகிய இடங்களில் இருந்த பேராளர்கள் கலந்து கொண்டனர்.

4வது மாநாடு 1987 ஆகஸ்ட் 29–31 கோலாலம்பூரில்

மகளிர் மாமணி இந்திராணி சாமிவேலு அவர்கள் குத்துவிளக்கு ஏற்றிவைக்க மாநாட்டுச்

செயலர் அமரர் சோல இருசன் வரவேற்புரையைத் தொடர்ந்து மாநாட்டுத்தலைவர் அமரர் இரா. ந. வீரப்பனார் தலைமையில் மாநாடு ஆரம்பமானது. பன்நாட்டு பண்பாட்டு இயக்கப் பேராளர்கள் மொறீசியஸ், வடஅமெரிக்கா, லிபியா, தாய்லாந்து, யேர்மனி, பிரான்சு ஆகிய நாடுகளிலிருந்து இயக்கப் பேராளர்கள் கலந்து கொள்ள திருமதி இந்திராணி சாமிவேலு வழக்கறிஞர் அ. கணேசலிங்கம் அவகள் சிறப்புரையாற்றினர்.

5வது மாநாடு 1992 அக்டோபர் 3,4 ஆஸ்திரேலியாவில்

அகிலத்தலைவர் அமரர் பேராசிரியர் திரு. இரா.ந. வீரப்பனார் நெறிப்படுத்தலில் மாநாட்டுச் செயலாளர் கலாநிதி பாலேந்திரா அவர்களின் செயற்பாட்டில் இடம் பெற்ற இம்மாநாட்டில் அவுஸ்திரேலியப் பிரதமர் பி.யே. கெற்றிங் வாழ்த்துச் செய்தி வழங்கியதுடன் அவுஸ்திரேலிய அமைச்சர் மாண்புமிகு பீற்றர் ஸ்றேபவிள்ஸ் அவர்கள் பிரதமவிருந்தினராகக் கலந்து சிறப்பித்தார்.

பேராசிரியர் க.ப. அறவாணன் (புதுவைப் பல்கலைக்கழக தமிழியற் துறைத்தலைவர்) துணைவேந்தர் பேரசிரியர் சி. பாலசுப்பிரமணியம் (தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகம்) பேராசிரியர் எஸ். முத்துக்குமரன் (திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகம்) யாழ் பல்கலைக்கழகப் பேராசிரியர் எஸ். பத்மநாதன் உட்படப் பல பன்நாட்டுத் தமிழ் அறிஞர்கள் உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கப் பேராளர்கள் இவர்களோடு கலைஞர் சிவகுமார் அவர்களும் கலந்து சிறப்பித்தார்.

6வது மாநாடு 1996 ஆகஸ்ட் 24-26 கனடாவில்

அகிலத்தலைவர் பேராசிரியர் இரா.த. வீரப்பனார் தலைமையில் மாநாட்டுத் தலைவர் அமரர் தமிழ்ச்செம்மல் திரு. செல்லையா அவர்கள் நெறிப்படுத்தலில் கனடியப் பிரதமர் அமைச்சர்கள் வாழ்த்துச் செய்தி வழங்கியிருந்ததுடன் கனடாவின் முக்கிய பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்து சிறப்பித்தனர்.

மாநாட்டுப் பிரதம விருந்தினராக முனைவர் தமிழ்க்குடிமகன் (தமிழ்மொழி ஆட்சி மற்றும் தமிழ்ப்பண்பாட்டுத்துறை அமைச்சர்) சிறப்பு விருந்தினராகப் பட்டாளி மக்கள் கட்சி நிறுவனர் மருத்துவர். இராமதாஸ் அவர்கள் கலந்து சிறப்பித்திருந்தார்.

தமிழ்நாட்டில் இருந்து பேராசிரியர் க.ப.அறவாணன் (உபவேந்தர் புதுவை பல்கலைக்கழகம்) பெரும்கவிகோ வா.மு. சேதுராமன் (தமிழ்நாடு) பேராசிரியர் வலம்புரியான் (தமிழ்நாடு) கலாநிதி பாலசுந்தரம் (கனடா) பேராசிரியர் கா சிவத்தம்பி (இலங்கை) அவர்களும் கலந்து சிறப்பித்தனர். நடைபெற்ற கலைநிகழ்வுகளில் சிறப்புநிகழ்வுகளாக திரைப்பட இயக்குனர் திரு. பாரதி ராஜா, தீபன்சக்ரவர்த்தி குழுவினர் நாட்டியப் பேரொளி ஜெயலட்சுமி ஈஸ்வர் (இந்தியா) டி.கே.எஸ். கலைவாணன் (கருநாடக இசை) உட்படப் பல பன்நாட்டுத் தமிழ் அறிஞர்கள் உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கப் பேராளர்கள் உட்பட பலநாட்டுப் பேராளர்கள் கலந்து கொண்டனர்.

7வது மாநாடும் வெள்ளி விழாவும் 1999 ஆகஸ்ட் 27-29 தமிழ்நாட்டில்

அகிலத்தலைவர் அமரர் பேராசிரியர் இரா.ந. வீரப்பனார் நெறிப்படுத்தலில் மாநாட்டுச் செயலாளர் எம்.ஏ. இரகுமான் தலைமையில் இடம்பெற்ற மாநாட்டு மலருக்கு இந்தியக் குடியரசுத்தலைவர் மாண்புமிகு கே.ஆர். நாராயணன் மாண்புமிகு இந்தியப் பிரதமர் வாஜ்பாய் முனைவர் தமிழ்க்குடிமகன் (தமிழ் ஆட்சிமொழி தமிழ்ப் பண்பாடு இந்து சமயம் மற்றும் அற நிலையத்துறை அமைச்சர்) மாண்புமிகு. வ.முல்லைவேந்தன் (செய்தி விளம்பரம் மற்றும் அச்சுத்துறை அமைச்சர்) இலங்கை கால்நடை அபிவிருத்தி அமைச்சர் எஸ் தொண்டைமான் மலேசியப் பொதுப்பணித்துறை அமைச்சர் டத்தோ சாமிவேலு ஆகியோர் வாழ்த்துரை வழங்க தமிழ்நாடு மற்றும் ஏனைய உலகநாடுகளின் அறிஞர்கள் ஆய்வுரை வழங்க தமிழர் தேசிய இயக்கத்தலைவர் மதிப்பிற்குரிய பழ. நெடுமாறன் பிரதம விருந்தினராகக்

கலந்து மாநாட்டைத் தொடங்கி வைக்க உட்படப் பல பன்நாட்டுத் தமிழ் அறிஞர்கள் உலகத தமிழ்ப்பண்பாட்டு இயக்கப் பேராளர்கள் உட்பட பலநாட்டுப் பேராளர்கள் கலந்து கொண்டனர்.

8வது மாநாடு 2001 டிசம்பர் 13 – 15 தென்ஆப்பிரிக்காவில்

தென்னாபிரிக்கா டர்பன் நகரில் அகிலத்தலைவர் அமரர் தமிழ்ச்செம்மல் சி.செல்லையா அவர்களின் நெறிப்படுத்தலில் மாநாட்டுத்தலைவர் மிக்கி செட்டி தலைமையில் நடைபெற்ற இந்த மாநாட்டில் முதன்மை விருந்தினராக சென்னைப் பல்கலைக்கழக துணைவேந்தர் பொன் கோதண்டராமன் மற்றும் தென்ஆபிரிக்காவைச் சேர்ந்த அமரர் ராதாக்கிருஷ்ணன் படையாட்சி (பொதுப்பணித் துறை அமைச்சர்) உதவி மேயர் Logien Naigdoo ஆகியோர் மாநாட்டில் சிறப்புரை ஆற்ற மாநாட்டு மலருக்கு சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் பொன் கோதண்டராமன் இந்து மகாசபைத்தலைவர் அஸ்வின் யாழ் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பொன் பாலசுந்தரம் பிள்ளை உட்பட மாநாட்டு மலருக்கு வாழ்த்துரை வழங்கியதுடன் பன்நாட்டுத் தமிழ் அறிஞர்கள் உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கப் பேராளர்கள் உட்பட பலநாட்டுப் பேராளர்கள் கலந்து கொண்டனர்.

9வது மாநாடு 2004 ஆகஸ்ட் 14 – 16 புதுச்சேரியில்

இடைக்காலஅகிலத்தலைவர்ப.கு.சண்முகம் மலேசியா அவர்கள் நெறிப்படுத்தலில் புதுச்சேரிக் கிளைத்தலைவர் வீர மதுரகவி அவர்கள் தலைமையில் நடைபெற்ற இம்மாநாட்டில் புதுச்சேரி முதல்வர் மாண்புமிகு ந. அரங்கசாமி அவர்கள் மாநாட்டு மலருக்கு வாழ்த்துரை வழங்கியதுடன் அவர்கள் சார்பில் மாண்புமிகு க. இலட்சுமிநாராயணன் கல்வி அமைச்சர் மகாநாட்டைத் தொடக்கிவைத்து மாநாட்டு மலரை வெளியிட்டு சிறப்புரை ஆற்றினார். இவர்களுடன் முன்னாள் முதல்வர் எதிர்க்கட்சித்தலைவர் மாண்புமிகு ஆர்.வி. ஜானகிராமன், மாண்புமிகு. பெ. சந்திரசேகரன், இலங்கை சமூக நலசேவை அமைச்சர் மாண்புமிகு எம்.எம். கிருஷ்ணமூர்த்தி சட்டமன்ற உறுப்பினர், புதுவை அரசு மாண்புமிகு ஆர். விசுவநாதன் (முன்னாள் வேளாண்துறை அமைச்சர்) மாண்புமிகு எஸ்.பி. சிவகுமார் (முன்னாள் கல்வி அமைச்சர்) மாண்புமிகு ம.தெ.இரா. இராச்சந்திரன் (சட்டப்பேரவைத் தலைவர் புதுவை அரசு) இவர்களுடன் மாண்புமிகு விடுதலை சிறுத்தைகள் கட்சித்தலைவர் தொல் திருமாவளவன் இலக்கியச் செல்வர் குமரிஆனந்தன் ஆகியோர் சிறப்புரை ஆற்றினர்.

ஆய்வரங்கம், கருத்தரங்கம், கவியரங்கம், பட்டிமன்றம் ஆகியவை இடம்பெற்றன. இந் நிகழ்வுகளில் முனைவர் க.ப. அறவாணன், முனைவர் க. அறிவுநம்பி, கல்விக்கொண்டல் மா. செங்குட்டுவன் முனைவர் தெய்வநாயகம், முனைவர் சவகர்லால், முனைவர் இரா.திருமுருகனார், முனைவர் இன்னாசி, முனைவர் அருள் கோபாலன், முனைவர் க. அறிவுநம்பி, அமரர் முனைவர் இரா. ஜனார்த்தனம், முனைவர் முத்துக்குமரன், பெருங்கவிக்கோ வா.மு. சேதுராமன், பேராசிரியர் அ. சண்முகதாஸ், பேராசிரியை மனோன்மணி சண்முகதாஸ், பேராசிரியர் நா. இளங்கோ, பேராசிரியர் பாரீஸ்ஜமால், பேராசிரியர் விஷ்ணுதாசன், உட்படப் பல பன்நாட்டுத் தமிழ் அறிஞர்கள் உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கப் பேராளர்கள் உட்பட பலநாட்டுப் பேராளர்கள் கலந்து கொண்டனர். கலைநிகழ்வுகளாகக் கலைமாமணி கங்கை அமரன் குழுவினர் கலைநிகழ்வு வழங்கியதுடன் சிறப்பு நிகழ்வுகளாக மாண்புமிகு முதல்வர் திரு. ந.அரங்கசாமி அவர்களின் அழைப்பினை ஏற்று 15.08.2004 அன்று நடைபெற்ற இந்திய சுதந்திர அணிவகுப்பு நிகழ்ச்சிளிலு 16.08.2004 அன்று பிரான்சிய இந்திய சுதந்திர தின நிகழ்விலும் மாநாட்டில் கலந்து கொண்ட உலகப் பேராளர்கள் கலந்து சிறப்பித்தனர்.

10வது மாநாடு 2007 சூலை 20 – 22 மலேசியாவில்

மலேசியா மலாயா பல்கலைக் கழகத்தில் உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்க

அகிலத்தலைவரும் மாநாட்டுத் தலைவருமாகிய பண்பாட்டு இயக்கச் செம்மல் ப.கு. சண்முகம் அவர்களின் நெறிப்படுத்தலில் மலேசியத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் தலைவர் பொ. சா. வெங்கடேசன் தலைமையில் மாநாடு இடம் பெற்றது. இம்மாநாட்டு மலருக்கு மலேசிய உதவிப்பிரதமர் டத்தோசிறீ Mohd na. jib மலேசியா பொதுப்பணித்துறை அமைச்சர் டத்தோசிறி ச. சாமிவேலு, கலை பண்பாட்டு அமைச்சர் டத்தோசிறீ. Utama Dr. Raiszatim தமிழக முதலமைச்சர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் மு. கருணாநிதி, உள்நாட்டு வாணிபம் பயனீட்டாளர் விவகாரத்துறை துணையமைச்சர் மாண்புமிகு டத்தோ எஸ். வீரசிங்கம், டத்தோ எஸ். சோதிநாதன் இயற்கைவளம் சுற்றுச் சூழல் அமைச்சர், டத்தோ. கே.ஆர். சோமசுந்தரம், இலங்கை எதிர்க்கட்சித்தலைவர் ரனில் விக்கிரம சிங்கா தமிழரசுக்கட்சியின் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயலாளர் நாயகம் மாவை சோ சேனாதிராஜா உட்ட மாநாட்டு மலருக்கு ஆய்வுக்கடுரைகள் வழங்க மாநாடு மாண்புமிகு அ. கமலம் அவர்கள் (சிலாங்கு மாநி ஆட்சிக்குழு உறுப்பினர்) குத்துவிளக்கு ஏற்ற மாநாட்டை மாண்புமிகு டத்தோ வீரசிங்கம் (துணை அமச்சர்) மாண்புமிகு டத்தோ சோதிநதன் மாநாட்டை திறந்து வைக்க சிறப்புரைகளாக மதிப்புமிகு துணைவேந்தர் டத்தோ ரபியாசலீம் டத்தோ கே.ஆ. சோமசுந்தரம் டத்தோ . சரவணன் (துணையமைச்சர்) மதிப்புமிகு பாட்டாளி மக்கள் கட்சி நிறுவனர் டாக்டர் இராம தாஸ் மாண்புமிகு தொல் திருமாவளவன் மாண்புமிகு பெ. சந்திரசேகரன், சமுதாய அபிவிருத்தி சமூக அந்தி ஒழிப்பு அமைச்சர் உட்பட பேராசிரியர் ந. கந்தசாமி, பேராசிரியர். எஸ். குமரன், பேராசிரியர் க.ப. அறவாணன், பேராசிரியர் இரத்தின வெங்கடேசன், சிங்கப்பூர் இணைப்பேராசிரியர் முனைவர் கிருஷ்ணன் மணியம், பெரும்கவிக்கோ வா.மு. சேதுராமன், முனைவர் இரா. ஜனார்தனம். பேராசிரியர் முனை வர் திண்ணப்பன், பேராசிரியர் இ. பாலசுந்தரம் உட்படப் பல பண்நாட்டுத் தமிழ் அறிஞர்கள் உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கப் பேராளர்கள் கலந்து கொண்டனர்.

11வது மாநாடு 2011 செப்டம்பர் 24-25 பிரான்ஸில்

இம்மாநாட்டை அகிலத்தலைவர் அமரர் முனைவர் வே. கோவிந்தசாமி அவர்களின் நெறிப்படுத்தலில் மாநாட்டுத் தலைவர் விசு செல்வராஜா அவர்களின் தலைமையில் இடம்பெற்றது. இம்மாநாட்டு மலருக்கு கருநாடக தலைமையமைச்சர் மாண்புமிகு டி.வி.சதானந்த கௌடா இலங்கைத் தேசிய மொழிகள் மட்டும் சமூக ஒற்றுமைப்பாட்டு அமைச்சர் மாண்புமிகு வாசுதேவ நாணயக்காரா தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் செயலாளர்நாயகம் மாண்புமிகு சோ. சேனாதிராஜா, மாண்புமிகு சிவஞாம் சிறீதரன், மாண்புமிகு தமிழ்த்தேசியக் கூட்டமைப் பின் செயலாளர்நாயகம், மாண்புமிகு சோ. சேனாதிராஜா அவர்கள் திறந்து வைத்தார்கள். மாநாட்டின் சிறப்பு விருந்தினர்களாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமற உறுப்பினர்களான மாண்புமிகு சிவஞானம் சிறீதரன், மாண்புமிகு சீனித்தம்பி யோகேஸ்வரன் தேசிய மொழி அமுலாக்கல் அமைச்சின் செயலாளர் கலாநிதி மோகன் நிதியமைச்சின் செயலாளர் திரு. சியாட் கமீட் உட்பட பன்னாட்டுப் பேராளர்கள் கலந்து சிறப்பித்தனர்.

2014 யேர்மனி

எமது உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் 12வது உலகத்தமிழ் மாநாடும், 40வது ஆண்டு நிறைவு விழாவும் யேர்மனியில் கம் நகரில் நடைபெற்றது.

காலம் 4, 5 ஆம் தேதி அக்டோபர் 2014.

தமிழும் பண்பாடும் என்னும் கருப் பொருளில் உலகத்தமிழர் நிலை என்னும் விழுப்பொருளிலும் தாயகங்களிலும் புலங் களிலும் வாழும் தமிழர்களின் அயல் புலச் சூழல் தம் தாய் மொழியாம் தமிழ் மொழி அறிவையும் தமக்குரிய தமிழ்ப்பண்பாடு நாகரிகம் ஆகியவற்றைப் போற்றுவதிலும் அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்வதிலும் அரசியல் பொருளாதார சமூகத்துறைகளில் மேம்பாடு காண்பதிலும் உலகளாவிய தமிழர்களிடையே மொழி பண்பாட்டினூடாக

எமதினத்தை ஒருங்கிணைப்பதிலும் உள்ள அறைகூவல்களை எதிர்கொண்டு முனைப்புடன் செயற்படும் மாநாடாக இம்மாநாடு அமைந்தது.

அகில சிறப்புத்தலைவரும் மாநாட்டுத் தலைமையக இணைப்பாளரும் ஆகிய திரு. வி.சு. துரைராஜா அவர்களின் நெறிப் படுத்தலில் அகிலத் தலைவர் திரு. வேல் வேலுப் பிள்ளை அவர்களின் தலைமையில் நடைபெற்ற இம்மாநாட்டில் மாநாட்டு ஒருங்கிணைப்பாளர் திரு. துரை. கணேசலிங்கம் மாநாட்டு தலைவர் திரு. இ. இராஜசூரியர் மாநாட்டுச் செயலாளர், புலவர் கி.யேம்ஸ் அல்ஸ்ரன், மாநாட்டு பொருளாளர் திரு. அ. சிவகரன் மாநாட்டு ஆய்வறிஞர்குழு தலைவர் முனைவர் மு. பொன்னவைக்கோ, ஆய்வரங்கத் தலைவர் முனைவர் இல. சுந்தரம் ஆகியோர் பங்கேற்றனர்.

2016 புதுச்சேரி சிறப்பு மாநாடு

மைய உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்க தலைமையகமும் இந்தியக் கிளையும் இணைந்து ஜனவரி 16ம், 17ம் நாட்களில் அயல் நாடுகளில் வாழும் தமிழர்கள் எதிர்நோக்கும் சவால்களும் வாய்ப்புகளும் எனும் தலைப்பில் பாண்டிச்சேரியில் நடத்தும் மாநாடு உலகத்தமிழ்ப் பண்பாட்டு இயக்க இந்தியக் கிளைத் தலைவர் திருமதி. மாலதி இராஜவேலு, செயலாளர் பாஞ். இராமலிங்கம் அவர்கள் தலைமையில் இடம் பெற்றது. பேரவைக் கூட்டம் நீதிபதி டேவிட் அன்னுசாமி அவர்கள் முன்னிலையில் இடம் பெற்றது. புதுச்சேரி, தமிழகம் மற்றும் பன்னாட்டுப் பேராளர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

மேற்படி அறிக்கை மூலம் உலகத்தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் நாற்பது ஆண்டு கால செயற்பாடுகள் பதிவிற்குக் கொண்டு வரப்பட்டுள்ளன.

அன்புடன்

துரை. கணேசலிங்கம்

செயலாளர் நாயகம்

அதி சிறந்த வாழ்க்கை முறையை அமைத்து, பிரச்சினைகளைத் தீருங்கள்

வி.சு. துரைராஜா, கனடா



அறிமுகம்

தமிழர்களின் பல பிரச்சினைகள் தீர்க்கப்படவில்லை. தீர்வுகளைக் கொண்டுவர எடுக்கப்பட்ட முயற்சிகள் இதுவரை வெற்றி அளிக்கவில்லை. இது தமிழர்களுக்குத் துன்பங்களை தொடற்சியாக விளைவித்துக் கொண்டு இருக்கின்றது. இந்த நிலைமையை மாற்ற, தமிழர்கள் தங்கள் வாழ்க்கை முறையை தெரிந்து, மேம்படுத்தி, பாதுகாத்து, தலைமுறை தலைமுறையாகக் கொண்டு சென்று, ஒவ்வொரு துறையிலும் தங்களை அதி உயர் நிலைக்கு நகர்த்தி, உலக செல்வாக்கு அடைந்து, பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும்.

1. வாழ்க்கை முறையை தெரிந்திருங்கள்

தமிழர்களுடைய வாழ்க்கை முறை, பகுதியாகவோ அல்லது முழுமையாகவோ அழிந்த நாடுகளில் வாழும் தமிழ் குழந்தைகளுக்கும், பெண்களுக்கும், இளைஞர்களுக்கும், அவர்களின் பெற்றோர்களுக்கும் தமிழ் வாழ்க்கை முறையின் முக்கிய எட்டு அங்கங்களாகிய அடையாளங்கள், மொழி, விழுமியங்கள், நம்பிக்கைகள், விதிமுறைகள், அறிவு, திறன், ஆக்கப் பொருட்கள் பற்றியும் அவற்றின் வரலாறு, தொன்மை, மகிமை, சிறப்பு, மாண்பு, நன்மைகள், முக்கியத்துவங்கள் பற்றியும் கல்வியூட்டுங்கள்.

2. வாழ்க்கை முறையை மேம்படுத்துங்கள்

பண்பாட்டு அங்கங்களுக்கு ஏற்றவாறு உலகத் தமிழர் வாழ்க்கை முறை ஆராய்ச்சிகள், மாநாடுகள், ஆய்வரங்குகள், கருத்தரங்குகள், பட்டறைகள், பயிற்சிகள், வகுப்புகள், கண்காட்சிகள், போட்டிகள் என்பவற்றை குறைந்தபட்சம் ஒவ்வாரு வருடமும் உலகளவில் நடாத்துங்கள்.

மேலும் பொருத்தமான பத்திரிகைகள், இதழ்கள், செய்தித்தாள்கள், கட்டுரைகள் மற்றும் புத்தகங்களை வெளியிடுங்கள்.

பல்லின வாழ்க்கை முறைகளிடையே இருக்கும் வேறுபாடுகள் மற்றும் ஒற்றுமைகளை அங்கீகரியுங்கள் (Multi-culture).

பல்வேறு வாழ்க்கை முறை உள்ளவர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தி, உரையாடல்களை நடாத்தி, உறவுகளை வளர்த்துக்கொள்ளுங்கள் (Inter-culture).

சமூக, பண்பாடு, பொருளாதார, அரசியல் வாழ்வில் பல்வேறு வாழ்க்கை முறை உடையவர்களுடன் ஒருங்கிணைந்து பங்கேற்றுக் கொள்ளுங்கள். (Integrate).

குடியேற்ற நாட்டின் வாழ்க்கை முறைகளின் அங்கங்களின் முக்கிய பிரதிபலிப்புகளை உட்கிரகித்துக் கொண்டு (Assimilate), தங்கள் சொந்த வாழ்க்கை முறைகளின் அதிக பயனுள்ள அங்கங்களின் பிரதிபலிப்புகளையும் பின்பற்றுங்கள் (Without assimilation). மேலும் சமூக பிரச்சினைகளுக்கு தீர்வுகளைக் கண்டுபிடியுங்கள்.

இதுவரை நான் கூறியவற்றின் அடிப்படையில் உங்கள் சொந்த வாழ்க்கை முறையை தொடர்ந்து வளப்படுத்த முயற்சியுங்கள்.

3.வாழ்க்கை முறையை பாதுகாருங்கள்
தமிழ்ப் பண்பாட்டு எட்டு அங்கங்களையும் பிரதிபலிக்கும் மையங்களை மற்றும் அருங்காட்சியங்களை தமிழர்கள் வாழும் நாடுகளில் ஸ்தாபியுங்கள்.

சகல தமிழர்களும் எடுக்கக்கூடிய வகையில் தமிழ் பண்பாட்டின் விவரங்களை அச்சுநகல்கள், மின்னணுப் பிரதிகளில் வைத்திருங்கள்.

சிறந்த வாழ்க்கை முறையைப் பின்பற்ற தமிழ்த் தனிமனிதர்களை, குடும்பங்களை, குழுக்களை மற்றும் சமூகத்தைத் தூண்டுங்கள்.

4.பாரம்பரிய வாழ்க்கை முறையை தலைமுறை தலை முறையாக கொண்டு செல்லுங்கள்
நாவல், நாடகம், கவிதை, காப்பியம், எளிய பாடல்கள், கட்டுரை, சிறுகதை, இதழ்கள், சிறந்த புத்தகங்கள் போன்ற இலக்கியங்களை எழுதுங்கள்.

தெய்வம், கோயில், இறை வழிபாடு, சைவ சமயம், ஆன்மீகம், சித்தாந்தம், புராணங்கள் என்பவற்றில் ஈடுபாடு கொள்ளுங்கள்.

சடங்குகள், கிரியைகள், பண்டிகைகள், திருவிழாக்கள், கொண்டாட்டங்கள், களியாட்டங்கள் என்பவற்றை ஏற்பாடு செய்யுங்கள்.

இசை, நடனம், கூத்து, நகைச்சுவை, திரைப்படம், வானொலி மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் என்பவற்றை நடைமுறைப்படுத்துங்கள்

விளையாட்டு, தற்காப்புக் கலை மற்றும் 64 பாரம்பரிய கலைகள் மத்தியில் உள்ள இதர கலைகளை ஒழுங்கமைத்து நடாத்துங்கள்.

பண்பாட்டுரீதியாக உட்பொதிந்த வாழ்வாதார அறிவு, அனுபவம் மற்றும் நடைமுறைகளைப் பயன்படுத்தி, யுனெஸ்கோவின் உதவியுடன், வேலைகளை உருவாக்கி வருமானத்தை எடுங்கள்.

5.ஒவ்வாரு துறையிலும் தமிழ் சமூகத்தை அதி உயர் நிலைக்கு நகர்த்துங்கள்
சுயநிர்ணய உரிமை தொடர்பான பாடங்களில் குறைந்தபட்சம் கலாநிதிப் பட்டம் வரை படிக்க தமிழர்களை ஊக்குவியுங்கள்.

இராஜதந்திரிகளை, ஆட்சிவல்லுனர்களாகிய ஜனாதிபதிகள், பிரதம மந்திரிகள், அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் புத்திஜீவிகளை, பெரும் செல்வர்களை, பல்வின பண்பாட்டுக்குள் வாழக் கூடியவர்களை உலகளவில் அடையாளம் காணுங்கள், உருவாக்குங்கள்.

தங்கள் தங்கள் துறைகளில் மிக உயர்ந்த நிலையை அடைந்த தமிழர்களை ஒவ்வொரு ஆண்டும் மதிப்பளித்து, மேலும் வளர அவர்களுக்கு தார்மீக ஆதரவை வழங்குங்கள்.

6.உலகச் செல்வாக்கை அடையுங்கள்
ஐநா, ஐரோப்பிய ஒன்றியம், காமன்வெல்த் நாடுகள், மனித உரிமை அமைப்புக்கள், அரச சார்பற்ற அமைப்புக்கள் மற்றும் ஒவ்வொரு நாட்டிலும் செல்வாக்கு மிகுந்த வேலைகளைப் பெற தமிழர்களை ஊக்குவியுங்கள்.

செல்வாக்கு மிக்க வேலைகளைப் பயன்படுத்தி உலகம் முழுவதும் வாழும் தமிழர்களுக்கும் ஏனைய சமூகங்களுக்கும் முடிந்தவரை ஆதரவு வழங்குங்கள்.

உலகெங்கிலும் உரிமைகள் மறுக்கப்பட்ட, அடக்கப்பட்ட மக்களின் வாழ்க்கை முறையை மேம்படுத்தக் குரல் கொடுங்கள்.

முடிவுரை
உலகத் தமிழர்களின் வாழ்க்கை முறை தொடர்பாக இதுவரையும் சொல்லப்பட்ட செயற்பாடுகள் பற்றி விழிப்புணர்வை உங்களுக்குள், உங்கள் குடும்பத்திற்குள், உறவினர்களுக்குள், நண்பர்களுக்குள் உருவாக்கி, ஆதரவைத் தேடித் திரட்டி, குறிப்பிட்ட பணிகளை சுயநலத்துடனும், பொதுநலத்துடனும், செய்யத் தூண்டுங்கள்.

தமிழர்கள் அதி சிறந்த வாழ்க்கை முறையைக் கொண்ட தனிமனிதனாக, குடும்பமாக, குழுமமாக, சமுதாயமாக, பல உலக சமூகப் பிரச்சினைகளைத் தீர்க்க வல்லவர்களாக உலகளவில் திகழ்வார்கள் என்று நாங்கள் நம்புகிறோம்.

இந்தக் கட்டுரை படித்து உங்கள் மனதில் ஒரு மாற்றம் ஏற்படும் என்றால் நாம் அதை முழு மனதோடு வரவேற்கிறோம்.

நன்றி
உலகத் தமிழப் பண்பாட்டு இயக்கம்

கடலுக்கடியில் உறங்கும் தமிழனின் தொன்மை வரலாறு

ஆய்வாளர் இ.க. அரியரத்தினம், தலைவர்

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம், பிரான்ஸ் கிளை

"நாகரிகங்கள் தோன்றுவதற்கு முன்பே தோன்றிவிட்ட ஊர்ப் பெயர்கள், அந்நாகரிகங்கள் பல்வேறு காரணங்களால் நலிவடைந்து வீழ்ந்த பின்னும் பிழைத்திருக்கின்றன. காலப் போக்கில் மொழி மாற்றங்கள்,புலப் பெயர்வுகள், புதிய மக்களின் குடியேற்றங்கள் என்று எத்தனை நிகழ்வுகள் நிகழ்ந்தாலும் அவற்றையும் மீறி. தொன்மக் காலங்களின் உறைந்த தடயங்களாய் உயிர்த் திருக்கும் சாகாத் தன்மை ஊர்ப் பெயர்களுக்கு உண்டு. அந்த வகையில், ஊர்ப் பெயர்கள் பழங்காலப் புலப் பெயர்வுகளின் நம்பிக்கைக்குரிய தடயங்களாய் விளங்குகின்றன.

புலம் பெயர்ந்து செல்லும் மக்கள் புதிய ஊர்களுக்குத் தங்களது பழைய ஊர்களின் பெயர்களை மீண்டும் பயன்படுத்துவது உலகின் பல பகுதிகளிலும் நிகழ்ந்திருக்கிற. நிகழ்கிற நடைமுறையாகும். இதற்குச் சமூக உளவியல் சார்ந்த அடிப்படைக் காரணம் உண்டு.

சிந்துவெளி மக்கள் திராவிடர்கள் என்பது உண்மையானால். அவர்களில் ஒரு பகுதியினர் புலம் பெயர்ந்து சென்றபோது விட்டுச்சென்ற பழைய பெயர்கள் சிந்துவெளிப் பகுதியிலேயே இன்னும் உறைந்திருக்க வேண்டும். அதைப் போலவே. புலம் பெயர்ந்து சென்றவர்கள் எடுத்துச் சென்றிருக்கக்கூடிய சிந்துவெளிப் பெயர்கள் அவர்களது புதிய தாயகங்களில் பயன்படுத்தப்பட்டு அவ்விடங்களில் இன்றும் வழக்கில் இருக்க வேண்டும்.

நதிகள், மலைகளின் பெயர்கள்

நதிகளின் பெயர்கள் ஊர்ப் பெயர்களாகவும் வழங்குவது உலகமெங்கும் உள்ள நடைமுறை. ஆப்கனிஸ்தானிலுள்ள காவ்ரி (Kawri). பொர்னை (Porni). மற்றும் பொருன்ஸ் (Poruns); பாகிஸ்தானிலுள்ள காவேரி வாலா (Kaweri Wala), பொர்னை (Phornai), புரோனை (Puronai), காரியாரோ (Khariaro) ஆகிய பெயர்கள் சங்க இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ள காவேரி, பொருநை, காரியாறு ஆகிய நதிப் பெயர்களை நினைவுறுத்துகின்றன.

கொற்கை என்பது பாகிஸ்தானில் ஊர்ப் பெயராக மட்டுமின்றி ஒரு நதியின் பெயராகவும் விளங்குகிறது. சங்க காலத்துச் சமகால நதிகளின் பெயர்களை மட்டுமின்றி. கடல் கோளில் காணாமல் போன தொன்ம நதியான ப.ஃறுளியாற்றின் பெயரையும் வட மேற்கு மற்றும் மேற்கு இந்திய ஊர்ப்பெயர்களில் மீட்டுருவாக்கம் செய்யமுடிகிறது.

உலகின் முதல் நாகரீகம் தமிழருடையது. ஆதாரங்கள் உண்டு?

ஆதிச்சநல்லூரின் மண்ணுக்குள் புதையுண்டு கிடக்கும் பூமியில் ஒரு பரபரப்பான நகரமே இயங்கிக் கொண்டிருந்திருக்கிறது. அங்கு வாழ்ந்த மனிதர் கள் வெள்ளி, செம்பு, தங்கத்தால் ஆன ஆபரணங்களைப் பயன்படுத்தி இருக்கி றார்கள். அழகிய மதிற்சுவர்கள் இருந்திருக்கின்றன. ஆனால் இன்றைக்கு அது யாரும் கேள்வி கேட்பாரற்ற பொட்டல்காடு.ஏனிந்த நிலைமை என்று பார்த்தோ மானால். "எல்லாம் அந்த பாழாய்ப்போன அரசியல்தான்" எல்லாம் இந்த வடக்கத்தியர்களுக்கு தமிழன் மேல் உள்ள காழ்ப்புணர்ச்சி தான். இதுதான் இன்றைய ராமேஸ்வரம் மீனவன் முதற்கொண்டு ஈழம் வரை நடந்து கொண்டிருக்கிறது.

தாமிரபரணி ஆற்றின் கரையில் ஆதிச்சநல்லூர் என்ற ஊர் உள்ளது. இது ஓர் இடுகாடு. இறந்தவர்களைப் புதைத்த இடம். இதன் பரப்பளவு 114 ஏக்கர். இங்கு 4 அடிக்கு ஒருவர் வீதம் தாழிகளில் இறந்தவர்களை வைத்துப் புதைத்துள்ளனர். தாழி என்றால் பானை என்பது பொருள். இவ்வாறு புதைக்கப் பட்ட பானைகளை முதுமக்கள் தாழி என்றும் ஈமத்தாழி என்றும் கூறுவர். தென்பாண்டி நாட்டில் இத்தாழிகள் ஏராளம் உண்டு. ஆதிச்ச நல்லூரில் ஆயிரக் கணக்கான தாழிகள் வரிசை வரிசையாகக் கிடைக்கின்றன. இதுதான் உலகி லேயே மிகப்பெரிய இடுகாடாகும். அது மட்டுமல்ல பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இவர்கள் புதைக்கப்பட்டுள்ளனர் என்பதும் இங்கே குறிப்பிடத்தக்கது.

நாம் அறிந்த எந்த இந்திய சரித்திர காலகட்டத்துக்கும் முந்தைய காலகட்ட மக்களின் இடுகாடு இது. தமிழ்க்குடியின் தொன்மைக்கான முதற் பெரும் தொல்பொருட் சான்றும் இதுவே. ஏறக்குறைய கிருஸ்து பிறப்பதற்கு எண்ணூறு வருடங்கள் முன்பே இங்கு நாகரீகம் மிகுந்த மக்கள் வாழ்ந்திருக்கிறார்கள். இதனை முதன் முதலில் கண்டுபிடித்தவர் ஜெர்மனி நாட்டைச் சேர்ந்த டாக்டர். ஜாகர் என்பவர்தான்.

1876-ஆம் ஆண்டு இந்த பகுதியில் ஆராய்ச்சிக்காக வந்த அவர் கண்டுபிடித்ததுதான் இந்தத் தொல் தமிழர்களது நாகரீகம். அந்த ஜாகர் தான் கண்டுபிடித்தவற்றில் பலவற்றை ஆதாரத்துக்காக ஜெர்மனுக்கே எடுத்துச் சென்றுவிட்டார். அப்பொருட்கள் இன்னமும் ஜெர்மனியில் உள்ள பெர்லின் அருங்காட்சியகத்தில் இருக்கிறது.

பிரஞ்சு நாட்டைச் சார்ந்த லூயி வேப்பிக்கியூ என்ற அறிஞர் 1903 ஆம் ஆண்டு ஆதிச்ச நல்லூர் வந்து சில தாழிகளைத் தோண்டி எடுத்தார். அப்போது மண்வெட்டி, கொழு முதலியன கிடைத்தன. ஆதிச்ச நல்லூரில் அகழ்வாய்வில் கிடைத்த அந்தப் பொருள்களை அவர் பாரிசுக்கு எடுத்துப் போய்விட்டார். இவ்வாறு ஆதிச்ச நல்லூரில் கிடைத்த மிகத்தொன்மை வாய்ந்த பொருள்கள் மேல் நாட்டிற்கு எடுத்துச் செல்லப்பட்டன. அந்த புதைபொருள் சின்னங்கள் கிடைத்தால் ஆதிச்சநல்லூ ரின் தொன்மையான வரலாறு நமக்குத் மேலும் தெரியும்.

1905 ஆம் ஆண்டு சென்னை அருங்காட்சியக மதிப்புறு துணைக் கண்காணிப்பாளர் அலெக்சாந்தர் ரீயா அவர்கள் ஆதிச்சநல்லூர் வந்து மிகவும் நுணுக்கமாக அகழ்வாய்வு செய்து ஒரு பட்டியல் தயாரித்துக் கொடுத்ததோடு அகழ்ந்தெடுத்த பொருள்கள் அனைத்தையும் சென்னை அருங்காட்சியகத்தில் இடம்பெறச் செய்தார்.

இவரும் இங்குள்ள மக்கள் பயன்படுத்திய முதுமக்கள் தாழி, ஆபரணங்கள், எழுத்துக்கள் போன்றவற்றை அகழ்வாராய்ச்சி மூலம் ஆராய்ந்து பார்த்து விட்டு அதிர்ச்சியில் உறைந்து போனார்.

அந்த அதிர்ச்சிக்கு காரணம் அந்த அகழ்வாராய்ச்சியில் கண்டுபிடிக்கப் பட்ட அன்றைய மக்கள் பயன்படுத்திய இரும்பால் ஆன கருவிகள்தான். "மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இங்கு வாழ்ந்த தமிழர்கள் இரும்பைப் பயன்படுத்தி இருக்கிறார்கள் என்றால், அதை உருக்குவதற்கான உலைகளை எங்கு வைத்திருந்தார்கள், அதை செதுக்குவதற்கும் சீராக்குவதற்கும் எத் தகைய தொழில் நுட்பங்களைக் கையாண்டார்கள், அப்படியாயின் இவர்களது நாகரீகம்தான் மற்ற அனைத்து நாகரீகங்களுக்கும் முற்பட்ட நாகரீகமாக இருந்திருக்க வேண்டும் அல்லவா?.

பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழர்கள் இரும்பைக் கண்டுபிடித்து தேன் இரும்பு, வார்ப்பு இரும்பு, எ.ஃ.கு இரும்பு ஆகியவற்றை உருவாக்கி இருக்கின்றனர். பயிர்த்தொழில், சட்டிப்பானை வனையும் தொழில், நெசவுத் தொழில், கப்பல் கட்டும் தொழில் போன்றவற்றை இரும்புக் கருவிகள் மூலம் திறம்பட வளர்த்து கடல் வாணிபம் செய்து உலகப் புகழ்பெற்றவர்கள் தமிழர்கள் என ஆதிச்சநல்லூ ரில் கிடைத்த அகழ்வாய்வுச் சின்னங்கள் உறுதிப்படுத்துகின்றன. திராவிடர்கள் குறிப்பாக தமிழர்கள் வெளிநாட்டிலிருந்து இங்கு வந்தார்கள் என்ற கருத்துக்கு இந்த அகழ்வாய்வுச் சின்னங்கள் முடிவு கட்டியது குறிப்பிடத்தக்கதாகும்.

மிகத் தொன்மையான காலத்திலிருந்தே இரும்பைப் பிரித்தெடுத்து அதை பல பொருள்களாகச் செய்து பயன்படுத்துவதில் தமிழர்கள் கைதேர்ந்தவர்கள் என்று அறியமுடிகிறது. சங்க இலக்கியத்தில் இரும்பினால் செய்யப்பட்ட பொருள்கள் உவமையாகக் கூறப்பட்டுள்ளன. மிகத் தொன்மையான காலத்தி லேயே தமிழர்கள் எகிப்து, ஆப்பிரிக்கா, சுமேரியா, கிரீஸ், மெக்சிகோ முதலிய நாடுகளுக்கு இரும்புப் பொருள்கள் ஏற்றுமதி செய்து வந்தனர். எகிப்தியர்களும், கிரேக்கர்களும் இந்திய நாட்டில் இருந்துதான் இரும்பை உருக்கி பயன்படுத்தும் முறைகளை அறிந்தனர் என்று கூறப்படுகிறது.

1837ஆம் ஆண்டு இராயல் ஏஷியாட்டிக் சொசைட்டியில் சமர்ப்பித்த ஆய்வுக்கட்டுரை ஒன்றில் அறிஞர் ஹீத் என்பவர் தென் இந்தியாவில் செய்யப்பட்ட எ.்.குப் பொருள்களே எகிப்துக்கும், ஐரோப்பா கண்டத்திற்கும் ஏற்றுமதி செய்யப்பட்டன என்று எடுத்துக்காட்டியுள்ளார்.

மெக்சிகோ நாட்டிலுள்ள பிரமிடுகளில் தமிழனின் கைவினைக் கலை களைக் காணலாம். அண்மையில் எகிப்தில் கிடைத்த தமிழ் கல்வெட்டிலிருந்து சாத்தன், கண்ணன் என்ற இரண்டு தமிழர்கள் கடல் பயணம் செய்து எகிப்து நாடு சென்று அங்கே கொல்லன் பட்டறை ஒன்று நிறுவி, பணி செய்ததாக கல்வெட்டு அறிஞர் ஐராவதம் மகாதேவன் குறிப்பிட்டுள்ளார். பிரமிடுகள் கட்டப் பயன்படுத்திய கற்களை செதுக்குவதற்குரிய உளிகள் இந்த கொல்லன் பட்டறையில் உருவாகி இருக்க வேண்டும். தமிழனின் இரும்பு நாகரிகத்தை வெளிப்படுத்தியது இந்த ஆதிச்ச நல்லூர்தான்.

அதனைத் தொடர்ந்து சகர்மேன் என்ற அறிஞர் ஆதிச்சநல்லூரில் கிடைத்த மண்டைஓடுகள் பற்றி ஒரு நூல் வெளியிட்டார். ஆதிச்ச நல்லூரில் அகழ்ந்து எடுக்கப்பட்ட மண்டை ஓடுகள் திராவிடர்களின் மண்டை ஓடுகள் என்றும், ஒன்று மட்டும் ஆஸ்திரேலிய பழங்குடி மக்களின் மண்டை ஓடு என்றும் அவர் கூறியுள்ளார்.

எனவே திராவிடர்களின் முன்னோர்கள் ஆஸ்திரேலிய நாட்டு பழங்குடி மக்களோடு தொடர்பு கொண்டிருந்தனர் என்று தெரியவருகிறது. அங்குள்ள பழங்குடி மக்கள் பேசும் மொழியில் தமிழ்ச் சொற்கள் இடம் பெற்றுள்ளமை இங்கே குறிப்பிடத்தக்கது. ஆஸ்திரேலியா தென் இந்தியாவோடு இணைந் திருந்தது என்ற கருத்தை மட்டுமல்ல குமரிக் கண்ட கோட்பாட்டையும் இது உறுதி செய்கிறது என்றும் கூறலாம். ஆஸ்திரேலிய பழங்குடி மக்கள் பயன் படுத்திய பூமராங் என்னும் ஒருவகை ஆயுதம் தமிழகத்தில் கிடைத்துள்ளதும் இங்கே குறிப்பிடத்தக்கது. பகைவர் மீது எறிந்தால் அவர்களைத் தாக்கிவிட்டு வீசியவர்கள் கைக்கு திரும்ப வரும் ஒருவகை ஆயுதம்தான் பூமராங்.

ஆதிச்சநல்லூரில் கிடைத்த தாழிகளில் மண்வெட்டி, கொழு, நெல், உமி, பழைய இற்றுப்போன பஞ்சாடை ஆகியவை கிடைத்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. ஆதிச்ச நல்லூரில் புதைக்கப்பட்டவர்கள் தாமிரபரணி கரையில் நெல், பருத்தி ஆகியவற்றை விவசாயம் செய்தது மட்டுமல்ல நெசவுத் தொழிலும் செய்து வந்தனர் என்று அறியமுடிகிறது.

ஆதிச்சநல்லூரில் அகழ்வாய்வு செய்ததில் டாக்டர் கால்டுவெல்லுக்கும் முக்கியமான பங்கு உண்டு. தாழியில் சில அரிய பொருட்களை அவரே கண்டெடுத்து அவற்றைப் பற்றிய செய்திகளை வெளியிட்டுள்ளார். ஆதிச்சநல்லூரில் வாழ்ந்த மக்கள் நாகரிகம் மிக்கவர்கள் என்ற கருத்தை டாக்டர் கால்டுவெல் வெளியிட்டார்.

திரிக்கப்படும் தமிழர் வரலாறும், திணிக்கப்படும் போலித்தனங்களும்:

அடுத்தவருடையதை அபகரித்து தனதாக்கி ஆதிக்கம் செலுத்துவது தான் ஆரிய பார்ப்பனர்களின் அடிப்படைக் கொள்கை. அவ்வகையில் தமிழர் மண்ணை அபகரித்து தனது நாடு (ஆரிய நாடு) என்றனர்.

தமிழ் மொழியை அபகரித்து எழுத்துகளை மாற்றிப் புரட்டிப் போட்டு சமஸ்கிருதத்தை உருவாக்கி சமஸ்கிருதத்திற்குப்பின் வந்தது தமிழ் என்றனர். தமிழில் உள்ள உயரிய நூல்களில் உள்ள கருத்துக்களை யெல்லாம் திருடி தமிழ் மூலத்தை அழித்து, அக்கருத்துக்கள் தங்களுடையது என்று மோசடி செய்தனர்.

புத்தத்தின் செல்வாக்குக் கண்டு பொறாது, அதிலுள்ள கொல்லாமை, புலால் உண்ணாமை போன்றன தங்களுடைய கொள்கையென்று ஏமாற்றி ஏற்கச் செய்தனர். ஆயிரக்கணக்கான ஆண்டுகளாய் நடக்கும் ஆரியர்களின் இந்த மோசடி இக்காலத்திலுடம் தொடர்ந்து நடக்கிறது.

இந்த மோசடிகளை இக்காலத்தில் செய்ய, அதிகாரத்தைப் பயன்படுத்த முடிவு செய்து, தாங்கள் எப்பொழுதெல்லாம் ஆட்சி அதிகாரத்திற்கு வருகிறார்களோ அப்போதெல்லாம் இந்தத் திரிபு வேலை, திருட்டு வேலை, மோசடி வேலை, ஏமாற்று வேலைகளைச் செய்கின்றனர். தற்போது அதிகப் பெரும்பான்மை பெற்று ஆட்சியைக் கைப்பற்றியுள்ளதால், இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி, தங்கள் திட்டங்களை, கொள்கைகளை, விருப்பங்களை, நோக்கங் களையெல்லாம் நிறைவேற்றிக் கொள்ள தீவிரமாய் முயற்சி செய்கின்றனர்.

அவ்வகையில் தங்கள் மொழியான சமஸ்கிருதத்தை புகுத்தத் துடிக்கின்றனர். இடஒதுகீட்டை ஒழிக்க முயல்கின்றனர். தங்கள் புராணங்களை இதிகாசங்களை கீதையை பாடநூல்களாக்கி பள்ளிக் கல்லூரிகளில் திணிக்க முயலுகின்றனர். தற்போது இந்திய வரலாற்றையே திரித்து, தங்களுக்குச் சாதகமாக ஆக்கிக் கொள்ள திட்டம்தீட்டி செயலில் இறங்கியுள்ளனர்.

இந்தியா தமிழர் (திராவிடர்) நாடு இங்கு பேசப்பட்டது தமிழ்மொழி என்ற தொன்மை உண்மைகளை மாற்றி, இது ஆரியர் நாடு, சமஸ்கிருதமே மூலமொழியென்று வரலாற்றை மாற்றி எழுத, வரிந்து கட்டி புறப்பட்டுள்ளனர். அதற்கான செயல்களையும் தொடங்கிவிட்டனர்.

இந்தியாவின் வரலாற்றுக்கு அடிப்படை ஆதாரமாய் நின்று ஒளிகாட்டும் சிந்து சமவெளி நாகரிகத்தை திரித்து மறைத்து, சரஸ்வதி நதி நாகரிகம் என்ற கற்பனையை வரலாறாக மாற்ற திட்டம் தீட்டியுள்ளனர். சிந்துவெளியில் கிடைத்தத் தடயங்கள் அனைத்தும் அது திராவிடர் (தமிழர்) நாகரிகம் என்பதையும், தமிழர்களே இம்மண்ணின் மைந்தர்கள் என்பதையும் அய்யத்திற் கிடமின்றி உறுதியாய் நிறுவி நிற்கின்றன. இதை ஏற்றுக்கொள்ள முடியாத ஆரியர்கள், அந்த முடிவுகளை எப்படியெல்லாம் சிதைக்கலாம் என்பதில் பலமுறை முயன்று தோற்றுப்போயினர்.

எருது அடையாளத்தை குதிரையாகக் காட்டினால் தமிழர் நாகரிகத்தை ஆரிய நாகரீகமாக மாற்றிவிடலாம் என்று முயன்று மூக்குடை பட்டு மூலையில் முடங்கினர். தற்போது ஆட்சி அதிகாரம் இருப்பதால் மீண்டும் வரலாற்றைத் திரிக்க முயலுகின்றனர். அயல்நாட்டார் ஆய்வை ஏற்கமுடியாதாம்! சிந்து சமவெளி நாகரிகம் தமிழர் நாகரிகம் என்று உறுதி செய்தவர்கள் வெளி நாட்டார். அவர்கள் உண்மையை மாற்றிக் கூறிவிட்டனர். அதை ஏற்க முடியாது என்று அயோக்கியத-தனமான, பித்தலாட்டமான கருத்துக்களை அடாவடித்தன மாகக் கூறி வரலாற்றைப் புதிதாக நாம் எழுதவேண்டும் என்கின்றனர்.

இந்தியாவின் பூர்வீகக்குடி தமிழர் என்பதும், தமிழ் தான் மூல மொழியென்பதும் உலகின் பலப்பகுதியிலிருந்தும் வந்து ஆய்வு செய்த அறிஞர் களின் ஒட்டு மொத்த ஒப்புதலாகும். இந்தியத் தொல்லியல் அறிஞர்களும் வரலாற்றாய்வாளர்களும் அதை முழுமையாக ஏற்றுக் கொண்டுள்ளனர். உண்மை நிலை இப்படியிருக்க, அடாவடித்தனமாக இதை ஏற்கமுடியாது, புதிதாக வரலாறு எழுதப்பட வேண்டும் என்று ஆரியர்களும் அவர்களின் கைக்கூலிகளான காவிக்கொடி கைக்கூலிகளும் முழங்குகின்றனர்.

விழிப்பாய் இருந்தால் வாழ்வோம்! இல்லையேல் வீழ்வோம் என்பதே இன்றைய யதார்த்த நிலை. முற்போக்கு சக்திகள் முனைப்புடன் இந்தச் சதியை முறியடிக்க வேண்டும். முறியடிப்போம்!

சைவத்தில் தமிழும் சமஸ்கிருதமும்

சிவமகிழி

sivamakili@gmail. com

சைவப்புலவர், சைவ சித்தாந்த பண்டிதர் சிவஸ்ரீ பா. வசந்தக் குருக்கள் B.A (hons) சைவர்கள் எல்லாம் தமிழரும் இல்லை தமிழர் எல்லாம் சைவரும் இல்லை என்பதை உணர்வோம். ஆகவே சைவத் தமிழருக்கு வடமொழி தென்மொழி இரண்டும் அவசியம். இருமொழி சார்ந்த நூல்களையும் போற்றுவோம். தமிழ் சார்ந்த நூல்களில் சைவ அல்லது தெய்வம் சாராத நூல்களும் உண்டு. ஆனால் வடமொழி நூல்கள் எல்லாம் தெய்வம் சார்ந்தநூல்கள் என்ற சிறப்பும் உண்டு வடமொழி தென்மொழி இரண்டாலும் இரண்டு படாமல் ஒன்றுபடுவோம்.

சைவ சமயம் என்பது சிவனை முழுமுதற் தெய்வமாக போற்றுவது. ஆனால் நாம் பல்வேறு தெய்வ மூர்த்தங்களையும் வழிபடும் பண்பு உடையவர்கள். கணபதி முருகன் சக்தி விஷ்ணு நவக்கிரகம் என்று விரிவடைந்து செல்கிறது. தவறில்லை. நாயன்மார்களும் சித்தாந்திகளும் பல் தெய்வ வழிபாடு பற்றிப் பாடியுள்ளனர் காரணம் எமது வழிபாட்டு நேரம் அதிகரிக்கிறது. ஆத்ம சக்தி அதிகரிக்கிறது. இவ்வாறு எல்லாத் தெய்வங்களையும் போற்றுபவர்கள் இந்துக்கள் ஆனார்கள்.

பின்பு பொதுவாக இந்து சமயம் எனப் போற்றுகிறார்கள் இந்துப்பண்பாடு இந்து நாகரிகம் இந்து கலாச்சாரம் என்றும் இந்து அறநிலையத்துறை,இந்து கலாச்சார அமைச்சு,இந்து இளைஞர் சங்கம் என அமைப்புக்களும் தோன்றின. ஒரு சிலர் இந்து என்ற வார்த்தைக்கு குறை கூறினாலும் பொதுவாக தனிச் சைவம் என்பது குறைவுதான்தனிச் சிவன் மட்டும் உள்ள ஆலயங்கள் இல்லை. மேலும் அபிராமி ஆதிபராசக்தி ஆஞ்சநேயர் ஐயப்பன் என்று பல வழிபாடுகளும் பரந்து வரும் வேளையில் நாம் இந்து என்று பொதுவாகச் சொல்வதை ஏற்றுக்கொள்ள வேண்டியுள்ளது. சைவரும் ஹிந்து என்கிறார்கள் வைஷ்ணவரும் ஹிந்து என்கிறார். சைவமா? இந்துவா? வடமொழியா? தென்மொழியா? ஆரியமா? திராவிடமா? என்ற கருத்து மாறுபாடு வேறுபாடு உடன்பாடு முரண்பாடு எல்லாவற்றையும் கடந்து கிடைத்த ஞான நூல்கள் வாயிலாகவும் ஞானிகள் ஆன்றோர்கள் வாயிலாகவும் சில உண்மைகளைக் காண்பதேநமது நிலைப்பாடு. எமது சைவம் விரிவுபடுவதை விரும்புவோம் பிரிவுபடுவதை விடுவோம். அளவில்லாமல் எல்லா இடமும் பெருகட்டும் பிளவில்லாமல் ஒற்றுமையாக இருக்கட்டும்.

சைவ சமயம் போற்றும் சிவன் பல்வேறு மொழி பேசும் மக்களால் வழிபடப்படுகிறார் என்பதும் நாம் காண்கிறோம். தமிழ், தெலுங்கு, ஹிந்தி, மலையாளம், மொரீசியஸ், கன்னடம் இவ்வாறு பல உண்டு. எல்லாரும் நமசிவாய என்கிறார்கள். இது தமிழ் என்கிறார்கள் ஒரு சிலர் ஆனால் போற்றி ஓம் நமச்சிவாய என்கிறார்கள். இங்கு ச் என்ற எழுத்து கூட சேர்க்கப்பட்டு ஐந்தெழுத்து அதாவது பஞ்சாச்சரம் ஆறேழுத்தாகி விடுகிறது. பொதுவாக தமிழ் உச்சரிப்பில் நமசிவாய நமச்சிவாய என வந்துவிட்டது. உதாரணமாக நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க இங்கு வடமொழி தென்மொழி இணைப்பை மணிவாசகரே ஆரம்பிக்கிறார். சைவ சமயத்தில் ஆரிய வேறுபாடே கிடையாது என்பதை பாசமாம் பற்றறுத்து பாரிக்கும் ஆரியனே என்று சிவனைக் கூறுகிறார். இங்கு ஆரிய என்பது உயர்ந்த போற்றுதலுக்குரிய என்னும் பொருளில் வரும். ஆரியன் கண்டாய் தமிழன் கண்டாய் என்பது அப்பர் வாக்கு. நாயன்மார்களுக்கு இல்லாத வெறுப்பு நமக்கு ஏன் ஆரிய வெறுப்பு வருகிறது. ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும் சோதி இங்கு ஆதி அந்தம் வடமொழியில் தானே விழித்தார் . இறைமொழியை நாம் அழிக்கலாமா? கழிக்கலாமா? பழிக்கலாமா ? சிவபுராணத்தில் வரும் நாதன் என்றால் தலைவன் என்று பொருள். நமஹ என்பது வடமொழி அதன் பொருள் போற்றுகிறோம் வணங்குகிறோம் சிவாய என்றால் சிவனுக்கு என்ற கருத்தாகும் நமசிவாய என்றால் அது வடமொழி சிவனுக்கு வணக்கம் என்பதே இதன் பொருள். வடமொழி இலக்கணத்தின் படி சிவாய என்பது நான்காம் வேற்றுமை ஒருமை., சிவாயநம என்றும் பஞ்சாட்சரத்தை சொல்லலாம் திருவருட்பயன் சொல்லுகிறது. ஸ்தூல பஞ்சாட்சரம் சூக்கும பஞ்சாட்சரம் என்றவகை வடமொழி நூல்களில் உண்டு இதன் அடிப்படையில் சித்தாந்த சாஸ்திரங்களும் எடுத்தியம்புகின்றன. எனவே நமசிவாய வடமொழி என்பது நிரூபணமாகிறது. நமசிவாய ஒன்றை வைத்தே எமக்கேன் வேற்றுமை. போற்றி ஓம் நமசிவாய என்றால் பஞ்சாட்சார மந்திரத்தைப் போற்றுவோம் என்று கூறுகிறார்கள் என மகிழலாம். நமசிவாய மட்டுமன்றி சரவணபவ என்பவர்களும் ஓம் சக்தி என்பவர்களும் உள்ளனர் மற்றும் வைஷ்ணவர்கள் ஓம் நமோ நாராயணாய என்பதும் நாம் அறிந்த வடமொழிச் சொற்களே ஆகும். திரியம்பகமந்திரம் காயத்ரி மந்திரம் தமிழர் அல்லாத பல சைவ அல்லது இந்து மக்கள் சொல்வதிலிருந்து சமஸ்கிருதத்தின் பரப்பு சைவத்தில் அதிகம் இருப்பதைக் காணலாம். எனவே வடமொழியை நாம் மதிக்க வேண்டும் மிதிக்கக் கூடாது. துதிக்க வேண்டும் அழிப்பதற்கு குதிக்கக் கூடாது.

தமிழுக்கு எப்படி தொல்காப்பியமோ அதேபோல் வடமொழிக்கு பாணினி என்பதை பரஞ்சோதி முனிவரின் பாட்டு ஒன்று தருவதைக் கவனிக்கலாம். . வடமொழியை பாணினிக்கு வகுத்து அருளி தொடர்புடைய தென்மொழியை உலகமெல்லாம் தொழுதேத்தும் குடமுனிக்கு வலியுறுத்தார் என்கிறார். அடுத்து கண்ணுதற் கடவுளும் கழகமொடு அமர்ந்து பண்ணுறத் தெரிந்து ஆய்ந்த இப்பசுந்தமிழ் என்ற பாடல் வரியும் உண்டு எனவே தமிழ் பிரியர்கள் இவ் வரியை மாத்திரம் சொல்கிறார்கள், அதில் குறிப்பிடுவதுபோல் சில இலக்கண வரம்பிலாத மொழிகள் அழிந்துவிட்டன உண்மைதான் ஆனால் சமஸ்கிருதம் இறைவன் மொழி என்பதால் இன்றும் இலக்கண வளம்பெற்று பல பல்கலைக்கழகங்களில் பாட நூலாக உயிர் பெற்றுள்ளது அறிவோம்.

. உண்மைச் சைவர்களுக்கு வடமொழி தமிழ் மொழி இரண்டையும் மதிப்பவர்களை மதிக்க வேண்டும் என்ற எண்ணமே மேலோங்கி நிற்கும். இரண்டும் சிவமொழியே ஆகும். எனவே வடமொழியை வெறுக்கக் கூடாது. வழிபாட்டில் இருந்து நறுக்க முடியாது. சைவத்திற்கும் சம்ஸ்கிருதத்திற்கும் தொடர்பில்லை என்று மறுக்கக்கூடாது.

\ஆரியந்தமிழோடு இசையானவன் என்றும் வடமொழியும் தென் தமிழும் மறைகள் நான்கும் ஆனவன் காண் என்றும் அப்பர் சுவாமிகள் ஆறாம் திருமுறையில் அடித்துக் கூறுகிறார். தமிழ்ச் சொல் வடசொல் எனும் இவ்விரண்டும் உணர்த்தும் அவனை உணரலும் ஆமே. என்பது திருமந்திரம். இவ்வாறு பல வடமொழி மேன்மை திருமுறைகளில் ஏராளம் வந்துள்ளன. அத்துடன் வடமொழிச் சொற்கள் மிக அதிகம் உள்ளன.

தொல்காப்பியத்தில் தற்சமம் தற்பவம் என்ற சிறப்பு வடமொழிக்கு கொடுக்கப்பட்டுள்ளது. வடமொழிச் சொற்கள் தமிழ் சொற்கள் போன்று மாற்றமின்றி வருவது தற்சமம் எனப்படும். உதாரணம் கமலம் பாதம் அரவிந்தம் காரணம் இப்படிப்பலஉண்டு. அடுத்து. வடமொழிச் சொற்களுக்கு ஏற்ப தமிழில் மாறி வருவது தற்பவம். உதாரணம் பங்கஜம் - பங்கயம், ஈஸ்வரன் - ஈச்சுரன், சரஸ்வதி - சரசுவதி எனவே தமிழ் பலம் நூலிலும் வடமொழிக்கு இடம் இருப்பதால்சைவத் தமிழர் அனைவரும் வடமொழியை அனுசரிக்க வேண்டும். எனவே வடமொழியை பதுக்க முடியாது, ஒதுக்க முடியாது என்பதை உணர்வோம்.

சங்க நூல்களில் மந்திரம் அந்தணர் வேதம் வேள்வி பார்ப்பனர் பற்றிய செய்திகள் நிறைய உண்டு. அக்கால சமூகத்திலும் அவர்களது தொடர்பு தேவை உள்ளது என்பதை இது காட்டுகிறது அதிலும் சமய சம்பந்தமாக வரும்போது வடமொழி அவசியம் இருக்கும். எடுத்துக்காட்டாக திருமுருகாற்றுப்படை மந்திர விதியின் மரபுளி வழாஅ அந்தணர் வேள்வி ஓர்க்கும்மே என்றும் மூன்றுவகைக் குறித்த முத்தீச் செல்வத்து இருபிறப்பாளர் எனவும் பதிற்றுப்பத்தில் ஓதல் வேட்டல் அவை பிறர்ச் செய்தல் ஈதல் ஏற்றல் என்று ஆறு புரிந்து ஒழுகும் அறம் புரி அந்தணர் எனவும் கூறப்பட்டுள்ளது. இறைவனை ஆதி அந்தணன் என பரிபாடல் குறிப்பிடுகிறது. ஆதி அந்தணன் அறிந்து பரி கொளுவ என்றும் அமரர் வேள்விப் பாகம் உண்ட பைங்கட் பார்ப்பான் என்றும் கூறப்படுகிறது. வள்ளுவரும் பார்ப்பான் பிறப்பு ஒழுக்கம் குன்றக் கெடும். என்றும் அறுதொழிலோர் என்றும் அந்தணர் தொடர்பான செய்திகளை கூறுகிறார். எனவே சைவ சமயம் வடமொழி அந்தணர் பல இடங்களில் பிரிக்க முடியாத முக்கூட்டுக் கலவையாக அமைவதை காணலாம்.

அத்துடன் புராணச் செய்திகள் இலக்கியங்களிலும் சமய நூல்களிலும் உண்டு உதாரணமாக சிலப்பதிகாரத்தில் திருமால் மூவுலகையும் ஈரடியால் அளந்த செய்தி உண்டு. மூவுலகும் ஈரடியான் முறைநிரம்பா வகை முடியத் தாவிய சேவடி என்று வருவதைக் காணலாம்எனவே கடவுள் நம்பிக்கை உள்ள சைவ அல்லது இந்து பண்பாட்டில் உள்ள இலக்கியங்கள் எல்லாம் வடமொழி சார்ந்த நூல்களை எடுத்து இயம்புகின்றன. இவற்றை விட தமிழில் பூசை என்னும் போது திருமுறைகளில் வரும் வடமொழியையும் வடமொழி சார்ந்த நூல் கதைகளையும் விட்டால் தான்தமிழ்

பூசையாகும் அவ்வாறு விட முடியாது ஏனெனில் சமய நூல்களை நாம் மாற்ற முடியாது. தமிழில் பூசை வேணும் என்றாலும் வடமொழியையும் ஏற்றுத்தான் கொள்ள வேண்டும். உதாரணமாக மகாபாரதக் கதையாகிய அருச்சுனனுக்கு பாசுபதம் கொடுத்த விடயம் பற்றி அப்பர் சுவாமிகள் வேடனாய் விசயன் தன் வியப்பைக் காண்பான் என்றும்,அருச்சுனனுக்கு பாசுபதம் கொடுத்தானை. அதேபோல் பார்க்கவ புராணம் கூறும் கஜமுக சம்காரம் அதாவது விநாயகர் கஜமுக அசுரனை சம்காரம் செய்த நிகழ்வை கைவேழ முகத்தானை படைத்தார் போலும் கயாசுரனை அவரால் கொல்வித்தார்போலும் எனப் பாடுகிறார் அவர் வடமொழிக் கதையை வெறுத்தாரா? மார்க்கண்டேயருக்காக எமனைக் காலால் உதைத்தது பற்றியும் அப்பர் பாடுகிறார் பாலனையோடவோடப் பயமெய்துவித்த உயிர் வவ்வு பாசம் விடுமக் காலனை வீடு செய்த கழல் போலும். இச்சம்பவம் வடமொழி நூல்களில் உண்டு. மற்றது நஞ்சுண்ட வரலாறு, அடிமுடி தேடிய வரலாறு என்பவை வடமொழிப் புராணங்கள் பலவற்றில் உண்டு. இவை பற்றி கூறாத நாயன்மார்களே இல்லை ஏனெனில் இறை அருளால் வடமொழி மேன்மை திருமுறைகளில் பதியப்பட்டுள்ளது.

ஆலந்தானுகந்து அமுது செய்தானை, என சுந்தரரும் வடங்கெழு மலைமத்தாக வானவர் அசுரரோடு கடைந்திட எழுந்த நஞ்சங் கண்டு என்று தொடக்கி துடங் கடல் நஞ்சம் உண்டார் சாய்க்காட்டு மேவினாரே என்கிறார் அப்பர் சுவாமிகள் மாலறியா நான் முகனும் காணா மலையினை என்றார் மணிவாசகர் சிவபிரான் கங்கையை சடையில் வைத்தது தக்கன் யாகத்தை அழித்தது இவ்வாறு ராமாயண பாத்திரத்தில் உள்ள ராவணன் பற்றி பல இடங்களில் சம்பந்தசுவாமிகள் கூறுகிறார் வடமொழிப் புராணம் திருமுறைகளில் நிறைய உண்டு. ஏறத்தாழ ஆயிரத்திற்கு மேற்ப்பட்ட இடங்களில் வடமொழி வரலாறு உண்டு. நாயன்மார்களே ஏற்கும் போது நாம் வெறுக்கலாமா? சில தமிழ்ப் பிரியர்கள் அருச்சனை பாட்டேயாகும் ஆதலால் மண்மேல் நம்மைச் சொற்றமிழ் பாடு என்று சுந்தரமூர்த்தி சுவாமிக்கு இறைவன் சொன்ன வார்த்தையை பாவிக்கிறார்கள் அது சுந்தர மூர்த்தி நாயனாருக்கு மட்டும் பொருந்தும்,எம்போல் சாதாரணமானவர்கள் ஆகமங்களில் கூறப்பட்ட சரியை கிரியை மார்க்கத்தில் மட்டும் வழிபட வேண்டும்,

நாயன்மார்கள் இன்தமிழ் பாடி இறந்தவர்களை எழுப்பினார்கள் உண்மை. அப்படியாயின் வடமொழி நூல்களில் கூட்டம் கூட்டமாக பலரை எழுப்பிய வரலாறுகளை ஏன் நம்ப மறுக்கிறோம்? இதிலிருந்து அற்புதம் செய்த சான்றோர்களை நாம் போற்றுவோம். நாங்கள் அற்புதம் செய்யும் ஆற்றல் இல்லாதவர்கள் என்பதை உணர்வோம்.

தமிழ்க்கடவுள் என்று நாம் போற்றும் முருகனுடைய கந்தசஷ்டி சூரன் போர் என்பன வடமொழி ஸ்கந்த புராணம் என்பதை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். முருகன் அருள் பெற்ற குமர குருபரர் அருணகிரிநாதர் என்பவர்கள் பாடலில் வடமொழியும் புராண இதிகாசங்களும் எவ்வளவு உண்டு. முருகன் தமிழ்க்கடவுள் என்று நமது எண்ணப்படி வைத்தாலும் வடமொழியைப் ஏன்பாட வைத்தார் என்றால் சைவ சமயத்திற்கு வடமொழி அவசியம் வேண்டும் என்பதால் ஆகும். உதாரணம் முதல் பாடலாகிய முத்தைத்திரு பத்தி திருநகை என்ற திருப்புகழில் வடமொழிச் சொற்கள் வீறு கொண்டுள்ளன.

பத்து தலை தத்த கணைதொடு என்ற ராமாயணமும் பத்தர்க்கிரதத்தை கடவிய என்ற பாரதமும் (வடமொழி வரலாறு) வந்துள்ளன. இதை விட கந்தர் அநுபூதி கந்தர் அலங்காரம் அடுத்து தேவராய சுவாமிகள் அருளிய கந்த சஸ்டி கவசம்குமர குருபரர் அருளிய கந்தர் கலி வெண்பா. இவை எல்லாம் வடமொழியைப் போற்றும் நூல்கள் மட்டுமன்றி வடமொழிச் சொற்களை தாங்கி வரும் அருட்பாடல் களுமாகும் என்று பல தமிழ் அறிஞர்கள் அறிவார்கள்.

எனவே சமஸ்கிருதம் சைவசமயத்திற்கு அல்லது இந்து சமயத்திற்கு அவசியம் உயிர் நாடி போன்றது. எனவே திருமுறையைப் போற்றுபவர்கள் வேதங்கள் உபநிடதங்கள் புராணங்கள் இதிகாசங்கள் ஆகமங்கள் போன்ற வடமொழி நூல்களையும் போற்ற வேண்டும் என்பதால் எல்லா சைவத் தமிழ் நூலக்ளிலும் சமஸ்கிருதம் கலந்து வந்துள்ளன. எனவே இவை எமது சைவத்திற்கு இரட்டைப் பிறவிகள் என்று நாம் என்னலாமே. இவை இறை வாக்கு. சமஸ்கிருதம் புரியாத மொழியில்லை என்பதைப் புரிவோம். எல்லோரும் போற்றும் பெரியபுராணம் அருளிய சேக்கிழார் சுவாமிகள் முப்போதும் திருமேனி தீண்டுவார் புராணத்தில் எப்போதும் இனியபிரான் இன்னருளால் அதிகரித்து என்னும் பாடலில் முப்போதும் அர்ச்சிப்பார் முதற் சைவராமுனிவர் என ஆதிசைவர் பற்றியும் தெரிந்துணரின் முப்போதும் செல்காலம் நிகழ்காலம் வருங்காலமானவற்றின் வழிவழியே திருத்தோண்டின் விரும்பி அர்ச்சனைகள் சிவ வேதியர்க்கே உரியன அப்பெருந்தகையார் குலப் பெருமை யாம் புகழும் பெற்றியதோ என வழி வழி வரும் குலம் பற்றியும் சிவ வேதியர்க்கும் உண்டான தொடர்பையும் வலியுறுத்தியுள்ளார். அடுத்த பாடலில் அண்ணலை எண்ணியகாலம் மூன்றும் அர்ச்சிக்கும் மறையோர் எனவும் போற்றுவதைப் போற்றுவோம் ஆரியமும் தமிழும் உடனே சொல்லிக் காரிகையார்க்கும் கருணை செய்தானே. சமஸ்கிருதம் இறந்த மொழியில்லை, ஆன்மீக வாழ்விற்கு சிறந்த மொழி. இறைவாயில் பிறந்த மொழி. பல ஞானிகளால் ஆன்மீக வாழ்வில் புகுந்த மொழி.

அருளாளர்களால் தமிழிலும் கலந்த மொழி. இன்றும் திருமுறைகளில் வாழ்ந்து கொண்டிருக்கிறதல்லவா? இன்னும் சொல்லப்போனால் சைவ சமயத்தைப் பொறுத்த வரையில் தமிழால் சமஸ்கிருதமும் சமஸ்கிருதத்தால் தமிழும் இணைந்து வளம் படுத்துகின்றன. எனவே வடமொழியை ஆலயங்களில் இருந்து கலைக்க வேண்டாம் மரபுகளை குலைக்க வேண்டாம் நிலைக்க பாடுபடுவோம் தழைக்க ஈடுபடுவோம். ஒழிக்க முயற்சியாதீர்கள் பழிக்க விடாதீர்கள் செழிக்க விடுங்கள். வடமொழியும் தென்மொழியும் இறைமொழியே எனத்திடமாக போற்றுவது எம் வழியே

வேதமோடாகமும் விளங்கிதிகாச புராணமும்
நாதமொடு கீதமும் நற்றிரு முறைகளும் இறை
பாதநெறி பணிந்திட பரவி வரு நூல்களும்
பேதமறப் போற்றியே பேணுவோம் சைவ சித்தாந்தம்

தமிழ் என்ற உச்சரிப்பால் ஏற்படும் மகிமை

THAMIZH = தமிழ்

சபாலிங்கம்

சித்தன்கேணி

தமிழ் மொழியை சிவபெருமானிடமிருந்து வரமாகப் பெற்றுத் தந்த பெருமை அகத்தியரையே சாரும். இவர் வைத்திய சாஸ்திரம், வான சாஸ்திரம் மற்றும் உயர் வாழ்வியல் பற்றிய பல அற்புத நூல்களை வகுத்துள்ளார். தமிழ் இனத்தின் சிறப்பிற்கு தமிழ் பெரியார்கள் வகுத்த எண்ணிலடங்கா வாழ்வியல் நீதிநூல்களே காரணமாகும். மேலும் ஒரு மொழியின் சிறப்பு அம்மொழியின் பெயரின் சிறப்பிலேயே தங்கியுள்ளது. "தமிழ்" என்ற எமது மொழியின் பெயரின் உச்சரிப்பே பல்லாயிரம் ஆண்டுகளாக கலை, கலாச்சாரம், செல்வம், வீரம் என்பவற்றில் தமிழர் தலை சிறந்து விளங்கியதற்கு மூல காரணமாகும்.

காலத்தின் கோலத்தால் ஆங்கிலேயர் வருகையின் பின் எமது தாய் மொழியாம் தமிழ் மொழியின் பெயரின் உச்சரிப்பு "தமில்" (TAMIL) என அழைக்கப்படலாயிற்று. இதனால் எமது தாய்மொழியின் பெயரின் உச்சரிப்பு சீரழிந்து போயிற்று.

உலகில் ஒருவராலும் வெற்றி கொள்ள முடியாத மாபெரும் கப்பல் படையைக் கொண்டிருந்தவர்கள் ஆங்கிலேயர்கள். 300 ஆண்டுகளுக்கு மேலாக இப்படைகள் உலகை வலம் வந்து உலகின் பெரும் பகுதியை வெற்றி கொண்டன. அதனால் சூரியன் அஸ்தமிக்காத நாட்டை உடையவர்கள் என்ற உலகப் புகழை ஆங்கிலேயர் பெற்றார்கள். வீராதிவீரர்களாக திகழ்ந்த ஆங்கிலேயர் மட்டுமல்ல அமெரிக்கர் ஐரோப்பியர் என அனைத்து உலக வெள்ளையர்கள் அனைவரும் இந்த துரதிர்ஷ்ட 13 என்ற எண்ணைக் கண்டு அஞ்சி நடுங்குகிறார்கள்.

இயேசுவும் அவரது சீடர்கள் 12 பேரும் சேர்ந்து 13 எண் கொண்ட ஒரு குழுவாக இயங்கினார்கள். இதனால் அந்த ஆன்மீகக்குழுவின் எண்ணிக்கை 13 ஆயிற்று. அந்நாளில் ஜெருசலேமின் யூதர்கள் அக்குழுவை 13 எண்ணால் குறிப்பிட்டார்கள். அக்குழுவின் பெயராக அப் 13 எண்ணே அமைந்தது. தனது சீடர்களில் ஒருவனான யூதாஸ் தன்னைக் காட்டிக் கொடுப்பான் என்று அறிந்திருந்தும் இயேசு யூதாஸையும் தன் குழுவில் சேர்த்துக் கொண்டார். ஆரம்பத்தில் இருந்தே இயேசுவிற்கு தன் முடிவு சிலுவையில் என்பது நன்றாகவே தெரிந்திருந்தது. அவரும் அவரது குழுவும் 13 எண்ணால் குறிப்பிடப்பட்டபடியால் அதாவது அந்த 13 பேர்..... அந்த 13 பேர்.... என அவருடைய குழு அழைக்கப்பட்டபடியால் அந்தகொடிய 13 இயேசுவை சிலுவையில் அறைவித்தது. இதனால்தான் வெள்ளைக்காரர்கள் கடந்த 2000 ஆண்டுகளாக 13ஆம் எண்ணைத் தவிர்த்து வருகிறார்கள். அவர்களது ஹொட்டல்களில், ஆஸ்பத்திரிகளில் 13 எண் கிடையவே கிடையாது. 13 எண் அறைகளில் வெள்ளைக்காரர்கள் ஒருவரும் பயத்தினால் தங்குவதில்லை. 13 ஆம் திகதியில்

பிறப்பது ஒரு சொற்ப்ப துரதிர்ஷ்டமாகும். 13 ஆம் எண் பெயராக அமைவதே உலக மகாதுரதிர்ஷ்டம் ஆகும்.

இதிகாச புருஷனான இராமன் (RAMAN=2+1+4+1+5=13) என்றபெயரும் 13ஆம் எண்ணிலேயே வருகின்றது. முடிசூடி அரசனாக வேண்டிய நேரத்தில் மணிமுடி துறந்து 14 வருடங்கள் காடாள வேண்டிய நிலை இராமனுக்கு ஏற்பட்டது. அங்கும் மனைவியைத் தொலைத்து வாழ்க்கை முழுவதும் பற்பல துன்பங்களை அனுபவித்தார். ஒருவராலும் வெல்ல முடியாத வீரமும் சகல நற்குணங்கள் நிரம்பியவராக இருந்தும் பல துன்பங்களை அனுபவிக்க வேண்டியதாயிற்று.

இயேசு, இராமர் போன்ற இதிகாச புருஷர்களையே ஆட்டி படைத்த துரதிர்ஷ்ட 13இல் ("ரமில்" TAMIL= 13) தான் எமது மொழியின் பெயர் அமைந்திருக்கின்றது. இத் துரதிர்ஷ்ட 13தான் தமிழர்களை கீழ் நோக்கி இழுத்து சென்று கொண்டே இருக்கிறது.

ஆங்கிலேயர் சிங்கள மக்களுக்கு கொடுத்த பெயர் சிங்கல (SINHALA=3+1+5+5+1+3+1=19). சிங்களமக்களின் தலைவிதியான இப்பெயர்19 எண்ணைக் குறிக்கிறது. 19எண் உதயசூரியனாகும். உதயசூரியனைக் குறிப்பதால் எப்பொழுதும் வளர்ச்சி அடைந்து கொண்டே இருக்கும். மிகவும் கீழ்நிலையில் உள்ளவர்களையும் மணிமுடி சூடி அரசாளவைப்பது இந்த 19எண்ணின் தன்மையாகும். ஆட்சி அதிகாரங்களையும் மிகுந்த படை பலங்களையும் கொடுப்பது. மேலும் தேவலோகத்தின் காதல் இளவரசன் எனவும் அழைக்கப்படும். இவ் எண் வாழ்கைக்குரிய வளங்களை எப்பொழுதும் கொடுத்துக் கொண்டேஇருக்கும்.

கடந்த 60 ஆண்டுகளுக்கு மேலாக சிங்கள மக்களின் உயர்ச்சிக்கும் தமிழ்மக்களின் வீழ்ச்சிக்கும் அவரவர் மொழிகளின் பெயர்களே காரணம் என்பதை இப்பொழுது புரிந்து கொள்ள முடிகின்றது. தமிழர்கள் தமது துரதிர்ஷ்டத்திலிருந்து மீள 90%க்கு மேல் நடைமுறை தற்கால கம்பியூட்டர் பாவனையில் உள்ள ரமில் (TAMIL) என்ற பெயரை உடனடியாக அகற்றியாக வேண்டும். அதற்கு பதிலாக தமிழ் (THAMIZH) என்ற எமது மொழியின் பெயரை தமிழில் எழுதி வாசிக்கும் போது ஏற்படுகின்ற உச்சரிப்பை 100 சதவீதமும் தரும் தமிழ் **(THAMIZH=4+5+1+4+1+7+5=27), THA= தMI= மிIZH= ழ்** என்ற பெயரை உடனடியாக பாவனைக்கு நாம் கொண்டு வந்தாக வேண்டும். இப்பெயர் தமிழ் என்ற உச்சரிப்பை பூரணமாக தருவதுடன் 27 எண்ணில் அமைவது அருளையும், பொருளையும், அதிர்ஷ்டத்தையும் தரும் வாய்ப்பை நல்கும். மேலும் படிப்படியாக உயர்நிலைக்கு கொண்டு செல்வதாகவும் வலிமையை தருவதாகவும் அமையும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. இப்பெயர் தமிழர்களுக்கு மிகுந்த நன்மையை அளிக்கும். இதன் மூலம் மாத்திரமே தமிழர்களாகிய நாம் பழைய நிலையை அடைய முடியும். எனவே தமிழர்களாகிய நாம் ஒன்றுபட்டு தமிழ் என்ற பெயரை உடனடியாக நடைமுறைக்கு கொண்டு வருவதன் மூலம் உயர்நிலையை அடைந்து சிறப்புடன் வாழ்வோமாக.

நன்றி

03-06-2017

T.Sabhalingem
Sithankerney
077-8442171

வீழ்ந்துவிடவில்லை!
விளைந்து கொண்டிருக்கிறோம்!

-நந்தவனம் சந்திரசேகரன்

காலம் என்னை மெல்ல நகர்த்தி வந்து தமிழக இலக்கியத் தடத்தில் பரிணமிக்க வைத்திருக்கிறது. 1981-ல் கடல்மார்க்கமாக எனது குடும்பத்தாருடன் தமிழகத்திற்குப் புலம்பெயர்ந்து வந்து சூழல் இன்னும் மனவயலில் பசுமையாக பதிந்துக் கிடக்கிறது. முப்பத்தேழு வருடங்கள் கண்ணிமைக்கும் நேரத்திற்குள்ளாகக் கடந்து போய்விட்டது என்றே எண்ணத் தோன்றுகிறது.

தமிழக மண்ணில் வாழ்வாதாரத்தை நிலைநிறுத்திக்கொள்ள பதினைந்து ஆண்டுகளாயிற்று. மெல்ல வளர்ந்து வாழ்க்கைப் பயணம் நகரத் தொடங்கிய தருணத்திலிருந்து எனது இலக்கியப் பயணத்தையும் தொடங்கினேன். கடந்த இருபது ஆண்டுகளாக சர்வதேச தமிழ் இலக்கிய உறவுகளுடன் காத்திரமான ஒரு தொடர்பை ஏற்படுத்திக் கொண்டு 'இனிய நந்தவனம்' மக்கள் மேம்பாட்டு மாத சஞ்சிகையினூடாக இலக்கியத்திற்கான பல முன்னெடுப்புகளை செய்து வருவதை அடக்கத்துடன் பதிவு செய்கிறேன்.

புலம்பெயர்ந்த தமிழர்களின் இலக்கியம் தமிழக மண்ணில் எவ்வாறு அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது என்பதின் பதிவோட்டமாக சில கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன் இக்கட்டுரை மூலமாக. தமிழக இலக்கியச் சூழல் இந்த நூற்றாண்டிலும் பல்வேறு குழுக்களாகத்தான் இயங்கி வருகின்றன. இதில் புலம்பெயர்ந்தோர் தமிழ் இலக்கியம் எந்தக் குழுவோடு பிணையப்பட்டிருக்கிறது? என்பதை உறுதியாகச் சொல்ல முடியாது.

தமிழக எழுத்தாளர்களிடமிருந்து மிகத்தரமான படைப்பாக்கங்கள் வந்தபோதும், அதற்கு பல விருதுகள் கிடைத்தபோதும், இலக்கியச் சர்ச்சைகளும், அதனூடாக நிகழும் அரசியல் போக்குகளும் புரியாத புதிராகவே இருக்கிறது. இவ்வாறான சலசலப்புகளுக்கு மத்தியில் புலம்பெயர்ந்து வந்த ஈழத்தமிழர்களின் படைப்பாக்கங்களும் தன் இடத்தைத் தக்க வைத்துக் கொண்டிருக்கிறது என்பது உண்மை என்று கூறினாலும், பெரிய அளவிலான அங்கீகாரம் இல்லை என்ற குறையும் இருக்கிறது.

ஈழத்து மூத்த எழுத்தாளர் எஸ்.போ அவர்கள் 2007 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் இனிய நந்தவனத்திற்கு வழங்கிய ஒரு நேர்க்காணலில் ஈழத்தமிழர்களுக்குத் தமிழக இதழ்கள் வழங்கும் அங்கீகாரம் பற்றி குறிப்பிடும்போது, "இப்போது சமீப காலமாக தமிழக வணிக இதழ்களில் புலம்பெயர்ந்த எழுத்தாளர்களின் படைப்புகள் வருகின்றன. ஆனால், அதை விரும்பி பிரசுரம் செய்கிறார்களா? அல்லது பத்திரிகையின் வியாபாரத்திற்கான நோக்கத்திலா? என்பதைவிட பல தேசங்களிலும் தங்களுக்கு எழுத்தாளர்கள் இருக்கிறார்கள் என்று தம்பட்டம் அடித்துக் கொள்வதற்காகவே அவர்கள் படைப்புகளை வெளியிடுகிறார்கள் என்றே சொல்ல வேண்டும்" என்றார்.

இலக்கிய பத்திரிகைகள் அல்லது சிற்றிதழ்கள் என்று தங்களை அடையாளப்படுத்திக் கொண்டு இருக்கக்கூடிய பத்திரிகைகளில் ஆரோக்கியமான, நடுநிலையான இலக்கியப் பரிவர்த்தனைக்களம் அமைத்துக் கொடுக்காமல், தங்களைச் சார்ந்த ஒரு சிறு குழுவினரை முதன்மைப்படுத்தவும், மேன்மைப்படுத்தவும், பிரகடனப்படுத்தவும் அவை பயன்படுகின்றன. இதனால் அவர்களைச் சார்ந்த அதாவது, 'காலச்சுவடு', 'உயிர்மை' போன்ற பத்திரிகைகளில் வரக்கூடிய புலம் பெயர்ந்தோர் படைப்புகளினால் இவர்களுக்கு ஏதோ ஒருவகையில் இலாபம் உண்டு என்ற நிலைதான் இப்போது இருக்கிறது ஆனால், எந்தப் பத்திரிகையும் உலகளாவிய தமிழ் நிகழ்வுகளை ஆவணப்படுத்தக்கூடியதாக வரவில்லை.

இவ்வாறான நிலைப்பாடுதான் இன்றும் தமிழக இலக்கிய தளத்தின் போக்கு இருக்கிறது. அதே நேரத்தில், இங்கே ஈழத்தமிழ் பாடைப்பாளிகளின் நூல்கள் கவனம் பெற்றிருக்கிறது என்பது கொஞ்சம் ஆறுதலான விடயம். காலச்சுவடு, கறுப்பு பிரதிகள் பதிப்பகங்கள் ஊடாக மிகத்தரமான படைப்பாக்கங்கள் நூல்களாக வெளிவந்துள்ளன. அதே நேரத்தில் 2009 ஆம் ஆண்டு மே மாதச் சூழலான ஈழத்தின் இறுதிகட்ட போருக்குப் பின்னால் தேசியத்தலைவர் பிரபாகரன் அவர்களின் வாழ்க்கை வரலாறு என்ற நோக்கில் நிறைய பதிப்பகங்களின் ஊடாகப் பல்வேறு வகையான நூல்கள் வெளிவந்திருக்கின்றன. சில புத்தகங்களை வாங்கிப் படித்துப் பார்த்தேன். ஒரே விடயத்தைத்தான் வெவ்வேறு கோணங்களில் சொல்லியிருக்கிறார்கள். சில நூல்கள் இணையத்தில் கிடைக்கும் தகவல்களை வைத்தும் எழுதப்பட்டிருந்தது.

போர்க்கால சூழல் பற்றிய நூல்கள் இங்கே பல்வேறு கோணங்களில் எழுதப்பட்டு வெளியிடப்படுகின்றன. இதில் எந்தளவு உண்மைச் சம்பவங்கள் பதிவு செய்யப்படுகின்றன? என்பதும் எனக்குள் எழும் கேள்வியாக இருக்கிறது.

இதுபற்றிய ஆவணத்தகவல்களுடன் புலம்பெயர்ந்த தமிழ்ப்படைப்பாளிகளிடமிருந்து ஒரு சிறந்த நூலைக் காண முடியவில்லை என்ற வருத்தமும் எனக்கு இருக்கிறது. இப்படியான நூல் வந்திருக்கலாம், அது என் பார்வைக்கு வராமலும் இருந்திருக்கலாம் என்ற ஐயமும் எனக்கு இருக்கிறது. எதிர்காலத்தில் ஈழத்தமிழரிடத்திலிருந்து ஒரு வரலாற்று நூல் வரவேண்டுமென்பதும் எனது எதிர்பார்ப்பு.

புலம்பெயர்ந்த இலக்கியப் பதிவுகளோடு பண்பாடு, கலாச்சாரம் பற்றியும் உற்றுநோக்க வேண்டிய கட்டாயமும் இருக்கிறது. தமிழகத்தைப் பொறுத்தவரையில் இங்குள்ள புலம்பெயர்ந்தவர்களின் வாழ்வியலிலும் கலாச்சாரத்திலும் பெரியளவில் மாற்றமில்லை. தமிழ் கலாச்சாரத்திற்கான வேர் இங்கே இருப்பதால் தமிழர்கள் என்ற ஒற்றைக் குடையின் கீழ் மிக எளிதாக வலம் வர முடிகிறது. தமிழ் உச்சரிப்புகளை வைத்தே இவர் புலம்பெயர்ந்து வந்த ஈழத்தமிழர் என்று அடையாளம் காண முடிகிறது. அண்மைக்காலமாக கல்வியிலும் சிறந்து விளங்கக்கூடிய இளந்தலைமுறையினரை பார்க்க முடிகிறது. ஆனால், சிறந்த முறையில் கல்வி கற்றாலும் அரசுப்

பணியிடங்களில் வாய்ப்புகள் மறுக்கப்படுகின்றன என்ற வருத்தமும் நிறைய இருக்கிறது. இங்குள்ள அகதி முகாம்களில் ஈழத்தமிழர்களுக்கு இந்தியக் குடியுரிமை மறுக்கப்பட்டிருப்பதும், இன்றைய தலைமுறையினரின் வளர்ச்சிக்குத் தடையாக இருக்கிறது என்ற வருத்தமான நிலைப்பாட்டையும் இங்கே பதிவு செய்வது அவசியம் என்று நினைக்கிறேன்.

தமிழ் கலாச்சாரம், பண்பாடு என்று பார்க்கும்போது தமிழகம் மட்டுமல்லாது, சர்வதேசத் தமிழர்களின் நிலைப்பாட்டையும் பார்க்க வேண்டியிருக்கிறது. கடந்த இருபத்தைந்து ஆண்டுகளில் உலகளவில் புலம்பெயர்ந்த தமிழர்கள் மத்தியில் ஒரு புதிய தலைமுறையும் உருவாகியிருக்கிறது. அவர்களிடத்தில் தமிழ்க்கலாச்சாரம், பண்பாடு எந்தளவு நிலை பெற்றிருக்கிறது? என்பதையும் சீர்தூக்கிப் பார்க்க வேண்டியது அவசியம்.

இதுபற்றி எழுத்தாளர் எஸ்.போ நந்தவனத்திற்கு வழங்கிய நேர்க்காணலில், "புலம்பெயர்ந்த நாடுகளில் வந்து வாழக்கூடிய சென்ற தலைமுறையினர் தங்களின் பழைய நினைவுகளிலேயே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால், புதிய வாழ்க்கைமுறைகளுக்கு சமரசம் செய்யாமல் ஒரு புதிய தலைமுறை அங்கே உருவாகியிருக்கிறது. ஈழத்தில் நடந்தது எதுவும் அவர்களுக்குத் தெரியாது. புதிய சூழலில் புதிய வாழ்க்கைமுறையின் விழுமியங்களுடன் வாழ்ந்து கொண்டிருப்பவர்கள். இந்த வாழ்க்கைதான் வேண்டுமென்கிறார்கள். பெரிய வீடுகள், வசதிகளுடன் வாழ்ந்து கொண்டிருக்கும்போது தமிழை நேசிப்பதிலும், தமிழ்ப்பண்பைப் பாதுகாப்பதிலும் ஒரு சுனக்கம் இருக்கத்தான் செய்கிறது.

ஆனால், இவர்களுடைய அடுத்த தலைமுறை புலம்பெயர்ந்த நாடுகளில் முக்கியமாக கனடா, ஆஸ்திரேலியா, ஐரோப்பிய நாடுகளில் வாழ்பவர்கள் அந்தக் கலாச்சாரத்திலேயே வாழ்ந்து கொண்டிருக்கும் ஒரு சூழலிலே என்னுடைய வேர் என்னவென்பது எங்களுடைய அடுத்தத் தலைமுறைக்கு வேண்டும். எப்படி நீக்ரோக்கள், தாங்கள் நீக்ரோக்களல்ல, தாங்கள் ஆப்பிரிக்க அமெரிக்கர்கள் என்று தங்களுடைய வேர்களை அடையாளப்படுத்திப் பெருமையுடன் வாழ்கிறார்களோ, அதே போன்று அடுத்தத் தலைமுறை தமிழ் வேர்களை தியானப்படுத்தி, அது மேன்மையானது என்று அத்துடன் ஒட்டிக்கொள்ள வேண்டும் என்ற உணர்வு வரும் என்று நம்புகிறேன். நிரந்தரமாகத் தமிழர்களைத் தமிழ் அன்னியப்படுத்தி விடாமல் இருக்க இன்னும் தங்களைத் தமிழர்களென்று சொல்லிக்கொள்வதற்காக பரதநாட்டியம், தமிழிசை விழா போன்றவற்றை நடத்தி வருகிறார்கள். ஒவ்வொரு வீட்டுக் குழந்தைகளுக்கும் கற்றுக்கொடுத்து வருகிறார்கள்.

இதைச் சொல்லத்தான் நாங்கள் இன்னும் தொங்கிக் கொண்டிருக்கிறோம், கிளை இன்னும் விழுந்துவிடவில்லை. எனவே, நாங்கள் மேலே ஏறிவிடக்கூடிய சந்தர்ப்பமும் சாத்தியமும் இருக்கிறது என்று எஸ்.போ விதைத்துள்ள விதையை புலம்பெயர் தமிழர்கள் எந்தளவுக்கு முன்னெடுப்பார்கள் என்பது அறிய முடியாது" என்றார்.

இன்னொன்றையும் அவர் பதிவு செய்கிறார். அதாவது, தமிழ் மொழி தனித்துவமானது, அதற்கு நீண்ட பாரம்பரியம் உண்டு. அதன் இலக்கியச் செல்வம் உலகில் வேறு எந்தத் தொன்மை மொழிக்கும் குறைந்துபடாத செழுமையுடையது என்பதைப் புலம்பெயர்ந்த தமிழர்கள் தங்களுடைய இலக்கியப் பணி மூலம் பதிவு செய்ய வேண்டும் என்கிறார்.

மொழியும் கலாச்சாரமும்தானே தமிழர்களுக்குச் சிறந்தஅடையாளம். உலகப்பரப்பின் எத்திசைக்குச் சென்றாலும், நமது அடையாளத்தைத் தொலைத்து விடாமல் பாதுகாக்க வேண்டிய கடமை நமக்கு இருக்கிறது.

தமிழர்கள் படைக்கும் இலக்கியங்கள் வெறும் அழகியல் வெளிப்பாடுகளாய் இல்லாமல் உலகின் ஒடுக்குமுறைக்கு அனைத்தையும் தகர்த்தெறியும் போர்க்கருவிகளாய்த் தழைக்க வேண்டும். பூவையும் நிலவையும் பாடும் புலவர்கள் இப்போது தேவையில்லை. கண்ணீரிலும் இரத்தத்திலுமிருந்து கரையேற முடியாமல் துடிக்கிறது உலகம். இவ்வாறான சூழலை அவதானித்து தமிழர்கள் தங்களின் அடையாளத்தையும் கலாச்சார வாழ்க்கையையும் பாதுகாக்க வேண்டும் என்கிறார் கவிஞர் காசி ஆனந்தன்.

உலகில் வேறு எந்த இனத்துக்கும் இல்லாத தனித்துவம் தமிழர்களுக்கு இருக்கிறது. தமிழனுக்கென்று ஒரு தனி நாடு இல்லையே' என்று வருத்தத்தினூடாக நாம் சிதைந்து கிடந்தாலும், நாம் தமிழர்கள் என்ற நிலைப்பாட்டிலிருந்து ஒருபோதும் மாறிவிடக் கூடாது. உலகமே நமக்கான நாடாக இருக்கும்போது நாடு இல்லை என்ற கவலை தேவையில்லை. உலகின் தொடர்பு மொழி ஆங்கிலத்திற்கு அடுத்தபடியாகத் தமிழும் இருக்க வேண்டுமென்று ஐக்கிய நாட்டு சபைக்கு குமரி அனந்தன் கோரிக்கையை முன்வைத்துள்ளார். இது சாத்தியப்படுமானால் நம்முடைய தாய்மொழியான தமிழ் எவ்வளவு பெருமையான மொழி என்று உலக வரலாற்றில் பெருமிதத்தோடு பதிவு செய்யப்படும் என்பதையும் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

திசைமாறித் திரியும் பறவைகள் போல நம்முடைய வாழ்க்கைச் சூழல் அமைந்திருந்தாலும் நம்முடைய வேர் காய்ந்துவிடாமல் பாதுகாக்க வேண்டும். நம் ஒவ்வொரு அசைவுகளையும் உலகம் உற்று நோக்குகிறது என்பதை கவனத்தில் எடுத்துக் கொண்டு நமது பண்பாட்டுக் கலாச்சார விழுமியங்களை பத்திரப்படுத்திக் கொண்டு, நாம் தமிழர் என்ற விதையை இன்னும் இங்கே வீரியமாக விதைப்போம் என்ற உறுதியோடு நம் பயணத்தைத் தொடர்வோம். காலம் நம்மை கரையொதுக்கினாலும் எதிர்நீச்சல் போட நமக்கு வலிமை இருக்கிறது. நாம் வீழ்ந்து விடவில்லை விளைந்து கொண்டிருக்கிறோம் என்பதே நம்முடைய நிலைப்பாடாக உலகத்திற்கு பறைசாற்றுவோம்.

நந்தவனம் சந்திரசேகரன்
ஆசிரியர், இனிய நந்தவனம் மாத சஞ்சிகை,
இந்தியா.
பேச: 0091-9443284823
மின்னஞ்சல்: nandavanam10@gmail.com

அ. முத்துலிங்கம் கதைகளில் பிரதிபலிக்கப்படும் வாழ்விடத்தாக்கம் பற்றிய ஒரு நோக்கு

முருகுதயாநிதி
சிரேஷ்ட விரிவுரையாளர்
தேசிய கல்வி நிறுவகம்
கொழும்பு.

ஒருவரது முன்னோர் பிறந்து வளர்ந்த நிலப்பரப்பே அவருக்கு சொந்தமான புலன் எனப்படுகின்றது. இவ்வாறான வாழ்விடத்தில் ஏற்படுகின்ற அசாதாரண சூழ்நிலை காரணமாக அங்கு வாழமுடியாது அங்கிருந்து வெளியேறியவர்களை புலம்பெயர்ந்தவர்கள் என்கின்றோம். அவர்களில் ஒரு சாரார் அரசியல் தஞ்சங்கோரி புலம்பெயர்ந்து சென்ற ஈழத்தமிழர்கள் படைக்கும் படைப்பினை புகலிட இலக்கியம் என்றும். தொழில் நிபந்தனைத்தனமாக ஈழத்தமிழர் புலம்பெயர்ந்து சென்றவர்கள் எழுதவது புலம்பெயர் இலக்கியம் என்று கூறுவாருமுளர். இலங்கையில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக இடப்பெயர்வுகள் ஏற்பட்டவண்ணமே உள்ளது. இன்று உலகில் பல பாகங்களில் இலங்கைத் தமிழர்கள் புலம்பெயர் தமிழர்களாக வாழ்ந்து வருகின்றனர். குறிப்பாக இந்தியா, கனடா, பிரித்தானியா, அவுஸ்ரேலியா, சுவிஸ்சலாந்து, நோர்வே, ஜெர்மனி, இத்தாலி, பிரான்ஸ், டென்மார்க், நெதர்லாந்து போன்ற நாடுகளைக் குறிப்பிடலாம். இலங்கைத் தமிழரின் புலம்பெயர் இலக்கியம் தமிழ் இலக்கியப்பரப்பில் ஒரு முக்கியமான இடத்தைப் பெற்றுவிட்டது என்பதனைக் காலவோட்டத்தில் கண்டுகொள்கின்றோம். ஈழத்து இலக்கியப்பரப்பிலே புலம்பெயர் இலக்கியங்களின் வரவானது புதிய அனுபவங்களையும் அதிர்வுணர்வுகளையும் உருவாக்கிவருகின்றது.

பல்வேறு காலகட்டங்களில் புலம்பெயர்வு இடம்பெற்றபோதும் 1970 தொடக்கம் 1990 வரையுள்ள காலங்களில் இதன் தாக்கம் பெரிதும் அதிகரிப்பைக் காட்டியது. 1970ஆம் ஆண்டு இலங்கை அரசு கல்வியில் தரப்படுத்தலைக் கொண்டுவந்தபோது இளைஞர்கள் அகிம்சைவழியில் அதனை நிறுத்தம்படி போராடினர். அதற்கான நியாயம் கிடைக்காமல்போக அப்போராட்டம் ஆயுதப் போராட்டமாக வடிவெடுக்கின்றது. அதனை அடக்குவதற்கு இலங்கை அரசு எடுத்த நடவடிக் கைகள் இனவஞ்சத்தையே கொண்டு வந்தது. அதனால், மேலும் விடுதலை இயக்கங்களுக்கு இளைஞர்கள் சேரத் தொடங்கினர். இந்த நிலையில் இராணுவத்தினுடைய அடாவடித்தனங்களும் அடக்கு முறைகளும் தமிழர்களை நோக்கி கட்டவிழ்த்துவிடப்பட்டதன் உச்சமாக 1983ஆம் ஆண்டு யூலைக் கலவரம் வெடித்தது, பல தமிழர்கள் குழந்தை, பெண்கள், வயது வந்தவர்கள் என்று பாராமல் முறைதவறிய

வழியில் கொல்லப்பட்டனர். அதன் தொடர்ச்சியாக குறிப்பாக வடகிழக்கில் பலர் கைது செய்யப்பட்டும், காணாமல் ஆக்கப்பட்டும் இருந்தனர். இன்றிருக்கின்ற நல்லாட்சி அரசி வரும் வரையிலும் அதன் தொடர்தன்மை இருந்துள்ளமையினைக் காணலாம். இவ்வாறான சூழ்நிலைகளில்தான் உள்நாட்டில் இடம்பெயர்வு ஏற்பட்டதோடு வெளிநாடுகளுக்கும் இடம் பெயரலாயினர். வெளிநாடுகளில் வாழ்ந்த தமிழ் மக்கள் அங்கு பல இலக்கியங்களைப் படைக்கத் தொடங்கினர். அவற்றுள் கவிதை, சிறுகதை, நாவல், நாடகம், கட்டுரை என்று நீண்டு செல்லும் அந்த இலக்கியங்களில் அவர்கள் வாழ்ந்த சூழல் தாக்கம் ஆங்காங்கே பிரதிபலித்துச் செல்கின்றமையினை அ.முத்துலிங்கம் கதைகள் தெளிவுபடுத்தி நிற்கின்றன.

அ.முத்துலிங்கம் எழுதிய கதைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதமானவை. அவர் இடம்பெயர்ந்து தற்போது கனடாவில் இருக்கின்றார். இலங்கையில் இருந்தபோதும் கதைகளை எழுதியுள்ளார். இந்த ஆய்வுக்காக ஒரு சாதம், கம்பியூட்டர், பீனிக்ஸ் பறவை ஆகிய கதைகள் எடுத்துக் கொள்ளப்படுகின்றன. இந்த மூன்று கதைகளும் கம்பியூட்டரின் அவசியம் பற்றியும் அவசரம் பற்றியும் பேசுகின்றன. ஒரு சாதம் என்ற கதையிலே புலம்பெயர் நாடுகளில் கம்பியூட்டர் தெரிந்த ஒருவருக்கு பொருத்தமான வேலை கிடைக்காமல் இருந்தது. ஆனால், அவர் தனது திறமையினை நிருபித்து அந்த நாட்டில் உயர் பதவி பெறுகின்றமையினையும், கம்பியூட்டர் என்ற கதையிலே கம்பியூட்டர் கற்றுகொண்டிருக்கின்ற தன்மையினையும், பீனிக்ஸ் பறவை என்ற கதையிலே எல்லாச் செயற்பாடுகளும் கம்பியூட்டரினாலே இடம்பெறுகின்றது, அதற்கேற்ப நாம் மாற வேண்டும் என்ற தன்மையினையும் தெளிவுபடுத்துகின்றார். அதனை விளக்குவதற்காக அவர்கள் வாழ்ந்த நாட்டின் வாழ்க்கைமுறை தொடர்புபடுத்தப் படுகின்றது. இந்தக் கதைகள் தமிழர்கள் இடம் பெயர்ந்து பட்ட கஸ்ர நஸ்ரங்களைக் காட்டுவதோடு, அவர்களுடைய முயற்சியினால் அந்த நாடுகளில் பலர் உயர்ந்த பதவிகளிலும் உள்ளனர் என்பதனையும் சுட்டிக்காட்டியுள்ளார். அதனை விளக்குவதற்காக இந்து சமய நடைமுறையிலும் இலக்கியங்களிலும் உள்ள கதைகளைக் உதாரணம் காட்டி, தமிழர்களுடைய அறிவின் இருப்பு கம்பியூட்டர் யுகத்திற்கு முந்தியது என்பதனையும் தெளிவாகவே முன்வைக்கத் தவறவில்லை. என்னும், இன்று தமிழ்மொழி எதிர் நோக்கும் சவால்களும் முன்னெடுப்புக்களும் வெற்றிபெறுவதற்கு கல்வி கற்க வேண்டிய அவசியத்தினை வலியுறுத்துகின்றார்.

ஒரு சாதம் என்ற கதையிலே இலங்கையில் தமிழர்கள் அசாதாரண சூழ்நிலை காலங்களில் பட்ட வேதனையினைச் சொல்ல வருகின்றார். சிவலிங்கம் என்ற ஒருவர் காதலுடன் கல்வியையும் சிறப்பாகக் கற்று ஒரே தடவையில் சித்தியடைந்து, இலங்கை யிலுள்ள ஒரு பெரிய கம்பனியில் உயர்ந்த வேலை பார்த்தார். 1977ஆம் ஆண்டு கலவரம் ஏற்பட்ட வேளையிலும் இவனுக்குப் பிரமாண்டமான கம்பணி கொடுக்கப் பட்டிருந்தது. அவர் அங்கு கணக்காய்வுப் பணியிலே இருந்தார். இந்தக் கம்பணியில் பத்தாயிரத்துக்கு மேற்பட்டோர் வேலை செய்தார்கள். தமிழர்களை விரல் விட்டுத்தான் எண்ண வேண்டும். எல்லாம் சிங்களவர்கள். இவனுடைய பதவியோ மிகவும் உயர்ந்தது. கலவரம் அடங்காத நிலையில் எல்லாவற்றையும் துறந்துவிட்டு உயிர் தப்பினால் போது மென்று இந்தியாவுக்குப் பூர்னிமாவுடன் ஓடிவந்து விடுகின்றான். அங்கிருந்து எவ்வளவோ கஷ்டப்பட்டு இருவரும் கனடா வந்துவிடுகின்றார்கள். ஒரு உயர்ந்த பதவியில் சகல சௌபாக்கியங்களுடனும் வாழ்க்கை நடத்தி, அகதியாக கனடாவுக்கு வந்து இம்சைப்பட்டு அவருடைய அயராத

முயற்சியின் பயனான வாட்ஸ்மேன் உத்தியோகஸ்தி லிருந்து Deputy Finance Director ஆக பதவி உயர்வு பெறுகின்றான்.

தமிழர்கள் இடம்பெயர்ந்து வெளிநாடுகளுக்குச் சென்றாலும் அங்கு அவர்களுடைய கல்வித் தகுதிக்கு ஏற்ப வேலை கிடைப்பதில்லை. பெண்களுக்கு அங்கு இலகுவாக வேலை கிடைத்துவிடும். புருஷன் பெண்சாதி இரண்டுபேரும் வேலைக்குப் போனால்தான் மிகவும் சிக்கனமாகச் சீவிக்கமுடியும். சமைப்பதனைவிட ஓடர் பண்ணிச் சாப்பிடுவது இலகுவானதும் சிக்கனமானதும். எனினும் இலங்கை நாட்டுச் சாப்பாட்டை மறக்காத நிலை. பரமநாதன் "ஆஹா என்ன சாப்பாடு சம்பா அரிசிச் சோறு, மீன் குழம்பு கத்திரக்காய்ப் பொரியல், மாசுச் சம்பல், முருங்கக்காய்க் கூட்டு, இது என்ன கனடாவா அல்லது யாழ்ப்பாணமா? என்று கேட்டு எங்கள் நாட்டினுடைய உணவுப் பண்பாடு பின்பற்றப்படுவதனைக் காட்டமுனைந்துள்ளார். எவ்வளவுதான் கஸ்ரம் வந்தபோதும் மனைவியை கைவிடாத கணவனைக் காட்டுகின்றார். "சிலபேர் எனக்கு குறுக்கு மூளை சொல்லித் தந்தார்கள். கனடா அரசாங்கத்தை ஏமாற்றி உதவித்தொகை அதிகரிப்பதற்கு ஆயிரம் வழிகள் இருக்கின்றன. அதில் ஒன்று மனைவியைத் தற்காலிகமாக நீக்கி வைப்பது. என் மனம் உடன்படவில்லை. சொந்த நாட்டிலிருந்து துரத்தப்பட்டு வந்து தஞ்சம் புகுந்த நாட்டை இப்படி ஏமாற்றுவதா? என்று மறுத்துவிட்டார். அதாவது, உலகிலே மதிக்கப்படவேண்டியவள் மனைவி. ஆனால் சிவலிங்கம் மனைவியைக் காட்டிலும் புகுந்த நாட்டுக்கு மதிப்புக்கொடுக்கின்ற நிலையினை உணர்த்துகின்றார்.

எங்கள் நாட்டின் இலக்கியப் பண்பாட்டை கனடிய நாட்டின் கம்பனி பிரெஸிடெண்ட்க்கு தெளிவுபடுத்திக் காட்டுகின்றார். எங்கள் நாட்டில் ஔவையார் என்று ஒரு மிகப்பிடித்த பெண்புலவர் இருந்தார். அவர் ஒரு அரசனை வாழ்த்தப்போய் "வரப்புயர" என்று மட்டும் கூறி பேசாமல் இருந்துவிட்டார். அதன் தாற்பரியத்தைப் பின்பு அவரே விளக்கினார் என்று கூறி காரியத்தை வென்றதாகக் விளக்குகின்றார். அதாவது, சிறந்த மொழித் தேர்ச்சி இருக்குமாக இருந்தால் எங்களுடைய பண்பாட்டினை மேற்கத்திய நாட்டுக்காரர்களுக்குப் புரிய வைத்து காரியத்தினை வெல்லமுடியும் என்பதனை தெளிவுபடுத்துகின்றார்.

பொதுவாக இந்தக் கதையை நோக்கினால், இலங்கையில் பெரிய பெரிய பதவியில் இருந்தவர்கள் மேற்கத்திய நாடுகளில் கஸ்ரப்பட்டு வேலை செய்து சம்பாதிப்பதனையும், பண்பாடு தவறாமல் தங்களுடைய வாழ்க்கையினை முன்கொண்டு செல்கின்றமையினையும் அவதானிக்கலாம். ஔவைப்பாட்டியினுடைய சாதூரியத் திறமையினைக் காட்டி இலங்கையில் கற்றவர்கள் எப்படி இருந்தார்கள் என்பதனையும் சூக்குமமாகக் காட்டுகின்றார். உண்மையிலேயே ஒரு சதம் என்றுதான் வீட்டின் பெயர் இருந்தது. அதனை ஒரு சாதமாக பரமசிவத்தினூடாகக் காட்டுகின்றார். ஒரு சதம் எனும் நிலையிலிருந்து பத்துச் சதம் எனும் நிலைக்கு பொருளாதார நிலை மாறுவதற்கு அவர்களுடைய அயராத முயற்சியும், அந்த நாட்டின்மீது கொண்ட பற்றுந்தான் காரணம். உயர நினைப்பவர்கள் தனது முயற்சியினால் முன்னேறலாம் என்பது இக் கதையின் மையப் பொருளாகும்.

கம்பியூட்டர் என்ற கதை அதனுடைய பல்வேறு விடயங்களைத் தெளிவுபடுத்திக் காட்டுகின்றது. கம்பியூட்டரில் ஆண், பெண் பேதம். அதனைப் பயன்படுத்துகின்ற விதம் போன்ற விடயங்களைச் சொல்லவந்த கதையாசிரியர் அதனை சமூகப் பண்பாட்டுத்தளத்துடன் காட்டிச் செல்கின்றார். அதாவது, கதையிலே தூண்டில் வாங்கப் போய், மொழிச் சிக்கலால்

கடையில் வேலை செய்யும் ஒருவரின் கேள்விகளுக்குட்பட்டு அவஸ்தைப்பட்டு, தூண்டில் வேண்டாம் என்று ஆகிவிட்டது என்கின்றார். இதனை யாழ்ப்பாணம் வெலின்டன் தியேட்டரில் கவுண்டர் ஓட்டைக்குள் கையை நீட்டினால் டிக்கட் கொடுப்பவர் கையைக் கெட்டியாகப் பிடித்துக்கொள்வார். பின்னுக்குச் சனம் நெருக்கியபடியே இருக்கும். டிக்கட் கேட்டவருடைய கையோ முறிந்து போகும் நிலை அப்போது அவர் "டிக்கட் .வேண்டாம் கையை விடு" என்று கத்துவதுற்குத் தன்னை ஒப்பிடுகின்றார். அவர் மீண்டும் மொழி தெரிந்த தனது நண்பனுடன் அக்கடைக்குச் செல்கின்றார். நண்பனுக்கு அவர்களுக்கும் இடையே இடம்பெறும் சாம்பாசனையை இவரால் விளங்கிக்கொள்ள முடியவில்லை. அதில் 'ஹார்ட்ரைவ்' 'ப்ளொப்பி' 'மெஹாபைட்' 'சொப்ட்வேர்' 'இண்டர்போல' 'யூபிஎஸ்' 'என்ற வார்த்தைகள் இருந்தன. இவையெல்லாம் கம்பியூட்டருடன் தொடர்புபட்டவை. இதனை விளக்குகின்றார் கவி காளமேகத்தின் நிகழ்வொன்றால். ஒரு முறை கவி காளமேகம் பெயர் தெரியாத ஒரு ஊரில், பாஷை தெரியாத திம்மி என்கின்ற தாசியுடன் இரவைக்களிக்க வேண்டி வந்ததாம். இரவு முழுக்கத் தாசி 'எமிரோவோரி' 'எந்துண்டிவஸ்தி' என்றெல்லாம் இவருடன் சரசம் செய்தாள். அவள் சொன்னது இவருக்குப் புரியவில்லை. இவர் சொன்னது அவளுக்கு விளங்கவில்லை. எமன் கையில் பட்டபாடு என்கின்றார் கவி காளமேகம். அதாவது, புலம் பெயர் நாடுகளில் உள்ள மொழிச் சிக்கலால் மக்கள் அனுபவிக்கின்ற கஷ்ட நிலையினை இலக்கியங்கள் வழி காட்டுகின்றார் கதையாசிரியர்.

கம்பியூட்டர் வாங்கி வருதல், ராகுகாலம் தவிர்த்தல், சாமிக்குத் தீபம் காட்டிவிட்டு கணிணிக்குப் பொறியின் நெற்றியில் ஒரு குங்குமப் பொட்டு வைத்தல், இதில் ஓம் ஸ்ரீராம் என்று எழுதுதல் என்பவை தமிழர் பண்பாட்டின் அடையாளங்களாகும். ஒவ்வொரு ஐந்து நிமிடமும் 'டைப்' செய்ததைச் சேமித்து வைக்கவேண்டும், எங்கள் ஒவ்வொருவருக்கும் வெவ்வேறு டைரக்டரி உண்டாக்கி அதில் எங்கள் வேலைகளைச் சேமித்து வைத்துக் கொள்ள வேண்டும். என்பதனை "போயிலைக் கன்றுக்குப் பாத்தி கட்டுவது போல" கணிணிப் பொறித் தளத்தை மூன்று பகுதிகளாகப் பிரித்து எங்கள் படைப்புக்களை இந்த வரம்புக்குள் வைத்துக்கொண்டோம் என்கின்றார். தமிழர் பண்பாட்டில் கம்பியூட்டர் போன்ற ஒரு பொருள் வாங்கினால் இவ்வாறுதான் நடைமுறை உள்ளது என்பதனைக் காட்ட முனைந்துள்ளார்.

'நான் ஒரு நெடுங்கதையினை டைப்செய்து விட்டதன் பின்னர் சேமித்து வைத்தேன். பின்னர் தேடியபோது அப்படி ஒரு கோப் இல்லையென்று சொன்னது எனக்கு அதனைப் பார்த்ததும் அழுகை வருவதுபோல் இருந்தது' என்பதனை ஒரு ஏழைப் புலவர் பாக்கு வெட்டியினைத் தொலைத்த சம்பவத்துடன் தொடர்புபடுத்திக் காட்டுகின்றார். "ஓர் ஏழைப் புலவருடைய பரம்பரைச் சொத்து ஒரு பாக்குவெட்டி. உயிருக்கு அடுத்தபடி அவருக்கு அதுதான் எல்லாம். விறகு வெட்ட, கறி நறுக்க, பாக்குச் சீவ என்று எல்லாத்துக்கும் அதைத்தான் நம்பியிருந்தார். ஒரு நாள் அதைக் காணவில்லை. காலும் ஓடவில்லை தேடு தேடென்று தேடினார்." இந்தக் கதிதான் எனக்கும். பின்னர் இந்தக் கோப்பினை தனது மகன் கம்பியூட்டருடன் விளையாடிய சந்தர்ப்பத்தில் என்னால் கண்டுகொள்ள முடிந்தது. அதாவது, கம்பியூட்டரில் சேமித்த விடயம் அதன் பகுதியில் எங்கேயோ இருக்கும் என்ற உண்மையினை உதாரணத்துடன் காட்ட முனைந்திருக்-கின்றார். புலம்பெயர் நாடுகளில் உள்ள தமிழ் மக்களில் பலர் கம்பியூட்டர் தெரியாமல் இருக்கின்றார்கள் என்றும், அவர்கள்

கபியூட்டர் கற்கும்போதுதான் அந்த நாட்டிலுள்ள விடயங்களைத் தெளிவாகக் கையாண்டு எமது திறமையினைக் காட்டமுடியும் என்பதனையும் முன்வைக்கின்றார்.

பீனிக்ஸ் பறவை என்ற கதையில் தந்தை ஒரு மகனைப் பிரிந்து நீண்ட காலத்திற்குப் பின்னர் மீண்டும் ஸ்டாக்ஹோமில் சந்திக்கின்றார். அங்கு அவர்கள் அடைந்த மகிழ்ச்சியும், அந்த நாட்டினுடைய வாழ்க்கை முறைகளையும் தெளிவுபடுத்திக் காட்டுகின்றார். விமான நிலையத்திலிருந்து தள்ளு வண்டியில் சூக்கேஸ் பெட்டிகளை வைத்துத்தள்ளி சறுக்கிச் சறுக்கி விழுதல், அந்த நாட்டு முறைப்படி பிள்ளைகளுக்குப் பெயர் சூட்டுதல், கம்பியூட்டர் அடையாள அட்டைமூலம் செலவு செய்தல் என்று பல விடயங்களைக் காட்டி அவை எமது நடைமுறையிலிருந்து முற்றிலும் வேறுபட்டது என்பதனை அங்குள்ள வாழ்க்கை முறையி னூடாகக் வெளிப்படுத்துகின்றார்.

மேற்கத்திய நாடுகள் முன்னேறியிருப்பதனையும், நாங்கள் இன்னும் இருபது வருடம் பின்தங்கி நிற்கின்ற நிலையினையும் கம்பியூட்டர் அடையாள அடடை மூலம் காட்ட முனைகின்றார். "என்னுடைய அடையள அட்டை வந்தபோதுதான் நான் அதன் மகாத்மியத்தை உணர்ந்தேன். எங்கே போனாலும் என் அடையாளத்தை நிருபிக்க இதைக் கொடுத்தால் போதும். அவர்கள் அதனைக் கம்பியூட்டர் முனையில் சொருகினால் என்னுடைய சாதகம் பூராகவும் தெரிந்துவிடும்", கம்பியூட்டரில் உணவு சமைத்தல் முதல் குழந்தை பிறத்தல் ஈறாகப் பலவிடயங்களும் இடம்பெறுகின்றன என்று கம்பியூட்டர் கற்க வேண்டிய அவசியத்தையும், எங்கள் நாடு அதற்கு இன்னும் முன்னேறிச் செல்ல வேண்டும் என்பதனையும் காட்ட முனைகின்றார். "இங்கே காசு, கிரெடிக் கார்ட் எல்லாம் முற்றாக ஒழிந்து பல வருடங்கள் ஆகி விட்டன. காசையோ கிரடிற் காட்டையோ கண்டால் அதை ஆவலுடன் வாங்கித் தொட்டுத் தொட்டுப் பார்க்கிறார்கள். எங்கள் நாட்டில் நாங்கள் எதற்கும் கிரெடிக் காட்டைத்தான் பயன்படுத்துகின்றோம் என்று சொன்னால் நம்ப மறுக்கின்றார்கள்" என்று எங்கள் நாட்டின் நிலையினைச் சொல்லமுனைகின்றார்.

குழந்தை பிறத்தல் என்பது தமிழர்களுடைய பண்பாட்டிலே முக்கியமான ஓர் விடயம். எமது நாட்டில் சுற்றம், சொந்தம் உட்பட பலர் ஒன்று சேர்ந்து தாய் - சேய் நலன் பாராட்டி வாழ்த்துவது முறை. கருக்கொண்டதிலிருந்து பல சடங்குகளும் செயற்பாடுகளும் தமிழர் பாரம்பரியத்தில் இடம்பெறுவது வழக்கமாகும். விரும்பியவாறே பிள்ளைகளைப் பெறமுடியும். மேற்கத்திய நாடுகளில் அத்தகைய பாரம்பரியங்கள் பின்பற்றப்படுவதில்லை என்பதனைக் காட்டுகின்றார். சுவீடனில் கம்பியூட்டரில், ஆணினுடைய கருவையும் பெண்ணினுடைய கருவையும் சேர்த்துத்தான் பிள்ளையை உண்டாக்குகின்றனர். கருமூலம் தேவையான குழந்தையைத் தேரர்ந்தெடுக்கின்றனர். "இவர்கள் போய்ப் பார்த்தபோது கம்பியூட்டரில் ஆறு உற்பத்தி நிலைச் சிசுக்களைக் காட்டினார்களாம். நோய்நொடி இல்லாத ஆரோக்கியமான நிலையில் தங்கத் தலைமயிரும் நீலக் கண்களும் கொண்ட ஓர் ஆண் சிசுவை இவர்கள் தெரிவு செய்தார்களாம்." இங்கு இவர்கள் நினைத்தமாதிரி குழந்தைகள் பெற முடியாது. கம்பியூட்டரில் விண்ணப்பித்து அனுமதி கிடைக்க வேண்டும். "ஒரு மனித உயிர் பிறந்தவுடனேயே டீ.என்.ஏயையும் ராட்சஸ கம்பியூட்டர்களில் பதிந்து ஒரு ஐ.டி நம்பர் கொடுத்து விடுவார்கள். அதன் பிறகு அந்த மனிதன் இறக்கும் வரை அவனைப் பற்றிய சகல விபரங்களும் அந்த நம்பரில் பதிவாகிவிடும்" இறப்பைப் பொறுத்தவரையிலும் இங்கு கருணை மரணமும் உண்டு. அதனை அரசிடம் விண்ணப்பித்துப் பெற்றுக் கொள்ளலாம்.

"ஹென்னிங்ஸ் என்கின்ற ஒருவர் ஆற்றிய உரை இது "தான் எழுபது ஆண்டுப் பிராயம் அடைந்துவிட்டதாகவும், பூரண ஆரோக்கியத்துடன் நிறைந்த வாழ்வு வாழ்ந்ததாகவும் இனிமேல் கருணை மரணத்தைத் தழுவ முடிவு செய்ததாகவும் சொன்னார்." எனவே, பிறப்பும் இறப்பும் மனிதனால் இடம்பெறுவது போன்ற நிலையினைக் கண்டுகொள்ள முடிகின்றது. தமிழர்கள் வாழ்வில் இவை இரண்டும் இரண்டு நடைமுறை நம்பிக்கைத் துருவங்கள்.

இலங்கை போன்ற நாடுகளில் பாடசாலைக் கல்வியைத்தான் மக்கள் நம்பி இருக்கின்றார்கள். ஸ்டாக்ஹோமில் பள்ளி நிலைமையினை, "இங்கு பள்ளிகள் வாரத்திற்கு ஒருமுறைதான். மற்ற நேரங்களில் கம்பியூட்டர் மூலமாகவே ஆசிரியர்கள் தொடர்பு கொண்டு வீட்டுப் பாடங்களைக் கொடுப்பர்" எங்கள் நாட்டுக் கல்வி அதற்கு முற்றிலும் வேறுபட்டது. என்பதோடு மாணவர்க ளுடைய தேடலை முதமைப்படுத்திக் காட்டுகின்றார். புலம்பெயர்ந்த நாடுகளில் புலம்பெயர்ந்தவர்கள் அனுபவிக்கின்ற மொழிச் சிக்கலையும், அவர்களுடைய குழந்தைகளுக்கு தமிழ்மொழி தெரியாமல் போவது பற்றியும் இந்தக் கதையில் அவதானிக்க முடிகின்றது. "அம்மா என்ற குரல் கேட்டது. தமிழ்க் குரல்தான். தேனாக அது என் காதில் வந்து விழுந்தது. என் மகன்தான் ஓடோடி வந்துகொண்டிருந்தான்." என்று தனது மகன் பற்றிய சூழ்நிலையினையும், "மொர்மோ மொர்மோ என்று என் பேரன் கையை இழுத்தான். அவனை ஆசையுடன் தூக்கி முகர்ந்தேன். முகத்தைச் சுழித்தான். ஹோர்கன் என்று பேர் வைத்திருந்தார்கள். வாயில் வராத பேர்" என்று புலம்பெயர்ந்த நாடுகளில் பிள்ளைகளுக்கு அமைகின்ற பெயர்களால் தமிழ்மொழி அழிந்து செல்கின்ற நிலையினையும் காட்டுகின்றார்.

குளிர்க்கும் முறைபற்றியும், சாப்பாடு பற்றியும் ஞாபகப்படுத்துகின்றார். கனடாவில் கதிரியக்கத்தில் குளிர்க்கும்போது கிருமிவராது என்று தனது பேரன் கூறுகின்றான். "என்னதான் என்றாலும் நிறையத் தண்ணீரில் சோவென்று குளிர்த்து, நனைந்து சோப்போட்டு குளிப்பதுபோல வருமா? என்று ஆதங்கப்படுகின்றார். கம்பியூட்டரில் சமைத்துக் கொள்வதுதான் வழக்கம். ஒருமுறை நல்ல பாலும் சீனியும் போட்டு இஞ்சி கலர்ந்த கடுங்கோப்பி ஒன்று குடிக்க ஆசையாக இருந்தது. "கம்பியூட்டரைத் திரும்பித்திரும்பி நாலைந்து தடைவை ப்ரோக்கிராம் பண்ணிப் பார்த்தேன் சரிவரவில்லை. அலுத்துப்போய் அப்படியே விட்டுவிட்டேன்". என்று கிராமிய வாழ்க்கையை நினைவு படுத்திக் காட்டுகின்றார். கிராமதில் நினைத்தவுடன் நினைத்த சாப்பாட்டினைப் சுற்றம் சூழலிருந்தாவது பெறமுடியும். இங்கு புரோக்கிராம் பண்ணப்பட்டதற்கு ஏற்பவே கிடைக்கும் என்கின்றார்.

பீனிக்ஸ் பறவையினை தனது பேரனுக்கு அறிமுகப்படுத்துகின்றார். 'கிரேக்க புராணங்களில் கற்பனைப் பறவையாகக் காட்டப்படும் இப்பறவை அரேபிய பாலை வனங்களில் வாழகின்றது என்றும். இது ஒரு பறவைதான் வேறுபறவை இல்லை. ஐந்நூ று வருடங்கள் வாழும் என்றும். இதற்குத் துணையும் இல்லை முட்டையுமில்லை என்றும். ஐந்நூறு வருடங்களுக்குப் பின்னர் தானே சுள்ளிகள் பொறுக்கி அடுக்கி சூரிய வெப்பத்தில் நெருப்புண்டாக்கி இதில் வீழ்ந்து இறந்து போக அதன் சாம்பரில் இருந்து இன்னோரு பறவை உண்டாகும் என்று அது ஒரு பறவைதான் உலகில் உள்ளது. அதன் இறப்பிலிருந்ததான் அடுத்த பறவை தோன்றும் என்கின்றார். இதன மூலமாக பிறப்பதெல்லாம் இறக்க வேண்டும் என்றும், பிறப்பும் இறப்பும் உலக நியதி என்ற இந்து தத்துவக் கருத்தினையும் ஞாபகப்படுத்துகின்றார். அதாவது, இக்கதையின் ஊடாக ஒரு மனிதனுடைய சுதந்திரப்போக்கினைச் காட்டவருகின்ற கதையாசிரியர் அது இயந்திர

மயப்பட்டதனையும் ஏற்கனவே தயாரித்த திட்டத்திற்கு ஏற்பதான் செயற்பாடு அமையும் என்றும் ஜந்திர உலகைக் காட்டுகின்றார். அந்த வாழ்க்கை எவ்வாறாக இருந்தாலும் எமது கிராமியா வாழ்க்கையிலிருந்து முற்றிலும் வேறுபட்டது என்பதனையும் குறிப்பிடுட்டு, நாம் சுருங்கிவரும் உலகுக்கு ஏற்ப முன்னேற வேண்டியுள்ளமையினையும் தெளிவுபடுத்திக் காட்ட முனைந் திருக்கின்றார்.

முடிவாக, இலங்கையில் அசாதாரண சூழ்நிலையினால் ஏற்பட்ட சீரழிவுகள், புகழிடத்திலே அவர்கள் அனுபவிக்கும் கஷ்டங்கள், பெற்றோருக்கும் பிள்ளைகளுக் குமிடையே காணப்படும் சீர்குலைவான குடும்பப் பிணைப்புக்கள், புலம்பெயர்ந்தவர் களுக்கு இருக்கும் மொழிச் சிக்கல்களும், இளந் தலைமுறையினருக்கு தமிழ் தெரியாமல் போவதும், கலாசார வேறுபாடும் முரண்பாடுகளும், எங்களுடைய கலாசாரத்தின் மீதும் மரபுகள் மீதும் கொண்டுள்ள அதீத பற்றுக்கள் போன்றவைகளை இந்தக் கதைகளுடாகக் காட்டுகின்றார். மேலும், ஒரு விடயத்தினைத் தெளிவுபடுத்து வதற்காக தமிழர் பண்பாட்டில் நிலைகொண்ட கிளைக் கதைகளைப் பொருத்தமாகக் காட்டுதல், இலங்கையில் தமிழ் மக்களிடையே இருந்த மரபுவழிப் பண்பாட்டம் சங்களையும், அவர்களுடைய கல்வி அறிவினையும் தெளிவுபடுத்தித் தமிழர்களுடைய உறுதியான இருப்பினை அவர்களுடைய பண்பாட்டின்வழி வெளிப்படுத்திக் காட்டுகின்றார். அ.முத்துலிங்கத்தின் இந்த மூன்று கதைகளின் உட்பொருளும் கம்பியூட்டர் கற்க வேண்டிய அவசியத்தினையும் அவசரத்தினையும் வலியுறுத்தி நிற்கின்றன. அதில் தேர்ச்சி பெற்றவன் தாம் வாழும் நாடுகளில் உயர்ந்த தொழிலில் அமர்த்தப்படுகின்றான் என்பதனைச் கதையாசிரியர் தெளிவுபடுத்துகின்றார். எனவே, தமிழர்கள், தமிழ்மொழி, அவர்களுடைய பண்பாடு என்பவை இன்று சொந்த நாடுகளிலும், புலம்பெயர் நாடுகளிலும் பற்பல சவால்களை எதிர்நோக்கி வருகின்றன. அவற்றினை வெற்றி கொள்வதற்கு 'உலகநடைக்கேற்ப ஒழுகவேண்டும்' என்பதனையே வலியுறுத்தி நிற்கின்றன.

உஷாத்துணைகள்

1. அ.முத்துலிங்கம் கதைகள் (2013), தமிழினி, சென்னை.
2. யோகராசா.செ (2011), புலம்பெயர் இலக்கிய வளர்ச்சிக்கு வடமராச்சியின் பங்களிப்பு – நினைவுப் பேருரை
3. சித்திரலேகா மௌனகுரு (1995), இலங்கைத் தமிழரின் புலம்பெயர் இலக்கியம், சுதந்திர விழா இலக்கிய அமைப்புக்குழு.
4. விசாகரூபன்.கி, புலம்பெயர் கவிதை உருவம் உள்ளடக்கம் உணர்த்துமுறை, யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரி.
5. ஆதவன் தீட்சண்யா (2017 கனணி மூலம்) புலம்பெயர் இலக்கியம் - விவாதத்திற் கான புள்ளி
6. புலம்பெயர் இலக்கியம் - கட்டுரை (கனணி மூலம்)

முன்பள்ளிச்சிறார்களின் நடத்தைக்கோலங்களில் பண்பாட்டுக்காரணிகளின் தாக்கம் - இலங்கையின் வடமராட்சி வடக்கு பிரதேசசெயலர் பிரிவுக்கு உட்பட்ட முன்பள்ளிகளை அடிப்படையாகக்கொண்ட ஆய்வு

1. நிசாந்தினி நித்திலவர்ணன், ஆசிரியர், யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப்பாடசாலை, பருத்தித்துறை, இலங்கை
2. ஆனந்தமயில் நித்திலவர்ணன், சிரேஸ்ட விரிவுரையாளர், கல்வியியல்துறை, யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம், இலங்கை (Email: anithlavarnan@gmail.com

1. ஆய்வுப்பின்னணி

ஒரு இனத்தின் பண்பாட்டின் நிலைபேறு என்பது, அதனைப்பேணிப்பாதுகாத்தல் மற்றும் கவனமாக அடுத்த சந்ததிக்கு கையளித்தல் ஆகிய செயற்பாடுகளில் தங்கியுள்ளது. மனித விருத்திப்பருவங்களில், முன்பள்ளிப்பருவம் பண்பாட்டு கையளிப்புக்கு பொருத்தமான பருவமாகும். முறையான பாடசாலைக்கல்வியைப் பெற்றுக்கொள்வதற்கு முன்னதாக பிள்ளை பெற்றுக்கொள்ளும் கல்வியாக முன்பள்ளிக்கல்வி (Pre School Education) அல்லது ஆரம்பப்பிள்ளைக்கல்வி (Early Childhood Education) விளங்குகின்றது. தற்காலத்தில் 3 வயது தொடக்கம் 5 வயது வரையிலான காலப்பகுதியில் சிறார்கள் முன்பள்ளிகளில் கற்கிறார்கள். இக்காலப்பகுதி மனித விருத்திப்பருவங்களில் ஒன்றான பிள்ளைபப்பருவத்தின் ஆரம்ப காலப்பகுதியில் வருவதனால், முன்பள்ளிச்சிறார்களிடம் உளவிருத்தியும், மூளைவிருத்தியும் அதிகளவில் ஏற்படுகின்றது. எனவே இப்பருவம் கற்றலுக்கும், நேரான நடத்தை மாற்றத்துக்கும் சிறப்பான பருவமாகும். முன்பள்ளிச்சிறார்களின் நடத்தைக்கோலங்களில் பல்வேறு காரணிகள் செல்வாக்குச்செலுத்துகின்றன. அக்காரணிகளில் பண்பாட்டுக்காரணிகள் முக்கியத்துவம்வாய்ந்தவை.

2. ஆய்வுப்பிரச்சினை

பண்பாடானது, பரம்பரை பரம்பரையாகக் கையளிக்கப்பட்டுவரும் ஒன்றாக காணப்படுகின்றது. இருந்தபோதிலும் உலகமயமாக்கலின் செல்வாக்கினால் பல சுதேசியப்பண்பாடுகள் தமது சுயத்தினை இழக்கும் ஆபத்தினை எதிர்நோக்கியுள்ளன.

இலங்கையில் நீண்டகாலமாக இடம்பெற்ற உள்நாட்டு யுத்தம், அதன் விளைவாக ஏற்பட்ட இடப்பெயர்வு, அகதிமுகாம் வாழ்க்கை, வெளிநாடுகளுக்கு புலம்பெயர்தல், கலாசார சீரழிவுகள் மற்றும் அந்நியநாகரிகமோகம் என்பவற்றினால் தமிழர் பண்பாடும் ஆட்டங்காணத்தொடங்கியுள்ளது. பண்பாட்டின் நிலைபேறு என்பது, அதனைப் பேணிப்பாதுகாத்தல் மற்றும் கவனமாக அடுத்த சந்ததிக்கு கையளித்தல் ஆகிய செயற்பாடுகளில் தங்கியுள்ளது.

> *"ஓர் இனத்தின் இனத்துவஅடையாளங்களாக அந்தஇனத்தின் பண்பாடும், கலாச்சாரப்பாரம்பரியங்களுமே காணப்படுகின்றன. அவற்றின் பாதுகாப்பிலேயே அவ்வினத்தின் பாதுகாப்பு தங்கியுள்ளது. தனித்துவம் என்றபோர்வையில் ஒதுங்கிப்புறநடையாகச்செல்லாமலும், பன்மைத்துவம் என்றவகையில் கரைந்து*

காணாமல்போகாமலும், ஒவ்வொரு இனமும் தமது கலாசாரத்தைப்பாதுகாத்து வாழவேண்டும்."

என பருத்தித்துறைப்பள்ளிவாசல் பிரதமஇமாம் அஜ்மல்.ஏ.காதர் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்றார். மேலும் இலங்கை அரசதகவல்தினைக்களப்பணிப்பாளர் பேராசிரியர் ஆரியரத்தின அத்துக்கல அவர்கள் கலாச்சாரத்தைப்பற்றி அண்மையில் யாழ்ப்பாணத்தில் குறிப்பிடும்போது,

"எந்தவொரு கலாச்சாரமும் மற்றுமொருகலாச்சாரத்தை மிஞ்சிவிடமுடியாது. ஒவ்வொரு கலாச்சாரத்திலும் உன்னதநிலையாக மற்றைய கலாச்சாரத்தை மதிப்பதே எனக்கூறப்படுகின்றது." எனவும்

"யாழ்பாணத்திற்கே உரிய பல கலாச்சாரமுக்கியத்துவங்கள் காணப்படுகின்றன. முன்னேற்றமடைந்த அதேவேளை பண்டைய கலாச்சாரத்தை உடையவர்களே யாழ்ப்பாணமக்கள்"

எனவும் குறிப்பிடுகின்றார்.

ஆனால் இன்றுநாம் எமது "கலாச்சாரப்பாதுகாப்பு" தொடர்பாகக்கவலை கொண்டிருக்கின்றோம். பண்பாட்டு அடையாளங்களான தாய்மொழி, வாழ்க்கைமுறை, பாரம்பரியகலைகள் உணவுமுறை மற்றும் ஆடைஅணிகலன்கள் என்பன சிதைவடைய ஆரம்பித்துள்ளன. இதற்கான காரணங்களாக உலகமயமாக்கல், மேலைத்தேயமோகம் மற்றும் உள்நாட்டில் காண்பிக்கப்படும் இனரீதியானபாகு-பாடு என்பன காணப்படுகின்றன.

புலம்பெயர்ந்து ஐரோப்பியநாடுகளில் வாழும் எமது உறவினர்களின் இரண்டாம் தலைமுறைப்பிள்ளைகள் பலர் தமிழ்மொழியை எழுதவாசிக்கத்தெரியாதவர்களாக இருக்கின்றார்கள்.

புலம்பெயர் உறவுகள் எங்களது வாழிவியலில் இருந்து பிரிக்க முடியாதவர்கள். எங்கள் பலகுடும்பங்களின் பொருளாதாரமூலங்கள். அவர்கள் தமது திருமணபந்தங்களுக்கான மண-மகள் மற்றும் மணமகன்களை இங்கிருந்தே பெரும்பாலும் பெற்றுக்கொள்ள வேண்டியுள்ளது. இனி ஒவ்வோராண்டும் கோடை விடுமுறைக்கு அவர்கள் இங்குதான் வருவார்கள். ஏனெனில் அவர்களது வேரும், வேரடிமண்ணும் இங்குதானுள்ளது. அவர்கள் சிலரின் நடவடிக்கைகள் எமதுபண்பாட்டைச்சிதைப்பதாக உள்ளன. அவர்களின் இரண்டாம் தலைமுறைக்கான பண்பாட்டுக்கையளிப்பு மற்றும் தமிழ் கற்றல் - கற்பித்தலுக்கான ஆக்கபூர்வமான முயற்சிகளை நாம் எடுக்கவேண்டும்.

எமது தாய்மொழியான தமிழ்மொழி பல்வேறுவழிகளிலும் அழிவுக்குட்பட்டுவருகின்றது. அதனை அழிவிலிருந்து பாதுகாக்கவேண்டும். எமது கலாசார உடைகளை நாம் அணிய வேண்டும். எமக்கே தனித்துவமான உணவுகளைத்தயாரித்து உண்ணவேண்டும். பாரம்பரிய கலைகளைப்பேணிப்பாதுகாக்க வேண்டும். இது தொடர்பான விழிப்புணர்வு பாடசாலைகளிலிருந்தே ஊட்டப்படவேண்டும். பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் சமூகத்திலுள்ள இளைஞர் யுவதிகள் தமது தார்மீகக்கடமையாக இதனை ஏற்கவேண்டும். இதுதொடர்பான சமூகவிழிப்புணர்வு ஊட்டப்படவேண்டும். இதுவும் நிலை பேண்தகுஅபிவிருத்திக்கான கல்வியின் ஒரு அங்கமாகும்.

ஒரு இனத்தின் பண்பாட்டின் நிலைபேறு என்பது, அதனைப்பேணிப்பாதுகாத்தல் மற்றும் கவனமாக அடுத்த சந்ததிக்கு கையளித்தல் ஆகிய செயற்பாடுகளில் தங்கியுள்ளது. மனித விருத்திப்பருவங்களில், முன்பள்ளிப்பருவம் பண்பாட்டு கையளிப்புக்கு பொருத்தமான பருவமாகும்.

3. ஆய்வின் நோக்கங்கள்

இந்த ஆய்வானது பின்வரும் நோக்கங்களைக்கொண்டது,

1) முன்பள்ளிச் சிறார்களுக்கு பண்பாடு எவ்வாறு கையளிக்கப்படுகிறது என்பதை இனங்காணல்.

2) முன்பள்ளிச் சிறார்களின் நடத்தையில் பண்பாட்டுத் தாக்கத்தை அறிந்து கொள்ளல்

3) முன்பள்ளிச் சிறார்களின் நடத்தைகளில் நேரான மாற்றத்தை ஏற்படுத்தி பண்பாட்டை சிறந்த முறையில் கையளிப்பதற்கான தீர்வுகளை முன்வைத்தல்

4. ஆய்வு முறையியல்

இந்த ஆய்வு, அளவைநிலை (Survey Method) ஆய்வாக முன்னெடுக்கப்பட்டது. அளவறிரீதியான (Quantitative) மற்றும் பண்பறிரீதியான (Qualitative) முறையியல்கள் இரண்டும் இணைந்த கலப்புமுறையியல் (Mixed Method) பயன்படுத்தப்பட்டது. முதல்நிலை மற்றும் இரண்டாம்நிலைத்தரவுகள் சேகரிக்கப்பட்டன.

4.1 குடித்தொகையும் மாதிரியும்

வடமராட்சி வடக்குப் பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட முன்பள்ளிகளில் கல்வி கற்கும் 1672 மாணவர்களே இங்கு ஆய்வுக் குடித்தொகை ஆகும். வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் பிரிவில் உள்ள 35 கிராம சேவையாளர் பிரிவில் இயங்குகின்ற 69 முன்பள்ளிகளில் இம் மாணவர்கள் கல்வி கற்கின்றார்கள்.

வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் பிரிவிலுள்ள 14 முன்பள்ளிகள் தெரிவு செய்யப்பட்டன. இங்கு மாதிரி எடுத்தல், நுட்பமாக நோக்கு மாதிரி எடுத்தல் பயன்படுத்தப்பட்டது. அதாவது இப் பிரதேச செயலர் பிரிவில் இயங்கும் முன்பள்ளிகளில் வேறுபட்ட சமூகப் பின்னணியைக் கொண்ட முன்பள்ளிகள் தெரிவு செய்யப்பட்டன.

வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் பிரிவில் மூன்று உள்ளூராட்சி சபைகள் அமைந்துள்ளன. இவ் உள்ளூராட்சி சபைகளுள் உள்ளடங்குகின்ற முன்பள்ளிகளின் எண்ணிக்கையும் தெரிவு செய்த முன்பள்ளிகளின் எண்ணிக்கையும், மேற்படி முன்பள்ளிகளில் கல்வி கற்கும் மாணவர்களின் எண்ணிக்கையும் அட்டவணை - 1 இல் காட்டப்பட்டுள்ளது. தெரிவு செய்யப்பட்ட முன்பள்ளிகளின் விபரம் அட்டவணை - 2 இல் காட்டப்பட்டுள்ளது.

அட்டவணை - 1: வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட முன்பள்ளிகளில் கல்வி கற்கும் மாணவர்களின் விபரம்

உள்ளூராட்சி மன்றத்தின் பெயர்	முன்பள்ளிகளன் எண்ணிக்கை	மாணவர்களின் எண்ணிக்கை	தெரிவு செய்த முன்பள்ளிகளின் எண்ணிக்கை	கல்வி கற்கும் மாணவர்களின் எண்ணிக்கை
பருத்தித்துறை பிரதேச சபை	43	1025	9	379
பருத்தித்துறை நகர சபை	15	418	3	192
வல்வெட்டித்துறை	11	228	2	103

(மூலம்: வலயக்கல்வி அலுவலகம், வடமராட்சி)

அட்டவணை – 2: தெரிவுசெய்யப்பட்ட முன்பள்ளிகளின் விபரம்

	முன்பள்ளியின் பெயர்	விலாசம்	பதிவிலக்கம்	மாணவர்களின் எண்ணிக்கை		ஆசிரியர் எண்ணிக்கை
				ஆண்	பெண்	
பருத்தித்துறை பிரதேச சபை எல்லைக்குட்பட்ட 9 முன்பள்ளிகள்	மக்கள் படிப்பகம்	ஆலடி, பொலிகண்டி கிழக்கு	NP/14/41(11)S/0276	41	19	3
	இன்பருட்டி	இன்பருட்டி, பருத்தித்துறை	NP/14/41(11)S/0242	41	26	3
	சர்வோதயம்	தம்பசிட்டி	NP/14/41(11)S/0269	12	5	2
	மாதிரி	கூவில், புலொலி மேற்கு	NP/14/41(11)S/0271	13	12	2
	வல்லியானந்தா	துன்னாலை வடக்கு, கரவெட்டி	NP/14/41(11)S/0253	6	12	2
	திக்கம்	திக்கம், அல்வாய்	NP/14/41(11)S/0277	16	18	2
	கலைமகள்	புனித நகர், கற்கோவளம்	NP/14/41(11)S/0228	26	14	2
	பூமகள்	அல்வாய் மேற்கு, அல்வாய்	NP/14/41(11)S/0263	19	21	2
	புனிதசபேரியர்	சக்கோட்டை, அல்வாய்	NP/14/41(S)00	35	39	3
பருத்தித்துறை நகர சபை எல்லைக்குட்பட்ட 3 முன்பள்ளிகள்	சைவமன்றம்	அத்தியடி, புலொலி	NP/14/41(S)/0053	17	18	2
	சதாவதானி	கதிரவேற்பிள்ளைவீதி, பருத்தித்துறை	NP/14/41(S)00	19	21	3
	ஞானசம்பந்தர்	கலாமன்ற வீதி, பருத்தித்துறை	NP/14/41(S)	43	34	4
வல்வெட்டித்துறை நகரசபை எல்லைக்குட்பட்ட 2 முன்பள்ளிகள்	கணபதி	நெடியகாடு, வல்வெட்டித்துறை	NP/14/41(4)S/0056	48	45	3
	செம்மீன்	ஊறணி, வல்வெட்டித்துறை	NP/14/41(4)S/0063	5	5	1

(மூலம்: வலயக்கல்வி அலுவலகம், வடமராட்சி)

4.2 தரவு சேகரித்தல் கருவிகளும் தரவுசேகரித்தல் முறைகளும்

இங்கு தரவு சேகரித்தல் கருவிகளாக வினாக்கொத்து, அவதானிப்புப் பட்டியல், நேர்காணல், ஆவணங்கள் என்பன தெரிவு செய்யப்பட்டன. அவதானிப்புப் பட்டியல் தயாரிக்கப்பட்டு அதன் அடிப்படையில் மாணவர் நடத்தை தொடர்பில் ஆய்வாளரினால் குறித்த முன்பள்ளிகளில் அவதானிப்பு மேற்கொள்ளப்பட்டது. முன்பள்ளி ஆசிரியர்களுக்கு வினாக்கொத்து வழங்கப்பட்டு தரவு சேகரிக்கப்பட்டது. குறித்த முன்பள்ளி அமைந்துள்ள சமூகங்களில் அல்லது பிரதேசங்களில் நிகழும் விழாக்கள், சடங்குகள், நிகழ்சிகள் என்பவற்றில் கலந்துகொண்டு நேரடியான அவ தானிப்பு மூலமும் கலந்துரையாடல் மூலமும் தகவல்கள் பெற்றுக்கொள்ளப்பட்டன. குறித்த சமூகத்தில் வாழும் சமூகப் பெரியார்களுடனான கலந்துரையாடல். மூலமும் தரவுகள் சேகரிக்கப்பட்டன.

5. ஆய்வு முடிவுகள்

5.1 வடமராட்சி பிரதேசத்தின் சமூக பண்பாட்டுப் பாரம்பரிய அம்சங்கள்

- வடமராட்சி பிரதேசத்தின் சமூக பண்பாட்டுப் பாரம்பரியங்களாக, சமூகம், உணவு, உடை, விளையாட்டு, அணிகலன்கள், வழிபாட்டு முறைமை, சிறு தெய்வவழிபாடும் கலைகளும், கூத்துமரபு, நாட்டுப்பாடல்கள் மற்றும் சடங்குகள் என்பன காணப்படுகினற்றன.

- இப்பண்பாட்டுக்காரணிகளை முன்பள்ளிச் சிறார்களுக்கு கையளிக்கின்ற முகவர்களாக குடும்பம், முன்பள்ளி ஆசிரியர், சமூகம், சகபாடிகள், சமூக நிறுவனங்கள், சமய நிறுவனங்கள் மற்றும் ஊடகங்கள் என்பன காணப்படுகின்றன.

5.2 முன்பள்ளிகளில் சிறார்களின் மொழிப்பாவனை

முன்பள்ளிச்சிறார்கள் தமது உறவினர்களை, நாகரிகம் கலவாத சரியான முறைப்பெயர் சொல்லி அழைக்கின்றார்கள். அத்துடன் வயதுக்கு மூத்தவர் களை மரியாதையுடன் அழைக்கின்றனர். முன்பள்ளியில் சலங்கழித்தல், மலங்கழித்தல் ஆகிய செயல்களைக் குறிப்பதற்கு இடக்கரடக்கல் சொற்பதங்களைப்பயன்படுத்து கின்றார்கள்.

5.3 முன்பள்ளிச்சிறார்களின் உணவுப்பழக்கவழக்கங்கள்

வடமராட்சிப்பிரதேசத்துக்கு தனித்துவமான உணவுப்பழக்கங்கள் முன்பள்ளிச் சிறார்களிடமும் காணப்படுகின்றன. தலைக்கு நல்லெண்ணை, கிரந்தி எண்ணை, மற்றும் தேங்காய் எண்ணை ஆகியவற்றை வைத்துக்கொண்டு முன்பள் ளிக்கு வருகின்றார்கள். முன்பள்ளியில் உணவு உட்கொள்ளும் போது, அனைத்து மாணவர்களும் சேர்ந்திருந்து உணவுண்பதுடன், உணவைப்பகிந்தும் உண்கின்றனர்.

வடமராட்சிப்பண்பாட்டை பிரதிபலிக்கும் உணவுவகைகளான 'பருத்தித்துறைவடை', 'எள்ளுப்புண்ணாக்கு', 'பல்லுக்கொழுக்கட்டை', மற்றும் 'பிடிக்கொழுக்கட்டை' ஆகிய உணவுகள் பற்றி தெரிந்து வைத்திருப்பதுடன் அவற்றை உண்டும் இருக்கின்றனர். பனை உணவுகளான புளுக்கொடியல், ஒடியல்கூழ், பனங்கட்டி, பனாட்டு, பனங்கிழங்கு, மற்றும் பனங்காய்ப்பணியாரம் என்பவற்றைப்பற்றி தெரிந்து வைத்திருப்பதுடன், பெரும்பாலான மாணவர்கள் 'கருப்பனீர்' பற்றி தெரிந்து வைத்திருக்கவில்லை.

5.4 முன்பள்ளிப்பிள்ளைகளின் உடையும் அணிகலன்களும்

பெரும்பாலான முன்பள்ளிகளில் மாணவர்கள் சீருடை அணியும் அதேவேளை ஒரு சில முன்பள்ளிகளில் மாணவர்கள் சீருடை அணிவதில்லை.முன்பள்ளிகளில் நடைபெறும் சமய விழாக்கள் மற்றும் கலைவிழாக்களுக்கு, தமிழர் பண்பாட்டை பிரதிபலிக்கும் உடைகளான பாவாடை சட்டை, வேட்டி சால்வை என்பவை அணிதல் வழக்கமாகவுள்ளது.

விளையாட்டுப்போட்டியில் நடாத்தப்படும் வினோத உடைப்போட்டியில் தத்தம் சமூகம் சார்ந்த பண்பாட்டை பிரதிபலிக்கும் வகையில் மாணவர்கள் தமது ஆற்றலை வெளிப்படுத்துகின்றார்கள். முன்பள்ளிச்சிறார்கள் முன்பள்ளிக்கு பல்வேறுபட்ட அணிகலன்களையும் அணிந்து வருகின்றார்கள். பெண்பிள்ளைகள் அனைவரும், பிராமண ஆண்பிள்ளைகளும் தோடு அணிகின்றனர். சில பெண்பிள்ளைகள் கால்சங்கிலி அணிகின்றனர். பொதுவாக பெண்பிள்ளைகள் தலை அலங்காரத்திற்காக 'கிளிப்', 'றிபன்', 'பூல்பாண்ட' மற்றும் 'அலிஸ்பாண்ட்ஷ போன்ற நாகரிக அணிகலன்களை அணிந்திருந்தனர்.

5.5 முன்பள்ளி ஆசிரியர்கள் தொடர்பான பின்னணித்தகவல்கள்

க.பொ.த(சா/த) கல்வித்தகைமை மட்டும் கொண்டவர்கள் 69.69% ஆகும். க.பொ.த(உ/த) கல்வித்தகைமை கொண்டவர்கள் 21.21% ஆகும். கலைப்பட்டதாரிகள் 3% ஆகவும் உயர்தேசிய கணக்கியல் டிப்ளோமாதாரிகள் 3% ஆகவும் உள்ளனர்.

யாழ்ப்பாணப்பல்கலைக்கழக புறநிலைப்படிப்புக்கள் அலகினால் நடாத்தப்படும் முன்பள்ளிச்சான்றிதழ் பயிற்சி நெறியை 03 ஆசிரியர்கள் பெற்றுள்ளார்கள். ஆசிரிய வாண்மைவிருத்தி

நிறுவகத்தால் நடாத்தப்பட்ட முன்பள்ளிச்சான்றிதழ் கற்கைநெறியை 02 ஆசிரியர்கள் பெற்றுள்ளார்கள். இது தவிர பெரும்பாலான ஆசிரியர்கள் UNICEF, JRS, Caritas-Hudec, போரூட் மற்றும் வலயக்கல்வித்திணைக்களம் ஆகிய நிறுவனங்களால் வழங்கப்பட்ட பயிற்சிகளையும் பெற்றுள்ளனர்.

முன்பள்ளி ஆசிரியர்கள் முன்பள்ளிக்கு சேலை, பாவாடை-சட்டை, பஞ்சாபி போன்ற உடை-களை அணிகின்றார்கள். இதேபோல் அணிகலன் களாக காப்பு, சங்கிலி, தாலிக்கொடி ஆகியவற்றை அணிகின்றனர்.

முன்பள்ளிக்கலைத்திட்டத்திலுள்ள பண்பாட்டு அம்சங்கள்

1. பாடல்கள்

   முன்பள்ளிகளில் நாட்டார் பாடல்களான கும்மிப்பாடல்கள், கோலாட்டப்பாடல்கள், தலாட்டுப்பாடல்கள், மீனவப்பாடல்கள், அருவிவெட்டுப் பாடல்கள் போன்ற பாடல்கள் சொல்லிக்கொடுக்கப்படுகின்றன. பொம்மை, நிலா, அணில், கப்பல், பறவைகள், பழங்கள், மிருகங்கள், மழை, பூக்கள் என்பவற்றை சித்தரிக்கும் சிறுவர் பாடல்களும் கற்பிக்கப்படுகின்றன. நாளாந்த செயற்பாடுகளை விபரிக்கும் ஒழுக்கப்பாடல்களுடன், ஆங்கிலப் பாடல் களும் சொல்லிக்கொடுக்கப்படுகின்றன

2. கதைகள்

   நீதிக்கதைகள், புராண இதிகாசக்கதைகள், சமயம் சார்ந்த கதைகள், மற்றும் மிருகங்கள் பற்றிய கதைகள் என்பன சொல்லிக்கொடுக்கப்படுகின்றன.

3. சித்திரமும் ஆக்கச்செயற்பாடுகளும்

   மண்ணினால் உருவங்கள் செய்தல், களியினால் (Clay) உருவங்கள் செய்தல், சித்திரங்கள் வரைததல், பூக்களினால் கோலங்கள் அமைத்தல் (புகைப்படம் - 1) ஆகிய ஆக்கச்செயற்பாடுகளில் ஈடுபடுகின்றார்கள்.



புகைப்படம் - 1: சைவமன்ற முன்பள்ளிச்சிறார்கள் நவராத்திரி விழாவின்போது கோலப்போட்டியில் ஈடுபடுதல்

4. நடனங்கள்

காவடி, கோலாட்டம், கும்மி, மீனவ நடனம், கரகம், அபிநயங்கள், ஆடலுடன்பாடல், தீப நடனம் ஆகிய நடனங்கள் முன்பள்ளிகளில் சொல்லிக்கொடுக்கப்படுகின்றன. (புகைப்படம் - 2)



புகைப்படம் - 2: கலைமகள் முன்பள்ளியில், காவடியாடும் முன்பள்ளிச்சிறுவன்

5.7 முன்பள்ளிச்சூழலும் பண்பாட்டு அம்சங்களும்

5.7.1. முன்பள்ளி அமைந்துள்ள வளாகம்

கணபதி முன்பள்ளி, மாதிரி முன்பள்ளி, இன்பருட்டி முன்பள்ளி, சைவமன்றம், கலாமன்றம் ஆகிய முன்பள்ளிகள் ஆலய வளாகங்களினுள்ளேயே அமைந்துள்ளன. (புகைப்படம் - 3), சக்கோட்டை சவேரியர் முன்பள்ளியானது, சக்கோட்டை சவேரியார் தேவாலயத்துக்கு அருகில் அமைந்துள்ளது.



புகைப்படம் - 3: 'மாதிரி முன்பள்ளி' ஆலய வளாகத்தினுள் அமைந்திருக்கும் தோற்றம்

5.8. முன்பள்ளியினுள் அமைந்துள்ள பூஜை அறை

சர்வோதயம் முன்பள்ளி, திக்கம் முன்பள்ளி ஆகியவற்றில் தனியான பூஜை அறைகள் காணப்படுகின்றன.



புகைப்படம் - 4: திக்கம் முன்பள்ளியில் காணப்படும் பூஜை அறை



புகைப்படம் - 5: சதாவதானி முன்பள்ளியில் சரஸ்வதி சிலை காணப்படுகின்றது

5.9 விழாக்களின்போது மாவிலை தோரணங்கட்டுதல் மற்றும் நிறைகுடம் வைத்தல் பண்பாடு

முன்பள்ளிகளில் நடைபெறும் விளையாடுப்போட்டி, கால்கோல் விழா, நவராத்திரி விழா, முத்தமிழ்விழா, மற்றும் தைப்பொங்கல்விழா ஆகிய அனைத்து விழாக்களின்போதும் மாவிலை கட்டுதல், தோரணங்கட்டுதல், நிறைகுடம் வைத்தல் வழக்கம் காணப்படுகின்றது.



புகைப்படம் 6: ஞானசம்மந்தர் முன்பள்ளியன் வாயிலில் மாவிலை கட்டப்படடுள்ளதையும், முகப்புச்சுவரல் திருக்குறள் எழுதப்பட்டுள்ளதையும் காணலாம்)

5.10. முன்பள்ளிகளின் சுவர்களில் காணப்படும் பண்பாட்டை எடுத்தியம்பும் ஓவியங்கள்

முன்பள்ளிகளின் உட்புறச்சுவர்களிலும், வெளிப்புறச்சுவர்களிலும் தமிழ், ஆங்கில அரிச்சுவடிகளும் பல்வேறுபட்ட ஓவியங்களும் காணப்படுகின்றன. பழங்கள், விலங்குகள், பல்வேறு தொழில் புரிபவர்கள் மற்றும் பல்வேறு கலைகள் பற்றிய ஓவியங்கள் உள்ளன.



புகைப்படம் - 7 - : சைவமன்றம் முன்பள்ளியின் சுவரில் காணப்படும் பரதநாட்டியமாடும் நங்கையின் ஓவியம்



புகைப்படம் - 8: சைவமன்றம் முன்பள்ளியின் சுவரில் காணப்படும் முன்பள்ளிச்சிறாரின் நல்விழுமியத்தை எடுத்துக்காட்டும் ஓவியம்

5.11 முன்பள்ளிகளில் காணப்படும் சமூகப்பெரியார்களின் படங்களும், அறிவுறுத்தல்களும்

ஞானசம்மந்தர் முன்பள்ளியில் பாரதியார், விவேகானந்தர், இராமகிருஸ்ணபரமகம்சர், விபுலானந்தர், நேரு, மற்றும் காந்தியடிகள் ஆகிய சமூகப்பெரியார்களின் படங்கள் காணப்படுகின்றன.(புகைப்படம் - 9) சதாவதானி முன்பள்ளி வளாகத்தில் சதாவதானி கதிரவேற்பிள்ளை அவர்களின் சிலை காணப்படுகின்றது. (புகைப்படம் - 10)



புகைப்படம் - 9: ஞானசம்மந்தர் முன்பள்ளியின் சுவரில் காணப்படும் பாரதியாரின் படம்



புகைப்படம் - 10: சதாவதானி முன்பள்ளி வளாகத்தில் காணப்படும் சதாவதானி கதிரவேற்பிள்ளை அவர்களின் சிலை

5.12. முன்பள்ளிகளில் காணப்படும் அறிவுறுத்தல்களில் வெளிப்படும் பண்பாட்டு அம்சங்கள்

சர்வோதயம் முன்பள்ளியில் பெற்றோருக்கான அறிவுறுத்தலில் பின்வரும் விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. 'ஞாயிற்றுக்கிழமை விஜயதசமியன்று, மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்படும். (பூசைப்பொருட்கள் கொண்டுவரவும், பெண் - பாவாடை சட்டை, ஆண் - வேட்டிசேட்) (புகைப்படம் - 11) சதாவதானி முன்பள்ளியிலும் விஜயதசமி கொண்டாட்டம் தொடர்பான அறிவுறுத்தல் காணப்பட்டது.(புகைப்படம் - 12)



புகைப்படம் - 11: சர்வோதயம் முன்பள்ளியில் காணப்படும் அறிவுறுத்தல்



புகைப்படம் - 12: சதாவதானி முன்பள்ளியில் காணப்படும் விஜயதசமி பற்றிய அறிவுறுத்தல்

5.13 ஆய்வு முடிவுகளின் சுருக்கம்

- முன்பள்ளிகள் அமைந்துள்ள கிராமங்கள் அவற்றிற்கென தனித்துவமான பண்பாடுகளைக் கொண்டுள்ளன.
- முன்பள்ளிச் சிறார்களின் நடத்தைக் கோலங்களில் சமயங்கள் பெருமளவில் செல்வாக்குச்செலுத்துகின்றன. அதாவது சமயங்கள் மூலம் முன்பள்ளிச்சிறார்கள்,
- நல் விழுமியங்களைப்பெற்றுக்கொள்கிறார்கள்
- கலைகளைப்பற்றித்தெரிந்துகொள்கிறார்கள்
- முன்பள்ளி ஆசிரியர்களின் வயதும் அனுபவமும் சிறார்களின் நடத்தைக் கோலங்களில் பெரிதும் செல்வாக்குச் செலுத்துகின்றன. அனுபவம் மிக்க ஆசிரியர்களி னால் பண்பாட்டுக் காரணிகளினை எடுத்துக்காட்டும் விதமான செயற்பாடுகள் முன்பள்ளிகளில் நிகழ்வதனைக் காணலாம். நவராத்திரி காலங்களில் சிறார்களிடையே கோலப்போட்டி, மாலைப் போட்டிபோன்றன நடைபெறுகின்றன.
- முன்பள்ளி ஆசிரியர்களுக்கு வழங்கப் படும் வேதனத்தில் பல்வேறு வேறுபாடுகளும் வேதனக்குறைவும் அவையும் ஒழுங்காக வழங்கப்படுவதில்லை போன்ற குறைபாடுக-ளினால் ஆசிரியர்கள் வேலையில் ஈடுபாடு இல்லாமல் இருக்கின்றனர்.
- முன்பள்ளி ஆசிரியர் கல்வி, பயிற்சிகளில் பல பிரச்சினைகள், குறைபாடுகள் காணப்படுகின்றன.

5.14 ஆய்வின் விதப்புரைகள்

- குடும்பமானது பாரம்பரியமான அம்சங்களான விளையாட்டுக்கள், உடைகள், அணிகலன்கள், உணவுகள், பண்டிகை நடைமுறைகள், விரதங்கள், சடங்குகள், விழுமியங்கள், புராண இதிகாசக்கதைகள் மரபு வழிக்கதைகள் போன்ற

விடயங்களை அவைகளின் தனித்துவங்கள் சிதறாதவகையில் சிறார்களுக்கு வழங்கவேண்டும்.

- முன்பள்ளி ஆசிரியர்கள், தாம் பண்பாட்டம்சங்களை முறையாகக்கடைப்பிடிப்பதுடன், சிறார்களுக்கு அவற்றை முறையாகக்கையளிக்க வேண்டும்.
- பாலர் நிறுவனங்களின் பொருத்தப்பாடு, ஒழுங்கமைப்பு, ஆசிரியர் கல் வித்தரம், அவர்களுக்கான கல்வி, பயிற்சி, வினைத்திறன் மிக்கதான கலைத்திட்ட ஆக்கம், சம்பளம், சலுகைகள், வளப்பகிர்வு, புத்தாக்கங்களை ஊக்குவித்தல், பொருத் தமான உட்கட்டமைப்பு இவற்றோடு இணைந்ததான முழுமையான செயற்பாடுகள் என யாவற்றையும் முடிந்தளவில் திட்டமிட்டு நடைமுறைப்படுத்துவதிலும் வழிகாட்டுவதிலும் அரசாங்கம் கரிசனையுடன் பொறுப்பேற்றுச் செயற்படவேண்டும்.
- சிறார்கள் பண்பாட்டு விழிப்புடையவர்களாக வளர்வதை ஊக்குவிக்கு முகமாக கல்வியியலாளர்கள் செயற்படவேண்டும்.
- முன்பள்ளிகள் பெரும்பாலும் சமூக நிறுவனங்களாகிய சனசமூக நிலை யங்கள், ஆலய நிர்வாகங்கள் ஆகியவற்றின் கீழேயே இயங்குகின்றன. பண்டிகைகளை முன்பள்ளிகளில் கொண்டாடுதல், கலாசார உணர்திறன் மிக்க நிகழ்வுகளை நடாத்து தல் மூலம் பண்பாட்டு அம்சங்களை சிறார்களுக்கு கையளிக்கலாம்.
- முன்பள்ளிச் சிறார்களின் நடத்தைக் கோலங்களில் ஊடகங்கள் பெரிதும் செல்வாக்குச் செலுத்துகின்றன. காலத்தின் தேவைக்கு ஏற்ப சிறார்களின் பண்பாட்டினை வளர்த்துச் செல்வதற்கான அறிவுசார்ந்த, சமயம் சார்ந்த, பண்பாடு சார்ந்த பல்வேறு விடயங்களின் ஊடாக ஊடகங்களை சிறார்களின் வளர்ச்சிக்குப் பயன்படுத்திக்கொள்வது அவசியமாகும்.

உசாத்துணை நூல்கள்

1) பக்தவத்சலபாரதி (1999) பண்பாட்டு மானிடவியல், மணிவாசகர் பதிப்பகம், சென்னை.

2) மனோன்மணி,ச.(2003) தமிழர் ஜப்பானியர் வாழ்வில் தைப்பொங்கல், கிறிப்ஸ் பதிப்பகம், கொழும்பு.

3) முன்பள்ளி ஆசிரியர் பயிற்றுனர் கைநூல் -2002, ஆரம்ப பிள்ளைப்பருவ அபிவிருத்திப்பிரிவு, யுனிசெவ், திருகோணமலை.

4) சிவத்தம்பி, கா.(2005) வடமராட்சி தெற்கு மேற்கு வரலாற்றுக்குறிப்புக்கள் சில...., புதிய கட்டடத்திறப்புவிழா சிறப்புமலர், பிரதேசசெயலகம், வடமராட்சி தெற்கு மேற்கு, கரவெட்டி.

5) சிவலிங்கராஜா, எஸ்.(1984) வடமராட்சியின் கல்விப்பாரம்பரியமும் இலக்கிய வளமும், வடமராட்சி கல்வி வட்டம், பருத்தித்துறை.

6) இராசநாயகம், ஜெ.(2009) யாழ்ப்பாண மாவட்ட முன்பள்ளிகளின் தற்போதய நிலை, அகவிழி, ரொறிங்டன் அவெனியு, கொழும்பு-7.

7) அந்தோனிமுத்து, சீ.(2008) வடமராட்சி வடக்கு(பருத்தித்துறை) பிரதேச செயலர் பிரிவில் றோமன் கத்தோலிக்க திருமறை, பிரதேச செயலக புதிய கட்டடத்திறப்புவிழா மலர், வடமராட்சி வடக்கு, பருத்தித்துறை.

8) இரகுவரன், பா. (2008) வடமராடசியில் சிறுதெய்வவழிபாடு, பிரதேச செயலக புதிய கட்டடத்திறப்புவிழா மலர், வடமராட்சி வடக்கு, பருத்தித்துறை.

தமிழராய் பிறந்தோம்
தமிழராய் வாழ்வோம்!



வடிவமைப்பு
முனைவர், பேராசிரியர் சி.இராமமூர்த்தி சட்ட ஆலோசகர்
உலகத் தமிழர் பண்பாட்டு இயக்கம்
நிறுவனர் - முதல்வர்
டாக்டர் அம்பேத்கர் சட்டக் கல்லூரி பெங்களூர் - 560021

அன்னைத் தமிழ் அழகுத் தமிழ் அருமைத் தமிழால் அற்புதத் தமிழால் அகில மக்களுக்காக வான்புகழ் வள்ளுவரால் எழுதப்பட்டு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் பின்னரும் போற்றப்பட்டும் புகழப்பட்டும் பின்பற்றப்பட்டு வரும் திருக்குறளின் மொழி செந்தமிழ் மொழி.

அன்றுத்தொட்டு இன்று வரையில் அகிலத்தில் உள்ள ஆயிரமாயிரம் மொழிகளில் மூத்த மொழியாகவும் முத்தமிழ் மொழியாகவும் முதன்மை மொழியாகவும் இந்த அகிலம் உள்ள வரை உச்சத்தில் இருந்திடும் மொழியாகவும் இருந்து வருவது இருந்திடப் போவது தன்னிகரில்லாத்தமிழ் மொழி என்பதில் ஐயமில்லை.

அகநானூறு, அருட்பா, அறநெறிச் சாரம். ஆத்திச்சூடி இனியவை நாற்பது கலிங்கத்துப் பரணி சிலப்பதிகாரம் நல்வழி நளவெண்பா நாலடியார் புறநானூறு மணிமேகலை வளையாபதி விவேக சிந்தாமணி உள்ளிட்ட இனிமைச்சுவைக்குன்றா இலக்கியச் சிகரங்களின் எண்ணிக் கையில் உயர்ந்த உன்னதமானத் தமிழ்மொழி.
ஒரு மொழி என்பதற்கு இலக்கியம் என்பது உறவாக உரமாக வளமாக வரமாக வரவாக விளங்கிடல் வேண்டும். அதே போன்று இலக்கியம் என்பதற்கும் மொழி என்பது உற்றதாக உறுதுணையாக உணர்வாக உயிர்ப்பாக ஊட்டமாகத் திகழ்ந்திடல் வேண்டும்.

வான் இன்றி வளமில்லை. வளி இன்றி உயிரில்லை என்பது போல் மொழி என்பதன்றி இலக்கியம் என்பதில்லை. அதேபோல் ஒரு மொழியின் சீர்மை செம்மை என்பதன்றி அமைவ தற்கில்லை.

'தொன்று நிகழ்ந்த தனைத்தும் முணர்ந்திடும்
சூழ்கலை வாணர்களும் இவள்
என்று பிறந்தவள் என்றுணராத
இயல்பினளாம் எங்கள் தாய்'

எனும் பாவரசர் பாரதியின் பாராட்டுப் பாட்டு மொழிக்கேற்ப பழம்பெரும் பாமொழி பைந்த மிழாகும். இதன் தொன்மைக்கும், வன்மைக்கும் நன்மைக்குமான பட்டயங்களைப் போன்று பளிச்சுறத் திகழும் இலக்கியங்களின் எண்ணிக்கை ஏராளமாகும்.

பிறமொழிச் சொற்களின் சேர்க்கையின்றி தனித்துவமுறு தமிழ்ச்சொற்களை மட்டுமே கொண்ட இலக்கியங்களைப் படைக்கவல்ல படைத்துள்ள மொழி பழந்தமிழாகும்.
தொன்மைக்குரிய மாந்த இனங்களில் மூத்தது முதன்மைக்குரியது தமிழினம் என்பது மூத றிஞர்களால் மொழியப்பட்டு, முன்னோர்களால் ஏற்கப்பட்ட முற்றிலும் சரியான முழுமையுறு உண்மையே. ஆயினும் இவ்வினம் பற்றிய செறிவான விரிவான, மூலமான, முறையான வரலாறு என்பது வரையப்படாதது ஏன்? என்பதாகிய சிலரின் வினா கொக்கி போல் தொக்கி நிற்பதையும் நாம் அறியப் பெற்றுள்ளோம் அதை எதிர் கொள்ளவும் தெரியப்பெற்றுள்ளோம்.

தகையுறு தமிழ்வாணர்களால் தரமுறத் தரப்பட்டிருக்கும் அந்த வாழ்வியல் களஞ்சியங்கள் தமிழ் தமிழினம் தமிழ்ப்புலம் சார்ந்தவையே. ஆயினும் அவற்றுள் பொதிந்திருக்கும் பொதுமை உணர்வுகள் புவியோர் யாவர்க்கும் பொருந்துவதாகும்.

யாதும் ஊரே யாவரும் கேளிர்
உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே
உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றை நிலை முறையாது கற்றல் நன்றே
எவ்வழி நல்லை ஆடவர், அவ்வளி நல்லை
வாழிய நிலனே
இன்னாதம்ம உலகம் இனியது காண்கிதன்
இயல்புணர்ந்தோரே
யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்
உலகம் தழிஇயது ஒப்பம்
அற்கா இயல்பிற்றுச் செல்வம் (அற்கா - நிலைக்காத)
உலகத்தோடு ஒட்ட ஒழுகல்
ஒன்றே குலம் ஒருவனே தேவன்

உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே
எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே யல்லாமல்
வேறொன்றறியேன் பராபரமே

இவைபோன்ற பரந்த நோக்குப் பண்பாட்டுப் பாமொழிகள் பொதுநலச் சிந்தனைகள் பொலிந்தும் மலிந்துமிருக்கும் புகழுக்குரியவை தமிழ் இலக்கியங்கள். இத்தகைய சிறப்புடையமைகளை வேறெந்த மொழிகள் இலக்கியங்கள் பெற்றிருக்கின்றன என்பது ஐயத்திற்கும் ஆய்வுக்கும் உரியதுவேயாகும்.

எதிர் வருங்காலமும் தமிழும் தமிழினமும் நிலைக்கக் கூடிய காலமாகவே இருக்க வேண்டும் என்பதுவே நமது ஏக்கமும் எதிர்பார்ப்புமாகும். தமிழும் தமிழினமும்.
இலக்கியங்களைப் படிக்க மறந்தோம். பாதுகாக்க மறந்தோம் பயன்களை இழந்தோம். பைந்த மிழுக்கேயுரிய பல்லாயிரம் சொற்களை இழக்கவும் நேர்ந்தோம் ஒரெழுத்துக்கும் பொருள், ஒரு சொல்லுக்குப் பல பொருள் எனும் உன்னதத்திற்குமுரிய உயர்தமிழ்ச் சொற்களை ஒதுக்கி உத வாத மொழிகளின் சொற்களை ஊடுருவ விட்டுவிட்டோம். இப்பழியின் விளைவுதான் மொழிச் சீர்கேடுகள் பாரம்பரியப் பண்பாடுகளுக்கும் பாதகம்.

அகிலத்தில் இன்றைய அளவில் ஆயிரக்கணக்கில் மொழிகள் இருந்து வருகிறது. இவற்றில் பண்டைய மொழிகளாக பண்பாட்டு மொழிகளாகவும் காலங்காலமாக தொடர்ந்து இன்றளவும் மட்டுமல்லாது உலகம் உள்ள வரை உன்னதமான மொழிகளாக இருந்திடப் போவது விரல் விட்டு எண்ணிடும் கணக்கில் மட்டுமே இருந்திடும்.
இவற்றில் ஒன்றாக மட்டுமல்ல நன்றான மொழியாகவும் இருந்திடப் போவது நமது இனிய இத யத்து மொழியாம் செம்மொழி செந்தமிழ் மொழியாக சிறப்போடும் சீர்மையோடும் சீரார்ந்த மொழியாம் தமிழ் இருந்திடும் என்பதில் எள்ளின் மூக்களவும் ஐயமில்லை.

இத்தகைய இனிய மொழியைத் தாய்மொழியாகக் கொண்டு உலகளவில் ஏறத்தாழ பனிரெண்டு கோடிகளுக்கும் மேலாகும். கண்ணின் இமையாகவும் இதயத்து உயிர் மூச்சாகவும் இருந்து வரும் தமிழராய் பிறந்தோம்
தமிழராய் வாழ்ந்து காட்டுவோம். வாரீர் வாரீர்



உலகத் தமிழர், பேராசிரியர் இர.ந.வீரப்பனார்

யொன்னி வீரப்பன், மலேசியா

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத் தலைவராக இருந்து தமிழ்ப் பண்பாட்டு உறவுகளை உலகத் தமிழரிடையே வளர்க்கவும், தமிழ் பயில வாய்ப்பற்ற நாடுகளின் தமிழர்களுக்கு உதவவும் அரும்பாடுபட்டு வந்தவர் திரு. இர.ந.வீரப்பன் அவர்கள்.

நக்கீர விமர்சகர், நனிசிறந்த இலக்கிய ஆய்வாளர் என்றெல்லாம் சிறப்பிக்கப்படும் திரு இர.ந.வீரப்பன் 1930-6-8 ஆம் ஆண்டில் இலங்கை கண்டிக்கருகில் உள்ள நுவரேலியோ தேயிலைத் தோட்டத்தில் பிறந்தார். இவர் குழந்தைப் பருவத்திலேயே தமிழகம் வழியாக மலேசியாவில் கோலாசிலாங்கூர் மாவட்டத்தின் இராசமுசா செம்பனைத் தோட்டத்திற்கு பெற்றோருடன் வந்தார். இந்த தோட்டப்பள்ளியிலேயே தமிழ்க் கல்வி பயின்றார்.

1942 முதல் 1945 வரை சப்பானியர் இருண்ட இராணுவ ஆட்சியில் வறுமையால் உண்ண உணவும், உடையுமின்றி வாழ்ந்திருக்கிறார். 47-1946 ஆம் ஆண்டுகளில் தோட்டத்தில் பணியாற்றிவிட்டு 49-1948 ஆம் ஆண்டுகளில் உயர்நிலைப் பள்ளியில் சனிக்கிழமைதோறும் நடைபெற்ற 6,7-ஆம் வகுப்பில் பயின்று தேர்வு பெற்றார்.

11-7-1951-ல் மணம் புரிந்து கொண்டார். துணைவியார் பெயர் திருமதி. கு.நாகம்மை. 1953-ல் தென்னமரம் செம்பனைத் தோட்டத் தமிழ்ப்பள்ளியில் ஆசிரியர் பணி செய்யத் தொடங்கியவுடன் கோலாலம்பூரிலும், கிள்ளானிலும் நடைபெற்ற ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் பயின்று 1955-ல் ஆசிரியர் பயிற்சியை முடித்தார். இவருக்கு பிள்ளைகளாக திருமதி.நா.வீ.திருமேனி பச்சையப்பன், திருமதி நா.வீ.பொன்னி கணேசன், மகன் திரு. நா.வீ.அருணன் சிந்தாமணி மற்றும் மகள் திருமதி

நா.வீ.முல்லை நாகராசு.

1959-ல் இடைநிலைக் கல்வியுடன் மலாயும், ஆங்கிலம் ஆறாம் வகுப்பும் 1972-இல் மலாய் மொழியில் மூன்றாம் படிவக் கல்வியும், ஐந்தாம் படிவத்தில் தமிழ் மொழியும், தமிழ் இலக்கியத்திலும் தேர்வு பெற்றார்.

1985-ஆம் ஆண்டு ஆசிரியர் பணியிலிருந்து ஓய்வுபெற்ற திரு இர.ந.வீரப்பன் இடைக்காலத் தலைமையாசிரியராகவும், துணைத் தலைமையாசிரியராகவும் சில ஆண்டுகள் பணிபுரிந்தார். ஆசிரியர், தலைமையாசிரியர்க்குரிய உடற்பயிற்சி உடல் நலக் கல்வி, தொழிலியல் நிர்வாக்த்திறன் பயிற்சிகளில் தேர்வு பெற்றவர் மட்டுமல்ல; பல பயிற்சிக் கருத்தரங்குகளிலும் பங்கு பெற்றவர். எனினும் தலைமையாசிரியர் பொறுப்பை ஏற்க மறுத்துவிட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

1953 முதல் 1955 வரை பல்வேறு தமிழ்த் திருமணங்களையும், சீர்திருத்த மணங்களையும் தலைமை வகித்தும், நடத்தியும் வைத்துள்ளார். குடியுரிமை, நிலம் போன்ற பொதுமக்களுக்கான நிலவுரிமைகளைப் பெற்றுத்தந்த மக்கள் தொண்டர் இவர். 1956 முதல் 1958 வரை நாடு விடுதலை பெற்ற பின்னும், முன்னும் இத்துறையில் தோட்டப்புறத் தமிழர்களுக்கான அரும்பணியில் இவர் தீவிரமாக ஈடுபட்டார்.

'சங்கமணி' இதழ் 1954-ல் நடத்திய 'மலாயாவில் வகுப்புவாதத்தை ஒழிப்பது எப்படி?' என்ற கட்டுரை போட்டியில் முதன் முதல் எழுத்துத்துறையில் பங்குகொண்டு இரண்டாம் பரிசு பெற்றார். 'தமிழ்முரசு' நாளேட்டின் புதன் மலரில் 'உழவன் முனிசாமியின் நெல் வேளாண்மைத்துறை' பற்றிய சிறப்பு பேட்டிக் கட்டுரையை அதே ஆண்டு எழுதினார். அதே சமயத்தில் அமரர் சுப.நாராயணனுடனும், அமரர் முருகு சுப்பிரமணியத்துடனும் சேர்ந்து இலக்கியத்துறையில் ஈடுபட்டதுடன் -1956ல் சனிக்கிழமைதோறும் அமரர் கு.அழகிரிசாமி நடத்திய சிறுகதைப் பயிற்சி வகுப்பிலும் கலந்துகொண்டார்.

1962-ஆம் ஆண்டு வரை இலக்கியக் கருத்தரங்குகளிலும், எழுத்தாளர் மாநாட்டிலும், திறனாய்வுக் கூட்டங்களிலும் பார்வையாளரானார். அதே ஆண்டு சிங்கப்பூரில் நடைபெற்ற பன்மொழி எழுத்தாளர் மாநாட்டிற்கு மலேசியப் பேராளராகப் போய் ஒரு வாரம் பங்கு பெற்றதுடன் இரண்டு ஆய்வுகளையும் அளித்தார்.

கோலாலம்பூரில் 1965 முதல் 1970 வரை நடந்த இலக்கியத் திங்கள் ஏடான 'பொன்னி'யின் துணை ஆசிரியராக இருந்த திரு இர.ந.வீரப்பன் அதன் அனைத்து பகுதிகளையும் நிறைவு செய்துள்ளார். காண்டேகரின் 'கிரௌஞ்சவதம்' பற்றி 'சொல்-கண்ணீர்-செயல்' என்ற தலைப்பிலும் உருவக்கதை இலக்கியம், தமிழகம், ஈழம், மலேசியா, சிங்கப்பூர் பற்றிய வரலாறுகளையும் எழுதியுள்ளார். 'பொன்னி'யில் இவர் மூன்று சிறுகதைகள் எழுதியுள்ளார். அவை ; எனக்குப் பிடிக்காத கதை, ஆறடி மண், இனியும்...! இவை பின்னர் மலேசியாவில் வெளிவந்த அன்பு இதயம், சிதைந்த ஓவியம், அமுதக்கலசம் ஆகிய சிறுகதை தொகுப்புகளில் இடம் பெற்றுள்ளன.

1962-ல் இங்கு முதன்முதலில் படைக்கப்பட்ட 'மலாய்-தமிழ்-ஆங்கில அகராதி'யைத் தொகுத்துள்ள திரு இர.ந.வீரப்பன் 1964 முதல் -1970ஆண்டுக்கிடையே மலாய்ப் பழமொழிகள், மலாயும் தமிழும், தமிழும் மலாயும், மலாய் மொழியே தேசிய மொழி போன்ற பல கட்டுரைகளை 'தமிழ் முரசி'ல் எழுதினார். தமிழ் மலர் நாளேட்டில் ஞாயிறுதோறும் பல திறனாய்வுக் கட்டுரைகளை

எழுதினார். 'புகழ் பெற்ற முன்னுரைகள்', 'டாக்டர் மு.வ. அறிஞர் பெர்னாட்ஷா', 'பாரதிதாசன் கவிதைகள்' ஆகியனவும், 'பொன்னி'யில் எழுதிய அறிஞர் அண்ணாவுக்குக் கடிதம் போன்ற தொடர் ஆய்வுகளும் சிறப்புக்கு உரியவனவாகும்.

அக்காலத்தில் மலேசியாவில் மலர்ந்த ஆசிரியர் ஒளி, காவலன், பருவம், திருமுகம், மலைநாடு, மலைமகள், உதயம் போன்ற அனைத்து இதழ்களிலும் இவர் கைவண்ணம் எழில் சிந்தியுள்ளது. அதே காலத்தில், 'சங்க இலக்கியம் முதல் இடைக்கால இலக்கியம் வரை' ஐம்பது கட்டுரைப் பாடங்களும் படைத்துள்ளார்.

1968-ல் 'ம.செ.மாயத் தேவன் இலக்கியப் பணி' என்ற நூலைத் தொகுத்தார். 'மா.இராமையாவின் இலக்கியப்பணி' என்ற நூலிலும் இவரது ஆய்வுப் படைப்புண்டு.

'பொன்னி'யில் மூன்று கவிதை எழுதியுள்ள திரு.வீரப்பன் 'தமிழ் நேசன்' நாளேட்டில் 'தேசிய இலக்கியம்' குறித்தும், 'மலாய் படைப்பாளர்கள்' குறித்தும், 'கொள்கை முழக்கம்' ஏட்டில் 1971-ல் பல மாதங்களாக 'மலேசியாவில் திராவிடர்களின் பொருளாதார நிலை' எனும் தொடர் கட்டுரை எழுதினார். '20-ஆம் நூற்றாண்டில் மலேசியத் தமிழ் இலக்கியம்', 'மலேசியத் தமிழ் நூல் வெளியீட்டுத் துறை', 'மலேசியத் தமிழர்கள்', 'மலேசியத் தமிழர் குடியுரிமைச் சிக்கல்கள்' போன்று பயன்மிக்க முப்பது ஆய்வுக் கட்டுரைகளைத் திரு.வீரப்பன் எழுதியுள்ளார்.

சங்க இலக்கியச் சிறுகதைகள் 20-ம், திருக்குறள் சிவப்பதிகாரம் உள்பட பல்வேறு ஆய்வுக் கட்டுரைகள் -30ம் இவர் படைத்த சுவைப் படைப்புக்கள். தற்காலத் தமிழ் இலக்கியம் பற்றியும், மாதாந்திர சிறுகதைத் தேர்வரங்கத்திற்கு ஓராண்டில் பத்துக்கு மேற்பட்ட திறனாய்வுகளும் எழுதியுள்ளார். 'சங்கமணி'யிலும் தொடராக எழுதினார்.'வான்கதிர்' எனும் புனைபெயரில் தமிழ் முரசு இதழின் வார மலர்களிலும் 'தமிழ் மலர்' பொன்னி ஏடுகளிலும் 63 உருவகக் கதை படைத்தவர் என்ற முறையிலும் இங்கு இலக்கியத் துறையில் பெரும் பணியாற்றியவர் திரு. வீரப்பன் அவர்களே.

தமிழர் திருநாள் கட்டுரைப் போட்டிகளில் ஆண்டுதோறும் கலந்துகொண்டு பல பரிசுகளைப் பெற்ற இவர் 'சைவத்தின் முப்பொருள் உண்மைகள்' என்ற கட்டுரைப் போட்டியில் இரண்டாம் பரிசும் பெற்றுள்ளார்.

1966-ல் கோலாலம்பூரில் நடைபெற்ற முதல் உலகத் தமிழாய்வு மாநாட்டில் கலந்துகொண்டு 'மலாய் மொழியில் தமிழ்ச் சொற்களின் செல்வாக்கு' என்ற ஆய்வைப் படைத்ததுடன் அதில் 'தனித்தமிழ்ச் சொற்கள் ஆயிரம் உண்டு' என்பதையும் இந்தளவு பிறமொழிகளில் தமிழ்ச் சொற்கள் கலந்துவிடவில்லை என்றும் எண்பித்தார்.

மதுரையில் 1981-ல் நடைபெற்ற 5-வது உலகத்தமிழ் ஆய்வு மாநாட்டில் பங்கு பெற்றதுடன் 'மலேசியாவில் மலாக்காச் செட்டிகள்' என்ற வரலாற்று ஆய்வையும் வழங்கிய வரலாற்று ஆசிரியர் இவர்.

திரு.இர.ந.வீரப்பன் படைப்புகள் 'டில்லி சுடர்', 'சென்னை இஸ்மி', 'தென் மொழி', 'நித்திலக் குவியல், 'தமிழ் நிலம்', 'பெங்களூர் திருப்பம்', 'சேலம் சங்கொலி', 'இலங்கை சுடர்', 'சுதந்திரன்', **'இளம் பிறை', 'ஈழ நாடு'** ஏடுகளிலும், தமிழக மலர்களிலும் ஆய்வுத் தொகுப்புகளிலும் சிறப்பிடம் பெற்றுள்ளன.

மலேசியத் தமிழ் இலக்கிய வரலாறு', 'தமயந்தி', 'ஐந்தடித் தமிழர்கள்', 'சங்கமம்' போன்ற நூல்களுக்கு சிறந்த ஆய்வுரை எழுதியுள்ளார்.

சிங்கப்பூர், இலங்கை, இந்தோனேசியா, தமிழகம், ஆந்திரா, கருநாடகம் முதலிய நாடுகளில் விரிவாகப் பயணம் செய்து தமிழர்களைக் கண்டு இலக்கியப் பாலம் அமைத்த திரு.வீரப்பன் தமிழ்ப் பண்பாட்டுறவுகளைப் பேணியும், கூட்டங்கள், கருத்தரங்குகள் போன்ற நிகழ்ச்சிகளில் பேருரையும் ஆற்றியுள்ள தனி சிறந்த நாவலர்.

1966-1968-க்கு இடையே மலேசிய தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் துணைச் செயலாளராகவும், அதன் இலக்கியத்துறைப் பொறுப்பாளராகவும் இருந்து அரும்பணி ஆற்றிய இவர் மா.செ. மாய்த்தேவன், மா.இராமையா, சி.வடிவேல், அமரர் சிவி.குப்புசாமி, ஐ.உலகநாதன் ஆகிய ஐந்து பேரெழுத்தாளர் கருத்தரங்குகளை நடத்தியுள்ளார்.

மலேசிய தமிழ் இலக்கியக் கழகத்தை 1970-ல் துவக்கியவர்களில் முதல்வரான திரு இர.ந.வீரப்பன் அதன் பொதுச் செயலாளராக இருந்து சிறப்பான தமிழ்ப்பணிகளை ஆற்றிவந்தார். இதன் சார்பில் ஆறு சிறப்பு மலர்கள் வெளியிட்டதுடன் நான்கு தமிழ்க்கல்வி மாநாடுகளை முன்னின்று நடத்தியவர்களில் இவர் குறிப்பிடத்தக்கவர். தமிழ் இலக்கியக் கழகம் வெளியிட்ட மலர்களில், பல நாட்டுத் தமிழர்கள் எழுதிய படைப்புகளும், உலகத் தமிழறிஞர்கள் பற்றிய விவரமும் சிறப்பிடம் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

1978-ல் மலேசியத் தமிழர் மாநாடு திரு இர.ந.வீரப்பன் தலைமையில் நடந்தது. பன்மொழி எழுத்தாளர் கலந்துரையாடல் கூட்டம் உள்பட பல கருத்தரங்குகள் இவர் பொறுப்பில் நடந்தன.

1966 முதல் 1970-வரை சென்னை மாணவர் மன்றத்தின் தமிழ்மணி புலவர் பட்டத் தேர்வை இங்கு நடத்தி பட்டமும் பரிசும் வழங்கியவர் இவர் தான். அப்போது மலாயாத் தமிழ்ப்பள்ளி ஆசிரியர் தேசிய சங்கச் செய்தி ஆசிரியராக இருந்து இப்பணியை ஆற்றினார். அதன் பின் உள்நாட்டு இலக்கியத் தேர்வான தமிழ்ப்பண்ணைத் தேர்வுகள் மூன்றாண்டுகள் வரை இவர் பொறுப்பில் நடந்தது.

1977 மற்றும் 1981-ஆம் ஆண்டுகளில் சென்னையிலும் மதுரையிலும் நடைபெற்ற உலகத் தமிழாய்வு மாநாடுகளில் உலகத் தமிழ் நூல்கள் கண்காட்சிகள் நடத்தி தமிழ் நூல்களுக்கு சிறப்பு தேடித் தந்தவர் இவர்.

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் கிளை -1976ல் மலேசியாவில் அமைத்து அதன் செயலாளராகவும், அதன் தலைமை இயக்கத்தின் தலைவராகவும் இருந்து உலகத் தமிழுறவு நடத்தி தமிழக அரசு, புதுவை அரசு, இலங்கை அரசு ஆகியவற்றின் மூலம் உலகத் தமிழரிடையே தமிழ்ப் பண்பாட்டுறவுகளை வளர்க்கவும், தமிழ் பயில வாய்ப்பற்ற நாடுகளின் தமிழர்களுக்கு உதவும் பணியில் திரு.வீரப்பனார் தீவிரமாக ஈடுபட்டுள்ளார்.

இதன் முதல் மாநாட்டை1977-ல் சென்னையிலும், 1980-ல் மொரீசியஸ் தீவிலும் நடத்தினார். 1992-ல் ஐந்தாவது உலகத் தமிழ்ப்பண்பாட்டு இயக்கம் மாநாடு சிட்னி, ஆஸ்திரேலியாவில் நடத்தினார். அனைத்துலக பேரவை மாநாடு ஜனவரி மாதம் -1995ல் தஞ்சாவூரில் நடைபெற்றது. ஆறாவது மாநாடு -1996ல் கனடா தோரோண்டோவில் திரு.செல்லையா தலைமையில் நடைபெற்றது. 1997-ல் ஜெர்மனியில் பேரவைக் கூட்டத்தை இவர் தலைமையேற்றினார்.

உலகத் தமிழ்ப்பண்பாட்டு இயக்கத்தின் வெள்ளி விழாவினை மிகச் சிறப்பாக நடத்த வேண்டி சென்னையில் ஆகஸ்ட் மாதம் 27, 28 மற்றும் 29 1999-ல் நடத்தினார். இப்பேரவைக் கூட்டத்திலும்

இவரே தலைவர் பொறுப்பை ஏற்க வேண்டும் என வலியுறுத்தினர். தனக்கு ஓய்வு வேண்டும் எனக் கூறியும் மறுக்கப்பட்டது. இம்மாநாட்டில் 3-ம் நாள் உலகத் தமிழர் 3-ம் பாகம் அவரின்றி திரு. ரஹ்மான் அவர்களால் வெளியீடு செய்யப்பட்டது. அந்நூல் புத்தக வடிவம் பெற திரு.ப.கு. சண்முகத்திற்கும் சிறப்புடன் அச்சிட்ட இளம்பிறை எம்.ஏ.ரஹ்மானுக்கும் நன்றி கூறியுள்ளார்.

தான் படித்த பத்திரிகைகள், சஞ்சிகைகள், அறிக்கைகள், துண்டு பிரசுரங்கள், நூல்கள் என்பனவற்றிலிருந்து பல குறிப்புகளை எழுதி கொண்டும், கண்ட கேட்ட செய்திகள், பொழிவுகள் குறித்து கொண்ட குறிப்புகளைப் காலப்போக்கில் நூல் வடிவமாக்கினார்.

இவர் படைத்தவை : உலகத் தமிழர் பாகம் 1986) 1), உலகத் தமிழர் பாகம் 2, உலகத் தமிழர் பாகம் 1999) 3), மலேசியத் தமிழர், பர்மியத் தமிழர், மலாய்-தமிழ்-ஆங்கிலம் அகராதி (1962), மலேசிய மொழி கற்போம், இலக்கிய இதயம், உருவகக் கதைகள், கானல்வரி, மலாய்மொழியில் தமிழ் மரபுகள், 3 நாடுகள் 60 நாட்கள், கவிவாணர் புரட்சிப்புயல், பேராசிரியர் வீரப்பனார், தென்னாப்பிரிக்காவில் 77 நாட்கள் (1993), பாவல்லேறு பெருஞ்சித்திரனார், சிறுவர் நறுஞ்சுவடி, மியாமா பெரியார், டி.எஸ், மணி, வீரப்பனார் படைப்புகள் (1999), மலேசிய மாண்புகள், நினைவும் புனைவும், என் இறைமையுணர்வுகள், தமிழர் இறைமை. மற்றும் இவர் தொகுத்து வெளியிட்டவை : திருவருட்பா, புரட்சித் திரட்டு, மலேசியத் தமிழிசைப் பாடல்கள், உலகளாவிய தமிழ், தமிழ் உலகம் அன்றுமின்றும், உலகத் தமிழ்ப்பண்பாட்டு இயக்கம் வரலாறு, மணி விழா மலர், தமிழ்ப் பேரரசு, இராவண காவியம், திருக்குறள், மும்மொழித் திருக்குறள், போன்ற 33 நூல்களைப் படைத்துள்ளார்.

தமிழ்ச் சமுதாயத்தின் பல்வேறு துறை சார்ந்த வளர்நிலையைக் குறிக்கும் வரலாற்றுப் பதிவாகக் கொண்டது இவரது ஆய்வு நூல்கள். புலம்பெயர்ந்த தமிழர் வாழ் கண்டங்களில் வாழும் தமிழறிஞர்களை, கடல் கடந்த தமிழர் வாழ்வை ஆய்ந்தறிய உதவியது இவரது நூல்கள்.

தமிழ் நிலம், மற்றும் உலகத் தமிழ்ப்பண்பாட்டு இயக்கத் தலைமையக ஏடான 'உலகத் தமிழர் குரல்'(யாழ்ப்பணம்) ஏடுகளின் உறுப்பாசிரியராக இருந்தார். சென்னை அடையாறு உலகத் தமிழாராய்ச்சி நிறுவன உறுப்பினராகவும், தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகப் பேராளராகவும் இருந்த திரு இர.ந.வீரப்பன் யாழ்ப்பணம் பல்கலைக்கழகத்திற்கும், தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்கும் மலேசிய சிங்கப்பூர் தமிழ் நூல்களை ஏராளமாக வழங்கியுள்ளார்.

சிந்தனை, சொல், செயல் எல்லாம் உலகத் தமிழர் ஒருங்கிணைப்பு, தமிழ்ப் பண்பாட்டுணர்வு வளர்த்தல், தமிழ் பயில வாய்ப்பில்லாத நாடுகளின் தமிழர்களுக்கு அந்த வாய்ப்பை வழங்குவது, வரலாறுகளைப் பிழை களைந்து புதுப்பித்தல் இன்ன பிற எல்லாமே உலகளாவிய அவாவாகக் கொண்டு அந்த உயரிய பணிகளை நாள்தோறும் ஆற்றியவர்.43 நாடுகளில் பயணம் மேற்கொண்ட இவர் 3-9-1999 மாலை 6.05க்கு ஜிப்மேர் பாண்டிச்சேரி மருத்துவமனையில் காலமானார். மொழியில்லாதது பண்பாடு அல்ல ! பண்பாடு ஊறாதது வாழ்க்கை அல்ல ! என்பார். வாழ்வியத்தின் உயிர்ப்பே ஒருவரது இறைமையின் அறம் என்பார், உலகத் தமிழராம் பேராசிரியர் இர.ந.வீரப்பனார்.

வளர் இளம் பருவத்தினருக்கு இன்றையக் கற்பித்தல் ! நாளையப் பண்பாடு!

நீலம். அருள்செல்வி,
முதல்வர், பேராசிரியர் அன்னுசாமி மேனிலைப் பள்ளி,
பாகூர். புதுச்சேரி - 607402. இந்தியா.

இந்த உலகம் அழகானது. மானுடம் அதைக் காட்டிலும் அழகானது. தனது நுண்ணறிவால், சிந்திக்கும் திறத்தால், செயலாக்கும் ஆற்றலால் மனிதன் இறைவனின் அனைத்துப் படைப்புகளிலும் மேலோங்கி நிற்கின்றான். கல்வி, வணிகம், தொழில், விவசாயம், தொழிற்நுட்பம், மருத்துவம், பொறியியல், கணிதம், அறிவியல், விஞ்ஞானம், ஆராய்ச்சி, மெய்ஞானம், சோதிடம் என்று எல்லா துறைகளிலும் அதிசயிக்கும் வண்ணம் முன்னேறிக்கொண்டிருக்கிறான் மனிதன். நாளைய உலகை ஆளப்போகின்றவர்களைச் சரியாகப் பயிற்றுவிக்க வேண்டும், கல்வி புகட்ட வேண்டும் என்பதைப் பற்றி சிந்திப்பது இன்று மிக அவசியமாகிறது.

இளம் தலைமுறையினரைச் சரியாக வளர்த்தெடுப்பது என்பது இன்றைய தேவை. அதிலும் 13 வயதிலிருந்து 19 வயதுள்ள இளைஞர்களைக் கையாளுவது கற்பிப்பது, பண்படுத்துவது என்பது மிகவும் நுணுக்கமானது. இவ்வயதில் உள்ள குமரப்பருவத்தினரை, பதின்வயதினர், வளர் இளம் பருவத்தினர் என்றுரைக்கலாம். இவர்களை எப்படி பண்படுத்துகின்றோம் என்பதைப் கொண்டே நாளைய மானுடம் அமையும். மேலும் இவ்வயதில் கற்றவைகளே, அவர்களின் வாழ்நாள் முழுவதும் அவர்களின் பண்புகளாக வெளிப்படும் என்பது ஆய்வில் கண்டறிந்த உண்மை. ஆகவே இவர்களை வளர்க்கும் விதம், கையாளுகின்ற நுட்பம், கற்பிக்கும் முறை ஆகியவற்றில் அதிக கவனம் செலுத்தியாக வேண்டும்.

வளர் இளம் பருவத்திருக்குக் கற்பிக்கும் போது கையாளவேண்டிய நுட்பமான வழிமுறைகளை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

கல்வி கற்பிக்கும் முறை, தன்னம்பிக்கை வளர்த்தல், விதிமுறைகளை உருவாக்குதல் ஆகியத் தலைப்புகள் மட்டும் இங்கு ஆய்வுப் பொருளாக ஆராயப்பட்டிருக்கின்றன.

I. மாணவர்-ஆசிரியர் உறவு மைய கல்வி.(Relationship Centered Education)

II. தன்னம்பிக்கை வளர்த்தல்.(Developing Self Confidence)

III. விதிமுறைகளை உருவாக்குதல்.(Establishing Norms)

இடைநிலைப் பருவம்:-

வளர் இளம் பருவத்தைத் திருப்புமுனைப் பருவம், மேடுபள்ளம் மிகுந்த பருவம், மாற்றத்திற்கான பருவம் என்று நாம் அழைப்பதுண்டு. காரணம் ஒரு மனிதன் தன் வாழ்நாட்களில் நான்கு மாற்றங்களுக்கு உள்ளாகிறான். அவை



இந்த நான்கு மாற்றங்களும் ஒன்றாய் ஒரே நேரத்தில் ஏற்படக்கூடிய பருவம் வளர் இளம் பருவம். நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமும் என்பதான வளர்ச்சி. இப்பருவத்தில் இவர்கள் குழந்தைகளும் இல்லை , பெரியவர்களும் இல்லை. நான் யார்தான்? என்ற குழப்பத்தில் இருக்கும் இடைக்கால பருவம் இது. என் உடல் நேற்று போல் இல்லை. நான் நேற்று போல் சிந்திக்கவில்லை, நான் நேற்று போல் உணரவில்லை, நான் நேற்று போல் பழகவில்லை, ஏன்? என்று பதறும் பருவம் இது.இவர்களைத் தட்டிக் கொடுத்து இது இயல்பானது என்றும் இந்த மாற்றத்திற்கான காரணங்களை விளக்கி, எது நடந்தாலும் உன்னுடன் நான் இருக்கிறேன் என்று கூறி நம்பிக்கை தருகின்ற பெரியவர்கள் தான் இன்று தேவை.

மாணவர் ஆசிரியர் உறவு மையக் கல்வி:-

கடந்த காலத்தில் ஆசிரியர் மையக் கல்வி (Teacher Centered Education) பிறகு குழந்தைகள் மையக் கல்வி (Child Centered Education) இன்று பல ஆராய்ச்சிகளுக்குப் பிறகு கண்டுபிடித்திருப்பது மாணவர் ஆசிரியர் உறவு மையக் கல்வி (Relationship centered Education).

"குழந்தைகளுக்கு நல்ல சூழலை அமைத்துக் கொடுங்கள் அவர்கள் கல்வியை நன்கு கற்பார்கள்" என்பது கல்வியாளர் ரூசோவின் கூற்று.

"சூழலே ஒரு மனிதனின் பண்புகளை நிர்ணயிக்கின்றது என்கிறார் மகாத்மா காந்தியடிகள்.

நமது இன்றைய வளர் இளம் பருவத்தினர் எப்படி இருக்கிறார்கள்? சற்றே யோசித்து பாருங்கள். பெரியவரிடத்தில் மரியாதை இல்லை, ஏன் அவர்களை அவர்களே மதிப்பதில்லை, அவர்களின் முடிவுகளை அல்ல முடியைக்கூட நம்மால் திருத்த முடியவில்லை என்று வருத்தம் கொள்கிறோம். உடையில் ஒழுக்கம் இல்லை , பழக்க வழக்கங்களில் பண்பு இல்லை, செயல்களில் உறுதி இல்லை, வாக்கிலே உண்மை இல்லை, தோல்வியில் துணிவில்லை , போராட்டங்களில் துணிச்சல் இல்லை, சிந்தனைகளில் தூய்மை இல்லை, கருத்திலே நேர்மை இல்லை என்று அடுக்கிக் கொண்டே செல்கின்றோம்.

- என்னைப் போன்று என் மகன் மகள் சிந்திக்க வில்லை, செயல்பட வில்லை என்று அலுத்துக்கொள்கிறோமே?
- நமது பெற்றோரைப் போல் நாம் நம் பிள்ளைகளிடம் பெற்றோராய் நடந்துக் கொண்டோமா?

- வெந்நீரை காலில் ஊற்றியது போல் இயந்திரமாய் ஓடிக்கொண்டிருகிறோமே?

"சுவாமி விவேகானந்தர் கூறியது போல் குளிர்காலத்தில் குளிர்காய சுள்ளி பொருக்க துவங்கி சுள்ளி பொருக்கி கொண்டே இருக்கும் நாம் குளிர்காலமே வந்து சென்ற பிறகும் சுள்ளிமட்டுமே பொருக்கிக் கொண்டிருக்கும் நமது தவறை சுட்டி காட்டுவது யார்?

- ஒற்றைக் குழந்தையாய் தனிமை, தனிக்குடும்பம் என்ற சிறைச்சாலை. தாய் வருவது 6 மணிக்கு, தந்தை வருவது 9 மணிக்கு, குழந்தை வீடு வருவது 3 மணிக்கு, உற்ற தோழனாய் தொலைக்காட்சிப் பெட்டி கற்றுக் கொடுப்பதெல்லாம் பண்பாட்டுச் சீரழிவு.
- குடும்பமாக அமர நேரம் இல்லை, ஏன் சந்திக்கவே நேரம் இல்லை. இதில் பேசுவதற்கும், கலந்தாலோசிப்பதற்கும், அன்பு காட்டுவதற்கும் நேரம் எங்கே இருக்கிறது.
- காலையில் பிறமொழி பயிற்சி, மாலையில் நீச்சல் பயிற்சி , அடுத்து கணக்கு வகுப்பு , இரவு கர்நாடக சங்கீதம் என்று அடுக்கடுக்காய் எத்தனை பயிற்சிகள்.
- எனது குழந்தை மருத்துவனாக வேண்டும், பொறியாளர் ஆக வேண்டும், ஆராய்ச்சியாளர் ஆக வேண்டும், என்று விரும்பும் நாம் , அவன் நல்ல மனிதனாக வேண்டும் என்பதை மறந்தே போனோம்.

இந்த சூழல் இப்படியே தொடருமானால் ஒழுக்கம்,பண்பாடு,பாரம்பரியம் ஆகியவற்றை இழக்கும் விபரீதம் ஏற்படும். இவற்றிற்கு நாம் தானே காரணம். குழந்தைகள் நன்றாகத் தான் பிறக்கிறார்கள். அனைத்து தகுதிகளும் பெற்றவர்களாகத்தான் படைக்கப்பட்டு இருக்கின்றார்கள். ஆனால் நாம் தான் அவர்களின் திறமைக்குச் சரியான பயிற்சியளிப்பதில்லை. முதலில் இதனை உணர்தல் வேண்டும். அடுத்து இதனைச் சரிசெய்ய வேண்டும். ஆங்கிலத்தில் ஒரு பழமொழி உண்டு "இருளாக இருளாக இருக்கிறது என்று குறை சொல்வதை விட ஒளி தர ஓர் மெழுகுவத்தியை ஏற்றுவது மேல்". அதன் அடிப்படையில் ஒரு மாற்றத்தைக் கொண்டுவர வேண்டும். இந்த வளர் இளம் பருவத்தினரிடம் உள்ள பண்பாட்டு மாற்றத்தை எப்படி சீர் செய்யலாம், நேர்மையான எண்ணம் படைத்தவர்களாக, விழுமியங்களைத் தங்கள் வாழ்க்கைக் கொள்கைகளாகக் கொண்டவர்களாகப் பண்புள்ளவர்களாக எப்படி சிறக்கச் செய்யலாம். பண்பாட்டிலே, பழக்க வழக்கங்களிலே மாற்றம் நிகழ்ந்திருப்பது உண்மைதான். நாமும் அதை உணரத் துவங்கிட்டோம். இவற்றை இப்படியே விட்டுவிட முடியாது. நமது பண்பாட்டை மீட்டெடுக்க வேண்டும். பற்பல ஆராய்சிகளின் மூலம் பல்வேறு இடங்களில் நடத்தப்பட்ட கள ஆய்வின் முடிவாக வளர் இளம் பருவத்தினரைப் பண்படுத்த சில வழிமுறைகளை வகுத்திருக்கின்றனர். அதனைத் தெரிந்து கொள்வதன் மூலமும் பின்பற்றுவதன் மூலமும் வளர் இளம் பருவத்தினரைப் பட்டை தீட்டிச் செம்மையாக்கலாம்.

மாணவர்-ஆசிரியர் உறவு மைய கல்வியின் நற்பலன்கள்

1. நற்பண்புகளின் வளர்ச்சி.
2. கற்றலில் மேம்பாடு.
3. தோல்வியை வெற்றியாக்கும் மனவலிமை.
4. உயர்ந்த சவால்களைப் பயமின்றி எதிர் நோக்கும் திறன்.

கெய்ன் அண்ட் கெய்ன், சில்வெஸ்டர், ஷோர் போன்ற கல்வியியல்

ஆராய்ச்சியாளர்கள் "இனிய சூழலில் தான் மாணவர்களின் கற்கும் திறன் பன்மடங்கு அதிகரிக்கிறது" என்கிறார்கள்.

மாணவர் ஆசிரியர் உறவு மைய வழிக் கற்கும் சமூகத்தை உருவாக்குவதே கற்றலை மேம்படுத்தக் கூடிய மிகமுக்கியமான அம்சமாகும். மாணவர் ஆசிரியர் உறவு மைய கற்பித்தல் என்பது கனிவான, இனிமையான, பயமற்ற, மதிப்பு மிக்க வகுப்பறைகளை உருவாக்குவது. இந்த சூழலில் மாணவர்கள் தங்களை மதிப்பு மிக்கவர்களாக உணர்கிறார்கள். இது எனது பள்ளி, இது எனது வகுப்பு, இவர்கள் எனது நண்பர்கள், இவர்கள் எனது ஆசிரியர்கள், இவர்கள் அனைவரும் எனது நலனுக்காகப் பாடுபடுகிறார்கள்.

நான் உரைக்கின்ற பதிலை என் ஆசிரியர் செவிமடுக்கின்றார் ஆதலால் என்னாலும் அரிய பதில்களை வழங்க இயலும் என்ற நம்பிக்கை இங்கே மாணவர்களுக்கு கொடுக்கப்படுகிறது. இங்கே பாடத்திட்டத்தைக் காட்டிலும், பாடங்களைக் காட்டிலும் படிப்பவர்கள் முக்கியமானவர்களாகக் கருதப்படுகிறார்கள்.

இந்த நம்பிக்கை இவர்களுக்குத் தன்னம்பிக்கையைக் கொடுப்பதோடு திறமை வாய்ந்தவர்களாகவும் ஆரோக்கியமான இளைஞர்களாகவும் நிரந்தர பண்பாளர்களாகவும் மாற்றி அமைக்கின்றது.

இங்கே ஆசிரியர்கள் மாணவர்களை நன்கு அறிந்து கொள்கிறார்கள். மாணவர்கள் ஒருவரை ஒருவர் நன்கு அறிந்துக்கொள்கிறார்கள். இதற்கான பல பயிற்சிகள் , விளையாட்டுகள் வளர் இளம் பருவத்தினருக்குக் கொடுக்கப்படுகிறது. பதில் கூறுவதற்குக் காலம் வழங்குதல். (Wait Time)7-10 வினாடிகள் கொடுக்கப்படுகிறது. தவறான பதில்கள் கூட கனிவான முறையில் களைந்தெடுக்கப்படுகிறது. தண்டிக்கப் படுவதில்லை, அவமானப் படுத்தப்படுவதில்லை. இப்படிப்பட்ட சூழல் கற்றலைப் பன்மடங்கு உயர்த்துகிறது.

பல நிகரான பதிகள் கூட ஏற்றுக்கொள்ளப்பட்டு, மாற்றி யோசிப்பதற்கான வாய்ப்புகள் வழங்கப்படுகின்றன. ஒவ்வொருவருடைய கருத்தும் மதிக்கப்படுகிறது. இது இவர்களைத் தவறான பாதையில் செல்வதைத் தடுத்து நல்ல குணம் படைத்தவர்களாக மிளிரச் செய்கிறது. இச்சூழல் வளர்இளம் பருவத்தினருக்குப் பயமின்றி உயர்ந்த சவால்களை (High Challenge and low threat) எதிர்கொள்ளும் திண்மையைத் தருகின்றது. இந்தமுறை வளர் இளம் பருவத்தினரின் செயல்பாடுகளை மென்மையாக்கி அகிம்சை வழியில் அவர்களை அழைத்துச் செல்கிறது.

II தன்னம்பிக்கை வளர்க்கும் வழிகள் (Tools to Self Confidence):-

இரண்டாவது செய்தி, வளர் இளம் பருவத்தினருக்கு தன்னம்பிக்கையை வளர்க்கும் மிக முக்கியமான பொறுப்பு ஆசிரியர்களுக்கும் பெற்றோர்களுக்கும் அதிகம் உண்டு என்ற விழிப்புணர்வை ஏற்படுத்துவதே ஆகும்.

இன்று வளர் இளம் பருவத்தினரிடையே மிகப் பெரிய குறையாய் இருப்பது தன்னம்பிக்கையின்மை மட்டுமே. இதனைச் செய்ய எனக்கு தகுதி இருக்கிறதா? என்னால் இது முடியமா? என்ற கேள்விகளே இவர்களை வெற்றிப் பாதையில் இருந்து பிரித்தெடுத்துவிடுகின்றது.

"உலகம் போற்றும் தமிழ் இதிகாசமான இராமாயணத்தில் கூட வாயு தேவனின் புத்திரரான பலம் மிக்க அனுமனுக்கு அவனது பலத்தை எடுத்துச்சொல்லி அவனால் இந்து மகா

சமுத்திரத்தை தாண்டி இலங்கையை அடைய முடியும் என்ற தன்னம்பிக்கையைக் கொடுக்க அறிவு ஜீவி ஜாம்பவான் தேவைப்பட்டார். தெரிந்தோ தெரியாமலோ இன்று வளர் இளம் பருவத்தினரிடம் உனக்கு இது தெரியாது, உன்னால் இது முடியாது , நீ இதை செய்ய மாட்டாய் என்று சொல்லி பழகி விட்டோம். இந்த பழக்கத்தை மாற்ற வேண்டும். உங்கள் சொற்களுக்கு ஆற்றல் அதிகம். "நீ என்னவாக ஆக வேண்டுமென்று நினைக்கிறாயோ அதுவாகவே மாறிவிடுவாய்" என்று சுவாமி விவேகானந்தர் கூறுவது போல், இன்று வளர் இளம் பருவத்தினருக்கு அவர்களுடைய திறன்களை உணர்த்துங்கள். அவர்களால் பற்பல சாதனைகளைப் படைக்க முடியும் என்ற நம்பிக்கையை அவர்கள் மனதில் விதைத்து அவர்களை ஊக்கப்படுத்துங்கள்.

வளர் இளம் பருவத்தினரின் தன்னம்பிக்கையை வளர்க்க முக்காலிக்கு இருக்கும் மூன்று கால்களை போல் மூன்று யுக்திகளை பெரியவர்களான நாம் பின்பற்ற வேண்டும்.

1.திறன்களை வளர்க்க உதவுதல்.

2.தன்னையும் பிறரையும் மதிக்கக் கற்றுக் கொடுத்தல்.

3.பொறுப்புகளைக் கொடுத்தல்.

இம்மூன்று உத்திகளைப் பயன்படுத்தி பெரியவர்கள் வளர் இளம் பருவத்தினரைத் தன்னம்பிக்கை மிக்கவர்களாக உருவாக்கலாம்.

அ) திறன்களை வளர்த்தல்:-

வாழ்க்கை திறன்களான, பேசுதல், வாதிடுதல், கலந்துரையாடல் , கணக்கிடுதல், ஒழுங்குபடுத்துதல், சமாளித்தல், போராடுதல், தாக்குப் பிடித்தல், சகித்துக் கொள்ளுதல், பேணுதல், பாராட்டுதல், விளக்குதல், விவரித்தல், அணுகுதல், வடிவமைத்தல், தீர்வுகாணுதல், முடிவெடுத்தல், தவிர்த்தல், தேர்ந்தெடுத்தல், நன்றிகூறுதல், வழிநடத்துதல் ஆகியவற்றைப் பள்ளியிலும், வீட்டிலும் கற்றுக் கொள்வதற்கான சூழலை ஏற்படுத்துங்கள்.

ஆ) மதிக்க கற்றுக்கொடுத்தல்:-

வீட்டில் உள்ள பாட்டி, தாத்தா, பெரியப்பா, பெரியம்மா, சித்தி, சித்தப்பா, மாமா, மாமி இவர்களை மரியாதையுடன் நடத்த பயிற்சியளியுங்கள். இவைகளுக்கு முன்பாக சரியான உணவு உண்பதன் மூலம், நல்ல உடற்பயிற்சி, யோகா, தியானம் செய்வதன் மூலம், நல்ல உடை உடுத்துவதன் வழியாக, கடமையாற்றுவதன் மூலமாக, பள்ளிக்குச் சரியான சீருடை அணிவதன் வாயிலாக, வீட்டுப்பாடம் செய்வதன் மூலமாக உன்னையே நீ மதிக்கக் கற்றுக் கொள்கிறாய் என்று பட்டைத்தீட்டுங்கள்.

இன்று தமிழர் குடும்பத்தில் ஒன்றாய், வட்டமாய் அமர்ந்து பேசுவது குறைந்து போனதால் தான் இந்த பண்பாட்டுப் பற்றாக்குறை நிகழ்ந்து கொண்டிருக்கிறது. இதனை மாற்ற வேண்டும். உலகமே இலைகளையும் மரப்பட்டைகளையும் அரையில் கட்டி பச்சையாய் கறி உண்ட காலத்தே துணி நெசவு செய்து , சமைத்து உண்டு உலகிற்கே நாகரீகம் கற்றுக் கொடுத்த இனம் தமிழினம். இவ்வினத்தில் பண்பாட்டு வரட்சி வரவிடலாமா! விழித்துக்கொள்வோம்! வெளியில் உள்ள பெரியவர்களை எப்படி அணுகுவது, எப்படி அவர்களிடம் பேசுவது, எப்படி வினவுவது, எப்படி நன்றி கூறுவது என்று கற்றுக் கொடுங்கள்.

இ) பொறுப்புகளைக் கொடுத்தல்:-

அடுத்ததாக வளர் இளம் பருவத்தினருக்குப் பொறுப்புகளைக் கொடுத்துக்

கவனியுங்கள். ஒரு வேலையும் கொடுக்காமல் இவன் பொறுப்பற்றவன் என்று கூறுவது முறையன்று. இன்று கடைக்குச் சென்று காய்கறி வாங்கி வா? அவர்கள் சொத்தையாய் வாங்கி வருவார்கள் என்று கூறுவதை விடுத்து எப்படி வாங்க வேண்டும் என்று கற்றுக் கொடுங்கள். நீ செய்ய மாட்டாய் என்று கூறுவதை விடுத்து செய்வதெப்படி என்று சொல்லிக் கொடுங்கள்.

இப்படி இம்மூன்று உத்திகளையும் கடைபிடித்தால் அவர்கள் தன்னம்பிக்கை பெற்றுச் சிறப்பது உறுதி.

III விதிமுறைகளை வகுக்கும் முறை (Establishing Norms):-

மூன்றாவதாக "விதிகளை உருவாக்குதல்"(Establishing Norms) அரசாகட்டும், அலுவலகங்கள் ஆகட்டும், பள்ளிகளாகட்டும், வீடாகட்டும் எங்கும் விதிகள் இருப்பது இயல்பே. இது போன்ற விதிகளை யார் உருவாக்குகின்றார்கள்? அரசிற்கு அதிகாரிகளும் , அலுவலகங்களுக்கு மேலாளர்களும், பள்ளிகளுக்குத் தாளாளர்களும், வீட்டிற்குத் தலைவரும் விதிகளை வகுக்கின்றனர். வளர் இளம் பருவத்தில் உள்ள மாணவர்களைப் பொருத்த வரை யாரோ வகுத்த விதி, அதை நான் ஏன் பின்பற்ற வேண்டும் என்ற போக்கு. இதனை எப்படி கையாள்வது? முடிவுகளை நீங்கள் எடுக்காமல் அவர்களிடமே விட்டு விடுங்கள். நம் வகுப்பறையில் இருந்து நீங்கள் என்னென்ன பெற்றுக் கொள்கிறீர்கள்? என்ற கேள்வியைக் தொடுங்கள். அவர்களிடம் இருந்து வரும் பதில்களைக் பலகையின் முதல் பகுதியில் பெறுதல் என்ற தலைப்பின் கீழ் குறிப்பிடுங்கள். அவர்கள் கல்வி, பண்பு, திறன், அறிவு போன்ற பதில்களைத் தரக்கூடும். இவைகளைப் பெற்றுக்கொள்ள நீங்கள் எதை யெல்லாம் தரப்போகிறீர்கள்? என்று கேட்டு அவர்களின் பதில்களை மறுபாதியில் எழுதுங்கள். அவர்கள் ஒழக்கம், பள்ளி வருகை, வகுப்பில் கவனம், நேரம் தவறாமை, சரியான சீருடை, பங்களிப்பு, ஒத்துழைப்பு என்று பலவற்றைக் குறிப்பிடுவார்கள். இவைகளை உங்கள் வகுப்பறையின் விதிமுறைகளாக்குங்கள்.

இந்த விதிமுறைகள் அவர்களால் உருவாக்கப்பட்டது. ஆகையால் அவர்கள் அதனை மீற விரும்ப மாட்டார்கள். இந்த விதிமுறைகளை அவர்களே உருவாக்கி இருப்பதால் இதனை ஆர்வத்தோடு பின்பற்ற அவர்களது கௌரவம் தடுப்பதில்லை. அவ்வபோது என்னென்ன தேவைகள் ஏற்படுகிறதோ அதற்கேற்றவாறு விதிகளை மறுபரிசீலனை செய்து கொள்ளலாம்.

இதே போன்ற விதிமுறைகளைப் பள்ளியில் மட்டுமின்றி வீட்டிலும் உருவாக்கலாம். "தொலைக்காட்சி எப்பொழுது பார்க்கலாம்? உணவு உண்ணும் நேரம் என்ன? வீட்டுப் பாடம் செய்வதெப்பொழுது?" என்று அவர்களிடமிருந்தே பதிலைப் பெற்று விதிமுறைகளை உருவாக்கலாம்.

இந்த முறை "ஆலோசனை முறை" எனப்படும். அனைவரிடமிருந்தும் ஆலோசனைகளைப் பெற்று முடிவுகளை எடுப்பதன் மூலம் , கடைப்பிடிப்பதன் மூலம் வளர் இளம் பருவத்தினருக்கு முக்கியத்துவம் கொடுக்கிறோம் என்பதை உணர்த்துகின்றோம். இதன் மூலம் அவர்களை நாம் மதிக்கின்றோம், அவர்கள் மதிப்பு மிக்கவர்கள் என்பதனை அவர்களுக்கு உறுதி செய்கின்றோம்.

"அத்தை ஊரில் இருந்து வருகிறார். அவரை நீ சென்று அழைத்து வா, அவருக்கு உன்னுடைய அறையைப் பகிர்ந்து கொடு" என்று உங்கள் முடிவுகளை அவர்களிடம் திணிக்காமல், அத்தை வருகிறார்-யார் சென்று அழைத்து வருகிறீர்கள்? என்று கேளுங்கள். எங்கே தங்க வைக்கலாம்? என்று கேளுங்கள். பெரும்பாலும் அவர்களது பதிலும்

உங்களுடைய முந்தைய முடிவாகத்தான் இருக்கும். ஆனால் இப்பொழுது அது அவர்களுடைய முடிவு.

இதைத்தான் வளர் இளம் பருவத்தினர் எதிர்பார்க்கின்றனர்."இங்கே நிற்காதே! இதை அணியாதே! இப்படி பேசாதே!" என்று எதிர்மறையாக பேசுவதைத் தவிர்த்து "அங்கே நில்! இதை அணி! இப்படி பேசு!" என்று நேர்மறையாக பேசுங்கள்.

எது சரி, எது தவறு, எது நல்லது, எது கெட்டது, எது பெரியது, எது சிறியது. என்று அறியாமல், நான் குழந்தையா, நான் பெரியவனா என்று கூட உணரமுடியாத இரண்டும் கெட்டான் நிலையில் இருக்கும் வளர் இளம் பருவத்தில் இருக்கும் நாளைய தலைமுறையினரை மேற்கூறிய மாணவர் ஆசிரியர் உறவு மையக் கல்வி, தன்னம்பிக்கை வளர்த்தல், விதிமுறைகளை வகுத்தல் போன்ற வழிமுறைகளைப் பயன்படுத்தி செம்மையாக்குவோம். இன்றைய வளர் இளம் பருவத்தினரே நாளைய தலைவர்கள். அவர்களுக்கு நற்பண்புகளைப் பயிற்றுவிப்பது மூலமாக, செப்பனிடுதல் மூலமாக நாளைய தமிழ்ச் சமூகத்தைத் திறன் நிறைந்ததாய், பண்பாடு மிக்கதாய், ஒழுக்கம் செறிந்ததாய் , உருவாக்க முடியும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

Reference

1. Lions Quest Skills for adolescence. 2007.(edi.) Authors.Susan Carroll Keister,M.A., Carol Apcki.,Cathryn Berger Kaye, M.A.,Linda Barr, M.A. Published by Secretary –SILQF.
2. Advanced Educational Psychology 2007, Chauhan S.S
3. Advanced Educational Psychology . 2002. Mangal S.K
4. Identity of the Adolescent Girl. 2006.Neerja Sharma
5. Academic Stress on Adolescents. 2013.V.Kavya Jyotsna
6. Principles , methods and Techniques of Teaching. 2010. Aggarival. J.C
7. A Comprehensive study of Education .2011. Samvel. R. S.

இன்றையச் சூழலில் தமிழ் மொழியின் எதிர்காலம் – சிக்கல்களும் விவாதங்களும்

முனைவர் அ. இலட்சுமி தத்தை
உதவிப்பேராசிரியர்
புதுவைப் பல்கலைக் கழகச் சமுதாயக் கல்லூரி
புதுச்சேரி. இந்தியா.

தொழில்நுட்பவியல் நூற்றாண்டாகப் போற்றப்படும் இருபத்தொன்றாம் நூற்றாண்டில் பொதுவாக உலகம் முழுவதும் தாய்மொழியின் தேவையைக் குறித்துப் பல விவாதங்கள் நடந்தவண்ணம் உள்ளன. இந்திய மொழிகளுள் தமிழ்மொழி மிக தொன்மையும் முதன்மையயும் கொண்டது. தமிழகத்தைப் பொருத்தவரை இருமொழிக்கொள்கை இருந்தாலும், விருப்பமொழியாகப் பிற மொழிகளைப் பயிலும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. மொழி அறிவில் அதிலும் தாய்மொழி அறிவில் நிறைவாக இருக்கும் போதுதான் பிற மொழியையும் பிற பாடங்களையும் கசடற கற்க இயலும் என்பது இன்றையப் புதிய கல்விக்கொள்கையை வழங்கிய ஹர்லாக் அவர்களின் கருத்து.

"தமிழ் இனி மெல்லச் சாகும்" என்ற பாரதியின் கூற்று மிக விரைவில் தமிழகத்தில் நடைபெற்றுவிடுமோ என்ற எண்ணம் நாளுக்கு நாள் அதிகரித்து வருவது திண்ணம். ஓர் இனத்தை அழிக்க நினைத்தால் அந்த இனத்தின் தாய் மொழியை அழித்து விட்டால் இனம் தானாக அழிந்து விடும் என்பது காலத்தின் உண்மை. இதையெல்லாம் தாண்டி நில்லா இயக்கங்கொண்டது தமிழ்மொழியாகும்.

இந்த இயக்கம் தொடர்ந்து நிகழவேண்டும் என்றால் அடுத்தத் தலைமுறையினரிடமும் தாய் மொழியானத் தமிழ் மொழியின் பற்றினையும் ஈர்ப்பினையும் உருவாக்கவேண்டும். இவ்வாய்வுக்கட்டுரை தமிழ்ப்பேசும் மாணவர்களின் தாய் மொழியில் அவர்களுக்கு இருக்கும் அடிப்படை மொழி அறிவை ஆராய்வதாக அமைகின்றது. இந்த ஆய்விற்காக மொழிப் பாடமாகத் தமிழைப் பயிலும் 100 மாணவர்களிடம் தரவுகள் கள ஆய்வின் மூலம் சேகரிக்கப் பட்டு அத்தரவுகளின் அடிப்படையிலும் ஊடகங்கள் எந்த அளவிற்கு மொழி வளர்ச்சியில் பங்கெடுக்கின்றன என்பதையும் இணைத்து இவ்வாய்வுக் கட்டுரை தன் ஆய்வுப்போக்கினைச் செலுத்துகின்றது.

தாய்மொழியின் முதன்மை:

நுண்ணிய எண்ணங்களையும் தெளிவான கருத்தோட்டங்களையும் பெற வேண்டுமென்றால் தாய் மொழிக் கல்விதான் உகந்தது, சிறந்தது. எளிய முறையில் பொருளைப் பற்றிப் பேசவும் கேட்கவும் படிக்கவும் எழுதவுமான வல்லமையைத் தரக் கூடியதாகத் தாய் மொழிக் கல்வி அமைகின்றது.

கில்போர்ட் என்ற கல்வியியல் அறிஞர் "நுண்ணறிவுச் செயல்களில் 5வகைப்பட்ட மனவியக்கங்கள் காணப்படுவதாகக் கூறுகின்றார். அறிதல், நினைவில் வைத்திருத்தல், விரிந்த சிந்தனை, குவிமுறைச் சிந்தனை, மதிப்பிடுதல் இவை ஐந்தும் வேற்றுமொழியில் பயிலும் போது உளவியலைப் பாதிக்கும் காரணிகளாகஅமைகின்றன"என்கின்றார். (மேற்கோள்.கெ.கவிதா.பக். 256)

மொழிக் கல்வியின் நோக்கங்கள்:

தேசியக் கல்விக் கொள்கை, பொதுக்கல்வி, தொழிற்கல்வி என இரண்டு நிலைகளில் செயல்படுகின்றது. இவ்விரு வகை கல்விக் காற்றலுக்கும் மொழிக் கல்வி அடிப்படையாக அமைகின்றது. கூடுதலாக,

ஆளுமையை வளர்த்தல்,

படைப்பாற்றலை வளர்த்தல்,

கலைக்கல்வி மூலம் சிந்தனைத் திறனையும் கற்பனைத் திறனையும் வளர்த்தல்,

பண்பாட்டினை வளர்த்தல்,

போன்ற தனிமனித வளர்ச்சியையும் மொழிக் கல்வியால் தான் நிறைவேற்ற முடியும். பயிற்றுமொழி எதுவாக இருந்தாலும் தாய்மொழிப் புலமையே ஒருவரை ஆளுமைப் பண்புடன் திகழச்செய்யும்.

"கற்றல் என்பது உடல்வளர்ச்சி, அறிவு வளர்ச்சி, ஒழுக்க – ஆன்மீக வளர்ச்சி, சமூக வளர்ச்சி என்ற அனைத்தையும் உள்ளடக்கியது" என்பது தாகூர் அவர்களின் கூற்று.

"சுயவெளிப்பாட்டிற்கும் தனித்தமைகளை வளர்த்துக் கொள்ளவும் மனித இனம் மேம்பாடடையவும் வாழ்க்கைப் போராட்டத்தில் வெற்றிப் பெறவும் தாய்மொழிக் கல்வி உதவும்" என்பது உலகக் கல்வியாளர் ரூசோவின் கருத்து.

||

மேற்கூறப்பட்ட கருத்துக்களை அடிப்படையாக வைத்துக்கொண்டு தமிழைத் தாய்மொழியாகக் கொண்டு தமிழகத்திலும் புதுச்சேரியிலும் தமிழ்ப்பயிலும் மாணவர்களின் அடிப்படைத் தமிழ்மொழிப் புலமை ஆய்வுசெய்யப்படுகின்றது.

இவ்வாய்வினை மேற்கொள்ள வேண்டிய அடிப்படைக் காரணம்:

- தனித்து இயங்கும் தன்மை கொண்ட தமிழ்மொழியில் ஆங்கிலக் கலப்பு அதிகரித்து வருதலும்
- தமிழ்மொழிச் சார்ந்த, தொன்மை, இனம், பண்பாடு போன்றன பற்றிய அறிதல் இன்றைய இளையத் தலைமுறையினரிடம் குறைந்து வருதலும்
- இந்தி எதிர்ப்பும் இந்திய அரசின் மத்திய பொதுக் கல்விக் கொள்கையை எதிர்ப்பதும்
- இருமொழிக்கல்விக் கொள்கையில் பயிலும் மாணவர்களின் தமிழ்ப் புலமையும் தரமும்

தரவுகளின் தரவு:

புதுவைப் பல்கலைக்கழகச் சமுதாயக் கல்லூரியில் தமிழை மொழிப்பாடமாகப் பயிலும் 100 மாணவர்களிடம் தரவுகள் சேகரிக்கப்பட்டன.

1. தனியார் பள்ளியில் படித்த மாணவர்கள்
   1.1. தமிழ்மொழி வழிப் படித்தவர்கள்
   1.2. ஆங்கில மொழி வழிப் படித்தவர்கள்.
2. அரசுப் பள்ளியில் படித்த மாணவர்கள்
   2.1. தமிழ்மொழி வழிப் படித்தவர்கள்
   2.2. ஆங்கில மொழி வழிப் படித்தவர்கள்.

இதன் அடிப்படையில் தரவுகள் பிரித்து ஆராயப்பட்டன. எழுத்துப் பிழை, திருக்குறள் அறிவு. பொது அறிவு, இலக்கிய அறிவு, மொழிப் பெயர்ப்பு அறிவு போன்ற அடிப்படை கேள்விகள் மட்டுமே கேட்கப்பட்டன. இந்தத் தரவுகள் தரும் முடிவுகள் பல கேள்விகளை முன்வைக்கின்றன.

- இளங்கலையில் மொழிப்பாடம் பயிலும் மாணவர்களின் தரவுகளில் எழுத்துப் பிழைகள் கூடுதல். இதில் அரசு, தனியார் பள்ளி என்றோ தமிழ்வழி ஆங்கிலம் வழி என்றோ வேறு பாடு இல்லை.
- குறிப்பிட்ட சில கேள்விகளுக்கு ஆங்கில வழிப் பயின்ற தனியார் பள்ளி மாணவர்கள் சரியாக விடை அளித்துள்ளனர்.
- சில கேள்விகளுக்குத் தமிழ்வழி அரசுப்பள்ளி மாணவர்களின் விடைகள் சிறப்பு.
- திருக்குறள் எழுதியவர், அதன் பொருள் எழுத வில்லை. பொருள் எழுதிக் குறள் எழுதாமல் விட்டிருக்கின்றனர்.
- வாழ்க்கையில் பயன்பாட்டில் உள்ள பழமொழிகள் குறைந்த பட்சம் மூன்றினை எழுதுவதில் மயக்கம், அதன் மொழிப்பெயர்ப்பு எழுதுவதில் சிக்கல்.
- தமிழ் மொழிப்பாடம் நீக்கி, தான் பயிலும் ஏதாவது ஒரு பாடத்தின் மூன்று கருத்துக்களைத் தமிழில் எழுதுவதில் தயக்கம்
- பொது நிகழ்வுகள், திரைப்படங்கள், தலைவர்கள் பற்றியப் பதிவுகளில் வார்த்தைகள் வாராமை.
- இறுதியாகத் தமிழ் இலக்கியங்களின் பெயர்களைப் பற்றியப் புரிதலிலும் சிக்கலே நீடிக்கின்றது.
- சிறப்புகளாகச் சில பதிவுகளும் உண்டு. தலைவர்களைப் பற்றியக் கருத்துரையில் " சேகுவாரா, ஹிட்லர், அம்பேத்கார், தன்னைப் பெற்றத் தாய் தந்தையர் என அசரவைத்துள்ளனர்.

மொத்த சதவிகித அடிப்படையில் நோக்கும் போது இக்கட்டுரையின் முதல் பகுதியில் கூறப்பட்டுள்ள மொழிக்கல்வியின் நோக்கம் நிறைவேற வில்லையோ என்று எண்ணத்தோன்றுகின்றது.

மொழிப்பாடங்களைக் கற்பித்தல்:

விருந்தே தானும்

புதுவது கிளந்த யாப்பின் மேற்றே" என்று பல நூறு ஆண்டுகளுக்கு முன்பே தொல்காப்பியர் பதிவுசெய்துள்ளமை இங்கு எண்ணத்தக்கது. பாடத்திட்டங்களைப் பன்முறை மாற்றி அமைத்தாலும் கற்பித்தலும் கற்றலும் மாறா வரையில் மொழிஅறிவும் மொழி ஆளுமையும் வளராது. மாணவர்களின் வேலைவாய்ப்பு வரை மொழிக்கற்றலில் சிக்கல் நீள்கின்றது.

புதுச்சேரி மாநிலத்தில் "எட்டாம் வகுப்பு வரை பள்ளிகளில் காட்டாயத் தேர்ச்சி" என்று அரசு நிர்ணயத்துள்ளது. இப்படிப்பட்ட நிலையில் மாணவர்களின் மொழிஅறிவை செம்மையாக வளர்க்கப் பல திட்டங்களைச் செயல்படுத்த இயலும். "இன்று தமிழர்கள் ஈடுபட்டிருக்கும் அனைத்து வேலைகளுள் சுமார் 10 சதவிகிதப் பணிகளுக்குத் தான் ஆங்கில அறிவு தேவைப் படுகின்றது. மீதமுள்ள 90 சதவிகிதப் பணிகளுக்குத் தமிழ் மொழி அறிவே தேவைப் படுகின்றது. (இரா.பரஞ்சோதி.பக்:93) இதையறியாத இளைஞர்களும் பெற்றோர்களும்தாய் மொழியானத்தமிழ் மொழியின் முதன்மைத்துவத்தை இழக்கின்றனர்.

மொழிப்பயன்பாட்டுத் தடைதான் ஒரு மனிதனின் வளர்ச்சியைப் பாதிக்கும். மொழிப்பாடமாகத் தமிழைப் பயிலும் மாணவர்களுக்கு எட்டாம் வகுப்பிற்குள்ளாக மொழியைத் தவறின்றி எழுதக் கற்றுத் தந்துவிட்டால் எழுதுவதில் ஈர்ப்பு, படிப்பதில் ஆர்வம், பேசுவதில் திறமை அனத்தும் வந்துவிடும். பாடத்திட்டப் பாடத்தை முடித்துவிடவேண்டும் என்பதற்காக மொழிஅறிவின் செம்மையைக் கற்றுத்தர தவறிவிடுகின்றோம். எழுதுவதில் ஆர்வம் வந்துவிட்டாலே மொழிக்கல்வி மட்டுமல்லாது பிற பாடங்களின் மீதும் ஈடுபாடு மிகுந்துவிடும். கூடவே கல்விக் கற்றலின் நோக்கங்களும் நிறைவேறும்.

III

கற்றல் சூழல்களும் சிக்கல்களும்:

கற்றல் கற்பித்தல் என்றவுடன் இந்தச் செயல் ஆசிரியர் மாணவர்களுக்கு மட்டும் உள்ள தொடர்பு என்று முடிவு செய்துகொள்கின்றனர். தாயின் வயிற்றுக்குள் வளர்கின்ற போதே குழந்தை கற்கத் தொடங்கிவிடுகின்றது. மனிதனின் வளர்ச்சியையும் நடத்தையும் கட்டுப்படுத்தும் காரணியாகப் புறச்சூழல் செயல்படும். ஒருவரது மரபியல் பண்புகளைத் தவிர மற்ற அனைத்தையும் மாற்றக் கூடியதும் வளர்க்கக் கூடியதுமாகச் சுற்றுச்சூழல் அமைகின்றது. குடும்பம், சுற்றுப் புறச் சமூகம், பள்ளி, அரசு இவற்றை அடிப்படையாக வைத்து கற்றல், வளர்ச்சி நிலையை எட்டும்.

சமூகச்சூழலில், தகவல் தொடர்பு ஊடகங்கள் கற்றலுக்கு அதிமுக்கியப் பங்கினை வகிக்கின்றது என்பது திண்ணம். நேர்மறை , எதிர்மறை என இரண்டு விளைவுகளையும் தரவல்லது ஊடகங்கள். அறிவியல், வராலாறு, சமூகவியல் போன்ற செய்திகளை இளம் மாணவர்களுக்குக் கொண்டு சேர்ப்பதில் இன்றைய ஊடகங்கள் செம்மைப் பணியாற்றுகின்றன.

காட்சி ஊடகங்கள்:

இன்றையக் கல்வித் திட்டத்தில் ஒலி ஒளி வழிக் கற்றல் முறையை அதிகம் பயன்படுத்தவேண்டும் என்றும் அதற்கான வழிமுறைகளையும் கல்வித்துறை எடுத்து வருகின்றது. இது மாணவர்களின் கவனத்தை அதிகம் ஈர்ப்பதற்கும் மனதில் ஆழமாகப் பதிவதற்கும் எளிதில் நினைவுப்படுத்துவதற்கும் காட்சிப் படுத்திக் கற்றல் முறை உதவியாக

இருப்பதாகக் கல்விசார் அறிவியல் ஆராய்ச்சிகள் கூறுகின்றன.

வானொலி, தொலைக்காட்சி, திரைப்படங்கள் போன்றவையும் மொழிக் கற்பித்தல் பணியினை மேற்கொள்கின்றன என்பதில் யாருக்கும் மாற்றுக் கருத்து இருக்காது. அரசியல் நிகழ்வுகள், நாட்டு நடப்புகள், கலை, விளையாட்டுச் செய்திகள், அறிவியல் உண்மைகள், சமயம் போன்ற பலதரப்பட்ட செய்திகளையும் உடனுக்கு உடன் அறிய வாய்ப்பாய் அமைவன ஊடகங்கள். அரிய பெரிய கருத்துக்களையும் தமிழ் மொழியில் கேட்டுக் கற்கும் போது மொழி வளர்ச்சியும் தொடர்பும் அதிகரிக்கின்றது.இவற்றை நேர்மறை விளைவுகள் என்று எடுத்துக்கொள்ளலாம்.

எதிர்மறை விளைவுகள் இக்கட்டுரையின் போக்கினை வடிவமைக்கின்றன. மேற்கண்ட நிகழ்ச்சிகள் தமிழ்மொழியில் ஒலிபரப்பப் படும் போது தமிழ் மொழியின் தரம் என்பது மிகப் பெரிய கேள்விக்குரியை நோக்கி நகர்கின்றது. தொலைக்காட்சிகளில் இடம்பெறும் செய்திகள், விளம்பரங்கள், நிகழ்ச்சிகள் போன்றன மறைமுகமான மொழிக் கற்பித்தலை செய்கின்றன என்பது யாவரும் அறிந்ததே.

ஆனால் தமிழகத் தொலைக்காட்சிகள் மொழிக் கற்பித்தலையோ மொழி வளர்ச்சியையோ கவனத்தில் வைப்பதில்லை.

- ஆங்கில மொழியில் நிகழ்ச்சிப் பெயர்களை வைத்தல்
- விளம்பங்களில் ஆங்கிலச் சொற்களை அதிகம் பயன்படுத்துதல்.
- செய்திவாசித்தலில் கூட குறிப்பிட்ட சில ஆங்கிலச் சொற்களை அப்படியே பயன்படுத்துதல்
    - I P S அதிகாரிகள் இடமாற்றம்.
    - டப்பிங் சுடியோ
    - பி.எட் விண்ணப்பம் விற்பனை
    - போலிசார் விசாரனை
    - டாஸ்மார்க் கடை சூரையாடல்
    - கண்ணில் லென்ஸ் பொருத்தப்பட்டது.

இது போன்ற மொழிப் பயன்பாட்டினால் ஏற்படும் அடிப்படை பாதிப்புகளாக இரண்டினைக் கூறலாம். 1.தமிழ் மொழியைத் தாய்மொழியாகக் கொண்டவர்களின் சொற்களஞ்சியம் குறையும் 2. தமிழகத்தில் வாழும் பிற மொழிக்காரர்களுக்கு இயல்பு தமிழ்ச் சொற்களின் அறிமுகமே இல்லாமல் போய்விடும்.

பொதுவாக நிகழ்ச்சிகள் குழந்தைகளையும் இளைஞர்களையும் பெண்களையும் மையப்படுத்தியே ஒலி பரப்படுகின்றன.

"ஒரு சானல் என்று இருந்த காலம் மாறி இன்று பல சானல்கள் உருவாகி வளர்ந்துள்ளன. யாரும் எளிதில் எந்த சானலையும் பார்க்கும் வசதியும் வாய்ப்பும் உருவாகியுள்ளது..... அவை இன்னும் உச்சம் பெற்றுப் பலவித கால்செண்டர்கள் தோன்ற வாய்ப்பாக அமைந்தது."(ரா.புகழ்ச்செல்வி. பக்.257) .

ஒருவனின் மொழியறிவை வளர்க்கும் முக்கியக் காரணிகளில் சமூகச்சூழலும் ஒன்று. அந்த வகையில் சமூகத்தின் மிகப்பெரிய சக்தியாக விளங்கும் ஊடகத்தின் மொழியைச் சீர்மைபடுத்தும் போது தமிழ்மொழியின் வாழ்வியல் தன்மை மேன்மையுரும்.

இருபதாம் நூற்றாண்டை இதழ்களின் எழுச்சி நூற்றாண்டு எனக் குறிப்பிடுவது போல, 21ஆம் நூற்றாண்டைஒலி ஒளி ஊடகங்களின் எழுச்சி நூற்றாண்டு என்பதில் தவறில்லை. 2000 ஆம் ஆண்டிற்குப் பிறகு புற்றீசலாகத் தனியார் நிறுவனத் தொலைக்காட்சிகளின் வருகை பெருகி உள்ளது. இவைகள் தமிழ்ப் பேசும் மக்களுக்காகத் தான் நிகழ்ச்சிகளை ஒளிப்பரப்புகின்றன. ஆனால் பிற மொழியின் ஆதிக்கம் மிகுந்துள்ளது. இதில் பணியாற்றும் பெறும்பான்மை யோருக்குத் தமிழ் மொழியில் கொஞ்சம் அறிவும் ஆங்கில மொழியில் நல்ல பயிற்சியும் இருந்தால் போதுமானது. முதன்மை மிக்க அல்லது அறிவியல் சொற்கள், ஆட்சி மொழிச் சொற்களைப் பயன்படுத்த நேரும் போது தமிழ் மொழியாக்கம் அவர்களுக்குத் தெரிவதில்லை. ஊடகத் துறையின் நேர வேகத்திற்கு இடையில் அவர்கள் மொழியாக்கம் செய்து வெளியிட தயாரகவும் இல்லை என்பதுதான் உணமை. சரியான மொழிப் பெயர்ப்புக் கிடைப்பதில்லை என்று காரணம் கூறிவிடுவதும் உண்டு.

தமிழ் மொழியில் மொழியாக்கம் செய்து வெளியிடப்பட்டுப் பழக்கத்தில் இருக்கும் இயல்பு சொற்களைக் கூட விளம்பரங்களிலோ நிகழ்ச்சிப் பெயரீடுகளிலோ பயன் படுதுவதில்லை என்பது தான் உள்ளங்கை நெல்லிக்கனி உண்மை. தமிழ்மொழி வளர்ச்சியில் அக்கறைக் கொண்ட ஒருசில தொலைக்காட்சி ஊடகங்கள் அவர்களால் முடிந்தவரை மொழிப்பெயர்ப்புகளைப் பயன்படுத்து கின்றன. ஒவ்வொரு நாளும் தகவல் ஊடகங்கள் பலவகையானச் செய்திகளை உலகின் பல்வேறு இடங்களில் இருந்து பெருகின்றன. அவ்வாறு பெரும்பொழுது மொழிப்பெயர்ப்பதில் சிக்கல்களை எதிர்கொள்ளுதல் இயல்பே.

சிக்கல்களும் விவாதங்களும்:

தவறுகளை ஞாயப்படுத்திக் கொள்வதற்கு வேண்டுமானால் சில காரணங்களைப் பதிவு செய்து கொள்ளலாம். சிக்கல்களைக் களைவதற்கு உலகத் தமிழ்ச் சமூகமே இணைந்து முன்னெடுப்புகளைஎடுத்தல் வேண்டும்.

சிக்கல்கள்:

- தமிழகத்திலுள்ள இதழ்களில் கூட சொல்லாக்கத்தைப் பயன்படுத்துவதில் உடன்பாட்டு ஒற்றுமையில்லை.
- அச்சு ஊடகங்கள் மொழிப்பயன்பாட்டில் ஒரு நிலையையும் காட்சி ஊடகங்கள் வேறு நிலையிலும் செயல்படுகின்றன.
- தமிழகம், இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளிடையே வழங்கும் பத்திரிகைத் துறைச் சொற்களில் ஒருமைப்பாடு இல்லாத நிலையையும் சுட்டிக்காட்ட வேண்டிய நிலை உள்ளது.
- தெளிந்த மொழியறிவும் மொழிப் பெயர்ப்பு அறிவும் கொண்டவர்கள் ஊடங்களில் பணியாற்றாததையும் இங்கு நோக்குதல் வேண்டும்.

விவாதங்கள்:

- பள்ளிகளில் எட்டாம் வகுப்பு வரை கட்டாய தேர்ச்சி என்ற நிலையில் ஆசிரியர்கள் தமிழ் மொழியில் ஏன் சிறப்புக் கவனம் செலுத்துதல் கூடாது.
- பாடத்திட்டத்தில் மிக முக்கிய இடத்தை மொழிப் பெயர்ப்பிற்கு வழங்குதல்.
- அந்த அந்தத் துறைக்கான மொழிப் பெயர்ப்புகளைத் தான் பயன்படுத்த

வேண்டும் என்ற அரசு ஆணைப் பிறப்பிக்க வேண்டும்.

- மொழிப்பெயர்ப்புத் துறைக்கான இளங்கலை, முதுகலை பட்டங்களைத் தஞ்சைப் பல்கலைக்கழம் நடத்துதல் போன்று தமிழகப் பல்கலைக் கழகங்கள் அனைத்திலும் மேற்கொள்ள வேண்டும்.
- மாணவர்களும் தாய் மொழியின் தனித்தன்மைகளை உணர்ந்து பயிலுதல் வேண்டும்.
- தகவல் ஊடகங்களுக்குச் சொற்களஞ்சியத்தின் வளர்ச்சி ஒவ்வொரு நாளும் கூடிக்கொண்டே செல்கின்றது. அவர்களது தேவையை நிறைவு செய்தல் தமிழர்களின் கடைமையாகும். சிறப்புச் சொற்களின் உருவாக்கங்களைத் தகவல் ஊடகங்களுக்கிடையே அடிக்கடிப் பரிமாற்றம் செய்து கொள்ளுதலுக்கு ஒரு நிலையான ஏற்பாட்டினைச் செய்தல் வேண்டும்.
- தகவல் ஊடகங்களின் தேவைக்கேற்ற கலைச் சொல்லாக்கத்தினை அனைவரும் கூட்டுறவு அடிப்படையில் முனைப்பான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.
- ஊடகங்களில் முறையான தமிழ்ப் பயிற்சி உள்ளவர்களுக்கு மட்டுமே முதன்மை அளித்தல் வேண்டும்.
- தமிழைப் பாதுகாக்க வேண்டுமென்றால் தமிழ் மொழி அறிவுடன் பிற மொழியையும் அணுகினால் வெற்றி நிச்சயம்.

குறிப்பு நூல்கள்:

1. தமிழ் வழிக் கற்றல் – கற்பித்தல் புதிய உத்திகள். 2007 1.2.3.4.தொகுதிகள். கலைஞன் பதிப்பகம். சென்னை.
2. உலகத் தமிழியல் ஆய்வு வளர்ச்சிக் கருத்தரங்க ஆய்வு மாலை.(தொ.1) 2003. ஆத.முத்தையா.(ப.ஆ).ஏவிவி கல்லூரி. பூண்டி.
3. தமிழிலக்கிய வகைமையியல். (தொ.2). 2005. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம். சென்னை.
4. மாணவர்களின் படித்துணர்திறன்; சிக்கல்களும் தீர்வுகளும். ஆய்வேடு. 2015. தமிழரசி சுப்பிரமணியம். தமிழ் இலக்கியத்துறை. சென்னை.
5. தமிழ் வழிக் கற்றல் – கற்பித்தல் வளர அரசின் பங்கு. (க)(தொ.3)2007. முனைவர் இரா.பரஞ்சோதி. கலைஞன் பதிப்பகம். சென்னை.
6. தமிழ் வழிக் கற்றல் – கற்பித்தலில் புதிய உத்திகள் -ஊடகம் (க)(தொ.3) 2007. முனைவர் இரா.புகழ்ச்செல்வி. கலைஞன் பதிப்பகம். சென்னை.

விபுலாநந்த அடிகளாரின் அரிய கையெழுத்துப் படிகள், மடல்கள் உணர்த்தும் செய்திகள்

முனைவர் மு. இளங்கோவன்
பட்டமேற்படிப்பு மையம், புதுச்சேரி அரசு
muelangovan@gmail.com

இலங்கை நாடு ஈன்றெடுத்து வழங்கிய தமிழ்ச்சான்றோர்களுள் குறிப்பிடத்தக்கவர் விபுலாநந்த அடிகளார் ஆவார். அடிகளாரின் தமிழ் இலக்கியப் பணிகளும், சமயப் பணிகளும் பல திறத்தனவாக உள்ளன. படைப்பாசிரியராகவும், மொழிபெயர்ப்பாளராகவும், இதழாசிரியராகவும், சொற்பொழிவாளராகவும், கல்வியாளராகவும். சமயத் துறவியாகவும் விளங்கும் விபுலாநந்த அடிகளாரின் வாழ்க்கை குறித்து, நூல்கள், மலர்கள், தொகுப்புகள், ஆவணப்படங்கள் எனப் பல வெளிவந்திருப்பினும் அடிகளாரின் அரிய கையெழுத்துகள், மடல்கள் இன்னும் அறிஞர் உலகத்தால் வெளிப்படுத்தப்படாமல் உள்ளன.

விபுலாநந்த அடிகளார் செயல்திறம் மிக்க ஆளுமை உடையவராக விளங்கிய காரணத்தால் அலுவலகம் சார்ந்தும், ஆய்வு சார்ந்தும், உறவு சார்ந்தும், நட்பு சார்ந்தும் பல நூறு மடல்கள் எழுதியிருக்க வாய்ப்பு உண்டு. பல ஊர்களுக்குச் சென்று சொற்பொழிவாற்றும் வாய்ப்பினைப் பெற்றவர் ஆதலால் அந்த அந்த நிறுவனங்களின் விருந்தினர் வருகை ஏட்டில் தம் எண்ணங்களைப் பதிந்துவைக்கும் வாய்ப்பும் அடிகளாருக்கு வாய்த்துள்ளது. எனவே இவற்றையெல்லாம் தொகுத்துப் பார்க்கும்பொழுது அடிகளாரின் பன்முக ஆற்றலும், செயல்பாடுகளும் வெளியுலகிற்குத் தெரிய வாய்ப்பு உண்டு. பார்வைக்குக் கிடைத்த சற்றொப்ப இருபதுக்கும் மேற்பட்ட மடல்கள், கையெழுத்துக் குறிப்புகளைக் கொண்டு அடிகளாரின் மடல் இலக்கியச் செய்திகளை இந்தக் கட்டுரை எடுத்துரைக்க முனைகின்றது..

விபுலாநந்த அடிகளார் மடல்கள் அறிமுகம்:

விபுலாநந்தரின் மடல்கள் என்பவை அஞ்சல் அட்டைகள், உறைகளில் உள்தாள் இணைத்து எழுதப்பட்டனவாக உள்ளன. கையெழுத்திலும், தட்டச்சிலும் சில மடல்கள் உள்ளன. முதலில் கையால் எழுதிப் பின்னர் தட்டச்சிட்டு அனுப்பும் முறையையும் விபுலாநந்தரின் மடல்கள் காட்டுகின்றன. எழுதும் நாள், இடம் குறிப்பிடுவது இவர் வழக்கம். இராமகிருஷ்ண மடத்திலிருந்து எழுதிய மடல்களில், அச்சிட்ட மடல்தாள்களில் அடிகளார் எழுதியுள்ளார். அஞ்சல் அட்டையில் ஒரு பக்கம் மட்டும் அமைந்தனவாகவும், இரண்டு பக்கங்களும் எழுதப்பட்டனவாகவும் மடல்கள் உள்ளன. பெயர்சுட்டியும், உறவு

விளித்தும் அடிகளார் மடலினைத் தொடங்குவது வழக்கம். ஆசி வழங்குவது இவரின் மடல் தொடக்கமாக இருக்கும். அடிகளாரின் மடல்களில் அவர் எந்த எந்த ஊர்களில் எந்த நாள்களில் இருந்துள்ளார், யார் யாரைச் சந்தித்துள்ளார், எங்குத் தங்கியுள்ளார் என்ற விவரங்கள் கிடைக்கின்றன.

விபுலாநந்த அடிகளார் தம் அன்பு மாணவர் பேராசிரியர் க. வெள்ளைவாரணனார், தம் அன்புச்சகோதரி, திருவாளர் சுந்தரம் பிள்ளை, உ.வே.சாமிநாதையர் மறைவுகேட்டு, அவர் மகனுக்கு எழுதி மடல், புதுக்கோட்டை சிதம்பரம் செட்டியார் என இவர்களுக்கு எழுதிய மடல்களையும் மேலைச்சிவபுரி கணேசர் செந்தமிழ்க் கல்லூரி, கொப்பனாப்பட்டு கலைமகள் கல்லூரி ஆகியவற்றின் பார்வையாளர் சுவடியில் எழுதப்பட்ட குறிப்புகளை மட்டும் அடிப்படையாகக் கொண்டு இக்கட்டுரை உருவாகின்றது.

வெள்ளைவாரணத்திற்கு எழுதிய மடல்கள்:

பேராசிரியர் க. வெள்ளைவாரணன் அவர்கள் விபுலாநந்தரிடம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பயின்ற மாணவராவார். பின்னாளில் யாழ்நூலினை விபுலாநந்தர் எழுதத் தொடங்கியபொழுது, அதன் உருவாக்கத்தில் பெரும்பங்கு வகித்தவர். வெள்ளைவாரணருக்குப் பல மடல்களை அடிகளார் எழுதியுள்ளார். பல ஊர்களிலிலிருந்தும் இவருக்கு மடல்கள் எழுதப்பட்டுள்ளன. தொடர்ந்து எழுதியுள்ள மடல்களின் துணைகொண்டு இருவருக்கும் இருந்த தொடர்பினை நன்கு உணரலாம். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் வெள்ளைவாரணருக்குப் பணி கிடைப்பதற்கு விபுலாநந்தர் எழுதிய பரிந்துரைக் கடிதமும்(18.04.1943) இங்குக் கவனத்தில் கொள்ள வேண்டிய ஒன்றாகும். இந்தப் பரிந்துரைமடல் ஆங்கிலத்தில் உள்ளது. வெள்ளைவாரணன் தம் மாணவர் என்றும், அவர்தம் கல்வித்தகுதியை எடுத்துரைப்பதாகவும், அவரைப் பணியமர்த்த தாம் அழுத்தமாகப் பரிந்துரைப்பதாகவும் இந்த மடலில் விபுலாநந்த அடிகளார் குறிப்பிட்டுள்ளார். இந்த மடலின் வரிகள் சில எழுதி, அடிக்கப்பட்டுள்ளமையை இங்குக் கவனத்தில் கொள்ள வேண்டும். எனவே இந்த மடலைத் தட்டச்சிட்டு, உரியவர்களுக்கு அனுப்பியிருக்க வாய்ப்பு உள்ளது. எனவே இதனை மூல மடலாகக் கொள்ளுதல் வேண்டும். பரிந்துரைக் கடிதம் என்று குறிப்பிடுதல் பொருத்தமாக இருக்கும்.

வெள்ளைவாரணத்திற்கு 08.09.45 நாளிட்டுப் புதுக்கோட்டையிலிருந்து எழுதிய மடலில் தம் சென்னைப் பயணம் குறித்து எழுதியுள்ளார். சென்னை சென்று திரும்பும்பொழுது அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திற்கு வர விரும்புவதை அடிகளார் இந்த மடலில் தெரிவித்துள்ளார். அடிகளார் தொடர்வண்டியில் பயணம் செய்வதை வழக்கமாகக் கொண்டிருந்தவர். தம் பயண ஒழுங்குகளை முன்கூட்டியே எழுதி, வருகையைத் தெரிவிப்பது அடிகளாரின் இயல்பாக இருந்துள்ளமையை இம்மடல் நமக்குக் காட்டுகின்றது.

29.08.1944 நாளிட்டு, கொழும்பு வெள்ளவத்தை இராமகிருஷ்ண மடத்திலிருந்து, வெள்ளைவாரணருக்கு, அண்ணாமலைப் பல்கலைக்கழக முகவரிக்கு எழுதிய மடலில், தமக்கு இலங்கைப் பல்கலைக்கழகத்தில் பணி மிகுதியாக அமைவதால் தக்க அன்புடையவர்களுக்கு மடல் எழுத முடியாமல் உள்ளதை நினைத்து வருந்தி எழுதியுள்ளார். தம் நண்பரின் மகள் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் படிப்பதைக் குறிப்பிடும் அடிகளார், அவருக்கு உதவ வேண்டுவதை, « எனது நண்பர் யாழ்ப்பாணம் திரு.

இராமநாதன் அவர்களது புதல்வி செல்வி. ஜகதாம்பாள் அங்குள்ள இசைக்கல்லூரியிலே பயின்று வருவதாக அறிகிறேன். நோய் முதலிய துன்பம் நேரின் உதவிபுரிந்து சிறுமியுடைய நலத்தைக் குறித்து இடையிடையே எனக்கு அறிவிப்பீர்களாக" என்று எழுதுவதிலிருந்து அடிகளாரின் அன்புள்ளம் வெளிப்படுகின்றது.

31.03.1943 இல் விபுலாநந்த அடிகளார் பேளூர் மடத்திலிருந்து வெள்ளைவாரணருக்கு எழுதிய மடல் பல அரிய செய்திகளைத் தெரிவிக்கின்றன. பேளூரிலிருந்து எழுதிய மடலில், தாகூரின் சாந்திநிகேதன் செல்ல உள்ள குறிப்பும், பேளூரிலிருந்து சென்னை வர உள்ள செய்தியும் இந்த மடல் தாங்கியுள்ளது.

கோவை இராமகிருஷ்ணா மிஷனிலிருந்து 27.04.42 ஆம் நாளிட்டு அடிகளார் வெள்ளைவாரணனாருக்கு ஒரு மடல் எழுதியுள்ளார். இந்த மடலில் தாம் சென்னை செல்ல உள்ளதையும், அங்கிருந்து வேலூர் மாவட்டம் நாட்டறம்பள்ளி செல்ல உள்ளதையும் தெரிவித்துள்ளார். பின்னர் தஞ்சை வந்து, அங்கிருந்து சிதம்பரம் செல்வது கருத்து என்று குறிப்பிடும் அடிகளாரின் தொடர்ப்பயணங்களை இம் மடல் தெரிவிக்கின்றது. அடிகளார் நாட்டறம்பள்ளி சென்றமையை இம்மடல் குறிப்பதைக் கொண்டு, நாட்டறம்பள்ளிக்குச் சென்று மேலதிக விவரங்களைப் பெற முயன்றேன். ஆனால் அங்குள்ள இராமகிருஷ்ண திருமடத்தில் பழைய குறிப்புகள் எதுவும் கிடைக்கவில்லை. ஆனால் சில விவரங்களை அங்குள்ள துறவியரிடம் பெற முடிந்தது. நாட்டறம்பள்ளியில் மிகப் பின் தங்கிய வகுப்பு மக்கள் புலவு உணவுக்காகவும் வேறு பல காரணங்களுக்காகவும் மதம் மாறிய சூழலில், இந்து மதத்தில் அவர்களைத் தங்க வைக்க இராமகிருஷ்ண மடத் துறவியர்கள் பல விழிப்புணர்வுச் செயல்களில் ஈடுபட்டதை அறிய முடிந்தது. அந்த வகையில் விபுலாநந்தரின் நாட்டறம்பள்ளிப் பயணம் இருந்திருக்கவேண்டும். மேலும் நாட்டறம்பள்ளியில் தங்கியிருந்த கேதாரேஸ்வராநந்த சுவாமிகளைச் சந்திப்பதை நோக்கமாகக் கொண்டும் விபுலாநந்த அடிகளார் நாட்டறம்பள்ளி சென்றுள்ளார்.

கோவை இராமகிருஷ்ணா மிஷனிருந்து 2.6.42 நாளிட்டு அடிகளார் வெள்ளைவாரணனாருக்கு எழுதிய மடலில் அவரின் பயணத்திட்டங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. கோவையிலிருந்து, 'திருப்பூர் போய், திருப்பராய்த்துறை சென்று, செட்டிநாட்டில் ஆவினிப்பட்டி, லக்ஷ்மிபுரம், புதுக்கோட்டை' போகவேண்டியுள்ளதைக் குறிப்பிட்டுள்ளார். இந்த மடலின் வழியாக விபுலாநந்தரின் சென்னை வானொலி நிலையப் பேச்சுத் தொடர்பான குறிப்பினை அறிய முடிகின்றது. திருச்சிராப்பள்ளியை அடுத்த திருப்பராய்த்துறை இராமகிருஷ்ண தபோவனத்துடன் அடிகளாருக்கு நல்ல தொடர்பு இருந்துள்ளதை இந்த மடல் நமக்கு உறுதிப்படுத்துகின்றது. தபோவனத்தை உருவாக்கிய சித்பவானந்தரும், விபுலாநந்தரும் நல்ல நட்புநிலையில் இருந்துள்ளனர். தபோவனம் தொடங்கப்பட்டபொழுது விபுலாநந்தர் தொடக்கவிழாவில் கலந்துகொண்டமையும் இங்குக் கவனத்தில்கொள்ள வேண்டும். அடிகளாரும், சித்பவானந்தரும் இணைந்து கயிலைக்குச் சென்றுவந்தவர்கள் என்பதையும் இங்குக் கவனத்தில்கொள்ளவேண்டும்.

24.11.42 நாளிட்டுப் பேளூரிலிருந்து அடிகளார் எழுதிய மடலில் யாழ்நூல் உருவாக்கம் குறித்த பல விவரங்கள் உள்ளன. சங்கீத இரத்தினாகரம் என்ற நூலினைப் படிக்க நினைத்தும் அப்பொழுது நடைபெற்ற உலகப்போர் காரணமாக நூல்கள் பாதுகாப்புக்காக வேறிடம் சென்றுவிட்டதை அடிகளார் குறிப்பிட்டுள்ளார். உலகப் போரின்பொழுது நூலகங்கள், அச்சுக்கூடங்கள் பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயர்ந்துள்ளமையை

இம்மடல் தெரிவிக்கின்றது. யாழ்நூல் படி எடுத்தல், கருவி நூல்களைத் திரட்டல், அச்சிடுதல், போன்ற பணிகளில் அடிகளார் தொடர்ந்து ஈடுபட்டுள்ளமையைப் பல மடல்கள் தெரிவிக்கின்றன.

விபுலாநந்தரின் உடல்நலிவுற்ற நேரத்து மடல்

அடிகளார் எழுதிக் கிடைத்துள்ள கடிதம் ஒன்று அவரின் உடல்நலிவுற்ற நிலையைத் தெரிவிக்கின்றது. ஒரு பக்கம் மட்டும் கிடைத்துள்ள கடிதத்தின் முதல் பகுதி கிடைக்கவில்லை. கிடைத்த பகுதியில் அவரின் உடல்நலிவும், நல் உணவு கிடைக்காமல் துன்பப்படுவதையும் தெரிவிக்கின்றது. இந்த மடலின் உள்ளடக்கச் செய்திளைப் பார்க்கும்பொழுது தம் சகோதரிக்கு அடிகளார் எழுதிய மடலாகத் தெரிகின்றது. அடிகளாருக்குப் பக்க வாத நோய், மற்றும் கடுங்காய்ச்சல் ஏற்பட்டு இருந்தமையைப் பிற சான்றுகளால் அறியமுடிகின்றது. எனவே இத்தகையை சூழலில் ஆறுதல் பேச்சையும், வாய்க்குச் சுவையான - சத்தான உணவையும் அடிகளார் விரும்பியுள்ளார். தனி வீடு எடுத்துத் தங்கி, உடல்நலத்தைப் பாதுகாக்க விபுலாநந்த அடிகளார் விரும்பியுள்ளதைப் படிக்க நேரும்பொழுது நம் கண்ணில் நீர்த்துளிகளைச் சிந்தவிடுவதாக இம்மடல் அமைகின்றது.

".... கொழும்பிலே சத்துள்ள சாப்பாடு கிடையாது. அதிலும் ஆச்சிரமத்திலே சுத்தமான பசுவின் பால், தயிர், நெய் கிடைக்காது. இதற்காகவே தனிவீடு எடுத்திருப்போம் என்று நினைத்து அதற்காக வேண்டிய முயற்சி செய்துகொண்டிருக்கிறேன். வீடுகட்டப்படுகிறது. ஆவணி மாதம் வீடு ஆயத்தமானதும் நீவந்து ஒரு மாதம் அல்லது இரண்டு மாதம் இருந்து நல்ல சாப்பாடு தந்தால் தேகம் பழையபடி நல்ல நிலையை அடையும்.

இங்கு வரும்பொழுது பெலக் குறைவினால் பேனைபிடித்து எழுதுவதும் சிரமமாகவிருந்தது. வந்து பன்னிரண்டு நாட்கள் ஆகின்றன. நண்பர்கள் எழுதும் காகிதங்களுக்கு எல்லாம் என் கையினாலேயே மறுமொழியெழுதுகிறேன். நான் இவ்விடம் ஆறுதலுக்காக வந்திருக்கிறேன் என்பதை நினையாது தங்கள் கருமத்தைப் பேச வருவோர்களும், காகிதம் எழுதுவோர்களும் சிரமத்தையுண்டுபண்ணி டாக்டர் தருகிற மருந்தின் பிரயோசனத்தினைக் குறைவுபடுத்துகிறார்கள். மத்தியான உணவின் பின் சிறிதுநேரம் நித்திரை செய்ய வேண்டும். அண்ணாமலை சர்வகலாசாலை மாணவன் ஒருவன் வந்து இதுவரையும் பேசிக்கொண்டிருந்துவிட்டு இப்பொழுதுதான் போகிறான். இந்தக் கடிதம் இன்று எழுதாவிட்டால் உன்னுடைய மனமும் ஆறுதலடையாது. இந்த இரண்டு அலுவல்களினாலும் மத்தியான நித்திரை கெட்டுப்போய்விட்டது.

உணவுக்குறைவும் ஆறுதற்குறைவும்தான் எனக்குள்ள வருத்தம். இந்தியாவுக்குப் போனேன். அங்கும் ஆறுதல் கிடைக்கவில்லை. கச்சான் காற்று காலங்கழித்து ,மட்டக்களப்புக்கு வந்தாலும் சட்டசபைக்கு போகவிரும்பும் நண்பர்களும் பிறரும் வந்து ஓயாத தொல்லை கொடுப்பார்கள். பெரிய மனுஷன் என்று பேர்வாங்கினால் இத்தகைய துன்பம் இருந்தே தீரும். நல்ல உணவும் ஆறுதலுந்தான் வேண்டியன. அதிலும் உணவுதான் பிரதானம். ஆண்டவனுடைய கிருபையினால் ஆவணி மாதம் வீடு வசதிப்படும் .." « என்று தம் நிலையை மடலில் பதிவுசெய்துள்ளார்.

தமிழ்த்தாத்தா உ.வே.சாமிநாதையரின் மறைவுகுறித்து எழுதிய மடல்

1942 ஆம் ஆண்டு தமிழ்த்தாத்தா உ.வே.சாமிநாதையர் இயற்கை எய்திய செய்தியறிந்து, அவரின் மகன் கல்யாணசுந்தர ஐயர் அவர்களுக்கு விபுலாநந்தர் எழுதிய மடல் அரிய மடலாக நம் பார்வைக்குக் கிடைத்தது. வேலூர் மாவட்டம் நாட்டறம்பள்ளியில் விபுலாநந்த அடிகளார் தங்கியிருந்தபொழுது, திருக்கழுக்குன்றத்தில் இருந்த கல்யாணசுந்தர ஐயர் முகவரிக்கு எழுதியுள்ள மடலில், கொப்பனாப்பட்டுக்குத் தாம் சென்றிருந்தபொழுது, உவே.சாவின் மறைவுச் செய்தியை மெய்யப்ப செட்டியார் வழியாக அறிந்ததாகக் குறிப்பிடும் விபுலாநந்த அடிகளார் உ.வே.சாவுக்கும் தமக்குமான நட்பையும், உறவையும் கீழ்வருமாறு பதிவுசெய்துள்ளார்.

" .... சங்கத் தமிழமிழ்தினை உலகிற்களித்த பெருந்தகையாரது பிரிவு அவ்வமிழ்தினைச் சுவைத்த தமிழன்பர் குழுவினை ஆறாத் துயரில் அமிழ்த்துகின்றது..

தமிழ் வளர்த்த மதுரை மாநகரிலே ஐயா அவர்களுக்குப் பொற்கிழியளித்த வைபவத்தைக் காணும்பொருட்டு, நண்பர் திரு. T.C. ஸ்ரீ நிவாசையங்காரவர்களது அழைப்புப் பெற்று ஈழத்திலிருந்து வந்தேன். அன்றும் சங்க விழாக் கூட்டங்களிலும் ஐயா அவர்களது அன்புரை பெற்று அகமகிழ்வெய்தினேன். சென்னைப் பல்கலைக்கழகத்தின் சார்பாகிய கூட்டங்கள் சிலவற்றிலே உடனிருக்கும் பேறுபெற்றேன். ஆறாண்டுகளின் முன்னே சென்னைப் பல்கலைக்கழகத்து மண்டபத்திலே (senate House) யான் சில விரிவுரைகள் செய்தபோது, ஒருநாட் சமூகமாக விருந்து என்னைக் கௌரவித்தார்கள்.

இந்நினைவுகளெல்லாம் வாழுநாளெல்லை வரையும் நெஞ்சிற் பிரியாது கிடக்கும் நீர்மைய. முத்தமிழ் கற்றாரது பிரிவு பாலைச்சுரத்தினைப் போலக் கடத்தற்கரியது என ஔவைப் பிராட்டி கூறினாள். அவ்வுண்மையை இன்று உணருகின்றேன்.

வாணாளும், அறிவும், புகழும் நிறைவெய்தித் தங்களருமைத் தந்தையார் வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தார்கள். ஆதலின், வானுறையுந் தெய்வத்துள் வைக்கப்பட்டார்கள்" என்று தம் அன்புடைமையை எழுதி, உ.வே.சாமிநாதையரின் தமிழ்ப்பணிகளை அடிகளார் நினைவுகூர்ந்துள்ளார்.

மேலைச்சிவபுரி கணேசர் செந்தமிழ்க் கல்லூரி

28.04.1932 நாளிட்டு, மேலைச்சிவபுரி கணேசர் செந்தமிழ்க்கல்லூரியின் விருந்தினர் பதிவேட்டில் அடிகளார் எழுதியுள்ள குறிப்பு அந்நாளைய மேலைச்சிவபுரிக் கல்லூரியின் சிறப்புகளையும் பெருமைகளையும் அறிந்துகொள்வதற்குப் பேருதவிபுரிகின்றன. கல்லூரியில் உள்ள நூலகச் சிறப்பு, கல்லூரியின் நோக்கம், கல்லூரியை உருவாக்கி நடத்தும் நகரத்தார் சமூக மக்களின் தமிழ் ஈடுபாடு, பண்டிதமணி கதிரேசனாரின் புலமைத் திறம் யாவற்றையும் நினைவுகூர்ந்து அடிகளார் பின்வருமாறு தம் கருத்தைப் பதிவுசெய்துள்ளார்.

'...புதுக்கோட்டை சமஸ்தானத்தைச் சேர்ந்த மேலைச்சிவபுரியென்னும் நகரத்திலே சைவத்தையும், தமிழையும் வளர்க்கும் பொருட்டாகத் தன வணிக மக்களால் நிறுவப்பெற்றுச் செவ்வனே நடைபெற்று வருகின்ற சமரச சன்மார்க்க மெய்ந்நெறிக் கழகமாகிய சன்மார்க்க சபையின் இருபத்து மூன்றாவது ஆண்டு நிறைவு விழா ஆங்கிரஸ ௵ சித்திரை ௴ 12,13 ஆம் தேதிகளில் நிறைவேறியது.

இவ்விரு தினங்களிலும் ஆன்றவறிவின்மிக்க தமிழ்ப் புலவோர் பலர் அரிய பெரிய ஆராய்ச்சித் துறைகளிலே விரிவுரை நிகழ்த்தினார்கள். சபையைச் சேர்ந்த கணேசர் செந்தமிழ்க் கலாசாலை மாணவர் இன்னிசை கீதம்பாடிச் சபையை மகிழ்வித்தனர். மாணவருள்ளே சிறப்புறத் தேர்ச்சியெய்தினோருக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. இந்நிகழ்ச்சிகள் நடந்தேறிய விழாக்கூட்டத்திற்குத் தலைமையாயிருந்து, உள நிறைந்த மகிழ்ச்சியோடு மாணவர், ஆசிரியர், தமிழ்ப் புலவர், நகரத்துப் பெருமக்கள் என்னும் நாற்பாலரோடும் அளவளாவி இச்சபை இயற்றி வருகின்ற நன்முயற்சியை ஒருவாறு அறிந்துகொண்டேன். தமிழ்க் கல்வி சாலச்சிறந்தது; அதன் வழித்தாகிய நல்லொழுக்கம் அதனினுஞ் சிறந்தது, கற்கை நன்று, கற்றாரை வழிபடுதலதனினும் நன்று என்னும் உயரிய கொள்கைகள் இச்சபைக்கு உயிர்நிலையாவன எனக்கண்டு களிமகிழ்வெய்தினேன். இங்குள்ள நூற்களஞ்சியம் ஆராய்ந்தெடுத்த ஆயிரத்தின்மிக்க தொகையவாகிய தமிழ் நூல்களையும் சில ஆங்கில நூல்களையும் தன்னகத்துக் கொண்டது. மேல்வகுப்பு மாணவர்கள் மதுரைத் தமிழ்ச்சங்கத்துப் பரிக்ஷைகளுக்கு ஆயத்தஞ் செய்யப்படுகிறார்கள். சபையின் அக்கிராசனராகிய திரு. வ. ப. சா. சாமிநாதச் செட்டியாரவர்கள் சபையையும் கலாசாலையையும் செம்மையாக நடத்தி வருகிறார்கள். ஆரியத்திலும் தமிழிலும் பெரும்புலமை வாய்ந்தவர்களாகிய பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியாரவர்கள் பேருதவிபுரிந்து வருகிறார்கள். இச்சபை தமிழுக்கும் சைவத்துக்கும் செய்து வருகின்ற திருத்தொண்டு மேன்மேலும் வளர்ச்சியெய்துவதாக.

20.04.1942 இல் மீண்டும் ஒருமுறை மேலைச்சிவபுரி கணேசர் செந்தமிழ்க் கல்லூரிக்குச் சென்றுள்ள அடிகளார், அக்காலத்தில் இருந்த தமிழ்க் கல்வியின் நிலையினைப் பதிவுசெய்துள்ளார். தமிழ்க்கல்லூரிகள் தரமான தமிழ் மாணவர்களை உருவாக்கிய திறத்தை அடிகளார் பாராட்டியுள்ளார். வித்துவான் உள்ளிட்ட தேர்வுகளை எழுதித் தமிழ்ப்புலமை பெற்ற அக்காலத் தமிழ் மாணவர்களின் சிறப்பினையும் விபுலாநந்த அடிகளார் பதிவுசெய்துள்ளார்.

"தமிழினைக் கற்றலுஞ் செய்யாது கற்று வல்லார் வழிச் சென்று கேட்டலுஞ் செய்யாது ஆன்றோர் கண்ட மரபினையறியாது தடுமாறுகின்ற போலிப் புலவர்களும் அவர் வழிச் செல்லும் நெறியறியா மக்களும் மலிந்த இக்காலத்திலே, உண்மைத் தமிழ்த்தொண்டிற்குரிய இந் நிலையமானது தமிழ்ப்புலவர்க்கு நிழலளிக்கின்றது. தமிழ் மாணவர்க்கு உண்டியும் உறையுளும் நல்கி, நல்லாசிரியர்பாற் செலுத்தி உயிர்க்குறுதி பயக்கும் உண்மைக் கல்வியை யளிக்கின்றது. சென்ற பத்தாண்டுகளின் முன்பு விழாத் தலைமை தாங்கிய காலத்து யான் கண்டு களித்த சீரினும் பார்க்க மிகுதியாகிய சிறப்பினை இப்பொழுது அடைந்திருக்கின்றதாகலின், ஆண்டவனுடைய பேரருளினாலும், அறிவுடையாரது கூட்டுறவினாலும் இச்சபையானது நாடோறும் வளர்ச்சி யெய்தி வருகிறதென்பதை யான் அறிந்துகொண்டேன். சென்ற மூன்றாண்டுகளாக இங்கு உயர்தரக் கல்வி பயிலும் மாணவர்கள் சென்னைச் செழுங்கலை நியமத்துத் தமிழ்ப்புலவர்(வித்துவான்) தேர்தலுக்கு உரிய பாடங்களைப் பயின்று வருகின்றார்கள். தேர்தலுக்கு உரிய பாடங்களோடு மாத்திரம் அமையாது தமிழார்வமுள்ள மாணவர்கள் அறிவு விருத்தி கருதி நூலாராய்ந்து வருதலைக் காண்பது உள்ளத்திற்கு உவகை பயக்கின்றது» என்று வரைந்துள்ள பகுதிகள் படித்து உண்மை அறியத்தக்கன.

இராமகிருஷ்ண ஈடுபாடு

விபுலாநந்த அடிகளாருக்கு இராமகிருஷ்ணருடைய கொள்கைகளிலும், விவேகானந்தரின் கருத்துகளிலும் அசைக்கமுடியாத நம்பிக்கை இருந்துள்ளது. இருவரின் மீதும் தணியாத ஈடுபாடு இருந்துள்ளது என்பதைப் பல மடல்கள் தெரிவிக்கின்றன. இவர்களை மதித்தமைபோன்று, இவ்விருவரின் வழியில் வந்த நேரடி மாணவர்களையும் விபுலாநந்த அடிகளார் உயர்வாகப் போற்றியுள்ளார். இலங்கைக்கு விஞ்ஞானாந்த சுவாமிகள் என்னும் இராமகிருஷ்ணரின் நேரடி மாணவர் சென்றபொழுது, தம் பூர்வாசிரம குடும்பத்தினருக்கு எழுதி, அவரைக்கண்டு தரிசிக்க வேண்டுகின்றார். இவையாவும் இராமகிருஷ்ண இயக்கத்தின்மேல் விபுலாநந்தருக்கு இருந்த பற்றினைக் காட்டும் சான்றாக உள்ளது. இதனை விளக்கும் வகையில் விபுலாநந்தர் எழுதிய மடலில், «ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ச தேவருடைய நேர் சிஷ்யராகிய ஸ்ரீமத் விஞ்ஞானாந்த சுவாமிகள் புளியந்தீவுக்கு வருகிறார்கள். அவர்களைத் தரிசித்து ஆசீர்வாதம் பெறும்பொருட்டு நீயும் பிள்ளைகளும் 3ந் தேதி காலையிலே கல்லடியுப்போடைக்கு வரவேண்டும். வரும்போது நெய்ப்போத்தல் இரண்டும் நல்ல பச்சரிசி மூன்று படியும் தயிர்ப்பானை ஒன்றுங் கொண்டுவரவும். சாமான்கள் வாங்கவும், வந்து போகிற செலவிற்குமாக ஐந்து ரூபாக் காசு சிவ சிதம்பரத்திடம் அனுப்புகிறேன். நான் புளியந்தீவுக்கு 2ந் தேதி மத்தியானம் வர ஒழுங்குசெய்திருக்கிறேன்» என்று எழுதியுள்ளார்.

யாழ்நூல் உருவாக்கப்பணி

விபுலாந்த அடிகளார் தமிழ்ப்பணிகளுள் அவர் எழுதிய யாழ்நூல்பணி உலகம் அறிந்த ஒரு பணியாகும். அந்த யாழ்நூலை எழுதி முடிக்க அடிகளார் பல்வேறு இடர்ப்பாடுகளைச் சந்தித்துள்ளார். மாயாவதி ஆசிரமப் பணியிலிருந்து விடுபடல்(1941), கொழும்புப் பல்கலைக்கழகப் பணியேற்றல்(47 - 1943), கடுங்காய்ச்சலில் வீழ்ந்தமை, முடக்குவாதம் வந்தமை என்று பணியும், பிணியும் விபுலாநந்த அடிகளாரை அக்காலத்தில் வாட்டியுள்ளன. ஆயின் யாழ்நூலை அச்சிடுவதே தம் நோய்தீர்க்கும் மருந்து என்று நண்பர்களிடம் குறிப்பிடவும், புதுக்கோட்டையில் வாழ்ந்த தமிழ்வள்ளல் இராம. சிதம்பரம் செட்டியார் அவர்கள் விபுலாநந்தருக்கு வேண்டிய அனைத்து ஏந்துகளையும் செய்து தந்து ஆதரித்தார். 14,000 சதுர அடிகொண்ட தம் 'இராம நிலைய' வளமனையின் முன்பகுதியை அடிகளாரின் ஆராய்ச்சிக்கு ஒதுக்கித் தந்தும், பல்வேறு பணியாளர்கள், உதவியாளர்களை அமர்த்தியும், யாழ்க் கருவியை உருவாக்க உதவும் வகையில் ஓவியர்கள், மரத்தச்சர்கள், கொல்லாசாரியார்கள், இசைநுட்ப வல்லுநர்களைப் பணிக்கு அமர்த்தி யாழ்நூல் உருவாக உதவியுள்ளார்.

விபுலாநந்த அடிகளார் தங்கி ஓய்வெடுக்கவும் அமைதியாகத் தங்கியிருந்து ஆராய்ச்சி செய்யவும் இலங்கையில் றொசல்லா ஊரில் இருந்த தம் தேயிலைத் தோட்ட வளமனையை வழங்கியும் திரு. செட்டியார் அவர்கள் யாழ்நூல் ஆராய்ச்சிக்கு உதவியுள்ளார். தவத்திரு விபுலாநந்த அடிகளாரைவிட, அகவையில் குறைந்த திரு. சிதம்பரம் செட்டியார் அவர்களுக்கும் அடிகளாருக்கும் மிகச்சிறந்த நட்பும் உறவும் இருந்துள்ளமையை இருவரின் எழுத்துகளையும் ஊன்றிக் கற்கும்பொழுது உணரமுடிகின்றது. இராம. சிதம்பரம் செட்டியார் அவர்களுக்கு சுவாமிகள் வரைந்த மடலில் யாழ்நூலை அச்சிட அடிகளார் வழங்கிய திட்டமும், யாழ்நூல் அச்சேறத் துணைநின்ற அ. கணபதிப்பிள்ளை அவர்களின் சிறப்பும் தெரியவருகின்றது.

9.5.45 நாளில் றொசல்லா ஊரின் உட்சோக் எஸ்டேட்டிலிருந்து எழுதிய மடலில்,
பிரிய நண்பர் திரு. பெ. ராம. ராம. சித அவர்களுக்கு
ஆண்டவன் அருளை முன்னிட்டு எழுதுவது.

.....

பேரன்புள்ள திரு. **அ. க. அவர்கள் கடிதத்தையும் படித்தேன். அக்கடிதத்தில் ஒரு குறிப்பு எழுதி, இதனுள் வைத்திருக்கிறேன். அவர்களுக்கு அனுப்பிவிடலாம். அச்சுச் சட்டத்தின்படியும், நானூறு பக்கம் புத்தகத்தை ஓராண்டில் வெளியிட்டால் அதிகாரிகள் வினாவுவதற்கிடமுண்டு.

1944 ல் அச்சாகி முடிந்த முதல் ஐந்து இயல்களைப்) பாயிரவியல், யாழுறுப்பியல், இசை நரம்பியல், பாலை திரிபியல், பண்ணியல்களை இப்பொழுது வெளியிடலாம். படங்களை ஈற்றிற் சேர்ப்பது இப்பொழுது வெளிவரும் ஆங்கில ஆராய்ச்சி நூல்களின் மரபு பற்றி யாமும் ஈற்றிற் சேர்த்துக்கொள்ளுவோம். உள்ளுறையும் நூல் முற்றிலும் அச்சான பிறகு அச்சிடுதற்குரியது. இப்பொழுது நாம் அச்சிடவேண்டியது முகப்புத்தாள் மாத்திரமே (Title Page). இது திரு. அ. க. அவர்களுக்கு முன்னமே எழுதியிருக்கிறேன். வெளிக் கவருக்கு கையினால் செய்த தாள் தடிப்பானது. மதுரையிலும், விருதுநகரிலும் கிடைக்கும். வெண்சிவப்பு நிறத்தில் உபயோகிக்கலாம். முகப்பு(த்) தாளிலுள்ள விஷயத்தைச் சுருக்கி அச்சிடலாம்." என்று யாழ்நூல் அச்சிடுவதற்குரிய அமைப்பை இந்த மடலில் அடிகளார் எழுதியுள்ளார். தட்டச்சிட்டு வந்துள்ள இந்த மடலில் குறிப்பிட்டவாறு யாழ்நூலின் முதல் பதிப்பு வெளிவந்துள்ளமை கவனத்தில் கொள்ள வேண்டிய செய்தியாகும்.

கொப்பனாப்பட்டு கலைமகள் கல்லூரி

1939 ஆம் ஆண்டு, இமயமலைச் சாரலில் உள்ள மாயாவதி ஆசிரமத்திற்குச் செல்லும் வழியில், புதுக்கோட்டை மாவட்டம் கொப்பனாப்பட்டி என்னும் ஊரில் அமைந்திருந்த கலைமகள் கல்லூரிக்கு விபுலாநந்த அடிகளார் வந்துள்ளார். அக்கல்லூரியின் பார்வையாளர் குறிப்புச்சுவடியில் 25.08.1939 நாளிட்டு வரைந்துள்ள அடிகளாரின் கையெழுத்து உரை பல அரிய செய்திகளை நமக்குத் தெரிவிக்கின்றன. கலைமகள் கல்லூரி, பெண்களின் கல்விநலனைக் கருத்தில்கொண்டு மெய்யப்ப செட்டியார் என்னும் தமிழ் வள்ளலால் உருவாக்கப்பட்டது. மெய்யப்ப செட்டியார் இலங்கைக்குச் சென்றபொழுது அங்குள்ள இராமநாதன் கல்லூரியைப் பார்த்துவிட்டு வந்து அதே அமைப்பிலும், நோக்கத்திலும் பெண்களின் கல்வி முன்னேற்றத்திற்கு இக்கல்லூரியை உருவாக்கினார். கல்லூரி நிர்வாகம் குறித்து, தாம் எழுதிய விருப்பமுறியில்(உயில்) தாம் எழுப்பியுள்ள இக்கல்லூரியில் தம் குடும்பம் சார்ந்தவர்களின் தலையீடு இருத்தல்கூடாது என்று எழுதியுள்ளதை நோக்கும்பொழுது இன்றைய போலிக் கல்வித்தந்தைகளின் நிலைமை நமக்குப் புலனாகும்.

"... கல்விச்சாலைகளும் கற்போரும் கற்பிப்போரும் உறைதற்குரிய விடுதிச் சாலைகளும், அட்டில், உணவுமண்டபம் பாற்பசுச்சாலையென்பனவும் பிறவும் கலைமகளாரது திருக்கோயிலைச் சூழச் செவ்வனே அமைந்துள்ளன. விசாலமான இடவசதியும், நன்னீர்வசதியும், காந்தவிளக்கு வசதியும் திறமுற அமைந்திருக்கின்ற இகல்லூரியானது கல்விவளர்ச்சிக்கு இன்றியமையாத இருபெருஞ் சாதனங்களாகிய தே(க ஆரோக்கியம்) மனவமைதியென்னும் இவற்றை நல்குதற்கு வே(ண்டிய) ஏற்பாடுகளோடு விளங்குகின்றது.

திருவருளையும் நல்லோரது ஆதரவினையும் கொண்டு இச்செழுங்கலை நியமத்தினையும் கல்லூரியையும், விடுதிச்சாலை முதலியவற்றையும் சிறப்புற அமைத்துத் தந்த நண்பர் திரு. மெய்யப்ப செட்டியாரவர்களை நீண்ட காலமாக அறிவேன். என்னுயிர்க்குயிராகிய ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ச தேவரும், சுவாமி விவேகாநந்தரும் பாரதநாடு புத்துயிர் பெற்றெழும்படியுதவிய அரிய மருந்தாகிய உபதேசமொழிகளைப் போற்றிப் படித்து அவற்றின் வழியொழுகுவதே வாழ்க்கையின் உயரிய நோக்கமாகும் என்னும் உண்மையைக் கடைப்பிடித்த நண்பரவர்கள் விவேகாநந்த சுவாமிகளருளிய சிகாகோ பிரசங்கங்கம் கர்மயோகம், இராஜயோகம் 'விவேகாந்த ஞானதீபம்' என்னும் நூலினை அச்சிட்டு வெளியிடுவதற்கு வேண்டிய பொருள் முழுவதையும் நான் கேளாமலே என்கையிற் றந்து, அப்பெருமுயற்சியிற் பங்குபற்றினார்கள். நண்பரவர்களது கண்காணிப்பிலே இக்கல்லூரியானது மேலும் மேலும் வளர்ச்சியெய்தித் தமிழ்நாட்டினுக்கோர் அணிகலமாகத் திகழுமென்பது எனது துணிபு. இக்கல்லூரியோடு தொடர்புடையோரனைவருக்கும் பேரருள் நல்கிப் பரிபாலிக்குமாறு உலக மாதாவாகிய உமா தேவியாரை மனமொழி மெய்களினாலே சிந்தித்துத் துதித்து வழிபடுகின்றேன்.

விபுலாநந்த அடிகளார் மாணவர்களுக்குக் கூறும் அறிவுரை

விபுலாநந்த அடிகளார் தம் உறவினர்களுக்கு எழுதிய தமிழ்ப்பாடங்கள் குறித்த அரிய குறிப்புச்சுவடியில் தம் கல்வியனுபவங்களைப் பதிவு செய்துள்ளார்.

"குருமகராஜை வழிபட்டுக்கொண்டு படிக்கத் தொடங்கவும். இந்தப்பாடக்குறிப்புகளைக் குறிப்புப் புத்தகத்திலே (Exercise Book) இருவரும் தனித்தனியாக எழுதிவைத்துக்கொண்டு எனக்குத் திருப்பி அனுப்பிவிடவும். நுணுகி ஆராய்ந்து படிக்கவேண்டும். பிரவேச பண்டித பரிக்ஷை மாத்திரமல்ல. உள்ளபடி தமிழறிவும் நல்லொழுக்கமும் வரும்படி இரவு பகலாகப் பாடங்களை ஆராய்ந்து படித்து மனத்திலே நிற்கும்படியாக நெட்டுருப் பண்ணிக்கொள்ள வேண்டும். பின்பு இந்தியாவில் வந்து படிப்பதற்கு இப்பொழுது படிக்கிற படிப்பு அஸ்திவாரமாக வேண்டும். தூரத்திலிருந்தாலும் உங்கள்மேல் என்னுடைய கண்கள் இருக்கின்றன. சோம்பல் சிறிதுங்கூடாது. புளியந்தீவுப்பட்டினம் போவதை அதிகமாக வைத்துக்கொள்ளக்கூடாது. சினிமாப்படம் முதலிய வேடிக்கைகளிலே மனஞ்சென்றால் படிப்பு வராது. நான் படிக்கிற காலத்திலே வேட்டி சட்டை கிழிந்திருப்பதைக்கூட நினைப்பதில்லைப் படிப்பே கவனமாக இருந்தேன். ஒருவரிடத்திலேனும்போய் எனக்கு உதவி செய்யுங்களென்று இரந்து நின்றதுமில்லை. கடவுட்பத்தியிலும் கல்வியிலும் மனஞ்செலுத்தினால் வேண்டிய சௌகரியங்கள் தாமாகவே வந்து கைகூடும்.» என்று குறிப்பிட்டு எழுதும் விபுலாநந்த அடிகளார் தம் இளமைக்காலத்தில் படிப்புத் தொடர்பில் கிடைத்த இறை அனுபவங்களைத் தொடர்ந்து எழுதிச்சென்றுள்ளார்.

முடிவுரை:

விபுலாநந்தரின் வெளிவராத மடல்களில் அவர்தம் விருப்பங்கள் பல தெரியவருகின்றன. அவரின் நாட்கடமைகள், பயணத்திட்டங்கள், உறவினர்கள் நண்பர்கள், அவர் ஆற்றிய பணிகள் பதிவாகியுள்ளன. திட்டமிட்டுச் செய்யும் அடிகளாரின் ஆளுமையைப் புரிந்துகொள்வதற்கு இந்த மடல்கள் பேருதவிபுரிகின்றன. அக்காலத்தில் அமைந்திருந்த சமூக அமைப்பு, கல்விமுறை, தமிழ் வளர்ச்சி, ஆராய்ச்சித்திறம் யாவும் வெளிப்படுகின்றன. அக்காலத்தில் நடைபெற்ற இலக்கிய நிகழ்வுகள், சமூகத்தில் உயர்நிலையில் இருந்தவர்கள் ஆற்றிய பணிகள் யாவும் உலக்குக்குத் தெரியவருகின்றன. இலங்கையிலும், இந்தியாவின் பல பகுதிகளிலும் சிதறிக் கிடக்கும் விபுலாநந்தரின் அரிய கையெழுத்துப்படிகளை முழுமையும் தேடிப் பதிப்பிக்க வேண்டியது தமிழ் ஆராய்ச்சியாளர்களின் தலைக்கடனாகும்.

தமிழர்களின் சாதனைகள்

முனைவர் இராமநாயகம் திரவியம்

தலைவர், மலேசியா இந்திய மகளிர் இயக்கம், மலேசியா

அன்று அதிகாலை மழை தூறத் தொடங்கியிருந்தது. ஜன்னலுக்கு வெளியே மரங்கள் பசுமையாய் தலைஅசைத்து மகிழ்ந்தன. கணேசன் தனது அலுவலகத்துக்குப் புறப்பட ஆயத்தமாகி இருந்தான். சந்திரனிடமிருந்து தொலைபேசி மூலம் அழைப்பு வந்தது. நான் இன்றைக்கு அலுவலகம் வரமுடியாது 'லீவு' சொல்லி விடுமாறு கூறினான்.

ஏதாவது காரணம் கூறிவிட்டு ஊர்சுற்றப் போகும் சந்திரனுக்கு சில நாட்களாய் காதல் வியாதி பிடித்திருந்தது. ஒரு மனிதன் காதல் வசப்பட்டுவிட்டால், எத்தனை விசயங்களைத் தள்ளிப்போட்டுவிட்டு, பித்துப் பிடித்தவனைப்போல் அலைகிறான், என்று நினைக்கையில் கணேசனுக்கு ஆச்சரியமாக இருந்தது. ஆனால் நானும் தான் சாந்தியைக் காதலிக்கிறேன். இருவருக்குள்ளும் இப்படிச் 'சிக்கல்' ஏதும் வருவதில்லையே என்று நினைத்து ஆறுதல் அடைந்தான்.

கம்பெனியின் செயற்குழு கூட்டம் இன்றுகூட இருந்தது. குறிப்பாக எதிர்கால வளர்ச்சி பற்றிய பல முடிவுகள் எடுக்க இருக்கிறார்கள். அதைப்பற்றி தானும் பேச வேண்டிய விசயங்களுக்குக் குறிப்பெடுத்திருந்ததை ஞாபகமாக கைப்பையில் எடுத்துக் கொண்டான்.

சிறுவயது முதல் கணேசனுக்கு கல்வியும், தொழில் பற்றிய அறிவுகளும் கூடிவந்திருந்தன. அதற்காக தன் தாய்க்கு நன்றி தெரிவித்துக் கொண்டான். அவள்தான் அரும்பாடுபட்டு, அவனுக்குரிய பயிற்சிகள் அளித்தாள். கடுமையான உழைப்பாளி! மகனின் எல்லாச் சுதந்திரங்களுக்கும் இடமறிந்து அதன் நெளிவு, சுளிவுகளைக் கற்றுக்கொடுத்தவள். தந்தையோ கடும் கோபக்காரர், ஆனாலும் பழமைவாதி அல்ல, அவரைவிட கணேசனுக்கு தாயிடமே அலாதிப்பிரியம்! தன் காதல் விவகாரத்தைக்கூட, தாயிடம் சொல்லி வைத்திருந்தான். அதற்கான நாட்களை எதிர்பார்த்துக் காத்திருந்தான்.

அலுவலகம் களைகட்டியிருந்தது. அது ஒரு உணவுப்பொருள் தயாரிப்பு நிறுவனம். அதன் இன்றைய அவசியம், உலகமெங்கும் தன் பொருளை 'மார்க்கெட்' செய்வதற்கு தேவையான தொழில்நுட்பதிறன். அதுபற்றிய கூட்டம்தான் இன்று நடக்கிறது. சந்திரன் எவ்வளவு முக்கியமான நேரத்தை தவறவிட்டிருக்கிறான், எனக்கு கோபம் வந்தது. அவன் காதலியை ஒருநாள் அறிமுகப்படுத்தியிருந்தான். அவள் பெயர் என்னவோ ஜெனி என்று ஞாபகம்! அவளோ 'சட்டைக்காரியாக' இருந்தாள். அதிக செலவாளிபோலவும் தெரிந்தது. சந்திரனிடம் அவள் ஒட்டிக் கொண்டிருந்த காட்சி கண்முன்னால் நின்றது. இவன் அவளைவிட 'அதிகமாக ஒட்டிக்கொண்டிருந்தான்'. வாங்குகின்ற சம்பளம் தண்ணியாகக் கரைந்து கொண்டிருக்க வேண்டும். பலமுறை சொல்லிப் பார்த்தாயிற்று சந்திரன் கேட்பதாக இல்லை.

கணேசனின் அன்றைய பேச்சு மிகவும் முக்கியமானதாக இருந்தது. உணவுப் பொருளின் தரம் உண்மையாக இருக்கும் போது அதற்கான விளம்பரமும், வெளிநாட்டு ஏஜென்ஸிகளை கவரும் விதமும் இன்னும் நவீனமடைய வேண்டும் என்கிற பாணியில், பல குறிப்புகளை எடுத்துக் காட்டி ஆணித்தரமாகப் பேசினான்.

கம்பெனி பலவற்றை ஆமோதித்தது, நல்ல பாராட்டுக்கள்! அன்று... மாலை முழுவதும் மனம் மகிழ்ச்சியாக இருந்தது. சாந்திக்கு தொலைபேசி மூலம் பேசினான். சீன உணவு விடுதியில் இருவரும் சந்தித்துக் கொண்டார்கள்.

அப்போதுதான், சாந்தி ஒரு முக்கியமான கேள்வியைக் கேட்டாள். "கணேசன், உங்களை நினைத்தால் எனக்குப் பெருமையாக இருக்கு! இந்த சின்னவயதிலேயே நிறைய சாதிக்கிறீங்க, என்னைப் பற்றியும் யோசித்துப் பார்த்தேன். ஏதோ என்னளவிற்கு ஒரு சுமாரான வருமானம். ஆனால் இது இரண்டையும் வைச்சு நம்ம எதிர்காலத்தை பெரிய அளவில் கொண்டு வரமுடியுமா! நமக்கு வேறு திறமைகள் இல்லையா! ஒருவேளை நாம் தமிழர்கள் என்ற முறையில், நமக்கு சாதிக்க வேறு வழி இருக்கிறதா" எனக்கேட்டாள்.

அவள் கேட்டவுடன் ஒரு காலத்தில் சந்திரனிடம் பேசிக் கொண்டிருந்தது ஞாபகத்திற்கு வந்தது. அப்போது அவனை கணினி வேலைக்கு போகுமாறு சொன்னதும், அவன் கொடுக்கிற பிச்சைக்கார சம்பளத்துக்கு அது வேறயா என்றதும், இல்லை சந்திரன், கணினி பயிற்சி ரொம்ப முக்கியமானது. நான் இன்னிக்கு அதிக சம்பளம் வாங்குவதற்கு அது ஒரு காரணம் மட்டுமல்ல, கம்பெனியைவிட்டு நம்மை நிறுத்திவிட்டாலும், அதன் வழியே பலவற்றை நாம் சந்தித்து முன்னேறலாம், எனக்கூறிய போது, அதற்கு அவன் அலட்சியமாக எழுந்து போனதும் நினைவில் வந்தன. சாந்திக்கு என்ன பதில் சொல்வது என்று யோசித்தான். பிறகு அவளிடம், "அதிக வருமானம் வேண்டுமானால், வெளிநாடுகளுக்குப் போனால், எனக்குச் சம்பளம் கூடுதலாகக் கிடைக்கும். கணினி இஞ்சினியரிங் படித்திருப்பதாலும், வர்த்தகத்தில் மேற்படிப்பு முடித்திருப்பதாலும், கூடிய விரைவில் சம்பாதிக்கலாம்" என்று சொன்னான்.

சாந்திக்கு ஏந்தான் இந்தக் கேள்வியைக் கேட்டோம் என்று ஆகிவிட்டது. மௌனமாய் இருந்தாள். சீனக்கிழவர் ஒருவர், ஏன் சாப்பிடவில்லையா என்றார். சாப்பிட வைத்திருந்த 'மெகி சூப்' ஆறிப்போயிருந்தது.

"ஏன் கணேசன், வெளிநாடு போய்த்தான் சம்பாதிக்கணுமா! இங்க நம்ம நாட்டுல என்ன பிரச்சினை உங்களுக்கு! நீங்க ஒருத்தர் திறமையா இருக்கிறதைவைச்சு, நாம் ஒரு மாஸ்டர் பிளான் செய்தால் என்ன என்று அந்தக் கேள்வியைக் கேட்டு, நீங்கள் வெளிநாடு, அது இதுன்னு என்னை மூடு அவுட் பண்ணிவிட்டீர்கள்" என்றாள். ஓ அப்படியா சொல்.. சொல் என்ன பிளான்! "நீ யோசிச்சா சரியாகத்தான் இருக்கும். சரி சொல்லு" என்றான்.

நமக்குள் ஏதோ ஒரு சக்தியும் ஒருவேகமும் வந்துவிட்டதாகக் கற்பனை செய்து கொள்ள வேண்டும். இதெல்லாம் நம்மால் முடியாது என முயற்சி செய்யாம இருந்து விடுவதைவிட ஓர் இருமுறை முயன்று பார்த்தால், ஓகோ! என்று நம்மை எண்ணி நாமே ஆச்சரியப்படும்படியாகப் பலன்கள் இருக்கும் என்று நினைக்கிறேன்.

உயர்வு பற்றிய நினைப்பே எப்போதும் இருக்க வேண்டும். இது ஒருவகை விழிப்புணர்வு, இத்தகைய உணர்வு சாதாரன நிலைமைக் கூட நல்லதொரு வாய்ப்பாக உருவாக்கிக் கொள்ள கூடிய திறமையைத் தவிர வேறு ஏதுமில்லை. உண்மையான முயற்சியும் நம்பிக்கையும் அயராத உழைப்பும் இருந்தாள் எந்த ஒன்றையும் சாதிக்க முடியும், சாதனையாளராக வர வாய்ப்பு உண்டு.

"நானும் இப்போது கணினி பயிற்சி வகுப்புக்கு போய்க்கிட்டு இருக்கிறேன். உங்கள் கம்பெனியில் உணவுப் பொருட்கள் தயாராகிறது. அதுபோல நாமும் செய்ய, நமக்கு முதலீடும், சாதனமும் போதாது. உங்க நண்பர், அதுதான் ஈஸ்டர்ன் கம்பெனியில், பத்தாயிரம் பேரை பாலிஸி வாங்க வைச்சாரே மிஸ்டர் ஆறுமுகம், அவரைக் கூட்டு சேர்த்துக்கலாம். இப்போதைக்கு கையிருப்பில் உள்ள பணத்தையெல்லாம், ஒன்று சேர்த்து கணினி உலகத்தகவல் களஞ்சியம், ஒன்றை தயார் பண்ணி 'சின்ன புக்லெட்டா' வெளியிடுவோம். எங்க, எங்கெல்லாம் என்ன, என்ன வியாபாரம் நடக்குது. அந்தந்த நாட்டு விமான, ரயில் பயண நேரங்கள்,

எந்தெந்த, நாட்டுல என்னென்ன பொருட்கள் மலிவா கிடைக்குதுன்னு ஒரு பட்டியல் போட்டு 'பிரிண்ட்' பண்ணி விற்க முயற்சி செய்யலாம். வேலையை விட்டுவிடாமல் ஓய்வு நேரத்தில் இதைச் செய்ய முடியும். அதற்குப் பிறகும், வேறு சில தொழில்களை, நேரடியாகவே நாம் செய்ய முடியும் என்று நம்புகிறேன்" என்றாள். "மக்களுக்குத் தேவையான கையடக்கமான ஒரு புத்தகமாக தர முடிஞ்சா பெரிய அளவிலே போகும் சாந்தி, நாம் முயற்சி செய்து பார்ப்போமே!" நல்லது என்றாள்.

அடுத்து நான்கு மாதத்தில் சொன்னபடி செய்துவிட்டார்கள். சாந்தியும், கணேசனும், ஆறுமுகமும் இது மாதிரி நிறைய வெளியீடுகள் இருப்பதாகக் கூறினார்கள், இது உருப்படாது என்று சந்திரன் சொல்லிவிட்டுப் போனதை தவிர்த்து புத்தகம் பெரிய அளவில் விற்பனையை எட்டியிருந்தது. நான்கு மொழிகளில், மொழி பெயர்த்து கச்சிதமான அட்டைப்படத்துடன், தரமான தயாரிப்பாக வெளியிட்டிருப்பதாகச் சில தனியார் நிறுவனங்கள் பாராட்டுகளை தெரிவித்தன.

சந்திரன் அதிகம் களைப்படைந்திருந்தான். ஜெனி அவனை விட்டுப் போய் பதினைந்து நாட்கள் ஆகிவிட்டன. கம்பெனியில் நிர்வாகக் கவனக்குறைவு காரணமாக பலமுறை எச்சரிக்கப்பட்டு இருந்தான். மிகப்பெரிய 'ஆட்டோ மார்க்' இயந்திரம் ஒன்று வருவதாலும், கணினியின் அசாத்திய திறமையாலும், கம்பெனி ஆட்குறைப்பு செய்யும் நோக்கத்தில் இருந்தது.

அதை அறியாமல் சந்திரன் கணேசனிடம் ஐந்நூறு வெள்ளி கைமாற்றுக் கேட்டு வந்திருந்தான்.

தனது பால்ய நண்பரான சந்திரனிடம் அன்பு குறையாமல் என்ன "சந்திரன் பணம் தருகிறேன் ஆனால் நீ பொறுப்புணர்ச்சியோடு நடந்துக்கணும்., வாழ்க்கையை எவ்வளவு ஜாலியாக அனுபவித்தாலும் மனசாட்சி இல்லைன்னா வெறுமைதான் மிஞ்சும். கட்டுப்பாடு இல்லாதவன் இறுதி வரைக்கும் சந்தோஷம் அடைய முடியாது. போகட்டும் கம்பெனியில் உனக்கு ஏதாவது சஸ்பென்சன் ஆர்டர் வந்ததா?" எனக்கேட்டான் கணேசன்.

சந்திரன் திடுக்கிட்டு அப்படி எதுவும் வரவில்லையே! என்றான். 'அநேகமாக பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருக்கிறது. ஒழுங்காக அலுவலகம் செல்லும் வழியைப் பார்' என்று பணம் கொடுத்து அனுப்பி வைத்தான்.

இதற்கு சாந்தி சொன்ன கணினி மையம் ஏற்பாடு தொடங்கப்பட்டுவிட்டது. சாந்தி தனது சொற்ப சம்பள வேலையை விட்டிருந்தாள். கணினி மூலமாக உலகத் தமிழர்களுக்கெல்லாம் அவள் செய்திகளை அனுப்பி, முகவரிகளை பெற்றுக் கொண்டிருந்தாள். மிகப்பெரிய அளவில், பதப்படுத்தப்பட்ட உணவுகளை தயார் செய்ய இருப்பதாகவும், அதில் தமிழர்களான உங்கள் பங்கு என்னவென்று கேட்டு, அதற்குண்டான முழுத் தகவல்களையும் அளித்தாள். இதற்குப் பிண்ணனியாக இருந்து கணேசன் முயற்சி செய்தான்.

உள்நாட்டுத் தமிழர்களை இதன்மேல் கவனம் குவிக்க வைத்ததில் ஆறுமுகத்துக்கு பெரும் பங்கு இருந்தது. எல்லாம் திட்டமிட்டப்படியே நடந்தது. தமிழர்களை இருபத்து ஐந்து, ஐம்பது, நூறு வெள்ளி என பங்குகளை வெளியிட்டு, வாங்கச் செய்து, ஒரு குறிப்பிட்ட தொகையை சேர்த்தார்கள். அந்நிய நாடுகளில் வாழ் தமிழர்கள், தொழிலதிபர்கள் தங்கள் பங்குகளைப் பெரும் அளவில் அனுப்பி வைத்ததில் பெரிய ஃபாக்டரிக்கான இடம் வாங்கப்பட்டது.

இவர்களின் முயற்சி கண்டு அரசும் பெரும் கடனுதவியை வங்கியின் மூலம் வழங்கியது. எல்லாம் ஆச்சரியமாகத்தான் இருக்கிறது என்றான் கணேசன். இதிலென்ன ஆச்சரியம், இளமை என்பது ஒருகுறிப்பிட்ட வயதில் சாகஸம் நிறைந்து ஆடும். அதை சரியான முறையில் பயன்படுத்தினால் அரிய சாதனைகளை நிகழ்த்த முடியும் என்றாள், கோப்பியை அருந்தியபடியே, அதோட இன்றைய நவீன வாழ்க்கையைப் பற்றி ஒவ்வொரு தனி மனிதனும் தெரிந்து கொண்டு முயற்சி செய்து மேன்மை பெற வேண்டும் என்றான் ஆறுமுகம்.

ஆறுமுகம், கணேசன், சாந்தி மூவரின் கனவுகள் பலித்தன. மேலும் பள்ளி செல்லும் குழந்தைகளுக்கு கணினி கற்றுக் கொள்வதற்கான சில பயிற்சி வகுப்புகளும், விஞ்ஞானத்தின் இன்றைய நவீன கண்டுபிடிப்புகளையும் போதிக்க நல்ல 'பயிற்றகம்' கட்டி ஓய்வு நேரங்களில் குழந்தைகள் பயின்று வருகிறார்கள். வேலை இழந்து மனந்திருந்திய சந்திரன் அப்பள்ளியில் பொறுப்பாளராகப் பணிவகித்து வருகிறார். நல்ல பெண்ணுடன் திருமணம் ஆகி அவளும், குழந்தைகளுக்கு போதிக்க வந்து கொண்டிருக்கிறாள். இன்று உலக அளவில் 'கணேசன் புரோடக்ட்ஸ்' என்றால் எல்லோருக்கும் தெரியும்.

இது தமிழர்களின் வர்த்தக நிறுவனம் என்று எல்லா உணவுப்பொருள்களின் உறைகளின் மேலும் அச்சடித்து உலக நாடுகளுக்கு ஏற்றுமதியாகிறது. தாம் பணி புரிந்த தனியார் நிறுவனங்களில் இருந்து கண்ணியத்துடன் விலகி வந்து, இன்றைக்கு மிகப்பெரிய நிறுவனத்தின் பங்குதாரர்களாகவும், உரிமையாளர்களாகவும், பொதுச்சேவை, தர்மஸ்தாபன தலைவர்களாகவும் வெற்றிகரமாகப் பவனி வந்து கொண்டிருக்கும் கணேசன், சாந்தி, ஆறுமுகம், சந்திரன் ஆகியோர்கள் முன்னேற்றத்தைக் கண்டுமக்கள் வியப்படைகிறார்கள். இடம், சொந்த தொழில், வேலை வாய்ப்பு ஆற்றல் ஆகியவற்றின் வழி ஏற்படக்கூடிய பிரச்சனைகளை இடைவிடாது பார்த்து நம்மை சுற்றி புதிய பயணத்திற்கான தொடக்கத்தில் சந்திக்கும் சாதனைகளை சிந்தித்து, முயற்சி செய்து ஏற்படும் வாய்ப்புகளைப் பெற்று சாதனையாளர்களாக திகழ முடியும்.

தமது அடிப்படை அறிவாகக் கொள்ள வேண்டும். இன்று உலகமெங்கும் புலம்பெயர்ந்த தமிழர்கள். தொழில் வாய்ப்பு எனச் சிதறிப் படர்ந்திருக்கிறார்கள். அவர்களுள் குறிப்பிட்ட சதவிகிதத்தினர். பெரும் தொழில் அதிபர்களாகவும், நவீன தொழில் நுட்ப அறிவுடையவராகவும், இருக்கிறார்கள் என்றான் கணேசன். இவர்களை ஒருங்கிணைத்து, தமிழர்களுக்கே உரிய சிலச் சில தொழில்களையும், அவற்றுக்குண்டான வெளிநாட்டு வாய்ப்புகளையும் கண்டறிந்து, தமிழர்களின் தனிப்பெரும் மூலதனத்தால் சர்வதேசச் சந்தையை குறிவைக்க முடியாதா? கணினிகள் பயன் படுத்தித் தகவல்தொழில் நுட்ப அறிவைப் பயன்படுத்தி உலகப் பொருளாதாரச் சுழற்சியில் தமிழர்கள் ஒரு சுற்று வரக் கூடாதா என்ற கேள்விகளை எழுப்பினாள் சாந்தா.

இது மிக விரைவில் நிகழ வேண்டுமெனில், சுய வளர்ச்சி பற்றிய அறிவு கொண்டு தகவல் அறிவும், சர்வதேச சந்தை பற்றிய ஞானமும் ஒருங்கே பெற முயல வேண்டும். வெறும் குடும்பம் சார்ந்த பழம் சிந்தனைகளையும், குழந்தைகளைக் குற்ற உணர்ச்சிக்கு ஆளாக்கி அச்சுறுத்துவதையும் கைவிட்டு, தமிழ்க் குழந்தைகளை சுதந்திரமானவர்களாகவும், அச்சமற்றவர்களாகவும் ஒழுக்கம் நிறைந்தவர்களாகவும், உருவாக்க வேண்டியது. பெற்றோர்கள் அரசினர் ஆகியோரின், சமூகக் கடமையாகும்.

உலகத்தில் நிலைத்த தமிழர்களின் சாதனைகள் வாழ்விற்கும் பொருளாதாரத்துக்கும் வழி வகுக்கும் எனலாம். நாம் அனைவரும் ஒற்றுமையாய் சாதனைகள் புரிவோம். செயல்படுவோம் என்று கணேசன் புரோடக்ஸன் உரிமையாளர் திரு. கணேசன் மகிழ்ச்சியோடு கூறியதைக் கேட்டு அனைவரும் மகிழ்ந்தனர்.

உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கமும் நானும்...

ஆர்.என். லோகேந்திரலிங்கம்

(சர்வதேச ஊடகப் பொறுப்பாளர்

இவ்வருட ஆக்ஸ்ட் மாநாட்டின் கனடா செயற்பாட்டுக் குழுவின் தலைவரும்)



தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும் என்று உரத்த சிந்தனையோடு உரைத்து நின்ற மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் கனவு நனவாகும் காலத்தில் நாம் உலகெங்கும் பரந்து வாழுகின்றோம். உலகின் பல நாடுகளுக்கும் தமிழ் மக்கள் ஓடிச் சென்று குடியேறியுள்ளமை, பல மாற்றங்களை, எமது மக்கள் மத்தியிலும் உலக நாடுகளிலும் ஏற்படுத்தியுள்ளது. இலங்கையிலிருந்து வெளிநாடுகளுக்கு எமது மக்கள் புலம் பெயர்ந்து சென்றமைக்கு பல காரணங்கள் இருந்தாலும், எமது மக்களின் பின்புலம், அவர்களது கல்வி, கலைகள்,மொழி, பண்பாடு மீதான அக்கறையும் ஈடுபாடும் ஒத்த தன்மையுள்ளனவையாகவே காணப்படுகின்றன.

ஆரம்பத்தில் தங்கள் உயிரையும் உடலையும் காப்பாற்றிக் கொள்வதற்காக பெருமளவில் மக்கள் இலங்கையை விட்டுப் புலம்பெயரத் தொடங்கினாலும், காலக்கிரமத்தில் பல நாடுகள் எமது மக்களை எந்தவித தடைகளும் இல்லாமல் ஏற்றுக்கொண்டு, அவர்களுக்கு புதிய வாழ்க்கையை அமைத்துக் கொடுத்தன. முதலில் வாழ்க்கையின் இருப்பைத் தக்க வைத்துக்கொள்ளுவதற்கு போராடிய எமது மக்கள், தொடர்ந்து தங்களதும் தங்கள் பிள்ளைகளதும் கல்வி, கலைகள், மொழி, பண்பாடு மீதான விடயங்களிலும் அக்கறை காட்டத் தொடங்கினர். இதனால் அவர்களது தேடல் பரந்து விரிந்தது. உள் நாட்டிலும் வெளிநாட்டிலும் தங்கள் தாயகத்திலும் மேற்படி விடயங்கள் சார்ந்து இடம்பெறும் விழாக்கள், அவை தொடர்பான செய்திகள் மற்றும் குறித்த விடயங்களில் ஈடுபாடு கொண்டு உழைக்கும் கலைஞர்கள், பெரியோர்கள். கல்விமான்கள் ஆகியோர் தொடர்பாகவும் கவனமும் அக்கறையும் செலுத்தத் தொடங்கினர்.

இவ்வாறான ஒரு பிரவேசம் தான் உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கம் என்னும் அமைப்பாகும். உலகெங்கும் தமிழ் மக்கள் வாழும் நாடுகளில் கால்பதிப்பதற்காகக் காத்திருந்த இந்த அமைப்பு, ஏற்கெனவே பர்மா, இந்தியா, மலேசியா, பிஜி தீவுகள் சிங்கப்பூர், மொறிசியஸ் போன்ற உலக நாடுகளில் வாழும் தமிழர்களை மொழியாலும் பண்பாட்டாலும் ஒருங்கிணைக்க வேண்டும் என்ற உயர் நோக்குடனும் இயங்கிவந்தது. இந்த அமைப்பு மேற்குலக நாடுகளையும் நோக்கி நகரத் தொடங்கியது. உலகெங்கும் பறந்து வாழும் தமிழர்கள் தலைநிமிர்ந்து வாழ வேண்டும் என்ற குறிக்கோளுடனும் அரசியல் சார்பற்றும், இன, மத, பேதங்களை கடந்தும், தமிழ்ப் பண்பாட்டாளர் எனும் ஒரே குடையின்கீழ் செயற்பட வேண்டும் என்ற நிறைந்த கொள்கையுடனும் தமிழ் மொழியினை மறந்து போனவர்களை தாய் மொழி தமிழுணர்வுக்கு கொண்டுவரும் நல்நோக்குடனும் இவ்வியக்கம் 1974 ம் ஆண்டு தைத்திங்கள் அன்று இலங்கையின் கலாச்சார தலைநகர் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற நான்காவது உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தின் மாநாட்டில் ஆரம்பிக்கப்பட்டது. ஏற்கெனவே இயங்கிவந்த உலகத் தமிழ் ஆராய்ச்சி மையத்தில், வெறும் ஆய்வு கட்டுரைகளை முன்னெடுக்கின்ற விடயங்கள் மட்டுமே இடம்பெறுவதால், உலகத் தமிழர்களை வாழ்வியல் அடிப்படையில் இணைகின்ற செயல் திட்டங்களை அடிப்படையாகக் கொண்டு ஒரு அமைப்பை உருவாக்க வேண்டும் என்ற எண்ணம் மாநாட்டுக்கு வந்திருந்த தமிழ் அறிஞர்கள் மத்தியில் தோன்றியது. அந்தவகையில் அவர்கள் ஒன்று கூடி 1974 ம் ஆண்டு தைத்திங்கள் 8 நாள் உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தை தோற்றுவித்தனர். இந்த உருவாக்கத்தில் வணக்கத்திற்குரிய தனிநாயகம் அடிகளார் மற்றும் குரும்பசிட்டி இரா. கனகரட்னம் ஆகியோர் முக்கிய பங்கு வகித்தார்கள் என்பது சான்றுகள் மூலமாக அறியப்பட்டது.

அன்று முதல் தமிழர்களை ஒன்றிணைப்பதில் வெற்றி கண்டது, உலகப் பேரியக்கமான உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கம் தான் என்பது எவராலும் மறுக்க முடியாத உண்மையாகும். யாழ்ப்பாணத்தில் 1974ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கம் மிகக் குறைந்த எண்ணிக்கையுடைய அங்கத்தவர்களுடன் இயக்கத் தொடங்கியது. பின்னர் இந்தியா மலேசியா சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்கும் இந்த இயக்கத்தின் செயற்பாடுகள் வியாபித்தன.

இவ்வாறான நிலையில் மலேசியா வாழ் திரு வீரப்பன் அவர்கள் மலேசியாவில் கிளையை அமைத்து இயங்கிவருகையில் அவர் உலகத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்தியாவிலும் பல கல்விமான்களும் அறிஞர்களும் இந்த அமைப்பில இணைந்து பணியாற்றத் தொடங்கினர். தொடர்ந்து இந்த வகையில், இயக்கத்தை பரவலாக்கும் முயற்சிகளில் பலர் ஈடுபடத் தொடங்கினர். தற்போதைய செயலாளர் நாயகம் திரு துரை கணேசலிங்கம் அவர்கள் திரு வீரப்பன் அவர்களோடு கைகோர்த்து இயங்கத் தொடங்கினார். ஜேர்மனி நாட்டிலும் இயக்கத்தின் கிளையொன்றை அவர் நிறுவினார். இவ்வாறாக தொடர்ந்து புலம் பெயர்ந்து வாழும் நாடுகளில் இந்த உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் கிளைகளை அமைத்து பலமான ஒரு அமைப்பாக இதை வளர்த்தெடுக்க வேண்டும் என்ற உரத்த சிந்தனை உருவாகத் தொடங்கியது.

இந்த வகையில் 1995ம் ஆண்டு கனடாவில் ஒரு புதிய அலை வீசத் தொடங்கியது. அதுதான் "உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் கிளை அமைக்கும் பணிகள்". எமது மொழியும் பண்பாடும் சார்ந்த நல்லதோர் வாய்ப்பு, நம் காலடி நோக்கி வருகின்றது என்ற நோக்கத்தோடு பலர் அதில் இணைந்து கொண்டார்கள். பல ஆரம்பக் கூட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டன. நிதி நிறைந்தவர்கள் நிதியை கொடுத்தார்கள். நேரங்கிட்டியவர்கள் ஒன்றாகக் கூடி ஆலோசித்தார்கள். தமிழின் மீதும் தமிழ்க் கலைகள் மற்றும் தமிழ்ப் பண்பாடு ஆகியவற்றில் அக்கறை கொண்டவர்கள் ஆர்வத்தோடு உழைத்தார்கள். பல கல்வியாளர்கள், தொழில் வல்லுனர்கள் இளைஞர்கள் பெரியோர்கள் பெண்கள் என மக்கள் அந்த நாட்களில் நடத்தப்பெற்ற ஆலோசனைக் கூட்டங்களுக்கு சமூகமளித்தனர். இறுதியில் பல மாதங்கள் ஆலோசனைக் கூட்டங்களை நடத்தியும் பல விடயங்களை ஆழமாக விவாதித்தும் கலந்தாலோசித்தும் பல முடிவுகள் எடுக்கப்பட்டன. தொடர்ச்சியாக உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் கனடாக் கிளை நிறுவப்பட்டது. இதைக் கண்டு கனடாவில் வாழும் தமிழ் மக்கள் மகிழ்ச்சியடைந்தார்கள். தங்கள் தமிழ் சார்ந்த ஆர்வத்திற்கு "தீனி" கிட்டியது என்று உற்சாகம் பெற்றார்கள். திரு சின்னத்தம்பி செல்லையா கிளைத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். அவரது தலைமையின் கீழ் சட்டத்தரணி தம்பையா ஸ்ரீபதி, சட்டத்தரணி மனுவல் ஜேசுதாசன், திரு சிவலிங்கம் போன்ற பல அன்பர்கள் இணைந்து பணியாற்றத் தொடங்கினார்கள். இறுதியில் இயக்கத்தின் உலக மாநாட்டை கனடாவில் நடத்த வேண்டும் என்ற தீர்மானம் முன்னெடுக்கப்பட்டது. அந்த வகையில் கனடாவில் ஒன்றாரியோ மாகாணத்தின் தலைநகரான ரொரென்ரோவில் மாநாட்டை விமர்சையாக நடத்துவது என்று தீர்மானம் எடுக்கப்பட்டு, பல தொடர்ச்சியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இவ்வாறாக தொடர்ச்சியான கலந்துரையாடல்கள் மற்றும் சந்திப்புக்கள் ஆகியவற்றின் இறுதியில் 1996ம் ஆண்டு யூலை மாதம் மாதம் கனடாவில் உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் 6வது மாநாட்டை நடத்துவது என்று தீர்மானிக்கப்பட்டது. அப்போது இயக்கத்தின் செயற்பாடுகளில் திருவாளர்கள் செகராசசிங்கம், வரன் கனகரட்னம், சபா நடேசன்,சட்டத்தரணி மனுவல் ஜேசுதாசன் உட்பட பல அனபர்கள் தீவிரமாக உழைத்தார்கள். தங்கள் சொந்தப் பணத்தையும் மாநாட்டை நடத்துவதற்கு செலவிட அவர்கள் தயாராக இருந்தார்கள் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

அப்போது கனடாவிற்கு நான் குடியேறத்தொடங்கி, ஆறு ஆண்டுகளே கழிந்திருந்தன. அப்போது நான் பிரதம ஆசிரியராகவும் வெளியீட்டாளராகவும் பதிவு செய்து ஆரம்பித்த "உதயன்" வாரப் பத்திரிகை ஒரு வருடத்தைப் பூர்த்தி செய்து வெற்றிகரமாக வெளிவந்து கொண்டிருந்தது. முற்றிலும் இலவசமான பத்திரிகை என்ற காரணத்தால் அது மக்கள் மத்தியில் மிகுந்த செல்வாக்குப் பெற்ற ஒரு தமிழ் ஊடகமாக விளங்கியது. இதனால் உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் செயற்பாடுகளை மக்கள் மத்தியில் கொண்டு செல்லும் பொறுப்பை நான் உணர்ந்து அதைச் சரியாகச் செய்தேன். எனது பத்திரிகை நிறுவனப் பணியாளர்களும் எனது குடும்பத்தினரும் அதற்கு மிகுந்த ஆதரவாக செயற்பட்டார்கள். இதனால் எனக்கும் உலகத் தமிழ் பண்பாட்டு

இயக்கத்தின் செயற்பாட்டாளர்களுக்கும் இடையில் இறுக்கமான தொடர்பு ஏற்பட்டது.

திரு சின்னத்தம்பி செல்லையாவின் தீவிர முயற்சியினால் கனடாவில் நடத்தப்பெறற மாநாடு வெற்றிகரமாக இடம்பெற்றது. பல தமிழ்நாட்டு அறிஞர்கள், இயக்குனர் பாரதிராஜா, ஜனார்த்தனன் போன்றவர்களும் மலேசியாவிலிருந்து அப்போதைய அகிலத் தலைவர் திரு இரா.ந. வீரப்பன் மற்றும் அவரது கிளை உறுப்பினர்களும், இலங்கையிலிருந்து பேராசிரியர் கைலாசபதி போன்ற அறிஞர்கள் ஆகியோரும் வருகை தந்தார்கள். ரொரென்ரோ நகரம் விழாக்கோலம் பூண்டு, நகரில் மத்தியில் பல இனங்களைச் சார்ந்த கனடிய மக்கள் மத்தியில் நாதஸ்வர தவில் ஓசைகளோடு பிரதான வீதிகள் ஊடாடக எமது தமிழர் பண்பாடு சார்ந்த நீண்ட ஊர்வலம் பவனி வந்தது என்றால் அந்த மாநாட்டின் சிறப்புக்களை நாம் எண்ணி வியந்ததை மீட்டுப் பார்க்க வேண்டும்.

கனடா மாநாடு நிறைவுற்ற பின்னர் நானும் ஒரு பத்திரிகை ஆசிரியர் என்ற காரணத்தால் உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தோடு இணைந்து செயலாற்றத் தொடங்கினேன். கனடாக் கிளையில் ஒரு அங்கத்தவராக என்னைப் பதிவு செய்தேன். பின்னர் இயக்கத்தின் அனைத்து செயற்பாடுகள் மற்றும் நடவடிக்கைகளையும் உலகறியும் வண்ணம் எமது கனடா பத்திரிகைகளிலும், லங்காஸ்ரீ இணையத்தளம், வீரகேசரி வார இதழ், தினக்குரல் வார இதழ் ஆகிவற்றிலும் பிரசுரம் செய்து உலகெங்கும் உள்ள மக்கள் அறியும் வகையில் பிரச்சாரம் செய்தேன்.

இந்த நேரத்தில் உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் செயலாளர் நாயகமாக விளங்கிய ஜேர்மனி வாழ் திரு துரை கணேசலிங்கம் அவர்களோடு நட்பு வட்டத்தை பெரியளவில் பேணிவருகையில் அவர் என்னை இயக்கத்தின் தலைமையக சர்வதேச ஊடகப் பொறுப்பாளராக பதவியேற்கும் வண்ணம் வேண்டிக்கொண்டு சக அங்கத்தவர்களின் ஆதரவோடு என்னை அந்தப் பதவியில் 2000ம் ஆண்டு நியமனம் செய்தார். அன்று தொடக்கம் இன்றுவரை நான் தற்போது கனடாவில் வெளிவரும் கனடா உதயன் பத்திரிகை மூலமும், மற்றும் முன்னைய பந்தியொன்றில் நான் குறிப்பிட்டுள்ள, லங்காஸ்ரீ இணையத்தளம், வீரகேசரி வார இதழ், தினக்குரல் வார இதழ் ஆகியவற்றின் ஊடாகவும் இயக்கத்தின் அனைத்து விடயங்களையும் பதிவு செய்தேன். குறிப்பாக இயக்கத்தின் அறிக்கைகள், இலங்கையிலும் இந்தியாவிலும் மலேசியாவிலும் இடம்பெறும் இயக்கத்தின் நிகழ்வுகள் அனைத்திற்கு நேரடியாகச் சென்று கலந்து கொள்வதுடன், இயக்கத்தின் வளர்ச்சிக்குத் தேவையான பல நடவடிக்கைகளில் ஒத்துழைப்பு வழங்குவதும், அவற்றை ஊடகங்கள் வழியாக மக்கள் மத்தியில் எடுத்துச் செல்வதுமான பணிகளை இடைவிடாது ஆற்றிவந்தேன்.

மேலும் அவ்வப்போது வெவ்வேறு நாடுகளில் நடைபெறும் உலக மாநாடுகளில் மட்டுமல்ல, கருத்தரங்குகள் போன்றவற்றிலும் கலந்து கொண்டு எனக்குரிய உரை வழங்கும் நேரத்தில் ஆக்கபூர்வமான கருத்துக்களைக் கூறியும் நான் அறிந்த பல கலை இலக்கிய விடயங்களை அவர்கள் மத்தியில்

பகிர்ந்தும் எனது பங்களிப்பை வழங்கி வந்தேன். இதன் மூலம் நான் உலகின் பல நாடுகளிலும் உள்ள இயக்கத்தின் அங்கத்தவர்களையும், அந்தந்த நாடுகளில் பல பதவிகளில் அமர்ந்திருக்கும் முக்கிய பிரமுகர்களையும் சந்தித்து உரையாடும் சந்தர்ப்பங்கள் கிட்டின. சிலரை நான் பேட்டிகள் கண்டு, பத்திரிகைகள் பலவற்றில் பிரசுரித்து மகிழ்ந்ததை என்னால் மறந்துவிட முடியாது.

நான் கலந்து கொண்ட பல மாநாடுகளில், முக்கியமாக தென்னாபிரிக்கா மற்றும் மலேசியா ஆகிய நாடுகளில் நடைபெற்ற மாநாடுகள் சிறப்பாக முறையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன என்பதை பகிர்ந்து கொள்வதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன். தென்னாபிரிக்காவில் திரு மிக்கிச் செட்டியும் மலேசியாவில் திரு ப. கு. சண்முகமும் தமது நாடுகளில் உள்ள தமிழ் மக்களை அங்கத்தவர்களாக இணைத்துக் கொண்டும், போதிய நிதி வசதிகளைப் பெற்றும் மாநாடுகளை சிறப்பாக நடத்தினர். மேலும் வெளிநாடுகளிலிருந்து சென்ற பேராளர்களையும் இயக்கத்தின் அங்கத்தவர்களையும் இன்முகம் காட்டி வரவேற்று அவர்களுக்குத் தேவையான வசதிகளைச் செய்து கொடுத்தும் அனைவர் மனங்களிலும் இடம்பிடித்தனர். இவ்வாறான செயற்பாடுகள் உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் அங்கத்தவர்களிடையே இறுக்கமான நட்பையும் புரிதலையும் தொடர்ந்து இயக்கத்திற்காக விசுவாசமாக உழைக்க வேண்டும் என்ற உந்துதலையும் கொடுத்தது என்றால் அது மிகையாகாது.

எமது இயக்கத்தின் செயலாளர் நாயகமாக தொடர்ந்து இருபது ஆண்டுகள் இயங்கிவருகின்ற ஜேர்மனி வாழ் திரு துரை. கணேசலிங்கம் இயக்கத்திற்காக இரவு பகலாக உழைத்து வருகின்ற ஒருவர். தன்னை பொருளாதார ரீதியாக வளர்த்துக் கொள்வதிலும் பார்க்க உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தை விழுந்து விடாமல் காப்பதில் கண்ணும் கருத்துமாக செயற்பட்டு வருகின்ற ஒருவர். 2010 ம் ஆண்டு மே மாதத்தில் அவர் என்னிடத்தில் உரையாடுகின்றபோது, இயக்கத்தில் கல்விப் பிரிவு ஒன்றை ஏற்பாடு செய்து அதன் மூலம் புலம் பெயர்ந்து வாழும் மக்கள் மத்தியில் தமிழ்க் கல்வியினதும் தமிழ் மொழியினதும் அவசியத்தை எடுத்துச் செல்ல வேண்டும் என்று வேண்டிக்கொண்டார். அந்த வேளையில் கனடாவில் பல ஆண்டுகளாக வாழ்ந்துவருபவரும், இங்கு தமிழ்க் கல்வி தொடர்பாகவும் தமிழ் மொழி தொடர்பாகவும் தீவிரமாக இயங்கிவருகின்ற திரு. வினாசித்தம்பி துரைராஜா அவர்களை நாடிச் சென்று எமது உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தில் இணைந்து கொண்டு, திரு கணேசலிங்கத்தின் "தமிழ்க் கல்வி" சார்பாக விடயத்தில் ஒத்துழைப்புத் தருமாறு வேண்டிக் கொண்டேன். அவரும் அதற்கு இசைந்து கொண்டு 2010 ம் ஆண்டு பிரான்ஸ் நாட்டில் நடைபெற்ற உலக பண்பாட்டு மாநாட்டில் கலந்துகொண்டார். இயக்கத்தின் பல பணிகளையும் செயற்பாடுகளையும் நேரடியாகக் கண்டு உணர்ந்து திரு வினாசித்தம்பி துரைராஜாவிடம் பிரான்சில் இடம்பெற்ற பேரவைக் கூட்டத்தில் இயக்கத்தின் கல்வித்துறைப் பொறுப்பாளர் என்று பதவி ஒப்படைக்கப்பட்டது.

தொடர்ச்சியாக இயக்கத்தின் ஏனைய செயற்பாடுகளோடு, கல்வி தொடர்பான விடயத்தில் அதிக கவனம் செலுத்தப்பட்டு நானும் திரு

துரைராஜா அவர்களோடு சேர்ந்து ஒத்துழைப்பு வழங்கி நின்றேன். இந்த நேரத்தில் எமக்கான ஒரு அழைப்பு தமிழ்நாட்டிலிருந்து கிடைத்தது. அங்குள்ள எஸ். ஆர். எம் பல்கலைக்கழகத்தின் தமிழ்க்கல்விப் பிரிவு ஒரு திட்டம் பற்றி எமது இயக்கத்தோடு தொடர்பு கொண்டு புலம் பெயர்ந்த நாடுகளில் உள்ள தமிழ் ஆசிரியர்களுக்கு தேவையான பயிற்சியை வழங்குவதற்கு, தமது பல்கலைக் கழகம் அறிமுகம் செய்துள்ள திட்டம் தொடர்பாக உரையாடியது. மேற்படி விடயத்தில் எஸ். ஆர். எம் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக அப்போது பணியாற்றிய பேராசிரியர் பொன்னவைக்கோ அவர்கள் மேற்படி திட்டத்தில் மிகவும் தீவிரமாக செயற்பட்டார்கள். அவரோடு இணைந்து அவரது பேராசிரியர்கள் மற்றும் நிர்வாக அதிகாரிகள் ஆகியோர் எம்மோடு திறந்த மனதுடன் ஒத்துழைத்தார்கள். இதனால் நாம் 2011ம் ஆண்டு சென்னையில் தமிழ்க் கல்வி மாநாடு ஒன்றை நடத்துவதற்கு போதிய ஆதரவை மேற்படி எஸ். ஆர். எம் பல்கலைக்கழகம் வழங்கியது.

மிகவும் சிறப்பாகவும் மாணவர்களும் ஆசிரியர்களும் விரும்பும் வகையிலும், நடைபெற்ற மேற்படி கல்வி மாநாட்டைத் தொடர்ந்து சில மாதங்களாக பல சந்திப்புக்கள் மற்றும் கலந்துரையாடல்கள் இடம்பெற்றன. தொடர்ச்சியான கருத்துப் பகிர்தலின் பின்னர் தமிழாசிரியர் பயிற்சித் திட்டத்தை புலம் பெயர்ந்த நாடுகளிற்கு எடுத்துச் செல்லும் நோக்கோடு 2012ம் ஆண்டு, எமது உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்திற்கும் எஸ். ஆர். எம் பல்கலைக்கழகத்தின் தமிழ்க் கல்விப் பிரிவிற்கும் இடையில் ஒரு ஒப்பந்தம் கைச்சாத்தானது. மேற்படி ஒப்பந்தத்தில் எமது இயக்கம் சார்பாக அப்போதைய கல்விப் பொறுப்பாளர் திரு வினாசித்தம்பி துரைராஜா அவர்களும் நானும் கையொப்பமிட்டோம். ஒரு வரலாற்று முக்கியத்துவம் மிக்க மேற்படி ஒப்பந்தம் எமது பணிகளை மேலும் சிறப்பாகச் செய்யவேண்டும் என்ற ஆர்வத்தை எற்படுத்தியது. தற்போது மேற்படி திட்டத்தின் மூலம் தென்னாபிரிக்கா, கனடா, சுவிற்சலாந்து , அவுஸ்த்திரேலியா ஜேர்மனி போன்ற நாடுகளில் உள்ள தமிழ் கற்பிக்கும் ஆசிரியர்கள் தொலைக் கல்வித் திட்டத்தில் இணைந்து எஸ். ஆர். எம் பல்கலைக்கழகத்தின் தமிழ் ஆசிரியர் பயிற்சித் திட்டத்தால் மிகுந்த பலனை அனுபவிக்கின்றனர். பல்கலைக் கழகத்தால் நடத்தப்பெறும் பரீட்சைகளில் அவர்கள் அதி உயர் பெறுபேறுகளையும் பெற்று பூரண பயிற்சி பெற்ற தமிழாசிரியர்களாக விளங்குகின்றனர்.

திரு வினாசித்தம்பி துரைராஜா அவர்கள் தொடர்ந்து இயக்கத்தின் அகிலத் தலைவராக தேர்ந்தெடுக்கப்படுகின்றார். நானும் அவரும் கனடா தேசத்தில் வாழ்ந்து வருவதனால் இருவரும் திரு துரை கணேசலிங்கத்தின் ஆலோசனைகளுக்கு அறிவிறுத்தல்களுக்கும் ஏற்ப, தொடர்ச்சியாக இயக்கத்தின் வளர்ச்சிக்குத் தேவையான பணிகளை ஆற்றிவருகின்றோம். இடையில் பல சவால்கள் வந்துபோது எல்லாம் திரு வினாசித்தம்பி துரைராஜா அவர்களும் திரு துரை.கணேசலிங்கம் அவர்களும் எடுத்த சாணக்கியமான நடவடிக்கைகளிலிருந்து நானும் பல பாடங்களைக் கற்றுக்கொண்டேன். அந்த சந்தர்ப்பங்களை நான் நல்ல அனுபவமாகவே உள்வாங்கிக் கொண்டேன்.

இவ்வாறான நிலையில் தான் யாழ்ப்பாணத்தில் இயக்கத்தின் மாநாட்டை நடத்த வேண்டும் என்ற தீர்மானத்தை தலைமைக் குழு எடுத்தது. அதற்காக

உலகெங்கும் உள்ள பல முக்கிய உறுப்பினர்கள் மிகவும் தீவிரமாக உழைத்தார்கள். ஜேர்மனி நாட்டில் வாழும் செயலாளர் நாயகம் திரு துரை. கணேசலிங்கம், ஜேர்மனி நாட்டின் கிளைத்தலைவர் திரு இராஜசூரியர் தமிழ் நாட்டைச் சேர்ந்த திரு பாஞ்ச் இராமலிங்கம், ஜேர்மனி நாட்டைச் சேர்ந்த திரு எஸ். தங்கராஜா ஆகியோரும் இவர்களில் முக்கியமானவர்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இந்தவகையில், இன்றைய ஆகஸ்ட் 2017 5ம் 6ம் திகதிகளில் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் நடைபெறும் எமது இயக்கத்தின் 13வது மாநாட்டிற்கான நிதி தொடர்பாக ஆலோசிக்கப்பட்டது, எனவே அதற்காக அகிலத் தலைவர் திரு வினாசித்தம்பி துரைராஜா அமெரிக்க ஒன்றியத் தலைவர் திரு சிவா. கணபதிப்பிள்ளை ஆகியோரோடு இணைந்து கனடாவில் வாழும் தமிழ் பேசும் வர்த்தக பிரமுகர்களிடம் நிதி பெறுவது தொடர்பாக ஆலோசிக்கப்பட்டது. எமது தொடர்ச்சியான முயற்சியின் விளைவாக மிக அதிக நிதி உதவியை கனடாவில் தனித்துவமாக இயங்கும் ஒரு தமிழர் நிறுவனமான ரெக்னோ மீடியா நிறுவனத்தின் அதிபர் திரு மதன் சண்முகராஜா அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்வதற்கு எம் இருவரதும் செயற்பாடுகள் மற்றும் கனடாக்கிளையின் முன்னெடுப்புக்களும் காரணமாக அமைந்தன என்று கூறுவதில் பெருமையடைகின்றோம்.

இந்தக் கட்டுரையை நிறைவு செய்வதற்கு முன்பாக, உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கம் தோற்றுவிக்கப்படுவதற்கு முன்னின்று செயற்பட்ட ஈழத்துத் தமிழறிஞரான தனிநாயகம் அடிகளாரை வணங்கியும் அவரது சிறப்புக்களைப் பகிர்ந்தும் விடைபெறுவது சாலச் சிறந்தது என்று கருதுகின்றேன். 1974ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் ஒரு சீரிய சிந்தனையுடன் உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கம் தோற்றுவிக்கப்பட்டபோது அவர் ஆற்றிய உரை தொடர்பாக யாழ்ப்பாணத்தில் உள்ள அறிஞர்கள் சிலர் உயர்வாகப் பேசியதை பல தடவைகள் நான் செவிடுத்துள்ளேன். தனிநாயகம் அடிகளார்,தமிழின் மீதுத் தனக்கு இருந்த ஆழமான பற்றின் காரணமாக தமிழ் மொழி, பண்பாடு ஆகியவற்றின் தூதுவராக விளங்கி உலக நாடுகளுக்குப் பயணப்பட்டுத் தமிழ் வளர்த்த தூய தமிழ்த் தொண்டர் ஆவார். இவர் அயல்நாட்டவரும் தமிழகத்திற்கு வந்தபோது தங்களின் பண்பாடு, நாகரீகம் ஆகியவற்றை விடுத்து தமிழ்ப் பண்பாட்டுக்கு மாறியதால் தமிழ்ப் பண்பாடு யாவராலும் ஏற்கத் தக்கது என்ற கருத்தை முன்வைத்தவர். இவர், தான் இறப்பதற்கு முன்பாக ஆற்றிய பேருரைகளில் ஒன்று தமிழர் பண்பாடும் அதன் சிறப்பியல்புகளும் என்பதாகும். இந்த உரை, பின்னாளில் அச்சுவடிவம் பெற்று நூலகியது. இந்நூலில் தமிழ்ப்பண்பாட்டைப் பற்றியும் அதன் சிறப்பியல்புகள் பற்றியும்அடிகளார் விரித்துரைத்துள்ளார்.

"பண்பாடு என்றால் ஓர் இனத்தாரின் கொள்கைகள், கோட்பாடுகள், நோக்கங்கள், இலட்சியங்கள், வாழ்க்கைமுறைகள், பழக்கவழக்கங்கள் சமூகச் சட்டங்கள், சமயங்கள். வழிபாட்டு முறைகள், களவொழுக்கம், கற்பொழுக்கம், அகத்திணை புறத்திணை மரபுகள். இலக்கிய மரபுகள், அரசியலமைப்புகள். ஆடைஅணிகலங்கள், திருவிழாக்கள், உணவு பொழுதுபோக்கு விளையாட்டுக்கள், இவற்றையெல்லாம் குறிக்கும்" என்று தனிநாயகம்

அடிகளார் பண்பாடு என்பதற்கான விளக்கத்தைத் தருகின்றார். இது அனைத்து இனங்களுக்கும் உரிய பொதுப் பண்பாட்டு நெறியாகும்.

மேற்குறிப்பிடப்பெற்ற, அடிகளாரின் கருத்துக்களை ஒரு தெய்வம் எமக்கு அருளிய வேத வாக்குகளாக ஏற்று உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் வளர்ச்சிக்கும் தமிழ்ப் பண்பாட்டின் உயர்வுக்குமாக தொடர்ந்து உழைப்போமாக! நன்றி.



தமிழாசிரியர் ஆ. நெடுஞ்சேரலாதன்
ஆட்சிப்பொறுப்பாளர் - பாவாணர் கோட்டம் -
பாவாணர் பாசறை ,தெற்குச்சோழபுரம் -626 139
விருதுநகர் மாவட்டம் , தமிழ்நாடு .
கைப்பேசி 9443284903

பாவாணர் பார்வையில் பைந்தமிழ்ப் பண்பாடு

முன்னுரை:

பண்பாடு பற்றிப் பலரும் பல வகையாக விளக்கி வகுத்தும் தொகுத்தும் ஆய்வு செய்தும் வெளிப்படுத்தியுள்ளனர். பண்டைத் தமிழர் பண்பாடு பற்றிபட பாவாணரின் கருத்துரைகளையும் ஆய்வுரைகளையும் சான்றுரைகளையும் வரலாற்றுரைகளையும் கண்டறிந்து இன்றையத் தமிழர்களின் பண்பாட்டு விழுமியங்களோடு ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். ஆங்கில நாட்டினரைப் பண்பாட்டில் சிறந்தவர்களைச் சொல்கிறார்கள். நம் நாவலந்தேயத்தில் தமிழ்நாட்டின் தனித்தன்மையான பண்பாடு தொன்மை மிக்கது. அறத்தை அடிப்படையாகக் கொண்டே எல்லாச் செயல்களையும் தமிழர்செய்து பேறுபெற்றனர். மொழித்துறையில் மூத்தமொழியாகவும் குடிவகையில் மூத்தகுடியாகவும், பண்பாட்டுத்துறையில் பட்டொளி வீசிப் பறந்ததையும் பார்த்து மகிழ்கின்றோம்.

பண்பாட்டுச்சிறப்பு:

'பண்பாடு' என்ற சொல் பண்டையத்தமிழ் இலக்கியங்களில் இல்லையென்றாலும் "பண்பு" என்ற சொல்லும் 'பண்பினர்' என்றச்சொல்லும் பாடு அறிந்து ஒழுகுதல் என்ற விளக்கமும் தமிழ் இலக்கியங்களில் புதைந்துள்ளன. இலக்கிய வெளிப்பாட்டில் புறநானூறு , நற்றிணை, கலித்தொகை திருக்குறள் நமக்குப் 'பண்பாடு' பற்றிக் கற்பிக்கின்றன.

'பாடறிந்து ஒழுகும் பண்பினோரே" என்ற புறநூனூற்று வரியில் "முறைமை" என்னும் பொருளில் கையாளப்படுகிறது. கார்ப்பெயல கலித்பெரும்பாட்டரத்து" என்ற புறம்காட்டும் வரியில் உள்ள 'பாடு' என்னும் சொல் 'செவ்வி' என்ற பொருளில் கையாளப்படுகிறது. "பயனும் பண்பும் பாடறிந்தொழுகலும்" என்னும் நற்றிணைப்

பாடலில் பயின்றுவரும் 'பண்பாடு' என்னும் சொல் 'உலக ஒழுக்கம்' என்றப்பொருளிலும், "படைத்தகையாற் பாடு பெறும்" என்னும் குறளடியில் பயின்றுவரும் 'பாடு' என்றும் சொல் 'பெருமை' என்னும் பொருளில் வருவதைப்பார்க்கிறோம் கலித்தொகையில் பண்பாட்டுக்கு இலக்கணம் போல் ஒரு வரி வந்துள்ளது.

"பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகல்' என்னும் வரியில் மக்கட்பண்பு கூறப்படுகிறது உலகநடைமுறைப்படி நடத்தலே பண்பாடாகும். பாவாணர் தமிழர்களின் பண்பாட்டுச் செயல்பாடுகளை விரிவாக விளக்கியுள்ளார்.

பாவாணர் கண்டறிந்த பண்பாட்டுக் கூறுகள்:

தமிழ் இலக்கண இலக்கிய ஆய்வு செய்யும்போது தமிழரின் அடிப்படையான பல்வேறு பண்பாட்டுக் கூறுகளைக் கண்டறிந்து பாவாணர் பதிவு செய்துள்ளார். " ஒன்றிற்கு இரண்டிற்குப் போதல் என்றும் கால் கழுவுதல் என்றும் இடக்கரடக்கியும் இறந்தவனைத் துஞ்சினான் என்றும், சாவைப்பெரும்பிரிவு என்றும் நல்ல பாம்பு கடித்தலைக்கொடித்தட்டல் என்றும் மங்கல வழக்காகக் கூறிவந்தனர்" என்று பாவாணர் எழுதிக்காட்டியுள்ளார். மொழித்துறையில் தமிழர்கள் நாகரித்தில் சிறந்த சொல்லாடல்களையும் பேச்சில் தூய்மையும் கொண்டிருந்தனர். தமிழில் உள்ள முன்னிலைப் பெயர்களைத் தமிழர்கள் எப்படியெல்லாம் சொல்லிவருகிறார்கள் என்பதை விளக்குகிறார். நீ, நீர், நீங்கள், தாங்கள் என்று கூறுவதில் இழிந்தோன். ஒத்தோன், மூத்தோன், உயர்ந்தோன்என விளிக்கப்படும் பண்பாட்டுச்சொல்லாட்சியைப் பாவாணர் சுட்டுகிறார். தென்புலத்தாரை இறந்த முன்னோர் எனக்கண்டறிந்து இறந்தநாளில் இரப்போர்க்கும் ஏழைஎளியவர்க்கும் ஆண்டியர்க்கும் விருந்து படைப்பதைத் தமிழர்ப்பண்பாடு என்கிறார். இறந்துபோன சூலியின் பொருட்டுச் சுமைதாங்கிக்கல் நடுவதையும் வேனிற்காலத்தில் வழிப்போக்கர்க்குத் தண்ணீர்ப் பந்தலும் மோர்ப்பந்தலும் வைத்து உதவும் பண்பாட்டைக் காட்டுகிறார். "ஆவிற்கு உரிஞ்சுதறி நட்டியும், விலங்குகட்டுத் தண்ணீர் தொட்டி கட்டியும் பலவாறு அறஞ்செய்து வந்தனர்" தமிழர் என்பதைப் பாவாணர் எழுதியுள்ளார்.

அறவோர்க் களித்தலும் அந்தண ரோம்பலும்
துறவோர்க் கெதிர்தலும் தொல்லோர் சிறப்பின்

விருந்தெதிர் கோடலும் (சிலப் 16:71-73) என்றும் மூன்று வரிகளைச் சான்றாகப் பாவாணார் நிறுத்தியுள்ளார். பாவாணர் ஆய்வுப்படி முற்கால அந்தணர் தமிழ்முனிவர்.

தமிழ்ப்பண்பாடுகள்: பாவாணர் தமிழ்க்சமுதாயத்தை நன்று தெரிந்தவர், புரிந்தவர், அறிந்தவர், ஆய்ந்தவர், அவர் "பண்டைத் தமிழர் நாகரிகமும் பண்பாடும்' என்னும் பெயரில் 232 பக்கங்களில் நாலொன்றை எழுதியவர். அந்தணர் பண்பாடு என்பதில் கரணம் செய்த ஐயர் பண்பாடு என்றும், வணிகர் பண்பாடு என்றும், பல்வேறு தொழில்செய்த இல்லற வகுப்பார் பண்பாடு என்றும் பிறவகுப்பார் பண்பாடு என்னும் பெண்டிர் பண்பாடு என்றும் கள்வர் பண்பாடு என்றும் வகைப்படுத்திச் சங்கநூல் சான்றுகள் மூலம் நாகரிகப் பண்பாட்டைப் பாவாணர் பதிவுசெய்துள்ளார்.

பாவாணர் வகுத்த பல்வேறு வகுப்பார் பண்பாடு :

மக்கள் பண்பாடுகள் வீட்டுத்திண்ணை மூலம் அயலவருக்கும் ஆண்டிகளுக்கும் படுத்துறங்க உதவிய பண்பாட்டைக் கூறுகின்றார்கள். வீட்டுக்காரர்கள் இட்ட துளைகள், மாடஉச்சி அமைப்பது குருவிகள் கூடுகட்ட ஏற்படுத்தப்பட்ட ஏற்பாடு பற்றி ஆய்வு செய்துள்ளார். "பெண்டிர் தம் வீட்டு முற்றத்தில் கோலமிட அரிசிமாவைப்பயன்படுத்தியது எறும்பிற்கு உணவாவதற் பொருட்டே" என்று எடுத்துக்கூறியுள்ளார். நிலத்திணை, பறவை முதலியவற்றைப் பிள்ளைகள் போன்றே கருதிப்பாது காத்தா பண்பாடுகளை விளக்கியுள்ளார். மாடு, காளைகளைத் தமிழர்கள் சாத்தன், சாத்தி, முடக்கொற்றன். முடக்கொற்றி, கொடும்புறமருதன் கொடும்புற மருதி முதலிய மக்கட்பெயர்களில் இட்டு வழங்கிய பண்பாடு தமிழர்களின் தனித்தன்மையான பண்பாடு. தைப்பொங்கலில் மாடுகட்கு ஒருநாளை ஒதுக்கி அழகிய அணிகளைப் பூட்டிச்சிறந்த உணவூட்டி மாட்டுப்பொங்கல் கொண்டாடுவது தமிழரின் பண்பாட்டுச்சிறப்புகளில் ஒன்றாகும். விருந்தோம்பல், நடுகல் படையல், மறப்போரில் அறநெறி ஓம்பல் தமிழ்பண்பாடுகளில் ஒன்றாகும். உள்ளத்தின் செம்மைப்பண்பாடு. உணவு, உடை, உறையுள் போன்றவற்றில் செம்மையே நாகரிகம் என்பதைப் பாவாணரின் நூல்வழி அறிகின்றோம். தமிழர் நாகரிகமான கீழை நாகரிகம் முந்தியது மேலை நாகரிகம் பிந்தியது என்பதையும் சிந்துவெளி நாகரிகம் தமிழரதே என்பதையும் பாவாணர் பல்வேறு சான்றுகளுடன் நிலைநாட்டியுள்ளார். "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்பது திருமூலர் காலப்பண்பாடு.

பண்பாட்டுச் சீரழிவுகளும் சிக்கல்களும்:

"ஒரு சமுதாயத்தின் பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள், தொழில்நுட்பம், மொழி, மதிப்புகள், (ஏயடரநள) போன்ற பல்வேறு கூறுகளடங்கிய நடத்தையே

பண்பாடு எனப்படும்" என்று முனைவர் து.சீனிச்சாமி அவர்கள் தன்னுடைய 'இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிதை" என்னும் நூலில் வரையறை செய்துள்ளார். புதிய கருத்தியல்களின் தாக்கத்தினால் புதிய மதிப்புகள் உருவாகும்போது அவற்றுடன் மோதலும் முரண்பாடுதலும் ஏற்படுவதை இந்திய நீதிமன்றத்தின் தடையால் தமிழர்களின் ஏறுதழுவுதல் வீர விளையாட்டை மீட்டெடுத்ததில் பார்க்க முடிந்தது. பண்பாட்டு அடையாளம் உளத்தில் வேர்க்கொண்டு வெடித்த வரலாறு நடந்தது.

பிறப்பால் சிறப்பில்லை, மாந்தர் எல்லாரும் ஓரினம் என்பது பண்டைத்தமிழர் கொள்கைள் திருவள்ளுவர், "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமையான் (குறள் - 972) உயிர்வாழ, உயிர்அதிகநாள் வாழக்கிடைக்கும் அமிழ்தமே ஆனாலும் தனித்து உண்ணும் இயல்பு இல்லாதவர்கள் என்று புறநானூறு சொன்னதை இன்று பெரும்பான்மைத் தமிழர்கள் மறந்து மாறி வாழ்கின்றனர். பிறர் அஞ்சுவதற்குரிய செயல்களைத் தான் அஞ்சி விடுத்து வாழ்வதையும், மறதியில்லாதவர்களாகத் திகழ்ந்ததையும், வெறுப்பில்லாதவர்களாக நடந்ததையும் தமக்கென வாழாது பிறர்க்கென வாழ்ந்த இயல்பினர்தமிழர் என்பதையும், புகழெனின் உயிரைக்கொடுக்கும் பண்புடையவர் தமிழர் என்பதையும், பழியெனின் உலகம் பரிசாகக்கிடைப்பதாய இருந்தாலும் ஏற்றுப் பழிசெய்யும் தன்மையில்லாதவர் தமிழர் என்று புறநானூற்று அரசப்புலவன் கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி பண்புடைய தமிழர்களின் குணங்களை வரிசைப்படுத்தியுள்ளான். ஆனால், இன்று தலைகீழாய் நிலைமை மாறிக் கையூட்டு, கொலை, கொள்ளை, ஏமாற்றுதல், பித்தலாட்டம், பேராசை, அடுத்தவரை அடிமைகொள்ளுதல், குலவெறி, மதவெறி மேலோங்கிக் தமிழர்கள் சீரழிந்து வருகின்றனர்.

முடிவுரை

சான்றோர்கள் அனைவரும் பண்பாளரகளாக இருக்க வாய்ப்புண்டு. சங்ககாலம் முதல் இக்காலம் வரை அன்பு, நாண், ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையுள்ளோர் சிறிய அளவில் குறள்வழி நடைபோடுகின்றனர். "பிறர்நோயும் தம் நோய்போல் போற்றி அறனறிதல் சான்றவர்க்கு எல்லாம் கடன்" என்று கலித்தொகைப் பண்புடையோர் தமிழர்களுள் உண்டு அச்சம், நாணம், மடம் ஆகிய பண்புடைய மகளிர் உண்டு. இவற்றைக் கைவிட்டு வாழும் புதுமைப்பெண்களும் உண்டு. தொல்காப்பியரின் கற்பியல் கொள்கை காற்றில் பறந்து செல்வதை இன்றையத்

தொலைத்தொடர்பு, செய்தி, புலனம், முகநூல், இதழ்கள் போன்றவற்றில் பார்க்க முடிகின்றது. ஐந்திணைக் காதலும் வீரமும் இலக்கிய காட்சிகளாகிவிட்டன. தமிழர்கள் நடப்பியல் பண்பாட்டை அதன் தனித்தன்மையை இழந்து தவிப்பதைப் பார்க்கிறோம். பள்ளி, கல்லூரி பாடத்திட்டங்களில் நன்னெறிகள் அறநெறிகள், செந்நெறிகள் சேர்த்துச் செம்மையான தமிழர்பண்பாட்டு வேர்களையும் விழுதுகளையும் மீட்டெடுக்க முடியும். காட்சி ஊடகங்களைக் கட்டுக்குள் வைத்துக் கலை நயத்துடன் தமிழர் பண்பாட்டைக் கற்பித்து வெற்றிபெற முடியும். பாவாணரின் எண்ணத்தில் எடுத்தெழுதப்பட்ட பைந்தமிழ்ப் பண்பாட்டை மீட்க முடியும்.

அமைப்பியல் மற்றும் செயற்பாட்டு நோக்கில் எதிர்காலத் தமிழ் மொழி ஆய்வு: வளங்களும் வாய்ப்புகளும்

மார்க்கண்டன் ரூபவதனன்
சிரேஷ்ட விரிவுரையாளர், ஊவா வெல்லஸ்ஸப் பல்கலைக்கழகம், பதுளை, இலங்கை
markruban@yahoo.co.uk

அ. முகவுரை

தமிழ் மொழி தொடர்பான ஆய்வுகள் ஈராயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்டன. காலத்துக்குக் காலம் கிடைக்கப்பெற்ற வளங்களையும் வாய்ப்புகளையும் பயன்படுத்தி அவ் ஆய்வுகள் நடைபெற்றிருக்கின்றன. இலக்கணம், நிகண்டு-அகராதி, மொழிநூல் (Philology) மொழியியல் (Linguistics) முதலியன வழியாக அவை நடைபெற்றிருப்பதை அவதானிக்கமுடிகிறது. தமிழ் மொழி பேசும் மக்கள் செறிந்து வாழும் நாடுகளில் நிலவிய அரசியற் சூழல், உலக அரசியல் திருப்பங்கள், அறிவியல் புரட்சி, தமிழ் பேசும் சமூகங்களின் தேவைகள் போன்றன தமிழ் மொழி ஆய்வில் தாக்கஞ் செலுத்திவருகின்றன. அவ் ஆய்வுகளை மதிப்பிடுகின்றபோது அவ்வவ் காலத்தின் நடைபெற்ற ஆய்வுகளின் போதுமை மற்றும் போதாமை புலப்படுகின்றன. போதாமை குறித்து மீள்மதிப்பீடு செய்து தற்கால ஆய்வுப் பரப்புகளின் விரிவுகளைக் குறிப்பிட்டு தமிழ் மொழி குறித்ததான ஆய்வுகள் மேற்கொள்ளப்படவேண்டிய நோக்குகளைப் பகிர்ந்துகொள்ள இவ் ஆய்வுக் கட்டுரை முயல்கிறது.

ஆ. தமிழ் மொழி ஆய்வின் ஆரம்பம்:

1. இலக்கணம்

மொழி பற்றிய ஆரம்பக்கட்ட ஆய்வு முக்கியமாக சில நோக்குநிலைகளில் நடைபெறுகின்றன.

1) தன் மொழி அல்லது தாய் மொழிப் பயன்பாடுகளின் தன்மைகளைப் பற்றி ஆய்வு செய்து தரப்படுத்துவது; பின்பு இலக்கணமாக்குவது.

2) அவ் இலக்கணங்களைக் கொண்டு ஒரு மொழியை அம்மொழியைப் பேசுவோர் கற்கும்வண்ணம் பயன்பாட்டில் விடுவது.

3) பிற மொழியினர் தமிழைக் கற்கத்தொடங்கும் போது அல்லது பிற மொழியினருக்குத் தமிழ் கற்பிக்கப்படும் போது மொழிபற்றிய ஆய்வு இன்னொரு கோணத்தில் நடைபெறத் தொடங்குகின்றது. கூடவே ஒப்பீட்டு மொழி ஆய்வும் ஆரம்பித்துவிடுகின்றது. இது மேலைத்தேசத்தவர்களது வருகையுடன் தமிழில் பெருகியது என்றே கூறவேண்டும்.

உலகில் அடையாளப்படுத்தப்பட்ட பிற மொழிகளின் இலக்கண வரலாறுகளை உற்றுநோக்குகின்றபோது தமிழ் மொழியின் இலக்கண வரலாற்று செழுமையும் கனதியும் உடையதாகும். இன்று சான்றாதாரமாகத்திகழும் தொல்காப்பியத்திலிருந்து அகற்சியடைந்துள்ள தமிழ் மொழி இலக்கணம் தமிழ் மொழி ஆய்வுக்கு எப்போதும் மூலாதாரமாக அமையவேண்டும்.

போத்துக்கீஸருடன் வந்த கத்தோலிக்க மதத் தலைவர்களது தேவைப்பாட்டின் நிமித்தம் 16ஆம் நூற்றாண்டிலிருந்து தமிழைப்பற்றிய மேலைத்தேசத்தவரின் ஆய்வுகள் தொடங்கிவிடுகின்றன. பல்வேறு மொழிகளைப் பேசும் ஐரோப்பியரும் இப்பணியில் ஈடுபட, அவை தமிழிலும் வேறு மொழிகளிலும் இடம்பெறலாயின. போத்துககல் நாட்டினரான ஹென்றிக்ஸ் அடிகள் (Fr. Henrriques 1520-1600) போத்துக்கீஸ மொழியில் எழுதியுள்ளதான தெ ஆர்தெ டி லிங்குவா மலவார் *(The Arte de Lingua Malavar)* என்ற தமிழ் இலக்கண நூலிலிருந்து மேலைத்தேசத்தவர் அல்லது பிறமொழியை முதல்மொழியாகக் கொண்டவர்களின் தமிழ்மொழிபற்றிய இலக்கண நூல்கள் எழுதப்பட்டுள்ளதை அவதானிக்கமுடிகிறது. இவ்வாறு இத்தாலி, ஜேர்மன், டச், ஆங்கிலம், ரஷ்யா மற்றும் பிரஞ்சு மொழிகளைச் சேர்ந்தோர் தமிழிலும் தமது மொழிகளிலும் தமிழ் இலக்கண நூல்களை எழுதியுள்ளனர்.

2. சொற்தேட்டம்

மொழி ஆய்வுக்கான தரவுகளாக மொழிக்கூறுகள் விளங்குகின்றன. அவற்றுள் மொழிச் செயற்பாட்டுக்கு (Function), தொடர் அமைப்புக்கு (Clause Formation) சொற்கள் அடிப்படையாக உள்ளன. சொற்களே மொழியின் இருப்புக்கும் கனதிக்கும் செழுமைக்கும் அடியத்திபாரமானவை. எனவே அவை பற்றிய தெளிவும் தேட்டமும் இன்றயமையாதனவாகும்.

இவ் இன்றியமையாத் தன்மை தொல்காப்பியர் காலத்திலேயே உணரப்பட்டது. உரிச்சொல் எனும் அருஞ்சொற் தேட்டம் படிப்படியாகப் பல்வேறு வடிவங்களைப் பெற்றுவந்துள்ளது. சேந்தன் திவாகரம்(கி.பி. 8ஆம் நூ.) முதலிய நிகண்டுகளைத் தொடர்ந்து ஐரோப்பியர் வருகையுடன் சீகன்பால்கு, வீரமாமுனிவர் முயற்சிகளால் உருவான ஒருமொழி, இருமொழி மற்றும் பன்மொழி அகராதி மரபுகளூடாகவும் ஒருவகையில் தமிழ் மொழியாய்வுகள் நடைபெற்றன.

3. உரைமரபு

தமிழ் மொழி எவ்வாறு இயங்குகின்றது என்பதை விளக்கத் தொல்காப்பியர்முதல் எப்படி ஓர் இலக்கண மரபு இருந்து வருகின்றதோ, அதே போல அவ் இலக்கணத்தை விளக்கும் உரை மரபுகளும் இருந்துவருகின்றன. இலக்கியங்களுக்கான உரைமரபுகளையும் இதற்குள் அடக்கவேண்டும். உரைகளினூடாக மொழி பற்றிய ஆய்வுகளே நடைபெற்றுவந்துள்ளன என்பது உரைகளை உற்றுநோக்குகின்றவர்களுக்குப் புலப்படும்.

இ. நவீனகாலத் தமிழ் மொழி ஆய்வு

19ஆம் நூற்றாண்டில் இனத்துவ அடையாளமாக மொழியை முன்னிறுத்தித் தேசியவாதத்தைக் கட்டமைத்து அறிவியலில் முன்னேறி ஆயுதபலத்தைத் தம்மகத்தே கொண்ட சில ஐரோப்பிய அரசுகள் உலக நாடுகள் சிலவற்றைத் தம்வசப்படுத்தி அங்கே காலனித்துவ ஆட்சிமுறையை ஏற்படுத்தியதுடன் தம்மிடையே இருந்த நவீன அம்சங்களையும் அங்கு அறிமுகப்படுத்தின. மேலைத்தேசத்தில் நடைபெற்றுக்கொண்டிருந்த மொழிபற்றிய ஆய்வுநெறிகளின் அடிப்படையில் காலனித்துவ நாடுகளின் மொழிகள் பற்றிய

ஆய்வுகளையும் மேற்கொண்டனர். இந்தியாவிலும், இலங்கையிலும் ஆங்கிலேய, அமெரிக்க அறிஞர்களால் தமிழ் மொழிக்கூறுகள் ஆய்வுக்குட்படலாகின.

தமிழ் மொழியின் எழுத்து, பேச்சு வழக்கு மொழிக்கூறுகள் தனித்தனியாகவும் முழுமையாகவும் பிற மொழிகளுடன் ஒப்பு நோக்கியும் ஆராயப்பட்டன. எல்லீஸ் (Francis Whyte Ellis 1777-1819), கால்டுவெல் (Robert Caldwell 1814-1891), போப் (G.U. Pope 1820-1903), கிற்றெல் (Rev. F. Kittel 1832-1903), வின்சன் (J. Vinson 1843-1926), அன்டேர்சன் (R. Anderson) ஆகியோரின் தமிழை மூலமாகக்கொண்ட திராவிடமொழிகள் பற்றிய ஆய்வுகள் முக்கிய மாற்றங்களை ஏற்படுத்தின. சமஸ்கிருத மொழிபற்றிய மேலைத்தேசத்தவரின் கண்டுபிடிப்பிடிப்பைத் தொடர்ந்து உருவாக்கப்பட்ட இந்தோ-ஐரோப்பிய[1] மொழிக்குடும்பக் கட்டமைப்புக்கு நிகரான அல்லது எதிரான ஒரு மொழிக்குடும்பத்தை உருவாக்கியதில் இவர்களின் பங்கு முக்கியமானது.

இத்தகைய ஆய்வுகள் மேலைத்தேசத்தின் செம்மொழியாகக் கருதப்படும் இலத்தீன் மொழியை அல்லது அதிலிருந்து கிளைத்த மொழிகளை முன்னிறுத்தியதாக அவற்றின் அமைப்பு, ஒலிகள் என்பவற்றைத் தமிழில் தேடும் அல்லது வேறுபடுத்தும் ஆய்வுகளாகவே பெரிதும் உள்ளன. இது அக்கால ஆய்வுகளின் பாரிய குறைபாடாகக் கருதப்படுகிறது.[2]

(இக்காலத்தில் தமிழ் மொழிக்கு இலக்கணம் படைப்பதிலும் பழைய இலக்கண நூல்களுக்கு உரைகள் எழுதுவதிலும் ஆறுமுகநாலவர் முதலிய சுதேசிகள் பலர் தம்மை ஈடுபடுத்திக்கொண்டனர் என்பதையும் குறிப்பிட்டாகவேண்டும்.)

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் மேலைத்தேசத்தில் மொழிபற்றிய ஆய்வு வெறுமனே மொழியைப் பற்றி மட்டுமன்றி மொழியோடு தொடர்புடைய அறிவியல் புலங்களோடு சேர்த்து நடைபெறத்தொடங்கின. அறிவியலின் கருத்தாடல்களில் மொழிக்கு உரிய இடம் குறித்தும் விவாதித்தனர். அறிவியல் வளர்ச்சிக்கு மொழி இன்றியமையாதது மட்டுமன்றி அம் மொழியும் அறிவுபூர்வமாக ஆய்வுசெய்யப்படவேண்டும் என்றும் முடிவுக்கு வந்தனர்.

சுவிஸ்லாந்தில் சசூர் (Ferdinand de Saussure 1857-1913), லண்டனைச் சேர்ந்த ஸ்வீற் (Harry Sweet 1845 – 1912), சபைர் (Edward Sapir 1884 – 1934), வூவ் (Benjamin Lee Whorf 1897 -1941), அமெரிக்கரான ப்ளூம்பீல்ட் (Leonard Bloomfield 1887-1949), பிரான்ஸ் நாட்டின் லெவி ஸ்ரோஸ் (Claude Levi-Strauss 1908-2009) மற்றும் இவர்களது சமகாலத்து அறிஞர்களது மொழிகுறித்த ஆய்வுகள் 'அமைப்பு மொழியியல்' எனும் புதிய அறிவுத்துறையைக் கட்டமைப்பதற்கு உதவியன. மொழியின் கூறுகளைப் பகுத்து – குறிப்பாகப் பேச்சு வழக்கை - ஆய்வுசெய்து அவ் ஆய்வுகளின் மூலம் மொழியியல் உட்பிரிவுகளையும் வகுத்துக்கொடுத்தனர். ஒலியியல், ஒலியனியல், உருபனியல் என்பன ஆய்வுத்துறைகளாகப் பரிணமித்தன.

விக்கின்ஸ்ரைன் (Ludwig Wittgenstine 1889-1951), அயர் (Alfred Jules Ayer), பேர்ட்டன் ரஸல் (Bertrand Arthur William Russell 1872-1970) போன்ற மெய்யியலாளர் மத்தியில் நடைபெற்ற விவாதங்கள், அவர்கள் மொழிதொடர்பாக – அமைப்பியல் மற்றும் பொருண்மையில் - வெளியிட்ட ஆய்வுகள் மொழியியலில் பெருமளவில் தாக்கஞ் செலுத்தின.

தமிழ்பேசும் நிலங்கள் காலனித்துவத்திலே இருந்ததனால் உடனடியாகவே தம் தேசத்து மொழியியல் துறையைக் கொண்டு தமிழ்மொழியையும் ஆய்வுசெய்வதில்

மேலைநாட்டவர் ஈடுபட, இப் புதிய துறையைக் கற்றுக்கொண்ட சுதேசிகளும் மொழியியல் ஆய்வுவேலைகளைச் செய்யத்தொடங்கினர்.

அந்தவகையில் ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த எமினோ (Murray Barnson Emeneau 1904-2005), பர்ரோ (T. Barrow), ப்ளோச் (Jules Bloch 1880-1953), மாஸ்ரர் (T. Master), மீலே (P.Meile), Jean Przyluski (1884-1944) மற்றும் Otto Schrader (1855-1919) முதலியோர் இந்து-ஐரோப்பிய மொழித் தொடர்பை சமஸ்கிருதம் சார்ந்து ஆய்வுசெய்ய போது தமிழ் மொழிக்கூறுகள் பற்றியும், திராவிடமொழிகள் குடும்பத்தில் தமிழின் நிலைபற்றியும் எடுத்துக்கூறினர். ஆயினும் இவர்களது ஆய்வு புவியியல் தொடர்புடைய பரம்பலில் மானுடவியல்சார்ந்த ஒரு "அமைப்பு" மொழியியலைக் கட்டமைப்பதாக இருந்தது. மொழிகளுக்கிடையில் ஒற்றுமை - வேற்றுமை, உளது-இலது, சரி-பிழை, முந்தியது-பிந்தியது எனும் ஒப்பியல் ஆய்வுகளே பெரிதும் நடந்தன.

சுதேசிகளான எல். வி. இராமசாமி ஐயர், சிதம்பரநாதச் செட்டியார், நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர், கே. இராமகிருஷ்ணையர், சி.ஆர்.சங்கரன், ரா.பி.சேதுப்பிள்ளை, பி. எஸ். சுப்ரமண்யசாஸ்திரி, சுவாமி விபுலானந்தர் போன்றோர் திராவிட மொழியாகிய தமிழின் தொன்மை, தன்மை, பயன்பாடு என்பன குறித்து மேற்கூறிய நோக்குகளிலே ஆய்வுசெய்தனர். அவற்றுள் எல். வி. இராமசாமி ஐயரின் திராவிடமொழிகள் பற்றிய ஆய்வுகளும் ஞானப்பிரகாசரது சொற்பிறப்பியல் - மூலமொழி – தெளிவுபடுத்தல்களும், பி. எஸ். சுப்ரமண்யசாஸ்திரி தமிழ் மொழி ஆய்வுகளும் விபுலானந்தரின் பேச்சுத்தமிழ் ஒப்பியல் ஆய்வும்;[3] அவதானிப்புக்குரியன.

இவ்வாய்வுகள் நிறுவன ரீதியாகவும் தனிநிலைநின்றும் மேற்கொள்ளப்பட்டன. பல்கலைக்கழகங்கள் (சென்னை, அண்ணாமலை, லண்டன், இன்டியானா, கலிஃ.வானியா), மொழியியற்கழகங்கள் (பாரிஸ், மொஸ்கோ, டில்ஹி) ஆகியவற்றிலிருந்து வெளியிடப்பட்ட ஆய்விதழ்களில் இக் கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன.

1940களில் உலகில் பல புரட்சிகள், போர்கள், அறிவியல் வளர்ச்சிகள், மாற்றங்கள் ஏற்பட்டுவிடுகின்றன. இம் மாற்றங்கள் அனைத்தும் மொழிகளைப் பாதிக்கலாகின. உலகப்போர்கள் முடிவுக்குவந்தன. பல நாடுகள் காலனித்துவ ஆளுகையிலிருந்து மீண்டன. அரசியலில் மீண்டும் 'மொழி' முக்கிய இடத்தைப் பெறுகிறது. மொழியுரிமை மனிதனின் அடிப்படையுரிமைகளில் ஒன்றாக ஐ.நா. அங்கீகரித்தது. மொழிவாரியாக நாடுகள், மானிலங்கள் பிரித்தெழுதப்பட்டன. அரசுகள் தமக்கான ஆட்சி, அலுவல், கல்வி மொழிகளைத் தீர்மானித்தன. (தமிழ்நாடு 1956, இலங்கை 1956) மக்கள் மத்தியில் மொழி பற்றிய பிரக்ஞை மேற்கிளம்பியது.

தாய்மொழிக் கல்வி அமுல்ப்படுத்தப்பட்டது. இதனால் அறிவியல் பாடங்களைக் கற்பிக்கவென கலைச்சொற்கள் உருவாக்கப்பட்டன். அரச ஆதரவுடன் சொற்களஞ்சிய விருத்திசெய்யப்பட்டது. (தமிழ்நாடு 1932, இலங்கை 1952) பல்கலைக்கழகங்களில் மொழி, மொழியியல் துறைகள் உருவாக்கப்பட்டன. மொழியியல் கழகங்கள், மொழயாய்வு மையங்கள் நிறுவப்பட்டு மொழி பற்றிய ஆய்வுகள் முடுக்கிவிடப்பட்டன.

ஈ. மொழி, இலக்கணம், மொழியியல்: தமிழ்மொழி ஆய்வுகள்

இன மொழி வரலாறுகளை தேடியெடுத்தல், மீளக்கட்டியமைத்தல் எனும் நவீனத்துவ அம்சங்கள் தமிழரை அதிகம் பாதித்தன. இந்திய இலங்கை அரசியற்சூழல்

இவற்றிற்கு உரமிட்டன. இலக்கியம், இலக்கணங்கள், உரைகள், பிறமொழியினர் எழுதிய இலக்கணங்கள், அகராதிகள், கல்வெட்டுக்கள், அயல்மொழியிலுள்ள குறிப்புக்கள், பேச்சுவழக்குகள் அல்லது கிளைமொழிகள் என்பவற்றை ஆதாரங்களாகக் கொண்டு மொழியியல் கொண்டு ஆய்வுசெய்து தமிழ் மொழியின் எழுத்து – வரிவடிவம், ஒலி, உச்சரிப்பு, சொல் - வகைகள், பயன்பாடு, சொற்பொருள் மாற்றம், பிறமொழிக்கலப்பு, கிளைமொழிகள் என்பவற்றின் வரலாற்று ரீதியான மாற்றங்களைக்கொண்டு தமிழ் மொழி வரலாறு எழுதப்படலானது. சூரியநாராயணசாஸ்திரி, மு.வ., தெ.பொ.மீ., இரா.அரங்கசாமி, மோசசு பொன்னையா, ஆ.வேலுப்பிள்ளை ஆகியோருக்கு முக்கிய வகிபங்கு உண்டு.

மொழித்தூய்மை, மொழிக் காப்பு, மொழிக் கலப்பு எதிர்ப்பு ஆகியவற்றை இலக்காகக் கொண்டு சில தமிழ்மொழி அறிஞர்கள் ஓர் இயக்கமாகச் செயற்பட்டனர். மறைமலையடிகள் தலைமையில் வீறுகொண்டு வளர்ந்தது. வடமொழி எதிர்ப்பின் அடித்தளத்தில் பிறமொழிக்கலப்பு, மொழியியலின் நெகழ்வுத்தன்மை என்பவற்றை எதிர்த்து இவ்வியக்கம் தமிழ் மொழி, அதன் தொன்மை, பெருமை, பயன்பாடு, பாதுகாப்பு என்பனபற்றியெல்லாம் இவ் இயக்கத்தினர் உணர்ச்சிபூர்வமாகவும், மொழியின் எதிர்காலம்குறித்து அறிவுபூர்வமாகவும் ஆயந்து எழுதினர். அவ் இயக்கத்தைத் தமிழறிஞர்கள் சிலர் ஆதரித்தனர் (அ.சிதம்பரநாதச்செட்டி, மா. இராசமாணிக்கனார், வ.சுப. மாணிக்கம், மு.வ., கா. அப்பாத்துரை, தேவநேயப் பாவாணர்). இதற்கு எதிராகவும் சிலர் தமது கருத்துக்களை முன்வைத்தனர்(ஞானப்பிரகாசர், உ.வே.சா.).

இந்த வகையில் தமிழ் மொழி தொடர்பான கட்டுரைகளை எடுத்துக்கொண்டால், தமிழ் எழுத்து, சொல், வாக்கியம் பற்றிய இலக்கண, மொழியியல் கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. அத்துடன் தமிழில் இடம்பெற்றுள்ள பிறமொழிச்சொற்கள், பிறமொழிகளில் இடம்பெற்றுள்ள தமிழச் சொற்கள் பற்றிய ஒப்பியல் கட்டுரைகள உள்ளன. திராவிட மொழிக் குடும்பத்தில் தமிழ் மூலமொழி என்பது பற்றியும் சிலர் விவாதித்துள்ளனர். தமிழ்க் கிளைமொழிகள் பற்றி ஒன்றிரண்டு கட்டுரைகள் பதிவாகியுள்ளன. மொழியும் அதிகாரமும் தொடர்பாகப் பேசப்பட்ட காலமாகையால் தமிழ் மொழியுரிமை, மொழிக்கொள்கை, மொழிப்பிரச்சினை பற்றி உலகிற்கு வெளிப்படுத்தியுள்ளனர். தமிழை முதல்மொழியாகவும் இரண்டாம் மொழியாகவும் கற்பித்தல்[4] பற்றி தனிநாயகம் அடிகள் எழுதியதன் முக்கியத்துவத்தையும் உய்த்துணர்தல் வேண்டும்.

மொழியியலின் அடிப்படையில் தமிழ்மொழி பற்றிய ஆய்வுகள் தொடர்ந்துநடைபெற்றன. அன்ரொனொவ் (M. Andronov), குய்ப்பெர் (F.B.J. Kuiper), லிஸ்கர் (L. Lisker), ரற்றிள் (E.H. Tuttle), ஸ்வலபில் (K. Zvelebil), க்ளோஸொவ் (Y.Y. Glozov) தெ.பொ. மீ., க. கணபதிப்பிள்ளை, சண்முகம்பிள்ளை, மு.வ., ஏ. சந்திரசேகர், எஸ்.கே.சட்டேர்ஜி, பி.சி. கணேசசுந்தரம், எம். கணபதிப்பிள்ளை, ஏ. சதாசிவம், எஸ். வையாபுரிப்பிள்ளை, வி.ஐ.சுப்பிரமணியம், சி.சேகர், சித்தேஸ்வர் வர்மா இக்காலத்தின் அவதானிப்புக்குரியவர்கள்.

1950களின் பிற்பகுதியிலிருந்து மேலைத்தேசத்தில் மொழியியல் துறையில் புதிய திருப்பங்கள் ஏற்படத்தொடங்கின. மொழியியல் என்பது தனியே மொழிக்கூறுகளைப் பிரித்தெடுத்துவைத்து ஆயும் துறையல்ல. அது வாக்கிய நிலையில் வைத்து ஆராயப்படவேண்டியது எனும் விளக்கத்தைக் கொடுத்தனர். அமெரிக்கரான சோம்ஸ்கி இதில் முக்கியமானவர். ஆக்கமுறை மொழியியல் இவர்களது மொழியியல். வாக்கியத்தைப் பிரதானப்படுத்தி, அதன் ஆழ் அமைப்பு, மேல் அமைப்பு, அவற்றினால் கிடைக்கும்

பொருண்மை – கருத்து என்பவற்றைக் அறிவியல் துறைகளின் துணைகொண்டு -கணிதம் மூலம் விளக்கிக் காட்டினர். மொழியியலில் இணைக்கப்பட்ட புதிய வரவாகிய ஆக்கமுறை (Generative) மற்றும் மாற்றிலக்கண (Transformational) மொழியியல்களைப் புரிந்து உள்வாங்கி தமிழ் மொழி ஆய்வை 1970களின் பின்னர் மேற்கொண்டனர். ச. அகஸ்தியலிங்கம், செ.வை. சண்முகம், கி. அரங்கன் இவர்களில் முக்கியமானவர்கள்.

மொழியியலிலை இளமாணி தொடங்கிக் கலாநிதிப்பட்டம் வரை கற்றுத்தேர்ந்த மொழியியலின் புதிய தலைமுறையினர் பட்டம் மற்றும் மாநாட்டு ஆய்வுகள் 'தமிழ் மொழியியலை' நிலைநிறுத்த உதவின. இ. அண்ணாமலை, க.முருகையன், க. பாலசுப்பிரமணியன், சு. சக்திவேல், எஸ். சுசீந்திரராஜா, மு. சண்முகம்பிள்ளை (முத்துச்சண்முகன்), ச. அகஸ்தியலிங்கம், செ.வை. சண்முகம், கி. அரங்கன் கு. பரமசிவம், வ. சுப. மாணிக்கம், தனஞ்செயராசசிங்கம், ஆ. வேலுப்பிள்ளை, அ.சண்முகதாஸ், ஜான் சாமுவேல், சு. இன்னாசி, பொன். கோதண்டராமன் (பொற்கோ) எம்.ஏ. நு.ஃமான், கே. கருணாகரன், அ. பாண்டுரங்கன், சி. சிவசேகரம், டி.கே. ரகுநாதன், சோ.நா. கந்தசாமி, வி.ரி. செல்வம், ந. தெயவசுந்தரம், இரா. கோதண்டராமன், வி. ஞானசுந்தரம், எச். சித்திரபுத்திரன், ஏ. ஆதித்தன், எம். சுசீலா, சுபதினி ரமேஷ் வி.ரேணுகாதேவி, எஸ். ஜே. யோகராசா, ஏ. முனியன், கே. உமாராஜ் என இன்றுவரை இம்மரபு தொடர்கிறது.

இவை மட்டுமன்றி உலகின் பல நாடுகளிலும் பல்கலைக்கழகங்களில் தமிழ் மொழிபற்றியும் ஆய்வுகள் நடைபெறலாகின. அமெரிக்கா, இங்கிலாந்து, ரஷ்யா, பிரான்ஸ், ஜேர்மனி, சிங்கப்பூர், மலேசியா, செக்கோஸ்லாவாக்கியா, கனடா முதலிய நாடுகளில் இவ்வாறு ஆய்வுகள் நடைபெற்றுவருகின்றன.

இக்காலத்தில் செய்யப்பட்ட தமிழ் மொழி ஆய்வுகளை நுணுகி ஆய்வுசெய்தால் மொழியியல் ஆய்வுகள், இலக்கண ஆய்வுகள் என எதிர் நிலை இருப்பதையும் அவதானிக்கலாம். மாக்ஸிசம் முதலிய சில சித்தாந்தங்களில் இயங்கியோர் தமிழ் இலக்கண மரபைப் பேணிய பண்டிதர்களைப் புறந்தள்ளியதையும், விமரசித்துள்ளதையும் மொழியியல்தான் தமிழ் மொழியைக் காக்கவல்ல துறை என்பதைக் கூறித் தமிழின் இலக்கணப் பாரம்பரியத்தைத் தமிழ் பண்பாட்டிலிருந்து அகற்ற முயற்சிசெய்ததையும் அவதானிக்கலாம்.

செக்கோஸ்லாவாக்கியாவின் பிராகுவே மொழியியல் பள்ளியின் மத்தீஸியஸ் (Vilem Mathesius 1882 – 1945), லண்டன் மொழியியல் பள்ளியின் ஜே.ஆர். ஃபர்த் (John Rupert Firth 1890-1960) முதலியோர் இந்திய, சீன மொழிகளை ஆய்வுசெய்ததன் விளைவாக அவர்களால் முன்மொழியப்பட்ட செயற்பாட்டு மொழியியல் கொள்கைகள் அவர்களது மாணவர்களால் உருக்கொடுக்கப்பட்டது. குறிப்பாக ஹலிடேயின் ஒழுங்குமுறைச் செயற்பாட்டு மொழியியல் மொழியின் கொள்திறனுக்கும், அதன் ஒழுங்கமைப்புக்கும், அதன் இலக்கணச் செழுமைக்கும், முக்கியத்துவம் கொடுத்தது.[5] அக்கொள்கை பல மொழிகளுக்குப் பிரயோகிக்கப்பட்டது. ஆயினும் எந்தவொரு செயற்பாட்டு மொழியியல் கொள்கையும் தமிழ் மொழிக்கு பிரயோகிக்கப்பட்டு ஆய்வுகள் மேற்கொள்ளப்படவில்லை. தமிழ் மொழியியல் ஆய்வு வெறுமனே சோம்ஸ்கியன் - அமெரிக்க அமைப்பியல் வழி ஆய்வுகளுக்குள்ளேயே நின்று சுழல்கிறது. அக் கொள்கைச் சட்டம் மற்றும் மரவரிப்படச் சட்டகங்களுக்குள் தமிழைப் போட்டு ஆய்வு வேலைகள் நடைபெறுகிறது.

மொழியியல் ஆய்வாளர்கள் சிலர் கூட தமிழ் இலக்கண மரபில் வாக்கியம் அல்லது

வாக்கிய நிலை பற்றிய விளக்கங்கள் இல்லை, சொல்லிலக்கணத்தில் இன்ன வகைப்பாடு இல்லை, தமிழில் இன்ன ஒலி இல்லை, அதற்காக இன்ன ஆங்கில எழுத்துப் பக்கத்தில் எழுதப்படவேண்டும் போன்ற மலினமான ஆய்வுகளில் ஈடுபட்டுள்ளார்கள், என்றும் கூறவேண்டும்.

உ. எதிர்காலத் தமிழ் மொழி ஆய்வுகள்: அமைப்பு, ஒழுங்குமுறை, செயற்பாடு

ஒவ்வொரு மொழியும் தனித்துவமானது. அது தோன்றிய காலந்தொட்டுப் பயன்படுத்துவர்களின் தேவையைப் பூர்த்திசெய்தே வந்திருக்கின்றது. அதன் ஒலிகள், ஒலிகளுக்கான எழுத்துகள், சொல்வளம், இலக்கணம், இலக்கணம் கொடுக்கும் அமைப்பு, இவை அனைத்தும் மொழிப்பயன்பாட்டில் செயற்படும் முறைமை என்பன தனித்துவமானவை. இவை மொழிக்கு மொழி வேறுபடலாம்É சில ஒப்புமைகளும் இருக்காலாம். ஆனால் அந்த மொழியைப் பயன்படுத்துவர்கள் தமது மொழியை அதன் கொள்திறனை, பயன்பாட்டுத்திறனை காலத்துக்குக்கால் பெருக்குவதும் இற்றைப்படுத்துவதும் இன்றியமையாததுமாகும். அதற்கு அம்மொழி பற்றிய காய்தல் உவத்தல் அற்ற பன்முக ஆய்வுகள் வழிகோலும்.

தமிழ் மொழியின் ஒலிகள், ஒலிகளுக்கான எழுத்துகள், சொல்வளம், தொடர்கள் குறித்து அவற்றின் அமைப்பு (Structure/form), செயற்பாடுகள் (Functions), ஒழுங்குமுறைகள் (Systems) என்பவற்றைத் தமிழ் இலக்கண மரபுகளின் அடிப்படையில் ஆய்வுகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

ஒலிகள், ஒலிகளுக்கிடையிலான தொடர்புகள், சொல்லாக்கத்தில் ஒலிகளின் பண்புகள், தொடர் உருவாக்கம் மற்றும் கருத்துவெளிப்பாட்டில் ஒலிகளின் பங்களிப்பு முதலியவற்றை ஒலியியல், ஒலியனியல் ஆகிய உபதுறைகளில் சுரம் (tone), ஒலிப்பு (voice), உச்சரிப்பு (pronounciation), ஒலியழுத்தம் (accent) முதலியவற்றினால் சொற்கள், தொடர்களில் ஏற்படும் மாற்றம் அவற்றின் அர்த்தங்களின் மாற்றம் என்பனவற்றியெல்லாம் ஆய்வுசெய்யவேண்டியுள்ளது.

தமிழ் ஒரு ஒட்டுநிலை (agglutinative) மொழி என்பதால், உலகிலுள்ள மொழிகளுள் மிக அதிகளவில் சொல்லுருமாற்றம் (inflection) நடைபெறும் ஒரு மொழி என்பதால் சொல்லைச்சுற்றியே தமிழ் மொழியில் தொன்றுதொட்டு மேற்கொள்ளப்பட்ட மொழி-இலக்கண ஆய்வுகளை மேலும் விரிவுபருத்த வேண்டியுள்ளது. தற்போது உலகில் முக்கிய ஆய்வாகக் கருதப்படும் சொல்லிலக்கணம் (Lexicogrammar)[6] – சொல்லிலக்கணம் தமிழுக்குப் புதிதல்ல என்பதையும் நிலைநிறுத்திக்கொண்டு – சார் புதிய அணுகுமுறைகளைத் தமிழுடன் தொடர்புபடுத்தி ஆய்வுசெய்து, தமிழ் இலக்கணத்தில் சொல்லிலக்கணத்தை தொடக்ககாலத்திலே முதன்மைப்படுத்தினார்கள் என்பதையும் உலகத்திற்கு மேலும் ஆணித்தரமாகக் கூறவேண்டியுள்ளது.

தொடர், தொடரியல் குறித்த ஆய்வுகள் தமிழ் இலக்கண மரபில் இல்லை என்று சோம்ஸ்கிய ஆக்கமுறை (generative) மற்றும் மாற்றிலக்கணம் (transformational grammar) ஆகியன உருவாக்கிக் கொடுத்திருக்கும் 'விதி' களுக்குக் கட்டுப்பட்டு வாதிடும் சில ஆய்வாளர்களின் பார்வைகளையும் முடிவுகளையும் கேள்விக்குட்படுத்தி, தமிழ் மொழி வெறுமனே குறிப்பிட்ட ஒரு விதி (rule) அல்லது நிரல் (order) அமைப்புக்கு ஏற்பப் பயன்படுத்தப்படும் மொழி அல்ல என்பதை அமைப்பியல் விதிகளைக்கொண்டும் செயற்பாட்டு

விபரிப்பு முறைகளைக் கொண்டும் ஆய்வுசெய்யவேண்டும். தமிழின் ஒழுங்குமுறை செயற்பரடு (systemic function), ஒவ்வொரு பயன்பாட்டிலும் அது எடுத்துக்கொள்ளும் அமைப்பு என்பன விரிவாக காரணகாரிய ரீதியாக ஆராயப்படவேண்டும்.

உதாரணமாக: (அழகன், நாளைக்கு, பாடசாலைக்கு, போவான்)

அழகன் நாளைக்குப் பாடசாலைக்குப் போவான்
அழகன் நாளைக்குப் போவான் பாடசாலைக்கு.
அழகன் பாடசாலைக்கு நாளைக்குப் போவான்.
அழகன் பாடசாலைக்குப் போவான் நாளைக்கு.
அழகன் போவான் நாளைக்குப் பாடசாலைக்கு.
அழகன் போவான் பாடசாலைக்கு நாளைக்கு.
நாளைக்கு அழகன் பாடசாலைக்குப் போவான்
நாளைக்கு அழகன் போவான் பாடசாலைக்கு.
பாடசாலைக்கு அழகன் நாளைக்குப் போவான்.
பாடசாலைக்கு அழகன் போவான் நாளைக்கு.
போவான் அழகன் நாளைக்குப் பாடசாலைக்கு.
போவான் அழகன் பாடசாலைக்கு நாளைக்கு.
நாளைக்குப் பாடசாலைக்கு அழகன் போவான்
நாளைக்குப் போவான் அழகன் பாடசாலைக்கு.
பாடசாலைக்கு நாளைக்கு அழகன் போவான்.
பாடசாலைக்குப் போவான் அழகன் நாளைக்கு.
போவான் நாளைக்கு அழகன் பாடசாலைக்கு.
போவான் பாடசாலைக்கு அழகன் நாளைக்கு.
நாளைக்குப் பாடசாலைக்குப் போவான் அழகன்
நாளைக்குப் போவான் பாடசாலைக்கு அழகன்.
பாடசாலைக்கு நாளைக்குப் போவான் அழகன்.
பாடசாலைக்குப் போவான் நாளைக்கு அழகன்.
போவான் நாளைக்குப் பாடசாலைக்கு அழகன்.
போவான் பாடசாலைக்கு நாளைக்கு அழகன்.

என, அழகன், நாளைக்கு, பாடசாலைக்கு, போவான் ஆகிய சொற்களைக் கொண்டு சூழமைவுப் பண்பாடு (context of culture), சூழமைவுத் தருணம் (context of situation) என்பவற்றுக்கேற்ப உருவாக்கக்கூடிய அமைப்புகளையும் அவை ஒழுங்குமுறைக்கு (system) ஏற்பச் செயற்பட்டு (function) இலக்கண வரம்பின் துணையுடன் அர்த்தம் அல்லது பொருள்(கள்) வெளிப்படுத்துவதை விரிவாக ஆய்வுசெய்யவேண்டும். அத்துடன் சொற்புணர்ச்சியில் நடைபெறுகின்ற மாற்றங்களையும் அவதானிக்கவேண்டும். இவை தமிழ் மொழிக்கான சிறப்புகள்É வேறும் சில மொழிகளுக்கும் உண்டு. சில மொழிகளுக்கு இல்லாதவை.

"எல்லாச் சொல்லும் பொருள்குறித்தனவே" எனச் சொற்கள் அனைத்துக்கும் பொருள் உண்டு எனக் கூறித் தமிழ் மொழிப் பயன்பாட்டுக்கு உதவும் கூறுகளின் முக்கியத்துவத்தை

எடுத்துக்கூறும் தொல்காப்பியத்திலிருந்து எவ்வாறு சொல்லிலக்கணம் கட்டியெழுப்பப்பட்டதோ அதை மேலும் விரிவுபடுத்துவதுடன், சொற்கள் கொண்டு அமைக்கப்படும் தொடர்களின் அடிப்படையான "இலக்கணத்திற்குப் பொருள் உண்டு" என்பதைச் சற்று விரிவாக, ஒரு மொழியின் இலக்கணமே பொருள் கொள்ளலின் சொற்களுக்கு அடுத்த நிலையில் ஆனால் ஒரு பிரதியின் (text) – பிரதி என்பது குறைந்தபட்சத் தொடரைக்கும் - முழுப் பொருளை வழங்கும் வளம் (resource) என்பதையும் விலாவாரியாக ஆய்வுசெய்யவேண்டும்.

ஊ. ஒப்பியல் ஆய்வு: உள்ளங்கை நெல்லிக்கனி

தமிழ் மொழி உலகமொழிகள் பலவற்றைவிடத் தொன்மையும் செழுமையும் கொண்டது என்பது இதுவரை நடைபெற்ற சில ஒப்பியல் ஆய்வுகளிலிருந்து புலப்படுகின்றது. இவ்வாறன தமிழ் மொழிபற்றிப் பல மொழிகளைப் பேசுவோரும் ஆய்வுசெய்துள்ளனர். பல மொழி களிலும் ஆய்வுகள் நடைபெற்றுள்ளன. பல தேசத்தவரும் ஈடுபட்டுள்ளனர். ஆனால் தற்போது தமிழ் மொழியைத் தாய்மொழியாகக் கொண்டோர் பல நாடுகளில் அந்நாட்டுக் குடியுரிமை பெற்று, அந்நாட்டுத் தேசிய – கல்வி மொழிகளைத் தமது முதல் மொழியாகக் கொண்டு வாழ்ந்து வருகின்றார்கள். இவர்கள் மத்தியிலிருந்து தமிழ் மொழி ஆய்வாளர்கள் தோன்றவேண்டும். தமிழ் மொழியைத் தமது நாட்டு மொழி, மொழிகளிகளுடன் ஒப்பிட்டு அறிவியல் பூர்வமாக, இற்றைப்படுத்தப்பட்ட- சமகால மொழியாய்வுக் கோட்பாடுகளைக் பிரயோகித்துப் பக்கச்சார்பற்று, சித்தாந்தக் குழுச் சேற்றுக்குள் அடியெடுத்து வைக்காது ஆய்வுசெய்து, தமிழ் மொழியின் தொன்மைகள், பண்புகள் - அமைப்பு (Structure/form), செயற்பாடுகள் (Functions), ஒழுங்குமுறைகள் (Systems) – பயன்பாட்டுத் தன்மைகள், தகவல் தொழிநுட்பத்துக்கு ஈடுகொடுக்கும் திறன் என பல விடயங்கள் குறித்தும் ஆய்வுகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

பொதுவாகச் சம அளவான பன்மொழி அறிவுள்ளவர்களின் ஒப்பியல் ஆய்வுகள் பல உண்மைகளை வெளிக்கொணர்வனவாக அமையும். இத்தகைய ஆய்வுகள் தமிழ் மொழிப் பயன்பாடுகளில் மேலதிக ஆய்வுகளுக்குத் துணைநிற்கும். அத்துடன் தமிழ் மொழிக் கற்றல்-கற்பித்தல் சாதனங்களை – நூல்கள், தளங்கள், செயலிகள் - மீள அல்லது புதிதாக உற்பத்திசெய்யவும், இற்றைப்படுத்தவும் உதவும். மேலும் தமிழ் மொழியை இன்னும் அறிவுபூர்வமாகவும் ஆணித்தரமாகவும் உலகில் பிரபலப்படுத்தவும் உதவும்.

எ. பொறி மொழி, இயற்கை மொழிச் செயலாக்கம், பொறி மொழிபெயர்ப்பு

தமிழ் மொழியின் அமைப்பு, செயற்பாடுகள், ஒழுங்குமுறைகள், பயன்பாட்டுத் தன்மைகள் குறித்த ஆய்வுகள் தமிழைத் தொடர் தகவல் தொழிநுட்ப வளர்ச்சிக்கு ஈடுகொடுக்கும் வகையில் ஆய்வுகள் மேற்கொள்ளப்படவேண்டும். இத்தகைய தொடர் ஆய்வுகள் தகவல் மொழிநுட்ப யுகத்தில் தமிழ் மொழியை பொறி மொழி (Mechine Language), இயற்கை மொழிச் செயலாக்கம் (Natural Language Processing), பொறி மொழிபெயர்ப்பு என்பவற்றில் மேலும் செம்மையுடன் பயன்படுத்த உதவும்.

தகவல் தொழிநுட்பத்திலும், கணினிப் பொறிகளிலும் மேல்நிலை மொழியாகத் தமிழும் பயனபாட்டுக்குவந்து பலவாண்டுகள் கழிந்துவிட்டன. ஆனாலும் எழுத்துச் சீர்திருத்தம், சொற்தெரிவு, தொடரியல் இயைபு மற்றும் திருத்தம் குறித்து இன்னும் சிறந்த ஆய்வுகள் தேவை. அதற்குத் தமிழ் மொழி மீதான சிரத்தையும், தமிழ்மொழிக்கேயான இலக்கணம் பற்றிய பிரக்ஞை பூர்வமான தெளிவும் உதவும். தமிழைத் தமிழுக்கு உரிய விதிகளுக்குட்பட்டே பயன்படுத்தத் தெரிந்துகொள்ளவேண்டும்.

அண்மைக்காலமாக, கணினியின் துணைகொண்டு நடைபெறுகின்ற மொழிபெயர்ப்புகளில் சில மொழிகளிலிருந்து உடனடியாகத் தமிழுக்கு மொழிபெயர்க்கும் தொழிநுட்பத்தை தமிழுலகம் அதிகம் பயன்படுத்திவருகிறது. ஆனாலும் பிறமொழிகளில் உள்ளது போலவே தமிழிலும் நிறைப் பிழைகள் இடம்பெறுகின்றன. அமைப்பு மொழியியல் அடிப்படையான தொடரியல் விதிகளைப் பிரயோகித்திருப்பதால் உரிய பொறி மொழிபெயர்ப்புகளை வழங்காத சந்தர்ப்பங்களை நாம் அன்றாடம் அவதானிக்கக்கூடியதாகவுள்ளது. இது பற்றிய மேலதிக ஆய்வுகள் தேவை.

ஆங்கிலம், ஜேர்மன், ஜப்பான், சீனம் முதலிய குறிப்பிட்ட மொழிகள் கணினியை இயக்குகின்ற மொழிகளாக உள்ள. அவற்றிலே கணினிக்கான நிரலாக்க மொழிகளை (programming language) எழுதுகிறார்கள். இத்துறைகளிலே வேலைசெய்யும் தமிழ் மொழிசார்ந்தோர் இன்றுவரை தமிழை ஒரு நிரலாக்க மொழியாக உருவாக்கப் பாடுபடுகிறார்கள். வெற்றிபெறவேண்டும். ஏனெனில் நிரலாக்க மொழிகளாக உள்ளவை வெவ்வேறு எழுத்துமுறைகளைக் கொண்ட மொழிகள். எனவே தமிழாலும் முடியும் என்பதைச் சாதித்துக்காட்டவேண்டும் என்பதைத் தமிழ்கூறும் நல்லுலகம் அவாவி நிற்கின்றது.

ஏ. முடிவுரை

காலவெளித் தத்துவத்தில் மொழி பற்றிய ஆய்வுகள் காலத்துக்கேற்ப அவசியம் இயங்கவேண்டும் என்பது எதிர்பார்க்கப்படுகிறது. இதுவரை நடைபெற்ற ஆய்வுகள் தமிழ் மொழி வளர்ச்சிக்கும் அதன் சமூக வளர்ச்சிக்கும் குறிப்பிடத்தக்க பங்களிப்பைச் செய்துள்ளன.

ஆனால், மொழிபற்றிய பிரக்ஞை மக்கள் மத்தியில் குறைந்துகொண்டுசெல்கின்றதை அவதானிக்கமுடிகின்றது. இது பற்றியும் ஆய்வுதேவை. மொழியியல் கலைச்சொல்லாக்கத்தில் தரப்படுத்தல் தேவை. மொழியியல் அல்லது இலக்கணக் கல்வி மக்களிடம் குறிப்பாக கல்விப்புலத்திலிருந்து அந்நியப்படுவதைத் தவிர்க்க வழிவகை செய்தல் வேண்டும். புதிய உலகில் மொழியின் புதிய பயன்பாட்டுத் தளங்கள், தேவைகள் குறித்த இற்றைப்படுத்தப்பட்ட ஆய்வுகள் தேவை.

1 David W. A. and D. Ringe (2015) *The Indo-European Homeland from Linguistic and Archaeological Perspectives.* Annual Review of Linguistics 2015. 1:199–219.

2 Alice, C., J.R.Martin, CMIM. Mattiessen, Introduction- systemic functional typology in Language Typology: A Functional Perspective p.12-13

3 சோழமண்டலத் தமிழும் ஈழமண்டலத் தமிழும், செந்தமிழ் 38:2 1941

4 Tamil culture Vol.III No. 1 Jan 1954 p. 9 "The Teaching of Tamil"

5 Halliday, M. A. K. (1994), *An Introduction to Functional Grammar* (2nd ed). London: Edward Arnold. Halliday, M. A. K. & Matthiessen, C. M. I. M. (2004). *An Introduction to Functional Grammar*. London: Arnold.

6 Matthiessen, C. M. I. M. (1995). *Lexicogrammatical cartography: English Systems*. Tokyo: International Language Science Publishers.

தமிழர் பண்பாட்டில் சாதி அமைப்பு – எதிர்கொள்ளும் மாற்றங்களும் தீர்வுகளும்

முனைவர் அரங்க.மு.முருகையன்.
உதவிப்பேராசிரியர்
புதுவைப்பல்கலைக் கழகச் சமுதாயக் கல்லூரி. புதுச்சேரி. இந்தியா.
muruguarul@gmail.com

சாதி என்பது குறிப்பிட்ட மக்கள் திரட்சியைக் குறிக்கின்ற சொல்லாக அமைந்தாலும் அது இனம், குலம், குடி, பரம்பரை எனும் பல பொருளுடையதாக வழங்கி வந்துள்ளது. இச்சாதியானது "பிறப்பினடிப்படையில் குறிப்பிட்ட எல்லைக்குட்பட்ட உறுப்பினர்களைக் கொண்டு அமையும் குழு. குழுவினது உறுப்பினர்கள் வெளிக்குழுக்களில் இருந்து திருமணம் புரிவது சமுகச் சட்டங்களால் தடை செய்யப் பட்டிருக்கும்" என்கிறார் கெட்கர்.

சாதி அமைப்பு:

சாதியானது தொழில் அடிப்படையில் பரம்பரைத்தொழில் உரிமை, அகமணம், அகமணக் கட்டுப்பாடு, பிறப்புத் தீட்டு, தூய்மை எனும் அடிப்படையிலான சமுகச் செயல்பாடுகளோடு தொடர்புடையதாக இருக்கும். இவ்வகைக் கூறுகளைக் கொண்டமக்கள்கூட்டம்செயல்பாட்டினால்தொழில்அடிபடையில்வளர்க்கப்பட்டு அகமண முறையினால் பரம்பரை பழக்கவழக்கங்களைக் கடைபிடித்து வரும் மக்கள் கூட்டத்தைக் கொண்டதாக இருக்கும்.

"ஒவ்வொரு குழுவும் தங்களுக்கென தனியான வரன்முறை செய்யப்பட்ட சமூகச் சட்டங்களைக் கொண்டு இயங்கும். ஒவ்வொரு சாதியும் உட்பிரிவுகளைக் கொண்டு தனி அலகாக் கொண்டு செயல்படும். ஒவ்வொரு சாதியும் அதன் உறுப்பினர்களைத் திருமணம், உணவு உண்பது முதலியவற்றில் சில கட்டுப்பாடுகளை விதித்து அக்கட்டுப்பாடுகளை மீறி எவரும் செயல்படாமல் பார்த்துக்கொள்ளும்."

"சாதிப்படிநிலையில் உயர்ந்த சாதிகள் தாழ்ந்தசாதிகளோடு கலந்து உண்பதும், உறவு கொள்வதும் தடை செய்யப் பட்டிருக்கும். ஒவ்வொரு சாதிக்கும் தனித்தனியான சடங்குகள் அமைவதோடு அவை சாதிக்குரிய தனித்தன்மையாகக்

கருதப்படும். உயர் சாதியினர் தாழ்ந்தசாதியினரை நெருங்கவதிலும், தாழ்ந்த சாதியினர் உயர்ந்த சாதியினர்களை நெருங்குவதிலும் தூய்மை, தீட்டு என்னும் கொள்கைகளின் வழி சாதி தனது இறுக்கத்தை நிலைநாட்டிவரும்"(மு.முருகையன். பக்.02)

தமிழ் மொழியைப் பேசிவாழும் தமிழர்ப் பண்பாடில் சாதி பின்வரும் சிறப்புத் தன்மையோடு நிலைபெற்றுள்ளது. ஒருவர் எந்தச் சாதியில் பிறக்கின்றாரோ இறக்கின்ற வரையிலும் அவர் அந்தச் சாதிக்குரியவராகவே கருதப்படுவார். அவர் விரும்பினாலும் வேறுசாதிக்கு மாற இயலாது முடியாது. ஒருவர் மதம் மாறி வேறு மதத்தின் முறைகளை பின்பற்ற இயலும் ஆனால் சாதி அமைப்பில் அவ்வாறு மாற்றம் பெற அனுமதியில்லை. எனவே பிறப்பு, சாதி அமைப்பின் அடிப்படைப் பண்பாகக் கருதப்படுகின்றது.

சாதியும் சமுக அமைப்பில் மாற்றங்களும்:

சாதி அமைப்பானது படிநிலையில் மேலானதாகப் பிராமணர்களும், அடிதட்டு நிலையில் தாழ்த்தப்பட்ட மக்களையும் கொண்ட அமைப்பாக உள்ளது. பிராமணர்களோடும் பிராமணச் சடங்குகளோடும் தொடர்புடைய சாதிகள், படி நிலையில் உயர்ந்ததாகவும் பிறசாதிகள் தாழ்ந்த நிலையிலும் உள்ள படி நிலை அமைப்பாக இச்சாதி அமைப்பு செயல்படுகின்றது.

திருமணம், இறப்புச் சடங்குகள் போன்றவற்றில் பிராமணர்களின் தொடர்பு சாதிக்குரிய சமூகத்தளத்தை நிர்ணயம் செய்வதால் பெரும் பாலும் இன்றளவிலும் இந்நிலை சாதியத்தளத்தைத் தக்கவைப்பதாகவே இருந்து வருகின்றது. அறிவியல் தொழில்நுட்பம் வளர்ந்த நிலையிலும் சடங்கு வழியில் இச்சாதியின் கட்டமைப்பு பாதுகாக்கப்பட்டு வருகின்றது.

திருமணத்தின் வழி சாதி மாற்றம்:

சாதியைக் கட்டிக்காக்கும் மிகப்பெரிய கூறாக அகமணக் கட்டுப்பாடுகளே இருந்தது: இன்றும் இருந்து வருகின்றது. ஒருசாதிக்குள்ளாகவே திருமண உறவு கொள்வது சாதியத்தைத் தக்கவப்பதேயாகும். இன்றளவில் கல்வியிலும் வேலை வாய்ப்பிலும் சாதி எண்ணங்களுக் கெதிரான செயல்பாட்டில் இயங்கினாலும் பெரும்பாலான திருமணங்கள் சாதிய எல்லைக்குட்பட்டே நடத்தப்படுகின்றன.

படித்து ஒரே இடத்தில் பணிபுரிகின்றவர்கள் வெவ்வேறு சாதிக்குரியவராக இருப்பினும் அவர்களிடையேதிருமணங்கள் சாதிவேற்பாடின்றி நடந்தேறுகின்றன. தமிழக அரசும் கலப்புத் திருமணத்தை அங்கிகரிக்கும் நோக்கில் ஊக்கத் தொகையை வழங்கிவருகின்றது. படித்தவர்கள் கலப்புமணத்தைப் புரிந்தாலும் சட்டவரைவுகள் தந்தை எந்தச் சாதியைச் சார்ந்தவரோ அந்தச் சாதியே அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைக்களுக்குப் பொருந்தும் என்ற நீதிமன்ற தீர்ப்பு குறிப்பிடுகின்றன. எனவே இன்று வரையிலும் கலப்பு மணம் என்பது சாதிய வேரைத் தகர்க்கும் நிலையில் தோல்வியையே சந்தித்துள்ளது. கலப்புமணம் புரிந்தோரின் குழந்தைகள் திருமணவயதில் அவர்களுக்கான வாழ்க்கையை அமைத்துக் கொள்வதற்கு ஆண், பெண் தேர்வுகளில் சாதித் தன் பன்முகப் பார்வையை நிலைநாட்டுகின்றது.

சாதிவளர்ச்சியில் எப்படி சாதியை எதிர்க்க ஒரு இயக்கமாகப் போராடியவர்கள் "கபிர்பந்து" எனும் தனித்தசாதியினராக மாறினரோ அதே நிலயில் தான் சாதி ஒழிப்பு எனும் முற்போக்குச் சிந்தனையுடன் கலப்புமணம் புரிகின்றவர்கள் சாதிச் சமூகத்தில் தனித்த நிலையில் செயல்பட வேண்டியுள்ளது. பொருளாதாரத்தில் மேம்பட்டவர்களுக்கு இந்தச் சாதிகலப்பு மணம் துணைபுரிந்தாலும் பொருளாதாரத்தில் பின்தங்கிய மக்களுக்கு வாழ்க்கை நிலை கேள்விக் குறியே. எனவே நன்கு படித்தவர்களும் சாதி அமைப்பில் பெரிதும் தங்கள் பிள்ளைகளுக்குச் சாதிக்குள்ளாகவே கொள்வினை கொடுப்பினைகளில் ஈடுபடுகின்றனர். இதனால் இன்றளவிலும் சாதி தன் கட்டமைப்பைத் தகர்க்கவிடாமல் இறுகியதன்மையோடு ஆதிக்கத்தை நிலநாட்டி வருகின்றது.

சாதியும் தொழில்வழி மாற்றமும்:

தொழில்வழிச்சாதிகளேதொடக்ககாலத்தில்சாதிஅமைப்பின்அடையாளமாக விளங்கின. "நெஸ்பீல்டு என்பவர் சாதிகளை அவரவர் செய்யும் தொழில்களில் காணப்பட்ட வேறுபாட்டினால் ஏற்பட்டன என்றும் அத்தொழில் வேறுபாடுகளின் தன்மை தூய்மை(purity) தீட்டு(pollution) ஆகிய கருத்தாக்கங்களால் மதிப்பிடப் பட்டது என்றும் சாதி அமைப்பையும் அதன் செயல்பாட்டையும் அறுதியிடும் காரணியாகத் தொழில்கள் அமைந்தன" என்கிறார்.

பிராமணர்கள் தொடங்கி சூத்திரர் வரை உள்ள பெரும்பாலான சாதிகள், "பதினெண்குடிவேளிர் என்று கூறப்படும் சாதிகள், தொழில் வழியினால் தோன்றியவை. இன்று தனித்தனியான சாதிகளாக வளர்ந்துள்ளன. அவை கைகோளர், தச்சர், கொல்லர், கம்மாளர், தட்டார், கன்னார், செக்கார், மருத்துவர், குயவர், வாண்ணார், துன்னர், ஓவியர், பாணர், கூத்தர், மங்கலர், சங்கறுப்பர், பாகர், பறையர்," என்பனவாகும்.( )

இவைகள் அனைத்தும் தொழில் வழி அடையாளத்தோடு இன்றளவும் சாதிகளாக இனம் காணப்படுவன. இவ்வாறு தொழில் அடிப்படையில் இனம் காணப்பட்ட பல்வேறுசாதிகள் பரம்பரை பரம்பரையாக அத்தொழிலையே மேற்கொண்டு வருவதால் சாதியின் தன்மை இறுக்கத்தோடு அமைந்து விடுகின்றது. அறிவியல் வளர்ச்சியிலான தொழில்மாற்றங்களால் குறிப்பிட்டத் தொழிலை மட்டும் செய்துவாழ்ந்த மக்கள் பிற தொழில்களிலும் ஈடுபட்டுப் பணம் ஈட்டுகின்றனர். உதாரணமாக, மீன் பிடித்து வாழும் மீனவர்கள் பரதவர், செட்டியார், செம்படவர் என்ற சாதி அடையாளத்தோடு சமுகத்தில் இடம்பெறுகின்றனர். பரம்பரைத் தொழிலான மீன் பிடித்தலில் ஈடுபடுகின்றவர் போக மீதம் உள்ள கற்றவர்கள் பல்வேறு அரசு, தனியார், வியாபாரத் தொழில்களில் ஈடுபடுகின்றனர். மீன்விற்பது, மீன் வணிகம் செய்வது, மொத்தமாக கடல்சார் வளங்களை வாங்கி விற்பது போன்ற தொழிலில் பொருளாதாரத்தில் உயர்ந்த இடத்தில் இருப்பவரும் அங்கம் வகிக்கின்றனர்.படகு போன்ற மீன் பிடிச் சாதனங்களை அனைத்துச் சாதியினரும் வாங்கி தொழிலில் ஈடுபடுகின்றனர். ஆனால் மீன்பிடித் தொழிலில்பெரும்பாளும் ஈடுபட்டுபவர்கள் மேற்கண்ட மீனவ இன மக்களே.

இதைப் போலவே பொற்கொல்லர், கருமார், தச்சர் போன்றோர் தத்தம் மக்களுக்குரிய தொழில்களைச் செய்து வந்தாலும் அவற்றைப் பெரிய அளவில் சந்தை படுத்துவதில் வசதி உள்ள பிற சாதி மக்கள் எவ்வித சாதிவேற்றுமையும் பாராது அத்தொழிலில் ஈடுபடுகின்றனர்.

தோல் தொழிலில் ஈடுபடும் அருந்ததியர் மற்றும் சக்கிலியச் சாதியினர் காலணிகளை உற்பத்தி செய்தாலும் சந்தைப்படுத்துவதில் அல்லது விற்பனை செய்வதில் நேரிடையாகப் பங்குபெறுவது மிகக் குறைவு. உற்பத்தியான காலணிகளை அனைவரும் வசதிக்கேற்ப கடைகளில் விற்றுப் பணம் ஈட்டுகின்றனர். இவர்களிடையே சாதி வேற்றுமைகள் பாராட்டப்படுவது இல்லை. என்றாலும் காலணிகளைப் பெரிதும் உற்பத்தி செய்பவர்கள் மேற்கண்டச் சாதிக்குரியவர்களாக இருந்தாலும் மிகப்பெரிய காலணி உற்பத்தி நிறுவனங்களில் சம்பளத்திற்காக வேலையும் செய்கின்றனர். தொழிற்சாலைகளில் உற்பத்தியில் மறைந்து போகும் சாதி அடையாளங்கள் சிற்றூர்களில் சிறுதொழில்கூடங்களில் இன்றளவும் அவர்களது சாதி சுட்டப்படுகின்றது.

மன்னராட்சி தொடங்கி மக்களாட்சிச் சட்டங்கள் நிறைந்த சமுக்ததில் இன்றும் பறையடித்தல் தாழ்த்தப்பட்ட மக்களுக்குரியதாகவே இருந்துவருகின்றது. இது கோவில் திருவிழாக்களிலும் இல்லச்சடங்குகளிலும் குறிப்பிட்ட மக்களாலேயே இன்றும் செய்யப்படுகின்றது. ஆயினும் பறையடித்தல் 'கலையாகப் போற்றப்படும் போது, கோயில் மேளம் அடித்தல், நாயணம் ஊதுதல், சங்கு ஊதுதல் போன்றவை, குறிப்பிட்ட தொழில்வழிச் சாதியரைச் சார்ந்திராமல் விருப்பமுள்ள அனைத்துச் சாதியினர்க்கும் உரியதாய் அமைகின்றது. ஆனால் இத்தன்மையினால் சமுகத்தளத்தில் தாழ்த்தப்பட்டவர்களாக உள்ள மக்கள் ஈடுபடும் தொழில் சார்ந்த நிலையில் சாதி அடையாளத்தில் எத்தகு மாற்றமும் ஏற்பட்டதாகக் கூறுவது விழுக்காட்டு முறையில் மிகக் குறைவுதான். நன்கு படித்த இவ்வின மக்களும், படிக்காதோரும் தேவை ஏற்படின் இத்தொழிலைத் தொடர்ந்து மேற்கொண்டு தங்கள் சாதி இறுக்கத்தைத் தக்கவைத்துக் கொள்கின்றனர். எனவே, சாதி இறுக்கம் என்பது தொழில் அடிப்படையில் இருந்தாலும் அவைமேற்கொள்ளப்படும் இடத்தாலும், அவை விற்பனைச் செய்யப்படும் இடத்தாலும் தன் இறுக்கத்தன்மையைத் தளர்த்திக் கொள்கிறது. ஆனால் சிற்றூர்களிலும் திருவிழா, இல்லச்சடங்குகளிலும் சாதித்தன்மைகள் அதற்குரிய அடையாளத்தோடு தொடர்ந்து வருகின்றது.

உணவுப் பழக்கவழக்கமும் சாதியச் செயல்பாடுகளும்:

சாதிய நிலையின் வளர்ச்சி காலக் கட்டங்களில் உணவு சாதியத்தின் தனித்தன்மையை அடையாளப்படுத்தும் தனிக்கூறாகக் கருதப்பட்டது: இன்றும் கருதப்படுகின்றது. மாட்டிறைச்சியை உண்பதும் தோல் தொழிலில் ஈடுபடுவதும் சாதிப்படிநிலையில் தாழ்ந்திருந்தோருக்குரியது என்கின்ற அடையாளம் இன்று மெல்ல தகர்ந்திருந்தாலும் "தீண்டாமையை" ஒருகாலத்தில் நிலைநிறுத்திய கோரத்தன்மையை மாட்டிறைச்சி உண்பதனாலேயே சமுகத்தளத்தில் அரங்கேற்றியது. வைதீக மரபுகளின் இறுக்கப்பார்வை ஒருபுறமும் வருணநிலையின் ஆதிக்கத் தன்மை மறுபுறமுமாக மக்களைத் "தீண்டாமை" எனும் நிலைக்குத் தள்ளியது.

விலங்குகளின் இறைச்சியை உண்போரில் மாட்டிறைச்சியை உண்போரைமட்டும் சாதி சார்த்திப் பார்க்கும் பார்வையை நிலை நிறுத்தியது யார்? என்ற கேள்விக்கு விடைதேடும் போது அங்கே மேல்நிலையாக்க வைதீகக் கொள்கையின் தாக்கம் தன் ஆதிக்கத்தைக் காட்டுகின்றது. மாட்டிறைச்சி உண்போர் தீட்டு, புனிதம் என்ற கொள்கையால் சமூகத்தளத்தில் விலக்கிவைக்கப்படிருந்தாலும் இன்று மாட்டிறைச்சி உணவாகச் சிற்றூர் புறங்களில் வாழும் மேல் தட்டு மக்களிடையே விலக்கப்பட்ட உணவாக இருந்துவருகின்றது. ஆனால் நகர்ப்புறங்களில் உள்ள உணவகங்களில் இன்று நாகரிகம் கருதி மாட்டிறைச்சி உண்ணும் உணவு வகையாக விளங்குகின்றது. சாதிவேற்றுமையின்றி விரும்பும் அனைவரும் உண்ணும் உணவு வகை மாட்டிறைச்சியாக அமைகின்றது. எனவே, தீண்டாமையின் தன்மை உணவு நிலையில் மாறி இருந்தாலும் சாதி ஆதிக்கச் சமுகத்தில் இன்று வரையிலும் அது சாதிக்குரியப் பண்பாகவே பார்க்கப்பட்டுவருகின்றது.

கல்வி, பொருளாதாரத்தில் மாற்றம்:

சாதியை எதிர்த்துக் குரல் கொடுத்தோர் பட்டியலில் நீண்டிருந்தாலும் சாதிப் பண்பாட்டிற்குரியவராகவே இன்றுவரையிலும்நாம்வாழ்ந்துகொண்டிருக்கிறோம். கல்வி, பொருளாதாரசமன்பாடு, வேலைவாய்ப்புகள், அனைத்துச்சாதிகளுக்குமான குடியிறுப்புகள், சாதிச் சங்கங்களின் செயல்பாடுகள், சாதிசமத்துவக்குழுக்கள், சாதிசமத்துவச் சட்டங்கள் என எத்தனையோ சட்டதிட்டங்களைச் சாதிப்பண்பாடு எதிர்கொண்டாலும் "தனித்துவமிக்க சாதிக்கூறுகளில் இருந்து இன்றளவிலும்" ஆதிக்கத் தன்மையிலிருந்து குறைந்ததாக தெரியவில்லை. அங்கொன்றும் இங்கொன்றுமான புள்ளி விவரங்கள் சாதி சமத்துவத்தைக் காட்டினாலும் அவை அனைத்துமே சாதிய ஓவியத்தின் மேல் பூசப்படுகின்ற தேவையற்ற வண்ணங்களாகவே காட்சித் தருகின்றன.

ஒருபுறம் சாதி அடையாள அரசியலும், அரசியல் சட்டங்களும், பல்வேறு சாதிக் குழுக்களுக்கான அடையாளத்தை வெளிப்படுத்தும் பழக்கவழக்கங்களும் சடங்குகளும், திருமணமுறைகளும் வழிபாட்டு முறைகளும், திருவிழாக்களும், கல்வி, வேலைவாய்ப்பு ஒதுக்கீடுகளும் மெல்ல மறைந்தாலொழிய, இந்தியா போன்ற நாடுகளிலும் சாதியச் சமூகத்தைச் சார்ந்தவர்கள் பரவியுள்ள நாடுகளிலும் சாதியப் பண்புகள் மேலோட்டமாக அழிக்கப்பட்டதைப் போல தெரிந்தாலும் அவை புற்றுநோயைப் போல் ஏதேனும் வடிவத்தில் தன் சாதி அடையாளத்தை வெளிப்படுத்தியே நிற்கு என்பது மறைக்க முடியாத உண்மை.

குறிப்பு நூல்கள்:

1. முனைவர் அரங்க. மு.முருகையன். 1999. காலந்தோறும் சாதி. இலக்கிய வெளியீடு. புதுச்சேரி.

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம்
INTERNATIONAI MOVEMENT FOR TAMIL CULTURE
Non-Profit, Non-Political, Non-Religious, Charitable, Worldwide Registred, tamil Cultural Organization - Est. in 1974
Head Office 5310 Finch Ave. East, Unit #10, Toronto, Ontario M1S 5E8
Tel: 1.647.829.4044 email: raja@ctsglnc.com
www.imtcweb.com

திரு.மாவை சோ தங்கராசா
ஆலோசகர் 13வது உலக மாநாடு - தலைமையகம் -
யேர்மனி



தமிழ்ப்பண்பாடு

பல்லாயிரம் ஆண்டுகளாக பேணிப்பெற்ற மனிதனின் வாழ்வியல் வளர்ச்சியை நாம் நோககு வோமானால் தனக்கேயுரிய சிறப்புப் பண்புகளினாலேயே மனிதன் பிற விலங்குகளினின்றும் சிறந்த விலங்கு என வேறுபட்டுக் காணப்படுகிறான். இயற்கைப் படைப்பின் மணிமுடியாக விளங்குபவன் மனிதனாவான்.. சமுதாய விலங்காகிய மனிதன் அவன் வாழும்போது அகவளர்ச்சி எனச் சொல்லப்படுவதற்கு - மனமே மனிதனுடைய பண்பாட்டை வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்லவும் பேணிப் பாதுகாக்கவும் காரணமாக இருக்கின்றது. பண்பாடில்லாதவன் மனிதன் அல்ல . மிருகத்தனமாக காட்டுமிராண்டியாக இருக்கிறான் என்றெல்லாம் கடிந்து சொல்லப்படுதை சாதாரணமாகவே சுட்டிக்காட்டப்படுகிறது.. ஆகவே மனிதனின் வாழ்க்கையில் அவனது பிறப்பின் பயன் சமுதாய முன்னேற்றத்துக்குப் பயன்பெற வேண்டுமாயின் அவனிடத்தில் தூய்மை, அருள், வாய்மை ,ஒப்புரவு, கண்ணோட்டம், ஈகை, நாணம் முதலிய பண்புகள் அனைத்தும் காணப்பட்டாலே தான் உயர்ந்த பண்புள்ளவன் எனக் கருதக் கூடியதாக இருக்கும். இப்பண்புகள் தான் மனிதன் தனது வாழ்க்கையில் தன்னலத்தை ஓரளவு புறந்தள்ளிவிட்டு பொது நலத்தைப் பேண வழிவகுப்பதன் வாயிலாக பிறரோடு இணைந்து கொள்ளும் உறவியலுக்கு அடிப்படையாக இருக்கின்றது.

நாகரிக வளர்ச்சியினால் பண்புகள் அதிகரித்துக் காணப்பட்டாலும் சமயநெறிகள், தமிழ்மரபுகள், பாரம்பரிய வாழ்க்கை முறைகள், தொழில் முறைகள், கலை கலாச்சாரங்கள் என்பன தமிழ்ப்பண்பாடுகளைப் பேணிப்பாதுகாப்பதற்கு அடிப்படைத்தன்மைகளைக் கொண்டதாக அமைந்துள்ளன.. அறநெறி எனச் சொல்லப்படுகின்ற நீதியையும் பண்புகளையும் நிலைநாட்டக் கற்றுக் கொள்வதும் நற்பண்புகளையும் தமிழ்ப்பாரம்பரியங்களையும் கடைப்பிடிப்பதும் மரியாதையான நல்ல சமுதாயத்தைக் கட்டியெழுப்புவதற்கு ஒரு சாதகமான பலனைக் கொடுப்பதாக இருக்கிறது.

உலகில் பல மொழிகள் பேசுகின்ற பல வெவ்வேறு சமய நெறிகளைப் பின்பற்றுகின்ற மக்கள் வாழ்கின்றார்கள். அப்படியான மக்கள் மத்தியில் தமிழ் மக்களிடத்தில் காணப்படுகின்ற அன்பின் நிமித்தம் வரவேற்கின்ற விருந்தோம்பல் முதன்மைபெற்று விளங்குகின்றது. எனவே தான் அவ்வாறான தமிழ்ப்பண்புள்ள மனிதனைப் பார்த்து அவனல்லவா மனிதன் என்று சொல்லக்கூடியளவுக்கு எமது தமிழ்ப்பண்பாடு விளங்குகின்றது.

ஒரு காலத்தில் தமிழ் நாட்டிலும் சரி இலங்கையிலும் சரி மேற்கத்திய நாட்டினரது ஆதிக்கம் செல்வாக்குப் பெற்றிருந்தபோது தமிழ்ப்பண்பாடுகள் அழிந்துவிடுமோ என்ற நிலை இருந்தது. இந்த காலகட்டத்தில் வாழ்ந்த தமிழ் அறிஞர்கள் சைவ சமயப் பெரியார்களாயினும் கிறீஸ்தவ பாதிரியார்களாயினும் சரி தமிழையும் தமிழ்ப்பண்பாடுகளையும் அழியாது பாதுகாக்கப் பெரும் பணியாற்றிய காரணத்தினால் தான் இன்றும் தமிழ்ப்பண்பாடு நிலைத்து நிற்கின்றது என பல நூல்களில் சொல்லப்பட்டிருக்கிறது.

தமிழ்ப் பண்பாடுகளைப் பார்க்கும்போது அதைப்பெரிதும் பெண்களே வீடுகளிலும் அவர்களது வாழ்வியலிலும் கடைப்பிடித்து வருவதையும் ஆண்கள் அதற்குப் பெரிதும் உறுதுணையாக இருப்பதையும் வெளிப்படையாகக் காண்கிறோம். தமிழ்ப்பண்பாட்டை வெளிப்படுத்தும் உடை, நடை, பாவனை, விருந்தோம்பல் என்பனவும் வாழ்க்கைநெறிகளும் முதன்மையாக இருக்கும்

வரை தமிழர் மற்றைய இனங்களைவிட மேலானவராகக் கருதக் கூடியவர்களாக இருக்கமுடியும். நாம் பின்பற்றும் சமய நெறிகளும் அதனோடு தொடர்பான கலாச்சார பண்புகளும் சமூக நலன்களைப் பாதுகாக்கப் பெரிதும் பயனள்ளவையாக மனிதனை மிருகமாக வாழாமல் ஓரளவுதுணை புரிகின்றன எனலாம்.

பிள்ளை பிறந்த நாட்தொடக்கம் வாழ்வியலில் பிள்ளைக்குப் பெயர் சூட்டுதல்., பால் பருக்குஉணவு ஊட்டுதல், தோடு குத்துதல், பல் முளைத்ததும் கொழுக்கட்டை கொட்டுதல், ஏடுதொடக்குதல், கல்வி கற்பித்தல், மற்றும் கொண்டாட்டங்களான பிறந்த நாள் விருந்து,பெண் பிள்ளையாயின் பூப்புப்புனித நீராட்டுதல், திருமண வைபவம் என்பன தமிழ்ப்பண்பாட்டு கலாச்சார மரபுகளைத் தழுவியனவாகி அமைகின்றன. குழந்தை அழுகின்றபோதும் நித்திரை உணர்வைக் காட்டுகின்றபோதும் தமிழ்த் தாயானவள் " ஆராரோ ஆரிவரோ" என்று இனிமையாகப் பாடி அக்குழந்தையைத் தாலாட்டுகிறாள். பிள்ளை சற்று வளர்ந்ததும் " சந்திரனைக் காட்டி தாய் பிள்ளைக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கக்கூடிய இனிய பாடல்களைப் பாடி சிரிக்க வைக்கிறாள். பிள்ளைத் தமிழ் பாடல்களில் ஒன்றான " நிலா நிலா ஓடி வா ! நில்லாமல் ஓடி வா ! மலை மேல் ஏறி வா! மல்லிகைப் பூக்கொண்டு வா ! " என்றவாறு பாடுகிறாள் தாய். தமிழ்ப்பண்பாடுடன் தமிழின் இனிமையோடு தாய் பால் ஊட்டும்போதே ஆரம்பிக்கிள்றது. தமிழின் மகிமையை வெளிப்படுத்தும் அர்த்தமுள்ள பெயர்களை அன்று தம் பிள்ளைக்கு சூட்டி மகிழ்ந்தார்கள்.

பண்டைய தமிழ் மன்னர்கள் தமது ஆட்சிமுறைகள், போர் முறைகள், கட்டிட அமைப்புகள் போன்றவற்றை தமிழ்ப்பண்பாட்டுடன் தான் நாட்டை ஆண்டார்கள். எதிரியைக் கூட இன்று போய் நாளை வா என நற்பண்புடன் தான் மன்னித்து நடந்தார்கள். தமிழ் அரசர்கள் தமது நாட்டுக்கும் தமது மக்களுக்கும் பெருமை தரக்கூடிய வகையில் உடை , நடை ,பாவனை வார்த்தைப் பிரயோகங்கள் , போர் முரசு என்பவற்றை எடுத்துக் காட்டாக கொண்டு ஆட்சிசெய்தார்கள். என நூலாசிரியர் தமது வரலாற்று ஆய்வுகளில் குறிப்பிட்டுள்ளனர்.

இந்தியாவில் இன்றும் கூட பண்டைய அரசர்களின் கோட்டை கொத்தளங்களும் ஆட்சி மன்றத்தின் சபையிலே ஆலோசகர்களாக இருந்த புலவர்கள் பற்றிய வரலாற்றுச் சிறப்பு ஆய்வு நூல்களும் சிற்பக் கலைகளின் சிறப்பு அம்சங்களும் தமிழ்ப்பண்பாடு அக்காலத்தில் எவ்வாறு பேணப்பட்டு வந்தது பற்றிய சிந்தனையை எம்மத்தியில் இன்று நினைவுகூற வைபபவையாக அமைந்துள்ளன.

தமிழர்களின் வாழ்வியலை நோக்கும் போது உணவுப் பழக்கங்கள், உறவினர் பந்தபாசங்கள் என்பன நற்பண்புகளை வெளிப்படுத்திக் காட்டுகிள்றன. தமிழர் பண்டிகைத் திருநாட்களாம் தைப்பொங்கல், சித்திரை வருடப் பிறப்பு , ஆடிப்பிறப்பு , தீபாவளி கொண்டாட்டங்களில் இனிய பலகார வகைகளுக்குக் குறைவிருக்காது. உறவினர்கள் அவற்றை விருந்தினர்களாகச் செல்லும் போது கொடுத்து மகிழ்வடைவதும் ஆடிப்பிறப்பு நாளில் உழுத்தம் மா பனக்கட்டிக் கூழும் கொழுக்கட்டையும் தான் எம்மவரிடத்தில் உள்ள தமிழ்ப்பண்பாட்டில் ஒருவகையில் பெருமை தருவனவாகும். ஆடிப்பிறப்பு நாளைக் குறிப்பிடும் இனிய பாடலாக " ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை ஆனந்தம் ஆனந்தம் - கூடிப்பனங்கட்டிக் கூழும் குடிக்கலாம் கொழுக்கட்டை தின்னலாம் ஆனந்தம் ஆனந்தம் " என்ற கவிஞரின் பாடல்கள் சிறுவர்களையெல்லாம் எவ்வளவு தூரம் மகிழ்ச்சிக்கடலிலேதூக்கிப் போட்டு தமிழ்ப்பண்பாட்டை வெளிப்படுத்தக் கூடிய உணர்வலைகளை தூண்டுகின்றன என்பதை எண்ணிப் பாாக்கும் போது இன்றைய குழந்தைகள் பாடிக் கொண்டாடக் கூடிய சூழல் இருக்கிறதா என்பதையிட்டு ஏங்குபவரும் உண்டு.

தமிழர் வாழ்வியலில் தசையும் தோலும் போல தமிழ்ப் பண்பாடு பேணப்பட்டு வருகின்றது..உலகெலாம் பரந்து வாழும் தமிழர்களின் வாழ்வியலை நோக்குவோமானால் தமிழ்ப்பண்பாடு அருகிவரும் நிலை தோள்றியுள்ளதற்கு மேற்கு நாடுகளின் நாகரிகமும பொருளாளதார மாற்றங்களும் முக்கிய காரணிகளாக காணப்படுகின்றன. இதனால் இந்துசமய

நெறிமுறைகளிலுள்ள் நம்பிக்கைகளைப் புறந்தள்ளிவிட்டு தாம் நினைத்தவாறு கலாச்சாரங்களை மாற்றி வாழ்வியலைப் பின்பற்றுவதால் மனிதனுக்கு இருக்கின்ற நற்பண்புகள் அருகி மிருகத்தனமான செயற்பாடுகளில் சமுதாய வாழ்க்கை சீரழிந்து காணப்படுகிறது. கூடப்பிறந்த தம்பியை அண்ணனும் கூடப்பிறந்த அண்ணனைத் தம்பியும் நம்பிக் கைப்பிடித்த மனைவியை அன்புக்கு இலக்கணமாக பின்னிப்பிணைந்த குடும்பத் தலைவனாம் கணவனும் பெற்ற பிள்ளையைக் கூட தாயும் கோடூரமாகக் கொலை செய்து தூக்கிவீசி எறிந்துவிட்டு தாங்கள் கொலைவெறியர் ' களாகி விட்டோம் என்பதைக் கூட ஏற்றுக் கொள்ளமுடியாத பண்பற்ற சமுதாயம் உருவாகி யிருக்கிறதை காண்கிறோம். சிறுவர்களைத் துன்புறுத்தல், பாலியல் வன்புணர்வு போன்ற மனிதப் பண்பற்ற செயலாலும் மதுவுக்கு அடிமையாகி தமிழ்ப்பண்பாட்டை அழித்தொழிக்கும் வகையில்தன்மானத்தையும் நற்பண்புகளையும் இழந்து ஒற்றுமையைக்குலைந்து அடிமையாகிவிடுவதை தமிழ்ச் சமுதாயம் நிச்சயம் இன்று சிந்திக்க வேண்டிய தருமாகவுள்ளது.

மேற்கத்திய கலாச்சாரம், தமிழ்ச் சினிமாப் படங்கள், இணையத் தள பாலில்தொடர்பான படத் தயாரிப்புகள், போதை வஸதுப் பாவனை, மது பாவனை என்பன தமிழ்ப்பண்புகளை மாற்றி விடத் தூண்டக் கூடிய காரணிகளாக இருப்பதை உணர்ந்துகொள்ள முடியாத இளைஞர் சமுதாயம் தமிழ்ப் பண்பாட்டை முழுவதுமாக இழந்துவிடக் கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளது. தமிழ்ப்பாண்டுக் கலை, கலாச்சாரப் பேணிப்பாதுகாப்பதற்கும் தமிழ்ப்பாண்டைச் சித்தரிக்கும் பண்டைய காலச் சிற்பங்கள், தமிழ் வரலாற்று நூல்கள் போன்றவற்றை பாதுகாத்தலும் வரலாற்று ,அறநெறிக்கல்வியைத் தொடர்வதும் புராண நாடகங்களை கலாச்சாரவிழாக்களில் மேடையேற்றுவதும் பாசாலைப்புத்தகபங்களில் இவற்றை இடம்பெறச் பெறச் செய்வதும் தமிழ்ப்பாட்டை அழியவிடாது பேணிக்காக்க ஊக்கமளிப்பதாக அமையும் என்பதில் ஐயமில்ல. மேலும் கலை, கலாச்சார விழாக்களில் இளம்சமுதாயம் ஈடுபடுவதற்கான சந்தர்ப்பங்களை வழங்கி குறிப்பாக எமது தமிழ் அறிஞர்கள், பொது அமைப்புக்கள், பேராரியர்கள் வழங்கி " தமிழன் என்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா" என்பதை மனதற் கொண்டு தமிழ்க கலாச்சார பண்பாடுகளை வளர்க்க அயராது உழைக்க வேண்டியது காலத்தின் தேவையும் அவசியமுமாகும்

விசேடமாக **ஒன்**றை நாம் தமிழ்ப்பண்பாட்**டின்** நிலைமையை இன்று ஆராய்கின்ற போது கடந்த 25 வருடங்களாக தமிழனுக்கோர் நிலம் வேண்டும் என்று களம் பல கண்ட விடுதலைப்புலிகளினால் வடக்கு கிழக்கு மாகாணங்கள் நிர்வகிக்கப்பட்டு வந்தபோது தமிழ்ப்பண்பாடும் சமூக நலன்களுக்கான கட்டுப்பாடுகளும் எவ்வாறு இருந்து வந்துள்ளது என அக்காலகட்டத்தை மீட்டுப் பார்ப்போமானால் மிகவும் சிறப்பான முறையில் அவை பேணப்பட்டு வருவதற்கான ஒழுக்கமுறைகள் விடுதலைப்புலிகளினால் கட்டுப்பாட்டோடு மக்களைக் கடைப்பிடிக்கப் பணிப்பபட்டிருந்த காரணத்தினால் தமிழ்ப்பண்பாடுகள் சிற்ப்பான முறையில் இங்கு பேணப் பட்டு வந்தமை மிகவும் பாராட்டத்தக்கவகையில் ஆட்சிமுறையை தமிழர் நலன்களுக்காக நிர்வகித்து வந்தார்கள் என்பதை தற்போது நினைவு கூரப்படுகின்றது..தமிழ் பிள்ளைகளுக்குபெயர் சூட்டுதல் முதல் கொண்டு சகல வணிக நிலையங்களிலும் பெயர்பலகைகள் நல்ல தமிழ் மொழியிலேயே இருக்கவேண்டும் என்றும் நிர்வாக கடிதத் தொடர்பாடல்களிலும் அன்னிய கலப்பு மொழிகள் அகற்றப்பட்டு நல்ல தமிழ்மொழிச் சொற்கள் பாவிக்க வழிசெய்யப்பட்டிருந்தன.

தற்போதுள்ள சில இளைஞர் குழுக்களினால் மேற்பொள்ளப்பட்டு வரும் வாள்வெட்டு , சொத்துக்களைக் கொள்ளையடித்தல், பாலியல் வன்முறைகள் , போவைவஸ்துப் பாவனை, கஞ்சா போதைப் பொருட்கள் கடத்தல் போன்ற சட்டவிரோதமான செயல்கள் எவையும் .இங்கு நடைபெறாமல் தமிழர் நற்பண்புகளோடு வாழக்கூடிய சூழல் விடுதலைப்புலிகள் ஆட்சி நிர்வாகத்தில் இருந்தததை இன்று தமிழ்ச் சமூகம் மீட்டுப் பார்க்கின்றது. தற்போது ஏற்பட்டிருக்கின்ற குற்றச் செயல்கள் தமிழ்ச் சமூகத்தை அழிவுப்பாதைக்கு முழுமையாக இட்டுச்செல்லும் வகையில் தமிழருக்கெதிரான வேற்றுஇனக்குழுவினர் திட்டமிட்டு இடம்பெறவைப்பதாகவும் புத்தி ஜீவிகளினால் சந்தேகம் வெளியிடப்பட்டு வருகின்றது. இலங்கை அரசும் அவர்களது காவல்துறையினரும் இவ்வாறான சட்டவிரோத செயல்களைக்

கட்டுப்படுத்த உரிய நடவடிக்கை முழுமையாக எடுக்க முடியாமல் இருப்பதும் ஊடகவாயிலாகக் குற்றஞ் சாட்டப்பட்டுவருகின்றது.

எனவே தமிழினம் தனது சுயகௌரவத்துடனும் உயர்ந்த நற்பண்புகளுடனும் உலகம்போற்ற வாழவேண்டுமாயின் தமிழ்க்கலைகள், கலாச்சார விழுமியங்கள் கொண்ட தமிழ்ப்பண்பாடுகள் தமிழர்கள் மத்தியில் முறையாகப் பேணப்பட்டு வருவருதலும் வேண்டும். அனைவரும் முன்னின்று ஒத்திசைந்து செயற்பட வேண்டுமென இத்தருணத்தில் உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்க மாநாடு உணர்த்தி நிற்க அனைத்து தமிழ் உள்ளங்களையும் அன்போடு கேட்டுக்கொண்கிறேன்.

நன்றி !



நாட்டியாழ்



கி.மு 2048 ஆண்டுகளுக்கு முன்பே அதாவது தெய்வப்புலவன் தமிழ் வள்ளுவன் தோன்றியதற்கு முன்னதாகவே, ஏறத்தாழ மூவாயிரம் ஆண்டுகள் முந்தியம் தொன்மையில் பழம் புலவர்கள் தொன்மாலிலங்கை என சிறுபாணாற்றுப் படையினரும் தொல்லிலங்கை என சிலப்பதிகாரம் பெருமுதிலங்கை என ஆசிரியர் மாலை எனும் ஆதி நூலும் வளர்வாழ் கலைநட்டனா நாட்டியா என்றும் முகிழ்ந்துள்ளதும் கவின்கலை வழி என்பதை அறிய முடிகிறது.

ரண்மாவிலங்கை எனவும் சிறுபாணாற்றுப்படை அடிகள் வழியும் புலப்படுத்துகின்றன.

இலங்குதல் என்றால் ஒளிர்தல் (ஒளிஜோதிவடிவம்) எனும் குறிப்பும் ஈழத்து மரபுகளின் எழுத்தும் தெள்ளத் தெளிவாக தெளிவுபடுத்துகிறது. சைவசிவதத்துவ வழிவந்த பாணர்கள் கலை வழி வழியாகவே நடனா நட்டம் நட்டனா யாழிசையாக தமிழிசைவுகளை உட்படுத்தியும் தமிழ் நாட்டியத்தை ஒரு கொடியில் பூத்த மலர்களாகக் கொண்டு கலையை நிலை கொணர்ந்தனர் என்பது இன்றும் ஈழவர் குடி யாழ்ப்பாண மரபினர் கலைபாணியில் தனிப்பெரும் சிறப்பை இப்பாரினில் இங்கும் எங்கும் பதிவாக பதிந்துள்ளதை பரந்த பார்வையில் காணலாம்.

பாரதத்தின் தென்னாடுடையத்தில் ஐவகை தமிழ் நிலத்திலிருந்து தமிழ்வழி அவதரித்த தெலுங்கு, மலையாளம், கன்னடம், துளு, இருளா, கொடகு, கேடா, தோடா, பகடா ஆகிய துணை மொழிகளுடன் தொண்டும் (ஒன்பது) உண்டு.

தெய்வத் தமிழும் சிவத்தமிழாம் ஈழமொழியான யாழ்ப்பாணர் உரைத் தமிழும் இத்தரணிக்கு கிடைத்த இரட்டைத் தமிழமுதம் பெரும் பேறாகும்.

ஒரு தாய் ஈன்றெடுத்த ஒரு கொடியில் மலர்ந்து இரட்டை மழலைதான் தெய்வத் தமிழும் சிவத்தமிழும் ஆகும். தென்னாடுடைய சிவலிங்கா பூமியாம் லங்காபுரியின் தொன்மாலிலங்கை புராணத்தில் சித்தியாக சிந்தித்தால் சிவத்தமிழிலிருந்து முளைத்ததே தென்னிலங்காவினம் சிங்களமும் என்பதை பட்டறிவாளரும் பகுத்தறிவாளரும்கூட மெய்ப்பிப்பர்.

விளங்குவதற்கு உதாரணமாக சிலப்பதிகாரத்தில் வரும் கூத்து வகைகளில் மெய்கூத்து உள்பிரகாரத்தில் நோக்கினால் அடிப்படை ஆடலின் கூத்து தேசி வடுகு உடன் சிங்களம் தென்படுவதை மெய்த்தொழிற் கூத்து மெய்ப்பிக்கிறது.

ஈழவர் யாழிகையிலும் ஒருங்கே கூத்திசையாவும் கொண்டு உணர்வுப்பூர்வமாக வளர்த்தும் வந்துள்ளனர் என்பதை பட்டினப்பாலை ஈழ இலக்கியத்தில் கண்டுணரலாம்.

மற்றொரு மிகப் பழமை வாய்ந்த நூலதிகார நூலாம் நாவலந்தேயம் எனும் (இந்தியாவின் முற்கால பெயரும்) நூலும் இலங்காபுரியை சீரந்தீப்என்றும் இலங்காசோபம் என்றும் யாழ் மீட்டிய அதிபக்தா இலங்கேஸ்வரனாகிய இராவண வழியே இலங்கேஸ்வரம் என்றும் சைவ சிவபுராணங்கள் புகழாகவும் விளங்கியதும் தற்கால உலகமும் நன்கறியும்.

1892இல் பிறந்து 1947இல் மறைந்த சுவாமி விபுலானந்தா (மகாகவி பாரதியார் காலத்தில்) 'யாழ் இசை' எனும் மாபெரும் காப்பிய நூலை ஈழவர் குமுகாயத்திற்காகவே மகா கலைக் களஞ்சியமாக அரங்கேற்றியது மாபெரும் வரலாற்று கலையிலக்கிய பொக்கிஷமாகும். அய்யாழ் இசை நூல் வாயிலாகவும் கூத்து நாட்டியாழாகவும் ஈழ மக்கள் தற்காலத்திலும் வழிவழியாக மரபு மாறாது நடாத்தி வருவதும் யாம் நன்கறிவோம். தமிழ்கூறும் நல்லுலகம் என்றும் எப்போதும் சுவாமி விபுலானந்தாவை உலகம் உள்ள வரை மறவாது.

மேலும், ஈழவர்களுக்காக தூய இசை நாடகக் கலை மரபுகளை மக்களுக்கு சேர்க்க வேண்டும் எனும் தூய நோக்கில் பேராசிரியர் வித்தியானந்தன் (1974 ஓம் ஆண்டு ஜனவரி மூன்றாம் திகதி முதல் ஒன்பதாம் திகதி வரை யாழ்ப்பாணத்தில் நடாத்தப்பட்ட நான்காம் உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டிற்கு தலைமை தாங்கியவர்) அவர்களும் அரும்பாடுபட்டவர் என்பதை குறிப்பிடத்தக்க முகாமை வரலாற்று சான்றுகள் கூறும்.

இதே 1974ல் யாழில் கண்ட நான்காம் உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் இதன்போது புதியதோர் உலகிற்கு மலேசியாவில் வாழ்ந்த (இலங்கை கண்டியில் 8.6.1930ல் பிறந்து 3.9.1993ல் பாண்டிச்சேரியில் மறைந்தவர்) அமரர் பேராசிரியர் டாக்டர் இரா. ந. வீரப்பனாரால் நிறுவப்பட்டதுதான் உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம்.

'நாட்டியாழ்' கலை தொண்மையில் வடச் சொல்லில்லாது தமிழ் நாட்டியத்தை இத்தரணியில் பரவச்செய்து வளர்த்து வருவது எமது தமிழ்ப் பண்பாட்டுக்கு மிகப் பெரிய தமிழ் தர்மம் என டாக்டர் இரா. வீரப்பனார் அடிக்கடி உணர்த்தியது இன்றும் நினைவில் நினைக்க சொல்கிறது.

இக்கால ஈழத்து நடன ஆய்வாளரான திரு. பால சுகுமார் குறிப்பிடுகையில் தமிழ் நாட்டியத்திற்கும் ஈழநாட்டியத்திற்கும் (நாட்டி யாழ்) பிரயோகமாக உடுக்கையாகும். இதனை பறைமேளம், பறை மேளக்கூத்து, வசந்தன்கூத்து, மகிடிக்கூத்து, மன்னார்க்கூத்து, யாழ்ப்பாணக்கூத்து, வடமோடிக்கூத்து, தென்மோடிக்கூத்து என புள்ளி விபரமாக நாட்டியாழ் ஈழத்து கூத்தை விவரிக்கிறார்.

யாழ்ப்பாணத்தில் காத்தவராயன் சிந்து நடைக்கூத்தை பாணர்கள் மரபில் உள்ளதையும் தெளிவுபடித்துகிறார். கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும் ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றி (தொல்பொருள் 1037)

இதுகாறும் யாம் யாழ்வழி கூறுமிடத்து தமிழ்பூர்வீகக்கலைக் கூத்து. அதுவே பரத நாட்டியமாக மாறியது. பாணர்களும் ஈழ பூர்வீக கலைக் கூத்தை தமிழ் வழிவழியே வழக்கில் கொண்டிருந்தனர்; கொண்டிருக்கின்றனர்.

தற்கால இக்கால வாழ்வியல் வளர்ச்சியினை கூர்ந்து கவனிக்கையில் தமிழரும் ஈழவரும் ஒரு சேர மக்களாய் எனவும் தமது தாய் தமிழ் கலைகள் பலவற்றையும் குறிப்பாக இசை நாட்டியத்தையும் ஒரு முகமாகவே முகர்ந்து வளர்த்தும் வந்துள்ளனர் என்பது தெள்ளத் தெளிவு.

ஆனபடியால், இத்தமிழ்கூத்து நாட்டியம் தமிழ்க்கூறு நல்லுலகில் பரத நாட்டியத்தில் வடமொழி ஆதிக்கத்தை அகற்றிவிட்டு நம் தம் தமிழ் நாட்டியமாகவும் நாட்டியாழ் ஆகவும் உலகளாவிய நாடுகள் தோறும் தமிழ் வீடுகள் தோறும் நெடுநிலையாக நடைமுறைக்கு வழி செய்வோம். அதனை இன்றே செய்து, நன்றே செய்வோம். ஓம் எனும் மாமந்திரமாக.

- பரதஈழவாணன்

தலைவர் - அகில உலக தமிழ் நாட்டிய மன்றம்

கோலாலம்பூர்

தாய் மொழிக்கும் தமிழர்
பண்பாட்டுக்கும் என்றும் தலை
வணங்கும் கனடா வர்த்தக
முன்னோடி மதன் சண்முகராஜா(

நிறுவனர், தலைவர்.
Tekno Media Inc கனடா)



TEKNO®
MEDIA
Your Protection Champion

ஆர். என். லோகேந்திரலிங்கம்

கனடாவில் ஒரு வர்த்தகத்துறை முன்னோடியாக காட்சியளித்தாலும் Tekno Media Inc. திரு மதன் அவர்கள் எப்போதும் எமது தாயகம் மற்றும் தமிழர் மண் பற்றியே எந்நேரமும் சிந்தித்துக் கொண்டிருப்பார் என்று கூறுவார்கள். கனடாவில் இவரது கையொப்பம் பல கனடிய நிறுவனங்கள், கனடிய வருமானவரித் திணைக்களம் ஆகியவற்றுக்கு நன்கு பரிச்சியமானது. ஆனால் அதில் உள்ள விசேடம் என்னவென்றால் முதல் எழுத்தை ஆங்கிலத்தில் ஆரம்பித்து தொடர்ந்து தனது பெயரை தமிழ் எழுத்துக்களிலேயே முடிக்கின்றார். இவ்வாறாக அவரது கையொப்பத்தில் கூட ஆங்கிலமும் பிரன்ச் மொழியும் உத்தியோக மொழியாக உள்ள கனடாவில் தனது கையொப்பத்தில் கூட தமிழை உள்ளடக்கிய வண்ணம் அவர் இங்கு "தலை நிமிர்ந்து" வாழ்க்கின்றார். இது அவருக்கு தனது தாய் மொழி மீது உள்ள பற்றைக் காட்டுகின்றது.

ஈழத்தமிழர்கள் தமிழ் மொழியையும் தங்கள் தேசத்தையும் நன்கு நேசித்தவர்கள். கல்வியிலும் கலைகளிலும் உயர்ந்த பயிற்சியையும் உன்னதமான ஆற்றலையும் கொண்டு வாழ்வில் உயர்ந்தவர்கள். வெளிநாடுகளுக்குச் செல்ல வேண்டும் என்ற எண்ணமும் நாட்டை விட்டு ஓடி விடவேண்டும் என்ற சிந்தனையும் எம்மவர்களுக்கு இல்லாமல் இருந்த காலத்தில், உயர்கல்விக்காக வெளிநாடுகளுக்குச் சென்ற சில தமிழர்கள் அங்கு உயர் பதவிகளைப் பெற்று தமிழர்களினதும் தமிழ் மொழியினதும் அடையாளத்தை பதித்த வரலாறு அறுபது வருடங்களுக்கு முன்னர் ஆரம்பமானது.

ஆனால் இலங்கையில், போரும் போராட்டமும், தமிழ் இளைஞர்களின் எழுச்சியும் ஆரம்பமான பின்னர் அங்கு கல்வியும் கலைகளும் வர்த்தகமும் விவசாயமும் தொழில்நுட்பமும் தமிழர்களுக்கு கைகொடுக்க மறுத்தன. கற்றும் உழைத்தும் கரைகண்ட மேற்படி துறைகளில் அவர்களுக்கு வெற்றிகளை அடையும் சந்தர்ப்பங்கள் குறைந்தன. அவர்களின் இருப்பு என்பது கேள்விக்குரியாக மாறிய போது, இறப்புக்கள் மாத்திரம் அதிகரித்துச் செல்வதை அவர்கள் உணரத் தொடங்கினார். தங்களுக்கு என்ற ஒரு நாடு உருவாகும் என்ற நம்பிக்கை பெருமளவில் இருந்தாலும், உயிர்கள் பறிக்கப்படும் போது, சாதாரண தமிழர்கள் தங்கள் உயிர்களைத் தக்கவைத்துக் கொள்ளவும, தம் உறவுகளைக் காப்பாற்றிக் கொள்ளவும் வெளிநாடுகளை நோக்கிப் "பறக்கத்" தொடங்கினார்கள்.

இவ்வாறு வெளிநாடுகளுக்குச் சென்ற எம்மவர்களில் பலர் இன்று ஒவ்வொரு துறையிலும் வெற்றியாளர்களாக பிரகாசிக்கின்றார்கள். தாங்கள் வாழும் நாடுகளில் கல்வி, தொழில்நுட்பம், விஞ்ஞானம் போன்ற துறைகளில் பேராசிரியர்களாகவும் பெரும் வல்லுனர்களாகவும் சிறப்பாகப் பணியாற்றி, தமிழ் மொழியினதும் தமிழர்களினதும் அடையாளத்தை உச்சத்தில் பொறிப்பதற்கு காரணகர்த்தாக்களாக விளங்குகின்றார்கள். இவ்வாறான ஒருவரைப் பற்றிய அறிமுகமும் விளக்குமும் செய்வதுதான் இந்த கட்டுரையின் நோக்கமாகும்.

கனடாவைப் பற்றி வேறு நாடுகளிலிந்து வரும் எம்மவர்களில் பலர் கூறிச் செல்லும் வாசகங்களில் ஒன்று "ஏனைய நாடுகளில் தமிழர்கள் இருக்கின்றார்கள், ஆனால் கனடாவில் தமிழர்கள் வாழ்கின்றார்கள்" என்பதாகும். இவ்வாறு கனடாவாழ் தமிழர்களின் வாழ்க்கை முறை மற்றும் அவர்களின் இருப்பு, அடைந்த வெற்றிகள் ஆகிய விடயங்கள் உலக மக்களை நன்கு ஈர்த்துள்ளன என்று துணிந்து கூறலாம்.

அந்த சிறப்புக்களுக்கு உரிய ஒரு சிலரில் கனாடவில் பிரம்டன் மாநகரில் வாழ்ந்து வருகின்ற இளைய தலைமுறை வர்த்தக முன்னோடி மதன் சண்முகராஜா அவர்களை எமது வாசகர்களுக்கு அறிமுகம் செய்வதில் மகிழ்ச்சியடைகின்றோம். கனடாவில் Tekno Media Inc என்னும் நிறுவனத்தை கடந்த பதின்மூன்று வருடங்களாக வெற்றிகரமாக நடத்திவருகின்றார். தமிழ் மொழி தமிழ் இனம் ஆகிய இரண்டு துறைகள் தொடர்பான செயற்பாடுகளிலும் அவற்றின் முன்னேற்றத்திலும் அதிக அக்கறை கொண்ட மதன் சண்முகராஜா தமது நிறுவனத்தின் உற்பத்தி உபகரணங்களில் ஒன்றான பாதுகாப்பு கெமராக்களில் அவற்றின் இயக்கும் மொழியாக முதலில் தமிழ் மொழியை புகுத்தி சாதனை புரிந்ததோடு மட்டுமல்லாது உலகெங்கும் வாழும் பல அறிஞர்களாலும் பெரியோர்களாலும் பாராட்டப் பெற்றவர். இந்த செயற்பாட்டின் மூலம் வெளிநாடுகளிலும் செம்மொழியாம் எம் தமிழ் மொழி, ஒரு அறிவியல் துறை சார்ந்த மொழியாக திகழவேண்டும் என்ற தனது கனவை அவர் நனவாக்கியுள்ளார்.

முதலில் நாம் மதன் அவர்களின் பள்ளிநாட்களில் இருந்து அவர் கொண்டிருந்த இயல்புகளையும் ஆற்றலையும் பற்றி பார்ப்போம். 1983ம் ஆண்டு இலங்கையில் தாயார்

பிறந்து வாழ்ந்த இடமும், இயற்கைத் துறைமுகத்தை தன்னகத்தே கொண்டதும் அழகியதுமான திருகோணமலை நகரில் பிறந்த திரு மதன் அவர்களை, குழந்தையாக இருக்கும் போதே தந்தையாரின் சொந்தக் கிராமமான சண்டிலிப்பாய்க்கு கொண்டு சென்று அவரை கண்ணும் கருத்துமாக வளர்த்தார்கள்.

சண்டிலிப்பாய் கிராமத்தில் தனது ஆரம்ப கல்வியை மேற்கொண்டிருந்த மதன் அவர்கள் தனது பன்னிரண்டாவது வயதில் யாழ்ப்பாணத்தில், இலங்கை இராணுவத்தின் நெருக்கடியும் அடக்குமுறையும் தந்த நிர்ப்பந்தத்தால்,

தமிழர்களின் வீரத்தால் செழித்த மண் என்று அறியப்பட்டதும் புகழப்பட்டதுமான வன்னி மண்ணில் உள்ள, உடையார்கட்டு என்னும் கிராமத்திற்கு இடம்பெயர்ந்து, தனது பெற்றோர் சகோதரரோடு வாழத் தொடங்கினார். அங்கு தனது கல்வியை உடையார்கட்டு மகா வித்தியாலயத்தில் தொடர்ந்தபோது, மதன் சண்முகராஜா அவர்கள் சிறு வயதில் தன்னை ஒரு வித்தியாசமான மாணவனாகவே அடையாளப்படுத்தினார். இது அந்நாட்களில், அவருக்கு கற்பித்த ஆசிரியர்களின் கருத்து. இந்த விபரங்கள் இன்னொரு இடத்தில் பதிவு செய்யப்படும் நிச்சயமாக. உடையார் கட்டு மகா வித்தியாலயத்தில் தனது ஆரம்பக் கல்வியைப் பெற்றபோது, இவர் எதிர்காலத்தில் ஒரு வர்த்தகத்துறை முன்னோடியாக வரவேண்டும் என்று எப்பொழுதும் தனது நண்பர்களோடு சொல்லிக்கொண்டே இருப்பார் என்பதும் நாம் அறிந்த மேலதிக தகவலாகும்.

இவ்வாறு கல்வியும் ஒழுக்கத்திலும் நேர்த்தியுள்ளவராக விளங்கிய மதன் அவர்கள் பாதுகாப்பு தொடர்பான விடயங்களிலும் அதிக அக்கறை செலுத்தத் தொடங்கினார். அதன் முதற்கட்டமாக தனது 14 வயதில் பாதுகாப்புக் கலையான "கராட்டி" யைக் கற்று பின்னர் கராட்டி ஆசிரியராகவும் விளங்கினார். இவ்வாறு கல்வியிலும் விளையாட்டு போன்ற துறைகளிலும் மனித நேயத்திலும் சிறந்து விளங்கிய இளைஞரான மதன் அப்போது தனது தாயக மண்ணில் இடம்பெற்ற சிங்கள இராணுவக் கெடுபிடிகள் காரணமாக தனது 16வது வயதில் இந்தியாவிற்கு இடம் பெயர்ந்து சென்றார்.

இந்தியாவில் கூட தனது கல்வியைத் தொடரும் எண்ணத்தோடு தீவிரமான ஆவல் கொண்டு இருந்தபடியால் பெற்றோர் அவர் விரும்பியவண்ணம் எலக்ரோனிக்ஸ் துறையில் உயர் கல்வி பெறும் வகையில் சிறந்த கல்லூரி ஒன்றில் அனுமதித்தனர். அங்கு தனது கல்வி கண்ணாக இருந்து செயற்பட்டதனால் பட்டம் பெற்றதுதும் அவருக்கு பல வெளிநாட்டு நிறுவனங்களில் நல்ல பதவிகளோடு தொழில் வாய்ப்பு கிட்டியது. அங்கு தனது பணியை அவர் சிறப்பாக ஆற்றியமையால் பல பதவியுர்வுகள் கிட்டுவதற்கு வாய்ப்புக்கள் தோன்றினாலும் மதன் தனது தாயகத்திற்கு திரும்ப எண்ணினார். தாயகப் பற்று, தமிழின் மீதும் தமிழ் மக்கள் மீதும் கொண்ட ஈர்ப்பு ஆகியவை அவரை இந்தியாவில் தங்கியிருக்க "அனுமதிக்கவில்லை".

ஒரு அறிவும் ஆற்றலும் அனுபவரும் பெற்றவராக,இலங்கைக் திரும்பிய மதன் அவர்கள் கொழும்பு நகரத்தில் "Mathu Computer Technologists" என்னும் பெயரில் ஒரு கொம்பியுட்டர் விற்பனை மற்றும் திருத்த வேலைகள் செய்யும் ஒரு நிறுவனத்தை ஆரம்பித்தார். மிகுந்த சவால்கள் கொண்ட ஒரு காலப்பகுதியாக இருந்தபடியால் கடுமையாக உழைக்க வேண்டியிருந்தது. எனினும் சில வருடங்கள் அந்த நிறுவனத்தை நடத்தி, நாடெங்கிலும் கொம்பியுட்டர்களை விநியோகம் செய்யும் வர்த்தகத்தை மேற்கொண்ட மதன் அவர்கள் இலங்கையின் தலைநகரான கொழும்பில் கொம்பியூட்டர் துறையில்

விரிவுரையாளராகவும் பணியாற்றி பல மாணவர்களுக்கு அறிவூட்டினார். அவரிடம் கற்ற பலர் தற்போது வெளிநாடுகளிலும் நல்ல பதவிகளில் உள்ளார்கள். அவர்களில் ஒருவர்தான் திரு மதன் அவர்களின் துணைவியாரும் Tekno Media Inc நிறுவனத்தின் உயர் அதிகாரிகளில் ஒருவருமான திருமதி தர்மினி மதன் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு இலங்கையில் வர்த்தகம் மற்றும் கற்பித்தல் துறையில் பணியாற்றிய வேளையில் தான் கற்ற பாடசாலைகளின் முன்னேற்றத்திற்கு உதவினார். மேலும் கிராமப் புற மாணவர்கள் உயர் தொழில்நுட்பத்துறையில் கல்வி கற்று மிளிர வேண்டும் என்பதற்காகவும் மதன் அவர்கள் ஆதரவுக் கரம் நீட்டினார். பின்னர் வெளிநாட்டுக்கு சென்று தனது அறிவையும் தொழில் முயற்சிகளையும் வளர்த்துக்கொள்ள வேண்டும் என்ற நோக்கோடு கனடாவிற்கு வந்தார். இங்கும் தனது தொழில்நுட்ப அறிவை வளர்த்துக் கொள்ளும் வேட்கையோடு பல கல்வி நெறிகளை மேற்கொண்டார். ஓய்வு நேரங்களில் கடுமையாக வேலை செய்தார்.

இந்த நேரத்தில் தான் கனடிய தேசத்திலும் ஏனைய நாடுகளிலும் பாதுகாப்புக் கருவிகளாக கெமராக்களை இல்லங்களுக்கும் வர்த்தக நிறுவனங்களிலும் பொருத்தும் அவசியம் நன்கு உணரப்பட்டது. தொழில் நுட்பரீதியாக புதிய புதிய கண்டு பிடிப்புக்கள் வரத் தொடங்கின. ஏற்கெனவே இந்தத் துறையில் கால்பதித்து பணியாற்றத் தொடங்கிய மதன் அவர்கள் சொந்தமாக ஒரு நிறுவனத்தை ஆரம்பிக்க எண்ணி நண்பர்கள் மற்றும் தெரிந்தவர்களிடம் பண உதவி பெற்றும் தன்னிடமிருந்த சேமிப்புக்களை மூலதனமாக்கியும் Tekno Media Inc என்னும் தனது நிறுவனத்தை 2004ம் ஆண்டு கனடாவின் பிரம்டன் மாநகரில் ஆரம்பித்தார். இவரது முயற்சியாலும் ஏற்கெனவே நிறைவான தகுதி பெற்றவரும் இவரது துணைவியாருமான தர்மினி அவர்களின் துணையோடு இந்த நிறுவனத்தை வளர்த்தெடுப்பதில் இரவு பகலாக உழைத்தார் மதன் அவர்கள். அவர்களது உழைப்பும் அர்ப்பணிப்பும் வீண் போகவில்லை. Tekno Media Inc நிறுவனம் வளர்ச்சி பெற்ற ஒன்றாக கனடிய தமிழ் மக்கள் மத்தியில் மட்டுமல்ல, ஏனைய பல்லினச் சமூகங்களின் மத்தியிலும் நன்கு பிரகாசிக்கத் தொடங்கியது.

இந்த நேரத்தில் தான் தனது உற்பத்திப் பொருட்களான பாதுகாப்புக் கெமராக்களில் தமிழ் மொழியை இயக்கும் மொழியாகவோ அன்றி அறிவுறுத்தல் மொழியாகவோ கொண்டு வரவேண்டும் என்ற எண்ணம் திரு மதன் அவர்களின் மனதில் தோன்றியது. இதன் மூலம் தமிழ் மொழியை புலம் பெயர்ந்த நாடுகளில் அறிவியல் மொழியாகப் பயன்படுத்தும் முறையை அறிமுகம் செய்யலாம் என்ற ஆவல் அவரிடத்தில் மேலோங்கியிருந்தது. மேலும் எமது மக்கள் ஆங்கிலத்திற்குப் பதிலாக தமிழ் மொழியைப் பயன்படுத்தும் போது ஒரு மன நிறைவு அவர்களுக்கு தோன்றும் என்பதையும் மதன் நன்கு உணர்ந்திருந்தார்.

எனவே தனது தொழில் நுட்பக் குழுவினரோடு சேர்ந்து பல பரிசோதனைகள். மற்றும் திட்ட நடைமுறைகள் ஆகியவற்றை மேற்கொண்டு அந்தப் பணியில் காலடி எடுத்து வைத்தார். மிகந்த பொருட் செலவோடு இந்த திட்டம் நடைமுறைக்கு வந்தது. கனடாவிலிருந்து மட்டுமல்ல, உலகெங்குமிருந்து பாராட்டுக்கள் மதனை அவர்களை நோக்கியும் அவரது Tekno Media Inc நிறுவனத்தை நோக்கியும் குவிந்தன. ஜேர்மனி, பிரான்ஸ், இங்கிலாந்து ஆகிய நாடுகளிலிருந்தும் "ஆடர்கள்" அவர்களது நிறுவனத்திற்கு வரத் தொடங்கின. உலகெங்குமிருந்து பல பெரியோர்கள் மற்றும் கல்விமான்கள் ஆகியோர் வாழ்த்துச் செய்திகளை அனுப்பத் தொடங்கினர். அவர்களின் நாம் தமிழர் கட்சியின் தலைவர் திரு சீமான் அவர்கள் தனது செய்தியில்" ஒரு இளம் ஈழத் தமிழ் விஞ்ஞானியும் கனடா நாட்டில் தொழில் அதிபராக விளங்குபருமான மதன் அவர்கள் தமது தாய் மொழியாம் தமிழ் மொழியை அறிவியல்

மொழியாகவும் மின்னியல் சார்ந்த கருவிகளை இயக்கும் மொழியாகவும் கொண்டு வரும் முயற்சியில் இறங்கி வெற்றி கண்டது எமக்கு பெருமையை அளிக்கின்றது. இந்திய நாட்டின் தமிழ் பேசும் விஞ்ஞானியும் மறைந்த முன்னாள் ஜனாதிபதியுமான அப்துல் கலாம் ஐயா அவர்கள் தமிழை உலகெங்கும் அறிவியல் மொழியாக மாற்றம் செய்ய வேண்டும் என்ற வேட்கையோடு பாடுபட்டார். அவர் வழியில் ஒரு ஈழத் தமிழ் மகன் மதன் அவர்கள் இன்று எம் முன்பாக வெற்றியாளனாகத் திகழ்சின்றார்" என்று வாழ்த்தியுள்ளார்.

இதே போன்று, மதன் அவர்களுக்கு பள்ளி நாட்களில் கற்பித்த அவரது பாடசாலை உதவி அதிபர் மற்றும் ஆங்கில ஆசிரியர் மற்றும் கணித ஆசிரியர் ஆகியோர் திரு மதன் அவர்களது சிறுவயதுச் சாதனைகள் மற்றும் கனவுகள் ஆகியவை பற்றி கருத்துக்களைப் பகிரும் ஒரு ஒளி நாடாவை நாம் அண்மையில் பார்த்து வியந்தோம். அதில் மதன் அவர்களது கணித ஆசிரியர் ராசன் கருணாகரன் அவர்கள் அவரது குணாம்சங்களை வியந்து பாராட்டுகின்றார். பள்ளி நாட்களில் மதன் அவர்கள் நல்ல பழக்க வழக்கங்கள் கொண்டவராகவும் விவேகம் நிறைந்தவராகவும் தலைமைத்துவப் பண்புகள் கொண்டவராகவும் விளங்கினார் என்பதை ஆணித்தரமாகவும் மிகவும் மலர்ந்த முகத்தோடும் தெரிவித்துள்ளார். அவரது 16வயதில் சக மாணவர்களுக்கு தலைமை தாங்கும் பொறுப்பை தாம் அவருக்கு வழங்கியதாகவும் திரு ராசன் கருணாகரன் அவர்கள் குறிப்பிடுகின்றார்.

இதே போன்று அவரது ஆங்கில ஆசிரியரும் தற்போது இங்கிலாந்தில் ஒரு பேராசிரியராக பணியாற்றுகின்றவருமான திரு கண்ணன் மார்க்கண்டு அவர்கள் தனது பதிவில், "பள்ளி நாட்களில் சீரிய பண்பு ஒழுக்கம் ஆகியவற்றைக் கடைப்பிடித்த திரு மதன் அவர்கள், தற்போது உலகளவில் தொடர்ச்சியான ஆராய்ச்சிகளின் பின்னர் இந்த கண்டு பிடிப்பை வெற்றிகரமாக பூர்த்தி செய்து எமக்கு வழங்கியுள்ளார்" என்று குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறாக கனடாவில் வர்த்தகத் துறையில் வெற்றி நடைபோடும் திரு மதன் அவர்களும் அவரது Tekno Media Inc நிறுவனமும், அவர்கள் வளர்ச்சியை மட்டும் கவனித்து செயற்படவில்லை. அவர்கள் சமூகத்தின் மீதும் அக்கறை காட்டத் தொடங்கினர். திரு மதன் அவர்களின் அறிவுறுத்தல்களை ஏற்று அவரது நிறுவனத்தில் தனியாக ஒரு பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. சமூகத்தில் உதவி தேவைப்படும் மக்களுக்கும் நிறுவனங்களுக்கும் உதவிகள் வழங்குவதே அந்த பிரிவின் முக்கிய பணியாகும். Tekno Media Inc நிறுவனம் எமது தாயகத்தில் பல கல்லூரி மாணவர்களின் வளர்ச்சிக்கான வருடாந்தம் சுமார் மூன்று இலட்சம் கனடிய டாலர்களை செலவு செய்கின்றது. வன்னி மண்ணில பல பாடசாலைகளில் கொம்பியுட்டர் ஆய்வு கூடங்களை அமைத்து அவர்களுக்கு தொழில்நுட்பப் பயிற்சிகளை வழங்கி வருகின்றது.

கனடாவில் ஒரு வர்த்தகத்துறை முன்னோடியாக காட்சியளித்தாலும் திரு மதன் அவர்கள் எப்போதும் எமது தாயகம் மற்றும் தமிழர் மண் பற்றியே எந்நேரமும் சிந்தித்துக் கொண்டிருப்பார் என்று கூறுவார்கள். கனடாவில் இவரது கையொப்பம் பல கனடிய நிறுவனங்கள், கனடிய வருமானவரித் திணைக்களம் ஆகியவற்றுக்கு நன்கு பரிச்சியமானது. ஆனால் அதில் உள்ள விசேடம் என்னவென்றால் முதல் எழுத்தை ஆங்கிலத்தில் ஆரம்பித்து தொடர்ந்து தனது பெயரை தமிழ் எழுத்துக்களிலேயே முடிக்கின்றார். இவ்வாறாக அவரது கையொப்பத்தில் கூட ஆங்கிலமும் பிரன்ச் மொழியும் உத்தியோக மொழியாக உள்ள கனடாவில் தனது கையொப்பத்தில் கூட தமிழை உள்ளடக்கிய வண்ணம் அவர் இங்கு "தலை நிமிர்ந்து" வாழ்க்கின்றார். இது அவருக்கு தனது தாய் மொழி மீது உள்ள பற்றைக் காட்டுகின்றது.

அண்மையில் கனடாவில் இயங்கிவரும் "ஓட்டிசம் என்று குறைபாட்டைக் கொண்ட சிறுவர் சிறுமிகளின் நலன்களைப் பேணும் அமைப்புக்கு" அறுபது ஆயிரம் கனடிய டாலர்களை வழங்கி அந்த குழந்தைகளின் நலன்காக்கும் பணியை ஏற்றுள்ளது திரு மதன் அவர்களது Tekno Media Inc நிறுவனம்.

இதே போன்று பல சமூகப் பணிகளைச் செய்து வரும் இந்த நிறுவனம் கனடாவில் தமிழர் சமூகத்தின் வளர்ச்சியில் திறந்த மனதோடு செயற்படுகின்றது என்று ஆணித்தரமாகக் கூறலாம். வருடாவருடம இசை, கல்வி மற்றும் ஊடகம் ஆகிய துறைகளில் ஈடுபட்டு உழைக்கும் பலருக்கு பாராட்டுக்கேடயங்களையும் பணப்பரிசுகளையும் வெகுமதிகளையும் வழங்கி ஊக்குவித்து வருகின்றது.

திரு மதன் அவர்களது சீரிய சிந்தனையின் விளைவாக அரிய விஞ்ஞான தொழில் நுட்பங்களைக் கொண்டு இலாபம் பெறும் ஒரு நிறுவனமாக மட்டுமல்ல, கனடாவில் பல்வேறு சமூகங்கள் மத்தியில் நன்கு அறியப்பட்ட ஒன்றாகவும் அத்துடன் சமூகப் பணிகளை மேற்கொள்ளும் ஒரு உன்னத நிறுவனமாகவும் Tekno Media Inc இயங்கிவருகின்றது என்பதை எமது வாசகர்களோடு பகிர்ந்து கொள்வதில் நாம் பெருமையடைகின்றோம். http://tekno.cc/tamil_dvr.php என்னும் தளத்திற்குச் சென்று அங்குள்ள ஒளிநாடாவைப் பார்ப்பவர்கள், நிறுவனம் தொடர்பாக பல விடயங்களைத் அறிந்து கொள்ளலாம்.

வடமேற்கரை தமிழர் வரலாறு - ஓர் ஆய்வு

V. Sivalogathasan, Ph.D
Head and Senior Lecturer
Department of Management Studies
Faculty of Humanities and Social Sciences
The Open University of Sri Lanka
Nawala, Nugegoda, Sri Lanka (http://www.ou.ac.lk)

அறிமுகம்

பொலன்னறுவைக் காலத்திலும் (993-1215) அதன் பின்பும் இந்திய தென்னகத்திலிருந்து வன்னியர் ஈழநாட்டிற்கு வந்தனர். ஈழத்தில் வன்னியர்வசமிருந்த படைப்பற்றுக்கள் பல வன்னிமைகள் தோன்றுவதற்கு ஏதுவாயிருந்தன. பொலன்னறுவை அரசு அழிவுற்றதும் வன்னியநாடுகள் என வழங்கிய பல குறுநில அரசுகள் எழுச்சிபெற்றுப் பல நூற்றாண்டுகளாக ஈழ வரலாற்றிலே சிறப்பிடம் பெற்றிருந்தன. இவை வட இலங்கையிலும் மேற்கிலே சிலாபம், புத்தளம் முதலிய இடங்களிலும் கிழக்கிலே திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய இடங்களிலுமம வளர்ச்சியடைந்திருந்தன. எனப் பேராசிரியர் சி.பத்மநாதன் தனது இலங்கை வன்னியர் வரலாறு என்ற நூலில் குறிப்பிடுகின்றார்.

மேலும், அவரது நூலில் புத்தளத்து வன்னிமை என்னும் பிரிவு, ஒல்லாந்தராட்சிக் காலம் வரை புத்தளத்திலிருந்த முக்குவ வன்மைபற்றிக் கூறுகின்றது. ஆறாம் பராக்கிரமபாகுவின் ஆட்சிக்காலந்தொட்டுப் புத்தளத்து வன்னிமைபற்றிக் கிடைத்துள்ள குறிப்புக்களையும் குறிப்பிட்டுள்ளார். இவ்வரசன் (1413 - 1467) புத்தளத்து வன்னிமையைக் கைப்பற்றிய வரலாறு 'முக்கர ஹடன' என்ற நூலில் விவரிக்கப்படுகின்றது. பதினாறாம் நூற்றாண்டைச் சேர்ந்த இரு செப்பேடுகளை ஆதாரமாகக் கொண்டு புத்தளத்தை ஆண்ட நவரத்தின வன்னியன் பற்றியும், நீதிமன்றத்தில் அங்கம் வகித்த வன்னியர் பற்றியும் வன்னியர் பெற்றிருந்த சிறப்புரிமைகள் பற்றியும் விவரங்கள் தரப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணப் பட்டினம் என வழங்கிய தமிழரசில் அடங்கிய வன்னிமைகளைப் பற்றியும் கூறுகின்றார். யாழ்ப்பாண அரசு உள்ளடக்கியிருந்த வன்னிநாடு மன்னாரிலிருந்து திருகோணமலைவரை பரந்திருந்ததென்றும், அதன் எல்லை சிலாபம் வரை இருந்ததென்றும் சான்றுகள் தரப்படுகின்றன.

வடமேற்கரை

இலங்கையின் மேற்குக் கரையோரத்திலுள்ள புத்தளம், சிலாபம், முதல் ஏறத்தாழ நீர்கொழும்புவரை, தமிழர்கள் முக்கிய இனக் குழுமமாக வாழ்ந்து வந்துள்ளனர். பத்தொன்பதாம் நூற்றாண்டுக் காலத்தில் இங்கு தமிழ்க் குடியிருப்புகள் நிறைய இருந்தன. சைமன் காசிச் செட்டி புத்தளத்தைச் சேர்ந்தவரே. கத்தோலிக்கக் கிறிஸ்தவம் இப்பகுதியின் முக்கிய மதமாகும்.

புத்தளம் சிலாபத்தை தளமாகக் கொண்ட கத்தோலிக்க பேராயப் பிரிவில் படிப்படியான சிங்கள மயவாக்கம் ஏற்பட்டது. இதன் காரணமாக இங்குள்ள தமிழ்க் குடும்பங்கள் பல, படிப்படியாகச் சிங்கள மயப்படுத்தப்பட்டன. இந்த மாற்றத்தை நீர்கொழும்பில் இன்னும் காணலாம். ஆனால் அதேவேளையில் இங்குள்ள சில இந்துக்கிராமங்களான உடப்பு, முன்னேஸ்வரம் போன்றன இன்னும் தங்கள் தனித்துவத்தை பேணுகின்றன என பேராசிரியர் க.சிவத்தம்பி தனது இலங்கைத் தமிழர் யார் என்ற நூலில் கூறியுள்ளதைக் காணலாம்.

புத்தளம் - சிலாபம் பகுதிகளில் முஸ்லிம்களும் நிறைய வாழ்கின்றனர். புத்தளத்தில் அவர்கள் அரசியல் முதன்மை பெற்றவர்களாவர். இப்பகுதியின் மதப் பண்பாட்டில் திரௌபதி வணக்கம் முக்கியமானதாகும். மட்டக்களப்பில் உள்ள திரௌபதி வழிபாட்டு முறைமைக்கும் இப்பகுதியிலுள்ள திரௌபதி வழிபாட்டு முறைமைக்குமுள்ள தொடர்பினை ஆராய்தல் வேண்டும். இங்கு ஒரு பழைமையான கூத்து பராம்பரியமும் உண்டு. தமிழ்க்கலை, இலக்கியப் பாரம்பரியம் உண்டு இப்பிரதேசத்தின் தமிழ்த்தன்மையைப் பேணுவதில் பேராசிரியர் அ.சின்னத்தம்பி முக்கிய ஆர்வம் காட்டினார் எனவும் அவர் குறிப்பிடுகின்றார்.

பதினாறாம் நூற்றாண்டளவில் விஜயநகரப் பேரரசு நிலைகுலையத் தென்னிந்தியச் சமூக வழமைகளும் அமைப்புக்களும் சீர்குலையத் தொடங்கின. அமைதியையும் வழக்காறுகளையும் நிலைநாட்டக்கூடிய அரசரின்மையால், சமூகப்பிரிவுகளுக்கிடையே உரிமைகள், பணிகள் என்பவற்றையிட்டுச் சாதிப் பூசல்கள் மலிவுறத் தொடங்கின. இவ்வாறான சூழ்நிலைகளில் ஒவ்வொரு சமூகத்தவரும் தத்தம் பெருமையை நிலைநாட்டிக் கொள்வதற்காக இதிகாச புராணக் கதைகளை ஆதாரமாகக் கொண்டு தத்தங் குலங்களின் பூர்வீக வரலாற்றை விளக்க முற்பட்டனர். இதனாற் செங்குந்தர் புராணம், மறப்பாளர் புராணம், வன்னியர் புராணம் போன்ற நூல்கள் எழுந்தன. எனவே வன்னியர்புராணம், சிலை எழுபது போன்ற நூல்களில் வன்னியரின் பூர்வீக வரலாறு மறைவுற்றிருக்கின்றது

ஈழவரலாற்றிற் குறிப்பிடத்தக்கவொரு மாற்றம் பதின்மூன்றாம் நூற்றாண்டில் ஏற்பட்டது. கலிங்கமாகனது படையெடுப்பின் விளைவாகப் பொலநறுவையைத் தலைநகராகக் கொண்டு ஈழமனைத்தையும் உள்ளடக்கியிருந்த அரசு அழிவுற்றது. மன்னனை மையமாகக் கொண்ட மத்தியமயமான ஆட்சியும், பெருங்குளங்களையும் நீர்ப்பாசனத் திட்டங்களையும் ஆதாரமாகக் கொண்ட பொருளாதார முறையும் அழிந்தன. இவற்றின் அழிவில் மானிய முறையின் இயல்புகளைக்கொண்ட ஓர் அரசியலமைப்பு வளர்ச்சியடைந்தது. மாகனது படையெடுப்பின் பின் இரு அரசுகளும் பல குறுநில அரசுகளும் தோன்றி நிலைபெற்றன

ஈழத்திலுள்ள வரலாற்றுச் சார்புள்ள தமிழ் நூல்கள் யாவும் வன்னியர் தமிழகத்திலிருந்து வந்தார்களென்று கூறுகின்றன. மேலும் புத்தளத்து வன்னிமை பற்றிக் கூறும் வன்னி உபட்ட என்ற சிங்கள நூலும் அவ்வன்னிமையிற் சிறப்பிடம் பெற்றிருந்த முக்குவர் இந்தியாவிலிருந்தே இலங்கைக்கு வந்தனரென்று கூறுகின்றது. எனவே தமிழகத்திலிருந்து வந்த வன்னியர் அதிகாரம் பெற்றதன் விளைவாக ஈழத்திற் பல வன்னிமைகள் தோன்றினரென்று கொள்ளலாம். வன்னியராண்ட பிரதேசங்கள் வன்னி நாடுகளென வழங்கி வந்தன வென்று யாழ்ப்பாண வைபவமாலையுங் கூறுகின்றது.

முக்குவ வன்னிமைகளை, மட்டக்களப்பு வன்னிமை, புத்தளத்து வன்னிமை என இரு பிரிவுகளாக வகுத்துக் கூறக் காணலாம். பதின்மூன்றாம் நூற்றாண்டில் கலிங்க மன்னன் மாகன், முக்குவரை மட்டக்களப்புக்கு அழைத்து வந்து அவர்களின் படைத் தலைவருக்கு வன்னிபம் என்ற பட்டத்தை அளித்தானென மட்டக்களப்பு மான்மியம் கூறுகின்றது. சீதவாக்கையிலிருந்து மட்டக்களப்புக்குச் சென்று குடியேறிய இஸ்லாமிய குடும்பங்களின் வரலாற்றைக் கூறும் ஒரேட்டுப்

பிரிதி, மட்டக்களப்பில் அதிகாரம் செலுத்திய ஏழு வன்னியர்பற்றிக் குறிப்பிடுகின்றது. தேசாதிபதி பான் கூன்ஸின் அறிக்கையையும் ஆதாரமாகக் காணப்படுகின்றது.

பாண்டிய பரம்பரையில் இருந்து வந்து சிங்கள அரச குடும்பத்தோடு தொடர்பு பூண்டிருந்த பராக்கிரம பாண்டியன் என்னும் மன்னன் சில காலம் அரசாள்கையில் கலிங்க தேசத்திலிருந்து கேரளப் படையுடன் மாகன் என்பான் சிங்கள அரசுக்கு உரிமை கோரி வட இலங்கையில் வந்து இறங்கினான். இவன் செயவாகு என்பவனோடு சேர்ந்து முதல் வட இலங்கை முழுவதையும் தன் ஆணைக்குள் அடக்கிக் கோட்டை கொத்தளங்கள் அமைத்தான். கொட்டகார (கொட்டியாரம்), கங்காதளாக (கந்தளாய்), காகாலய (காக்காப்பள்ளி), பதீ (பதவியாக் குளம்), குறுந்தி, மனாமத்த, மாசிந்த(மாதோட்டம்), மன்னார், பலச்சேரித்துரை, வலிகாமம், கோண (திருகோணமலை), கோணுக (கள்ளு மரைத் துறை), மதுபாதவதித்த, சூராதித்த ஆகிய இடங்களில் அரண்கள் அமைத்து வட இலங்கை முழுவதையும் பல்லாண்டுகள் ஆண்டு வந்தனர். (இலங்கை தமிழர் வரலாறு 1956)

அதன் பின் புலத்தி நகர் என்ற பொலன்னறுவையைக் கைப்பற்றி அதனைத் தனது தலைநகராக்கினான்.இவன் காலம்(கி.பி.1215-1235), இவனது ஆட்சிக்காலம் தொடக்கம் இலங்கையில் தமிழரசு வலிமை பெறத் தொடங்கியது. புத்தளத்திலிருந்து திருகோணமலை வரைக்கும் ஒரு கோடு கிழித்தால் அக்கோட்டின் வடக்குப் பாகம் முழுவதும் தமிழ் இராச்சியமாக அமைந்திருந்ததென்பது மேற்கூறியவற்றால் விளங்கும். அன்றியும் தமிழர் ஆதிக்கமும், அவர்தம் அரசியற் செல்வாக்கும் "மாயரட்டை"எனப்படும் நீர்கொழும்பு சிலாபம் பகுதி வரையும் பரந்தது. (G.C..Mendis, THETTHE EARLY HISTORY OF CEYLON 1954).

நான்காம் விஜயபாகு (கி.பி.1271-1273) யாப்பகுவையிலிருந்து அரசோச்சிய இவன் காடடர்ந்து கிடந்த அனுராதபுரத்துக்கு வந்து அந்நகரிலுள்ள புத்த கோயில்களைத் திருத்துவித்தான், இக்காலத்தில் வன்னிப்பகுதி தமிழ் சிற்றரசரின் கீழ் இருந்து வந்தது. குறிப்பிட்ட சிங்கள அரசன் இச்சிற்றரசர் கையில் அனுராதபுரத்தைப் பாதுகாக்கும் பொறுப்பை ஒப்படைத்தான்.

பதின்மூன்றாம் நூற்றாண்டின் இறுதிக் காலத்திலும், பதின்மூன்றாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் தென்னிந்தியாவில் நிகழ்ந்த இஸ்லாமிய படையெடுப்பால் பாண்டிய நாட்டில் கலகங்கள் மலிந்து கிடந்தன. அதனோடு அங்கு உள்நாட்டுக் கலகங்களும் இருந்து வந்தன. மேலும் இந்நாட்களில் சிங்கள இராச்சியம் வலிமை குன்றி இருந்தது. இவற்றினைப் பாண்டிய தளபதியாகிய ஆரியச்சக்கரவர்த்தி பெரிதும் பயன்படுத்தித் தன்னையே வட இலங்கை தமிழ் பகுதிக்கு அரசனாக்கிக் கொண்டான்.

ஆரியச் சக்கரவர்த்தி (கி.பி.1450) காலப்பகுதியில் தமிழ் இராச்சியம் மிகுந்த வலிமையோடு செல்வமும், செழிப்பு மோங்கிக் கீர்த்தியோடு விளங்கியது. மன்னார், சிலாபத்துறை முதலிய இடங்களில் நடந்த முத்துக் குளிப்பினால் செல்வங் கொழித்தது. பெரிய கடட்படை ஒன்று ஆரியச் சக்கரவர்த்தி கையில் இருந்தது. அதனால் ஈழத் தமிழர், மலையாளம் முதலிய இடங்களுக்குச் சென்று வாணிகம் வளர்த்து வந்தனர். இத்தகைய செல்வ வளம் வாய்ந்த ஈழத் தமிழ் நாட்டிற்குப் பலர் பிற நாடுகளிலிருந்தும் வந்தனர். அவர்களுள் இபுன்பத்தூத்தா, மார்க்கோ போலோ என்போர் குறிப்பிடத் தக்கவர்கள், இவ்வரசனையும், அரசினையும் பற்றி இபுன்பத்தூத்தா கூறும் செய்திகள் கவர்ச்சிகரமானவை. அதாவது "இவ்வரசனின் பெயர் ஆரியச்சக்கரவர்த்தி கடற்படை வலிமை கொண்டவன், மலையாளத்திலே யான் தங்கியிருந்த பொழுது இவன் நாவாய்கள், சிறியவும், பெரியவுமாக நூறு கப்பல்கள் நங்கூரமிட்டுக் கெம்பீரமாய் அங்கு நின்றன. அதிதிகளை உபசரிக்கும் அன்பு சார்ந்த நெஞ்சினன், பாரசீக மொழியிலே வல்லுனன். அம்மொழியில் என்னுடன் உரையாடினான். எனக்கு நல்ல பரிசில்களை வாரி, வாரியிரைத்தான். அவை மட்டுமோ, தன்

இராச்சியத்தில் கிடைக்கும், திறமான முத்துக்களையும் பரிசாக ஈந்தான். அன்றியும், யான் விரும்பிய வண்ணம் ஆதாம் மலைக்கு யாத்திரை செய்ய உதவியும் செய்தான்".

இபுன்பத்தூத்தாவின் கூற்றின்படி ஆரியச்சக்கரவர்த்தியின் தலை நகரம்" புத்தய" என்பதாகும். சரித்திர ஆசிரியர் பலர் இதனை புத்தளம் எனக் குறிப்பிட்டு உள்ளனர்.

பதினாறாம் -பதினைந்தாம் நூற்றாண்டு காலப்பகுதியில் தென்னிந்தியப் படையெடுப்புக்குப் பயந்து சிங்கள அரசர் அனுராதபுரத்தை கைவிட்டனர். அதனால் பொருள் வருவாயைக் கொடுத்த அப்பகுதியிலுள்ள நெல்வயல் முதலியன பாழடைந்தன. இதே காலத்து அராபிய வணிகர் காலி தொடக்கம் புத்தளம் வரையுள்ள சில இடங்களைத் தமது வணிகத்திற்கு நிலைக்கலனாக ஆக்கிக்கொண்டனர். காலி, பேருவளை, கொழும்பு ஆகிய இடங்கள் அராபியரின் வணிகத்திற்கு மிக முக்கிய இடங்களாக விளங்கின.

ஆரியச் சக்கரவர்த்தி பரம்பரையினரின் ஆட்சியில், இக்கரைப் பகுதியிலே, தமிழரசு மிகுந்த உச்ச நிலையை அடைகின்றது. படிப்படியாகத் தமிழர்கள் தங்கள் நாட்டு எல்லையைப் பெருப்பித்து இலங்கையின் பெரும்பாலான பகுதியை ஆளத்தொடங்கினர்.

புத்தளத்து வன்னிமை

மட்டக்களப்பிற் போலப் புத்தளத்திலும் ஒல்லாந்தராட்சிக் காலம் வரை முக்குவ வன்னிமை இருந்தது. புத்தளத்து முக்குவர் எப்போது அங்கு குடியேறினர் என்பதை அறிவதற்கு எதுவித சான்றுகளுமில்லை. ஆறாம் பராக்கிரமபாகுவின் ஆட்சிக் காலந்தொட்டுப் புத்தளத்து வன்னிமை பற்றிச் சில குறிப்புக்கள் கிடைக்கின்றன.

வாட்டிக அபயன் காலத்தில் முக்குவர் புத்தளத்திற்கு வந்து குடியேறினரென வன்னி உபட்ட என்ற நூல் கூறுகின்றது. எனினும் இந்நூல் துவக்கு, வெடி மருந்து முதலியவற்றைக் குறிப்பிடுவதால் பதினாறாம் நூற்றாண்டளவிற் காணப்பட்ட நிலைகளையே இந்நூல் திரித்துக் கூறுகின்றதெனக் கொள்ளலாம் என பேராசிரியர் சி.பத்மநாதன் கூறுகின்றார். கிழக்கிலங்கையிற் போலப் புத்தளத்திலும் மாகன் படையெடுத்து வந்த காலத்திற் புத்தளத்து வன்னிமை ஏற்பட்டிருக்கக் கூடுமென்பது ஆராய்ச்சிக்குரியது.

யாழ்ப்பாணப் பட்டினத்தைச் சேர்ந்த வன்னிநாடுகள் சிலாபம் வரை பரந்திருந்தன வென்று குவேறோஜஸ் சுவாமிகள் கூறியுள்ளார். எனவே கோட்டை அரசு எழுச்சி பெறமுன் யாழ்ப்பாண மன்னரின் ஆதிக்கம் புத்தளத்தில் வந்த அராபிய அறிஞரான இவுன்பற்றுற்றா பட்டாள நகரிலே தான் ஆரியச்சக்கரவர்த்தியைக் கண்டதாகவும், அந்நகரிலுள்ள துறைகளிற் கறுவா பெருந்தொகையிலே குவிக்கப்பட்டிருந்ததாகவும் செப்புகின்றார். இவுன் பற்றுற்றா புத்தளத்தையே பட்டாள நகரென வர்ணித்தாரென்று பல அறிஞர் கருதுவர்.

முக்கர கட்டன என்ற சிங்கள மொழியிலுள்ள நூல் புத்தளத்து முக்குவருக்கும் ஆறாம் பராக்கிரமபாகு (1415-67) விற்குமிடையில் நடைபெற்ற போரினைப்பற்றிக் கூறுகின்றது. புத்தளத்தைச் சேர்ந்த முக்குவர் புன்னால, நாகபட்டினம் ஆகிய இடங்களிற் பாளையமிட்டுப் பராக்கிரமபாகுவைத் தாக்கிய போது அவ்வரசன் அமைச்சர்களைக் கூட்டி அவர்களின் ஆலோசனையைப் பெற்றுக் காஞ்சிபுரம், காவிரிப்பட்டினம், கீழக்கரை முதலிய இடங்களிலிருந்து போர் வீரர்களை அழைத்துத் தன் படையிலே சேர்த்ததாகவும் இந்நூல் கூறும். இவ்வாறாக பராக்கிரமபாகு வரவழைத்திருந்த படைகள் புத்தளத்திற்குச் சென்று மூன்று மாதங்களாக முக்குவருடன் கடும்போர் நிகழ்த்தியதன்பின் அவ்வன்னிமையைக் கைப்பற்றின. அத்துடன் பராக்கிரமபாகுவின் ஆட்சி ஏற்பாடாகியது. பரக்கும்ப சிரித என்ற நூல் பராக்கிரமபாகு 'முக்கர' அரசனை நிர்மூலனஞ் செய்தானென்று கூறுகின்றது.

பராக்கிரமபாகுவிற்கும் இம்முக்கர அரசனுக்குமிடையில் நடைபெற்ற போரே முக்கர கட்டனவில் விரித்துரைக்கப்பட்டுள்ளது. பராக்கிரமபாகு புத்தளத்து வன்னிமையைக் கைப்பற்றியிருந்தும் அங்கு வன்னியரின் அதிகாரம் மறையவில்லை.

பதினாறாம் நூற்றாண்டைச் சேர்ந்த இரு செப்பேடுகள் புத்தளத்து வன்னிமை பற்றி அரிய சான்றுகளைத் தருகின்றன. ஏழாம் புவனேகபாகு நவரத்தின வன்னியனுக்குக் கொடுத்த செப்பேட்டில் லுணுவில என்னுமிடத்திலிருந்து அவ்வன்னியன் புத்தளத்தை ஆண்டானென்பதை அறியமுடிகின்றது. மேலும் இவ்வாவணம் புத்தளத்திலுள்ள முத்திரகூடம் என்ற நீதிமன்றம் பற்றியும் தகவல்களைக் கொண்டுள்ளது. அம் மன்றத்திலிருந்த பதினெட்டு உறுப்பினரும் ராஜவன்னியர் என்ற பட்டத்தைப் பெற்றிருந்தனர். மேலும் அவ்வன்னியர் பல சிறப்புரிமைகளையும் பெற்றிருந்தனர் தலைமுறை தலைமுறையாக அவ்வன்னியரின் சந்ததியினர் முத்திரகூடத்தின் உறுப்பினராயிருப்பதற்கு உரிமை அளிக்கப்பட்டிருந்தது. அரசனுக்குரிய வரிகளைச் செலுத்தும் பொறுப்பிலிருந்து விடுபட்டிருந்ததோடு குற்றங்களைச் செய்யினும் அவற்றிற்கான தண்டனைகளைப் பெறாத வாய்ப்பினையும் அவர்கள் பெற்றார்கள். அத்துடன் அவர்களின் உறவினரும் ஊழிய சேவையிலிருந்து அவகாசம் பெற்றிருந்தனர்.

கணையாழி. கவசம், சாமரம், பவளக்குடை, வெள்ளிவாள் போன்றவற்றைத் தம் சமக்கட்டாகப் புத்தள முக்குவவன்னியர் பெற்றிருந்தனரென்பதை மாதம் பையிலிருந்த தனியவல்லபன் வழங்கிய சேப்பேட்டின் வாயிலாக அறியலாம்

யாழ்ப்பாண அரசின் அளவினைப் பற்றிக் குவேறோஸ் சுவாமியார் சொல்வன ஒல்லாந்த தேசாதிபதி பான் கூன்ஸ் சொல்வனவற்றைப் பெரிதும் ஒத்திருக்கின்றன. யாழ்ப்பாணப்பட்டினத்தைப் பற்றி அத்தேசாதிபதி மேல்வருமாறு கூறுகின்றார். இந் நான்கு மாகாணங்களும் பதின்மூன்று தீவுகளும் யாழ்ப்பாணப் பட்டினமென்று வழங்கி வந்தன. இவற்றோடு வன்னியும் அவ்வரசைச் சேர்ந்திருந்தது. யாழ்ப்பாண மன்னர் வன்னியைக் கைப்பற்றித் திறை பெற்று வந்தனர். அதே போலப் போத்துக்கேயரும் வன்னியரிடமிருந்து திறை பெற்றனர். மேற்கிலே கற்பிட்டியிலிருந்து பூநகரிப் பக்கமாகவுள்ள கல்முனை வரை இடங்களை அடக்கிக் கிழக்கிலே திருகோணமலை வரையும் வன்னி பரந்து காணப்படுகிறது. இவ்வரசினைப் சியங்கேரி (சங்கிலி) என்ற அரசன் நாற்பத்திரண்டு ஆண்டுகளுக்கு மேலாக ஆட்சி புரிந்தான்.

யாழ்ப்பாண வைபவமாலை வன்னியில் இருதடவைகளாக வன்னியரின் குடியேற்றம் ஏற்பட்டதென்று சொல்கின்றது. இவற்றுள் முதற் குடியேற்றம் குளக்கோட்டன் காலத்தில் ஏற்பட்டதெனவும். இரண்டாம் குடியேற்றம் பாண்டிய நாட்டால் வந்த ஐம்பத்தொன்பது வன்னியரின் வருகையோடு ஏற்பட்டதென்றும் அந்நூல் கூறும்.

பதின்மூன்றாம் நூற்றாண்டில் நடந்த பாண்டியப் படையெடுப்பின் பின்னணியில் வைத்தே வன்னியர் பற்றி வையாபாடல் கூறுவதை நோக்கவேண்டும். இவ்வன்னியர்கள் கைப்பற்றிய இடங்களிற் பல யாழ்ப்பாண மன்னர் ஆதிக்கத்துள் அமைந்திருந்தமையும் இக் கருத்துக்கு ஆதாரம் அளிக்கின்றது.

யாழ்ப்பாண அரசர்களின் கல்வெட்டுக்கள் என்று கொள்ளக் கூடியன இரண்டு மட்டுமே இதுவரை ஈழ நாட்டிற் கிடைத்துள்ளன. அவற்றுள் ஒன்று தென்னிலங்கையில் கோட்டகம எனுமிடத்திற் கண்டெடுக்கப்பட்டது. அது பதினான்காம் நூற்றாண்டில் ஆரியச் சக்கரவர்த்திகளுள் ஒருவன் மலைநாட்டினுள் நுழைந்து கம்பளையிலிருந்து ஆட்சிபுரிந்த தென்னிலங்கை வேந்தனைத் தோற்கடித்தமையை மேல்வருமாறு கூறுகின்றது.

'சேது'
கங்கணம் வேற்கண்ணிணையாற் காட்டினார் காமர் வளைப்
பங்கையக் கைமேற்றிலதம் பாரித்தார் பொங்கொலி நீற்
சிங்கை நகராரியனைச் சேராவனு ரேசர்
தங்கள் மடமாதர் தாம்.

பதவியாவிற் கண்டெடுக்கப்பட்ட கிரந்த எழுத்துக்களிலுள்ள வடமொழிக் கல்வெட்டு ஒன்று லோகநாதன் என்ற தண்டநாயக்கன் மணிகளாலும் முத்துக்களாலும் அலங்கரிக்கப்பட்ட மிக ஒளிபொருந்திய முடியைக் கொண்ட விகாரம் ஒன்றை அமைத்து, அதற்கு வேளைக்கார விகாரமெனப் பெயரிட்டான் என்று கூறுகின்றது. இக் கல்வெட்டின் தொடக்கத்திலே 'சேது' குலத்தின் கீர்த்தி குறிக்கப்படுவதால் 'சேது'வை இலச்சினையாகக் கொண்ட ஆரியச்சக்கரவர்த்திகளின் வம்சமான யாழ்ப்பாண மன்னர் குலமே ஈண்டு குறிப்பிடப்பட்டுள்ளதென ஊகிக்கலாம். எனவே அவ்விகாரையை அமைத்த லோகநாதன் ஆரியச்சக்கரவர்த்தியின் தளபதிகளுள் ஒருவனாக இருந்திருத்தல் கூடும்.

பரராச சேகரனின் திருப்பணி பற்றிய பட்டயத்திற் போல இதிலும் கிரந்த எழுத்துக்கள் ஆங்காங்கு வந்துள்ளன. அத்துடன் பட்டயம் தமிழ் நாட்டில் எழுதப்பட்டபோதும் பேச்சு வழக்கிலுள்ள மொழி நடையிலேயே பட்டயம் எழுதப்பட்டுள்ளது. இவையும் இன்றைய உடப்பு பேச்சி வழக்கையும் ஒருங்கே ஆராய்தல் வேண்டும்.

இலங்கையில் புராதனமான சிவன் கோயில்களில் ஒன்றான முன்னேஸ்வரம் பல சிறப்புகளைக் கொண்டது. அது சைவர்கள் மிகுந்த பக்தியோடு யாத்திரை போகின்ற தலம். முன்னேஸ்வரத்திலே பாவ விமோசனங்களைப் பெற்றுக் கொள்ளலாம் என்பது சைவர்கள் பலரின் நம்பிக்கையாகும். அரக்கர் கோனாகிய இராவணனைக் கொன்றதால் ஏற்பட்ட பாவத்தைப் போக்குவதற்காக இராமபிரான் மாயவனாற்றங் கரையிலே லிங்கப் பிரதிஷ்டை செய்து வழிபாடு ஆற்றினார் என்பது கோயிலின் உற்பத்தி பற்றிய ஐதீகமாகும்.

முன்னேஸ்வரத்திலுள்ள மூலஸ்தானம் ஓர் அரிய தொல்பொருட் சின்னம். அது 15 ஆம் நூற்றாண்டுக்குரிய விஜயநகர கலைப்பாணியில் அமைந்தது. அது பழைய கட்டடத்தின் எஞ்சியுள்ள பகுதி. அதன் மேலமைந்த விமானத்தையும் மண்டபங்கள், கோபுரங்கள், சுற்றுப் பிரகாரங்கள் ஆகியவற்றையும் போர்த்துக்கேயப் படைகள் இடித்து விட்டனர். மூலஸ்தானத்தின் அதிஷ்டானப் பகுதியில் ஆறாம் பராக்கிரமபாகுவின் காலத்து (1412 - 1467)ச் சாசனம் காணப்படுகின்றது. அது முன்னேஸ்வர ஆலயம் பற்றிக் கிடைக்கின்ற வரலாற்று ஆதாரங்களில் முதன்மையானது. என பேராசிரியர் சி.பத்மநாதன் குறிப்பிடுவது நோக்கத்தக்கது. பல நெடுங்காலமாக இப்பகுதிகளில் தமிழ் சைவர்கள் தமது கலாச்சாரப் பண்பாட்டு மரபுகளோடு செல்வச் சிறப்போடு வாழ்ந்துள்ளனர் என்பதற்கு முன்னேஸ்வரம் சிறந்த ஆதாரம் எனலாம். அன்றிலிருந்து இன்றுவரை முன்னேஸ்வரத்துக்கும் உடப்பிற்கும் நெருக்கமான தொடர்பு ஆலயங்களிலும், திருவிழாக்களிலும் காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

இலங்கை கரவா அல்லது கரையார் வரலாறு முக்கிய விடயங்களை தருகின்றன. கரையார் சாதியைச் சேர்ந்தவர்கள் சிங்களவர் மத்தியிலும் தமிழர் மத்தியிலும் வாழ்கிறார்கள். இவர்களுள் ஒரு பிரிவினர் சிங்களவர்கள் ஆனமை, ராகவனைப் பொறுத்தவரையில் கரையார்கள் தென்னிந்தியக் கூலிப் படையினரின் வாரிசுகளாவர். இவர்கள் வரலாற்றின் முன்னைய காலங்களில் இருந்தே வரத்தொடங்கியவர்களாவர். கரையாரிடம் ஒரு மரபார்ந்த கதை இருக்கிறது.

இதன்படி இவர்கள் மகாபாரதத்தில் காவியத்தில் வரும் கௌரவ குலத்தைச் சேர்ந்தவர்கள். பாரத யுத்தத்தில் பாண்டவர்களிடம் தோல்வியுற்ற பின்னர் இவர்கள் கலைந்து போய் எல்லா இடங்களுக்கும் பரவியதாக இது கூறும் (ராகவன் 1961:6). தற்போது பிரித்தானிய அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டிருக்கும் 'முக்கர ஹட்டானா' என்ற பழைய சிங்கள குறிப்பின்படி, நீர்கொழும்பானது (தற்போதய கரவா மக்களின் பிரதான நகரம்) கோட்டையைச் சேர்ந்த மன்னன் நான்காவது பராக்கிரமபாகுவினால் (1412-1467) தென்னிந்தியாவில் இருந்து பணிக்கு அமர்த்தப்பட்ட கூலிப்படை வீரர்களுக்குப் பரவேணி நிலமாகக் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த நாட்டில் குடியமர்த்தப் பட்ட இந்தக் கூலிப்படையினர் 'படிப்படியாகத் தமது அயலவரின் மொழியையும், கலாச்சாரத்தையும் ஏற்றுக் கொள்ளத் தொடங் கினார்கள்' (ராகவன் 1961:5). பத்தொன்பதாம் நூற்றாண்டில் இலங்கையில் புதிதாக மேலோங்கி வந்த புதிய மேட்டுக்குடி யினரான கரவா சாதியைச் சேர்ந்த ஜெரொனிஸ் பீரிஸ் என்பவர் பற்றி ரொபர்ட்ஸ் அவர்கள் வாய்வழியாக வழங்கப்பட்டு வந்து ஒரு கதையைக் கூறுவார். இந்தக் குடும்பக் கதையின்படி ஜெரோனிஸ் பீரிஸினுடைய தந்தையார் வட இந்தியாவைச் சேர்ந்த ராஜ்புட் மறவர் சாதியைச் சார்ந்தவர். இவர் கண்டிய அரசனான கீர்த்தி சிறீ இராஜசிங்கனது (1747. 1782) கூலிப்படையினரின் தலைமை அதிகாரியாக இருந்தவராம். இவர் தனது பணிக்காலம் முடிந்த பின்பும் நாட்டிலேயே தங்கிவிட்டாராம்: கண்டிய உடை மற்றும் சிங்களப் பெயர் போன்றவற்றையும் ஏற்றுக் கொண்டாராம் (ரொபர்ட்ஸ் 1975).

இது தொடர்பாக ரொபர்ட்ஸ் குறிப்பிடும் போது "இவரது கதையானது, சிங்களக் கரையாரிடையே பெருவழக்காக உள்ள இந்தியப் பூர்வீகம், சத்திரிய வம்சம் பற்றிய கருத்துகளை மறுதலிப்பதாக இருப்பதாகச் சுட்டிக்காட்டுகிறார். கரவா சாதியினரின் ஒன்றுகலத்தல் மற்றும் மாற்றமடைவது என்ற போக்கானது இப்போதும் தொடர்ந்து கொண்டே இருக்கிறது. கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்த மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் கரவா சாதியினரிடையே ஆய்வை மேற்கொண்ட ஸ்டிரார்ட் என்பவரது அவதானிப்பின்படி, இவர்கள் கடலிலும் வீட்டிலும் தமிழைப் பேசுகிறார்கள்: சந்தையிலும், அன்றாடப் பொது விடயங்களில் மற்றவர்களோடு தொடர்பாடச் சிங்களத்தைப் பயன்படுத்துகிறார்கள். அறுபதுகளின் ஆரம்பத்தில் இருந்து சிங்களம் அதிகளவு முக்கியத்தைப் பெற்று வருகிறது. இந்தப் போக்கைக் கத்தோலிக்க ஆலயங்கள் ஊக்கப்படுத்துகின்றன. பௌத்தக் கரையாரைப் பொறுத்த வரையில் அவர்கள் முற்றிலும் சிங்களவர்கள் ஆகிவிட்டார்கள்".

மதம் என்ற அம்சமானது கரையாரது வகையினங்களின் வரையறைகளை இன்னமும் தெளிவற்றதாக ஆக்குகிறது. கரையார் என்ற பதமானது கத்தோலிக்க, புரொடெஸ்தாந்த, இந்து, பௌத்த அனைத்து வகையினரையும் உள்ளடக்கக் கூடியதாகும். கத்தோலிக்கக் கரையார்கள் கொழும்பின் வடக்கே சிலாபம் வரையான கரையோரங்களில் பெரும்பாலும் செறிவாக வாழ்கிறார்கள். இவர்கள் போத்துக்கீசரினால் மதமாற்றம் செய்யப்பட்டவர்கள். பௌத்தக் கரையார்கள் தெற்கு, தென்மேற்குக் கரையோரங்களில் செறிவாக வாழ்கிறார்கள். இந்து கரையார்கள் தமிழ்ச் சமூகத்துடன் இணைந்து வாழ்கிறார்கள். நவீன இலங்கையில் தமிழ் பௌத்தர்கள் மற்றும் சிங்கள இந்துக்கள் என்ற வகையினங்கள் காணப்படவில்லை. ராகவனது கருத்துப்படி, 'பாதுகாக்கப்பட்ட போர்த்துக்கீச தோம்புகளில் (காணிப்பதிவு பத்திரங்கள்) புறச்சமயம் சார்ந்த பெயர்கள் இருப்பதானது, நீர்கொழும்பிலும் ஏனைய பகுதிகளிலும் உள்ள கரையார்கள் மதமாற்றத்திற்கு முன்பு இந்துக்களாக இருந்திருக்கலாம் என்பதற்குச் சான்றாக அமைகிறது (ராகவன் 1961).

பிரித்தானியரது ஆட்சியின் கீழ் வழங்கப்பட்ட பொருளாதார வாய்ப்புகளைப் பற்றிக் கொண்டே கரவா சாதியினர், சாதி அடுக்கமைவில் உயர்வான அந்தஸ்த்து நிலையை வந்தடைந்தார்கள். பத்தொன்பதாம் நூற்றாண்டில் நடைபெற்ற பௌத்த மறுமலர்ச்சி இயக்கத்திலும் முக்கியக் காரணியாக விளங்கினார்கள். வரலாற்று விபத்தாக, டச்சுக்காரது வருகையானது இந்தக் கரையாரை, சிங்களவரது பக்கத்திற்குக் கொண்டு வந்து சேர்த்திருக்கலாம் என்ற கருத்தொன்று ரொபர்ட்ஸ் வாதங்களில் உள்ளோட்டமாகக் காணப்படுகிறது:

கரையோரப் பிரதேசங்களில் போர்த்துக்கீசர்களது ஆட்சியானது தொடர்ந்திருக்குமானால், பெரும்பான்மையினரான கரையார்கள் கத்தோலிக்கர்களாகவே இருந்திருப்பார்கள். இதனால் ஒருவித மைய நோக்குவிசை செயற்பட்டு இவர்களை மேல்நிலையாக்கத்திற்கு வழி வகுத்திருக்கலாம். பதினெட்டாம் நூற்றாண்டிலும் அதற்குப் பிந்திய பகுதியிலும் சிங்கள மக்கள் ஒன்றாக இணைவதும் ஒன்று கலப்பதும் இப்படியாகவே நடந்தேறியது (ரொபர்ட்ஸ் 1982).

கரையார் எப்படிப்பட்ட நிகழ்வுப்போக்கினால் சிங்களவர் களானார்கள் என்பது தொடர்பாக விரிவாக விவாதிப்பதற்கு இங்குப் போதிய சந்தர்ப்பம் இல்லை. ஆனால், நாம் இங்குச் சில விடயங்களைக் குறித்துக் கொள்வது முக்கியமானதாகிறது. சிங்கள மக்கள் ஆதிக்கம் அதிகம் இருந்த பிரதேசங்களில் வாழ்ந்த கரையார்கள் மட்டுமே 'சிங்களமயப்படுத்தப்பட்டார்கள்' என்பது மிகவும் வெளிப்படையானது. குறிப்பிட்ட ஒரு மொழியை ஏற்றுக் கொள்வதானது, காலப்போக்கில் ஏனைய கலாச்சார அம்சங்களையும் ஏற்றுக் கொள்வதற்கான ஒரு பாலமாக அமைந்துவிடுகிறது.

சிங்கள மொழியானது மேல்நிலைக்கு வர, பல பழங்குடிகள் சார்ந்த கலாச்சார நடை முறைகள் (உதாரணமாகக் குணமளிக்கும் சடங்குகள்) விரிவாகப் பின்பற்றப்படத் தொடங்கின. கத்தோலிக்கர்களின் பெரும் பான்மையானோர் கூட இந்த உள்ளூர் மயமாதலில் இருந்து தப்பிக்கவில்லை (ரொபர்ட்ஸ் 1982: 3). இந்தப் போக்கானது இன்னமும் தொடர்வதாக ஸ்ரிராட் என்பவர் காட்டுகிறார். இந்தக் கரையாரது ஒன்று கலத்தலானது, சிங்கள அடையாளம் என்பதானது, ஒரே கல்லில் செதுக்கியது போல ஒரேவகையான, பிளவுகள், சேர்க்கைகளற்ற ஒன்றல்ல என்பதைக் காட்டுகிறது. சிங்களவர்கள் ஒரு கலாச்சார, மொழி சார்ந்த சமூகம் என்பதையும் அது பல நூற்றாண்டு காலமாகக் குடிபெயர்ந்து வந்த பல்வேறு குழுக்களையும் இவர்களில் பெரும்பான்மையினரானவர் இந்தியாவில் இருந்து குடிபெயர்ந்தவர்கள், அதிலும் குறிப்பாகத் தென்னிந்தியாவில் இருந்து குடிபெயர்ந்தவர்கள் முதன்மையானவர்கள், இவர்களை யும் உள்வாங்கி, ஒன்று கலந்துதான் இந்த சிங்கள அடையாளம் உருப்பெற்று வந்துள்ளது என்பதையும் காண முடிகிறது. இந்த ஒன்றுகலக்கும் நிகழ்வுப்போக்கானது இப்போதும் தொடர்ந்த வண்ணமே இருக்கிறது. இப்போது ஒன்று கலத்தலுக்கான சாதனமாக மதத்திற்குப் பதிலாக மொழி அமைகிறது. (குணவர்தன, 1987).

உடப்பூர்

இலங்கையில் இந்துசமுத்திர கரையோரத்தின் மேற்கு திசையில் அழகான வரலாற்று பொழிவுடன் அமைந்திருக்கும் இந்த உடப்பு கிராமம் கடத்தொழிலை மையமாகக் கொண்ட கரையார் சமூகமாகும்.

பொறும் மழை காரணமாக அயல் கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கும் போது கடலோரமாக இருக்கும் உடப்பு கிராமத்தின் வழியாக அன்றிலிருந்து இன்றுவரை வெள்ளத்தினை கடலுக்கு சேர்ப்பதனால் `உடைப்பூர்` என உருவெடுத்து, 'உடைப்பங்கரை' என்றும் தற்பொழுது `உடப்பு` எனவும், சிங்கள மொழியினால் `உடப்புவ` எனவும் அழைக்கப்படுகிறது.

உடப்புக் கிராமம் - வடமேல் மாகாணத்தில், புத்தளம் மாவட்டத்தில் புத்தளம் - கொழும்பு பிரதான வீதியில் பத்துளு ஓயாச் சந்தியிலிருந்து வட மேற்காக நான்கு மைல் தூரத்தில் இந்துமா சமுத்திரத்தின் கரையோரத்தில் அமைந்துள்ளது. இவ்வூரின் தெற்கே குருமன்களி என்ற கடலுடன் தொடர்பற்ற உப்புநீர் நிறைந்த அளமும், கிழக்கே ஒல்லாந்தர் வெட்டு வாய்க்காலும், வடக்கே இவ்வூரவர் குடியேறி வாழும் ஆண்டிமுனைக்கிராமமும், செல்வபுரக் கிராமமும், மேற்கே இந்துமா சமுத்திரமும் காணப்படுகிறது

இன்று உடப்பு என்று அழைக்கப்படும் இவ்வூர் ஏறத்தாள நான்கு மைல் நீளமும், அரை மைல் அகலமும் உடையதாய் நெருக்கமான குடித்தொகையைக் கொண்ட பிரதான நகரத்தையும், ஆண்டிமுனை கிராமத்தையும், செல்வபுரக்கிராமத்தையும் உள்ளடக்கியதாகும். தெற்கு எல்லையில்

இருக்கும் குருமன்களி என்னும் உப்புநீர் வாவியில் மீன்பிடித் தோழிலைச் செய்ததுடன் அதன் அண்மையில் இருந்த பரந்தசதுப்பு நிலத்தில் கோடை காலத்தில் உப்பளமும் செய்துள்ளனர்

புத்தளத்தையும் கொழும்பையும் இணைக்கும் நீர்ப்பாதையாக ஒல்லாந்தர் வெட்டுவாய்க்கால் அமைந்துள்ளது. ஒல்லாந்தர் தமது வர்த்தக நோக்கங்களுக்காக புத்தளம் களப்பையும், களனிகங்கையும் இணைத்து மேற்குக் கரையோரமாக இக்கால்வாயை வெட்டியுள்ளனர். முன்னைய காலத்தில் இப்பிரதேசத்தின் உட்பத்திப்பொருட்களை கொழும்புக்குக் கொண்டு செல்லவும், அத்தியாசியப் பண்டங்களை கொழும்பிலிருந்து இப்பிரதேசத்துரைகளுக்குக் கொண்டு வரவும் இது துணை புரிந்துள்ளது

"உடைப்பூர்" என்பதை இன்னும் ஆழமாக ஆராய வேண்டும். மகாபாரதத்தின் தலைநகரான குருசெஷ்திரம் (குரு ராஜ்ஜியம்) அமைந்திருந்த இடத்தில் ராஜஸ்தானியில் பழைமையான உடைப்பூர் எனும் நகரம் இன்றும் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. இன்னும் மகபாரதத்துடன் பின்னிப்பிணைந்து, தாங்கள் குருகுலத்தவர்கள் என பெருமையுடன் வாழ்ந்து கொண்டிருக்கும் உடப்பு மக்களுக்கும், இந்த உடைப்பூர் என்ற பெயருக்கும் இடையிலான தொடர்பு ஆய்விற்குரியது.

உடப்பு மக்களின் ஆரம்ப காலக் குடியிருப்புக்கள் இந்துசமுத்திரமும் முந்தல் குடாவும் நெங்கி இருக்கம், "அறுவாய்" இவ்விடத்திலேயே இடத்திலேயே அமைந்திருக்கிறது, வெட்டி வெள்ள நீரைக் கடலுக்குப் பாய்ச்சுவர், அவ்விடத்திலேயே இம்மக்களின் காவல் தெய்வமான உடைப்பின் முதற்க் கல்விக் காளியம்மன் கோயிலும், கூடமான உடம்பு தமிழ் மகா வித்தியாலயம் அமைந்திருந்தது பிரதான தோணித்துறையும் அவ்விடத்திலேயே முந்தல் களப்பின் உடப்புக் கரையோரத்தில் அமைந்துள்ளது.

முன்னைய காலத்தில் வெள்ளப் பெருக்கு ஏற்ப்படும் போது வெள்ளம் தானாகவே உடைத்துப் பாய்வதால் அவ்விடத்தை "உடப்பு" என்றும் பின்பு அது மருவி "உடைப்பு" என்றும் வந்தது, ஆனால் இன்னொரு கருத்தும் பெரியோர் கூறுவர், அதாவது உடப்பு மக்கள் குடியேறிய இடத்தில் தொரட்டு முள் காடுகள் நிறைந்திருந்தன எனவும் கூறப்படுகிறது, உடப்பு என்னும் சொல்லுக்கு தொரட்டு முள்காடு என்றும் பொருள் உண்டு, உடப்பங்காடுகளை வெட்டி சுத்தம் செய்து குடியேறியதால் இப்பிரதேசம் ஆரம்ப காலங்களில் உடப்பங்காடு என்றும் பின்பு மருவி இன்று "உடப்பங்கரை" எனவும் பின்னர் "உடப்பு" என்று அழைக்கப்படுகிறது,

இலங்கையின் முதல் சிவில் உத்தியோகத்தராக இருந்த, கற்பிடியைச் சேர்ந்த சீமன் காசிச்செட்டி அவர்கள் The Ceylon Gazetteer (1834) த சிலோன் கசட்டியர் என்ற தனது நூலில் உடப்பை உடப்பங்கரை என்றே குறிப்பிடுகின்றார். ஆண்டிமுனையை அவர் ஆண்டிபனை எனக் குறிப்பிட்டுள்ளார். உடப்பங்கரை அவர் மேலும் குறிப்பிடைகையில் ஆனைவிழுந்தான் பற்றையும் ஆண்டிபனையையும் பிரிக்கும் ஒரு சிறிய களப்பின் விளிம்பில் அமைந்துள்ள ஒர் கிராமம் இங்கு மீனவர்கள் வசிக்கின்றார்கள், சில சிறிய கடைகள் உள்ளன புதர்களோ வளராத, மரங்களோ, கடற்காற்றையும், மண்ணையும் கொண்ட இந்த இருண்ட இடத்தில் உப்பு சமய ஈடுபாடுமே, மீன்பிடியும், உற்பத்தியாகும் சதுப்பு நிலமும் இம்மக்களை இங்கு வாழ வழிவகுக்கின்றது என கூறியுள்ளார்,

சீமன் காசிசெட்டியார் ஆண்டிமுனையைப் பற்றி கூறுகையில் தபால் நிலையமும், ஆண்டிபனையில் ஓர் ஆய்வு விடுதியும் இது சிலாபத்திளிருந்து பன்னிரண்டு மைல் காணப்படுகிறது தொலைவில் புத்தளம் செல்லும் வீதியில் கடற்கரைக்கு இங்கு குவிமாடத்தைக் கொண்ட அருகில் அமைந்துள்ளது மாரியம்மன் கோயில் ஒன்றும் காணப்படுகிறது எனக் குறிப்பிடுகின்றார்,

இங்கு வந்து குடியேறிய ஒவ்வொரு குலத்தவரும் தத்தம் சுற்றத்தவருடன் வசிப்பதற்கு ஏற்றவாறு வளவுகளை அமைத்துக் கொண்டனர். இவ்வளவுகளின் நடுவில் பெரிய முற்றம். இம்முற்றத்தை சுற்றி உறவினர்களின் ஏழு அல்லது எட்டு வீடுகள் அமைந்திருக்கும். இவை யாழ்ப்பாணத்தில் காணப்படும் நாற்சார் வீடுகளை ஒத்ததாக இருக்கும். எல்லோருக்கும் பொதுவான அம்முற்றகளில் நடைபெறும் வைபவங்களில் அவ்வளவைச் சேர்ந்த அனைவரும் கலந்து கொளவர்.

மகாபாரதத்தை அடிப்படையாகக் கொண்டு இன்னும் உரிய உயர்ந்த கலாச்சாரப் பண்பாட்டுடன் திகழும் இக்கிராமத்தின் வரலாறு இலங்கை கரையார் (கரவா) வரலாற்றுடன் உற்று நோக்குவது அவசியமாகும். சமுக கட்டமைப்பு, சாதிப்பிரிவு, வதிவிட அமைப்பு (புரம், வளவு, தோட்டம்), தொழில் முறைகள் போன்ற பல அம்சங்கள் வடக்கே தொண்டமானாறு தொடக்கம் கிழக்கே மன்னார், நீர்கொழுப்பு வரையும், தெற்கே காலி, மாத்தறை, அம்பாந்தோட்ட வரையும் காணப்படும் கரையார் சமுகப் பண்பாட்டுடன் ஒன்றுபட்டு காணப்படுவது ஆழமாக நோக்கத்தக்கது.

ஏறத்தாள பதினேழாம் நூற்றாண்டின் இறுதியில் இராமேஸ்வரம் பிரதேசத்திலிருந்து உடம்பிற்கு வந்து குடியேறி பன்னெடுங்காலமாக கலாச்சார, தமிழையும், சைவத்தையும், தனித்துவத்தையும் கைவிடாது பாதுகாத்துக் கொண்டு அயற்கிராம மக்களுடன் புரிந்துணர்வுடன் இணைந்து உடம்பில் வாழும் சைவர்களும் வாழ்கின்றனர் கத்தோலிக்கரும், இஸ்லாமியரும் எவ்வித மனக்கசப்புக்களுமின்றி சகோதரத்துடன் வாழ்ந்து வருதல் நாட்டின் முன் மாதிரியான செயற்பாடாக விளங்குகிறது.

வரலாற்று ரீதியாக இக்கைரையோர கிராமங்கள் மத மாற்றத்திற்கும், மொழி மாற்றத்திற்கும் உட்பட்டமை வரலாறு அறிந்து உண்மை. ஆனால் உடம்புக் கிராமம் இன்னும் அதன் மத, மொழி, சமுக கலாச்சார பண்பாடுகளில் மாற்றத்தை உள்வாங்காது தனித்துவமாக வளர்ந்து நிற்பது தமிழ் (இனத்) சமுகத்திற்கே பெருமை சேர்த்து நிற்கின்றது.

இம்மக்கள் இக்கிராமத்தில் அமைந்திருக்கும் ஆலயங்களின் ஆசீர்வாதம் பெற்றும். கடலின் காதல் கொண்ட காற்றலை சத்தத்துடன் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். ஆலய திருவிழா முதல் கல்யாணம், கலாசாரம், பேச்சுத்தமிழ் அனைத்தும் இராமேஸ்வரத்தின் அச்சுக்கலவை என்றே கூறலாம். காரணம் அவர்கள் இராமேஸ்வரத்தின் வேர்கள் என்பர். அன்றிலிருந்து இன்றுவரை உடப்பு கிராமத்தின் பாரம்பரிய தொழில் மீன் பிடிப்பு. காலத்துக்குக் காலம் வேளாண்மையும் செய்துள்ளனர், அதிக முதலீடான இறால் வளர்ப்பு முறையும் இவர்களால் மேற்கொள்ளப்படுகிறது.

வாசிப்புத் துணை நூல்கள்

Casie Chitty, Simon (1834), The Castes, Customs, Manners and Literature of the Tamils. Ceylon Printers Ltd, Colombo

Casie Chitty, Simon (1834), The Ceylon Gazetteer, Cotta Church Missions Press, Ceylon.

G.C..Mendis, (1954), THE EARLY HISTORY OF CEYLON, Colombo.

M.D.Raghavan, (1961), The Karava of Ceylon- Society and Culture, K.V.G.De Silva & Sans, Colombo.

Pathmanathan, S. (1978) The Kingdom of Jaffna - Colombo,.

Tanaka,M (1991), Patrons, Devotees and Goddesses - Ritual and Power among the Tamil Fishermen of Sri Lanka (About Udappu), Kyoto University, Japan.

கணபதிப்பிள்ளை, க. (1956), இலங்கை வாழ் தமிழர் வரலாறு, பேராதனைப் பல்கலைக்கழகம், பேராதனை.

குணரத்ன, அ. (1987), வரலாற்றுப் பிரக்ஞையின் உருவாக்கம் - மகாவம்சத்திலிருந்து சிங்களத் தேசியவாதத்தை நோக்கி - (தமிழில் மனோ) Chicago Anthropology Exchange, Volume 16, Autum 1987 Viyooham, http://www.keetru.com/index.

கைலாசபதி,க. (1991), பண்டையத்தமிழர் வாழ்வும், வழிபாடும்.,

சங்கரப்பிள்ளை, பொ. (1991) நாம் தமிழர் (A SHORT HISTORY OF THE TAMILS UP TO BRITISH PERIOD), கொழும்புத் தமிழ்ச் சங்கம்.

சபாநாதன், குல. (1953), யாழ்ப்பாண வைபவமாலை, கொழும்பு.

சாஜஹான், ஏ.என்.எம், (1992), புத்தளம் வரலாறும், மரபுகளும்., புத்தளம்.

சிவத்தம்பி, கா. (1978), ஈழத்தில் தமிழ் இலக்கியம், சென்னை.

சிவத்தம்பி, கா. (2003), இலங்கைத் தமிழர் யார், எவர்?, கொழும்புத் தமிழ்ச் சங்கம், கொழும்பு.

சிவதம்பி, கா., (1981), Drama Ancient Tamil Society, New Century Book House, Madras.

சிவலோகதாசன், வ. (1997), உடப்பூர் - வரலாறும், மரபுகளும், இந்து ஆலய பரிபாலன சபை, உடப்பு.

சொக்கலிங்கம் க., (1978), ஈழத்துத் தமிழ்நாடக இலக்கியம், யாழ்ப்பாணம்.

சொக்கலிங்கம், சி.பூசகர் (1929), உடப்பு திரௌபதியம்மன் மான்மியம், யாழ்ப்பாணம்.

நடராசா, கு. ஓ. ஊ (1962), மட்டக்களப்புமான்மியம், கொழும்பு.

பத்மநாதன், சி. (1970), இலங்கையில் வன்னியர், இலங்கைப் பல்கலைக்கழகம், வரலாற்றுத்துறை. பேராதனை.

வீரசொக்கன் (1989), உடப்பு ஸ்ரீ திரௌபதையம்மன் ஆலய வரலாறு, உடப்பு.

கங்காரு தேசத்தில் தமிழ் சமூகம்

ஒன்பது கோடித் தமிழ் மக்கள் இன்றைக்கு உலகெங்கும் பரந்து வாழ்கின்றார்கள். தமிழகமும் ஈழமும் தமிழரின் பாரம்பரியத் தாயகங்கள். அந்தத் தாயகங்களுக்கு வெளியே எண்பதுக்கு மேற்பட்ட நாடுகளில் இன்றைக்கு தமிழ் மக்கள் வாழ்கின்றார்கள்.

வரலாற்றுக்கு முற்பட்ட காலங்களில் வாழ்வாதாரங்களுக்காகத் தாயகங்களை விட்டு இடம் பெயர்ந்த தமிழ் மக்கள் நிலைபிறழ்ந்து போனார்கள், மொழியிழந்து போனார்கள், இனம் மறந்து போனார்கள். சில நூற்றாண்டுகளுக்கு முன்னர் குடி பெயர்ந்த தமிழ் மக்கள் தாயகங்களோடு தொடர்பிழந்து போனாலும் மொழி மறந்து போகாமல், இனப் பிறழ்வுக்கு ஆளாகாமல் இன்னும் தமிழராய் இருக்கின்றார்கள். தென்னாபிரிக்காவில், மலேசியாவில், சிங்கப்பூரில், இலங்கையின் மலையகத்தில் எல்லாம் இனத்துவ அடையாளங்களைப் பேணி அந்த மக்கள் தனித்துவத்துடன் வாழ்கின்றார்கள். அண்மைக் காலத்தில் தாயகங்களில் இருந்து, சிறப்பாக ஈழத்திலிருந்து புலம்பெயர்ந்த தமிழ் மக்கள் அந்தந்த நாடுகளின் பிரசைகளாக மாறியவர்களாயும், மாறாதவர்களாயும், அகதிகளாயும் வாழ்கின்றார்கள். அவர்களெல்லாம் தாயகங்களோடு இணைந்தவர்களாயும், தாயக நினைவுகளைச் சுமந்தவர்களாயும், தாய்மொழிப் பற்று மிகுந்தவர்களாயும் அந்தந்த நாடுகளில் தம் வாழ்வினைத் தொடர்கின்றார்கள்.

அத்தகைய தமிழ் மக்கள் கணிசமான தொகையினராய் வாழ்ந்து வருகின்ற ஒரு நாடாக அவுஸ்திரேலியாவும் திகழ்கின்றது. அவுஸ்திரேலியத் தமிழ் மக்கள் தம் இனத்தைப் பற்றியும், தம் மொழியைப் பற்றியும் மிகுந்த அக்கறை கொண்டவர்களாயிருக்கின்றார்கள். தம் எதிர்கால்ச் சந்ததிகளிடம் தமிழ் மொழியைக் கற்க வைப்பதற்கும் தமிழ்ப் பண்பாடுகளைத் தக்க வைப்பதற்கும் அவர்கள் எடுக்கின்ற அயராத முயற்சி கொஞ்சநஞ்சமல்ல.

அவுஸ்திரேலியாவில் தமிழ் மக்கள் குடியேற்றம் 1965ஆம் ஆண்டிலிருந்து இலங்கைத் தமிழர்கள் தொழில் வாய்ப்புப் பெற்று அவுஸ்திரேலியாவிற்கு வரத்தொடங்கியிருந்தாலும், 1970 ஆம் ஆண்டு குடியுரிமை பெற்று வாழக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டதற்குப் பின்னரே அத்தகைய தமிழர்களின் குடியேற்றம் அதிகரிக்கத் தொடங்கியிருக்கின்றது. ஆனால் 1983 ஆம் ஆண்டு இலங்கையில் ஏற்பட்ட இனப் படுகொலையினைத் தொடர்ந்து, ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கில் இலங்கைத் தமிழர்கள் அவுஸ்திரேலியாவுக்குப் புலம்பெயர்ந்தனர்.

இன்றைய நிலவரப்படி ஏறத்தாழ ஒரு லட்சம் தமிழ் மக்கள் அவுஸ்திரேலியாவில் வாழ்கின்றார்கள். இவர்களில் இலங்கைத் தமிழர்கள், இந்தியத் தமிழர்கள், மலேசியா, சிங்கப்பூர், தென்னாபிரிக்கா மற்றும் பிஜித் தீவுகள் ஆகிய நாடுகளிலிருந்தும் தமிழ் மக்கள் இங்கு குடியேறியுள்ளனர்.

அவுஸ்திரேலியாவி ஆறு மாநிலங்களும், இரண்டு மண்டலங்களுமாக மொத்தம் எட்டு அரசாட்சிப் பிரிவுகள் உள்ளன. அவுஸ்திரேலியத் தமிழர்களின் மொத்த எண்ணிக்கையினரில் நான்கில மூன்றுக்கும் அதிகமானோர் நியூசவுத் வேல்ஸ், விக்ரோறியா என்னும் இரு மாநிலங்களிலும் செறிந்து வாழ்கின்றனர் மேற்கு அவுஸ்திரேலியா, குயீன்ஸ்லாந்து, தெற்கு அவுஸ்திரேலியா, தலைநகர மண்டலம், வட மண்டலம், தஸ்மேனியா ஆகிய மற்றைய இடங்களில் குறைந்தளவில் தமிழர்கள் வாழ்கின்றனர்.

தமிழ் ஊடகங்கள்.

தாயக நினைவுகளை மறவாது வாழவும், தமது இனத்தின் அடையாளங்களை நிலையாகப் பேணவும் தமிழ் மொழி ஊடகங்களைத் துணையாகக் கொண்டுள்ளார்கள்.

தனித் தமிழ்த் தொலைக்காட்சிச் சேவைகள், வானொலிப் பரப்புக்கள், பத்திரிகைகள் என்றெல்லாம் பரந்துபட்ட ஊடகங்களைச் சிறந்த முறையில் நடாத்துகின்றார்கள் உலகெங்கும் ஒலி, ஒளிபரப்பாகும் அனைத்து ஊடகங்களையும் தற்கால நவீன தொழில்நுட்பத்தின் மூலம் இங்கு பெற்றுக்கொள்ள முடிவது சிறப்பம்சமாகும்.

விசேட ஒலிபரப்புச் சேவை என்ற வானொலி அவுஸ்திரேலியா முழுவதற்குமான ஒலிபரப்பினை வாரத்தில் நான்கு நாட்கள் ஒரு மணி நேரம் தமிழ் மொழியில் நடாத்துகின்றது. நாள் முழுக்க அதாவது இருபத்திநான்கு மணி நேரமும் தமிழில் ஒலிபரப்பைச் செய்யும் இரண்டு வானொலிச் சேவைகள் உள்ளன. அவற்றுள் முதலாவதாக ஆரம்பிக்கப்பட்ட இன்பத் தமிழ் வானொலி கடந்த பதினைந்து வருடங்களாக வெற்றிகரமாகத் தமிழப்பணியாற்றி வருகின்றது. மற்றையது பத்து வருடங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட அவுஸ்திரேலிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபன வானொலி. இவை தவிர ஒவ்வொரு மாநிலங்களிலும் மொத்தமாகப் பதினைந்து வானொலிச் சேவைகள் தமிழ் ஒலிபரப்பை நடாத்துகின்றன. இவை பெரும்பாலும் வாரமொருமுறை நடைபெறும் சேவைகளாகும். சிட்னி பல்கலைக் கழகத் தமிழ்ச் சங்கத்தால் கலப்பை என்னும் காலாண்டு சஞ்சிகையும் வெளிவருகின்றது.

ஆலயங்களும் வணக்க முறைகளும் வழிபாடு

தமிழர்களுக்கென்று தனியாகக் கிறிஸ்தவ ஆலயங்கள் இங்கே இல்லையென்றாலும், பல ஆலயங்களிலே தமிழ்க் குருமார்களால் தமிழிலே கிறிஸ்தவ வழிபாடுகளும், பூசைகளும் நடாத்தப்படுகின்றன.

இந்து மதம் என்று ஒரு சமயம் இல்லை என்பதுதான் உண்மையாக இருந்தபோதும் கூட, தமிழ்நாட்டில் நிலவுகின்ற சமயக் கொள்கையின் பாதிப்பின் காரணமாக இந்து சமயம் என்றும் இந்துக் கோவில் என்றும் சொல்லப்படுகின்ற தவிர்க்கப்பட முடியாத சமயத் தவறு இங்கும் வழக்கத்தில் உள்ளது.

அதனால் சிவா விஷ்ணு கோவில், பிள்ளையார் கோவில், முருகன் கோவில், காளி கோவில் எல்லாம் இந்துக் கோவில்கள் என்றே இங்கு கொள்ளப்படுகின்றது.

நியூசவுத் வேல்ஸ் மாநிலத்தில் ஸ்ரீ வெங்கடேஸ்வரர் கோவில், சிட்னி முருகன் கோவில், மின்ரோ சிவன் கோவில், ஓர்பன் கிருஷ்ணன் கோவில் ஆகிய ஆலயங்கள் அமைந்துள்ளன. விக்ரோறியா மாநிலத்தில் சிவாவிஷ்ணு கோவில், வக்ரதுண்ட விநாயகர் கோவில், சண்சைன் முருகன் கோவில், குன்றத்துக் குமரன் கோவில் மற்றும் புதிதாக நிர்மாணிக்கப்படுகின்ற பக்கினம் முருகன் கோவில் ஆகியனவும், தனிப்பட்டவர்களால் தற்காலிக கட்டங்களில் பூசைகள் நிகழ்த்தப்படும் வேறுசில கோவில்களும் உள்ளன. கன்பரா தலைநகர மண்டலத்தில் கன்பரா இந்துக் கோவில், விஷ்ணு சிவன் கோவில், ஆறுபடை முருகன் கோவில் ஆகியன அமைந்துள்ளன.

மேற்கு அவுஸ்திரேலிய மாநிலத்தில் பேர்த் இந்துக் கோவில், பேர்த் பாலமுருகன் கோவில் என்பனவும், தெற்கு அவுஸ்திரேலிய மாநிலத்தில் அடிலைய்ட் கணேசர் ஆலயமும், குயீன்ஸ்லாந்து மாநிலத்தில் செல்வ விநாயகர் கோவிலும், வட மண்டலத்தில் டார்வின் சித்திவிநாயகர் கோவிலும் அமைந்துள்ளன. அவுஸ்திரேலிய நாட்டில் மொத்தமாக பதினாறுக்கும் அதிகமான சைவ ஆலயங்களும், அதே தொகைக்கும் சற்று அதிகமான தற்காலிக வழிபடு நிலையங்களும் உள்ளன.

தமிழ் அமைப்புக்கள்

ஒரு லட்சம் தமிழ் மக்கள் வாழ்கின்ற அவுஸ்திரேலியாவிலே நூற்றுக்கும் அதிகமான சங்கங்கள் சமூக அமைப்புக்கள் செயற்படுகின்றன.

ஆரம்பத்தில் தமிழ் மக்களின் ஒன்று கூடலாகவும், தாயக மக்களின் துயர்துடைக்கும் நோக்கத்திற்காகவுமே சங்கங்கள் அமைக்கப்பட்டன. காலப்போக்கில், அரசியல் உணர்வுகளாலும் சமயக் கோட்பாடுகளாலும், கலை ஈடுபாட்டினாலும், மாதாந்த ஒன்றுகூடலுக்காகவும், பதவி ஆசையாலும் பல்வேறு சங்கங்கள் உருவாகின. சிட்னியிலும் மெல்பேணிலும் பெரும்பாலும் ஒவ்வொரு சனிக்கிழமையும் ஞாயிற்றுக் கிழமையும் இந்தச் சங்கங்களின் நிகழ்ச்சிகள் இருக்கும். சிலவேளை ஒரே நாளில் இரண்டு மூன்று நிகழ்ச்சிகளும் நடைபெறும்.

பரதநாட்டியம், மிருதங்கம் என்பவற்றின் அரங்கேற்ற நிகழ்ச்சிகளும் அடிக்கடி இடம்பெறும். இசை, பரதம், மிருதங்கம் போன்ற பாரம்பரிய கலைகளை பயிற்றுவிப்பதற்கும் நூற்றுக்கும் அதிகமான

கலைஞர்கள் உள்ளனர். இவர்கள் அனைவரும் பயிற்றப்பட்ட திறன் நிறைந்த கலைஞர்கள். கலைக் கல்லூரிகளை ஆரம்பித்து தமிழ் மக்களுக்கு மட்டுமன்றி பல்லின சமூக மக்களுக்கும் பயிற்சியை வழங்கி, எமது பாரம்பரிய கலைகளை பேணுகின்றமையானது மத்திய அரசாலும், மாநில உள்ளூர் ஆட்சியாளர்களாலும் ஊக்குவிக்கப் படுவதுடன் தமிழ் அன்னைக்கும் தமிழ் கலாச்சாரத்திற்கும் பெருமை சேர்க்கின்றன.

தமிழ்க் கல்வி

தமிழ் மொழியை ஒரு பாடமாகப் பல்கலைக் கழகப் புகுமுகப் பரீட்சைக்கு எடுப்பதற்கு விக்ரோரிய மாநில அரசும், நியூசவுத்வேல்ஸ் மாநில அரசும் அனுமதி வழங்கியுள்ளன. அத்துடன் அவ்வாறு தாய்மொழியைப் பரீட்சைக்கு எடுப்பவர்களுக்கு மேலதிகச் சலுகைப் புள்ளிகளும் வழங்கப்படுகின்றன.

தமிழ் அமைப்புக்களால் வார இறுதித் தமிழ்ப் பாடசாலைகள் நடாத்தப்படுகின்றன. பாலர் வகுப்பிலிருந்து பன்னிரண்டாம் வகுப்பு வரை தமிழ் மொழி பயிற்றுவிக்கப்படுகிறது.

கடந்த ஐந்து ஆண்டுகளில் சுமார் பன்னிரண்டாயிரம் தமிழ் மக்கள் படகுகள் மூலம் கிறிஸ்மஸ் தீவுக்டுகுள் வந்தனர். இவர்களில் சுமார் ஒன்பதாயிரம் ஈழத் தமிழ் மக்கள் போரினால் பாதிக்கப்பட்ட பின் வருகை தந்தாலும். இவர்களில் பல ஆயிரக்கணக்கானவர்கள் நிரந்தர பாதுகாப்பு விசாவை பெற்றுள்ளனர். பலர் தற்காலிக பாதுகாப்பு விசாவைப் பெற்றுள்ளனர். கிராமப்புற அவுஸ்திரேலிய மக்களும் , அவுஸ்திரேலிய பழங்குடி மக்களும் எம்மவர் வருகையை ஆதரித்துள்ளனர். முக்கியமாக அண்மைக் காலமாக அவுஸ்திரேலியாவுக்கு வரும் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் அவுஸ்திரேலிய அரசுக்கு சார்பாக புகலிடக் கோரிக்கையாளர்களான தமிழர்களை திருப்பயனுப்பினால் அவர்கள் பாதுகாக்கப்படுவார்கள் என்று அறிக்கை விடுவது, புகலிடம் கோரிய மக்களையும் தமிழ் சமூகத்தையும் கவலையில் ஆழ்த்தியுள்ளது.

நா.இ.விக்கிரமசிங்கம். (கௌரவ சமாதான நீதவான்)
அவுஸ்திரேலிய கிளை தலைவர், உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம்.
மனித உரிமை மேம்பாட்டாளர்,
சங்கநாதம் தமிழ் ஒலிபரப்பு சேவை ஒலிபரப்பாளர்



ஆயூர்வேதமும் மருத்துவமும் அதன் தோற்றமும்

பேராசிரியர் **இரா. ச. குழந்தைவேலன்**
தலைவர், கடலூர் மாவட்டத் தமிழ்ச்சங்கம்

நமது நாட்டில் மக்கள் நோயிலிருந்து விடுபட பல்வேறு மருத்துவ முறைகளைப் பின்பற்றி வருகின்றனர். ஆங்கில மருத்துவம் (அலோபதி) ஓமியோபதி (ஜெர்மன் மருத்துவம்) ஆயுர்வேதம், சித்தா, யுனானி முதலியவை மக்களிடம் வழங்கிவரும் மருத்துவ முறைகளாகும். அன்றியும் நாட்டு மருத்துவம் என்ற உள்ளூர் மருத்வவமும், கை மருத்துவம் என் ற பாட்டி மருத்துவம் பழக்கத்தில் உள்ளன. இவற்றுள் தமிழ்நாட்டில் வழங்கி வந்த மருத்துவ முறைகள் சித்தா, ஆயுர்வேதம், யுனானி, ஓமியோபதி ஆகியவை. ஆங்கில மருத்துவம் (Western Medicin) இருபதாம் நூற்றாண்டில் ஆங்கில ஆட்சிக் காலத்தில் பழக்கத்துக்கு வந்தது. ஆனால் அதன் இன்றைய வளர்ச்சி அளவிட இயலாதது மருத்துவமனைகள், மருத்துவக் கல்லூரிகள், மருத்துவர்கள், மருந்தகங்கள் அனைத்தும் ஆங்கில மருத்துவத்தை சார்ந்தவைகளே !

சித்தமருத்துவம் தமிழ்நாட்டில் வாழ்ந்த சித்தர்களால் பயன்படுத்தப்பட்டு மக்களிடம் வழங்கி வந்த தமிழ் மருத்துவ முறை. சித்த மருத்துவ நூல்கள் பலவும் காணப்படுகின்றன. மலைகளிலும் காடுகளிலும், குகைகளிலும் வாழ்ந்த சித்தர்கள் கண்டுபிடித்த அரிய வேர்களும், தழைகளும் அவற்றின் பக்குவப்படுத்தப்பட்டவைகளும் சித்த மருத்துவ மருந்துகளாகும். மருந்து இயற்கை மருந்து செயற்கை மருந்து என இருவகைப்படும். வேரும், தழையும் இயற்கை மருந்து தமிழ் பழமொழி.

வேர்பார், தழைபார் மெல்லமெல்லச்
செந்தூர நீறு பார்

என்பதாகும் மருந்து என்ற சொல்லுக்கு நறுமணம் என்று பொருள்.

இதனை, மருந்கொழுந்து (உலகவழக்கு)

தருவார் கொன்றை (தேவாரம் 530-1)

என்ற தொடர்களால் அறியலாம். இந்த தமிழ் மருத்துவமுறையே இந்தியாவில் வழங்கும் மற்றொரு ஆயுர்வேதம் எனப்படுவது இந்த மருத்துவம் இமயமலை அடிவாரத்தில் வாழ்ந்த இருடிகள், முனிவர்களுக்குக் கடவுள் மூலம் கற்பிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. சித்த மருத்துவத்துக்கும், ஆயூர்வேத மருத்துவத்துக்கும் அடிப்பட ஒன்றகவே வஉள்துது. ஊதை, பித்தம், கோழை ஆகிய மூன்றும் உடலில் தம்மளவில் மிகுந்தாலும், குறைந்தாலும் நோயை உண்டாக்கும் என்று கூறப்படுகிறது. திருவள்ளுவர் இதனை,

மகினும் குறையினும் நோய் செய்யும் நூலோர்
வளிமுதலா எண்ணிய மூன்று.

என்கிறார். ஆயுர்வேதம் இவற்றை வாதா, பித்தா, கபா என்று கூறுகிறது. இது குறித்துப் பாவாணர் அவர்கள் கூறியுள்ளது ஆராயத்தக்கதாகும்.

நூலோர் என்பதற்கு ஆயுள்வேதமுடையோர் என்று
பரிமேலழகர் உணர்த்தும் நச்சிக் கூற்றே. சித்த
மருத்துவத்தின் வடநாட்டு வேறுபாமே ஆயுர்வேதம்
என அறிக

என்கிறார். தமிழ் இசை, தமிழ் கூத்து ஆகியவற்றை ஆரியர்கள் எடுத்துச் சென்று அதற்குப் புதிய பெயர்சூட்டி தமதாகக் காட்டிக்கொண்டது போன்றே. கர்நாடக இசை, பரதக்கலை – தமிழ்ச் சித்த மருத்துவத்தையும் எடுத்துச்சென்று ஆயுர்வேதம் என மாற்றிக்கொண்டார்.

திருக்குறளுக்கு உரை எழுதிய ஆரியப் பற்றுடைய பரிமேலழகர் போன்றோர் இத்தகைய செயலுக்குத் துணை நின்றனர். வள்ளுவத்தின்

உற்றான் அளவும் பிணியளவிம் காலமும்
கற்றான் கருதிச் செயல்.

என்ற குறளுக்கு உரை எழுதியபொழுது,

கற்றான் என்பதற்கு ஆயுள் வேதத்தினைக் கற்ற மருத்துவன் என்று உரைத்தலும், நோயாளியை ஆதுரன் என்றதும், நோய்க்குச் சாத்தியம் அசாத்தியம் யாப்பியம் என்று சாமி வேறுபாடு கூறியதும் ஆரியக் குறும்புத்தனத்தையும் வடமொழி வெறியையும் காட்டுவனவாம் என்பார் பாவாணர்.

மேலும் அவர் கூறும் பொழுது, இவ்வதிகாரம் முழுமும் ஆயுள்வேதம் என்னும் ஆரிய மருத்துவ நூண்முறையைத் தழுவியதாகப் பரிமேலழகர் ஆங்காங்கே அரைத்திருப்பது உண்மைக்கு நேர்மாறாகும். ஆரியர் வருமுன் வடநாவந்தீவிலும் பனிமலை வரைத் தமிழரும் திரவிடருமே பிற்காலத்தில் ஆயுள் வேதமெனப் பெயர் மாற்றப் போற்றதென்றும் இது பழந்தமிழிசையே இன்று பாகுபாடுகளும் குறியீடுகளும் மாற்றப்பட்டுக் கருநாடக சங்கீதம் என வழங்குவது போன்றதென்றும் அறிந்து கொள்க. என்று விளக்கியுள்ளார். சித்த மருத்துவத்தில் நோய் நாமும் சிறந்தமுறை நாடி பிடித்துப் பார்த்தலாகும். அது தமிழராலேயே கண்டுபிடிக்கப்பட்டது. அவரிடமிருந்தே ஆரிய மருத்துவரும், பிற மருத்துவரும் கற்றுக் கொண்டனர்.

ஆயுள்வேத மருத்துவத்தின் வரலாறு என்று வடஆரியர் ஒரு கட்டுக்கதையை உருவாக்கியுள்ளனர். சுமர்ர் 3000 ஆண்டுகளுக்கு முன் இமயமலை அடிவாரத்தில் வாழ்ந்த 52 இருமுடிகள் ஒன்றுகூடி நாட்டில் எவ்வாறு நோயினால் வரும் துன்பத்தைப் போக்குவது என்று தியானித்தனர். நோயற்ற உடல் மூலமே அமைதியாக தியானிக்க முடியும். அதன் பின்னரே கடவுளை அடையலாம் என்று உணர்ந்தனர். அவர்கள் பரத்வாசர் என்ற முனிவரைத் தங்களது தலைவராகத் தேர்ந்தெடுத்தனர். அவர்மூலமாக இந்திரனை வேண்டினார். அவன் தேவருலக மருத்துவரிடம் கற்றாதாகக் கூறினான். தேவருலக மருத்துவரை கண்டு வேண்டிய பொழுது அவர் பிரம்மாவிடம் மருத்துவம் கற்றதாகக் கூறினார். அடுத்து

பிரம்மா மூலம் கிடைத்த மருத்துவமே ஆயுள்வேத மருத்துவம். அதன்படியே மருத்துவ முறைகள் வகுக்கப்பட்டன. அது ஒரு நூலாக எழுதப்பெற்றது. அதன் பெயர் சாரக் சம்பிதா என்று அழைக்கப்பட்டது என்பர். இது ஒரு கட்டுரைக்கதையாகும்.

அது மூன்று சூத்திரங்களைக் கொண்டது (Tri Sootra) அவை

1. நோய் வவவதற்கான காரணங்கள்

2. நோயின் அறிகுறிகள்

3. மருந்து

இவை அன்றியும் ஆயுர்வேதம் பவுத்த வழியில் தோன்றி வளர்ந்த ஒரு மருத்துவம் என்றும் கூறப்பட்டுள்ளது. லண்டனில் பணியாற்றும் மருத்தவர் சாந்த கோடகாமா என்பவர் எழுதியுள்ள ஆயுர்வேதா ஒரு கையேடு (The Hand Book of Ayurveda) என்னும் நூலில் ஆயுர்வேத மருத்துவம் பவுத்தமத வழிவந்தது என்று குறிப்பிடுகின்றார். கி.மு. 483 வரை வாழ்ந்த புத்தர் தன்னுடைய சீடர்களுக்கு நோயின்றி வாழ மருத்துவ முறைகளை அறிவித்தார். புத்தமதக் கொள்கையாகிய நிர்வாணம் (Extinction) துன்பமற்றி ஒரு நிலையைக் குறிப்பிடுவதாகும். துன்பமற்ற ஆசையற்ற நிலையில் தன்னை அறிந்து வினைகளிலிருந்து விடுதலை பெற வழிகாட்டினார். புத்த பிக்குகள் அவரிடமிருந்துதான் ஆயுர்வேத மருத்தவ முறையைக் கற்று அதில் பயிற்சி பெற்றனர்.

இந்தியப் பேரரசர் ஆசோகர் (காலம் கி.மு. 231 முதல் 272 வரை) பல ஆயுர்வேதப் பள்ளிகளையும், ஆயுர்வேத மருத்துவமனைகளையும் நிறுவினார். அங்குப் பயிற்சி பெற்ற சீடர்களை அவர் தொலைதூரக் கிழக்கு நாடுகளுக்கும், உலகின் மத்திய நாடுகளுக்கம் அனுப்பினார். இவ்வாறு புத்த மருத்துவம் ஆயுர்வேதம் என்ற பெயரிலும் வேறு பல பெயர்களிலும் உலகம் முழுவதும் பரவியது.

ஆரியர்கள் இந்தியாவுக்கு வருவதற்கு முன்பு இந்தியாவில் வாழ்ந்த மக்கள் பழந்தமிழர். அவர்கள் திராவிடர் என்ற பெயரால் அழைக்கப்பட்டனர். வடதிராவிட மக்களிடம் வழங்கிய வடநாட்டுச் சித்த மருத்துவம் பிராலகுத மொழியிலும், பாலி மொழியிலும் சமண பவுத்தர்களிடம் வழங்கி வந்தது. சமய பவுத்தர்களை வீழ்த்திய ஆரியர்கள் அவர்களிடமிருந்து மருத்துவமுறைகளைக் கைக்கொண்டு சமத்கிருத மொழியில் எழுதி வைத்தனர். அதற்கு ஒரு கடவுள் தொடர்பை உண்டாக்கி புராணக் கதையும் எழுதி வைத்தனர். வடதிராவிட சித்த மருத்துவமே பின்னால் புத்தர் மூலம் சீடர்களுக்கு விளக்கப்பெற்று பேரரசன் அசோகனால் பலநாடுகளுக்குப் பரவியது. ஆனால் இன்று ஆயுர்வேத மருத்துவம் வடஆரியர் கண்டுபிடித்த மருத்துவமுறைபோல நம்பப்படுகிறது.

ஆங்கிலேயர் வருகைக்குப்பின் இந்திய மருத்துவமுறைகள் படிப்படியாகச் செல்வாக்கு இழந்தன. ஆங்கில மருத்துவக் கல்வியும், மருத்துவமனைகளும் தோன்றி மக்களிடம் ஆங்கில மருத்துவம் செல்வாக்குப் பெற்றது. 1970 முதல் ஆயுர்வேத மருத்துவத்துக்குப் புத்துயிர் ஊட்டப் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. ஆயுர்வேத மருத்தவமுறையில் ஈஸ்டர் மருத்துவம், யோகா, தியானம், அரோமா. ஆவிக்குளியல். மூச்சுஇழுத்தல். மசாஜ் மூளிகை மருந்து, உண்ணாநோன்பு, கழிவு நீக்கம் முதலிய பல பிரிவுகள் உள்ளன.

1980இல் இந்திய தேசிய காங்கிரஸ் ஆயுர்வேத மருத்துவத்துக்கு ஆங்கில மருத்துவத்துக்கு நிகரான தகுதி வழங்க வேண்டி முடிவெடுத்து பல ஆயூர்வேத நிறுவனங்களைத் தோற்றுவித்தது. ஒரு

நூறுக்கம் மேலான ஆயுர்வேத நிறுவனங்களும் தோன்றி ஆறு ஆண்டு பயிற்சி பெற்ற மருத்துவர்கள் வெளிவந்தனர். வடநாட்டவர் செல்வாக்குக் காரணமாக ஆயுர்வேத மருத்துவத்துக்கு முதன்மை தரப்பட்டது. அத்தகைய சிறப்புகள் சித்த மருத்துவத்துக்குத் தரப்படவில்லை.

ஆயுர்வேத மருத்துவம் இயற்கையில் கிடைக்கு பொருட்களைக் கொண்டு செய்யப்படுவது. குறிப்பாக மூலிகைகள் பயன்படுத்தப்படுகின்றன. 5. ஒழுக்கங்களைக் கொண்டது. அவை கொல்லாமை, கள்ளாமை ஒழுக்கம், பொய்யாமை, கள்ளுண்ணாமை, 8 வழி முறைகளைக் கொண்டது. அவை தெளிவுடமை, ஒரு முகத்தன்மை, வாழ்வியல், மனத் தூய்மை, நற்செயல், நல்லெண்ணம், நன்முயற்சி, இன்சொல். இவை அனைத்தும் புத்தரின் அறிவுரைகள் என்பது உணரத்தக்கது.

சித்த மருத்துவத்துக்குப் ஆயுர்வேத மருத்துவத்துக்கும் பொதுவான தன்மைகள் பலவுள்ளன. வேறுபாடுகள் அதிகம் இல்லை. மேற்சொன்னவற்றைக் கொண்டு ஒப்பிட்டு ஆராயும் பொழுது சில முடிவுகள் நமக்குக் கிடைக்கின்றன. ஆரியர் வருகைக்குமுன் இந்தியா முழுவதும் வாழ்ந்தவர்கள் திராவிடர் வடதிராவிட மக்களின் மருத்துவம் வடநாட்டுச் சித்தமருத்துவம். ஆரியர் வருகைக்குப்பின் உருவாள் சீர்திருத்தச் சமயங்கள் கமணம் பவுத்தம் அவர்களின் மொழி பிராகிருதம், பாலி அக்காலத்தில் புத்தர் மருத்துவ முறைகளை ஒழுங்குபடுத்தி அசோக மன்னர் மூலம் உலகம் முழுவது பரப்பினார். ஆரியார்கள் அவர்களைச் செல்வாக் கிழக்கச் செய்தனர். ஆனால் அவர்களின் மருத்துவ முறைகளைக் கற்றுக்கொண்டு அவற்றைச் சமத் கருத்தில் மாற்றம் செய்து நூலாக்கி அதற்கு ஒரு புராணக் கதையும் புனைத்தனர். அவ்வாறு செய்யப்பட்ட சாராகசம்பிதா என்ற நூலுக்கு மூலமாக விளங்கியது பாலி மொழியில் புத்தர் வழங்கிய மருத்துவச் செய்திகளே என அறியலாம்.

இவ்வாறு இந்தியாவில் வாழ்ந்த பழந்தமிழரின் வடநாட்டுச் சித்த மருத்துவம் பின்னர் பாலிமொழியில் புத்தரால் முறைப்படுத்தப்பட்டு அவை ஆரியர்களால் கைப்பற்றப்பட்டு வடமொழியில் உருவாக்கப்பட்ட மருத்துவ முறையே ஆயுர்வேதம் என்ற முடிவுக்கு வரவேண்டியுள்ளது. பின்னர் அரசியலும், சமூகத்திலும் செல்வாக்குப்பெற்ற வடநாட்டவர் அதனை விரிவுபடுத்தியுள்ளனர் என்று நன்கு அறியலாம்.



கற்றலும் கற்பித்தலும் - சில சிந்தனைகள்

பேராசிரியர் தயாளன் வேலாயுதபிள்ளை
ஆசிரியர் சிவதாஸ் சிவபாலசிங்கம்

வித்தியாசமான மொழிப்புழக்கமுள்ள, பின்னணிகளைக் கொண்ட இல்லங்களிலிருந்து வரும் மாணவரின் மொழித்திறனில் வேறுபாடுகள் இருக்குமென்பதைக் கருத்திற்கொண்டு, பாடத்திட்டங்கள் நெகிழ்வுத்தன்மை கொண்டவையாக இருக்க வேண்டும். வகுப்பறைச் சூழல் மகிழ்வூட்டுவதாக, கற்பித்தல் நடவடிக்கைகள் வித்தியாசமானதாக, பாடங்கள் அன்றாடச்சூழலுக்குப் பொருத்தமானதாக இருக்க வேண்டும். இது கல்விக்கூடங்களுக்கு மாணவர் விரும்பிவந்து, அச்சமின்றி, தயக்கமின்றி தமிழைக் கற்க, கருத்துப்பரிமாற்றத்துக்குப் பயன்படுத்த ஊக்குவிக்கும்.

புலம்பெயர்ந்து ஈழத்தமிழர் விரவிய வாழ்நிலங்களிலே தமிழ்மொழிப் போதனையின் வயது இரண்டு மூன்று தசாப்தங்களை தாண்டியுள்ளது எனலாம். தமிழர்களது மொழி, அடையாளங்கள், பண்பாட்டு விழுமியங்களைப் பாதுகாக்கவும் வளர்க்கவும் என உருவாக்கப்பட்ட புலத்துத் தமிழர் தளங்களில் தமிழ்க் கல்விக்கூடங்கள் முக்கியமானவையாக, காத்திரமான பணியை ஆற்றுபவையாக விளங்குகின்றன. இத்தகைய தமிழ்ப் பள்ளிகளில் எத்தனையோ மாணவர்கள் கற்று வெளியேறியிருக்கிறார்கள். இன்னும் கற்றுக்கொண்டிருக்கிறார்கள்.

பல்லின பண்பாட்டு கலாச்சார சூழலைக் கொண்ட தேசங்களிலே இத்தகைய குடியேறிகளின் தாய்மொழி எது என்பதும் கூட இன்னமும் விவாதத்திற்குரிய பேசுபொருளாகவே உள்ளது. பல்வேறு தரப்புகளிலிருந்து பல்வேறு வரைவிலக்கணங்கள் வழங்கப்பட்டும் உள்ளன. இந்த ஆய்வு, ஆழ்ந்த நோக்கு நிலைக்குரிய தனித்த தலைப்பு ஆதலால் இங்கு தவிர்த்துக் கொள்ளலாம். புலம்பெயர்ந்த ஈழத்தமிழரைப் பொறுத்தவரை தமிழ்மொழியே தாய்மொழி போதனையாக பரந்த பரிமாணம் எடுத்து பெரும் எடுப்பில் கற்பிக்கப்படுகின்றது. இப் புலத்து வாழிடங்கள் பலவற்றில் தாய்மொழிப் போதனையில் ஈழத்தமிழரே ஏனைய இனக் குழுமங்களுக்கும் முன்னுதாரணமாகக் திகழ்கிறார்கள் என்பதையும் மறுப்பதற்கில்லை. இருந்தாலும் எம் பிள்ளைகளுக்கான தாய்மொழிப் போதனையின் அத்தனை பரிமாணக் கூறுகளிலும் உயர் நிலைகளை தொட்டுவிட்டோமா? என்றால் அதுவும் விவாதத்திற்குரிய வினாவாகவே தொக்கிநிற்கிறது.

புலத்து வாழிடங்களிலே தமிழ்மொழிப் போதனை என்பது கத்தி முனையில் நடப்பதைப் போன்று மிகவும் கடினமானது, கவனத்திற்குரியது. இதனை பலரும் அனுபவவாயிலாக உணர்ந்திருப்பார்கள். மொழி என்பது வெறுமனே உணர்வுகளை வெளிப்படுத்த பயன்படும் ஒரு கருவி மட்டுமல்ல. மொழியே மனிதனை, அவன் சார்ந்த சமூகத்தை அடையாளப்படுத்தும் அதிமுக்கியமான அம்சமாயும் மிளிர்கிறது. இருந்தும் தமிழ்மொழிக் கல்வியால் என்ன பயன்? தொழில் தெரிவிற்கு அதன் இன்றியமையாமையும் பயன்பாடும் என்ன? வாழிடமொழி ஆளுமைக்கு அதனால் ஊறுவிளையாதா? என்ற ஐயங்களும் வினாக்களும் இன்னும் எம் மத்தியில் சிலரிடையே

நிலவுவதைக் காணலாம். தாய்மொழிக் கல்வி பற்றிய சரியான சிந்தனைத்தெளிவு இன்மையே இந்த நிலைப்பாட்டுக்கு முக்கிய காரணி எனலாம்.

மொழியாராச்சியாளர்களின் கருத்துக்களின்படி ஒரு நான்கு வயதுக் குழந்தை ஒரே சமயத்தில் பல மொழிகளைக் கற்றுக்கொள்ளக் கூடிய வல்லமையைக் கொண்டுள்ளது. இதற்கு உதாரணமாக யப்பானிலே பாலர்பாடசாலைகளில் நான்கு மொழிகள் கற்பிக்கப்படுகின்றமை, இந்திய பெருநகரங்களில் உள்ள தொடர்மாடிக் குடியிருப்புகளில் வாழும் சிறார்கள் வேற்று மாநில மொழிகளையும் பேசும் வாண்மை பெற்றமை என்பவற்றைக் குறிப்பிடலாம். எனவே தமிழ்க் மொழிக் கல்வி அந்தந்த நாடுகளின் பெரும்பான்மை மொழிக் கல்வியைப் பாதிக்கும் என்ற வாதம் அபத்தமானது.

தமிழ்மொழியை தமக்கிடையேயான அன்றாட சம்பாசனை மொழியாக (வீட்டு மொழியாக) உபயோகிக்கும் பெற்றோரின் குழந்தைகள் இயல்பாகவே தமிழ்மொழியையும் தமது சிந்தனாமொழியாகக் கொள்ளும் பக்குவத்தையும் பெறுகின்றனர். ஒரு புதிய மொழியைக் கற்றுக்கொள்ள தாய்மொழியின் பதங்களும் அர்த்தங்களுமே அடிப்படையாக அமைகின்றன. இதற்கு உதாரணமாக நோர்வேயில் 2000 - 2001 ஆம் ஆண்டுகளில் வேற்றுமொழி பெற்றோரைக் கொண்ட பாடசாலை மாணவர்களிடையே நடாத்தப்பட்ட ஆய்வைக் குறிப்பிடலாம். இந்த ஆய்வின்படி தம் தாய்மொழியில் திறமை பெற்ற மாணவர்கள் நோர்வேஜிய மொழி, மற்றும் அனைத்துப் பாடசாலை பாடங்களிலும் நோர்வேஜிய மாணவருக்கு நிகராகக் காணப்படுவதும் அதேவேளை தாய்மொழிக் கல்வி பெறாத மாணவர்கள் பெரும்பாலான பாடங்களிலும் பின்தங்கிய நிலையில் காணப்படுவதும் தெரிய வந்துள்ளது. வளமான தாய்மொழியே வேற்றுமொழியைக் கற்பதற்கும், துறைசார் கல்விக்கும் அடிப்படை என்ற வெவ்வேறு மொழி அறிஞர்களின் கூற்றையே மேற்படி ஆய்வு மீண்டும் உறுதி செய்துள்ளது. ஒருவர் பலமொழிகளை தெரிந்து வைத்திருப்பதனூடாக பல உலகங்களை அவரால் தரிசிக்கமுடிகிறது. இவ்வாறு பலமொழிப் பரிச்சயம் என்பதானது அவரது ஆற்றல் திறன்களை மேலும் வளர்க்கவே செய்கிறது.

ஆனாலும் புலம்பெயர் தேசங்களில் தமிழ் கற்றல் கற்பித்தல் என்பது தொடர் ஆய்வுக்கு உட்படுத்தவேண்டியது, காலத்தேவையால் மறுசீரமைக்கப்பட வேண்டியது. இன்று மூன்றாம் தலைமுறை இளவல்களும் தமிழ் கற்கத் தொடங்கிவிட்டார்கள் என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். இற்றைக்கு இருபது வருடங்களுக்கு முன் தமிழ் கற்பித்ததைப் போன்று இன்று கற்பிக்க முடியாது. பாடநூல் அலகுகளில் அரைத்த மாவையே திரும்ப திரும்ப அரைக்க முடியாது. புகலிடக் கற்கைச் சூழல், கல்விமுறை மாற்றம், எம் வாழ்வியல் மாற்றம் என்று இன்னோரன்ன பல காரணிகள் இதனைத் தீர்மானிக்கின்றன. உலகளாவிய ரீதியில் தாய்மொழிக்கல்வியில் மாற்றங்கள் தேவைப்படுகின்றன என்பதை அண்மைக்காலமாக கல்வியாளர்களும் ஆய்வாளர்களும் வற்புறுத்தி வருகின்றனர். 21ஆம் நூற்றாண்டு மாணவர் கொண்டிருக்க வேண்டிய ஆளுமைகள் என்ன என்பதை அடிப்படையாகக்கொண்டே பாடத்திட்டங்களும் கற்பித்தல் முறைகளும் பயன்படுத்தப்பட வேண்டும். தாய்மொழி பயிலும் மாணவர்கள் மூன்று வகையான திறன்களைக் கொண்டவர்களாக இருக்க வேண்டும். அவையாவன:

- மொழித்திறன்
- கருத்துப்பரிமாற்றத்திறன்
- பண்பாட்டு விழுமிய அறிவுத்திறன்

தாய்மொழிக் கல்வியில் இம்மூன்று திறனுமே முக்கியமாக இருப்பினும், வாழுமிடச் சூழலில் தாய்மொழி அதிகம் பயன்படுத்தப்படாத புலம்பெயர் சூழலில், குறிப்பிட்ட சில மணித்தியாலங்களே தாய்மொழியைப் பயிலும் மாணவர்களிடம் எந்தத் திறனுக்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும் என்பது சிந்திக்கப்பட வேண்டிய விடயம். எமது வாழ்விடச் சூழல், நேரமின்மை காரணமாக

தாய்மொழிக் கற்பித்தலில் மேற்கூறிய மூன்று திறன்களையும் போதுமான அளவு வளர்த்தெடுப்பதில் சிரமங்கள் அவதானிக்கப்படுகின்றன. எனவே, எமக்கிருக்கும் குறுகிய கற்பித்தல் நேரத்தைக் கருத்திற்கொண்டு, கற்பித்தலில் சில மாற்றங்கள் கொண்டுவரவேண்டியது காலத்தின் தேவை. தமது கருத்தைத் தனது தாய்மொழியில் சொல்லக்கூடிய திறனைக் கொண்டிராத மாணவர் தாய்மொழியை பயன்பாட்டு மொழியாகக் கொள்ளப் போவதில்லை என்பது நாம் கண்கூடாகக் காணும் யதார்த்தம். தாய்மொழியை பல வருடங்களாகப் பயின்ற மாணவர்கள் பலர், தம் மத்தியிலும் கருத்துப்பரிமாற்றத்திற்கு முற்றுமுழுதாக வாழ்விடமொழியையே பயன்படுத்துவதை காண்கிறோம். போதிய சொல்வளம் இன்மை, தாய்மொழியில் தமது கருத்துக்களைச் சொல்வதில் போதிய பயிற்சியின்மை, தவறுகள் ஏற்படும் என்ற தயக்கம், போதிய பேசுதலுக்கான சந்தர்ப்பமின்மை, வாக்கிய அமைப்பொழுங்கில் தெளிவின்மை என்பவற்றால் தாய்மொழியில் பேசுவதில் சங்கடம் இருப்பதாக மாணவர்களே சொல்கிறார்கள். தமிழ் மொழியைப் பேசுவதில் சிக்கல் உள்ள மாணவர்கள், வாசிப்பதற்கோ, பேசுவதற்கோ தமிழைப் பயன்படுத்தப் போவதில்லை. தமிழ் மொழியை கருத்துப்பரிமாற்றத்திற்கு பாவிக்க முடியாவிடில், மொழி ஆளுமை காலம் போகப் போக அழிந்து போய்விடும்.

தாய்மொழிக்கல்வியின் அடிப்படை, மொழித்திறன் என்பது மறுக்கப்படமுடியாதது எனினும், பொதுவாக மொழித்திறனிலேயே கூடுதலாகக் கவனம் செலுத்தும் தன்மை எமது தாய்மொழிப் பாடத்திட்டங்களில் காணப்படுகிறது. வாழுமிடச் சூழலைக் கருத்திற்கொண்டு பொருத்தமற்ற இலக்கியப்பகுதிகள், தேவையற்ற கடினமான இலக்கணப் பகுதிகளைத் தவிர்த்துக் கொண்டு, அந்த கற்பித்தல் நேரத்தை எமது மாணவர் கருத்துப்பரிமாற்றத்திறனை வளர்த்துக்கொள்வதற்கான தேவைக்குப் பயன்படுத்திக் கொள்ளல் வேண்டும். பண்பாடும் விழுமியங்களும் பற்றிய அறிவு தான் எமது இளைய சமூகத்திற்கு தமது அடையாளத்தைப் பேணவும், தமது தாய்மொழியில் ஆர்வத்தைத் தூண்டவும், மொழித் தேவையை உணர்த்தவும் காரணமாக இருக்கிறது. இந்த அறிவைப் பெறுவதற்கும், அதனை கருத்துப்பரிமாற்றத்திறனை வளர்ப்பதற்கு பாவிப்பதற்குமான பாடங்கள், கற்பித்தல் முறைகள் அறிமுகப்படுத்தப்பட வேண்டும். வாழுமிடச் சூழலில் குறைந்த நேரமே, தமிழைக் கற்பதில் பயன்படுத்தும் எமது மாணவர் சந்திக்கும் பெரிய சவால்களில் ஒன்று பேச்சு மொழி, எழுத்துமொழி பாவனையைப் பிரித்தறிதல் என்பதுதான். கருத்துப்பரிமாற்றத்திற்கு இது ஒரு சவால் என்பதையும் கற்பிப்போர் உணர்ந்து கொண்டு, இது கருத்துப்பரிமாற்றத்திற்கு தடைக்கல்லாக இருக்காமல், மாணவரைப் பேச்சுமொழியிலாவது தமது கருத்துக்களைச் சொல்ல ஊக்குவிக்க வேண்டும்.

வித்தியாசமான மொழிப்புழக்கமுள்ள, பின்னணிகளைக் கொண்ட இல்லங்களிலிருந்து வரும் மாணவரின் மொழித்திறனில் வேறுபாடுகள் இருக்குமென்பதைக் கருத்திற்கொண்டு, பாடத்திட்டங்கள் நெகிழ்வுத்தன்மை கொண்டவையாக இருக்க வேண்டும். வகுப்பறைச் சூழல் மகிழ்வூட்டுவதாக, கற்பித்தல் நடவடிக்கைகள் வித்தியாசமானதாக, பாடங்கள் அன்றாடச்சூழலுக்குப் பொருத்தமானதாக இருக்க வேண்டும். இது கல்விக்கூடங்களுக்கு மாணவர் விரும்பிவந்து, அச்சமின்றி, தயக்கமின்றி தமிழைக் கற்க, கருத்துப்பரிமாற்றத்துக்குப் பயன்படுத்த ஊக்குவிக்கும். மொழித்திறன்களில்கூட பெற்றோர்கள் மட்டுமல்லாது பெரும்பாலான ஆசிரியர்களும் வாசித்தல், எழுதுதல் திறன்களையே மொழித்திறன் கூறுகளாக எண்ணுகிறார்கள். கேட்டல், பேசுதல் பகுதிகளையும் பிள்ளைக்கு கற்பிப்பதன் மூலமே பிள்ளை முழுமையான மொழித்திறன் தேர்ச்சியைப் பெறமுடியும். பிள்ளை கேட்கின்ற விடையம் பற்றி பேசவும் பின்னர் எழுதவும், பார்க்கின்ற காட்சிபற்றி பேசவும் பின்னர் எழுதுவதற்குமான வழிகாட்டலும் நெறிப்படுத்தலும் வகுப்பறையில் நிகழவேண்டும். அதற்கான சூழலை ஆசிரியரும் கல்வி நிறுவனங்களும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

தாயகத்தின் கற்பித்தல் முறை மற்றும் கல்விமுறை என்பன போட்டிக் கல்விமுறையை

அடிப்படையாகக் கொண்டவையே. அந்த பழக்கங்களின் வழிவந்த நமது தலைமுறையினர் அதே நிலைமைகளையே இங்கும் அடியொற்ற முனைவர். தேர்வை நோக்கியே பிள்ளைகளை தயார்படுத்துதல், புரியாது விட்டாலும் மனனம் செய்தல், அதிக புள்ளிகளை திருப்தி எல்லைகளாக வரையறுத்தல் என்பவற்றிலேயே முழுக்கவனம் செலுத்துவார்கள். அதையும் மீறி புள்ளி அடிப்படையிலான திறமை அளவீட்டு முறைமைகளை மட்டுப்படுத்தி காலப்பொருத்தமான தொடர் மதிப்பீட்டு முறைகளை அறிமுகம் செய்தலே பயன் அளிக்கும். இந்த நாடுகளில் கல்வி முறைமைகள் அதிகம் திட்டமிடப்பட்டது. குழந்தைகள் மேலதிக கல்விச்சுமையற்று கல்விச் சூழலை அனுபவிப்பதற்கான திட்டமிட்ட உட்கட்டமைப்பு இங்கு உண்டு. எனவே வாழிடக் கல்விச் சூழலுக்கு, அந்தந்த நாட்டு கல்விமுறைமைகளுக்கு இயைந்ததாகவே நாளாந்த நடைமுறை எடுத்துக்காட்டுகளுடன் எமது மொழிக்கல்வி வழித்தடங்களும் நீளவேண்டும்.

ஒப்படைகள், கலந்துரையாடல்கள் ஊடாக மாணவர்களின் வாய்மொழி வாண்மை வளர்த்தெடுக்கப்படவேண்டும். பிள்ளையின் சொற்களஞ்சியம் அதிகரிக்கும்போது அவர்களது தன்னாற்றல் வெளிப்படுத்துதிறன் எழுத்துருவிலும் பேச்சுருவிலும் இலகுவாகும். தமிழ்மொழி வாக்கிய அமைப்புக்கும் வாழிட மொழி வாக்கிய அமைப்புக்கும் வேறுபாடு உண்டு. அந்த அமைப்பு ஒருமைப்பாடு வேறுபாடுகளை ஒப்புநோக்கி கற்பிப்பதன் மூலம் இலகுவாக மொழிப் புரிதலை ஏற்படுத்தலாம். இதனால்தான் தழிழாசிரியர், வாழிட மொழியிலும் தேர்ச்சியுள்ளவராக இருப்பதும் அந்நாட்டு கற்பித்தல் முறைமைகளை இலகுவில் உள்வாங்க கூடியவராக இருப்பதும் இன்றிமையாததாகிறது.

மேற்குறித்து எழுதியவை அனுபவங்களினூடாக எழுந்த சில சிந்தனைகளும் முன்மொழிவுகளும் மட்டுமே. காலத்திற்குக் காலம் இந்தக் களம் மேலும் விரிந்து ஆய்ந்து எழுதுவதற்கு உட்பட்டது. மாணவர் - பெற்றோர் - ஆசிரியர் - கல்விநிறுவனம் என்ற நான்கு தரப்பினரின் புரிந்துணர்வுடனான கூட்டுச் செயற்பாடே புலத்தில் எம் அடுத்த சந்ததியையும் புலத்து தமிழராய் நிமிர வைக்கும்.

பேராசிரியர் தயாளன் வேலாயுதபிள்ளை

ஆசிரியர் சிவதாஸ் சிவபாலசிங்கம்

குழந்தைகளின் உரிமைகள் - பன்னாட்டு மற்றும் இந்திய சட்டப் பாதுகாப்பு

முனைவர் **பாஞ். இராமலிங்கம்**

இணைப்பேராசிரியர், புதுவைப் பல்கலைக்கழகம், புதுச்சேரி இந்தியா

கட்டுரைச் சுருக்கம்

இன்றைக்கு உலக அளவில் குழந்தைகளின் உரிமைகள் சட்ட ரீதியாக பாதுகாக்கப்படுகிறது. பன்னாட்டுச் சட்ட விதிகளுக்கு ஏற்ப ஒவ்வொரு நாடும் சட்டங்கள் இயற்றி நடைமுறைபடுத்தி வருகிறது. அவ்வகையில், இக்கட்டுரை பன்னாட்டுச் சட்ட விதிகளையும் குறிப்பாக இந்தியச் சட்ட விதிகளையும் எடுத்துரைக்கின்றது. இதன்மூலம் குழந்தைகளின் உரிமைகளுக்கான சட்டப் பாதுகாப்பினை அறிந்து கொள்வதுடன் ஆசிரியர்கள் மாணவர்களைப் போற்றி கற்பிப்பதற்கான வழிமுறைகளையும் அறிந்து கொள்ளலாம். ஆசிரியர்களே மாணவர்களின் வழிகாட்டியாகவும் குழந்தைகளின் உரிமைகளைப் பாதுகாப்பவர்களாகவும் திகழ்கின்றனர்.

ஈன்று புறந்தந்த குழந்தைகள் 18 வயது வரை பன்னாட்டு இயல் முறையால் குழந்தைகளாகக் கருதப்படுகின்றனர். அவர்கள் மனிதர்களாக இருந்த போதிலும் அறியா பருவத்தினர் என்பதால் சிறப்பு மிக்கவர்களாக மதிக்கப்படவேண்டும் என்பதனை பல்வேறு பன்னாட்டு சட்டங்கள் மூலமாகவும் அந்தந்த நாட்டுச் சட்டங்களின் மூலமாகவும் உரிமைகளை உறுதி செய்கின்றனர்.

மானிட உரிமைகள்

உரிமைகள் என்பது குறிப்பாக மனிதனுக்கு அளிக்கப்படும் சுதந்திரம். உரிமைகள் முறையாக அளிக்கப்படுவதன் மூலமே கடமைகள் சிறப்பாக நிறைவேற்றப்படுகின்றன. வளர்ந்த நாடுகளில் இத்தகைய உரிமைகள் சிறந்த முறையில் வழங்கப்படுகின்றன. மனித உரிமைகள் பேணிப் போற்றப்படுகின்றன. அதில் தனிமனித சுதந்திரம் முக்கியத்துவம் பெறுகிறது. உரிமைகள் இருவகைப்படும். ஒன்று சட்டம் சார்ந்தது; மற்றொன்று மரபு சார்ந்தது சட்ட முறைகளுக்கு உட்படாதது. ஒவ்வொரு நாடும் தமது குடிமக்களுக்கு ஏற்ப சட்டங்களை வகுத்து உரிமைகளை வழங்குகின்றனர். அடிப்படை உரிமைகள், கல்வி உரிமை, சொத்துரிமை என பலவற்றைக் குறிப்பிடலாம்.

மரபு சார்ந்த உரிமைகளாகப் பெற்றோருக்குக் குழந்தைகள் அடங்கி நடத்தல், கணவனும் மனைவியும் ஒருவருக்கு ஒருவர் கட்டுப்படுதல், வயதில் மூத்தோருக்கு இளையோர் மதிப்பளித்தல் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

தனிமனித உரிமைகள் மற்றவரைப் பாதிக்காத வகையில் செயலாக்கம் பெறுகிறது. அடிப்படை உரிமைகளை வரையறை செய்கையில் சர்ச்சில் ரூஸ்வெல்ட் குறிப்பிடுகையில் ஐவகையாக எடுத்துரைக்கின்றார். 1.வாழ்வாதார உரிமை, 2. சுதந்திர மனிதனாக இருக்க உரிமை, 3. உடைமைகளைப் பெறும் உரிமை, 4. ஒப்பந்தம் செய்துகொள்ளும் உரிமை மற்றும் 5. கல்வி கற்கும் உரிமை. உரிமைகளும் கடமைகளும் ஒன்றோடு ஒன்று தொடர்புடையவை.

பன்னாட்டு மனித உரிமைகள் பிரகடனம்

ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையால் 1948 ஆம் ஆண்டு டிசம்பர் 10 ஆம் நாள் அங்கீகரிக்கப்பட்ட இப்பிரகடனம் 30 விதிகளைக் கொண்டது, மானுட வாழ்வாதாரம், அரசியல், பொருளாதாரம், சமூக, பண்பாட்டு உரிமைகளை அடிப்படையாகக் கொண்டு இப்பிரகடனம் வெளியிடப்பட்டுள்ளது. இதன்படி அனைத்து மனிதர்களுக்கும் பேச்சுரிமை, சமய உரிமை, இன, மத நாட்டுரிமை என வேறுபாடின்றி திருமணம் செய்து கொள்ளும் உரிமை என மனித குல முன்னேற்றத்திற்கான அடித்தளமாக இப்பிரகடனம் திகழ்கின்றது.

கடந்த 10 ஆண்டுகளுக்குமுன்பு உலக நாடுகளிலேயே இந்தியாவில்தான் அதிகமான குழந்தைத் தொழிலாளர்கள் இருந்தனர். அனைவருக்கும் கல்வித் திட்டத்தின் மூலமாகவும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் தொடர் முயற்சியின் காரணமாகவும் இத்தகைய நிலை மாறி அனைத்து குழந்தைகளும் கல்வி கற்கும் நிலை உருவாகியுள்ளது

குழந்தைகளின் நலனைக் கருத்தில்கொண்டு 1960ஆம் ஆண்டு இந்தியக் குழந்தைகள் நலச் சட்டம் உருவாக்கப்பட்டு குழந்தைகளை பாதுகாக்க வகைச் செய்தது. குழந்தைத் தொழிலாளர்களுக்கு மறுவாழ்வு அளிக்க சிறப்பு மையங்கள் ஏற்படுத்தப்பட்டன. 1985இல் ஐ.நா. சபை தனது சட்டத்தின்படிக் குழந்தைத் தொழிலாளர்களுக்கு கல்வி கற்பிக்க வகை செய்தது. 1986ஆம் ஆண்டு குழந்தைகளுக்கான தனிச்சட்டம் இந்தியாவில் இயற்றப்பட்டது. இச்சட்டம் மாநில மற்றும் மாவட்ட அளவில் பள்ளிகள் மற்றும் குழந்தைகள் நலவாழ்வு மையங்கள் ஏற்படுத்த வகை செய்துள்ளது.

1979ஆம் ஆண்டு பன்னாட்டு குழந்தைகள் ஆண்டாக கொண்டாடப்பட்டது. 1989ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 20ஆம் நாள் ஐ.நா சபையின் பொதுக் குழுவால் மனித உரிமைகள் மீதான பன்னாட்டுப் பிரகடனத்தில் குழந்தைப் பருவம் என்பது தனிக் கவனத்திற்கு உள்ளானது.. இதனைத் தொடர்ந்து ஐக்கிய நாடுகள் சபையில் அங்கம் வகிக்கும் நாடுகள் அனைத்தும் குழந்தைகளின் உரிமைகளுக்கான சட்ட வரைவுகளை ஏற்றுக் கொள்ளத் தொடங்கின.

ஐக்கிய நாடுகள் சபையின் பன்னாட்டு உடன்படிக்கையின்படி 18 வயதிற்குபட்ட ஆண், பெண் அனைவரும் குழந்தைகள். அதன்படி மனித Rights) ஐ. நா. சபை குழந்தைகளின் நல்வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும். பாதுகாப்பிற்கும் உறுதி அளிக்கும் வகையில் பல விதிகளை உருவாக்கியது.

குழந்தைகளுக்கான ஐ.நா. சபை பிரகடனம்

விதி -1இன் படி அனத்து அரசுகளும் ஒவ்வொரு குழந்தைக்கும் அதன் பெற்றோர் அல்லது பாதுகாவலரின் இனம், நிறம், பால், மொழி, மதம், அரசியல் பாதுகாவலரின் அல்லது வேறு விருப்பம், தேசிய, வட்டார தொடர்பிலான சமூகம் சார்ந்த பிறப்பு மூலம், சொத்து, உடற்குறைத் தன்மை, பிறப்புச் சம்பந்தப்பட்ட மதிப்பு ஆகியவை குழந்தையின் எந்த ஒரு பிறப்பு விவர அடிப்படையிலும் வேற்றுமை காட்டக்கூடாது.

விதி 2(1) இல் மேலே கூறப்பட்ட விதிக்கு அனைத்து அரசுகளும் உறுதி அளிக்க வேண்டுமென்று எடுத்துரைக்கின்றது.

விதி 2(2)இல் ஐ.நா. சபையின் கூட்டு உடன்படிக்கையில் பொறுப்பேற்றுள்ள எல்லா அரசுகளும் உலகத்திலுள்ள எல்லா குழந்தைகளையும் அதன் பெற்றோர்கள், சட்ட ரீதியான பாதுகாவலர்கள் குழந்தைகளின் நல விரோத செயல்பாடுகளுக்கு உள்ளாகாமல் பாதுகாக்க தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும்.

விதி 3(1)- எப்படிப்பட்ட சமூக நல அமைப்புகளானாலும் அரசுடமை அல்லது தனியாரானாலும், நீதிமன்றங்கள் நிர்வாக அதிகாரிகள். அமைச்சரவை முதலிய எந்தப் பிரிவினராலும் எவ்வித நடவடிக்கைகளிலும் குழந்தைகளின் நலன் காணும் எண்ணமும் ஆர்வமும் தலையாயக் குறிக்கோளாக இருக்க வேண்டியது மிகவும் அவசியம் என்று குறிப்பிடுகிறது.

விதி 3(2) ஒவ்வொரு குழந்தையின் நல்வாழ்விற்குத் தேவையான பாதுகாப்பு மற்றும் கவனிப்புக் கிடைப்பதை ஒவ்வொரு உறுப்பு நாடுகளும் தங்கள் கடமையாகக் கொள்ள வேண்டும். அதன்படி குழந்தைக்குத் தேவையான பாதுகாப்பும் கவனிப்பும் கிடைப்பதை உறுதி செய்யும் நோக்கத்தில் குழந்தையின் பெற்றோர் அல்லது சட்டப்படியான பாதுகாவலர்களுடைய கடமைகள், உரிமைகள் முதலியவற்றையும் கணக்கில் கொண்டு சட்டமன்ற மற்றும் நிர்வாக நடவடிக்கைகள் உறுப்புகள் மேற்கொள்ள வேண்டும் என எடுத்துரைக்கின்றது.

விதி 3(3) குழந்தைகளின் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பிற்கு பொறுப்பாக உள்ள நிறுவனங்கள் பொதுப்பணிகள் மற்றும் பிற வசதிகள் ஆகியவை குறித்து உரிய சீரிய அதிகாரிகளால் சரியான முறையில் நிர்ணயிக்கப்பட்ட தர அளவைகள், விதிமுறைகள், ஆகியவற்றின் அடிப்படையில் இயங்குகிறதா என்று அனைத்து உறுப்பு நாடுகளும் உறுதி செய்து தரம் மற்றும் சரியான மேற்பார்வையில் பின்பற்றப்படுகிறதா என்றும் கண்காணிக்க வேண்டியது மிகவும் முக்கியமான கடமை என்றும் எடுத்துரைக்கின்றது.

உயிர்வாழும் உரிமம் (Right to Live)

விதி 6(1) இன்படி உலகத்தில் வாழும் குழந்தைகள் ஒவ்வொருவருக்கும் அடிப்படையிலேயே உள்ளார்ந்த உயிர் வாழும் உரிமை உண்டு என்பதை உறுப்பு நாடுகள் உணர்ந்து ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று உணர்த்துகிறது. விதி 6(2) இல் உயர்ந்த சாத்தியக்கூறுகள் குழந்தைகளின் உயிர் வாழ்வு மற்றும் வளர்ச்சி ஆகியவற்றை உறுப்பு நாடுகள் உறுதி செய்துகொள்ள வேண்டியது அவசியமாகும் என்று எடுத்துரைக்கின்றது.

பிறப்பு பதிவு உரிமையின் தேவை (Necessity of Birth Registration)

பெற்றோர் தமது குழந்தையின் பிறப்பை பதிவு செய்ய வேண்டும். அதன்மூலம் குழந்தைக்கு தனக்கென்று ஒரு பெயர் மற்றும் ஒரு தேசத்துக்

குடிமகன் என்ற நிலையை அடைவதற்கான உரிமை கிடைக்கின்றது. விதி 7(1) இன்படி தாய், தந்தையர் என்று அறிந்துக்கொள்ளும் உரிமை பெறப்படுகிறது. அவர்களால் பராமரிக்கப்பட வேண்டிய உரிமைகள் அந்தக் குழந்தைக்கு உரித்தாகிறது.

விதி 7(2)இன்படி உறுப்பு நாடுகள் தமது நாட்டின் தேசியச் சட்டத்தோடும். அத்துறையின் சம்பந்தப்பட்ட செயற்பிரிவுகளின் படியும் தமக்கான பொறுப்புகளுடன் சேரும் அளவில் மேற்கண்ட உரிமைகள் நடைமுறைப்படுத்துவதை செய்யப்படாத குழந்தைகள் நாடற்றதாகிவிடும் நிலைமை இருக்குமெனில் அந்த உறுப்பு நாடுகள் அந்த உரிமையை நடைமுறைப்படுத்துவதை உறுதிச் செய்ய வேண்டும் என்று குறிப்பிடுகிறது.

குழந்தைகளின் பாதுகாப்பு (Child Protection)

ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்பு நாடுகள் ஒவ்வொரு குழந்தையும் எந்தவித அரசியல் குறுக்கீடுகள் இல்லாத வகையில் அவற்றை தேசியம், பெயர் மற்றும் குடும்ப உறவுகள் போன்றவற்றில் தனது தனி அடையாளத்தை பாதுகாத்துக் கொள்ள ஆவண செய்தல் வேண்டும். ஐக்கிய நாடுகள் எந்த குழந்தைக்கேனும் அத்தகைய உரிமை மறுக்கப் பட்டிருந்தால் அதனைத் திரும்பப் பெற உறுப்பு நாடுகள் ஆவண செய்ய வேண்டும்.

விதி 9(1) இன்படி குழந்தைகளை அவர்களுடைய பெற்றோர்களிட மிருந்து பிரித்து வைப்பது அக்குழந்தைகளுக்கு நலன் என்று இருந்தாலொழிய பிரித்து வைக்கக்கூடாது. ஆனால் பெற்றோர்களால் குழந்தை புறக்கணிக்கப்படுதல், இழிவுப்படுதல், கொடுமைப்படுதல் முதலிய காரணங்கள் அல்லது பெற்றோர் பிரிந்து வாழ்பவர்களாகி குழந்தை யாரிடத்தில் இருக்க வேண்டும் என்ற கேள்வி எழும்போது அக்குழந்தையின் நலன் மற்றும் எதிர்காலத்தை கருத்திற் கொண்டு அதனைப் பற்றிய தீர்ப்பு அல்லது முடிவு எடுப்பது அவசியமாகிறது. விதி.9(2)இல் இந்த குற்றச்சாட்டில் சம்பந்தப்பட்ட தரப்பினர், தனி மனிதன் தங்கள் கருத்துக்களை கூற உரிமையுள்ளவராகின்றனர். விதி 9(3) இல் பெற்றோரிடமிருந்து பிரிக்கப்பட்ட குழந்தையுடன் தனிப்பட்ட உறவு வைத்துக் கொள்ள உறுப்பு நாடுகள் உரிமை வழங்க வேண்டும்.

விதி 9(4)இன்படி குறிப்பிட்ட நபர் அரசின் காவலில் இருக்கும்போது ஏதாவதொரு காரணத்தினால் ஏற்படும் மரணம் உட்பட மற்ற வேறு காரணங்களினால் பாதிக்கப்பட்டவர்கள் வேண்டுகோள் அல்லது மனு செய்வார்களாயின் சம்மந்தப்பட்ட பெற்றோர்களின் குழந்தைக்கு அக்குடும்பத்தின் மற்ற உறுப்பினர்கள் எங்கிருக்கின்றனர் என்பன போன்ற விவரங்களைத் தந்து உதவ வேண்டியது அரசின் கடமையாகும். மேலும் அப்படித் தருவது குழந்தையின் நலனுக்குத் தீமை பயக்காதவாறு இருக்க வேண்டும்.

விதி 10(1) மேலே கூறப்பட்டவற்றிற்கு உட்பட்டு ஒரு குழந்தை தனது பெற்றோர்களோடு சேர்வதற்கு மனு கொடுத்தால் அவற்றை உடனடியாக பரிசீலனை செய்து அதற்கு முக்கியத்துவம் அளித்து, அக்குழந்தையின்

பெற்றோர் எந்த நாட்டில் இருந்தாலும் அவர்களுடன் சேர்ந்து வாழ ஆவண செய்ய வேண்டும். வெவ்வேறு நாடுகளில் வாழ்ந்துக்கொண்டிருக்கும் பெற்றோரின் குழந்தைக்கு அவர்களுடன் தொடர்ந்து தொடர்பு கொள்ளவும் தனிப்பட்ட உறவுக் கொண்டிருப்பதற்கும். நேரடித் தொடர்புகள் வைத்துக் கொண்டிருப்பற்கும் உரிமை உண்டு. மேலும் அவர்கள் தங்கள் சொந்த நாட்டிற்குள் நுழைய உள்ள உரிமையை உறுப்பு நாடுகள் மதிக்க வேண்டும.

விதி.11(1)இன்படி குழந்தைகளை சட்டத்திற்கு புறம்பான வழிகளில் வெளிநாடுகளுக்கு இடம் மாற்றுவதும், மாற்றிய குழந்தைகளைத் திரும்பத் தராமையும் ஆகிய செயல்களை எதிர்த்துப்போராட உறுப்பு நாடுகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

விதி-11(2) இன்படி மேற்படி நடவடிக்கையின் பொருட்டு நாடுகளுக் கிடையேயுள்ள ஒப்பந்தங்களுக்கு ஒரு முடிவு அல்லது தீர்மானத்தை உறுப்பு நாடுகள் ஊக்குவிக்க வேண்டும் என்று எடுத்துரைக்கின்றது.

குழந்தைகளின் கருத்துரிமை

விதி 12(1) இன்படி தனது சொந்தக் கருத்துக்களை உருவாக்கிக் கொள்ளும் ஆற்றல் வாய்த்த எந்தவொரு குழந்தையும் அந்தக் கருத்துக்களை. தனக்குத் தீங்கு நேரிடும்போது தைரியமாக எடுத்துரைக்கலாம். அப்படி உரைக்கப்படும் கருத்துக்களுக்குச் சம்பந்தப்பட்ட குழந்தைகளின் வயது மற்றும் மனமுதிர்ச்சி முதலியவற்றிற்கேற்ப உரிய கவனமும் முக்கியத்துவமும் அளிக்கப்பட வேண்டும் என குறிப்பிடுகிறது.

விதி 12(2) இன்படி எந்தவொரு நீதி மன்றம் அல்லது நிர்வாகம் சார்ந்த வழக்கில் குழந்தை அதன் கருத்துக்களை நேரிடையாகவோ. அதன் பிரதிநிதி மூலமாகவோ கூற உரிமை இருக்கிறது.

விதி 13(1) இன்படி குழந்தைகளுக்குக் கருத்துச் சுதந்திரத்திற்கான உரிமையுண்டு. இந்த உரிமையில் நாட்டு எல்லைகள் கணக்கிலெடுக்கப் படாமல். வாய் வழியாகவோ எழுத்து மூலமாகவோ, அச்சிலோ அல்லது குழந்தை விரும்பும் எந்தவொரு தொடர்பு சாதனம் வழியாகவும் அனைத்து வகை விவரங்கள், கருத்துக்களைத் தேடியறியவும். பெற்றுக்கொள்ளவும் உரிமை கொடுக்கப்பட்டுள்ளது.

குழந்தைகள் நலன் பேணல் (Welfare of the Children)

விதி 18(1) இன்படி பெற்றோர்கள் அல்லது சட்டரீதியான பாதுகாவலர்கள் தான் குழந்தை வளர்ப்பு மற்றும் முன்னேற்றத்திற்கான பிரதான பொறுப்பாளர்களாவர். குழந்தை நலனுக்கான அனைத்து முயற்சிகளும் அவர்களின் அடிப்படைக் கடமையும் அக்கறையுமாகும் என்று எடுத்துரைக்கப்படுகின்றது.

விதி 18(3)இன்படி வேலைக்குச் செல்லும் பெற்றோர்களின் குழந்தைகளுக்குப் பெற்றோர்களின் பணியிடங்களில் குழந்தை நலப்பணிகள் மற்றும் வசதிகள் அவர்களுக்கு கிடைப்பதற்காக உத்திரவாதம்

அளிக்க வேண்டிய உறுப்பு நாடுகளின் கடமை என்பதை எடுத்துரைக்கின்றது.

விதி 19(1)இன்படி பெற்றோர் அல்லது சட்டரீதியான பாதுகாப்பிலிருக்கும் போது குழந்தைகள் உடல் ரீதியான அல்லது மனரீதியான வன்முறை, இழிவுப் படுத்தப்படல், புறக்கணிப்பு அல்லது அலட்சியமாக நடத்தப்படல், கொடுமைப் படுத்தப்படல் அல்லது பாலியல் வன்முறை உள்ளிட்டவை குறித்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என உறுதிசெய்கிறது.

விதி 29(1)இன் படி ஒரு குழந்தை அதன் குடும்பச் சூழலிலிருந்து தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாகவோ பிரிக்கப்பட்டாலோ அல்லது அதனுடைய சிறந்த நலனுக்காக குடும்பச் சூழலிலிருந்து பிரித்தாக வேண்டிய அவசியம் ஏற்பட்டாலோ அந்த குழந்தைக்கு சிறப்பு அல்லது கூடுதல் பாதுகாப்பு மற்றும் உதவி தருவது அரசின் உடமை என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இயலாக் குழந்தை (மாற்றுத் திறனாளி)

விதி 23இல் மன ரீதியாகவோ அல்லது உடல் ரீதியாகவோ பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு மருத்துவ ரீதியான நடைமுறை சார்ந்த நோய் தடுப்பு முறைகள், உடல்நலப் பாதுகாப்பு முறைகள் பற்றிய உரிய விவரங்களைப் பரிமாறிக் கொள்ளுதல், பன்னாட்டுக் கூட்டுப்பணி, ஒத்துழைப்பு என்ற நோக்கில் மறுவாழ்வு, கல்வி மற்றும் வேலை வாய்ப்பும் அடங்கும். இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு ஊனமுற்றவர்களுக்கு தனிக் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது.

கல்வி பெறும் உரிமை (Right of Education)

விதி 28இன்படி குழந்தைகளின் கல்வி பெறும் உரிமையை உறுப்பு நாடுகள் உயர்ந்தேற்றுக் கொண்டுள்ளன. மேற்படி உரிமையை குழந்தைகள் ஆக்கப்பூர்வமான, முன்னேற்றமான முறையில் பெறவும், சமவாய்ப்புகளின் அடிப்படையில் பெறவும் உரிய வழிவகைகளைச் செய்து தந்து கல்வி உரிமையை அனைத்துக் குழந்தைகளுக்கும் கிடைக்கச் செய்து வெற்றிகரமாக்கும் நோக்கில் உறுப்பு நாடுகள் கீழ்க்காணும் செயல்பாடுகள் மேற்கொள்ள வேண்டியது அவசியம் என்றுரைக்கின்றது.

(அ) ஆரம்பக்கல்வியை அனைவருக்கும் கட்டாயமாக்குதலும், அனைவருக்கும் இலவசமாகக் கிடைக்கச் செய்தலும்.

(ஆ) பொதுவான மற்றும் தொழிற்கல்வி உள்ளிட்ட பல்வேறு வகையான இரண்டாம் கட்ட கல்வி முறைகளை ஊக்குவித்தல், அவை எந்த ஒரு குழந்தைக்கும் எளிதில் கிட்டக்கூடியதாய்ச் செய்தல், தவிர இலவசக் கல்வி போன்ற தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதலும், தேவைப்பட்டோருக்குக் கல்வி பயில்வதில் நிதியுதவி அளித்தலும் இவ்விதியின் கீழ் உறுதி செய்யப்பட்டுள்ளது.

(இ) உயர்கல்வியை தகுதி அடிப்படையில் அனைவருக்கும் கிடைக்கச் செய்தல்.

(ஈ) கல்வி மற்றும் தொழில் குறித்த விவரம் மற்றும் ஆலோசனைகள் ஆகியவை அனைத்துக் குழந்தைகளுக்கும் கிடைக்கச் செய்தல்.

(உ) குழந்தைகள் தொடர்ந்து எல்லா நாட்களிலும் பள்ளிக்குச் செல்வதற்கான ஊக்கம் தரும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், குழந்தைகள் இடைநிறுத்தம் செய்வதை தடுக்கும் பள்ளியைவிட்டு முயற்சிகளை மேற்கொள்ளுதல்.

விதி 31 இன்படி குழந்தைக்கு ஓய்வெடுக்கவும், இளைப்பாறவும் அதன் வயதிற்குத் தகுந்த விளையாட்டு மற்றும் பொழுதுபோக்குச் செயல்பாடுகளில் ஈடுபடவும், கலை, பண்பாட்டு நிகழ்வுகளில் சுதந்திரமாகப் பங்கெடுக்கவும் உரிமை உண்டு என்பதை உறுதி செய்கிறது.

விதி 34 இன்படி அனைத்து உறுப்பு நாடுகளும் குழந்தையை அனைத்துவிதமான பாலியல் ரீதியான சுரண்டல் மற்றும் பாலியல் மோசடி ஆகியவற்றிலிருந்து காத்தல் வேண்டும் எனக்குறிப்பிடுகிறது.

விதி 35 இன்படி குழந்தைகள் எந்த நோக்கத்திற்காகவும் வாங்க, விற்கப்படுவதை, கடத்தப்படுவதை, இடத்திற்கு இடம் பெயர்க்கப்படுவதைத் தடை செய்ய வழிவகை செய்கிறது.

பதினெட்டு வயது வரை குழந்தைகளுக்கு வாழும் உரிமை, பாதுகாப்பு உரிமை, வளர்ச்சிக்கான உரிமை, குடும்பச் சொத்தில் பங்கு பெறும் உரிமை, கல்வியுரிமை என்று பல தரப்பட்ட உரிமைகள் குழந்தைகளுக்கு ஐக்கிய நாடுகள் சபையால் வழங்கப்பட்டுள்ளது.

இந்த உரிமைகள் அனைத்தும் குழந்தைகளைச் சென்றடை கின்றனவா என்ற உண்மையை அரசாங்கம் மட்டுமின்றி, தொண்டு நிறுவனங்களும் சமூக சேவை செய்யும் நல்ல உள்ளங்களும் கவனிக்க வேண்டும். அப்போதுதான் ஒரு வலிமையான எதிர்காலத்தை நாம் உருவாக்க முடியும்.

இந்திய கல்வி உரிமைச் சட்டம் 2009

இந்தச் சட்டம் 2010 ஏப்ரல் முதல்நாளன்று அமுலுக்கு வந்தபோது அதன் நோக்கம் வெற்றியடைய மாநில அரசுகள், ஆசிரியர், பெற்றோர் அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என இந்திய பிரதமர் மன்மோகன் சிங் வேண்டுகோள் விடுத்துள்ளார் (ஏப்ரல், 2010). "இந்தியாவில் 6 வயது முதல் 14 வயது வரையிலான குழந்தைகள் மொத்தம் சுமார் 22 கோடி பேர் இருப்பதாக கணிக்கப்பட்டுள்ளது. இவர்களின் 92 லட்சம் பேர் பள்ளிக் கல்வியை முழுமையாக பெறாமல் இருப்பதும் கண்டறியப்பட்டது. எனவே குழந்தைகளுக்குப் பள்ளிக் கல்வியைக் கட்டாயமாக்குவது அல்லது அடிப்படை உரிமையாக்கும் வகையில் கடந்த 2002ம் ஆண்டு அரசியல் சாசனச் சட்டத்தில் 86வது திருத்தம் செய்யப்பட்டது. இதன் பிறகு இச்சட்டம் கடந்த ஆண்டு நிறைவேற்றப்பட்டு இன்று முதல் அமலுக்கு வருகிறது. இதன் மூலம் நாடு முழுவதும் உள்ள 6 வயது முதல் 14 வயது வரையுள்ள குழந்தைகள் கட்டாயம் பள்ளிக் கல்வி கற்பதை மாநில அரசுகள் உறுதி செய்தாக வேண்டும். இதற்கான செலவை மத்திய அரசும், மாநில அரசுகளும்

55க்கும் 45 என்ற விகிதத்தில் பகிர்ந்து பொறுப்பெடுத்துக்கொள்ளும். மேலும், அனைத்துத் தனியார் கல்வி நிறுவனங்களும் பின் தங்கிய பிரிவைச் சேர்ந்த குழந்தைகளுக்கான சேர்க்கை இடங்களில் 25 விழுக்காடு கட்டாயம் ஒதுக்கியாக வேண்டும்".

பிரதமர் தனது உரையில் மேலும் குறிப்பிடுகையில் கல்வியை இலவசமாகவோ அல்லது கட்டாயமாகவோ பெறுவதைக் குழந்தைகளின் அடிப்படை உரிமையாக்கும் சட்டம் கடந்த 2009ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் நிறைவேற்றப்பட்டு, இன்று முதல் அமலுக்கு வருகிறது. இதன் மூலம் நம் குழந்தைகள் அனைவரும் கல்வியறிவு பெற்றவர்களாக இருப்பார்கள் என்பதை நம்மால் உறுதி செய்ய இயலும் என நம்புகிறேன். இந்த முயற்சியை வெற்றிகரமாக செயல்படுத்திக் காட்டுவதற்கு மக்கள் அனைவரின் ஒத்துழைப்பும் மிகவும் அவசியமாகும். இளைஞர்களின் நாடான இந்தியா வளர்ச்சி அடையவும், தனி நபர் மேம்பாடடுக்காகவும், குடும்பங்களின் நலனிலும் கல்வி மிக முக்கியமான மற்றும் அடிப்படை பங்கு வகிக்கும் அம்சமாக உள்ளது. எனவே இந்தக் கல்வியை வருங்கால சந்ததியினருக்குக் குறைவில்லாமல் வழங்க வேண்டியது நம் ஒவ்வொருவரின் கடமை. நம் குழந்தைகள் அனைவரும் கல்வி பெறுவதை உறுதி செய்யதுவிட்டோமானால், அவர்களின் எதிர்காலம் பாதுகாக்கப்பட்டு விட்டதாக ஆகிவிடும். பொருளாதார ஏற்றத்தாழ்வு, பாலின பாகுபாடு போன்றவற்றை மீறி அனைத்து குழந்தைகளும் கல்வி அறிவுக் பெற்றவர்களாக இருக்க வேண்டியதை நாம் உறுதி செய்தாக வேண்டும். ஆண், பெண், ஏழை, பணக்காரர் என யாராக இருந்தாலும் கல்வி அறிவு பெற்று, பல்வேறு திறன்களை வளர்த்து உயர்ந்த நிலையை அடைந்து பொறுப்பான குடிமக்களாக உருவாக இந்த சட்டம் உதவும். அனைத்து மாநில அரசுகள், ஆசிரியர்கள், பெற்றோர் அனைவரும் இந்த முயற்சியில் பங்கேற்று வெற்றி பெறச் செய்ய வேண்டும்" என்று குறிப்பிட்டுள்ளார்.

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இச்சட்டம் இந்திய சமுதாயத்திற்கு ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவதுடன் புதிய சமூக மாற்றத்திற்கு வழி வகை செய்துள்ளது. அனைவரும் கல்வி கற்று அறிவார்ந்த சமுதாயமாக மாறுகையில் முதலாவதாக சின்னத்தின் அடிப்படையிலான வாக்களிக்கும் முறை காணமல் போகும். புதிய மக்களாட்சி முறை உருவாகும்.

கல்வி உரிமைச் சட்டத்தின் (2009) முக்கிய அம்சங்கள்

இலவச மற்றும் கட்டாய கல்வி உரிமைச் சட்டத்தின் முக்கிய அம்சங்கள்:

- 6 முதல் 14 வரை உள்ள அனைத்து குழந்தைகளுக்கும் இலவச மற்றும் கட்டாய கல்வி அளித்தல்
- ஆரம்பக்கல்வி முடிக்கும்வரை எந்தவொரு குழந்தையையும் ஒரே வகுப்பில் வைத்திருக்கவோ, பள்ளியை விட்டு நீக்கவோ கூடாது. மேலும் ஆண்டு இறுதித் தேர்வில் வெற்றிபெறுதல் கட்டாயம் இல்லை.
- பள்ளியில் சேர்க்கை பெறாத அல்லது பள்ளியில் சேர்ந்திருந்தாலும் ஆரம்பக் கல்வியை முடிக்காத 6 வயதிற்கு மேற்பட்ட

குழந்தைகளை அவர்களின் வயதுக்குரிய வகுப்பில் சேர்க்க வேண்டும். இவ்வாறு தம் வயதிற்குரிய வகுப்புகளில் நேரடி சேர்க்கை பெற்ற குழந்தைக்கு மற்ற குழந்தைகளைப் போல தானும் கல்வியறிவு பெற சிறப்புக் கவனம் மற்றும் பயிற்சி பெற உரிமை உண்டு. மேலும் இவ்வாறு பள்ளியில் சேர்ந்த குழந்தைக்கு 14 வயதைக் கடந்த பின்னும் ஆரம்பக் கல்வி முடிக்கும் வரை கல்வி இலவசமாக அளிக்கவேண்டும்.

- ஆரம்பப்பள்ளியில் சேர்க்கைக்கான வயது ஆவணமாக பிறப்பு, இறப்பு மற்றும் திருமணப் பதிவுச்சட்டம் 1856 இன்படி வழங்கப்பட்ட பிறப்புச் சான்றிதழையோ அல்லது குறிப்பிட்டட இதர ஆவணத்தையோ சேர்க்கையின்போது வயது சான்றாக கொள்ளலாம். வயதுச் சான்று இல்லை என்பதற்காக எந்தவொரு குழந்தைக்கும் சேர்க்கை மறுக்கப்படக் கூடாது.
- ஆரம்பக் கல்வியை முடித்த குழந்தைக்கு அதற்கான சான்றிதழ் வழங்கப்படும்.
- ஒரே நிலையான ஆசிரியர்-மாணவர் விகிதம் இருக்க வேண்டும்
- ஜம்மு மற்றும் காஷ்மீர் மாநிலம் தவிர இந்தியாவின் மற்ற அனைத்து பகுதிகளுக்கும் இச்சட்டம் பொருந்தும்;
- தனியார் பள்ளிகளில் ஒன்றாம் வகுப்பில் சேர பொருளாதாரத்தில் பின்தங்கிய பிரிவினரின் குழந்தைகளுக்கு 25 சதவீத இடஒதுக்கீடு அளிக்கிறது;
- கல்வித் தரத்தை மேம்படுத்த உறுதி பூண்டுள்ளது;
- பள்ளி ஆசிரியர்கள் 5 வருட காலத்திற்குள் தகுந்த பட்டப்படிப்பு முடித்திருக்க வேண்டும் இல்லையெனில் அவர்கள் தங்கள் வேலையை இழக்க நேரிடும்;
- பள்ளியின் உள்கட்டமைப்பு வசதிகள் (குறைவாக உள்ள இடங்களில் மூன்று ஆண்டுகளுக்குள் மேம்படுத்தப்பட வேண்டும், இல்லையெனில் பள்ளியின் அங்கீகாரம் ரத்து செய்யப்படும்.
- ஆசிரியர் பணிக்குத் தகுதி தேர்வு மூலம் முடிவு செய்தல்.
- திட்டத்திற்கான நிதிச்சுமை மத்திய - மாநில அரசுகளால் பகிர்ந்து கொள்ளப்படும்
- ஏழை, எளிய குழந்தைகளும் கல்வி வாய்ப்பு பெற உறுதி செய்யப்பட்டுள்ளது.

அனைவருக்கும் கல்வி

அனைவருக்கும் கல்வி என்ற இயக்கம், உலகளாவிய கடமை உணர்வுடன், அனைவருக்கும் தரமுள்ள அடிப்படைக் கல்வி வழங்கப்பட வேண்டும் என்ற உயரிய நோக்கத்திற்காக உருவாக்கப்பட்டது. 1990-ம் ஆண்டில் நடந்த அனைவருக்கும் கல்வி குறித்த உலக மாநாட்டின் போது இந்த இயக்கம் தொடங்கப்பட்டது.

20 வருடங்கள் கழிந்தும், பல்வேறு நாடுகளில் நிர்ணயிக்கப்பட்ட

இலக்கை அடைய முடியாது நிலை உள்ளது. பல்வேறு நாடுகளின் பிரிதிநிதிகள் செனகல் நாட்டில் உள்ள டாக்கர் என்ற இடத்தில் மறுபடியும் கூடிக் கலந்துரையாடி 2015ம் ஆண்டிற்குள் அனைவருக்கும் கல்வி என்ற இலக்கை எட்டுவதற்கான உறுதிப்பாட்டை மீண்டும் எடுத்துள்ளனர். அனைவருக்கும்மான கல்வித் தேவைகளை 2015 ஆம் ஆண்டிற்குள் பூர்த்தி செய்ய, கல்வித் தொடர்புடைய 6 இலக்குகளை முன் வைத்தனர்.

- UNESCO சர்வதேச அளவிலான முயற்சிகளை ஒன்றிணைத்துள்ளமை.
- கிராம மக்களிடையே, கல்வியின் முக்கியத்துவத்தை அறியச் செய்யும் வகையில் பிரச்சாரம் செய்வது,
- பெண் குழந்தைகளுக்கும் கல்வி அளிப்பது,
- குழந்தை தொழிலாளர்களுக்குக் கல்வி மற்றும் இணைப்புக் கல்வித் திட்டங்கள் செயல்படுத்துதல்.
- சிறுபான்மையினருக்குக் கல்வியறிவு அளிப்பது.

தனித்திறன் படைத்த, உடல் ரீதியாக சவாலைச் சந்திக்கும் மாற்றுத்திறனாளி குழந்தைகள், சிறப்புக் குழந்தைகள் ஆகியோர்களுக்குக் கல்வியறியவு அளிப்பது. போன்றவை முக்கிய சவால்களாக முன் வைக்கப்பட்டது. இச்சவால்களை சிறப்பான முறையில் கையாண்டு அனைவருக்கும் கல்வி வழங்குவதில் இந்திய அரசு குறிப்பிடத் தக்க வெற்றியைக் கண்டுள்ளது.

பார்வை நூல்:

பாஞ். இராமலிங்கம் (2014), பள்ளி உளவியல், தமிழ்ப் புதுவை, புதுச்சேரி.

இலங்கையில் சொற்பொழிவு - தற்கால நிலையும் எதிர்கொள்ளும் சவால்களும்

லலீசன். ச

*சந்திரமௌலீசன் லலீசன், இலங்கை ஆசிரிய கல்வியாளர் சேவையைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளராக கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் பணியாற்றுகின்றார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இருந்து தமிழிலும் **கல்வியியலிலும்** முதுமாணிப் பட்டம் பெற்றவர். தமிழ் முதுமாணிப் பட்டத்திற்காக தமிழில் **பிரசங்க மரபு என்ற** ஆய்வேட்டைச் சமர்ப்பித்தவர். சைவ மற்றும் தமிழ் இலக்கியத் தளத்தில் **இலங்கையில்** இயங்கும் முன்னணிப் பேச்சாளர்களில் **இவரும் ஒருவர்.***

ஆய்வுச் சுருக்கம்

தமிழிலியக்கியப் பரப்பில் காணப்படுகின்ற சான்றாதாரங்களின் அடிப்படையில் சொற்பொழிவுச் செயன்முறை நீண்ட வரலாற்றைக் கொண்டது எனத்துணியலாம். வாய்வழியாக மேற்கொள்ளப்பட்ட கலையாகையால் இதனை வரலாற்று வரன்முறையாக ஆவணப்படுத்தி நோக்கும் தன்மை அரிதாகவே காணப்படுகின்றது. பிரசங்கம், சொற்பொழிவு, பேச்சு, உரை முதலிய பல சொற்களால் அழைக்கப்படும் இச்செயன்முறை இங்கு ஒருமுக நோக்கிலேயே பார்க்கப்படுகின்றது. ஆயினும் இச்சொற்பயன்பாடுகளில் சிறிய சிறிய வேறுபாடுகள் உள்ளன. மேனாட்டார் வருகையுடன் சமயப் பரப்புகை நோக்கத்திற்காக 'பிரசங்கம்' என்ற வடசொல்லைக் கலைச்சொல்லாகப் பயன்படுத்தும் நிலை ஏற்பட்டது. மதப்பிரசாரத் தளத்தில் வழிபாட்டுத் தலங்களை மையப்படுத்தியே இக்கலை முன்னெடுக்கப்பட்டது. பல்வேறு அறிஞர்களின் பங்களிப்புடன் வளர்த்தெடுக்கப்பட்ட இக்கலையின் தற்கால நிலைமை தொடர்பாக கருத்திடுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும். இலங்கையில் இருபதாம் நூற்றாண்டிற்குப் பின்னர் தொடக்கம் தற்காலம் வரை நடைபெறுகின்ற சொற்பொழிவு குறித்த பார்வையாகவே இக்கட்டுரை அமைந்துள்ளது. சமயத்தளத்தில் ஆரம்பிக்கப்பட்ட பிரசங்கக் கலை அரசயில் தளத்தின் முக்கிய ஆயுதமாக தன்னை தகவமைத்து இன்று தொழில்சார் பேச்சாளர்களை உருவாக்கும் அளவிற்கு வளர்ச்சிபெற்றுள்ளது எனக் குறிப்பிடமுடியும். இருப்பினும் இத்துறைக்கான மக்கள் ஆதரவு அருகிவருகின்றதோ என்ற கவலையும் மறுபுறத்தில் காணப்படுகின்றது. சொற்பொழிவுத் தளத்தில் இருந்து புத்துருவாக்கம் பெற்ற விவாதம், பட்டிமண்டபம், வழக்காடுமன்றம், சுழலும் சொற்போர் முதலிய வடிவங்கள் மக்களிடையே வரவேற்பைப் பெற்றுள்ளமையையும் இன்று அவதானிக்க முடிகின்றது. இவ்வாய்வுக்குரிய தரவுகள் நூல்கள் மற்றும் பருவ இதழ்களில் வெளியான கட்டுரைகளில் இருந்தும் நேர்காணல்கள் வாயிலாகவும் கட்டுரையாளரின் சுயதரிசனத்தின் அடிப்படையிலும் பெறப்பட்டனவாகும்.

திறவுச் சொற்கள்: இலங்கையில் சொற்பொழிவு, தற்கால நிலை, அருகிவரும் கலை, சவால்கள்

அறிமுகம்

பிரசங்கம் என்ற வடசொல் இன்று சமயத்தளத்தில் பயன்படுத்தப்படும் கலைச் சொல்லாகவே காணப்படுகின்றது. பேச்சு, உரை, சொற்பொழிவு என்ற பெயர்களால் அழைக்கப்படுகின்ற ஆற்றுகையைச் சமயத் தளத்தில் மேற்கொள்ளப்படுகின்ற போது பிரசங்கம் என்ற பெயரால் அழைக்கப்படுகின்ற நடைமுறை காணப்படுகின்றது. சங்க இலக்கியங்களிலும் சிலப்பதிகாரம் மற்றும் மணிமேகலை ஆகிய இரட்டைக் காப்பியங்களிலும் பிரசங்கச் செயன்முறைக்கு ஒப்பான ஓர் செயற்பாடு இடம்பெற்றிருப்பதாகக் கருத இடமுண்டு. ஆயினும் இக்கலை வாய்மொழி சார்ந்த ஆற்றுகைக் கலையாகக் காணப்படுகின்றமையால் **போதிய ஆவணப்படுத்தல்கள் வரண்முறையாக** மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

மேனாட்டார் வருகையுடன் பிரசங்கம் என்ற கலை வடிவம் சமயச் செய்திகளைப் பிரசாரம் செய்வதற்கான முக்கிய கலை வடிவமாக அடையாளப்படுத்தப்பட்டது. கிறிஸ்தவ, இஸ்லாமிய சமயத் தளங்களில் வழிபாட்டு நிகழ்வுகளில் ஓரங்கமாகப் பிரசங்கச் செயன்முறையும் உள்வாங்கப்பட்டது.

பத்தொன்பதாம் நூற்றாண்டிலும் இருபதாம் நூற்றாண்டிலும் சிறப்புற்றிருந்து பிரசங்கச் செயன்முறை பல்வேறு காரணிகளின் தாக்கங்களால் இன்று அருகிவரும் கலைகளுள் ஒன்றாக அடையாளப்படுத்தப்படும் நிலைமைக்குச் சென்றுள்ளது. தமிழில் பிரசங்க செயற்பாட்டைப் பொறுத்த வரையில் இந்து சமயக் கோவில் தளத்தில் புராணபடனத்தின் செல்வாக்கிற்கு மாற்றீடாகவே பிரசங்கச் செயன்முறை செல்வாக்குப் பெற்றது. 1950களில் அரசியல் தளத்தில் சில சொற்பொழிவாளர்கள் புகழ்பெற்றிருந்தனர். சமகாலச் சூழலில் சொற்பொழிவுச் செயன்முறைக்கான மக்கள் வரவேற்பு அருகிவருகின்றதென்ற கவலை பலரிடமும் காணப்படுகின்றது. இக்கட்டுரை இலங்கையை மையப்படுத்திய சொற்பொழிவு குறித்த நடைமுறை நிலைமைகள் பற்றிய பார்வையாகவே அமைந்துள்ளது.

சொற்பொழிவு : தற்கால நிலை

இலங்கையில் தமிழ்ச்சொற்பொழிவுத் துறையை ஆரம்பித்த முன்னோடியாக ஆறுமுகநாவலரே கொள்ளப்படுகின்றார். கிறிஸ்தவ மிசனிறிக் கல்வி முறையின் செல்வாக்குக்கு உட்பட்டிருந்த அவர் சைவசமயத்தைக் காப்பதற்காக சொற்பொழிவுச் செயன்முறையைக் கையில் எடுத்தார். அவரது முதலாவது பிரசங்கம் 31.12.1847 அன்று யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணைச் சிவன் கோவிலில் நடைபெற்றது. அவரது இறுதிப்பிரசங்கம் அவர் இறப்பதற்கு (1879) மூன்று மாதங்களுக்கு முன்னர் வைகாசி மூல நட்சத்திர நாளில் திருஞானசம்பந்தர் குருபூசையின் போது வண்ணை சைவப்பிரகாச வித்தியாசாலையில் இடம்பெற்றது. இதன்போது அவர் வந்திருந்த சனங்களை விளித்து " நான் கைமாறு பெறுதலைச் சிறுதுமெண்ணாது, நம் சமயத்தவர்களோடும் புறச்சமயத்தவர்களோடும் பெரும் பகையெடுத்து முப்பத்திரெண்டு வருஷ காலமாக உங்களுக்குச் சைவசமயத்து உண்மைகளைப் போதித்து வந்தேன். எனக்குப் பின் சைவசமயம் குன்றிப்போமென்று பாதிரிமார் சொல்லுகின்றார்கள். ஆதலால் நான் உயிரோடு இருக்கும் போதே உங்களுக்காக ஒரு சைவப்பிரசாரகரைத் தேடிக்கொள்ளுங்கள். இன்னும் என்னைப்போலப் படித்தவர்களும் சன்மார்க்கர்களுமாய் அநேகர் வருவார்கள். ஆனால் உங்களுடைய வைவைக் கேட்டுக் கேட்டுக் கைம்மாறு கருதாது சமயத்தைப் போதிக்க என்னைப்போலே ஒருவரும் வரார்" என்று குறிப்பிட்டார். இந்தத் தகவலை வே. கனகரத்தினம் உபாத்தியாயர் தனது ஆறுமுகநாவலர் சரித்திரம் நூலில் (1882) குறிப்பிட்டுள்ளார்.

ஆயினும் காலம் கையளித்த கொடையாக அவ்வப்போது சமயச் செய்திகளை மக்களிடையே சேர்க்கவல்ல பிரசங்கிகள் உருவாகிவருகின்றனர். கந்தபுராணச் செல்வாக்கு இலங்கையின் வடபுலத்தில் அதிகளவு செல்வாக்கைப் பெற்றிருந்தமையால் பண்டிதமணி கணபதிப்பிள்ளை (1899 – 1986) கந்தபுராணத்தை அடியொற்றிய சொற்பொழிவுகளை ஆற்றுவதில் வல்லவராக விளங்கினார். சைவ சித்தாந்த மரபை வலியுறுத்தவதாக ஆலயம் சார்ந்த பிரசங்கங்கள் விளங்கின. இந்த மரபை மடைமாற்றம் செய்தவராக கம்பவாரிதி இ.ஜெயராஜைக் கொள்ள முடியும். 1980களில் அகில இலங்கைக் கம்பன் கழகத்தை நிறுவி கந்தபுராண இரசனைக் கலாசாரத்தை கம்பராமாயண இரசனைக் கலாசாரம் சார்ந்ததாக வளர்த்தெடுத்தார்.

1950களில் பிரசங்கத் துறையில் பெண்களும் பிரவேசித்தனர். சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி (1925 – 2008) பெண் பிரசங்க ஆளுமைகளுள் முக்கியமானவர். வெளிநாடுகளுக்குச் சென்று தனது வெண்கலக் குரலால் சபைகளை ஈர்த்த பெருமைக்குரியவர். பிரசங்கத்தை அடிப்படையாகக் கொண்டு சமூகப் பணிகளை முன்னெடுக்கலாம் என வாழ்ந்து காட்டியவர். இதற்கு அவரது பங்களிப்புடன் வளர்ச்சி பெற்ற தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானமும் அது சார்ந்த அமைப்புக்களும் சான்றாக விளங்குகின்றன. முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் அ.அமிர்தலிங்கத்தின் துணைவியார் மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் (1933 – 2016) அரசியல்த்துறை சார்ந்த ஆளுமை மிக்க பெண்பேச்சாளராகத் திகழ்ந்தார். கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ், வித்துவான் வசந்தா வைத்தியநாதன், அமரர் மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம் புஷ்பா செல்வநாயகம் முதலியோரும் இத்துறை சார்ந்து குறிப்பிடத்தக்கவர்கள் ஆவர்.

நாவலருக்குப் பின் தமிழகம் உள்ளிட்ட நாடுகளுக்குக் கடல் கடந்து சென்று பிரசங்கம் மேற்கொள்ளும் பலர் உள்ளனர். இவர்களுள் கம்பவாரிதி இ.ஜெயராஜ், கலாநிதி ஆறு. திருமுருகன், தமிழருவி த.சிவகுமாரன் போன்றோர் முக்கியமானவர்கள். இன்னும் ச.விநாயகமூர்த்தி, இரா.செல்வவடிவேல், சிவ. மகாலிங்கம், சைவப்புலவர் செல்லத்துரை, மற்றும் கிழக்கிலங்கையைச் சேர்ந்த சிவயோகச் செல்வர் சாம்பசிவம், காந்தன் குருக்கள் போன்ற வயதில் மூத்த பேச்சாளர்களும் ச.லலீசன், கு.பாலஷண்முகன், கந்த சத்தியதாசன், பொன் சுகந்தன் ஏ.அனுசாந்தன், கிழக்கிலங்கையைச் சேர்ந்த சிவானந்தஜோதி போன்ற இளைய தலைமுறைப் பேச்சாளர்களும் இலங்கையின் ஆன்மீகச் சொற்பொழிவுத் துறைக்குப் பங்களிப்பு நல்கி வருகின்றனர். இப்பட்டியல் இன்னும் நீண்டது. பட்டியல் இடுவது கட்டுரையின் நோக்கமன்று.

மேற்குறிப்பிட்டவர்கள் இலக்கியத்துறை சார்ந்த பேச்சாளர்களாகவும் விளங்குகின்றனர் அல்லது விளங்கியுள்ளனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. தேவன் யாழ்ப்பாணம், சிவராமலிங்கம்பிள்ளை, வித்துவான் ஆறுமுகம், க.ந. வேலன், என ஓர் ஆசிரியர் அணி இலக்கியப் பேச்சுத் துறையில் பிரகாசித்தது. இலக்கியத்துறை சார்ந்த இளம் பேச்சாளர்களுள் கலாநிதி ஸ்ரீபிரசாந்தன், வலம்புரி ந.விஜயசுந்தரம், துணைவியூர் சி.கேசவன் போன்றோரும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கவர்கள். ஆன்மீகத் தளத்தில் கிறிஸ்தவ, இஸ்லாமிய பேச்சாளர்களிலும் பெயர் குறிப்பிடத்தக்கவர்கள் உள்ளனர். இருப்பினும் அவர்கள் தமது ஆன்மீகத் தளத்தில் மாத்திரம் உரையாற்றுவோராகக் காணப்படுகின்றனர்.

அரசியல் துறை சார்ந்த பேச்சாளர்களின் பேச்சுக்களைக் கேட்பதற்காக இலங்கையின் தமிழ்ப்பிரதேசங்கள் காத்திருந்தது ஒரு காலம். அ.அமிர்தலிங்கம், ஆலாலசுந்தரம், செ.இராசதுரை என தமது பேச்சுக்களால் மக்களைக் கவர்ந்த அரசியல் பேச்சாளர்கள் இருந்தனர். மாவை. சேனாதிராசா, சிவஞானம் சிறிதரன், ரவூப் ஹக்கீம் வியாழேந்திரன் போன்றோர் இன்றைய தலைமுறையினரிடையே குறிப்பிடத்தக்கவர்கள். அரசியலில் ஈடுபட்ட விடுதலைப் புலிப் போராளிகள் சிலரும் குறிப்பிடத்தக்க பேச்சாளர்களாக விளங்கினர். அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், பெண் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழினி போன்றோர் இங்கு சுட்டிக்காட்டத்தக்கவர்கள். பிரசங்கத்தைத் தொழில்முறையாகக் கொண்டோர் தமிழகத்திலேயே காணப்பட்டனர். ஆயினும் தமது நாவன்மையால் கம்பவாரிதி இ.ஜெயராஜ் தொழில்முறைப் பேச்சாளராகத் தன்னை அடையாளப்படுத்தியுள்ளார். ஏனையோர் வேறு தொழில்துறைகளில் இருந்தாலும் பகுதி நேரமாகப் பிரசங்கத்தை ஆற்றுகை செய்து வருகின்றனர்.

சொற்பொழிவு : சவால்கள்

நாவலர் பிரசங்கத்திற்குப்பின் கோவில் பிரசங்க மரபில் மிகப்பெரும் செல்வாக்கு நிலை 1990களிலேயே ஏற்பட்டது. அகில இலங்கைக் கம்பன் கழகச் செயற்பாடுகள் இதில் பெரும்பங்களிப்பை நல்கின. இலங்கையின் வடக்கு கிழக்கில் ஏற்பட்ட போர்ச்சூழல், திரைச் செல்வாக்குகளின் தணிக்கை முதலிய காரணங்களால் மக்கள் இதிகாச இலக்கியங்களின்பால் அதிகளவில் ஈர்க்கப்பட்டனர். கம்பராமாணம், மகாபாரதம், பெரிய புராணம், விநாயக புராணம் முதலிய நூல்கள் பிரசங்கிக்கப்பட்டன. ஆயினும் இவை பெரும்பாலும் இரசனைப் பாரம்பரியத்தில் அமைந்த கதைகூறல்களாகவே இடம்பெற்றன.

1983இற்கு முன்னர் இந்தியாவில் இருந்து இலங்கைக்கு வருகை தந்த பேச்சாளர்கள் இலங்கையின் ஆன்மீக மற்றும் இலக்கியப் பேச்சுத்துறைக்கு பங்களிப்புக்களை நல்கினர். பேராசிரியர் இராதாகிருஷ்ணன், அ.ச.ஞானசம்பந்தன், சா.கணேசன், கி.வா.ஜகந்நாதன், திருமுருக கிருபானந்தவாரியார் (கதாப்பிரசங்கம்) முதலியோர் இந்த வகையில் பல தடவைகள் இலங்கைக்கு வருகை தந்த பேச்சாளர்களாக அடையாளப்படுத்தக் கூடியவர்கள் ஆவர். 1995 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற பாரிய இடப்பெயர்வு சொற்பொழிவுப் பாரம்பரியத்திலும் பாரிய மாற்றத்தை ஏற்படுத்திற்று. கோவிலில் இன்னாருடைய பிரசங்கம் இடம்பெறுகின்றது என்ற தனித்துவத்திற்காக மக்கள் ஒன்றுகூடும் நிலைமை அருகிப்போனது.

சமயச் செய்திகளை மக்களிடையே பிரசாரம் செய்ய வேண்டும் என்ற ஆர்வத்துடன் கோவில் திருவிழாக்களின் நிறைவில் சொற்பொழிவுகள் இடம்பெறத் தொடங்கின. ஆயினும் திரைத்துறைச் செல்வாக்குகள் வேறு பொழுதுபோக்குக் காரணிகளின் தலையீடுகள் போன்றவற்றால் இத்தகைய பிரசங்கங்களுக்கான மக்கள் செல்வாக்கு குறைவாகவே காணப்படுகின்றது. மக்கள் இரசனையில் ஏற்பட்ட மாற்றம் இதற்குரிய பிரதான காரணம் ஆகும். அத்துடன் பொருளுக்கு முதன்மை கொடுத்து பேச்சாற்றலுடன் ஒரு விடயத்தை அணுகக் கூடிய பாங்கிற்கு ஏற்பட்டிருக்ககூடிய வறுமையும் இத்துறை சார்ந்த செல்வாக்கு வீழ்ச்சிக்குரிய காரணம் எனலாம். மக்கள் ஆதரவில் ஏற்படுகின்ற வீழ்ச்சி நிலையால் தரமான கல்வியாளர்கள் இத்துறையை நாடும் போக்கும் நலிவுற்றுவருகின்றது. சில ஆலயங்களில் பஞ்சபுராணம் ஓதுவதற்கு ஒப்பாக கேட்பதற்கு ஆள்கள் இன்றிய நிலையிலும் பிரசங்கம் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற நம்பிக்கை நிலைமை காணப்படுகின்றது.

சொற்பொழிவின் மாற்று வடிவங்கள்

சொற்பொழிவு இன்று பல மாற்று வடிவங்களைப் பெற்று விளங்குகின்றது. கதாப்பிரசங்கம், சுழலும் சொற்போர், பட்டிமண்டபம், சொல்லாடகளம், விவாத அரங்கம், வழக்காடு மன்றம் எனப் பலர்கூடி ஒரு விடயம் பற்றிய தர்க்க வாதங்களை முன்வைத்துப் பிரசங்கிக்கும் நிலை காணப்படுகின்றது. இவ்வடிவங்கள் ஓரளவிற்கு மக்களிடையே இன்றும் செல்வாக்குப் பெற்றுள்ளவையாக விளங்குகின்றன. இருப்பினும் இந்த அரங்கங்களில் பெரும்பாலானவை நகைச்சுவைக்கு முதன்மை வழங்கும் ஆற்றுகைகளாக அமைவதையும் சுட்டிக்காட்ட வேண்டும்.

தீர்வுகளும் விதப்புரைகளும்

சொற்பொழிவுகளை மக்கள் மத்தியில் முன்னெடுப்பதற்கு இன்று இலத்திரனியல் சார்ந்த கருவிகள்

பெரிதும் துணைசெய்கின்றன. அந்த வகையில் இலங்கையில் இந்து ஆன்மீகத் தொலைக்காட்சியாக விளங்கும் ஓம் தொலைக்காட்சி தினந்தோறும் பலமுறை ஆன்மீக உரைகளை ஒளிபரப்பி வருகின்றது. இதே வேளை இணைத்தில் இலங்கையின் பிரபல சொற்பொழிவாளர்களது உரைகளின் காணொலி வடிவங்களை யூரியூப் போன்ற தளங்களின் ஊடாகப் பார்வையிடக் கூடியதாக இருக்கின்றது.

சொற்பொழிவின் போது இடையிடையிடையே காணொலி வடிவங்களைக் காட்சிப் படுத்தி ஆற்றுகை செய்வதும் கவர்ச்சிமிக்கதாகும். பல்லூடக எறியியின் துணையுடன் இத்தகைய முயற்சியை மேற்கொண்டு வருவோருள் ஒருவராக மறவன்புலவு சச்சிதானந்தனை அடையாளப்படுத்தலாம். சொற்பொழிவின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் வகையில் ஆன்மீகப் பயிற்சி மையங்களை நிறுவி ஆன்மீகப் பிரசாரகர்களை உருவாக்குவது அவசியமானதாகும். பிரசங்க நெறிமுறைகளை அவர்களுக்குப் பயிற்றுவிப்பதன் ஊடாக உயிர்ப்புள்ள சொற்பொழிவு ஆற்றுகைகள் இடம்பெறும் என எதிர்பார்க்கலாம். இந்து கலாசார அலுவல்கள் திணைக்களம் யாழ்ப்பாணத்திலும் மட்டக்களப்பிலும் இத்தகைய மையங்களை நிறுவிச் செயற்படுகின்றமையும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கது. கிறிஸ்த செமினறிகளில் பிரசங்கம் ஒரு பாடமாகப் போதிக்கப்படுவதும் இங்கு குறிப்பிடத்தக்கது. இது இலங்கையில் செமினறிகள் ஆரம்பிக்கப்பட்ட காலந்தொட்டு இன்று வரை தொடர்கின்றது. இஸ்லாமிய சமயத்தளத்திலும் பிரசங்கச் செயற்பாட்டிற்கு முக்கியத்துவம் கொடுக்கும் நிலை காணப்படுகின்றது. குறிப்பாக நோன்பு காலத்தில் பிரசங்கங்கள் மிகவும் முக்கியத்துவத்தைப் பெறுகின்றன.

அரசியல் தளத்தில் தமது கருத்துக்களைப் பிரசாரப்படுத்த சொற்பொழிவு வடிவத்தையே இன்றும் பெரும்பாலான அரசியல் வாதிகள் நம்பியுள்ளனர். வெளியே பிரசாரம் செய்வதற்கு வாய்ப்பில்லாத அரசியலாளர்களுக்குக்கூட தொலைக்காட்சி இணையம் போன்ற ஊடகங்களே சொற்பொழிவுக்கான களங்களை அமைத்துக் கொடுக்கின்றன. மக்களின் இரசனைப் பண்பு மேம்படக்கூடிய வகையில் ஆளுமை பெற்ற பேச்சாளர்களால் சொற்பொழிவுச் செயற்பாடுகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட வேண்டும். நாளடைவில் இதன்பால் ஈர்க்கப்படும் மக்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு இது வாய்ப்பாக அமையும். சொற்பொழிவுச் செயன்முறையை மேம்படுத்தக் கூடிய உணர்வு நிலை ஆலயக் குருமாரிடம் ஏற்படுத்தப்பட வேண்டும். சமய விளக்கங்களை பிரசங்கிக்கக் கூடிய தகைமை பெற்றவர்களாக அவர்கள் தம்மை வளர்த்துக் கொள்ள வேண்டும். அத்துடன் பிரசங்கச் செயன்முறையின் உயிர்ப்புக்கு அதன் பெறுமதியை உணர்ந்து ஆலய நிர்வாகத் தரப்பினர் போதிய ஆதரவை நல்க வேண்டும்.

இலங்கையில் நடைபெறும் தமிழ்த்தினப் போட்டிகளில் பேச்சுப் போட்டி முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. இதில் பிரகாசிக்கும் மாணவர்கள் தொடர்ந்து இத்துறை சார்ந்து பயணிக்கக்கூடிய வகையில் தம்மை ஈடுபடுத்த வேண்டும். இதனை விட இளைய பேச்சாளர்களின் திறனுக்கு அங்கீகாரம் வழங்கும் நிலையில் சந்தர்ப்பங்கள் வழங்குதல் முதலிய செயற்பாடுகளை மேற்கொள்ள முடியும்.

நிறைவுரை

சொற்பொழிவு, நீண்ட வரலாற்றைக் கொண்ட ஆற்றுகைக் கலையாகும். காலத்திற்குக் காலம் அதில் எழுச்சிகளும் தளர்வுகளும் ஏற்பட வாய்ப்புண்டாயினும் காலத்திற்கேற்றாற் போல தமிழ் சொற்பொழிவுச் செயற்பாடு நிலைத்திருக்கும் என நம்பலாம்.

உசாத்துணைகள்

சிவகாமி. ச., (2005), சொற்பொழிவிலக்கியம், உலகத்தமிழிலக்கிய வரலாறு, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை

சிவலிங்கராஜா. எஸ்., (2001) ஈழத்துத் தமிழ் இலக்கியச் செல்நெறி, தனலக்குமி புத்தகசாலை, திருநெல்வேலி.

சிவலிங்கராஜா. எஸ், (2015) யாழ்ப்பாணத்தில் சமயச் சொற்பொழிவுப் பாரம்பரியம், கலைக்கேசரி, (Vol 06 Issue 03) கொழும்பு.

ஞானசம்பந்தன். கு., (2005) பேசும் கலை, நியு செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.

ஞானசம்பந்தன் அ. ச., (2001) நான் கண்ட பெரியவர்கள், கங்கை புத்தக நிலையம் சென்னை.

லலீசன். ச., (2009) தமிழில் பிரசங்க மரபு : ஓர் அறிமுக ஆய்வு, தமிழில் முதுகலைமாணிக் கற்கையின் பகுதித்தேவையைப் பூர்த்தி செய்வதற்காக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட பிரசுரிக்கப்படாத ஆய்வுக் கட்டுரை.

ஜெபநேசன். எஸ், (2006) தமிழ்ச்சமுதாயத்தில் பிரசங்க மரபின் தோற்றமும் வளர்ச்சியும் சில குறிப்புக்கள், யாழ்ப்பாணம் மொழியும் வாழ்வும் ஓர் அறிமுகக் கையேடு (தொகுப்பு: மனோன்மணி சண்முகதாஸ், மயில்வாகனம் இரகுநாதன்) கோகுலம் வெளியீடு, திருநெல்வேலி.

புதுச்சேரியும் புலப்பெயர்வும்

முனைவர் வீ. செல்வப்பெருமாள்

துணைப் பேராசிரியர், முதுகலைத் தமிழ்த்துறை

அறிஞர் அண்ணா அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, காரைக்கால்

மின்னஞ்சல் : selvaperumalrv@gmail.com

முகவுரை

தமிழர்கள் இன்று வரைக்கும் பல்வேறு காரணங்களுக்காகப் புலம் பெயர்ந்துகொண்டே இருக்கின்றனர். கி.பி. 14 ஆம் நூற்றாண்டில் முகமதியரின் ஆளுகைக்கு உட்பட்ட தமிழகம் தொடர்ந்து நாயக்கர், மராட்டியர், டச்சுக்காரர், பிரெஞ்சுக்காரர், ஆங்கிலேயர் எனப் பிற மொழியினரின் ஆட்சியின் பொருளியல் சீரழிவுக்கு உள்ளானது. வைதீக இந்து சமயம் அதிகாரத்துடன் சமரசம் செய்துகொண்டு தனது மேலாண்மையைத் தக்கவைத்துக் கொண்டது. சாதிய ஏற்றத்தாழ்வு, தீண்டாமை, பால் சமத்துவமின்மை, உழவுத்தொழில் நசிவு என பல்வேறு காரணங்களால் விளிம்பு நிலையினர் வாழ வழியற்றுத் தவித்தனர். வறுமையினால் அடித்தட்டு மக்கள் கோயில்களுக்கும், மடங்களுக்கும் தங்களை அடிமைகளாக விற்றுக் கொண்டனர். இத்தகைய சூழலில் பொருளாதாரச் சுரண்டலையும், அரசியல் அதிகாரத்தையும் ஒருங்கே அனுபவிக்க விரும்பும் ஐரோப்பிய நாடுகள் மனித வளம் மலிவாகக் கிடைக்கும் நாடுகளிலிருந்து மனிதர்களைப் பிற குடியேற்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்தன.

புலப்பெயர்வு

18 ஆம் நூற்றாண்டுகளில் அயலவர் வருகை, அவர்களுடைய நிலைத்த ஆட்சி ஆகிவற்றால் ஏற்பட்ட புலப்பெயர்வுகள் பல்வேறு காரணிகளைக் கொண்டு நடைபெற்றன. "வறுமை, சாதிக்கொடுமை, பஞ்சம், கட்டாயத்தண்டங்கள், கடன்சுமை, வரிவிதிப்புகள் முதலான பல்வேறு காரணங்களால், கரும்புத் தோட்டவேலை, இரப்பர் தோட்ட வேலை, தேயிலைத் தோட்டவேலை, காப்பித் தோட்டவேலை, சுரங்கப்பணி, சாலை அமைக்கும் பணி மற்றும் பிறநாட்டு இராணுவத்தில் பணி எனத் தமிழர்கள் உலகின் பல்வேறு பகுதிகளுக்கும் புலம்பெயரலாயினர். அப்படிச் சென்றவர்கள், இலங்கை, பர்மா, இந்தோனேசியா, தாய்லாந்து, பிரிட்டீசுகயானா, தெற்கு ஆப்பிரிக்கா, மொரீசியசு, மேற்கிந்தியத்தீவுகள், ரீயூனியன் தீவுகள், சிங்கப்பூர், மலேசியா, சைகோன், பிரான்சு முதலான உலகின் பல்வேறு நாடுகளுக்கும் புலம்பெயர்ந்துள்ளனர். 1833 முதல் 1890 வரையிலான இடைப்பட்டக் காலத்தில் மட்டும் ஏறக்குறைய பதினாறு இலட்சத்திற்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் புலம் பெயர்ந்ததாகக் குறிப்புகள் கிடைக்கின்றன. (வே.தி.செல்வம்., தமிழக வரலாறும் பண்பாடும்., பக்.413-414)

கி.பி. 18 ஆம் நூற்றாண்டில் தமிழகத்தில் வாழ வழியற்றோர், தலித்துகள், உடைமை ஏதும் அற்ற உடல் உழைப்பாளர்கள் புலம் பெயர்ந்தால் வளமான எதிர்காலம் உண்டு என்ற நம்பிக்கையில் கப்பல் ஏறினர். சொந்த மண்ணில் சாதிய ரீதியில் தீண்டத்தகாதவராகி துன்புறுவதைக்காட்டிலும் அந்நிய நாட்டில் தன்மானத்துடன் வாழலாம் எனக் கூட்டம் கூட்டமாகப் பயணமாயினர். காடுகளை அழித்தல், மலைகளை உடைத்தல், சாலைகள் போடுதல், வேளாண்மை செய்தல், கட்டடங்கள் கட்டுதல் முதலான வேலைகளில் கடுமையாக உழைத்தனர். இவ்வாறு கொத்தடிமைகளாக போன தமிழர்கள் பெரும்பாலானோர் மீண்டும் தமிழகத்திற்குத் திரும்பவே இல்லை. அவர்களுடைய வாரிசுகள் தமிழ் பேச அறியாமல் தமிழ் அடையாளங்களுடன் இன்றும் வாழ்ந்து வருகின்றனர்.

"18 ஆம் நூற்றாண்டில் தஞ்சை மராட்டியர்கள் மகாராட்டிர மராட்டியர்களோடு சேர்ந்து தமிழகத்தின் பல பகுதிகளையும் கொள்ளையிட்டும், தீ வைத்துக் கொளுத்தியும் அட்டகாசம் புரிந்தனர். மக்கள் சொல்லொண்ணாத் துயரங்களை அடைந்தனர். அதனால் காஞ்சிபுரம், வந்தவாசி, திருவண்ணாமலை ஆகிய பகுதிகளில் இருந்த மக்களில் பலர் குடும்பம் குடும்பமாகப் புலம்பெயர்ந்து காவிரிக்கரையில் உள்ள திருவாரூர், மயிலாடுதுறை, கும்பகோணம் முதலானப் பகுதிகளில் குடியேறினர். சங்கீத மும்மூர்த்திகளுள் ஒருவரான முத்துசுவாமி தீட்சிதர் இவ்வாறு புலம்பெயர்ந்து சென்ற குடும்பத்தைச் சார்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது." (சுபாசு., தேர்ந்தெடுக்கப்பட்ட ஆனந்தரங்கப்பிள்ளை நாட்குறிப்பு, ப. 13)

புதுச்சேரி

புதுவை ஆரம்பத்தில் சிற்றூர். மக்கள்தொகை வெளியிலிருந்து வந்தவர்கள் மூலம்தான் பெருகியது. அவர்களில் பெரும்பாலோர் சுற்றுப்புற பகுதியிலிருந்து வந்தவர்கள். மற்ற பிரெஞ்சுத் தளங்களிலிருந்தும் புதுவைக்கு வந்தனர். அதில் பெரும்பாலோர் காரைக்காலைச் சேர்ந்தவர்களாவர். புதுவை குடிபுகும் நிலமாகத் திகழ்ந்தது. அதே சமயத்தில் தொடர்ந்து இங்கிருந்து மக்கள் வேறு இடங்களுக்கும் குடியேறினார்கள்.

புதுச்சேரி நகர மக்கள் தொகை பிரெஞ்சுக்காரர்கள் குடியேற்றத்தின்போது குறைவாய் இருந்தது. ஆனந்தரங்கப்பிள்ளையின் கணிப்புப்படி நகர மக்கள் தொகை 1760 க்கு முன் 3000 மட்டுமே. திருமதி லதெனார்பியின் கணிப்புப்படி 1708 இல் 31000. நகரம் ஒவ்வொரு அந்நிய முற்றுகையின்போதும் காலியாவதுண்டு. இவ்வாறு 1816 இல் பிரெஞ்சுக்காரர்கள் மீண்டும் புதுச்சேரியைப் பெற்றுக்கொள்ளும் போது 2000 பேர் மட்டுமே இருந்தனர். (தாவிதன்னுசாமி., புதுவை மாநிலம் அன்றும் இன்றும் பக் 78-84)

அடிமைப் பெயர்வுகள்

பிரெஞ்சுக்காரர்கள் வருவதற்கு முன்னரே இங்கிருந்து அடிமைகளாகத் தமிழர்கள் அசேம் (சுமித்திரா) என்ற இடத்திற்கு அனுப்பப்பட்டு வந்ததாகத் தெரிய வருகிறது. இந்திய மன்னர்கள் அதற்குத் தடை விதித்திருந்தார்கள். அவர்கள் அன்னியர்களுக்குக் கொடுத்து வந்துள்ள அனுமதிப் பத்திரங்களில் தவறாமல் அத்தடையைக் குறிப்பிட்டு வந்தனர். ஆனால், சமயம் வாய்க்கும் போதெல்லாம் அதை மீறி அடிமை வணிகம் நடந்து வந்தது. ஆங்கிலேயர்களும், டேனிஷ்காரர்களும் பெரிய அளவில் அடிமைகள் வணிகம் நடத்தி அதன் மூலம் அதிக ஆதாயம் அடைந்தனர் என்பதை பிரான்சா மார்த்தேன் விவரிக்கிறார். 1687 இல் அவர் கணிப்புப்படி அசேமுக்கு (இரு ஆண்டுகளில்) அனுப்பப்பட்டவர்களின் எண்ணிக்கை 15 லிருந்து 20 ஆயிரமாகும்.

"பிரெஞ்சுக்காரர்கள் ஆப்பிரிக்காவின் உச்சியில் பிரெஞ்சுக் கயானா என்ற காலனியையும், மொரீசியஸ், ரீயூனியன் ஆகிய தீவுகளில் காலனிகளை ஏற்படுத்திக்கொண்டு இருந்தார்கள். அந்த நாடுகளில் வேலைக்குத் தொழிலாளர்கள் கிடைக்கவில்லை. எனவே புதுச்சேரி பகுதியில் இருந்து அடிமைகளாகச் சிலரைப் பிடித்து, இருட்டு வீட்டில் அடைத்து, மொட்டையடித்து, கருப்புத் துணி கொண்டு முகத்தைக் கட்டி, கை கால்களில் விலங்கிட்டு இரவோடு இரவாகக் கப்பலில் ஏற்றி அனுப்பிவைத்துள்ளனர். இதனை, 1743 – சூன், 15, ஆனி, 25,செவ்வாய்க்கிழமை என்னும் நாளிட்ட திரு ஆனந்தரங்கப்பிள்ளை அவரது, " முசே.சூது என்கிறவன் பரமானந்தன் கையிலே பணங்காசு கொடுத்து சிறையன்(Slaves) கொண்டுவரச் சொன்னபடியினாலே அவர்கள்போய் சிறிதுபேரை கை விலைக்குக் கொண்ட வந்ததும் அத்துடனே கூட சிறிதுபேரை வழியிலே மோசம் பண்ணிக் கொண்டுவந்தார்கள்." நாட்குறிப்பிலிருந்து அறிந்துகொள்ள முடிகிறது.

அவரது நாட்குறிப்பிலிருந்து மேலும் பல செய்திகளையும் அறிந்துகொள்ள முடிகிறது. 'சுண்ணாம்பிலே மருந்து கலந்து கொடுத்தல், குதிரையைக் காண்பிப்பதாகக் கூறிச் சிறைப்படுத்துதல், மூட்டைத் தூக்கி வா கூலி தருகிறோன் என ஏமாற்றிப் பிடித்தல், விறகுக் கட்டுக்காரர்களையும், புல்லுக்கட்டுக்காரர்களையும் விலைபேசுவதுபோல் மோசம் செய்து பிடித்தல் எனப் பல அப்பாவிகளைப் பிடித்து முற்கூறியது போன்று துன்புறுத்தி கப்பலேற்றி அனுப்பியுள்ளமை எல்லாம் பதிவாகியுள்ளன. புதுச்சேரியில் நடந்தது போன்றே காரைக்காலுக்கு அருகில் உள்ள தலங்கம்பாடியிலும், அதனருகில் உள்ள குப்பக்காடுகளிலும் இக்கொடுமைகள் தொடர்ந்து அரங்கேற்றப்பட்டனவாகக் குறித்துச் செல்வார்.' (சுபாசு., தேர்ந்தெடுக்கப்பட்ட ஆனந்தரங்கப்பிள்ளை நாட்குறிப்பு, பக். 55-56)

பிரெஞ்சுப் புரட்சியின்போது, புதுச்சேரி காலனி சட்டசபை அடிமைத் தனத்தை ரத்து செய்தது. புரட்சி ஓய்ந்தாலும் அடிமை வணிகம் மீண்டும் தொடங்கியது. முடிவாக 1848 இல் ஏற்பட்ட இரண்டாம் புரட்சிக்குப் பின் விக்தோர் ஷெல்ஷரின் (Victor Shoelcher) முயற்சியால் நிரந்தரமாக நீக்கப்பட்டது. அவரது முகச் சிலையைப் புதுவை கடலோரத்தில் தெற்கு மூலையில் உள்ள பூங்காவில் இன்றும் காணலாம்.

ஒப்பந்தப் பெயர்வுகள்

அடிமை வணிகத்திற்கு முற்றுப்புள்ளி வைத்தபின் மற்றொரு ஏற்றுமதி ஆரம்பித்தது. அது கூலிகளை இந்துமாக்கடல் தீவுகளுக்குப் புதுச்சேரியிலிருந்தும், காரைக்காலிலிருந்தும் அனுப்பத் தொடங்கியது ஆகும். அடிமை ஒழிப்பிற்குப் பின், கரும்பு வயல்களுக்குக் கூலியாட்கள் அங்குத் தேவைப்பட்டது. ஏராளமாகக் கிடைக்கும் மற்ற நாடுகளின் ஆட்களைவிட இந்தியக் கூலியாட்களையே விரும்பிப் பெற்றனர். அதனால் கூலிகளின் புறப்பாடு 1885 வரை அன்தீய்யுக்கும் (Antilles) குய்யானுக்கும் (Guyane) மும்முரமாக நீடித்தது. அவர்களை அழைத்த நாடுகளின் தேவைகள் நிறைவு பெற்றதும் அது வீழ்ச்சியடைந்தது.

அனுப்பப்பட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கை சுமார் 1,50,000. அதில் ரெயுனியன் (Le Reunion) பெரும் பங்கைப் பெற்றது. அனுப்பப் பட்டவர்களில் பெரும்பாலோர் ஆண்கள். சில பெண்களும், குழந்தைகளும் இருந்தனர். பயணமுறை வேதனையானது. வேலை விதிகள் அதனினும் கொடுமை. அடிமைகள் போலவே இவர்களும் நடத்தப்பட்டனர். ஒரே ஒரு வேறுபாடு சட்டப்பூர்வமாக அடிமைகள் போல் இவர்கள் பொருட்களாகப் பாவிக்கப்படவில்லை. முதலாளிகளின் போக்கு மாற வெகுகாலம் பிடித்தது. குடியேற்ற நாடுகளுக்கு அனுப்பட்ட கூலிகள் யாவர்? 18 செப்டம்பர் 1912 தேதியிட்ட ஆணையின்படி, ஆட்களைத் திரட்டுவோர் அரசாங்க உத்தரவு பெற்று இருக்கவேண்டும். ஆட்களைக் கப்பலில் ஏற்றுவதற்கு முன் அவர்கள் செல்லும் நாட்டின் அனுமதி உத்தரவைக் காட்ட வேண்டும். அதில் ஆட்கள் எண்ணிக்கையும், அவர்கள் வேலை விதிகளும் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும். நாட்டைவிட்டு அறியாத திசையை நோக்கிச் செல்ல விரும்பியவர்கள் நம் ஊரில் போதியவர்கள் இல்லை. பெரும்பாலும் அருகாமையில் உள்ள ஊர்களிலிருந்தும் கொண்டு வரப்பட்டார்கள். .(தாவிதன்னுசாமி., புதுவை மாநிலம் அன்றும் இன்றும் பக் 78-84)

தென்னாப்பிரிக்காவில் தமிழர் குடியேறுமுன் மொரீசியசிலும் அதன் அருகில் உள்ளபிரெஞ்சியர் தீவான இரெயூனியனிலும் சென்னை, புதுச்சேரி. தரங்கம்பாடி, நாகப்பட்டினம் முதலான துறைமுகங்கள் வழியாகப் பல்லாயிரக்கணக்கான தமிழர்களை ஆங்கிலேயரும், பிரெஞ்சியரும் குடியேற்றம் செய்தனர். 1918 ஆம் ஆண்டு ஏற்பட்ட உடன்படிக்கையின்படி மொரிசீயஸ் தீவைப் பிரெஞ்சியர் ஆங்கிலேயரிடம் ஒப்படைத்தனர். அக்காலத்தில் பிரெஞ்சியர் மொரீசியஸ் தீவை ஈல் தெபிரான்ஸ் (Isle De France) என்றும் இரெயூனியன் தீவைப் புர்போன் (Bourbon) என்றும் அழைத்தனர். (சு. தில்லைவனம்., தமிழகம் – புதுவை வரலாறும் பண்பாடும், ப. 303)

18 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் சில செயல்திறன் தொழிலாளிகளைத் தீவுகட்கு அழைத்துச் சென்றனர். மற்றொரு முயற்சி சுய்ப்ரேன் (Suffren) மேற்கொண்டதாகும். அவர் திட்டம், அதிக விலை கொடுத்து வாங்கும் துணியைப் பிரான்சிலேயே தயாரிப்பது; அதன் பொருட்டுச் சிறந்த நெசவாளிகள், நூல் நூற்பவர்ககளைக் கொண்ட குழுவைப் பிரான்சிற்கு அழைத்துச் சென்று அங்குத் தொழிலாளர்களுக்குப் பயிற்சி அளிப்பது. அத்திட்டத்தைச் செயல்படுத்த 1783 இல் 60 ஆட்களை 3 ஆண்டுகள் ஒப்பந்தத்தில் அழைத்துச் சென்றனர். மொழிபெயர்ப்பின் பொருட்டு லுய்பிரகாசம் என்பவரையும் சேர்த்துக் கொண்டனர். அப்போதைய லியோன் (Lyon) நகர் பத்திரிகை அந்நகர் வாயிலாக அவர்கள் சென்றதை விவரிக்கிறது. மாநிற ஆண்களும், பெண்களும் தங்க நகைகளுடன் இருப்பதைக் கண்டு பிரெஞ்சு மக்கள் ஆச்சரியப்பட்டதாகவும் கூறுகின்றது.

பாரிசிலிருந்து 25 கிலோமீட்டர் தூரத்திலுள்ள தியே (Thieux) என்ற ஊரில் ஆலை அமைக்கப்பட்டது. அங்குக் குடியேறியவர்க்கு அரிசியால் தயாரித்த உணவு அளிக்கப்பட்டது. அவ்வப்பொழுது ரொட்டியும், சாராயமும் பெற்றனர். சம்பளச் சுவடியிலிருந்து 18 ஆண்களும் 31 பெண்களும் இருந்தார்களென்று தெரிய வருகிறது. அவர்கள் பெயர்கள், சம்பளம் முதலியன எல்லாம் குறிப்பிடப்பட்டுள்ளன. (தாவிதன்னுசாமி., புதுவை மாநிலம் அன்றும் இன்றும் பக் 78-84)

"மாயே தெ. லபூர்தொனே, இரண்டாண்டுகள் கோவாவில் வைசிராயாக இருந்தார். 1735

ஆம் ஆண்டு பிரான்சுக்குத் திரும்பிச் சென்றார். அவர் மொரீசியசு, ரீயூனியனுக்கு ஆளுநராக நியமிக்கப்பட்டார். மொரீசியசு, ரீயூனியனில் வேளாண்மை, சாலைகள், துறைமுகம், தொழிற்சாலைகள் ஆகியவற்றில் வேலைசெய்யப் போதுமான தொழிலாளர்கள் இல்லை. எனவே பிரெஞ்சுப் பகுதியாகிய புதுச்சேரியிலிருந்து தொழிலாளர்களைப் புலம் பெயர்ந்துவர ஏற்பாடுகள் செய்தார். (சுபாசு., தேர்ந்தெடுக்கப்பட்ட ஆனந்தரங்கப்பிள்ளை நாட்குறிப்பு, ப. 36)

'கூலிகள் தேவை' என்ற தலைப்பில் 1790 களில் நாகப்பட்டினத்தில் வெளியிடப்பட்ட சுற்றறிக்கை, "பினாங்கு கரும்புத் தோட்டத்தில் வேலை செய்ய கை நிறையச் சம்பளம், இலவசமாகத் துணிமணிகள், கப்பல் போக்குவரத்துக்கான இலவசமான பயணச்சீட்டு, சொந்தமாகக் காய்கறிகள் பயிரிட்டுக்கொள்ள நிலம், கோழி, ஆடு, மாடு சொந்தமாக வளர்த்துக்கொள்ள வசதிகள் செய்துத்தரப்படும். உடல் நலம் பேண தமிழ் பேசும் மருத்துவர்கள் தாதியர்கள்...."(டாக்டர். மா.சண்முக. சிவா., கட்டுரையாளர்., தாயகம் கடந்த தமிழ், பக். 139-140) என்றெல்லாம் பல செய்திகள் அச்சுற்றறிக்கையில் இடம்பெற்று இருந்தனவாம். அச்சுற்றறிக்கையே தமிழர்கள் அங்கு அடைந்த இன்னலுக்குச் சான்றாக அமையக் காணலாம். புலப் பெயர்வினால் அவர்கள் எவற்றையெல்லாம் இழந்து அல்லலுற்றார்களோ அவற்றையெல்லாம் வழங்குவது போன்றதொரு பொய்மையை அவ்வறிக்கை தங்கி நிற்பதை அனைவரும் உணரமுடியும். குடியுரிமையின் பேரில் பெயர்வுகள்

ஒப்பந்தக் கூலிகளின் குடிப்பெயர்ச்சி நின்றுவிடும் நிலையில் இருந்தபோது மற்றொன்று குறைந்த அளவில் வேறுபட்ட முறையில் தொடங்கியது. அது இந்தோசீனாவை நோக்கிய குடிபெயர்ச்சி. இந்தோசீனாவைக் கைப்பற்றிய பிரான்சுக்கு அதனை நிர்வகிக்க நம்பிக்கையுள்ள துணை அலுவலர்கள் தேவைப்பட்டார்கள். பிரெஞ்சு கல்வி பயின்ற வேலையற்ற புதுவை இளைஞர்களைப் பிரான்சு அங்கே ஈர்த்தது. ஐரோப்பியர்களும் சட்டைக்காரர்களும் கத்தோலிக்க ரெனோசானகன் (renoncant) பெரும் எண்ணிக்கையில் அங்கு வேலைத் தேடிப் போயினர். அவர்களில் பெரும்பாலோர் காரைக்காலிலிருந்து குடிபெயர்ந்து புதுவையில் வந்து சேர்ந்தார்கள். அங்கு அவர்கள் நடுத்தர வேலையில் தான் அமர்த்தப்பட்டனர்.

முதல் உலகப் போரை அடுத்து இந்தக் குடிப்பெயர்ச்சி துரிதமடைந்தது. பிரான்சு படையில் கட்டாயமாகச் சேர்க்கப்பட்டவர்கள் அங்குப் பயிற்சிக்காக கொண்டு செல்லப்பட்டனர். மற்றொரு வகை வாழ்க்கையை நுகர்ந்தபின் அவர்களுக்கு நாட்டிற்குத் திரும்பி வந்துவிட விருப்பமில்லை. இந்தோசீனாவே மேன்மையான நாடாகத் தென்பட்டது. அதன் விளைவாக இந்தோசீனா புதுச்சேரி வாசிக்குத் தோழமை நாடு என்று கூறத்தக்கதாகி விட்டது. புதுவையில் ஒவ்வொரு குடும்பத்தில் இருந்தும் ஒருவராகிலும் சென்றிருந்தார்கள். அவர்கள் தங்கள் குடும்பத்தாரை வர வைத்தார்கள். படிப்பை கைவிட்டவர்களும்சரி, உயர்கல்வி முக்கியமாகச் சட்டம் பயின்றவர்களும்சரி. புதுச்சேரி மிகத் திறமையான இளைஞர்கள் புகழ்மிக்க இந்தோசீனா உயர் அதிகார நிர்வாக நுழைவு போட்டித் தேர்வில் வெற்றி பெற்று அங்குப் பெயர் எடுத்தனர். ஒரு கால கட்டத்தில் இந்தோசீனா அரசாங்க ஊழியர்களில் 100 க்கு 50 பேர் புதுவையைச் சேர்ந்தவர்களாகக் காணப்பட்டனர். அவர்கள் பிரான்சு முழு குடியுரிமை பெற்றிருந்தும், பிரெஞ்சுக்காரர்களுக்கு அளித்த சலுகைகளைப் பெறவில்லை. அவர்கள் வியட்நாமியர்களுக்கும், பிரெஞ்சுக்கார்களுக்கும் இடையிலான நிலையைப் பெற்றனர். இது குறித்து அவர்கள் பலமுறை முழு உரிமை கோரி போராடினர். எனினும் அவர்கள் வருவாய் கணிசமாகத்தான் இருந்தது. சில வியாபாரிகள் முக்கியமாக முஸ்லீம்கள் அங்குக் குடியேறியது குறிப்பிடத்தக்கது. இவ்வாறு குடியேறிய மக்கள் அங்கேயே வேர் ஊன்றினர். அங்குப் பிறந்த குழந்தைகள் பிரெஞ்சும், வியட்நாமும் மட்டும் தான் பேசி வந்தனர். தமிழறிவே இல்லாமல் போயினர். சில ஆண்கள் அந்நாட்டுப் பெண்களோடு மணம் புரியத் தயங்கவில்லை. முன் குடியேறினவர்களும் புதிதாக வந்து சேர்ந்தவர்களும் ஒரே பெரும் குழுமமாகக் காட்சி அளித்தனர். (தாவிதன்னுசாமி., புதுவை மாநிலம் அன்றும் இன்றும் பக் 78-84)

காலனியில் பிறந்த ஐரோப்பிய இளங்குமரிகளுக்கு முதல் உலகப்போர் பரிதாப நிலையை ஏற்படுத்தியது. அதிக எண்ணிக்கையில் 1914 இல் சண்டைக்குப் கிளம்பிய இளைஞர்கள் திரும்பவில்லை. பிரான்சிலோ இந்தோசீனாவிலோ தங்கி விட்டார்கள். அதனால் பெண்கள் பிரம்மச்சாரியாக இருக்கும் நிலை ஏற்பட்டது. ஏனெனில் அவர்கள் தங்கள் இனத்தை விட்டு வேற்று மக்களிடம் மணம் புரியும் மரபு அப்போது ஏற்படவில்லை. பெரும்பாலோனோர் இங்கேயே தங்கி ஆயுள் முழுவதும் தங்கள் பெற்றோர் விட்டுப்போன சொத்துக்களைக் கொண்டு வாழ்ந்தனர்.

இரண்டாம் உலகப்போர் மூண்டபோதும்கூட அவர்களில் சிலரைக் காணமுடிந்தது.

இந்தோசீனாவில் குடியேறியவர்கள் கணிசமான சம்பளத்துடன் இந்திய முறையில் வாழ்ந்து வந்தனர். அவர்கள் பணம் சேமிப்பதற்கு நல்ல வாய்ப்பாகியது. விடுமுறை கழிக்க நாடு திரும்பும்போது தங்கள் செல்வத்தை மற்றோர் பொறாமையைத் தூண்டும் வகையில் செலவிடுவது அவர்கள் பழக்கம். புதுச்சேரி புறநகர்களில் ரெட்டியார்பாளையம் துரிதமாகப் பிரெஞ்சு கல்வியை நாடியதால் அதிக எண்ணிக்கையில் அங்கிருந்து இளைஞர்கள் இந்தோசீனா சென்றனர். அவர்கள் திரும்பிவந்து எழுப்பிய ஆடம்பர கட்டிடங்கள் இன்றும் சில இடங்களில் காணலாம். சைகோன் கிழக்கிந்திய பாரிஸ் என்று அழைக்கப்பட்டது போல ரெட்டியார்பாளையம் சின்ன சைகோன் (Saigon) என்றழைக்கப் பெற்றது.இந்தோசீனாசில் இருந்து திரும்பியவர்கள் அவரவர் சாதிப்பெயரால் அழைக்கப்படாமல் சைகோனார் என்று அழைக்கப்பட்டனர்.

பிரெஞ்சு இந்தோசீனாவை நோக்கிய குடிபெயர்ச்சி 1930 ஆம் ஆண்டிலிருந்து குறையத் தொடங்கியது. இரண்டாவது உலகப்போர் மூண்டதும் முழுமையாகத் தடைப்பட்டது. புதுவை மாகாணம் தெகோல் (De Gaulle) பக்கத்திலும், இந்தோசீனா விஷி (Vichy) பக்கத்திலும் அணி கொண்டனர். போக்குவரத்துத் துண்டிக்கப்பட்டது. இவ்வாறு எதிரிகளாக ஆயினர். போர் முடிவுக்குப் பின் கூண்டில் அடைந்தவர்கள் போல் குடியேறினவர்கள் இங்கு விரைந்தனர். பின்பு அவர்கள் வேறு காலனிகளுக்குப் புறப்பட்டனர். சிலர் இங்கேயே பணி ஓய்வு பெற்றனர்.

இந்தியா சுதந்திரம் பெற்றபின் இங்குப் பிறந்த ஐரோப்பியர்களும், ஐரோப்பிய வம்சா வழியினரும் தங்கள் சலுகை காலம் முடிந்து வருவதை உணர்ந்தனர். அவர்கள் பிரான்சை நோக்கியோ அல்லது வேறு பிரெஞ்சு காலனிகளை நோக்கியோ கிளம்பினர். பிரெஞ்சு இந்தியாவிலிருந்து சிங்கப்பூர், மலேசியா, ரங்கூன் சென்றவர்கள் நிலை பிரெஞ்சு இந்தோசீனாவுக்குச் சென்றவர்களுடைய நிலைக்கு ஒத்ததாக இல்லை. பிரெஞ்சு இந்தோசீனாவில் போல் எந்தத் தமிழரும் ஐரோப்பியர்களுக்கு ஒப்பாகக் கருதப்படவில்லை. விடுமுறையில் வரும்போது அவர்கள் சைகோனார்கள் போல் ஆடம்பரம் காட்டிக் கொள்வதில்லை. அவர்கள் குறைவான அளவில் தான் ஐரோப்பிய பழக்க வழக்கத்தில் ஈடுபட்டிருந்தனர். சீனப் பண்பாட்டு வாசனை உண்டு. அவர்கள் அந்நாட்டு மக்களோடு திருமண உறவு வைத்துக் கொள்ளவில்லை. போருக்குப் பின் அவர்கள் அங்கேயேத் தங்கி விட்டனர்.

புதுச்சேரி தன் குறுகிய கால வரலாற்றில் தன் பூமியில் பல்வேறு இன மக்கள் குடியேறியதைக் கண்டது. இங்குப் பிறந்தோர் பலர் உலகம் முழுவதும் பரவி வாழ்கின்றனர். பொதுவாக நோக்குங்கால் பலவித மக்கள் வாழும் இடமாகத் தோன்றுகிறது. புதுவையில் குடிகொண்ட மக்கள் வெளியூர் போகும் நாட்டம் கொண்டவர்களாகக் காணப் படுகின்றனர்.(தாவிதன்னுசாமி., புதுவை மாநிலம் அன்றும் இன்றும் பக் 78-84)

இலக்கியப் பதிவுகளில் புலப்பெயர்வுகள்

இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் புலம் பெயர்ந்த தமிழர்களின் அவல வாழ்க்கை பொது புத்தியில் பதிவாகியுள்ளது. பிஜித் தீவுக் கரும்புத் தோட்டத்தில் தமிழர் படும் துயரம் பற்றிய பாரதியாரின் கவிதை வரிகளும், இலங்கைக்குத் தேயிலை தோட்ட வேலைக்குச் சென்றவர்களின் அவல வாழ்க்கையைத் துன்பக்கேணி கதையில் பதிவாக்கியுள்ள புதுமைப்பித்தனின் படைப்பும் தற்செயலானவை அல்ல. அன்றைய தமிழகத்தில் நிலவிய சாதிய கொடுமையும், வறுமையும்தான் எழுத்தறிவற்றத் தமிழர்களைப் பூர்வீக கிராமங்களைவிட்டுக் கிளம்பச் செய்ததில் முதன்மை காரணங்களாக விளங்கின. புலம் பெயருமிடம் நிச்சயம் தமிழகத்தைவிட மோசமாக இருக்காது. புலம் பெயர்ந்த இடத்தில் எந்த வேலை செய்தாவது பிழைத்துக் கொள்ளலாம் என்ற கனவுடன் சென்ற தமிழர்கள் அங்கேயும் பெரும் துன்பத்திற்கு ஆளாயினர்.

புதுச்சேரி வாழ் தமிழ் பிரெஞ்சு குடிமக்கள் வாழ்க்கை மாத்தாஹரி என்னும் நாகரத்தினம் கிருஷ்ணாவின் நாவலில் தொடக்கம் முதலே காட்டப்படுகிறது. மாத்தாஹரி, பவானி, ஹரினி என்று மூன்று பெண்களின் வாழ்வியலைப் பின்னணியாகக் கொண்டது அந்நாவல். அந்நாவல் கதைப் போக்கில் வரும் பத்மா பிறந்தநாள் விழாவில் புலம் பெயர்ந்த புதுச்சேரி வாழ் தமிழ் மக்களின் வாழ்வியலைப் படம்பிடிக்கும் திறம் குறிப்பிடத்தக்கது. 'பிரெஞ்சு இராணுவத்தில் துப்பாக்கிப் பிடித்த நேரத்தைக் காட்டிலும் வெள;ளைத்தோல் கேப்டனுக்கு பிரியாணி செய்து போட்ட நேரங்களும், கை, கால் பிடித்த நேரங்களும் அதிகம். பதினைந்து ஆண்டுகள் தமக்குத்

தெரிந்த **இரண்டொரு பிரெஞ்சு** வார்த்தைகளோடு பிரான்சில் காலம் தள்ளிவிட்டுப் புதுச்சேரியில் வீடு, கார் **என்று வாங்கி** வைத்துக்கொண்டு உள்ளூர் வாசிகளின் வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொண்டிருக்கிறார்" - **வாழ்வின் பன்முகப் பிரதிகள், நாகரத்தினம் கிருஷ்ணாவின் நாவல்கள் குறித்த திறனாய்வுக் கட்டுரைகள்**, ப.58.

'இன்றைய மொரீசியஸ் தீவில் வாழ்பவர்களாகிய தமிழர்களில் கணிசமான பேர் அந்த 17 ஆம் நூற்றாண்டு காலப்பகுதியில் குடிபெயர்ந்தவர்கள். சொந்த தேசத்துச் சாதி அடிமை முறை, மதப்பிணக்கு, சுரண்டும் அமைப்பில் சிக்கித் தன் வாழ்வை இழந்தவர்கள் என்று பலரும் தன் பொன்னுலகம் என்று நம்பிய பிரெஞ்சுத் தீவுகளுக்குக் காலடி மண்ணையும் துடைத்துக் கொண்டு கப்பலில் ஏறினார்கள். சற்றே பெரிய புறாக்கூடுகளில் இவர்கள் அடைத்து வைக்கப்பட்டுச் சகலவிதமான வன்முறைகளுக்கும் ஆளானார்கள். தாய்நாடு திரும்புவோம் என்ற நம்பிக்கை இன்றியே சென்ற சொர்க்கத்தில் தம் உயிரைப் பலிகொடுத்தார்கள். இத்துயர வாழ்க்கையை ஆதாரப் பூர்வமாகவும், பிழையற்ற வரலாற்றுத் தகவல்களோடும் தருகிறது நாகரத்தினம் கிருஷ்ணா எழுதிய நீலக்கடல் என்னும் இந்நாவல்" என எழுத்தாளர் பிரபஞ்சன் கூறுவது முற்றிலும் உண்மையாகும்.

நிறைவாக

ஏனைய தமிழகப் பகுதிப் புலப்பெயர்வுக்கும் புதுச்சேரிப்பகுதிப் பகுதிப் புலப்பெயர்வுக்கும் நிறைய வேறுபாடு களைக் காணமுடிகிறது. எல்லாப் பகுதிகளிலும் நடைபெற்றதுபோல் தொடக்கக் காலப் பெயர்வுகள் அடிமை, ஒப்பந்தம் என்கிற முறைகளில் அமைந்திருந்தாலும் அவற்றின் எண்ணிக்கைப் புதுவைப் பகுதிகளில் மிகக் குறைந்த அளவிலும், காலப்பகுதியிலும் நடைபெற்றவை. குடியுரிமையோடு கூடிய பெயர்வுகளின் எண்ணிக்கையும் கால அளவும் மிக நீண்டவை. இத்தகையப் பெயர்வுகள் அவர்களுக்கு மனதளவில் சில வருத்தங்களைத் தந்தாலும் சமூகத்திலும் பொருளியலிலும் எண்ணிப்பார்க்க முடியாத ஏற்றங்களைத் தந்தன. அந்தவகையில் புதுவைப்பகுதியில் நடைபெற்றப் புலப்பெயர்வுகள் துன்பத்திலும் இன்பத்தையே மிகுதியாகக் கொணர்ந்தன என்லாம்.

இன்றைக்குத் தமிழ்நாட்டின் பெரும்பாலான இளைஞர்கள் தாயகம் பெயர்ந்து செல்வதையே தங்கள் கனவுகளாக வளர்த்துக் கல்வி கற்கின்றார்கள். மேலைநாடுகளில் குறிப்பாக அமெரிக்காவிலே ஒரு நல்ல உத்தியோகம் பெற்றுவிட வேண்டும் என்பதே அவர்களுடைய தாயக பெயர்வின் மூச்சாக இருக்கிறது. குறைந்த பட்சம் கடல்கடந்து ஏதாவது ஒரு நாட்டுக்குப் போய்விட வேண்டும் என்கிற கனவிலே சஞ்சரிக்கிறார்கள். இவர்கள் வலிகளைச் சுமப்பதற்காகவோ அல்லது சுமந்ததற்காகவோ தாயகப் பெயர்வை நடத்தவில்லை. பொருள் வசதிகள் பெற்று வாழ்க்கையைச் சொகுசாக அமைத்துக் கொள்ளவேண்டும் என்பதுதான் அவர்களுடைய ஆசையின் உயிர்த்துடிப்பாக அமைந்து கிடக்கிறது. அவர்களைத் தாயகம் பெயர்ந்தவர்கள் என்கிற வரையறைக்குள் கொண்டுவருதல் என்பது யோசிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். இவர்கள் தாயகப் பெயர்வை அதிவிருப்பமாக மேற்கொள்பவர்கள். எனவே இவர்களைப் புலம் பெயர்ந்தவர்கள் என்ற வகைக்குள் அடக்கிவிட முடியாது. புலம்பெயர்ந்தவர்கள் அனைவரும் ஒரு தன்மையினரல்லர் என்னும் புரிதலே வலிகளோடு பெயர்ந்தவர்களின் வாழ்வியலை அறிந்திட வழிசெய்யும் என்பதை நாம் இந்த நேரத்தில் உணர்ந்து கொள்ள வேண்டியுள்ளது.

பயன்படுத்தப்பெற்ற நூல்கள்

தாவிதன்னுசாமி., புதுவை மாநிலம் அன்றும் இன்றும்

வாழ்வின் பன்முகப் பிரதிகள், நாகரத்தினம் கிருஷ்ணாவின் நாவல்கள் குறித்த திறனாய்வுக் கட்டுரைகள்,

சு. தில்லைவனம்., தமிழகம் – புதுவை வரலாறும் பண்பாடும் வே.தி.செல்வம்., தமிழக வரலாறும் பண்பாடும்.,

கே.கே. பிள்ளை., தமிழக வரலாறு – மக்களும் பண்பாடும்,

சுபாசு., தேர்ந்தெடுக்கப்பட்ட ஆனந்தரங்கப்பிள்ளை நாட்குறிப்பு,

டாக்டர். மா.சண்முக. சிவா., கட்டுரையாளர்., தாயகம் கடந்த தமிழ்,

முனைவர் பாஞ். இராமலிங்கம்., புதுச்சேரி விடுதலைப் போராட்டத்தில் வெங்கடசுப்பா ரெட்டியார்.

பகுதி - 4

கவிதைகள்

அயல்நாடுகளில் வாழும் மரபுப் பாவலர்களின் பாத்தொகுப்பு பற்றியச் செய்திக்குறிப்பு

அன்புடையீர்,

வணக்கம். பல்வேறு மொழிகளும் பண்பாடுகளும் இனங்களும் சமயங்களும் நிறைந்துள்ள இந்தியாவின் ஒருமைப்பாட்டினைக் கட்டிக்காக்கும் வகையில் இந்தியாவின் முன்னாள் பிரதமமந்திரி ஜவகர்லால்நேரு அவர்களால் 1954 – ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இலக்கிய அமைப்பே சாகித்திய அகாதெமி (National Academy of Letters) ஆகும். இவ்வமைப்பு மத்திய அரசின் மேற்பார்வையின் கீழ்ப் புதுதில்லியில் இயங்கிவரும் ஒரு தன்னாட்சி நிறுவனம் ஆகும். இந்நிறுவனம் அயல்நாடுகளில் வாழும் தமிழ் மரபுப் பாவலர்களின் பாத்தொகுப்பு நூல் ஒன்றைத் தொகுத்து வெளியிடத் திட்டமிட்டுள்ளது. எனவே, வெளிநாட்டுத் தமிழ்மரபுப் பாவலாரகிய தாங்கள் இயற்றியப் பாத்தொகுப்பிலிருந்து தேர்ந்தெடுக்கப்பபெற்ற சிறந்த ஐந்து தமிழ்மரபுப்பாக்களைப் பின்வரும் மின்அஞ்சல் முகவரிக்கு ஒரு மாதத்திற்குள் அனுப்பி வைக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன். மேலும் இணைக்கப்பட்டுள்ள படிவத்தில் தங்கள் குறிப்புக்களையும் எழுதி அனுப்புமாறு வேண்டுகிறேன்.

கவிஞர்கள் பற்றிய விவரங்கள் - பெயர் - இயற்பெயர் - புனைபெயர் - பிறந்த நாள் - ஊர் - கல்வித் தகுதி - பணி - படைப்புகள் (கவிதை நூல்) - பட்டயங்கள், விருதுகள்- சிறப்புக் குறிப்பு - முகவரி.

இப்படிக்கு,
தங்கள் அன்பான
(இரா. சம்பத்)

மின்னஞ்சல்: pilcsambath@gmail.com
தொடர்பு முகவரி:
முனைவர் இரா. சம்பத்,
புதுச்சேரி மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம்,
இலாசுப்பேட்டை, புதுச்சேரி – 605 008.
செல்: 9790582266.

உலக மாந்தநேய உரிமை

பெருங்கவிக்கோ வா.மு. சேதுராமன்

உலக மாந்த நேயத்தின் உரிமை – பிறந்த
ஒவ்வொரு வருக்கும் உலகில் உண்டு.
தலம் வளம் பெற்றோர் தமக்கு மட்டுமா? – இல்லை
சாமான்ய வறுமை எளிமை யோர்க்கும் உண்டு!
நிலமுள மொழி இனம் மதம் நிறம் சாதி– மற்றும்
நிலைக்கா ஏற்றத் தாழ்வையும் கடந்தே – உலகை
நலமுற இணைப்பது எதுவோ? அதுவே மாந்தநேயம் !
நாட்டின் எல்லைக்கோடுகள் இல்லாதது அதுவே !

வலுத்தவன் இளைத்தவன் தலையில் அடிப்பதும் – துஸய
வாய்மையைப் பொய்மை மிதிப்பதும் இல்லா
நலிந்தவர் நாயினும் கீழாய் வாழ்வதும் – தீய
நடைமுறைச் செல்வர் ஆதிக்கம் செழிப்பதும் – வஞ்சப்
பலியினர் பண்பிலார் நல்லவரை அடிப்பதும் – பூமிப்
பழங்காலம் தொட்டே பாதைகள் மாற்றமே – ஈதைப்
புலிகளாயப் பிறந்தவர் புரட்டவே எண்ணினும்– பலத்தார்
எலிகளாய் மறைந்தே ஏற்றம் இழப்பதேன் ?

காற்றுதீ இரண்டுமே பொதுமை உள்ளன மற்றன
காலத்தின் முழுமையில் பொதுமையாம் நிலம் வான் நீரையும்
மாற்றிதம் தன்னலம் மாட்டும் வல்லரசுகள் – தம்தம்
மக்களுள் நாட்டினுக் கேதான் மாற்றுவர் – பரந்த
ஏற்றதோர் எல்லையும் இலாதஅவ் வானையும் – கூட
எல்லைக் கோடுகளாலே தன்னலம் ஆக்குவர் – கடல்வெளிப்
பேற்றையும் சுயநலம் பிரிப்பர் நிலத்தினை – அந்தந்தோ
பிச்சப் பிடுங்குவர் எல்லை கோட்டினால் பிளப்பரே !

பொதுமையில் இயற்கை படைத்த உலகினை படைபலப்
போக்கினால் நிலம்வான் நீர் தன்னலம் தேக்குவர்
இதுவரை காற்றுதீ இரண்டும் சுயநலப் – போக்குடை
இவர்தொட முடியா இயற்கை பொதுமைக் – காலம்
எதுவரை நிலைக்குமோ? எல்லார்க்கும் எல்லாம்
இப்பூமி மாந்தர் எவர்க்கும் ஒன்றாகும்
பொதுமாந்த நேயம் புத்துல காக்கும் –வழியதைப்
போற்றும் நாளே ஏற்றமுறும் மாந்தநேயம் !

நேயம் மனித நேயம் தான் வளர்த்திடப் – பலப்பல
நிலைபெறும் கொள்கை நேயத்தார் தோன்றினார் – அன்னார்
துஸயநிலைக் கருத்துகளை தொகுத்தனர் வகுத்தனர் – ஈடில்
துறவுநில இருந்து சொற்றனர் பெற்றதென் – வையகம்
மாயுநிலை தானே வளர்கிறது! ஆடைகள் – துவைக்க
மறுபடி அழுக்குகள் மேவலாம் உலக –மாந்தர்
தீயனபுகும் நிலைகள் நீக்கும் திறம்அறம் – தேர்ந்தனவா
செய்வதென்? மாந்த நேய மறு மலர்ச்சி தேர்வ தெவன்?

பற்றற்று ஆசைகள் அகற்றுக துன்பங்கள் – எல்லாம்
பற்றும்அவ் ஆசையின் புயலோ துன்பம் தருமென
சுற்றிய அரசையும் துலக்கிய எறிந்த புகழ்ப் புத்தன்
சுடர்ரறிவு பெற்றோம் எனவே தான் தொல்புவி வாழ்வோர்
கற்றதென்? அவர் வழி கணக்கில் அடங்கா – வாரே தான்
கண்கொளாக் காட்சியில் கவின் சிலை வடித்து வைத்தே
எற்றினர் புத்தரின் கொள்கைகள் எண்ணியே – பார்மின்
இவண்நிலை கண்டேதான் புத்தரே கண்ணீர் வடிப்பரே!

ஈகத்தி யாகம் இயேசுவையே சிலுவை அடித்தும் –'மன்னியும்'
இவரையே! எனவே இறைங்சியவர் கொள்கைதேர்வர்
வேகத்தின் அறிவியல் வளர்ச்சி விளையும் – நாடுகள்
வேண்டும் அமைதி மனிதநேயம் விளைத்தே வாழ்வரா?
ஆகக்கடைசி நபியென அறிவித்த நபிகள் – தேர்வர்
ஆக்கம் நடைமுறை வென்றனவா? மற்றபல ஞானிகள்
தாகத்திற்கு நீர்தந்தாரே அன்றித் தாகம் தாகம் தானே!
சம வாய்ப்பு மனிதநேயம் சார்ந்ததா? உயர்ந்ததா?

இருஇனம் உளஇலங்கை நடந்ததென் ? புத்தராசை
இற்று அற்று வாழ்வியல் நடத்திடும் கொள்கைத்
திருமதம் ஏற்றவர் தமிழரின் நிலத்தினை – தமதாய்
தான்கொள வளர்த்தே குருதி ஆறுகள் புரண்டனர்
தருஇன இனத்துள் மனிதநேய மில்லாச் – சண்டையால்
தலைகள் உருண்டன சமரசம் தோற்றதேன்?
பெருமிடர்ச் சூழலே? புத்தபிட்சுகளால் –அன்பறு
பேறுமனித நேயம் ஊறுவிளைத்தல் நீதியா ?

மதங்கள் போதனை வளரும் அறநிலைகள் – பெற்ற
வளர்ச்சியில் போதனை உலகமே தேர்ந்தும் – பொல்லா
இதயங்கள் இருள்சூழ இணைக்கும் மனித நேயத்தை
இடரிடச் செய்யும் நடைமுறை காண்பதேன்? இதனிடை
உதயம்போல் கருணை உதவிடும் மனிதநேயம் – இனமொழி
உளபல நாடுகளின் எல்லைகடந்தே மாந்தர்கள்
பதம்பெற பயன்பெற பாலிக்கும் தன்மை பன் நாடுகள்
பல்கிப் பெருகிடும் நல்ல முத மாந்த நேயம் வளர்கின்றதே!

எல்லைக் கோடுகள் பிரிக்கும் இனம் மொழி நாடுகள் – தமக்குள்
எத்தனையோ வேறுபாடுகள் பிரிவினை கொடுங்கோன்மை
எல்லைக்கோடுகள் தாண்டிய இதயமுள நாடுகள் பலவே
ஏகிய புலம் பெயர்ந்தார் கட்கே எண்ணிலா வகையிலே
எல்லாநல் உதவியும் மனிதநேய அடைக்கலம் – தந்தே
இவ்வுலக மாந்தாகள் ஒன்றெனும் கொள்ளை சாற்றுமே !
எல்லைகள் வகுப்பதும் எல்லைக்கோடிலாத – உலகமே
ஏற்பதும் இனிய மாந்த நேயம் ஒன்றே! எனும் உலகமைப்பே !

1. தமிழர் உலகம்!

உத்தமபுத்திரா புருஷோத்தம்

கிளைகளில் கூடு கட்டினால்
வேரிலே தீ;
கிளையில் இலை துளிர்த்தால்
வேரிலே வென்னீர்
கிளைகளிலும் பல வேளைகளில்
இலைகள் உதிரும்
வெட்கத்தைத் தொலைத்த வேர்களில்
சாதனை மவுனம்

மகரந்தச் சேர்கைக்காக அலைகிறது
மன்மத அம்புகள்
நகல்களின் புதுப்பிப்பில் நக்கலாய்
நோபல் கனவுகள்
உறக்க உல்லாசத்தில் விழிக்க
மறுக்கும் மாக்கள்
எச்சில் சுகத்தில் குரைக்கும்
சில்லறை ஜால்ராக்கள்

சுரண்டலின் மிச்சத்தில் எலும்பாய்
சோம்பல் சாலைகள்
சுய முன்னேற்றங்கள் இடைத்
தரகர் பேரத்தில்
இலவச முதலீட்டில் கொழித்துச்
செழிக்கிறது கொள்ளை
மறக்காமல் தமிழுக்கும் அவ்வப்போது
இலஞ்ச அர்ச்சனை

இணையமா? உலகமா? இசையா.
இணையா இதயங்கள்
போட்டியால் அல்ல பொறாமையால்
புகையும் எரிச்சல்கள்
திருட்டையும் ரசிக்கும் மாந்தரின்
இளித்தவாய் வேடிக்கை
நண்டுக் குணத்தால் என்றுமே
நொண்டும் குதிரை
சண்டிமாடாய் தனித்தீவாய் முன்னேற
மறுக்கும் சமூகம்

அறிவிலிகள் தேசத்தில் என்றும்
அறிவாளிகள் சிறுபான்மை
வீரியம் கொண்ட வித்துகள்
மாத்திரம் காற்றில்
நம்பிக்கை "யாதும் ஊரே
யாவரும் கேளிர்"!
வசந்தம் என்பதும் சுழற்சியில்
நிச்சயிக்கப்பட்ட விதியே!

2. தமிழ் மொழி!

எடுப்பு:

தமிழே! தமிழே! தமிழே! - இந்தத்
தரணியின் உயரிய தவத்திரு மொழியே!
அருளே! தமிழே! அமுதே! - இந்த
அவனியின் இருளறும் அருட்பெரு மொளியே!

தொடுப்பு:

தமிழே! தமிழே! தமிழே! - இந்த
தரையினில் கடலெனத் தவழ்ந்திடும் எழிலே!
வளமே! கதிரே! தமிழே! - இந்த
வையகத் தொளிரும் வரம்பிலாப் பொருளே! (தமிழே...)

நடப்பு:

1. இறை மொழி:

பரமனின் பனிமொழி தமிழே! - அந்தக்
குருபரன் அருளிய உறுமொழி தமிழே!
அரனுரைத் திருமொழி தமிழே! - அழகு
அறுமுக இளையனின் அருள்மொழி தமிழே!
திரிபுரை உரைமொழி தமிழே! - தெய்வக்
கரிமுக முதல்வனின் கனியுரை தமிழே!
திருமறை உறைமொழி தமிழே! - செல்வத்
தரணியின் நிறைமொழி முதன்மொழி தமிழே! (தமிழே...)

2. மறை மொழி:

அமரனின் திருமுறை தமிழே! - ஆன்ற
அறிவுடை முனிகளின் மனமொழி தமிழே!
குமரனின் குருமொழி தமிழே! - அவன்
குறிப்பிடும் பரம்பொருள் ஓமொலி தமிழே!
'வாசிவாசி' என்னுவது தமிழே! - சிவ
வாக்கிய மறைமொழி உன்னுவது தமிழே!
ஆதிசிவம் ஆனபொருள் தமிழே! - கூடி
'அன்பே சிவம்' ஆகும்பொருள் தமிழே! (தமிழே...)

3. நிறை மொழி:

அருமறை உரைவதும் தமிழே! - அதில்
உறைபெறு திருமுறை வழிமொழி தமிழே!
கருவுடைத் திருமொழி தமிழே! - எங்கும்
கருத்தொடு உயிரென விரிந்ததும் தமிழே!
உருவுடை உணர்வும் தமிழே! - உலகில்
உருமாறிப் பலவாகி உதித்ததும் தமிழே!
திருவுடைத் திரவியம் தமிழே! - நல்
திருவிடக் குலத்துயர் முதலதும் தமிழே! (தமிழே...)

4. நிலை மொழி:

முச்சங்கம் யாத்ததும் தமிழே! - மூல
முதல்வனும் முருகனும் காப்பதும் தமிழே!
முச்சுவை வார்த்ததும் தமிழே! - முதல்
மூவேந்தர் கூத்தாடிக் காத்ததும் தமிழே!
முப்பாலைத் ஆர்த்ததும் தமிழே! - புவி
மூத்தகுடி சாற்றிவரும் மூத்தமொழி தமிழே!
தப்பாமல் வாழ்வதும் தமிழே! - இந்தத்
தரணியில் இளமை எப்போதும் தமிழே! (தமிழே...)

5. மூல மொழி:

அகத்தியோன் வகுத்தவகை தமிழே! - நல்
அகத்தையும் புறத்தையும் தொகுத்தது தமிழே!
சிலம்புமொழி செப்புவதும் தமிழே! - செங்
காப்பியத்துள் தொன்மைதனைச் சாற்றுவதும் தமிழே!
மூதுரையுங் கூறுமொழி தமிழே! - திரு
மூலனுரை மூவாயிரம் முகிழ்த்ததும் தமிழே!
ஞானியரின் போதமொழி தமிழே! - அவர்
நாதவொலி வேதமொழி என்பதுவும் தமிழே! (தமிழே...)

6. கலை மொழி

சித்தர்களின் சிந்தைமொழி தமிழே! - அவர்
சிந்தைவழி செய்தபணி செப்புமொழி தமிழே!
கவிஞர்களின் சந்தமொழி தமிழே! - அவர்
கலைபொழிய நெஞ்சுருகி சிந்துமொழி தமிழே!
இசைவேளர் மரபுமொழி தமிழே! - அவர்
இசையோடு பண்பாட வந்தமொழி தமிழே!
கலைவாணர் பேசுமொழி தமிழே! - அவர்
கலையாடிக் கவிபாடிக் கொஞ்சுமொழி தமிழே! (தமிழே...)

7. வண் மொழி

பழையதும் நிலையதும் தமிழே! - பண்டு
வளமையும் எளிமையும் வலிமையும் தமிழே!
அழகியல் நளினமும் தமிழே! - என்றும்
இளமையில் செழுமையில் விளைவதும் தமிழே!
இலக்கியத் தரமெனில் தமிழே! - மொழி
இனிமையும் திறமையும் ஆழமும் தமிழே!
கலையதன் மேன்மை தமிழே! - நற்
கவிப்பொருள் செறிவும் நிறைவும் தமிழே! (தமிழே...)

8. இயல் மொழி:

இயற்கையின் முதன்மொழி தமிழே! - என்றும்
இயலிசை நாடகம் என்பதும் தமிழே!
நயத்துரை கனிமொழி தமிழே! - என்றும்
நலத்தொடு களிப்பினை நல்குதும் தமிழே!
வையத்து எழில்மொழி தமிழே! - என்றும்
வனப்பொடு வளத்தினை வழங்குதும் தமிழே!
உயர்வொடு திகழ்வதும் தமிழே! - என்றும்
உதிரத்தில் உணர்வினில் உய்வதும் தமிழே! (தமிழே...)

9. சுவை மொழி:

எல்லை இல்லாதது தமிழே! - எங்கும்
ஏகியே பரவிடும் இன்பமும் தமிழே!
இல்லை என்னாதது தமிழே! - எங்கும்
இயங்கிடும் நிலையிலும் ஏற்றமும் தமிழே!
சொல்லில் சிறந்தது தமிழே! - எங்கும்
சுயத்தொடு நயப்பதும் சுவைப்பதும் தமிழே!
வல்லமை நிறைந்தது தமிழே! - சட்ட
வரைமுறைத் தெளிவையும் வகுத்திடும் தமிழே! (தமிழே...)

10. தண் மொழி:

வண்மையும் மென்மையும் தமிழே! - நல்
வண்ணமும் பண்ணும் முழக்கிடும் தமிழே!
திண்மையும் தெளிவும் தமிழே! - நல்
கண்ணியம் புண்ணியம் துலக்கிடும் தமிழே!
அண்மையும் தண்மையும் தமிழே! - நல்
உண்மையும் அன்பையும் புகல்வதும் தமிழே!
பண்பையும் பகிர்வதும் தமிழே! - நல்
நுண்கலை நுட்பம் நுவல்வதும் தமிழே! (தமிழே...)

11. பொன் மொழி:

கடலினை முனைந்ததும் தமிழே! - முதலில்
கடலொடு முகிழ்த்ததும் முகிழ்ந்ததும் தமிழே!
கடலினைக் கடைந்ததும் தமிழே! - முதலில்
கடலினைக் கடந்து களித்ததும் தமிழே!
நலத்தினை வளர்த்ததும் தமிழே! - முதலில்
நன்னெறி ஒழுக்கம் நவின்றதும் தமிழே!
அகத்தினில் செழித்ததும் தமிழே! - முதலில்
அறநெறிப் பொதுமறை அளித்ததும் தமிழே! (தமிழே...)

12. நன் மொழி:

பொறுப்புரை பொழிவதும் தமிழே! - முதல்
புரிதலை அறிதலைப் படைத்ததும் தமிழே!
நறுக்குரை நயமெனில் தமிழே! - முதல்
நல்லவை அல்லவை நயத்ததும் தமிழே!
முறுக்குரை மொழிவதும் தமிழே! - முதல்
மொழியெனத் தடத்தினைப் பதித்ததும் தமிழே!
சிறப்புரை 'முத்தெனில்' தமிழே! - முதல்
சிந்தனைச் சொத்தெனில் சிறப்பதும் தமிழே! (தமிழே...)

முடிப்பு:

தமிழே! தமிழே! தமிழே! - இந்தத்
தரணியின் முதன் மொழி தமிழே!
அருளே! தமிழே! அமுதே! - இந்த
அவனியின் முதல் நிலை அழகே!
தமிழே! தமிழே! தமிழே! - இங்கு
உயிரும் மெய்யாய் உறைந்திடும் தாயே!
தமிழே! தமிழே! தமிழே! - இங்கு
உளத்துள் உணர்வாய் நிறைந்ததும் நீயே!

தமிழ்ப்போர் செய்விடுவாய்

முதல் உலகப்போர் கண்டதுண்டு – ஆண்டு
ஆயிரத்து தொள்ளாயிரத்து பதினான்கு –முதல்
ஆயிரத்து தொள்ளாயிரத்து பதினெட்டு – வரை

இரண்டாம் உலகப்போர் தொடர்ந்த – ஆண்டு
ஆயிரத்து தொள்ளாயிரத்து முப்பத்தொண்பது – முதல்
ஆயிரத்து தொள்ளாயிரத்து நாற்பத்தைந்து – வரை

மூன்றாம் உலகப் போர் இனிமேலும் – வேண்டாம்
அனைத்துலக மக்கள் தொகை எழுநூற்றறுபது – கோடி
அனைவரும் ஒருதாய்மக்கள் போல் ஒற்றுமை – தேவை

ஒவ்வொரு தனிமனிதனுக்கும் மொழிபற்று –வேண்டும்
அயராது உழைப்புக்கும் உணர்வுக்கும் – தமிழ்
அகிலத்தில் ஆளும்வரை தமிழுக்குபோர் – செய்

தமிழுக்கு தொண்டுசெய்வோர் சாவதில்லை – தலை
முறைகள் தாரணியில் தமிழர்கள் பன்னிரெண்டு – கோடி
முத்தமிழ் செம்மொழியாம் முதன்மையானது – உலகில்

பிறந்த பிறப்புக்கு மறுபிறவி வேண்டும் – எனில்
இப்பிறவி தன்னிலே தமிழுக்காகவே – போர்
இன்றுமுதல் என்றென்றும் செய்திடுவாய் – தமிழா!

– கவிஞர் எஸ். கே. விக்னேஸ்வரன்
கம்போங் காசிப்பிள்ளை தமிழன் சேவை மையம்,
ஈப்போ சாலை, கோலாலம்பூர்,
மலேசியா.

தீ யாழ் நூல் பாழ்

சர்வதேசமும் தமிழர்
சரஸ்வதியும் உடன்
சங்கமித்து வைத்த
செந்தமிழ் நூல்கள்!

தமிழீழ மக்களின்
தகைமிகு சொத்தாக
தேமதுர படிப்பகமாக
சகலரும் சுவாசித்த!

பைந்தமிழ் பண்டிதர்
பாவலர் நாவலர்கள்
புவிசார் அறிஞர்களின்
பாரினில் பொக்கிஷமாக!

யாழினிது நூலினிது
யாவரும் படித்தறிய
யாழ்ப்பாண பல்கலைக்கழக
யாழ்நூலகம் பாழாகினதே!

திகதி மேமுப்பத்தொன்று
தொடங்கி ஜூன் முதல் தேதி
தொடராக தீயிட்டெரிந்தது
தொண்ணூத் தேழாயிரம்!

அந்தநாள் நிகழ்ந்தாண்டு
ஆயிரத் தொள்ளாயிரத்து எண்பத்தொன்று
ஆறாத்துயரம் மாறாது
அகிலத்தின் துயரமானதே!

கருப்புதினம் கரிநாளது
கண்டதும் பதறியது
களங்கிய எமதிருவிழிகள்
கண்ணீர் கங்கையானதே!

ஏன்ஏன் மாரிபொழியவில்லை
ஏங்கித்தவித்த எம்மினம்
ஏதும் செய்ய முடியவில்லையே
எதார்த்தமான எமக்கோயிப்படி!

ஈழவர் குலம்வாழ
ஈசானம் துணையிருக்க
ஈர்ப்பு சக்திமிகு
ஈட்டியாக சிந்திப்போம்!

நற்றமிழர் அனைவரும்
நன்நூல்கள் சேகரித்து
நாநிலத்தில் கணினியில்
நல்பதிவில் நிலைத்திடுவோம்!

ஆழமான மூத்த மொழி
அழிவில்லா திழைக்க
அனைத்துலக ரீதியில்
அகப்பக்கத்தில் நூல்கள்!

இனியொரு சதிகிட்டாது
இனிமேலும் நாம் கவனமாக
இப்போதும் எப்போதுமே
இன்பத்தமிழ் நூல் காப்போம்!

– கவிஞர் புரதஈழவாணன்
தாமான் யாழ்,
கோலாலம்பூர்,
மலேசியா

பதிமூன்றாம் மாநாடு பாரினில் வெல்லும்

தரணியில் தமிழர்கள்
தேசங்கள் தோறும்
தேர்ச்சியில் திகழ்கிறார்
தேமதுராக தமிழுடன்!

பன்னாட்டில் பண்பாடும்
பதிமூன்றாம் பதிவுடன்
பகுத்தறிவும் படிப்புடன்
பாரினில் பெறுகிறார்!

சவாலுடன் சாதனையும்
சர்வதேச செந்தமிழர்
சொந்தங்கள் சேர்ந்திங்கு
செழிப்பாக செப்புகிறார்!

முதுமதிகள் முன்னெடுக்கும்
முத்தமிழில் மாநாடிது
மேதினில் மெச்சியது
மொத்தமாக மகிழ்வோம்!

அய்ந்தாறு ஆகஸ்டில்
ஆய்வுகள் ஆதாரமாக
அகிலமும் அதிசயிக்கும
அறிஞர்கள் அறிவிக்கும்!

கலையுடன் கல்விமான்
கடமையும் குரல்கள்
குவலயத்தில் கூவிடும்
கரவொலி கிட்டிடும்!

ஓரிடத்தில் ஒருங்கே
ஒற்றுமை ஓங்கிடவே
ஒன்றுகூடி ஒப்பமுடன்
ஒலிஒளியாக ஓங்காரமிடும்!

வீரத்துடன் விவேகமும்
வெற்றியும் வாழ்வினில்
வையகத்தில் வாழ்வாங்கு
வாழியவே வாழ்த்துகிறேன்!

– கவிஞர் அந்தோணிசாமி அருளானந்தம்
திருவாரூர், தமிழ்நாடு.

பண்பாடியக்கம் புவியாளும்

உலகத்தமிழ்ப் பண்பாட்டு மாநாடு
பதிமூன்றாம் யாழ்ப்பாணத்தில்
உலகமெல்லாம் பரவும் வகையில்
பழந்தமிழர் யாழிசைப்பார்கள்

நான்காம் தமிழாராய்ச்சி மாநாட்டிலே
புதிதாக உதயமான
நடவில் தோற்றம் கண்ட
பண்பாட்டியக்கம் உவகையாகும்

மலர்மாமணி பாஞ் இராமலிங்கம்
பண்புகளில் உலக உலா
மாநாட்டு புதுமை வடிவத்தில்
பதிப்பிட்டார் உலகமாமலர்

கல்வி இராஜாங்க அமைச்சராம்
பாரினில் உண்மையாளர்
கல்விமான் வே.இராதாகிருஷ்ணன் தலைமையில்
பைந்தமிழர்கள் உயர்வார்கள்

விவேகமான பேரவைத் தலைவர்
பெரும்பணியும் ஆற்றுகிறார்
விசு.துரைராஜா கனடாவிலிருந்து
பிரேரனை அமைப்பார்

முத்தமிழ் இலக்கியர் பலநாடுகளும்
பயணம் செய்தவர்
மலேசிய இரா.ந.வீரப்பனார் அருந்தமிழர்
பன்னாட்டு மாநாடு சிறப்பிக்கும்

சர்வதேச முழுவதும் மிகப்பெரிய
பாரியதொரு அமைப்பாக
சகலரும் மேலதிக விடயத்தில்
பெருஉவகை அடைவார்கள்

வீரத்தாய் ஈன்ற மைந்தர்கள்
புறநானூற்றுத் தமிழன்
வையத்து ஈழவர் குமுகாயம்
பெட்டகமாக திகழ்வார்கள்

திக்கெட்டும் மேதினில் வாணளவில்
புன்னகை முகமாகவே
தமிழர்கள் முழுமதியாக சித்தியில்
பெரும்பேறாக வாழ்வார்கள்

- ஸ்ரீ வாணன்
தலைவர்,
அனைத்துலக தமிழ் பேரா ஈண்பர்கள் இயக்கம்
கோலாலம்பூர், மலேசியா.



இர. ந.வீ. போற்றுவோமே!

தமிழியப்பாவலர்,
புலவர் **கதிர். முத்தையன்**
தலைவர், உலகத் தமிழ்க் கழகம், தமிழ்நாடு

1. உலகெங்கும் வாழுகின்ற தமிழர் மேன்மை
உயர்ந்திட ஓர்இயக்கம் வேண்டும் என்று
நலம்விளைக்கம் நல்லறிஞர் கூடி வந்த
நான்காம் உலகத்தமிழ் ஆய்மா நாட்டில்
இலங்குதமிழ்ப் பற்றாளர் கனக ரத்னம்
இனிமையுடன் தம் கருத்தைப் பதிவு செய்தார்
உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் என்னும்
ஓரமைப்பை உருவாக்கி வெற்றி கண்டார்!

2. வல்லவராம் சாலைஇளந் திரைய னாரை
வலிமைமிகு தலைவ ராகத் தேர்ந்தார்
நல்லோர்கள் போற்றுக்னற வீரப்ப னாரும்
நயமுடனே பொருளாளர் பொறுப்பை ஏற்றார்
எல்லோரும் வாழ்த்துரைக்க கனக ரத்னம்
இயக்கத்தின் பொதுச்செயலர் பொறுப்பில் வந்தார்
மெல்லமெல்ல இயக்கத்தை வளர்த்தெ டுத்தார்
மேன்மையுறு வீரப்பனார் தலைவ ரானார்!

3. முத்துமிழை முறைப்படுத்தி தமிழால் ஆண்ட
மூவேந்தர் அறநெறியின் உருவாய் வாழ்ந்தார்;
எத்திசையும் வாழ்கின்ற தமிழர் இல்லி
ஏற்றமுறு பாசத்தின் பிணைப்பைப் பெற்றார்;
இத்தரையின் ஐந்தான கண்டம் எங்கும்
இயக்கத்தின் பரப்பளவை விரியச் செய்து
முத்தான இயக்கத்தின் மாநாடு கூட்டி
முனைப்பாக இர.ந.வீ. வெற்றி கண்டார்!

4. பொன்னாகத் தமிழ்ப்பண் பாட்டைப் போற்றி
பொலிவுடனே தொண்டுசெய்த வீரப்ப னாரை,
என்றென்றும் போற்றிநின்று பணிகள் செய்வோம்
எண்ணத்தால் சொல்செயலால் இணைந்து நிற்போம்;
இன்பத்தமிழ்ப் பண்பாட்டில் கலந்து நிற்போம்
இன்னல்தரும் செயல்களை அகற்றி நிற்போம்;
கன்னல்சேர் வீரப்பனார் கொள்கை ஏற்றுக்
காலத்தால் அழியாமல் காத்து நிற்போம்!

53. உலகத்தமிழ் இனத்தின் உறவுப் பாலம்
உருவாக்கி இயக்கத்தை வளர்த்த ஏந்தல்;
நலமாகத் தமிழ்மக்கள் வாழ்வதற்கு
நல்லிணக்கக் கோட்பாட்டை வகுத்த செம்மல்;
குலமத வேற்றுமைகள் கடந்து வாழ்ந்து
குன்றாத தமிழுறவு தழைக்கச் செய்தார்;
உலகத்தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் நெஞ்சில்
உள்ளவரை இர.ந.வீ. போற்று வோமே!

இதுதான் என்றால்?

கவிஞர் முகவை முத்து
(பேசி: 9600496715)

இருட்டை
இனவிருத்தி செய்வதற்குப்
பெயர்தான் ,
விடியல் என்றால் ...

மூச்சு விடுவதற்கு
இன்னொரு பெயர்தான் ,
உயிரோடிருப்பது என்றால் ...

காகிதம் மேயும்
கழுதைகளைக்
கண்டுபிடித்துக் கொடுப்பதுதான் ,
கல்விச்சாலைகள் என்றால் ...

கயமையின்
கர்ப்பத்திற்குப்
பிரசவம் பார்ப்பதுதான் ,
மருத்துவம் என்றால் ...

திருடருக்கு நடக்கும்
திறமைப் போட்டி
முடிவுதான் ,
தேர்தல் வெற்றி என்றால் ...

செக்ஸ்படக விற்பனைச்
சிகரத்தைத் தொடுவதற்குப்
பெயர்தான்
செய்தித்தாள் என்றால்...

கொத்திக் குதறும்
பிணந்தின்னிக் கழுகுகளின்
பெரியப்பாக்கள்தான்,
அதிகாரவர்க்கம் என்றால் ...

நீதி தேவதையின்
கையிலிருக்கும்
நியாயத் தராசை ,
ஜாதி தேவதைக்குத்
தாரைவார்ப்பதுதான் ,
தர்மம் _ நீதி என்றால் ...

சாரே ஜஹா ஸே அச்சா!
இந்து ஸ்தான்
ஹமாரா! ஹமாரா!

(பாருக்குள்ளே நல்ல நாடு
இந்துஸ்தானம்
எம்முடையது! எம்முடையது!)

முகவரி:
முகவை முத்து_ கீழவெள்ளஞ்சம்பட்டி,_ க.சொக்கநாதபுரம் (அஞ்சல்)_ செம்பனூர் (வழி)
சிவகங்கை (மாவட்டம்) அ.கு.எண்: 630313 _ பேசி:9600496715

அன்னை பூமி

அடங்கா பற்றுக்கொண்ட அஞ்சா நெஞ்சம்
நிறைந்த வன்னி பூமி
அரசர் பலர் தமிழ் வளர்த்த புண்ணிய பூமி
தென்னை மா பலா வாழை கமுகு அரிசி
குரக்கன் பூத்து நின்ற பூமி
வீரம் விதைத்து வித்தை பல கற்ற பூமி
சோழர் ஆட்சியின் துணைக் கொண்டு
தமிழர்கள் சிறப்போடு வாழ்ந்த பூமி
கலை கலாச்சாரத்தின் மீது கண் இமைபோல்
காத்து வந்த பூமி
இயல் இசை நாடகம் எனும் முத்தமிழ் வளர்த்த பூமி
உப்பிட்டது கடல் உணவிட்டது அன்னை பூமி
வள்ள முள்ள இந்த புண்ணிய பூமி
இன்று தலை குனிந்து வாழும் நிலை
ஏற்பட்டுவிட்டது எமது பூமியில்
அசரர் பலர் ஆண்ட பூமி அன்னை
தமிழ் ஆட்சி செய்த பூமி
பெண்ணை தாயாக போற்றும் பூமி
பெரும் நில பரப்பை கொண்ட பூமி எம் அன்னை பூமி
திட்டங்கள் தீட்டுங்கள்
துன்புற்று வாழ் தமிழ் மக்களின் துயர துடைக்க
இப் பூமி வெற்றி பெற வாழ்த்துக்கள்
உலக பெருங்காடு ஒன்றல்ல பல மரங்கள்
சந்தன மரம் தான் தமிழ். தமிழ் மணக்கும்
இழந்து வட்ட இன்பங்களை பெற இப் பூமியில்
பாடுபட வேண்டும் அமைதி வழி தேடி
ஆற்றுங்கள் நல்ல பணி அகத்தியர் வளர்த்த தமிழ்
ஐயன் திருவள்ளுவர் இயற்றிய குறள் வழி நடக்க
அகநானூறு புறநானூறு ஆற்றிய தமிழ்ப்பணியை
இளைய தலைமுறைக்கு எடுத்துரையுங்கள்
வளர்க தமிழ் வாழ்க உலக தமிழ் வளர்வதற்கு
வாழ்த்துவதற்கும் இதயம் உண்டு
வாழ்க தமிழ்

அன்பன்
கலைமணி **இரா. சுப்பிரமணியம்**
சமாதான நீதிவான்
யாழ்ப்பாணம்

பகுதி - 5

ஆங்கிலக் கட்டுரைகள்


UNIVERSITY OF JAFFNA

HAPPINESS OF THE FAMILY INSTITUTION ACCORDING TO THE PERSPECTIVE OF TAMIL SAYINGS

Umah Devi Thandavarayan
Universiti Putra, Malaysia

Abstract

The efforts to instil and form a happy family institution are always needed as a form of 'continuity' in ensuring that any development achieved is well balanced and life is peaceful and harmonious in this country. There is a need for the efforts to be carried out through various ways after it has been realised that this effort is not as easy as what it is said. Thus, Tamil sayings are used as study sample where the sayings have been proven as contributions in the formation of happy and righteousness families. The Tamil sayings used in this study, which have not been given attention by the current generation, actually have moral value because the sayings can strengthen husband-wife relationship and their relationship with the children as well as become a form of guidance in carrying out the responsibility of living in a blissful marriage life.

Keywords: Family Institution, Happiness, Tamil Saying, Moral Value

Introduction

A family is like a nursery that produces useful human being for spiritual and physical development of a society and country. Happiness in families becomes the basis for a successful human development and it is able to shape a developed, honoured, respected and harmonious country. However, rapid socio-economic developments create imbalance with spiritual development and moral in the Malaysian society. This causes various negative implications in the family institution. The government's efforts to make social development agenda as one of its priorities in the seventh Malaysia Plan and Vision 2020 have showed the government's concern on the issue that influences the formation of family and culture.

The government also carries out the effort of strengthening the family institution by launching *Kempen Gerakan Keluarga Bahagia* in year 1990. Through this campaign, every government and private organisation is directed to organise Family Day Celebration as an annual agenda. The objective of this programme is to increase the community's awareness on the importance of

family ties and function of a family as well as the responsibilities of each family member. Family institution which fails in carrying out responsibility will cause riot in the family, loose family, ineffective communication, lack of mutual respect and failure to overcome crisis which are among the main reasons that threaten and affect relationship in families and consequently cause failure of the family in carrying out their responsibility on the children (Rozumah Baharudin ,1990).

Based on the sociological aspect, social life subjected to live together collectively since the beginning of human civilisation history. When human live in groups, they need to communicate between one and another, give opinions, ideas, feelings and impressions. Subsequently, this would enable a righteousness and happy family and society to be formed as a result of an effective communication practice among family members. This directly shows the practice of communication which plays an important role with regard to the happiness of the family institution.

In the family institution, every family member has his or her responsibility to ensure that the built family system is happy. Parents are the head of this system and in educating children. Moral education is important to form children who are spiritually healthy. Hence, speech aspect is important in educating children in families. Furthermore, during the old days, there is no education system in school which caused moral values to be disseminated verbally to families by old folks in the society.

Through language, human communicate among one another. In daily conversation, talking is one short and meaningful method of communication. Talking is one of the traditional oral literatures. Sayings are resulted from live experiences and perceptions which can be very deep. Saying is a vocabulary that portrays a civilised society's life pattern. The role of saying is very significant to the ethnic and language of a particular race (Archer Taylor, 1962: 27). Through sayings, the philosophy of life and ways of living peacefully can be channeled cynically in daily life.

Likewise the deep contribution of Tamil sayings which reflect Tamil society's cultures, traditions and the society's life patterns in terms of economy, politic and also social. Tamil sayings can depict clearly situations of issues that have occurred cynically.

Statement of Problem

Tamil sayings have many messages and understanding of happiness in accordance to the formation of happy families which is increasingly being marginalised by the current generation. The Tamil society has already started to set aside language heritage that is inherited in their daily life or in the use of oral or written language. Besides, the spoken language is being less emphasized and seldom being used in diurnal communications, especially among the younger generation. In fact, it is also forgotten by the adult group. This is because the life of the adults is more influenced by scientific and technological development trends which are more sophisticated. Their daily life has changed as a result from the economic factor. In fact, a lot of time allocations have been used searching for one's life livelihood. One's life development has provided the results to the present community to seek for a comfortable and modern life.

The aspect of happiness in the family institution gives more attention to the use of a foreign language in their daily life than the practice of using Tamil sayings. This causes them to give more attention to the use of the foreign language that has been practiced frequently in their diurnal speech. Every family gives priority to the mastery of a foreign language to overcome competition with different other societies. Hence, the use of a foreign language is regarded as a commercial material to enhance the level of the family life at present dan the use of mother tongue that does not give profit economically is no longer being emphasized.

In fact, most parents nowadays work overtime and do not spend much time with their children. Thus children are raised by domestic servants at home. This causes many activities such as tuition classes, learning music and dancing, games like badminton, tennis and various outdoor activities are also been engaged by their children without knowing and learning Tamil sayings. The impact can be seen where there is no feeling of regret and self-offense for not knowing Tamil saying in their daily life. Gradually, this way has become a habit and Tamil sayings are increasingly being forgotten and kept far-off in their life.

The number of Tamil sayings gathered and being studied by language scholars is limited and focussed more on the theme, form, connotation, cultural elements, and use of sayings in old classical Tamil literature only. The study with scope related to various areas of life such as social instituition especially the ones related to family institution and happiness as well as moral education is running dangerously short. Not only that, Tamil sayings are society's life experiences which contain good values inserted mildly but sharp in terms of the delivery without hurting the listeners yet do not get attention in the Tamil society nowadays. However, Tamil sayings are treasures of the society which are hereditary and independently being used by family members even though they are not well educated.

Research Objectives

Specifically, the objectives of this study are as follows:

- Identify Tamil sayings which contain messages and values of forming a happy family
- Analyse moral values and relations of Tamil sayings in the formation of a happy family

Scope of Study

This study gives attention to Tamil sayings which contain meaning of family implicitly and explicitly as related to the happiness of the family institution. Based on the messages which are scrutinised from the Tamil sayings, the researcher explains the role of family institution and moral education in every husband and wife as well as relationship among family members.

Methodology

This qualitative research study converges more library research based on written resources

which have been previously published. Apart from that, the approach used in this research consists of five methods namely, specialisation, documentation, division, analysis and synthesis.

The theory that applied in this study is Family System Theory introduced by Dr. Murray Bowen who found that every individual cannot separate or isolate themselves from family ties among the family members. Family unit is a group that involves with a lot of feelings.

The use of Tamil sayings forms a Happy and Blissful Family and Society

Family is a social group living under one roof and has a cooperative bonding with economic activities as well as plays a role in escalating lineage (George Peter Murdoc, 1965: 326). Based on this definition, it clearly stated that every family member has family ties that are based on consanguinity. Through this relationship, an instituition of society is formed through the bond of love among the family members.

In a nuclear family, a husband is the chief in the family and a wife on the other hand should be living with an understanding attitude, love between one another and living complying to religious features and according to good values for the sake of family. Toleration between husband and wife is required. Discussions and sacrifices between husband and wife lead to a happy and blissful family. Through this method, happiness of a family can be maintained.

Perspective of Tamil Sayings which Form Moral Value and a Happy Family

Three aspects namely the aspect of family characteristics, children's responsibilities and moral values are discussed in this part. Directly, the interest of the family institution as well as responsibilities of the children and parents according to moral values based on Tamil sayings, are picked by the researcher.

Aspect of Family and Husband and Wife's Happiness

The Tamil society adheres to kinship concept (குடும்பம்) in their daily life. According to the traditional Tamil society, the main purpose of a person getting married is to develop a happy family based on the notion of moral and human's natural tendency. Living in a righteousness and happy family is very important because if there is any lacking occurs in this concept, the family institution will be looked down and the bad parts will be gossiped by other people. Hence, it is very important for every man and woman to get married according to the practice and system developed by the society.

Based on the tithe, family is a bond which connects a man and a woman originated from two different families. Marriage unites both of them and the woman will give birth to a new generation. Hence, sociologist thinks that marriage plays its role as an official legitimate bond between male and female to form family institution. The marriage will produce generations that will be apart of the society and Nation (Rozumah Baharudin, 2003:1).

Tamil community's life pattern gives priority to husband and wife's life in practising welfare lifestyle.Welfare concept (aram) is emphasised with regard to getting married. Welfare concept

Table 1 Tamil Sayings Themed Family

(குடும்பம் -kudumbam)

Theme	Discussion of the sayings
Family Theme	➢ Maatha pithaa guru theivam (மாதா பிதா குரு தெய்வம்)
	➢ Annaiyum pitaavum munnari theivam. (அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்)
	➢ Anbum manaiviyum amainthaal athuthaan vaazlkai (அன்பும் மனைவியும் அமைந்தால் அதுதான் வாழ்க்கை)
	➢ Araik kaasai aayiram kaasakkiravalum pensaathi Aayiram kaasai arail kaasaakiravalum pensaathi (அரைக் காசை ஆயிரம் காசாக்கிறவளும் பெண்சாதி ஆயிரம் காசை அரைக்காசாக்கிறவளும் பெண்சாதி)
	➢ Manaivi amaivathellam iraivan koduththa varam. (மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம்)
	➢ Thaaram nallavanaaga irunthaal tharaniyee sorgam (தாரம் நல்லவனாக இருந்தால் தரணியே சொர்க்கம்)
	➢ Samaiyal moosamaanal oru naal paalz Aruvadai moosamaanaal oru varudm paalz Kaliyaanam moosamaanaal santhithi paalz (சமையல் மோசமானால் ஒரு நாள் பாழ் அறுவடை மோசமானால் ஒரு வருடம் பாழ் கலியாணம் மோசமானால் சந்ததி பாழ்) ➢ Thaayaip pool pillai, nuulaip poola seelai (தாயைப் போல பிள்ளை, நூலைப் போல சேலை) ➢ Thanthai vvalzhi puthalvan avvazhi (தந்தை எவ்வழி புதல்வன் அவ்வழி)

in the family institution reflects clearly the Tamil saying that sounds like 'iilaramee nallaram' (இல்லறமே நல்லறம்). 'Illaram' means a husband and wife's relationship in the family. The word 'ill' on the other hand means house. Immediately, this saying indirectly explains welfare in the household. Every couple has a heavy responsibility towards the family. The responsibility needs to be carried out like a welfare. This charity work would bring priceless goodness and happiness to the family.

'nallaram' (நல்லறம்) on the other hand means a noble welfare. This saying emphasises that husband and wife should run their life based on welfare. The term welfare means that all attitudes of the couple which bring benefits based on religion, moral values and ethnic and respected such as loving, loyal, trustworthy, responsible, do deceive and so on. Charity works

done by the husband and wife will become examples to their children. Indirectly the feeling of selfish and neglecting other people will decline. Jayaraman (1978: 49) stated that a noble husband and wife will undergo a harmonious household.

A man's life becomes more perfect through the matrimonial world. Marriage will be giving new life because a wife plays an important role in each man's life. Further sayings emphasised that if love exists and supports by a good wife, it will lead to a happy life. 'Anbum manaiviyum amainthaal athuthaan vaazlkai (அன்பும் மனைவியும் அமைந்தால் அதுதான் வழ்க்கை)'. 'Anbum' means love. 'Manaivi' means wife. 'Amainthaal' means if achieved. 'Athuthaan vaazlkai' means that's the real life.

This saying clearly explains that a men's joy is depended to his wife as well as the bond of love that will be poured into the marriage. Love can change an evil person to that of a kind person without any implication. As such, if a man has a loving wife, they can build a happy family. So, through the saying as discussed earlier, it clearly shows that a man's life perfection rests with the wife that he loved through marriage.

Women play an impoprtant role in every family. The meaning of happiness, economic and social development of a family are all depended on women that lead the family. The saying 'araik kaasai aayiram kaasakkiravalum pensaathi, Aayiram kaasai arail kaasaakiravalum pensaathi' (ஆயிரம் காசை அரைக்காசாக்கிரவளும்«பெண்சாதி,அரைக்காசை ஆயிரம் காசாக்கிரவளும் பெண்சாதி ¢) clearly emphasised that women have the responsibility to develop a family. 'Araik kaasai' means half sen, 'aayiram kaasu' means one thousand cents while 'pensaathi' means wife. This saying explains that a wife is fully liable in upkeeping the economy of a family..

This is because women or wives play an imprtant role in running family finances in the Tamil society. Women practise the attitude of saving money especially spending money given by the husband. Her savings will be turned to one gold coin that is later collected until old age and would be made into a gold necklace that is called coin chain (kaasu maalai). After that, this coin chain will be inherited to the next generation that is to the daughter-in-law. If the daughter-in-law is not clever in managing household, hence the coin chain could not be kept as saying for the future generations. Families who have coin chain would be considered as rich families and the woman in the family will be admired because she is good in managing the economy of the family. This saying clearly explains the role of a woman accepted as a daugthter-in-law into a family who is supposed to be wise in managing the household without any liability and live in full happiness. In fact, the problem of owing to loan shark also will not happen like nowadays.

The Tamil society believes that someone's life partner is determined by God and fate and karma namely punishment from good practices or rewards that are gathered by a person in the previous life. The match between a pair of husband and wife is determined by fate and does not happen coincidentally (Letchumanan, V. 2001: 1). The fate of the belief in the determination of life partner is mirrored by a Tamil saying as in 'manaivi amaivathellam iraivan koduththa varam'

(Á மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம்¦), Thaaram nallavanaaga irunthaal tharaniyee sorgam' (தாரம் நல்லவனாக இருந்தால் தரணியே சொர்க்கம்), 'oruvanukku oruthi' (ஒருவனுக்கு ஒருத்தி), and 'Samaiyal moosamaanal oru naal paalz, aruvadai moosamaanaal oru varudm paalz, kaliyaanam moosamaanaal santhithi paalz (சமையல் மோசமானால் ஒரு நாள் பாழ், அறுவடை மோசமானால் ஒரு வருடம் பாழ் , கல்யாணம் மோசமானால் சந்திதி பாழ்).

The saying 'manaivi amaivathellam iraivan koduththa varam' (மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம்) means a man marries and gets a wife because it is determined by God. 'Manaivi' means wife. 'iraivan' means God. 'Kodutha varam' means award granted. As such, the fortune of getting a wife who is good, polite and caring is granted from God. If a man has done good deeds in his past life, he will certainly get a lovely wife. Directly, reward of the man will enable him to get a lovely wife which proves that one's match is destined by God and is not a coincidence.

Besides, there is the saying 'Thaaram nallavanaaga irunthaal tharaniyee sorgam' (தாரம் நல்லவனாக இருந்தால் தரணியே சொர்க்கம்). 'Thaaram' means wife, 'nallavanaaga irunthaal' means if good and 'tharaniyee sorgam' means world becomes heaven. This saying clearly brings the message that getting a nice wife or husband will make life in this world happier as well as create happiness in heaven. The English proverb which is 'Marriages are made in heaven' strengthens this opinion. This is also supported by Rajantheran and Sivabalan (2004: 3) who mentioned that Hindu community has the trust that marriage is an intergration of godly characteristic heart and is determined in heaven.

Not just that only, marriage in Tamil society is a life journey that should be waded by both husband and wife forever because the society goes for the concept of getting married once in a lifetime. According to the Hindu religion, a person gets married once in his life only and there is no concept of divorce in an old Tamil society. The Tamil society adheres to monogamous marriage and does not encourage polygamous marriage where a man marries more than a woman or a woman marries more than a man when going through the family life.

